# திருக்குறள் உரைக்களஞ்சியம்

## பொருட்பால் - ஒழிபியல்

ச. தண்டபாணி தேசிகர்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

# திருக்குறள் உரைக்களஞ்சியம்
## பொருட்பால் - ஒழிபியல்

பத்மபூஷன் டாக்டர் மகாவித்துவான்
ச. தண்டபாணி தேசிகர்
முன்னாள் விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

உதவி:
முனைவர் திருமதி. சலஜா கோபிநாத்
இணைப்பேராசிரியர் & தலைவர்
திருக்குறள் ஆய்வகம்

பதிப்புத்துறை
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை - 625 021.*

**2003**

பதிப்புரிமை:
பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

Copy right:
Publications Division
Madurai Kamaraj University,
Madurai - 625 021.

பதிப்பு எண் : 174
**விலை : ரூ 70**

## பதிப்பு விவரங்கள்:

| | | |
|---|---|---|
| 1. **ஆசிரியர்** | : | பத்ம்பூஷன் முனைவர் மகாவித்துவான் **ச. தண்டபாணி தேசிகர்** முன்னாள் விரிவுரையாளர், திருக்குறள் ஆய்வகம், **மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.** |
| **உதவி ஆசிரியர்** | : | **முனைவர் ஜலஜா கோபிநாத்** இணைப்பேராசிரியர் & தலைவர், திருக்குறள் ஆய்வகம், **மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.** மதுரை - 625 021. |
| 2. **நூல் தலைப்பு** | : | திருக்குறள் உரைக்களஞ்சியம் - பொருட்பால் - ஒழிபியல். (Thirukkural Varioram Edition) |
| 3. **பதிப்பித்தோர்** | : | பதிப்புத்துறை, **மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.** மதுரை - 625 021. |
| 4. **ஆண்டு** | | **2003** |
| 5. **நூல் கிடைக்குமிடம்** | : | பதிப்புத்துறை, **மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.** மதுரை - 625 021. |
| 6. **பக்கங்கள்** | : | 380 |
| 7. **அச்சிட்டோர்** | : | **சாய் கிராப்ஸ்,** சிவகாசி. ☎ **226219.** |

பேராசிரியர் மு. சாலிகு துணைவேந்தர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021.

# அணிந்துரை

"எல்லாப் பொருளும் இதன்பால்உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லால்
பரந்த பாவால்என் பயன்வள் ளுவனார்
கரந்த பாவையத் துணை"

என்னும் மதுரைத் தமிழ் நாகனார் பாவிற்கேற்ப திருக்குறளில் இல்லாத பொருளே இல்லை எனலாம். வள்ளுவம் கூறும் கூற்றுக்கள் என்றென்றும் நின்று நிலவுவதோடு எல்லோருக்கும் எக்காலத்திற்கும் பொருந்தும் வண்ணம் அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

உலகப் பொதுமறையாம் வள்ளுவத்தைப் போற்றாதார் உண்டோ? தமிழ்ப்பண்பாட்டின் சிகரமாக அமைந்த திருக்குறளை அனைத்துச் சமயத்தவரும் தத்தம் குறள் எனப் போற்றுவது இந்நூலின் தனிச்சிறப்பு எனலாம்.

திருவள்ளுவரின் சிந்தனை, கருத்தாழம் அவர் கூற்றுக்களின் உண்மை இவற்றை எல்லாம் உணர்ந்த அன்றைய தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் திருக்குறள் ஆய்வகத்தை 1968-ஆம் ஆண்டில் மதுரை காமராசா பல்கலைக்கழகத்தில் நிறுவினார்கள். அன்னாரது நோக்கத்திற்கு ஏற்ற வண்ணம் இவ்வாய்வகம் குறள் கூறும் வாழ்வியல் நெறியினை உலகிற்கு எடுத்துரைக்கும் விதத்திலும், பறைசாற்றும் விதத்திலும் இதுவரை பல ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளது. இவ்வாய்வுகள் பலவும் நூல்களாக வெளிவந்துள்ளன.

இவ்வாய்வகம் பத்மபூஷன், மகாவித்வான், தமிழ்ச்செம்மல் ச. தண்டபாணிதேசிகர் அவர்களை விரிவுரையாளராகப் பெற்றிருந்தது. முதுபெரும் புலவருடன் திருக்குறள் ஆய்வகத்தின் தற்போதைய தலைவர் டாக்டர் திருமதி சலசா கோபிநாத்தும் இணைந்து ஏறக்குறைய பத்து ஆண்டுகள் விடாமுயற்சியுடன் பணிபுரிந்ததின் விளைவாகத்தான் திருக்குறள் உரைக்களஞ்சியத் தொகுதிகள் உருவாயின.

திருக்குறள் உரைக்களஞ்சியம் - ஒழிபியல் என்னும் இந்நூல் திருக்குறள் உரைக்களஞ்சிய வரிசையில் எட்டாவது தொகுதியாகும்.

தமிழ்ச்செம்மல் மறைந்த மேதை தேசிகர் அவர்கள் பல அரிய நூல்களைக் கற்றுணர்ந்த பேராசன் ஆவார். தமிழ்ப்புலமையும் வடமொழிப் புலமையும் மிக்கவர். இந்நூலில் திருக்குறளுக்கு எழுதிய பதின்மர் உரையையும் பிற்கால உரையாசிரியர்களது உரையையும் உரைகல்லில் உராய்ந்து மதிப்பிடுகிறார். அவரது நுண்மான் நுழைபுலத்திற்குப் பல சான்றுகள் இந்நூலில் காணக்கிடக்கின்றன.

சான்றாக இந்நூலில் 1043-ஆம் குறளில் இடம்பெறும் நல்குரவிற்கு அவர் கூறும் விளக்கத்தைக் காட்டலாம்:

> "நல்குரவால் நசையா? நசையால் நல்குரவா? என்ற ஆய்வுள்ளம் பிறக்கிறது. நல்குரவுக்கு இலக்கணம் உண்பன உடுப்பனவாகிய நுகரப்படுபொருள் இல்லாமை எனப் பரிமேலழகர் முதலானோர் கூறுவர். பசி - உணவின் மேல் ஆசை. குளிர், மானம் - ஆடையின் மேல் ஆசை இப்படி அவசியத் தேவைகளின் மீது ஆசை பிறக்குமானால் அவை நசையால் ஆன நல்குரவன்று. கூழுக்கு உப்பு வேண்டும் என்பதும் குளிருக்கு ஆடை வேண்டும் என்பதும் ஆசையன்று தேவை. இங்ஙனம் வருவன நல்குரவால் ஆன நசை. இங்ஙனமின்றி உடுத்தப் பட்டும் உறங்க மெத்தையும் வேண்டும் என்பது நசையால் உண்டான நல்குரவு.
>
> **இவற்றுள்** "வள்ளுவர் கூறுவது இன்றியமையாத தேவைகளில் உண்டாகும் நசையன்று. வறுமையால் கண்டதை எல்லாம் விரும்பும் தகுதியற்ற ஆசையும் அன்று. ஏதோ வாழ்க்கைக்கு வேண்டிய அளவிருந்தும் மிகைபட விரும்பும் ஆசையே நல்குரவு என்கிறார்"

என விளக்குவது நூலாசிரியரின் புலமைத் திறத்திற்குச் சான்று பகர்கிறது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் திருக்குறள் ஆய்வகம் மேலும் பல அரிய ஆய்வுகளை நிகழ்த்தி அவற்றை நூலாக உருவாக்கித் தமிழ்ச் சமூகம் பயன்படும்படி ஆக்கித் தரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**(துணைவேந்தர்)**

# பதிப்புரை

1980-களில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வகத்தில் விரிவுரையாளராக அமர்ந்து மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் கருமமே கண்ணாயினர். அதன் வெளிப்பாடே திருக்குறள் உரைக்களஞ்சியம் என்னும் அருமையான பொக்கிஷமாகும்.

தற்போது வெளிவரும் உரைக்களஞ்சியம் பொருட்பால்-ஒழிபியல் என்னும் இந்நூல் குடிமை அதிகாரம் தொடங்கிக் கயமை அதிகாரம் ஈறாக மொத்தம் 13 அதிகாரங்களைக் கொண்டது.

இந்நூலில் 130 குறள் வெண்பாக்களுக்கான பழைய உரைகள் உள்ளது உள்ளவாறே தரப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி இந்நூற்றாண்டில் எழுந்துள்ள பல உரைகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. குறளுக்கு வள்ளுவர் கொண்ட பொருள் யாது? என்னும் மயக்கத்தைத் தெளிவிக்கும் முயற்சியில் டாக்டர். (டி.லிட்) பத்மபூஷன் மகாவித்வான் ச. தண்டபாணிதேசிகர் ஈடுபட்டுத் தம் இலக்கிய இலக்கண புலமைகளை வெளிப்படுத்துகின்றார் என்பதில் ஐயமில்லை. அதற்கு இந்நூலின் உள்ளே ஏராளமான சான்றுகள் காணப்படுகின்றன.

பழைய உரையாசிரியர்கள் பதின்மரில் உரை வரைவதில் ஒருவருக்கொருவர் குறைந்தவரில்லை; சிலகுறட்பாக்களுக்குப் பரிமேலழகரை விட மணக் குடவரோ காளிங்கரே உரைத்த உரை மிகவும் பொருத்தமாக உள்ளது என ஐயா அவர்கள் அறுதியிட்டு உறுதியாகச் சுட்டிக் காட்டுகின்றார்கள். பிற்கால உரைகள் பலவும் பரிமேலழகரை வழிமொழிவனவாக உள்ளமையை ஆசிரியர் புலப்படுத்துகின்றார்.

நம் பல்கலைக் கழகத்தின் வாயிலாகத் திருக்குறள் ஆய்வகம் இதுவரை திருக்குறள் உரைக்களஞ்சியத்தின் 7 தொகுதிகளை வெளியிட்டுள்ளது பல்வேறு வகையிலும் இந்நூல்கள் வெளிவர ஐயா அவர்களுடன் பலகாலம் உழைத்தமையை எண்ணிப் பார்க்கையில் எனக்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது.

இந்நூல் வெளிக்கொணர்வதற்கு மிகுந்த ஆவல் கொண்டு பணியாற்றினமை என்னால் மறக்க இயலாது.

இந்நூல் இன்று பல்வேறு சிக்கல்களைத் தாண்டி வெளிவருவது தமிழுலக ஏக்கத்திற்கு ஓர் ஆறுதலாக அமையும் என நம்புகிறேன்.

கணினியில் இந்நூலைச் சீரும் சிறப்புமாக அச்சுப்பணி (DTP) மேற்கொண்டு திருத்தங்களை மனங்கோணாது ஏற்றி நூலாக்கத்திற்கு ஒத்துழைத்த சாயி கிராப்ஸ் அச்சகத்தார்க்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர காரணமாக அமைந்த நம் பல்கலைக் கழகப் பதிப்புத்துறைக்கும் என் நன்றி உரித்தாகுக.

**ஜலஜா கோபிநாத்**

**3.5.2003.**

# முன்னுரை

இப்பணி வளர்ந்து மலர ஏடுகள். பழைய கட்டுரைத்தாள்கள், ஆய்வு மலர்கள் தந்துதவிய, பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரித் தாளாளர் சிவத்திரு இராமசாமி அடியார் அவர்களுக்கும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்களுக்கும், செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, வள்ளுவர், குறளியம் போன்ற தாள்களின் தாளாளர்கள் பலருக்கும், என்னுடைய பணிவான நன்றி என்றும் உரியதாகும்.

இப்பணியில் என்னை ஈடுபடுத்திய முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கும், வழிவழித் துணைவேந்தர்களான டாக்டர் வ.சு.ப. மாணிக்கம் அவர்களுக்கும், டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கட்கும், பேராசிரியர் ஜா. இராமச்சந்திரன் அவர்களுக்கும், இந்நாள் துணைவேந்தர், விஞ்ஞானக்கலைவேந்தர், கல்வியுலகிலும் சமுதாய சமயப் பணிகளிலும் பேராதரவு காட்டியவரும் டாக்டர் சினி. கிருட்டிணசாமி அவர்களுக்கும் மனம நிறைந்த நன்றி. வழக்கம்போல உரைக்களஞ்சியம் சிறப்புடன் வரப் பல்லாற்றானும் வழிதுறைகளை வகுத்துக் கொடுத்து ஊக்கம் தந்து உதவும் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தமிழண்ணல் அவர்களுக்கும் நன்றி. உற்றுழி உதவியுறுதுணையாக இருக்கும் திருக்குறள் ஆய்வுத துறைத் தலைவர் டாக்டர் தி. முருகரத்தனம் அவர்களுக்கும் நன்றி. அயரா அன்போடு படியெடுத்தும், ஒப்பு நோக்கியும், மேற்கோட்பகுதி ஒப்புமைப் பகுதிகளை மூலநூலோடு ஒப்பு நோக்கிச் செப்பனிட்டும், தந்த ஆய்வுத்துறை உதவியாளர் திருமதி சலசா கோபிநாத், எம். ஏ. அவர்களுடைய முழுநேர உழைப்பும் உதவியும் பாராட்டிற்குரியன. இவர் மேன்மேலும் இத்தகைய பணிகளில் வளர்ந்து தமிழன்னையின் அருளுக்கு இலக்காகி வாழ்வாராக. பல ஆண்டு உழைத்த உழைப்பும், அமைப்பாளர் குழு தந்த ஆணையின் வண்ணம் உருவாக்கிய அருமையும் அவ்வப்போது செந்தமிழ் செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், குறளியம், பல

ஆண்டுமலர்கள் விழாமலர்களில் வந்த கட்டுரைகள் இவற்றால் களஞ்சியம் நிரம்பிவழிகிறது. அறிவுப்பசியைப்போக்கி ஆய்வு வன்மையை அளிக்கிறது. இதில் நிறை குறைகண்டு காட்டுபவர்களே இந்நூலை ஊன்றிப்படித்தவர்கள்; பணியாளன் அறிவைப் பதஞ்செய்பவர்கள்; ஆகையால், குணங்கூறிப் பாராட்டுவானினும், குறைகூறி என்னை வளர்ப்பவர்களே 'எண்ணின் எனக்கினிய' ராவார். ஆதலால் அவர்கள் உதவி இப்பதிப்பு முடியும் வரையில் எனக்கு மிகத்தேவை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் செந்தமிழ்ச்சொக்கலிங்கப் பெருமாள் திருவருள் துணைநிற்கும். விரைவில் உரைக்களஞ்சியம் முற்றுப் பெற்று நிறைவு விழாப்பெறும் என்று எதிர்நோக்கி அங்கயற் கண்ணியம்மையின் திருவடிகளைப் போற்றி அமைகின்றேன்.

இங்ஙனம்

ச. தண்டபாணி தேசிகர்

**குறிப்பு :** 'அறத்துப்பால் - துறவறவியலில் உள்ள முகவுரைப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது.

# சுருக்க விளக்கம்

## 1. ஆசிரியர்கள்:

| | |
|---|---|
| இராம. | நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை |
| இளம். | இளம்பூரணர் |
| கவிராசர் | கவிராச பண்டிதர் |
| கா.சு. | கா. சுப்பிரமணியபிள்ளை |
| காரி. | காரி ரத்னக்கவிராயர் |
| காளி. | காளிங்கர் |
| குழந்தை. | புலவர் குழந்தை |
| கோ.வ. | கோ.வடிவேலு செட்டியார் |
| சங்கர. | சங்கரநமச்சிவாயர் |
| சபாபதி. | ஈக்காடு சபாபதிமுதலியார் |
| சாமி.சிதம். | சாமி சிதம்பரனார் |
| சி.இ. | சி. இலக்குவனார் |
| சுவாமி. | சுவாமி நாததேசிகர் |
| சேனா. | சேனாவரையர் |
| தெ.பொ.மீ. | தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் |
| தெய்வ. | தெய்வச்சிலையார் |
| தேவநேயர். | தேவநேயப்பாவாணர் |
| நச்சி. | நச்சினார்க்கினியர் |
| பரிதி. | பரிதியார் |
| பரிப். | பரிப்பெருமாள் |
| பரிமேல். | பரிமேலழகர் |
| பழைய 2 | பழைய உரை 2 |
| பெரியாழ். | பெரியாழ்வார் |
| மணக். | மணக்குடவர் |
| மயிலை. | மயிலைநாதர் |
| மு.கோ. | மு.கோவிந்தசாமி |
| மு.ரா.அரு. | மு.ரா.அருணாசலக்கவிராயர் |
| மு.ரா.கந்த. | மு.ரா.கந்தசாமிப்புலவர் |

| | |
|---|---|
| மு.வ. | மு. வரதராசனார் |
| வ.சுப.மா. | வ.சுப. மாணிக்கம் |
| வரத. | ஜி. வரதராசன் |

## 2. நூல்கள்

| | |
|---|---|
| அகம். | அகநானூறு |
| ஆத்தி. | ஆத்திச்சூடி |
| அறநெறி. | அறநெறிச்சாரம் |
| இன்னா. | இன்னாநாற்பது |
| கச்சி. | கச்சிக்கலம்பகம் |
| கந்த. | கந்தபுராணம் |
| அசமுகிபுலம். | அசமுகிபுலம்புறுபடலம் |
| சூரானமைச் | சூரானமைச்சியற்படலம் |
| கம்ப. | கம்பராமாயணம் |
| கலி. | கலித்தொகை |
| காஞ்சி. | காஞ்சிப்புராணம் |
| நகரப் | நகரப்படலம் |
| குறுந். | குறுந்தொகை |
| கொன்றை. | கொன்றைவேந்தன் |
| சம்பந்தர். | ஞானசம்பந்தர்தேவாரம் |
| சிலம்பு. | சிலப்பதிகாரம் |
| பதி. | பதிகம் |
| சிவஞான. | சிவஞானசித்தியார் |
| சிறுபஞ்ச. | சிறுபஞ்சமூலம் |
| சீவக. | சீவகசிந்தாமணி |
| சுக்கிர. | சுக்கிரநீதி |
| சூளா. | சூளாமணி |
| திருநாவுக். | திருநாவுக்கரசர் தேவாரம் |
| தண்டி. | தண்டியலங்காரம் |
| தனிப். | தனிப்பாடல் திரட்டு |
| திருவெங்கை | திருவெங்கையுலா |

| | |
|---|---|
| தணிகை. | தணிகைப்புராணம் |
| தமிழ். | தமிழ்விடுதூது |
| திரி. | திரிகடுகம் |
| திருக்கோவை. | திருக்கோவையார் |
| திருவெங்கை. | திருவெங்கையுலா |
| தொல். | தொல்காப்பியம் |
| எழுத்து. | எழுத்ததிகாரம் |
| செய்யுள். | செய்யுளியல் |
| சொல். | சொல்லதிகாரம் |
| பொருள். | பொருளதிகாரம் |
| நள. | நளவெண்பா |
| நற். | நற்றிணை |
| நன். | நன்னூல் |
| விருத்தி.. | விருத்தியுரை |
| நாலடி. | நாலடியார் |
| நான்மணிக். | நான்மணிக்கடிகை |
| நீதி.,நீதிநெறி. | நீதிநெறிவிளக்கம் |
| நீல. | நீலகேசி |
| பரி. | பரிபாடல் |
| பழ.நா. | பழமொழிநானூறு |
| பிங்கலத்தை. | பிங்கலநிகண்டு |
| பிரபு. | பிரபுலிங்கலீலை |
| பு.வெ. | புறப்பொருள்வெண்பாமாலை |
| புறம்.,புறநா. | புறநானூறு |
| பெரிய. | பெரியபுராணம் |
| பெருங். | பெருங்கதை |
| மணி. | மணிமேகலை |
| மதுரைக். | மதுரைக்காஞ்சி |
| மாற. | மாறனலங்காரம் |
| மனு. | மனுநீதிசாத்திரம் |
| மனோ. | மனோன்மணியம் |

| | |
|---|---|
| முதுமொழிக். | முதுமொழிக்காஞ்சி |
| யசோ. | யசோதரகாவியம் |
| யா.கா. | யாப்பருங்கலக்காரிகை |
| யா.வி. | யாப்பருங்கலவிருத்தி |
| வளை.,வளையா. | வளையாபதி |
| வாக்கு. | வாக்குண்டாம் |
| வி.நா.அரசி. | விநாயகர் அரசியல்புராணம் |
| வில்லி. | வில்லிபாரதம் |
| வீர. | வீரசோழியம் |

## 3. பிற

| | |
|---|---|
| அத். | அத்தியாயம் |
| அதி. | அதிகாரம் |
| சூ. | சூத்திரம் |
| தொ.கு. | தொகுப்பும் குறிப்பும் |
| பக். | பக்கம் |

~*~*~*~*~

# இதனுள் அடங்கியவை

துணைவேந்தர் அணிந்துரை
பதிப்புரை
முன்னுரை
சுருக்க விளக்கம்

*ஒழிபியல்* 1
**96. குடிமை** 3
96.1. இற்பிறந்தார் 4
96.2. ஒழுக்கமும் 6
96.3. நகை ஈகை 9
96.4. அடுக்கிய 11
96.5 வழங்குவ 13
96.6. சலம் பற்றிச் 16
96.7. குடிப்பிறந்தார் 18
96.8. நலத்தின்கண் 20
96.9. நிலத்திற் 22
96.10. நலம் வேண்டின் 25

**97. மானம்** 29
97.1. இன்றி அமையாச் 30
97.2. சீரினும் 33
97.3. பெருக்கத்து 34
97.4. தலையின் 37
97.5. குன்றின் 39
97.6. புகழின்றால் 41
97.7. ஒட்டார்பின் 43
97.8. மருந்தோமற் 45
97.9. மயிர்நீப்பின் 48
97.10. இளிவரின் 51

**98. பெருமை** 54
98.1. ஒளிஒருவற்கு 56
98.2. பிறப்பொக்கும் 60
98.3. மேலிருந்தும் 65
98.4. ஒருமை மகளிரே 67
98.5. பெருமை உடையவர் 70
98.6. சிறியார் 72
98.7. இறப்பே 74
98.8. பணியுமாம் 76
98.9. பெருமை பெருமிதம் 78
98.10. அற்றம் 81

**99. சான்றாண்மை** 85
99.1. கடனென்ப 86
99.2. குணநலம் 88
99.3. அன்புநாண் 90
99.4. கொல்லா 93
99.5. ஆற்றுவார் 95
99.6. சால்பிற்குக் 98
99.7. இன்னாசெய் 99
99.8. இன்மை ஒருவற்கு 101
99.9. ஊழிபெயரினும் 102
99.10. சான்றவர் 106

**100. பண்புடைமை** 108
100.1. எண்பதத்தால் 110
100.2. அன்புடைமை 112
100.3. உறுப்பொத்தல் 114
100.4. நயனொடு 117
100.5. நகையுள்ளும் 119
100.6. பண்புடையார்ப் 122
100.7. அரம்போலும் 126
100.8. நண்பாற்றாராகி 129
100.9. நகல்வல்லர் 131
100.10. பண்பிலான் 133

**101. நன்றியில் செல்வம்** 137
101.1. வைத்தான் 138
101.2. பொருளானாம் 142
101.3. ஈட்டம் 145
101.4. எச்சமென்று 148
101.5. கொடுப்பதூஉம் 150
101.6. ஏதம் பெருஞ்செல்வம் 152
101.7. அற்றார்க்கொன்று 154
101.8. நச்சப்படாதவன் 157
101.9. அன்பொரீஇத் 159
101.10. சீருடைச் 161

**102. நாணுடைமை** 166
102.1. கருமத்தால் 168
102.2. ஊணுடை 171
102.3. ஊனைக் 173
102.4. அணியன்றோ 176
102.5. பிறர்பழியும் 179
102.6. நாண்வேலி 180
102.7. நாணால் 182
102.8. பிறர்நாணத் 184
102.9. குலம்சுடும் 185
102.10. நாணகத்து 187

**103. குடிசெயல்வகை** 190
103.1. கருமம் 191
103.2. ஆள்வினையும் 194
103.3. குடிசெய்வல் 196
103.4. சூழாமல் தானே 198
103.5. குற்றம் இலனாய்க் 200
103.6. நல்லாண்மை 202
103.7. அமரகத்து 204
103.8. குடிசெய்வார்க் 206
103.9. இடும்பைக்கே 208
103.10. இடுக்கண்கால் 211

**104. உழவு** 215
104.1. சுழன்றும்ஏர்ப் 217
104.2. உழுவார் 220
104.3. உழுதுண்டு 222
104.4. பலகுடை 225
104.5. இரவார் 228
104.6. உழவினார் 230
104.7. தொடிப்புழுதி 233
104.8. ஏரினும் 235
104.9. செல்லான் 238
104.10. இலமென்றசைஇ 241

**105. நல்குரவு** 244
105.1. இன்மையின் 245
105.2. இன்மைஎன 246
105.3. தொல்வரவும் 248
105.4. இற்பிறந்தார் 253
105.5. நல்குரவுஎன்னும் 255
105.6. நற்பொருள் 258
105.7. அறஞ்சாரா 260
105.8. இன்றும் வருவது 263
105.9. நெருப்பினுள் 265
105.10. துப்பரவில்லார் 266

**106. இரவு** 270
106.1. இரக்க இரத்தக்கார்க் 270
106.2. இன்பம் ஒருவற்கு 274
106.3. கரப்பிலா 276
106.4. இரத்தலும் 279
106.5. கரப்பிலார் 281
106.6. கரப்பிடும்பை 283
106.7. இகழ்ந்தெள்ளாது 285
106.8. இரப்பாரை 287
106.9. ஈவார்கண் 290
106.10. இரப்பான் 292

**107. இரவச்சம்** 296
107.1. கரவாது 297
107.2. இரந்தும் 300
107.3. இன்மை இடும்பை 302
107.4. இடமெல்லாம் 304
107.5. தெண்ணீர் 306
107.6. ஆவிற்கு 309
107.7. இரப்பன் இரப்பாரை 311
107.8. இரவென்னும் 313
107.9. இரவுள்ள உள்ளம் 316
107.10. கரப்பவர்க்கு 318

**108. கயமை** 323
108.1. மக்களே 324
108.2. நன்றறிவாரின் 328
108.3. தேவர் அனையர் 330
108.4. அகப்பட்டி 332
108.5. அச்சமே 334
108.6. அறைபறை 337
108.7. ஈர்ங்கை 339
108.8. சொல்லப் 341
108.9. உடுப்பதூஉம் 342
108.10. எற்றிற்குரியர் 344

***நூலோதி*** 347 - 356

***முதற்குறிப்பகராதி*** 357 - 361

***திருக்குறள் ஆய்வக வெளியீடுகள்*** 362 - 363

******

# ஒழிபியல்

அ) *மணக்.*: "குடியியல்" பாடம். குடியியலாவது அரசரும், அமைச்சரும், வீரருமல்லாத மக்களது இயல்பு கூறுதல்.

இ) *பரிப்.*: 'குடியியல்' பாடம். அஃது யாங்ஙனம் கூறினார் எனின் அது கூறிய அதிகாரம் பதின்மூன்றும் முறபடக் குடிப்பிறந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும், மானமுடையார் இயல்பும் சான்றோர் இயல்பும் உளதாகும் குற்றம் கூறுதலும், அந்தக் குற்றத்துக்கு அஞ்சி ஒழுகுதலாகிய நாண் உடைமையும், அந்நாண் உடையார் தம் குடும்பத்தை நோக்குமாறும். அவர் குடும்பத்தை நோக்குதற்குப் பொருள் வருநெறி பலவற்றுள்ளும் சிறப்புடையதாகிய உழவினது இயல்பு நான்கு அதிகாரத்தானும், பொருள் இல்லாத மக்களது இயல்பும், அவர் பொருள் தேடுமாறும் மூன்று அதிகாரத்தானும், மக்களில் இழிந்தார் இலக்கணம் ஓர் அதிகாரத்தானும் கூறப்பட்டது.

மேல் அரசர்க்கு முதலான பொருளும் பொருட்கேடும் கூறி இனி நிலத்து மக்களது இயல்பும் கூறுகின்றார். ஆதலின் அவற்றின் பின் கூறப்பட்டது.

**உ)** ***பரிமேல்.***: இனி அவ் அரசியலிலும் அடங்காது ஒழிந்தவற்றது இயல்பு பதின்மூன்று அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் குடிமை கூறுகின்றார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***பரிமேலழகர்*** பொருட்பால் இயற்பாகுபாடு மூன்று; என்றும் இறுதி ஒழிபியல் என்றும், முதற்கூறிய இரண்டியலிலும் அடங்காது ஒழிந்தவற்றது இயல்பு கூறுதலால் இது ஒழிபியல் என்ற பொதுப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

***மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர் மூவரும் வள்ளுவமாலையில் போக்கியார்*** பாடலையொட்டி 'குடியியல்' என்றனர். ஒவ்வோரதிகாரத்தான் மட்டும் வரும் நாடு முதலியவற்றையும் இரண்டதிகாரங்களையும் அவற்றிற்கு மேற்பட்ட பத்து, பதினேழு, பதின்மூன்று அதிகாரங்கள் கொண்டவற்றையும் இயல் என மொழியாமையான் ***பரிமேலழகர்*** மூன்றேயியல் எனக் கொண்டு பாகுபடுத்தினார் என்பர் சிலர். ***போக்கியார்*** வெண்பா எண்கூற்று எழுபதிகாரங்களையும் தொகுத்து எட்டியலாகக் கூறும் நோக்குடையதே எனலாம். ஆயினும் ஒவ்வோரதிகாரத்தான் வருவன ஓரினப்பொருளை ஒருவழி வைத்த தன்மையின் இயல் என்னாதொழிந்தார் எனக் கொண்ட ***மணக்குடவர்*** முதலானோர் நட்பியல் முதலாகக் கூறாராயினர். இவற்றைச் சிந்திந்த ***தேவநேயரும்,*** அரசியல். அங்க இயல் என இரு கூறாக்கி இறைமாட்சி முதல் இடுக்கணழியாமை யீறாகக் கூறிய இருபத்தைந்து அதிகாரங்களை அரசியல் என ஓரியலாகவும், அடுத்த அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு, படை, குடி முதலான உறுப்பாறனுள் ஒன்றாகக் கூறப்படாத நாடு பற்றிய இலக்கணம் இடையில் இடம் பெற்றதற்குப் ***பரிமேலழகர்*** அரசனாலும் அமைச்சனாலும் கொண்டுய்க்கப்படுவதும், அரண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாமையும் ஆகிய இரு காரணங்கூறினர். ***தேவநேயர்*** நாடு (குடி) எனக் குறித்தனர். ஆசிரியர் தக்கார் முதலிய குடிகட்கும், விளையுளாகிய செல்வத்திற்குமே முதன்மைதந்து நாட்டினியல்பை விளக்குவர். அதனால் நாடு குடியெனலாம் என்று ***தேவநேயர்*** கருதினர் போலும். அங்ஙனமாயின் குடிமையோடு சேர்த்துக் குடியாகிய நாட்டையும் இணைத்திருக்கலாமே என்று கருதத் தோன்றுகிறது. ஆகவே இயல்-அதிகார முறை வைப்புப் பற்றி விரிவாக ஆராய வேண்டியது. இது.

***வரத., இராம.*** இவர்களும் பின்னுள்ளோரும் ***ஒழிபியல்*** எனவே கொண்டு ***பரிமேலழகரை*** ஒத்துரைப்பர். ***குழந்தை, மணக்குடவர்*** முதலியோரை ஒத்துரைப்பர்.

# 96. குடிமை

*அதிகாரப் பொருள்:*

*அ) பரிதி.:* குடிமையாவது கடல் சூழ்ந்த உலகில் தன்குடியை ஆக்க. எ-று.

*இ) பரிப்.:* குடிமையாவது உயர்குடிப் பிறந்தாரது இயல்பு கூறுதல். மக்கள் உடைத்து ஆகிய கணங்கள் எல்லாவற்றினும் உயர்குடிப் பிறத்தல் சிறப்புடைத்து ஆதலின் இது முன் கூறப்பட்டது.

*உ) பரிமேல்.:* அஃதாவது உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின். அச் சிறப்புப் பற்றி இது முன்வைக்கப்பட்டது.

*ஊ) கவிராசர்.:* அஃதாவது உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை.

*எ) பழைய2.:* அஃதாவது உயர்ந்த குடியினிடத்துப் பிறந்தவரது நன்மை: உயர்ந்த குடி நால்வகை வருணத்துள்ளும் வருதல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*பரிமேலழகர்* கூறும் அதிகார விளக்கத்துள் 'உயர்குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாமையின்' என்பது வருணம் பெரும் பிரிவு. அதனுட் சிறப்புப் பிரிவு குடி என்பதைக் குறிக்கும். *பரிப்பெருமாள்* கூறும் கணங்கள் எல்லாவற்றினும் என்பதும் கணங்கள்-மக்கட்கூட்டம் குடி. அதனுட்பிரிவு என்பதைப் பொதுமையிற் குறிப்பது. உலகில் தன் குடியை ஆக்க என்ற *பரிதியின்* விளக்கம் கணங்களில் என்பதைக் காட்டிலும் உலகு நோக்குடையது.

*தேவநேயர்* 'அரசனுடைய குடிகளுள் உயர்ந்த குடியிற் பிறத்தல்' எனக்குடி மக்கள் அனைவர்க்கும் உரிய குடிப்பிறப்பை ஆள்பவர்க்கே யாக்குவர். வருணப்பாகுபாட்டைக் கூறி அதனுள் உயர்குடிப்பிறத்தல் என்ற *பரிமேலழகரை* மறுப்பர். இது வடவர் நெறி; தமிழர் பாகுபாடு தொழில் பற்றி

1. நால்வகை வருணத்த..ர். - பிராமணர், க்ஷத்திரியர், வைசிரியர், சூத்திரர் ஆகிய நால்வகை

வந்த அந்தணர் அரசர் வணிகா வேளாளர் என்பன. அவற்றுள் ஒழுக்கத் தாலும் கல்வி கேள்விகளாலும் உயர்ந்த குடிப்பிறத்தலே குடிமை என்பர்.

***வரத.***: உயர்குடி - உயர்ந்த ஒழுக்கத்தை வாழ்வினும் தாழ்வினும் நழுவவிடாத குடி; அதிற்பிறந்தாரது சிறப்பு குடிமை என்பர்.

***இராம.***: நல்ல குடிப்பிறப்பு. அதாவது நல்ல இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு அடையாளம் இது சாதி பற்றியது அல்ல: ஒழுக்கம் பற்றியது என்பர். குழந்தை 'குடிமக்களின் தன்மை. ***கா.சு..*** உயர்குடிப் பிறந்தாரது தன்மை. ***சி.இ*** முதலிய அனைவரும் இக்கருத்தினரே.

இவற்றுள் உயர்குடிப்பிறப்பு என்பதைக் காட்டிலும் உயர்குடியிற் பிறந்தாரது தன்மை கூறுவது என்பதே ஏற்புடைய உரை.

## 96.1. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
## செப்பமும் நாணும் ஒருங்கு. (951)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: உயர்குடிப்பிறந்தார் மாட்டல்லது பிறர்மாட்டு நடுவு நிலைமையும் பழி நாணுதலும் இயல்பாக ஒருங்கே உண்டாகா, எ-று.

இஃது இற்பிறந்தோர் இவை இரண்டும் இயல்பாக உடையர் என்றது.

***ஆ) பரிதி.***: குடிப்பிறந்தார்க்கல்லது நடுவுநிலைமையும் நாணுடைமையும் கைவராது, எ-று.

***இ) பரிப்.***: உயர்குடிப்பிறந்தார் மாட்டு அல்லது நடுவு நிலைமையும் பழி நாணுதலும் இயல்பு ஆக ஒருங்கு உண்டாகா, எ-று.

இஃது இற்பிறந்தார் இவ்விரண்டும் இயல்பாக உடையார் என்றது.

***ஈ) காளி.***: நாம் கீழ் விரித்துச் சொன்ன நடுவு நிலைமையும் மேல் விளங்கக் காட்டி விடுவதாகிய நாண் உடைமையும் இவை இரண்டும் ஒருங்கு உளவாதல் குடிப்பிறந்தார்மாட்டு அல்லது பிறர்மாட்டு இல்லை, எ-று.

***உ) பரிமேல்.***: செம்மையும் நாணும் சேர, குடிப்பிறந்தார்மாட்டு அல்லது பிறர்மாட்டு இயற்கையாக உளவாகா, (எ-று).

இல் குடி[1]. குலம் என்பன ஒருபொருள்[2]: ஈண்டு உயர்ந்தவற்றின்

1. 'இல்லுக்குடி யென்பன' என்றும் பாடமுண்டு.
2. இல், குடி, குலம் என்பன மக்களின் உயர்வைக் குறிக்கும் ஒரு பொருட்சொற்கள். ஆயினும் இதில் 'இல்' என்பது ஒரு வீட்டிற் பிறந்த உயர்ந்தோரையும் குடி என்பது அங்ஙனமாய்ப் பலர் கூடிய குடும்பத்தையும் குலம் என்பது குடும்பம் பல கூடிய ஒரு தொகுதியையும் உணர்த்துவனவாம். குலம் கூட்டத்தை உணர்த்தும் ஆரியச்சொல் என்பாரும் குலை என்பதினடியாகப் பிறந்த தமிழ்ச் சொல்லே என்பாருமாக இரு சாரார் உளர்.

மேல். செம்மை-கருத்தும் சொல்லும் தம்முள் மாறாகாமை[3]. நாண்-பழிபாவங்களில் மடங்குதல்[4]. இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்க வேண்டாமல் தாமே உளவாம். பிறர்க்காயின்[5] கற்பித்தவழியும் நெடிது நில்லா என்பதாம்.

***காரி:*** இற்பிறந்தார் என்றதனால் இல். குடி, குலம் என்பன ஒரு பொருட்கிளவி.

***ஊ) கவிராசர்*** : செம்மையார் நடக்கிறதும், நாணமும் நல்ல குடியிலே பிறந்தாரிடத்திலே அல்லாமல் மற்றவர்களிடத்திலே சுபாவமாக உளவாகா. எ-று.

***ஏ) பழைய2:*** செம்மையும் நாணமும் ஒருமிக்கக் குடிப்பிறந்தாரிடத்தல்லது பிறரிடத்து இயற்கையாக இல்லை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'சொற் கோட்டமில்லது செப்பம்' (119) என்பராகலின் செப்பம் மனமொழி மெய்கள் மாறாமை ஆதல் என்பது. இவை குடிப்பிறந்தாரிடத்து இயல்பாக அமையுமெனவே ஏனையோரிடத்துப் பதவியும் நிலையுங் காரணமாக அமைத்துக் கொள்ளப்படும் என்பது பெற்றாம். ***பரிதியார்*** 'இவை குடிப்பிறந்தார்க் கல்லது இயல்பாக அமையாது' என்பர். ***பழைய.*** 'மற்றவர்க்குக் கற்பிக்கப் பெறும் செயற்கை' என்னும். செப்பம் -நடுவு நிலைமை. செம்மை என்னும் பொருளில் ஆளப்படுகின்றது. ***வள்ளுவர்*** கூறிய பொருளே பொருள்.

***வரத.*** 'செப்பம்-மனமொழிமெய்கள் ஒரு தன்மைத்தாகும். நல்லொழுக்கம் நாண்குற்றம் நேர்ந்துழிக் கூசுதல்' என்பர்.

***தேவநேயர்.*** 'இல்-என்பது சாவடியை அல்லது கொடிவழியை. 'நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி' என்னும் (தொல்.கள.24) நூற்பாவானும் அறிக. இல்-கொடிவழி. குடி-சாவடி. பிறப்பு -குடும்பம் என்பர். (சாவடி - வமிச பரம்பரை) கொடிவழி - கொண்டு கொடுத்தலால் வரும் உறவு என்பர்.

***இராம.*** செப்பம் - ஒப்புரவு அதாவது உபகாரகுணம். செப்பமும் நாணும் ஒவ்வொன்று வெளிப்படுதலும் ஏதாவது ஒன்று வெளிப்படுதலுமின்றி என்றும் குடிப்பிறந்தாரிடம் இயைந்திருக்கும் என 'ஒருங்கு' என்ற ஆசிரிய வசனத்திற்கு அழுத்தங் கொடுத்துப் பேசுவர்.

இவற்றுள் எண்ணமும் சொல்லும் செயலும் ஒத்திருககும் தன்மை என்பதும்; நாண் - பழிபாவங்கட்குக் கூசுதல் என்ற உரையும் இவையிரண்டும் என்றும் இணைந்திருக்க வேண்டும் என்பதே சிறந்த உரை.

3. 'கருத்தும் சொல்லும் செயலும் தம்முள் மாறாகாமை' எனவும் பாடமுண்டு.
4. மடங்குதல் - செய்வதற்கு அஞ்சுதல்
5. பிறர்க்காயின் - தாழ்ந்த குடியில் பிறந்தவர்க்காயின்

## ஒ) ஒப்புமைப் பகுதி:

***முற்றும் :***

நல்லவை செய்யின் இயல்பாகும்...
குடிப்பிறப்பின் ஊதியம் என்னோ - நாலடி., 144

இற்பிறப்புமொ முக்குமி முக்குமில்
கற்பும் யான்பிறாக் கெங்ஙகனங் காட்டுகேன் - கம்ப., 5468

***ஒருபுடை :***

தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம். - வாக்கு., 7

## 96.2. ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும் இழுக்கார் குடிப்பிறந் தார். (951)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: ஒழுக்கமுடைமையம், மெய்ம்மை கூறுதலும, அற்றம் மறைத்தலாகிய நாணமுடைமையும் ஆகிய இம்மூன்றினையும் தப்பார் உயர்குடிபிறந்தார், எ-று.

***ஆ) பரிதி.***: ஒழுக்கமுடைமையும்[1], சத்தியவசனமும், நாணமும் குடிப்பிறந் தார்க்குக் கைவரும், எ-று.

***இ) பரிப்.***: ஒழுக்கம் உடைமையும், மெய்ம்மை கூறுதலும், அற்றம் மறைத்தல் ஆகிய நாணம் உடைமையும் இம்மூன்றினையும் தப்பார் குடிப்பிறந்தார், எ-று.

***ஈ) காளி.***: கீழ்ச்சொல்லிப் போந்த[2] ஒழுக்கம் உடைமையும் வாய்மை நிகழ்ச்சியும் அங்குத் தோற்றம் செய்த நாணம் உடைமையும் என்னும் இம்மூன்றும் சிறிதும் வழுவகில்லார். யார் எனின் குடிபிறந்தார், எ-று.

***உ) பரிமேல்.***: உயர்ந்த குடியின்கண் பிறந்தார், தமக்கு உரிய ஒழுக்கம் மெய்ம்மை நாண் எனப்பட்ட இம்மூன்றன்கண்ணும் கல்வியானன்றித்[3] தாமாகவே வழுவார்[4], (எ-று).

1. ஒழுக்கமாவது நீதிநூல்கள் மக்களுக்கு ஓதிய ஒழுக்கங்களில் வழுவாது ஒழுகுதல். பரிமேலழகர் அந்தணர் முதலிய வருண மக்கள் தத்தமக்கு ஓதிய பிரம்மசரியம் முதலிய நிலைகளி லிருந்தும் அவற்றிற்கு ஓதிய நெறிகளிலிருந்தும் வழுவாது ஒழுகுதல் என்பர். (பரிமேலழகர் உரைப்பாயிரம் காண்க.)
2. கீழ்ச் சொல்லிப் போந்த - அறத்துப் பாலில் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் சொல்லிய
3. கல்வியானன்றி - கல்வியறிவால் தவறாது இருத்தலன்றி
4. தாமாகவே வழுவார் - இயல்பாகவே இயற்கையறிவான் தவறாது இருப்பவர்

ஒழுக்கம் முதலியன மெய்ம்மொழி மனங்களின் ஆகலின்[5] அம்முறையே ஆயின[6]. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், 'இழுக்கார்' என்றார்.

***ஊ) கவிராசர்:*** உயர்ந்த குடியிலே பிறந்தவர்கள் தமக்கு உரிய ஆசாரமும் சத்தியமும் நாணமும் ஆகிய இந்த மூன்றின்கண்ணும் தப்பாமல் நடப்பார்கள். எ-று.

***எ) பழைய2.:*** உயர்ந்த குடியின்கட்பிறந்தார். நல்லொழுக்கமும் பொய் சொல்லாமையும் நாணமும் என இம்மூன்றும் தம்மிடத்து இழுக்கு வராமற் காப்பார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்.***'நாண் - அற்றம் மறைத்தல்'. அற்றம் என்பது சோர்வு என்னும் பண்புப்பெயரதாய்ச் சோர்வினால் மறைக்க வேண்டிய உறுப்புகளை மறையாமையையே சுட்டுவது. இதனை 'அற்றங்க காவாச் சுற்றுடைப்பூந்து கில்' என்னும் ***(மணிமேகலை,*** 3:139) அடியான் உணரலாம். ஆனால் ***வள்ளுவர்,*** கேடு குற்றம் மறைத்தற்குரிய பகுதி, நோய்முதலிய பல பொருளில் ஆளுவர். ஈண்டு மறைக்க வேண்டிய உறுப்பு, பழி இவற்றையே உணர்த்தி நிற்பதை 'மறைத்தலாகிய நாணுடைமை' என்னும் சொற்குறிப்பான் உணரலாம்.

ஒழுக்கம் என்பது வரைவிலக்கணத்துக்கு உட்பட்டதன்று. ***அறத்துப்பாலில்*** 'தீய வழுக்கியும், வாயாற் சொல்லாமையும், உலக நடையோடு ஒத்து நடத்தலும் ஆம்' எனப் பெற்றது. நூல் விதிக்கு அப்பாற்பட்ட, அனுபவ நிலைக்கு ஏற்ற அனைவராலும் நல்லன என ஒத்துக் கொள்ளக்கூடிய செயலிலே ஒழுக்கம் இருப்பதாக ஒப்புரவால் உணர்கிறோம். அடுத்து அழுக்காறின்மையே ஒழுக்கம் எனப்பெறுகின்றது. மனமாசின்மையே ஒழுக்கம் எனப்பெறுகின்றது. ஆகவே ஒழுக்கம் என்பது அனைவராலும் இது சிறந்தது எனப் போற்றப்படுவதாய், எல்லார்க்கும் ஒத்ததாய் இருப்பதே ஒழுக்கம் எனப்பட்டது என்பது ஆசிரியர் கருத்தாதல் அறிக.

தத்தம் வருணத்திறகும் நிலைக்கும் ஓதிய ஒழுக்கத்தினை யுடையராதல் எனின், வேதம் ஓதுதலும் ஓதுவித்தலும், வேட்டலும் வேட்பித்தலும் மறையோர் தொழிலாக விதிநூல் விதிக்கவும். அதனை ***வள்ளுவர்*** 'மறப்பினும்' என்னுங் ***குறளான்*** ஒழுக்கம் ஓதுதற்றொழிலின் வேறானது என்பது காண்க. ஆகவே 'ஒழுக்க முதலிய மூன்றும் இழுக்கார்' என்பதற்குக் 'கல்வியானன்றித் தாமாகவே வழுவார்' என்ற ***பரிமேலழகர்*** உரை

5. மக்களுடைய 3 கரணங்களில் மனத்திற்கு நாண் உரியது; மொழிக்குத் தீயன மொழியாமை உரியது; மெய்க்கு ஒழுக்கம் உரியது. ஒழுக்கமும், வாய்மையும் நாணும் என மெய்,மொழி, மனம்.

6. அம்முறையே ஆயின - இவற்றிற்கு இயைந்த முறையின

கல்வியான் தவறலாம் என்ற எதிர்மறைப் பொருளைப் பயப்பதாகிறது. இங்ஙனம் கருதும் ***பரிமேலழகர்*** நோக்கம் அறியக் கூடவில்லை. குடிப் பிறந்தார் இயல்பாகவே வழுவார்; பிறவாதார் கல்வியான் வழுவார் என்னுங் கருத்தினதாக இருக்குமோ? பாடப்பிழையோ அறியக் கூடவில்லை. ***மு.ரா.அரு.*** 'குடிப்பிறந்தார் இம்மூன்றிலும் வழுவா திருத்தற்கு நூல்களைப் படித்தறிய வேண்டியதில்லை; குடிப்பிறந்தார் இயல்பாகவே வழுவாதிருப்பர்' என்பர். இவ்விளக்கம் ஓரளவு ***பரிமேலழகர்*** கருத்தை அறிய ஊன்றுகோலாகிறது.

***பழைய உரை.*** 'இழுக்கார் - இழுக்கு வராமற் காப்பார்' என்னும், தாமாகவே இழுக்கார் என்பதற்கும். இழுக்கு வாராமற் காப்பார் என்பதற்கும் பொருள் வேறுபாடுண்மை கண்டு இவர் கல்வியானன்றித் தாமாகவே வழுவார் என்பதைக் கருத்துட் கொண்டு இங்ஙனம் எழுதினர் என்று உணர்தல் தகும். இத்தகைய ஐயங்கட்கு இடம் இன்றிக் குடிப்பிறந்தார்.... இந்த மூன்றின் கண்ணும் தப்பாமல் நடப்பார்கள் என்ற ***கவிராசர்*** உரை தெள்ளிது. இவ்வகையில் ***மணக். காளிங்கர்*** உரைகளும் சிறந்தன ஒத்தன. ***வரத.. தேவநேயர்*** உரைகளும் அங்ஙனமே.

***பரிமேலழகர்*** உரையின் தெளிவின்மையைக் ***கோ.வ.*** 'கல்வியானன்றி - கல்வியறியான் வழுவாதிருத்தலேயன்றித் தாமாகவும் தவறார்' எனத் தெளிவிப்பா.

## ஓ) ஒப்புமைப் பகுதி:

***குடிப்பிறந்தார் இழுக்கார் ஒழுக்கத்தினின்று:***

.......................... பெறுதற் கரியதம்
குலஞ்சு ரக்கு மொழுக்கங் குடிக்கெலாம் - கம்ப., 69

இற்பிறப்புமொ ழுக்குமி ழுக்குமில்
கற்பும் யான்பிறர்க் கெங்ஙனங் காட்டுவேன் - கம்ப. 5468

***குடிப்பிறந்தார் நாண்:***

சிட்டர்செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய் -கம்ப., 6250

***முற்றும் :***

சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கல்லது - வான்தோயும்
மைதவழ் வெற்படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு - நாலடி., 142

உள்ளல் மொழிதல் செயல்மூன்றொத் தொழுக்கம் வாய்மை நாண் இழுக்கார்
மன்னு மனையில் பிறந்தார்கள் மலர்தல் ஈகை இகழாமை

நன்னர் மொழியும் அவர்க்கேயாம் நன்மை பயவா வினைவறுமை
இன்னவிடத்தும் புரியார்கள் எமகண்டா இனி யறிமோ. - *வி.நா.அரசி., 143*

## 96.3. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
## வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (953)

***உரைப்பகுதி :***

***அ) மணக். பரிப்.:*** 'நான்கின்வகை' - பாடம்.

முக மலர்ச்சியும், கொடையும், இனியவை கூறுதலும், பிறரை இகழாமையுமாகிய நான்கினையம் மெய்ம்மையுடைய குலத்தினுள் ளார்க்கு அங்கம் என்று சொல்லுவர். எ-று.

***ஆ) பரிதி.:*** மகிழ்ச்சி, கொடை, நல்வார்த்தை, இகழ்ச்சியின்மை இந்த நாலு குணமும் உள்ளவன் குடி செய்வான். எ-று.

***இ) பரிப்.:*** முகமலர்ச்சியும் கொடையும் இனியவை கூறுதலும் பிறரை இகழாமையும் ஆகிய நான்கினையும் மெய்ம்மையுடைய குலத்தின் உள்ளார்க்கு அங்கம் என்று சொல்லுவர். எ-று.

தொகை என்பது பிண்டத்தின் பெயர் ஆதலின் வகை என்பது உறுப்பிற்குப் பெயர் ஆயிற்று. மெய்ம்மைக் குடி என்றதனானே எஞ்ஞான்றும் தப்பு இல்லாக் குடி என்று கொள்ளப்படும். இவை நான்கினையும் தமக்கு உறுப்பு ஆக உடையார் என்றும் கூறிற்று.

***ஈ) காளி.:*** யாவர்மாட்டும் முகமலர்ச்சி உடையராகையும், வறியவர் யாவர்க்கும் யாதானும் ஒன்றைக் கொடுத்தலும், யாவர்மாட்டும் முகம் மலர்ந்து இனியவை கூறலும், ஒருவரை நெஞ்சினான் இகழ்ந்திராமையும் இந்நான்கும் குடிப்பிறந்தார்க்கு வாய்ப்புடைமை என்று சொல்லுப சான்றோர். எ-று

இங்குச் சொன்ன குணங்களினின்றுச் சிறிதுகுன்றினும் குடிக்கு வடு என்று மானிக்கு[1] மானம் உடைமையும் அக்குடிப்பிறந்தோர்க்கே குணம் ஆகலான் மற்று அதன் பின்னரே அதனையறிவிக்கின்றது மேலைஅதிகாரம்[2]

***உ) பரிமே.:*** எக்காலத்தும் திரிபில்லாத குடியின்கண் பிறந்தார்க்கு, வறியார் சென்றவழி முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும், இன்சொற் சொல்லுதலும், இகழாமையும் ஆகிய இந்நான்கும் உரிய கூறு என்று சொல்லுவர் நூலோர். (எ-று).

---

1. மானிக்கு - மானம் உடையவனுக்கு
2. இதனைப் பத்தாங் குறளாகக் கொண்டாராகலான் அதிகார இயைபும் உடன் கூறினார்.

பொய்ம்மை திரிபுடைமையின் திரிபின்மையை 'வாய்மை' என்றும், 'இல்லாரை எல்லாரும் எள்ளுவராகலின்[3] இகழாமையை அவர் கூறாக்கியும்[4] கூறினார். குடி ஆகுபெயர்[5]. 'நான்கின் வகை' என்பது பாடமாயின்[6]. வாய்மைக் குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந்நான்கான் உளதாம் என்று உரைக்க. இவை மூன்று பாட்டானும் குடிப்பிறந்தாரது இயல்பு கூறப்பட்டது.

**ஊ) *கவிராசர்.*:** நல்ல குடியிலே பிறந்தாரிடத்திலே தரித்திரானவர்கள் வந்தால், முகமலர்ந்து சந்தோஷமாய் இருக்கிறதும், உண்டான மாத்திரம் கொடுக்கிறதும் நல்ல வார்த்தை சொல்லுகிறதும், அவர்களை இகழாமல் இருக்கிறதுமான இந்த நான்கு குணமும் சுபாவமாக உண்டாம். எ-று.

***எ) பழைய 2.*:** எக்காலத்தும் பிழையாத வாய்மை தப்பாத குடியின்கட் பிறந்தார்க்கு, வறியார்சென்ற விடத்து முகமலர்ச்சியும் உள்ளன கொடுத்தலும், இன்சொற் சொல்லலும், இகழாமையுமாகிய இந்நான்கும் உரியவகை என்று சொல்லுவர் நூலோர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'நகை'.*** என்பதற்கு 'முகமலர்ச்சி' என்றும், 'மகிழ்ச்சி' என்றும் உரை கூறுவர். இவற்றுள் மகிழ்ச்சி மனத்தின் நிறைவாகவும் மலர்ச்சி மகிழ்ச்சியின் விளைவாக முகத்தில் காணப்படும் மெய்ப்பாடாகலானும் வேறென்றே துணியப்படும் ஆதலால் 'மலர்ச்சி' என்ற உரையே சிறந்தது. மகிழ்ச்சியைப் பிறரறியத் துணையாயிருப்பது மலர்ச்சியே ஆதலான்.

ஈண்டு நகையென்றது இகழ்ச்சிக் குறிப்பானும் துன்பமிகுதியானும், இன்ப நுகர்ச்சியானும் தோன்றும் எள்ளல் முதலிய நான்கனடியாக வந்ததன்று. பெறுதற்கரியாரைப் பெற்றுவிட்டோமே என்றும், அவர்கட்கும் ஈயவும், இன்சொல் கூறவும், வாய்ப்பினைப் பெற்றோமே என்றும் எண்ண மனத்தின்கண் நிகழும் மனநிறைவே மகிழ்ச்சி, அதன் வெளிப்பாடே முகமலர்ச்சி, மலர்ச்சியென்ற உரையே சிறக்கும் மலர்ச்சிதான் ஏற்பானை அணுகச்செய்வது ஆகலான்.

***'இகழாமை'*** 'இகழ்ச்சியின்மை' என்பர் ***பரிதி.***: 'ஒருவரை நெஞ்சினால் இகழ்ந்திராமை' என்பர் ***காளிங்கர்***; ஏனையோர் இகழாமை-பிறரை இகழாமை என வாளா விடுத்தனர்.

பிற்கால உரைகளில் ***தேவநேயர்*** 'தாழ்வாகக் கருதாமை' என்பர்.

3. குறள்.,752 4. அவர் கூறாக்கியும் - குடியின் கண் பிறந்தாரது பகுதியாக்கியும்

5. குடி என்னும் இடப்பெயர் பிறந்தாரை உணர்த்துதலால் இடவாகுபெயர்.

6. நான்கின் வகை என்று மணக்குடவரும் பரிப்பெருமாளும் பாடங் கொள்வர். காளிங்கர் கொண்ட பாடமும் இது என்னும் திருப்பதி தேவ ஸ்தானப் பதிப்பு. காளிங்கருரை நான்கும் குடிப் பிறந்தார்க்கு வகை என்று சொல்லுகிறது. ஆதலால் காளிங்கர் பாடமும் பரிமேலழகர் பாடமும் ஒத்திருத்தல் என்க.

இதன் அமைப்பு ***காளிங்கர்*** உரையை ஒத்திருக்கிறது. 'பிறர்பழி கூறாமை' என்பர். ***வரத.: இராம.*** 'இல்லாரை எல்லாரும் எள்ளுவராகலின் வறியார் சென்றவழி அவரை இகழார்' என்பது சரியன்று. 'ஒத்தார் உயர்ந்தார் தாழ்ந்தார் எல்லாரிடத்தினுமே நகை முதலிய நாற்குணமும் உடையராயிருப்பர்' என்பதே சரி என்று ***பரிமேலழகரையும்*** சிலரையும் மறுப்பர். 'இகழாமை' பற்றிய உரைகள் இகழ்ச்சியாகக் கருதாமையையா? பேசாமையையா? ***வள்ளுவர்*** கருதுகிறார் என்ற ஐயத்தை உண்டாக்குகிறது. 'இன்சொல்' சொல்லி ஆசிரியர் இகழாமை சொல்லுவதால் இவையிரண்டும் தம்முள் மாறுபட்டனவாகலின் இகழ்ச்சியாகக் கருதாமையை கருதுகிறார் எனலாம். ஆதலால் ***காளிங்கர்*** உரையும் அவை போன்றனவுமே சிறந்தன என்க. இன்சொல்லுக்குப் பின்னே இகழ்தல் வந்தவன் முன்னிலையில் நிகழாது: இல்லாதபோது நிகழுமாயின் புறங்கூற்றாம். அது ***அறத்துப்பாலிலேயே*** பொதுக்குணமாகக் கடியப்பட்டதாம். ஆதலானும் 'இகழ்ந்து கருதாமையே' எனல் தகும்.

## ஒ) ஒப்புமைப் பகுதி:

***முற்றும்:***

இனநன்மை இன்சொலொன் றீதல்மற் றேனை
மனநன்மை என்றிவை எல்லாம் - கனமணி
முத்தோடிமைக்கும் முழங்கு உவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே உள. - நாலடி. 146

## ஓ) மேற்கோள் பகுதி:

***இளம்:*** பொருளொடு புணர்ந்த பக்கம்; பக்கம் என்றதனால் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாம் கொள்க எனக்கூறி, குடிமை என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர்.

- தொல்பொருள்..75

## 96.4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர். (953)

***உரைப்பகுதி :***

***அ) மணக்:*** பலகோடி பொருளைப் பெறினும், உயர்குடிப்பிறந்தார் தம்குடிக்குத் தாழ்வாயின செய்யார், எ-று.

இது மானம் விடார் என்றது.

***ஆ) பரிதி.:*** கோடிதனம் பெற்றாலும் குடிப்பிறந்தார் குலநெறிக்கு[1] குறைசெய்யார், எ-று.

1. குல நெறி - பிறந்த குலத்திற்கு ஏற்ற ஒழுக்கம்.

***இ) பரிப்.:*** பல கோடிப் பொருளைப் பெறினும் உயர்குடிப் பிறந்தார் தம்குடிக்குத் தாழ்வு ஆயின செய்யார், எ-று.

இது மானம் விடார் என்றது.

***ஈ) காளி.:*** ஒன்று இரண்டு அன்றிப் பிற பல அடுக்கிய கோடி பொருள் பெறினும், குடிப்பிறந்தோர் இந்நாணமும் நடுவும் குன்ற வருவன என்றும் கடிவதல்லது[2] செய்வது இலர், எ-று.

***உ) பரிமேல்.:*** பலவாக அடுக்கிய கோடி அளவிற்றாய பொருளைப் பெற்றா ராயினும், உயர்ந்த குடியின்கண் பிறந்தார் தம் ஒழுக்கம் குன்றும் தொழில்களைச் செய்யார். எ-று.

அடுக்கிய கோடி என்பது ஈண்டு எண்ணப்படும் பொருள்மேல் நின்றது[3]. குன்றும் தொழில்கள் - குன்றுதற்கு ஏதுவாய தொழில்கள்.

***ஊ) கவிராசர்.:*** அநேக கோடி திரவியங்கள்[4] வருகின்றதானாலும், நல்ல குடியிலே பிறந்தவர்கள் தங்களுடைய ஒழுக்கங்கள் கெடத்தக்க காரியங்களைச் செய்யார். எ-று.

***எ) பழைய 2.:*** பலவாக அடுக்கிய கோடிப் பொருளைப் பெற்றாராயினும் குடியிற் பிறந்தார் தம் ஒழுக்கம் குன்றுந் தொழில்களைச் செய்யார்.

## ஐ) *தொகுப்பும் குறிப்பும்:*

***'குன்றுவ'***

'தம் குடிக்குத் தாழ்வாயின' ***மணக்.***

'குல நெறிக்கு உளதாம் குறை' ***பரிதி;***

'நாணமும் நடுவும் குன்ற வருவன' ***காளிங்கர்***

'ஒழுக்கம் குன்றுந் தொழில்கள்' ***பரிமேல்., கவிராசர், பழைய. தேவநேயர்.***

'பெருமைக்குக் குறைவான' ***இராம.;***

'தம் நிலைக்குத் தாழ்ந்த செயல்' ***வரத.;***

'உலகு குன்றுவ, உள்ளஞ்சிறுகுவ' ***மு.கோ.;***

'தமது சீர் குன்றுவதற்குரிய செயல்' ***காசு.;***

தமது மனம் 'என்ன செய்து விட்டோம்' என நினைந்து இரங்குதற்குரிய செயல் என்ற கருத்தில் 'உள்ளஞ்சிறுகுவ' என்ற உரையும் சிறப்புடையதாம். 'உலகு குன்றுவ' என்பது ஏற்றதன்று.

---

2. கடிவதல்லது - நீக்குவதல்லது.
3. கோடி என்னும் பேரெண்ணின் பெயர் அவ்விளவினதாகிய பொருளையுணர்த்தி நிற்கின்றமையின் இது எண்ணலளவையாகுபெயர்.
4. திரவியங்கள் - செல்வங்கள்.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

***அடுக்கிய கோடி பெறினும்:***

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில். - குறள். 1005

கயவரைக் கைஇகழ்ந்து வாழ்தல் நயவரை
நள்ளிருளும் கைவிடா நட்டொழுகல். தெள்ளி
வடுவாவன வாராமல் காத்தல் - இம்மூன்றும்
குடிமாசி லார்க்கே உள. - திரி.,77

## 96.5. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
## பண்பின் தலைப்பிரிதல் இன்று. (955)

***உரைப்பகுதி :***

***அ) மணக்:*** வழங்கும் பொருள் தம் அளவிற்குக் குன்றிச் சுருங்கிய இடத்தும், பழைய பண்பு வழுவாத குடிப்பிறந்தார் தமது இயல்பினின்றும் நீங்குதல் இலர், எ-று.

இது பண்புடைமை விடார் என்றது.

***ஆ) பரிதி.:*** ஒருவர்க்குக் கொடுக்க வகையற்றாலும் குடிப்பிறந்தார், குலநெறிக்கு ஒத்த ஒழுக்கம் கெடார், எ-று.

***இ) பரிப்.:*** வழங்கும் பொருள் தம் அளவிற்குக் குன்றிச் சுருங்கிய இடத்தும் பழைய மரபு வழுவாத குடிப்பிறந்தார் தமது இயல்பினின்றும் நீங்குதல் இலர், எ-று.

இது பொருள் இல்லாத காலத்தும் இயல்பு குறையார் என்றமையின், ஒப்புரவு செய்தலும் தவிரார் என்றவாறு ஆயிற்று. இது உடைமை விடார் என்றது. இவை ஏழும் குடிப்பிறந்தார் இலக்கணம் கூறின.

***ஈ) காளி.:*** தமது இல்லின்கண் வழங்கிவரு பொருள் இனி மற்றுயாதும் இல் என மாய்ந்தக் கண்ணும் நெடுநாள் பழகி வருகின்ற குடிப்பிறந்தோர் என்றும் தமது மரபின்கண் தலை அழிதல் இல்லை, எ-று.

***உ) பரிமேல்.:*** தொன்று தொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார், தாம் கொடுக்கும் பொருள் பண்டையின் சுருங்கிய இடத்தும் தம் பண்புடைமையின் நீங்கார், எ-று.

தொன்று தொட்டு வருதல் - சேர, சோழ, பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்[1] தொடங்கி மேம்பட்டு வருதல். அவர்க்கு[2]

1. படைப்புக் காலம் - உலகப் படைப்பின் முதற்காலம் (ஆதிசிருஷ்டி)
2. அவர்க்கு - பழங்குடியிற் பிறந்தார்க்கு

நல்குரவாவது வழங்குவது உள்வீழ்வதாகலின் அதனையே கூறினார்.

***காரி.:*** பழங்குடிப்பெயர் சேர, சோழ, பாண்டியர் என்றார் போல்வன என்க.

***ஊ) கவிராசர்.:*** பாரம்பரியமாய் நல்லதாய் இருக்கிற குடியிலே பிறந்தவர்கள் தங்கள் திரவியம் குறைந்து கொடுக்கிறதற்கு இல்லாமற் போனாலும், தரித்திரரைக் கண்டால் நல்ல குணங்களினின்று நீங்காமல் நல்ல வார்த்தை சொல்லுவார்கள், எ-று.

பாரம்பரியமாய் நல்ல குடியாவது - தகப்பன், பாட்டன், இருபாட்டன், முப்பாட்டன் முதலான நல்லவர்களாய் இருக்கிறதாம்.

***எ) பழைய2:*** தொன்று தொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார், தாம் கொடுக்கும் பொருள் பண்டையிற் சுருங்கிய விடத்தும் தம் பண்புடைமையின் நீங்கார்.

சேர, சோழ, பாண்டியர் என்றது போல வருங்குடி. அவர்க்கு வறுமையாவது, கொடுத்தல் சுருங்குதல் என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

கருத்து மாற்றம் ***'வழங்குவது'*** என்னும் சொல்லொன்றிலேயே காணப்படுகிறது. ***மணக்குடவர்*** முதலானோர் யாவரும் 'கொடுத்தல் அல்லது ஈதல்' என்னும் பொருளிலேயே வழங்குவர் ஆனால் ***மணக்குடவர்*** 'வழங்குவது' என்பதனை வினையாலணையும் பெயராக்கி வழங்கும் பொருளுக்கு ஆக்குவர். பொருள் வழங்கப்படுவதேயன்றி வழங்குவ தன்மையின் 'குடிப்பிறந்தான் வழங்கும் தொழிற்கண் குறைந்தானாயினும்' என்ற உரை தகுதியது ஆகலாம். இவ்வுரைகள், 'வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும்' - 'வழங்கும் பொருள் அளவிற் குறைந்தாலும்', 'வழங்கும் தொழில் அளவிற் குறைந்தாலும்' என இருவகையானும் இயைபுறுத்தினும் கருத்தொன்றேயாதல் காண்க. ***காளிங்கர்*** உரை எளிமையானது. ***வரத.*** 'வழக்கமாகச் செய்ய வேண்டிய காரியங்களை வழங்குவது' என்பர். அவை கடமையாமேயன்றி வழங்குவதாகாமை யுணர்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும்:***

உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையின் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று. - நாலடி., 141

எவ்வம் உழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை. - நாலடி., 147

செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்கு
ஒல்கார் குடிப்பிறந் தார். - நாலடி., 148

செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன. - நாலடி., 149

எற்றொன்று மில்லா இடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்
அற்றக் கடைத்தம் அகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும். - நாலடி., 150

கொடைக் கடனும்

சாஅயக் கண்ணும் பெரியார் போல் மற்றையார்
ஆஅயக் கண்ணும் அரிது. - நாலடி., 180

பலர்க்காற்றிக் கெட்டு உலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச் செல்வம்
செய்வர் செயற்பா லவை. - நாலடி., 185

ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன - நாலடி., 358

பீடிலாக் கண்ணும் பெரியார் பெருந்தகையர் - பழ.நா., 72

ஒற்கந்தாம் உற்றவி டத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல் - பழ.நா., 71

கூஉய்க் கொடுப்பதொன் றில் எனினும் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்றாரே துன்பம் துடைக்கிற்பார்
வாய்ப்பத்தான் வாடியக் கண்ணும் பெருங்குதிரை
யாப்புள்வே றாகி விடும். - பழ.நா.,162

சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலாதேந்தம்
தனம்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம்சிறிய ராவரோ மற்று. - வாக்கு., 28

சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங் கென்னாகும் - சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால் - வாக்கு., 18

ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து. - நல்வழி.,9

பிறந்தி றந்துபோய்ப் பெறுவதும் இழப்பதும் புகழேல்
நிறந்தி றம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்
திறன்தி றம்பினும் செய்தவம் திறம்பினும் செயிர்தீர்
மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புத வழக்கோ – கம்ப., 1561

தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் மாறாது. - பழ.,

குப்பைக்குள் இருந்தாலும் குன்றிமணி நிறங் குன்றாது. - பழ.,

கெட்டாலும் செட்டி செட்டியே சீரழிந்தாலும்பட்டு பட்டே - பழ.,

நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி மாணிக்கம். - பழ.,

## 96.6. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற குலம்பற்றி வாழ்துமென் பார். (956)

**உரைப்பகுதி :**

அ) ***மணக்.***: பொய்யைச் சார்ந்து, அமைவில்லாதன செய்யார்; குற்ற மற்ற குலத்தைச் சார்ந்து உயிர்வாழ்வோம் என்று கருதுவார், எ-று.

இது சான்றாண்மை விடார் என்றது.

ஆ) ***பரிதி.***: கோபம் பற்றி நெறியல்லாதன செய்யார்; மாசற்ற குலத் தொழிலிலே நிற்பார், எ-று.

இ) ***பரிப்.***: பொய்யைச் சார்ந்து அமைவு இல்லாதவற்றைச் செய்யார்; குற்றம் அற்ற குலத்தைச் சார்ந்து வாழ்வோம் என்று கருதுவார், எ.று.

இது சான்றாண்மை விடார் என்றது.

ஈ) ***காளி.***: பிறரோடு நெஞ்சினால் சலம்[1] பற்றிநின்று தமது தகுதிக்கு அமைவுஇல்லன[2] எஞ்ஞான்றும் செய்யார்; யார் எனின்? குற்றம் அற்ற தம் குடிப்பண்பினைச் சலியாமல்[3] இறுகப் பற்றிக் கொண்டு நின்று யாம் வாழும் உயிர் வாழ்க்கையை இங்ஙனம் வாழ்தும் என்னும் இயல்பினர், (எ-று).

உ) ***பரிமேல்.***: வசையற்று[4] வருகின்ற நம் குடிமரபினோடு[5] ஒத்து வாழக்கடவோம் என்று கருதி அவ்வாறு வாழ்வார், வறுமையுற்ற வழியும், வஞ்சனையைப் பொருந்தி அமைவிலவாய தொழில் களைச் செய்யார்,(எ-று).

1. சலம் - வஞ்சனை
2. அமைவு இல்லன - பொருந்தாத
3. சலியாமல் - சிறிதும் நழுவாமல்
4. வசை - பழி
5. 'தம் குடிமரபினோடு' என்றும் பாடமுண்டு.

அமைவின்மை அம்மரபிற்கு ஏலாமை. இவை மூன்று பாட்டானும் அவர் வறுமையுள்ள வழியும் அவ்வியல்பின் வேறுபடார் என்பது கூறப்பட்டது.

*காரி.:* சலம் - வஞ்சனை

ஊ) ***கவிராசர்:*** குற்றமில்லாத நல்ல குடியிலே பிறந்து அந்தக் குடிக்கு ஏற்க வாழவேணும் என்று நினைத்திருக்கிறவர், தங்களுக்குத் தரித்திரம் வந்தபோதும் அது தீரவேணும் என்று இழிவான காரியங்களைச் செய்யார், எ-று.

எ) ***பழைய2:*** வசையற்று வருகின்ற நம் குடிமரபோடு ஒத்து வாழக் கடவோம் என்று கருதுவார் வறுமையுற்ற வழியும் வஞ்சனையைப் பொருந்தி அமைவிலவாய தொழில்களைச் செய்யார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'சலம் பற்றி'***

'பொய்யைச் சார்ந்து' ***மணக்.;***
'கோபம் பற்றி' ***பரிதி.;***
'சலம்பற்றி நின்று' ***காளிங்கர்;***
'வஞ்சனையைப் பொருந்தி' ***பரிமேல்.; பழைய2;***
'பகைவல்லது வஞ்சனை' ***கா.சு.;***
'சூழ்நிலை', 'அதாவது பயம்' ***வரத.;***

***வள்ளுவர்*** முன்னரும் 660ம் குறளில் 'சலத்தாற் பொருள் செய்து' என்று வஞ்சனையென்ற பொருளிலேயே ஆண்டிருத்தல் காண்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும் :***

நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றம்கொண் டேறார் - உரங்கவறா
உள்ளமெனும் நாரினால் கட்டி உளவரையால்
செய்வர் செயற்பா லவை. - நாலடி., 153

கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து. - நாலடி.,156

கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார் - தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவது காட்சியார்
சாயிற் பரிவ திலர். - நாலடி., 157

அடர்ந்து வறியவராய் ஆற்றாத போழ்தும்
இடங்கண் டறிவாம்என் றெண்ணி யிராஅர்
........................................ சான்றோர்
கடங்கொண்டு செய்வார் கடன். - பழ. நா.83

........................... மறத்தை நோக்கி
ஒப்பழியச் செய்கிலா ருயர்குலத்துத் தோன்றினோர். - கம்ப., 2962

## 96.7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. (957)

***உரைப்பகுதி :***

அ) ***மணக்.***: உயர்குடிப் பிறந்தார்மாட்டுக் குற்றம் உளதாயின் அது வானத்தின் மதியின் கணுள்ள மறு[1]ப் போல உயர்ந்து விளங்கும்; ஆதலால் குற்றப்பட ஒழுகற்க, எ-று.

ஆ) ***பரிதி.***: குடியிலே பிறந்தார் குற்றம் விசும்பில் மதியிடத்துக் களங்கம் போலத் தோன்றும், எ-று.

இ) ***பரிப்.***: உயர்குடிப்பிறந்தார்மாட்டுக் குற்றம் உளதாயின் அது வானத்து மதியின்கண் உள்ள மறுப்போல உயர்ந்து விளங்கும்; ஆதலால் குற்றப்பட ஒழுகற்க, எ-று

இது குற்றம் செய்தலைத் தவிர வேண்டும் என்றது.

ஈ) ***காளி.:*** ஒழுக்க நலத்திற்கு உரிய குடிப்பிறந்தோர் மாட்டும் ஒரு குற்றம் உளதாம் ஆயின், மற்று அது வானின் திகழும் மதியிடத்து உண்டாகிய மறுப்போல் உயர்ந்து விளங்கும்,எ-று.

உ) ***பரிமேல்.***: உயர்ந்த குடியின்கண் பிறந்தார் மாட்டு உளதாம் குற்றம், தான் சிறிதேயாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித் தோன்றும், (எ-று).

உயர்குடி முதலிய பொருள்வகை மூன்றற்கும் விசும்பு முதலிய உவமைவகை ஒத்துப் பால் மாறுபட்டது.[2] குடியது உயர்ச்சியானும், மதிபோன்ற அவர் நற்குணங்களோடு மாறாத லானும், உலகெங்கும் பரந்து வெளிப்படும் என்பதாம்.

---

1. மறு - களங்கம்
2. உயர்குடிக்கு விசும்பும், அதில் பிறந்தார்க்கு மதியும், அவ்விடத்திலுள்ள மறுவும் உவமையும் பொருளுமாக இயைந்து மதி என்னும் ஒருமைப்பால் உவமானத்திற்குக் குடிப்பிறந்தார் என்னும் உவமேயம் மட்டும் மாறுபட்டு நின்றது. இங்ஙனம் மாறுபட்டு நிற்கலாம் என்பதைப் 'பால் மாறுபடுதலும் பாகுபாடுடைய" என்னும் தண்டியலங்கார நூற்பா கண்டு தெளிக.

ஊ) *கவிராசர்*: நல்லகுடியிலே பிறந்து நல்லவர்களாயிருக்கிறவர் களிடத்திலே கொஞ்சமான குற்ற முண்டாயினும் அது, ஆகாசத்திலே திரிகிற சந்திரனிடத்திலேயிருக்கிற மறுவைப் போல பெரியதாகத் தோன்றும், எ-று.

ஏ) *பழைய2*: உயர்ந்த குடியின்கட் பிறந்தாரிடத்து உண்டாகிய குற்றம் தான் சிறிதேயாயினும், விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஓங்கித் தோன்றும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பரிமேலழகர் உவமமும் பொருளும் இயைத்துக் கூறும்போது 'உயர்குடி முதலிய பொருள் வகை மூன்றற்கும் விசும்பு முதலிய உவமைவகை ஒத்துப் பால் மாறுபட்டன' என விளக்கினர். அதற்கு **கோ.வ.** உயர்குடிக்கு விசும்டையும், அதன்கண் மதிக்குக் குடிப்பிறந்தாரையும் அவரிடத்துக்குள்ள குற்றத்திற்கு மறுவையும் உவமித்தார். இதில் மதியொன்றாக-குடிப்பிறந்தார் பலராதலின் ஒருமை உவமத்திற்குப் பன்மை உவமேயமாயிற்று. அது பால்மாறுபாடாகும் என விளக்கினார். இவ்வாறு வருதலைத் தண்டியாசிரியர் 'பால் மாறுபடுதலும் பாகுபாடுடைய' என உவமைக்கோதிய இலக்கணத்தான் உணர்க என்றனர். ஆசிரியர் ***தொல்காப்பியனார்*** 'ஞாயிறுந் திங்களும் உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசையா'ஆதலானும் அவை 'தெய்வஞ்சுட்டிய பெயர் நிலைக்கிளவியாய் இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவாம்' ஆதலானும் பலர்பால் பொருளுக்குப் பன்மையாய் விளங்கும் திங்கள் பலரின்மையானும் அதுவே உயர்திணைப் பாற்பொதுவாய் நின்று குடிப்பிறந்தார்க்கு உவமமாதல் கூடுமாதலானும் பால்மாறுபட்டதாதல் யாங்ஙனம்? ***பரிமேலழகர்*** இங்ஙனம் கூறியாராதல் சிந்தித்துத் துணிதற்குரியது.

## ஓ) ஒப்புமைப்பகுதி :

### *குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் :*

பெருவரை நாட பெரியார்கண் தீமை
கருநரை மேல் சூடேபோல் தோன்றும் - நாலடி., 186

நிரைதொடி தாங்கிய நீடோள் மாற்கேயும்
உரையொழியா வாரும் உயர்ந்தோர்கட் குற்றம்
மரையாகன் றூட்டும் மலைநாட மாயா
நரையான் புறத்திட்ட சூடு. - பழ.நா., 80

கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றாலும் - தோன்றாதாம்

ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படும்குற்றம்
குன்றின்மே லிட்ட விளக்கு. - பழ.நா., 81

இரக்கமுந் தருமமுந் துணைக்கொண் டின்னுயிர்
புரக்குநன் குலத்துவந்தொருவன் பூண்டதோர்
பரக்கழி யாமெனப் பரந்து நீண்டதால். கம்ப., 10071

*முற்றும் :*

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுளறின். - நாலடி., 151

விதிப்பட்டநூ லுணர்ந்து வேற்றுமை இல்லார்
கதிப்பவர் நூ லினைக் கையிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு. - பழ.நா., 10

பதிப்பட்ட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்தில் பட்ட மறு. - அறநெறி., 74

வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறம் கிளர. - மணி., 6:2 - 5

## 96.8. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப் படும். (958)

**உரைப்பகுதி:**

**அ)** ***மணக்.***: 'ஐயப்படல்' பாடம்.

ஒருவன் குடிநலத்தின் கண்ணே நீர்மையின்மை தோன்றுமாயின், அவனைக் குலத்தின்கண் தப்பினவன் என்று ஐயப்படுக, எ-று.

**ஆ)** ***பரிதி.***: மனிதனாகப் பிறந்து கிருபை[1]யற்றவனாகில் அவனது குலம் யாது என்று சந்தேகப்படுவர், எ-று.

**இ)** ***பரிப்.***: 'ஐயப்படல்' பாடம்:

ஒருவன் குடிநலத்தின்கண் நீர்மை இன்மை தோன்றும்

1. கிருபை - கருணை

ஆயின் அவனைக் குலத்தின்கண் தப்பினவன் என்று ஐயப்படுக. இதனானும் குடிப்பிறந்தார் நீர் அல்ல செய்யார் என்று நன்கு மதித்தவாறு ஆயிற்று.

ஈ) ***காளி.***: 'ஐயப்படல்' பாடம்.

நல்லொழுக்கத்தின் கண் தமக்குச் சிறிதும் கிருபை இல்லாமை தோன்றின் மற்று அவரைப் பற்றி அவரைப் பிறந்த குலத்தின் கண் ஐயப்படுதல்; எனவே அவர் ஏக்கழுத்தின் கண்[2] நலம் இல்லாமையால் அவர்மாட்டு அஞ்சத் தகும். எ-று.

உ) ***பரிமேல்.***: குலநலம் உடையனாய் வருகின்றவன் கண்ணே ஈரமின்மை உளதாமாயின், அவனை அக்குலப் பிறப்பின் கண்ணே ஐயப்படும் உலகம்,(எ-று).

நலமும் குலமும் ஆகுபெயர்[3]. நாரி[4]ன்மையால் கொடாமை யும் கடுஞ்சொல்லும் முதலிய கூறப்பட்டன. தோன்றின் என்பது தோன்றாமை விளக்கி நின்றது. நலனுடையனாய் வருதலி னிடையே இவை[5] தோன்றலின், உள்ளது[6] ஐயமாயிற்று. உலகமென்பது அவாய் நிலையான் வந்தது. ஐயப்படல் என்பது பாடமாயின், ஐயப்படுக என விதியாக்கி உரைக்க.[7] இவை இரண்டு பாட்டானும் வேறுபட்ட வழிப் படும் இழுக்குக் கூறப்பட்டது.

***காரி.***: நாரின்மை - ஈரமின்மை

ஊ) ***கவிராசர்***: நல்ல குலத்திலே பிறந்தவனிடத்திலே தயையில்லா விட்டால், அவனை அந்தக் குலப்பிறப்பிலே சந்தேகப்படுவர் உலகத்தார். எ-று.

எ) ***பழைய2*** : குலநலமுடையவனாக வருகின்றவனிடத்து அன்பும் அருளும் இல்லையாயின், அவனை அக்குலங் குடியின் ஐயப்படும் உலகம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்குடவர்*** 'நரின்மை தோன்றின்' எனப் பாடங் கொண்டிருத்தல் கூடும். ***பரிதி, காளிங்கர்*** 'நாரின்மை-கிருபையின்மை' என்பர். 'ஈரமின்மை' என்பர் பரிமேல்; 'தயை' எனக் கவிராசரும், 'அன்பும் அருளும்' எனப் ***பழைய உரையும்*** கூறும், 'நகையீகையின் சொல் இகழாமை நான்கும் இன்மை' என்பர் ***தேவநேயர்.*** இவை நான்கும் நாராகிய அன்பின் காரியமாதலின் கூறினர் போலும்.

2. ஏக்கழுத்தின் கண் - இறுமாப்பின் கண்.
3. நலம் என்ற பண்பின் பெயர் பண்பையுடையானைக் காட்டுதலானும் குலம்என்ற பண்பின்பெயர் குலப்பிறப்பைக் காட்டுதலானும் பண்பாகு பெயர்களாம்.
4. நார் - அன்பு 5. இவை - கொடாமை, கடுஞ்சொல் முதலியன
6. உள்ளது - குலப்பிறப்பிருத்தல்
7. மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர் இங்ஙனம் பாடங் கொண்டனர்.

***காளிங்கர்*** 'ஐயப்படல்' எனப்பாடங்கொண்டு 'ஐயப்படுதல்' எனத் தொழிற் பெயராகவே உரை கண்டு, 'ஐயப்படும் - அஞ்சத்தகும்' என்றனர். ஐயம்- அச்சம் என்ற பொருளில் வழக்கின்மையான் இவர்கொண்ட பாடம் 'அஞ்சப்படும்' என்றிருக்கலாம் என எண்ணுதல்கூடும். ***தேவநேயர்*** 'ஐயப்படல்' எனவும் பாடங்கண்டு 'ஐயப்படுக' எனப் பொருள் கூறி ஏவல் ஆக்கியுரைப்பர். ***வரத.*** 'நார் - எல்லாவித குணநலங்கள்' என்பர். இது நேர் பொருளன்று. இவர் கருதிய பொருளேயாம். குலத்தின்கண் ஐயப்படல் - குலத்திற்கேற்ற குணமின்மையான் இவன் குலம் யாது? என்று சந்தேகிக்கப்படும் என்பர் ***மணக்., பரிதி.*** முதலானோர். மகனறிவு தந்தையறிவு; வித்தொன்று போடச் சுரையொன்று முளையாது என்பராகலின், வித்தில் மாறுபாடுள்ளது என்பது இடக்கரடக்கிக் கூறப்பட்டது எனலுமாம்.

இவ்வுரைகளில் ***பரிமேலழகர்*** உரையும் விளக்கமும் ஏற்புடையன. தான் பிறந்த குலத்திற்குரிய நலத்தின்கண் ஒருவற்குப் பற்றுள்ளம் இல்லையாயின் அவன் பிறந்த குலமே அதுவாக இருக்கமுடியாது' ஐயப்பட நேரும் எனலுமாம். இது அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தலாகும்.

### ஓ) ஒப்புமைப்பகுதி:

**குலத்தின்கண் ஐயம்:**

கைவண் டோன்றல் ஐயம் உடையேன்
ஆர்புனை தெரியல்நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர் மற்றிது
நீர்த்தோநினக்கென வெறுப்பக் கூறி - புறம்., 43:12-15

....இனைய சொன்னாய் சனகன்கொ லியையின் ஐயா.
- கம்ப., 7826

***முற்றும்:***

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேர்இல் பிறந்தமை ஈரத்தின் அறிப - முதுமொழிக்., -2:1

வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் தோன்றி னாயே - கம்ப., 4122

## 96.9. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும் குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். (959)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** வித்து நிலத்தின்கண் மறைந்து கிடப்பினும், அது மறைந்து

கிடந்தமையை அதன் முளை அறிவிக்கும்: அது போல உயர்குடிப் பிறந்தாரை அவரவர் வாயிற்சொல் அறிவிக்கும், எ-று.

***ஆ) பரிதி.***: நிலத்தில் கிடந்த விதையை இன்ன விதை என்று அங்குரம்[1] காட்டும்; அதுபோலக் குலத்தில் பிறந்தவர் இவர் என்று வார்த்தை காட்டும். எ-று.

***இ) பரிப்.***: வித்து நிலத்தின்கண் மறைந்து கிடப்பினும். அது மறைந்து கிடவாமையை அதன் முளைஅறிவிக்கும்; அதுபோல உயர் குடிப்பிறந்தாரை அவர் வாயில் சொல் அறிவிக்கும் எ-று.

இதனானே குடிப்பிறந்தார் இன்னாத சொல்லார் என்றவாறு ஆயிற்று.

***ஈ) காளி.***: முன்னம் புலப்படாது நிலத்தின்கண் ஒருவிதை கிடந்தால் கிடந்தமையை முதல் தோன்றிய தழைத்த தண்டே காட்டிக் கொடுக்கும்: அது போலக் குலத்தில் பிறந்தாரையும் காட்டிக் கொடுக்கும்; யாது எனின்? வாய்ப்பிறக்கும் சொல்தானே, எ-று.

***உ) பரிமேல்.***: நிலத்தின் இயல்பை அதன்கண் முளைத்த முளைகாட்டும்; அதுபோலக் குலத்தின் இயல்பை அதன்கண் பிறந்தார் வாயிற் சொல்காட்டும்,(எ-று).

கிடந்தமை உள்ளபடி முளைத்த மாத்திரத்தானே நன்மையும் தீமையும் தெரிதலின், இலை முதலிய கூறாராயினார்; ஆகவே, பொருளினும் செயல் முதலியன வேண்டாவாயின. குலத்தியல்பு அறிதற்கருவி கூறுவார் போன்று, இன்சொல் வேண்டும் என்றவா றாயிற்று.

***ஊ)கவிராசர்:*** நிலத்தினுடைய நன்மையை அதிலே முளைத்த முளை காட்டும்; அப்படிப்போல், குலத்தினுடைய நன்மையை அதிலே பிறந்தவர்களின் வாயிற் சொற்கள் காட்டும், (எ - று).

முளை நன்றாய்ப் பெரியதாயிருந்தால் அவ்விடம் நல்ல நிலம் என்று அறியலாம்: நல்ல வசனமும் நல்ல குணமுமுண்டாயிருந் தால், அவனை நல்ல குலவானென்று அறிய வேணும், (எ - று)

***ஏ) பழைய2***: நிலத்தினியல்பை அதனிடத்தின் கிடந்து முளைத்த முளை காட்டும்; அது போலக் குலத்தின் இயல்பை அதன்கட் பிறந்தார் வாயிற் சொற் காட்டும்.

நல்ல நிலம்பொல்லா நிலம் என்பது பயிரிற் காணபபடும். நல்ல

1. அங்குரம் - முளை

குலம் பொல்லாக் குலம் என்பது சொல்லாற் காணப்படும் என்க. நிலத்திற்பிறந்தாரைக் கால் காட்டும் என்றும். நிலத்திற் பிறந்தாரைக்கார் காட்டும் என்றும் இன்னும் பல விகற்பமாகப் பாடமோதிப் பொருளுரைப்பாருமுளர். அவையெல்லாம் பாடமல்ல; அதற்கேற்பச் சொல்லுவதும் பொருளல்ல என்க.

## ஐ) ***தொகுப்பும் குறிப்பும்:***

இக்குறளின் உரைகள் மூவகையானக் கருத்து மாற்றமுடையன:

1. 'முளையைக் கொண்டு நிலத்தில் மறைந்துள்ள விதையையறியலாம். அதுபோல வாய்ச் சொல்லைக் கொண்டு குடிப்பிறப்பை யறியலாம்' ***மணக்., காளிங்கர்***

2. 'முளையைக் கொண்டு நிலத்திற் கிடந்த விதை இன்ன விதை என்பதையறிவது போல வாய்ச்சொல்லைக் கொண்டு இன்ன குடிப்பிறந்தார்' என அறியலாம்' ***பரிதி.***

3. முளையைக் கொண்டு நிலவளத்தையறிதல் போல வாய்ச்சொல்லைக் கொண்டு குல வளத்தை அறியலாம்'. ***பரிமேல், கவிராசர், பழைய உரை:*** இவைகளில் ***கவிராசர், பழைய உரைகாரர்*** இருவர் குறிப்புகளும் இக்கருத்தையரண் செய்யும் விளக்கங்களுமாவன.

முதல் உரைகளில், நிலத்திற் கிடந்தமை-நிலத்தில் வித்துக் கிடந்தமையை என வினைமுதல் வருவித்து, இரண்டனுருபுவிரித்தும் உரைக்கப்பெற்றமை காண்க.

இரண்டாவது உரை இன்ன விதை என்பதை முளையின்கண் அறியலாம் என விதைவகையறிவது போலக் குடிப்பிறந்தார் வகையை அறியலாம் என்கின்றது.

மூன்றாவது உரை நிலவளத்தையறிவது போலக் குலவளத்தை யறியலாம் என்கிறது. இவ்வுரைக்குக் 'கிடந்தமை'என்ற சொல் பொருளியைபுடையதாகப் ***பரிமேலழகர்***க்குத் தோன்றாமையின் கிடந்தமை-இயல்பு, உள்ளபடி எனப் பொருள் காட்ட வேண்டிய தாயிற்று.

இவற்றுள் அதிகாரப் பெயருக்கு அமைய அனைத்தும் குடிமையை உணர்த்துவன வாயினும் இரண்டாவது ***பரிதியுரை*** சிறப்பினதன்று. இரண்டாவது உரை நேரே குடிமையுணர்த்தாது வகையை உணர்த்து வதால் ஏற்புடையதன்று.

மூன்றாவது உரை நிலவளத்தை உணர்த்துவதன் வாயிலாகக் குடிப்பிறப்பை உணர்த்துகிறது. குறணடைக்கு ஏற்புடையது ***மணக்குடவருடையதே*** யாதல் தெளிக.

கால் காட்டும், கார்காட்டும், கிடந்தமை. முதலாகப் பாட வேறுபாடுகள் *பலஉள.* அவற்றைத் தேர்ந்து எடுத்து இயையப் பொருள் கூறிற்றிலம் என்க.

**ஓ) ஒப்புமைப் பகுதி:**

***குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல்***

வடுப்பட வைத்திறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைந்து. - நாலடி., 156

**96.10. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு. (960)**

***உரைப்பகுதி:***

**அ)** ***மணக்.:*** ஒருவர் தமக்கு நலத்தை வேண்டுவாராயின் நாணுடைமையை விரும்புக: அவ்வண்ணமே, குலத்தை விரும்புவராயின். யாவர்மாட்டும் தாழ்ந்தொ ழுகுதலை விரும்புக, எ-று.

இது பணிந்தொ ழுகவேண்டும் என்றது.

**ஆ)** ***பரிதி.:*** நல்லவராகப் பேர்பெற வேண்டினால் நாணம்வேண்டும் குலம் வேண்டினா எல்லோர்க்கும் வணக்கம் உண்டாயிருக்க வேண்டும், எ-று.

**இ)** ***பரிப்.:*** ஒருவர் தமகது நலம வேண்டுவார் ஆயின், நாண் உடைமையை விரும்புக; அவ்வண்ணமே குலத்தை விரும்புவார் ஆயின். யாவ ் மாட்டும் தாழ்ந்து ஒழுகுதலை விரும்புக எ-று.

இ து பணிந்து ஒழுக வேண்டும் என்றது.

**ஈ)** ***காளி.:*** ்மது நல்லொழுக்கம் குன்றாமை வேண்டின், நம்மாட்டு ஒருவ றைவரின் என்னை என்னும் இந்நாண் உடைமையை வேண்டும்: இனி நீர் நும் குலனுக்கு வேண்டினது யாவர்க்கும் இனிது இய லும் பணிவு உடைமையை வேண்டும்.(எ.று).

**உ)** ***பரிமேல்.:*** ஒருவன் தனக்கு நலனுடைமையை வேண்டுவானாயின் தான் நாணுடையனாதலை வேண்டுக. குலனுடைமையை வேண்டுவானாயின். பணியப்படுவார் யாவர் மாட்டும் பணிதலை வேண்டுக, (எ-று).

நலம்-புகழ் புண்ணியங்கள் வேண்டும் என்பது விதிப் பொருட்டாய் நின்றது[1]. "வினைப்படுதொகுதியில் உம்மை வேண்டும்"[2] என்புழிப் போல. அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் [3] என்று. இவர் எல்லாரும் அடங்க' 'யார்க்கும்' என்றார், பணிவு இருக்கையெழூஉம் எதிர்செலவும் முதலாயின், இவை இரண்டு பாட்டானும் குடிமைக்கு வேண்டுவன கூறப்பட்டன.

> ***காரி:*** 'இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு-வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்'[4], என்புழிப்போல ஈண்டும் வேண்டும் என்பது விதிப் பொருட்டாயிற்று.

ஊ) ***கவிராசர்:*** ஒருவன் தனக்கு நன்மையை வேண்டினால், தன் பழி பாவங்களுக்குப் பயப்பட்டு நாணுடையனாயிருக்க வேணும்; நல்ல குலமுடையவனாக வேண்டினால், தன்னை வணங்கினவர்களுக்குத் தானும் வணக்கமுடையவனாயிருக்கவேணும். (எ-று).

எ) ***பழைய2:*** ஒருவன் தனக்கு நலனுடைமை வேண்டுவனாயில், தான் நாணுடையனாதலை வேண்டும், குலனுடைமையை வேண்டுவனாயின், தன்னால் பணியப்படுவார் யாவர் மாட்டும் பணிதலை வேண்டும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'நலம்'*** 'நலம்', நல்லவராக', 'நல்லொழுக்கம் குன்றாமை' 'நலனுடைமையை' நன்மை என்று முறையே ***மணக்குடவர்*** முதலியோர் உரை காண்பர். இவற்றுள் மாற்றமின்மை காண்க. ஆயினும் 'நல்லவராக' என்ற ***பரிதியுரை*** சிறிது விளக்கம் போன்றுண்மை காண்க.

ஆசிரிய வசனம் 'யார்க்கும்' எனப் பொதுமையின்னிற்பினும் அந்தணர் சான்றோர் முதலான பணியத்தக்காரிடம் பணிதல் என்பர் ***பரிமேலழகர்.*** குடிப்பிறந்தார் யார்க்கும் பணிதல் தகுமாயினும் ஆண்டிற்கு குறைந் தோரையும், பணியாளரையும், மனைவி முதலியோரையும் பணிதல் தகாதாத லின் அவர்களை விலக்குதற் பொருட்டுப் ***பரிமேலழகர்*** 'தக்கார்க்கு' என்ப ராயின் பொருந்தும். அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் முதலியோரிடம்

1. வேண்டும், தகும், படும் என்பன ஒரு பொருட்கிளவியாய்த் தொழிற்பெயராய்த் தோற்றப்பொருளில் வருவன, இங்ஙனம் வரும் சொற்களுக்குப் பரிமேலழகர், சேனாவரையர், நச்சி, உரையாசிரியர் முதலாயினோர் முற்றாயும், எச்சமாயும் பொருள் உரைக்கின் வழுவாம் என்று கருதி வியங்கோள் பொருட்டு என்றும், விதிப்பொருட்டு என்றும் தகுதிப் பொருட்டு என்றும், வேண்டுவ என்றும் தமக்கு வேண்டியவாறே பொருள் எழுதிச் சொல்லிலக்கணம் காட்டாமல் போயினர் என்று குறை கூறுவர் சிவஞானசுவாமி நன்.விரு.சூத்.339ல் பார்க்க.
2. தொல்.சொல். 33
3. புறப்பொருள் வெண்பாமாலை.221ல் காண்க.
4. நாலடியார். 143ஆம் பாடல்.

ஒழுக்கமும் சீலமும்,தாய் தந்தை முதலானோ ரிடத்து ஆண்டும் அனுபவமும் முறைமையும், சிறந்திருத்தலின் வணங்கத்தக்கார் இவரென்றாறன்றிச் சாதியுயர்வு பற்றிக்கூறினார் அல்லர். ஆகையால் தக்காரைப் பணிதலே தகும் என்றமை சாலப் பொருந்துவதாம். இவ்வதிகாரத்து 951, 952, 960 மூன்றிடங்கள் 'நாண வந்திருப்பனும்' அதற்கு விளக்கவுரை உரைகாரர்கள்கூறிற்றிலர். காரணம் *'நாணுடைமை'* எனத் தனியதிகாரம் இருத்தலான் என்க.

## ஏ) ஒப்புமைப்பகுதி :

***நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் :***

நலனுடைமையில் நாணுச் சிறந்தன்று. - முதுமொழிக்., 6

***குலம்வேண்டின் பணிவு வேண்டும் எனல் :***

இருக்கை யெழலும் எதிர்செலவும்ஏனை
விடுப்ப வொழிதலோ டின்ன - குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் - நாலடி.,143

***எதிர்மறை முகத்தான் :***

............................பணிவில் சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப் படும். - நாலடி., 241

## ஓ) மேற்கோள் பகுதி :

***சுவாமி.:*** தொழிற் பெயராய் தேற்றப்பொருள்பட்டு வரும். வேண்டும் என்னும் சொல்லின் சொற்குணம் அறியாது பரிமேலழகர் வேண்டும் என்பது விதிப்பொருட்டாய் நின்றது' எனக் கூறிச்செல்வர் என்பர். - இ. கொ., 85

# 96. குடிமை

| | இற்பிறந்தோர் | ஒழுக்கமும் | நகையீகை | அடுக்கிய | வழங்குவ | சலம்பற்றிச் | குடிப்பிறந்தார் | நலத்தின்கண் | நிலத்தில் | நலம்வேண்டின் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 2 | 3 | 1 | 5 | 6 | 7 | 9 | 10 | 4 | 8 |
| பரிதி. | 1 | 5 | 10 | 3 | 4 | 2 | 6 | 9 | 7 | 8 |
| பரிப். | 2 | 3 | 1 | 5 | 7 | 6 | 9 | 10 | 4 | 8 |
| காளி. | 1 | 8 | 10 | 2 | 3 | 5 | 6 | 4 | 9 | 7 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

96-வது அதிகாரம் 'குடிமை' முற்றிற்று.

******

# 97. மானம்

*அதிகாரப்பொருள்:*

அ) ***மணக்.***: மானமாவது எக்காலத்திலும் தமது நிலைமையில் திரியாமை. இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாமையின், அதன்பின் கூறப்பட்டது. இது மூன்று வகைப்படும்; தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார்மாட்டுச் செய்யாமையும், இளிவரவு [1] பொறாமையும் என.

இ) ***பரிப்***: மானம் ஆவது எல்லாக் காலத்தினும் தமது நிலைமையின் திரியாமை. இது குடிப்பிறந்தார்க்கு இன்றியமையாமையின், அதன்பின் கூறப்பட்டது. இது மூவகைப்படும். தமது தன்மை குன்றுவன செய்யாமையும், இகழ்வார் மாட்டுச் செல்லாமையும், இளிவரவு பொறாமையும் என.

உ) ***பரிமேல்.***: இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறுவான் தொடங்கி, முதற்கண் மானம் கூறுகின்றார். அஃதாவது எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம். இஃது[2] அக்குடிப்பிறப்பினை நிறுத்துதலுடையமையின்[3] அச்சிறப்புப்பற்றி முன் வைக்கப்பட்டது.

ஊ) ***கவிராசர்***: அதாவது எந்நாளும் தன் நல்ல நடக்கையைக் கைவிடாமலிருக்கிறதும், கர்மவசத்தாலே தனக்கொரு குற்றம் வந்தாற் பிராணனை விடுகிறதுமாம். இது நல்ல குலத்தார்க்கு வேண்டுவதாம்.

ஏ) ***பழைய2***: அஃதாவது, எஞ்ஞான்றும் தன்னிலையில் தாழாமையும் ஊழ்வினையால் தாழ்வுவரின் உயிர் வாழாமையும் ஆம்.

---

1. இளிவரவு - இழிவு
2. இஃது - மானம்
3. நிறுத்துதலுடைமையின் - நிலைபெறுத்தல் உடைமையின்

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'மானம்'***

தந்நிலையில் தாழாமை' என்பர் உரையாசிரியர்கள் அனைவரும். மானம் - அளவு அஃதாவது ஒரு நிலை. இது ஆரியச் சிதைசொல் ; வெகுமானம் - அவமானம் எனத்துணைச் சொல்லால் நிலையின் உயர்தல் வெகுமானம் என்றும், தாழ்தல் அவமானம் என்றும் வழங்கிப் பின் மானம் என்பதே குற்றம் - நற்றம் இரண்டற்கும் பெயராயிற்று. 'ஒப்பு' என்னும் உவமப் பொருளதாய் உலகவர் நிலையத்தனைக்கும் ஒப்பாய் நிற்றலையுணர்த்தித் தன்னிலையிற் றாழாமையாயிற்று. ***தொல்காப்பியத்தில்*** 'மானம் - குற்றம்' என்ற பொருளிலேயே ஆளப்பெறுகின்றது. இதுவும் அளந்து சண்ட நிலையில் தாழ்ந்ததை உணர்த்திற்று எனலாம்; ஆனால் 'பெருமை' என்ற பொருளின்கண் பெருவரவிற்றாக வழங்குகிறது.

## 97.1. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
## குன்ற வருப விடல். (961)

***உரைப்பகுதி :***

அ) ***மணக்.***: இன்றியமையாத சிறப்புடையன வாயினும், தமது தன்மை குறையவரும் பொருளையும் இன்பத்தையும் விடுக, (எ-று).

இது பொருளும் இன்பமும் மிகினும், தன்மை குறைவன செய்யற்க என்றது.

ஆ) ***பரிதி.***: அளவில்லாத சிறப்பும் செல்வமும் வருமாயினும்குற்றம் வருமாகில் அந்தக்காரியத்தைக் கைவிடுக, எ-று.

இ) ***பரிப்.***: இன்றியமையாத சிறப்பு உடையன, ஆயினும் தமது தன்மை குறைய வரும் பொருளையும் இன்பத்தையும் விடுக, எ-று.

இது பொருளும் இன்பமும் மிகினும் தன்மை குறைவன செய்யற்க, எ-று.

ஈ) ***காளி.***: இதனை இன்றி இது அமையாது எனினும் பெரும் சிறப்பினை உடையவனாயினும் தன் குடிப்பண்பு குன்றவருவனவற்றைக் கைவிடுக, எ-று.

உ) ***பரிமேல்.***: இன்றி அமையாச் சிறப்பின் ஆயினும் செய்யாத வழித் தாம் அமையாத[1] சிறப்பினையுடையவே எனினும், தம்குடிப்பிறப்புத் தாழ[2]வரும் செயல்களை ஒழிக,(எ-று).

1. தாம் அமையாத - தாம் உயிரோடிருத்தற் கியலாத
2. தாழ - இழிய

அமையாமை - இறத்தல். குடிப்பிறப்பு என்பது அதிகாரமுறைமையான் வந்தது[3] இறப்பவரும்வழி[4] இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூன் முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமை யையுந் தூக்கி அவை [5] செய்யற்க என்பதாம்.

ஊ) *கவிராசர்.:* செய்யாத காரியங்களைச் செய்து தாழ்வில்லாத பெரிய செல்வம் வருமானாலும், தங்குடிக்குத் தாழ்வு வருங் காரியங்களைச் செய்ய வேண்டாம். எ-று.

பிராணன் போவதாக வந்தா லிழிவான காரியங்களைச் செய்து பிழைக்கலாமென்று சொல்லுவர் வேதம் படித்தபேர். அதனையாகா தென்று மறுக்கிறார். பிராணன் போனாலும் இழிவான காரியம் செய்யலாகாது; சரீரம் அநித்தியம்; மானம் கெட்டால் அபகீர்த்தி போகாது. (எ-ம்).

ஏ) *பழைய2:* அக்காரியஞ் செய்யாவிடத்துத் தாம் அமையாத சிறப்பில்லையாயினும் தம்குடிப்பிறப்புத் தாழவருந் செயல்களைச் செய்யாதொழிக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*பரிமேல்.* அமையாச் சிறப்பு - செய்யாதவழித் தாமும் அமையாத சிறப்பு. 'அமையாமை - இறத்தல்' என்பர்.

செய்யுஞ்செயல் 'இது இல்லாமல் முடியாது' என்ற அளவு சிறப்புடையதாயினும் என்று செயலின் சிறப்பைக் குறிப்பர் *மணக்குடவர்.* 'அளவற்ற சிறப்பும் செல்வமும் வருமாயினும்' என்பர் *பரிதி.:* இது குறட் சொல்லமைதிக்கு ஏற்புடைத்தன்று. சிறப்பு என்பதற்குச் 'சிறப்பீனும் செல்வமுமீனும்' என்ற தொடர் நினைவால் எழுதினர் போலும்.

'இன்றியமையா (ஆயினும்) சிறப்பினனா யினும்' என எழுதுவதால் 'சிறப்பினனாயினும்' எனப் பாடமும் திரித்து 'இன்றியமையா ஆயினும்' என 'ஆயினும்' என்பதனை ஈரிடத்துங் கூட்டிப் பொருள் செய்வர் ***காளிங்கர்.*** பிரித்தலும், பாடங் கொள்ளுதலும் இவற்றால் பொருட் சிறப்புமின்மை காண்.

*பரிமேல்.* 'செய்யாதவழித் தாம் அமையாத சிறப்பினையுடையனே எனினும்' எனப் பொருள் கண்டு, அமையாத என்பதன் கருத்துத் தெளிவாக இல்லாமையால் அமையாத - இறவாத எனக் குறிப்பும் எழுதினர். இத்தொடர் கருதும் பொருள் 'இறக்க நேர்ந்தாலும் இளிவந்தன செய்யற்க; என்பதாம்' என்பர்.

3. குடிப்பிறப்பு என்பது குடிமைக்குப் பின் மானம் உள்ளமையின் அதிகார முறைமை பற்றி வருவிக்கப்பட்டது. இந்த இயைபினை அதிகாரமுறை கூறுமிடத்தும் காண்க.
4. இறப்ப வரும் வழி - சாக நேரும் வழி
5. அவை - தம் குடிப்பிறப்பிற்கு இழிவரும் செயல்கள்.

***பரிமேலழகர்*** எண்ணத்தில் 'சாக நேர்ந்தால் இழிவான செயல்களைச் செய்தாவது தப்புக' என்ற வடநூன் மரபு வர, அதனை மறுத்துக் கூறுவது இக்***குறள்*** என்ற சிறப்புத் தோன்ற இங்ஙனம் இடர்பட்டுரைத்தனர் ஆதல் வேண்டும். இக்கருத்தையே தாங்கும் ***தேவநேயர்*** (செய்யாதவிடத்து) தாம் வாழ முடியாத அளவு சிறப்பினை வாய்த்தன என்னும்சில சொல் வருவித்து விளக்குவர்.

***வரத.*** ' இன்றியமையாச் சிறப்புக்கள் வருவதாக இருந்தாலும்' என்பர். ***கா.சு.*** 'இன்றியமையாச் செல்வமேன்மைகளைத் தருவதாயினும்' என்பர். இங்ஙனமே பின்னுரைகாரர்கள் அனைவரும் மொழிவர். பின்னுரைகளும் ***மணக்குடவர்*** உரையும் தெளிவானவை. ***பரிமேலழகரும்*** சிலரும் வடநூற் கருத்தை மறுப்பது என்பதற்காக 'இன்றி - செய்யாத வழி, அமையா - தாம்அமையாத சிறப்பினவாயினும்; குன்றவரும் - தங்குடிப்பிறப்புத் தாழ வரும் செயல்களை விடுக' என 'இன்றியமையா' என்பதனைப் பிரித்தனர். 'இன்றியமையாத மூன்று' கூறும் 682ஆம் ***குறளில்*** பிரிக்க வேண்டாத நிலையில் இச்சொல் ஆளப்பெற்றுள்ளதையும் காண்க.

### ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும் :***

கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவண் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்
திருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடையாளர். - புறம்., 190 :6-11

தொடங்குவினை தவிரா அசைவில் நோன்தாள்
கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த
தாழ்வில் உள்ளம் .... - அகம்., 29 : 1- 4

ஈனமாய் இல்லிருந் தன்றி விளியினும்
மானம் தலைவருவ செய்பவோ - யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர். - நாலடி., 198

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் - இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின் - நாலடி., 300

ஓ) மேற்கோள்பகுதி :

*இளம்.*:பொருளொடு புணர்ந்த பககம: பககம எனறதனால ஒறறு, தூது, வினைசெயல்வகை, குடிமை, மானம் என வருவனவெல்லாம் கொள்க எனக்கூறி மானம் என்பதற்கு இதனை மேற்கோள் காட்டுவர்.

- தொல்-பொருள்., 75

97.2. சீரினும் சீர[1]ல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை[2] வேண்டு பவர். (962)

உரைப்பகுதி :

அ) *மணக்.*: தமக்குப் பொருள் மிகுதி உண்டாகுமாயினும், நிகரல்லாதன செய்யார், தலைமையோடே கூடப் பெரிய ஆண்மையை விரும்புவார். எ-று.

ஆ) *பரிதி.*: நன்மை செய்யினும் சீராக விசாரித்து செய்வார்; நன்மையும் மேன்மையும் வேண்டுபவர். எ-று.

இ) *பரிப்.*: தமக்குப் பொருள் மிகுதி உண்டாகுமாயினும் நிகர் அல்லாதன செய்யார்கள் தலைமையோடு கூடப் பெரிய ஆண்மை விரும்புவார். (எ-று)

இது நல்கூர்ந்த காலத்துச் செல்வம் உளதாயின் தமது தன்மை குறைந்து குடி செய்தல் வேண்டாவோ என்றாற்குத் தலைமக்கள் செய்யார் என்று கூறப்பட்டது.

ஈ) *காளி.*: சீரிய செல்வம் பெரியது உய்ப்பினும் சீர் அல்லனவற்றைச் செய்யக் கருதாரே; யார் எனின் தம் குடிமையாகிய சீர்மைப்பாட்டோடு பெரிய ஆண்மைப்பாடும் விரும்புவார், எ-று.

உ) *பரிமேல்.*: புகழ் செய்யுமிடத்தும் தம் குடிமைக்கு ஒவ்வாத இளிவரவுகளைச் செய்யார், புகழுடனே மானத்தை நிறுத்துதலை விரும்புவார், (எ-று).

எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையான் உளதாதல் பற்றிப் 'பேராண்மை' எனப்பட்டது. நிலையுடைய புகழின் பொருட்டாகவும் செய்யார் என்பதாம்.

*காரி.*: வேண்டுபவர் - விரும்புபவர்.

1. சீரினும் சீர் - புகழிற் சிறந்த புகழ்
2. பேராண்மை - ஆண்மையிற் சிறந்த ஆண்மை

**ஊ) கவிராசர்:** தனக்குக் கீர்த்தி வரவேண்டுமென்று செய்கிற விடத்திலேயும், தம் குடிக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்யார் மானத்தையும் புகழையும் நிறுத்துதலை விரும்புகிறவர்கள், எ-று.

**ஏ) பழைய 2:** புகழ் செய்யுமிடத்துந் தங்குடிக்குச் *சீ*ரல்லாத காரியங்களைச் செய்யார், புகழுடனே மானத்தை நிறுத்துதல் விரும்புவார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'சீரினும்'***

'சீர் - செல்வம்', *சீ*ரினும் செல்வம் உண்டான காலத்தும் எனச் '*சீ*ர்' என்னும் பெயரடியாகக் கொண்டு பிறந்த செயின் என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு பொருள் விரிப்பர் ***மணக்.***; இதற்குப் ***பரிப்பெருமாள்*** 'நல்கூர்ந்த காலத்துச் செல்வம் உண்டாயினும்' எனச் சூழ்நிலைப் படைத்துதவினர்.

***காளிங்கர்*** '*சீ*ரிய செல்வம் உய்ப்பினும்' என்றனர். '*சீ*ர்' என்பதனடியாகப் பிறந்த வினை எச்சத்திற்கு இங்ஙனம் பொருள் காண்டல் இயையுமாறு ஆராய்க. 'புகழ் செய்யுமிடத்து' என்பர் ***பரிமேலழகர்.***

இங்ஙனம் ***'சீர்'*** -'பொருள்', 'புகழ்' என இருபொருள்களில் வழங்கப்படுகிறது. ***வரத.*** 'வளர்ச்சியோடு நிலையான பெருமையைப் பெற முடியாத நிலையிலும்' என்பர். 'செல்வம் வருமாயினும்' என்பர் ***இராம.*** அடுத்துச் ***'சீரோடு'*** என்பதன்கண் உள்ள 'சீர்' என்பதற்கு ***மணக்.***சீர் - 'தலைமை'; 'சீராக விசாரித்து' ***பரிதி.***; 'சீர்மைப்பாட்டோடு' ***காளிங்கர்;*** 'புகழ்' ***பரிமேல்.***; 'மானம்' ***கவிராசர்.*** அங்ஙனமே பேராண்மை,'நன்மை' ***பரிதி;*** 'பெரிய ஆண்மைப்பாடு' ***காளிங்கர்;*** 'மானம்' ***பரிமேல்.*** முதலியோர், இவை இத்தனைப் பொருளைத் தருமாயினும் 'பெரிய ஆண்மையாகிய மானம்' என்னும் பொருளே தகும். ***பரிமேலழகர், தேவநேயர்*** முதலானோர் தரும் விளக்கமும் இதனை வலியுறுத்தும். 'பிறன்மனை நோக்காத பேராண்மை' முதலிய இடத்தும் இப்பொருள் வருதல் காண்க.

***வரத.*** 'வளர்ச்சியோடு நிலையான பெருமை' என்பர். இதில் 'சீர் - வளர்ச்சி' என்பதும் 'பேராண்மை - பகைவர்க்கும் நன்மை செய்யும் நல்வாழ்வு' என்பதும் ஏற்புடையன அல்ல.

## 97.3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
## சுருக்கத்து வேண்டும் உயர்வு. (963)

***உரைப்பகுதி :***

**அ) மணக்.:** செல்வம் பெருகிய காலத்து எல்லார்க்கும் பணிசெய்தல் வேண்டும்; செல்வம் மிகவும் சுருங்கின காலத்துத் தமது தன்மை குறைவு படாமல் ஒழுகல் வேண்டும், எ-று.

***ஆ) பரிதி.:*** தனக்கு வாழ்வு வந்தால் எல்லாரிடத்தும் வணக்கம் வேண்டும். மிடியனானால் தாழ்ச்சி சொல்லாமல் கனமாய்[1] இருக்க வேண்டும் எ-று.

***இ) பரிப்.:*** செல்வம் பெருகிய காலத்து எல்லார்க்கும் பணிந்து ஒழுகுதல் வேண்டும் செல்வம் மிகவும் சுருங்கின காலத்துத் தமது தன்மை குறைவு படாமல் ஒழுக வேண்டும். எ-று.

இது திரு உடையார் பணிவு புகழப்படும்: திரு இலாதார் பணிதல் இகழப்படும்: ஆதலான் நல்கூர்ந்த காலத்தும் தன்மை குறைவன செய்யற்க என்றது.

***ஈ) காளி.:*** குடிப்பிறந்தோர்க்கு என்றும் செல்வச் சிறப்பின்கண் வேண்டும் அச்செல்வம் செருக்கின இடத்தும் அதற்கு மறுதலையாகிய பணிவு உடையவர்ஆதல்.இனி அச் செல்வம் நீங்கியமிக்க வறுமைக்கண் வேண்டும் அவ்வறுமையால் பிறர்க்குத்தாம் குறைகூறமானித்து ஒழுகும் மேம்பாடு, எ-று.

***உ) பரிமேல். :*** குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உளதாய வழி யாவர் மாட்டும் பணிவு வேண்டும். குறைந்த நல்குரவு உளதாய வழிப் பணியாமை வேண்டும், (எ-று).

தாழ்வு வராமல் பழைய உயர்ச்சிக்கண்ணே நிற்றல். செல்வக் காலை அஃது[2]யர்ச்சி செய்யத் தாந் தாழ்தலும், அல்லற்காலை அது[3] தாழ்வு செய்யத் தாம் உயர்தலும் வேண்டும் என்பதாம். இவை மூன்றுபாட்டானும் தாம் தாழ்தற்கு ஏதுவாயின செய்யாமைச் சிறப்புக் கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்:*** நல்ல குடியிலே பிறந்தவர்களுக்குப் பெரிய செல்வம் உண்டானபோது எல்லோருக்கும் வணங்கி நடந்து கொள்ளவேண்டும்; தரித்திரம் வந்த காலத்திலே வணங்காமல் விரதசீலங்களுடனே[4] கூடியிருக்க வேணும், எ-று.

செல்வம் வந்த காலத்திலே வணங்காவிட்டல், கீழானவன் என்று சொல்வார்கள், தரித்திரம் வந்த காலத்திலே வணங்கினால் தாழ்வாக வெண்ணுவார்கள் (எ-ம்).

***எ) பழைய2.:*** குடிப்பிறந்தார் செல்வம் உயர்ந்தவிடத்து யாவரிடத்தும் பணிதல் வேண்டும்; சிறிய வறுமை வந்தவிடத்துத் தாழ்வுபடாமல் உயர்வு வேண்டும்.

1. கனமாய் - கனவான் போல
2. அஃது - செல்வம்
3. அது - அல்லல் அல்லது வறுமை
4. விரத சீலம் - நோன்பும் ஒழுக்கம்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'பணிதல்'***

'பணி செய்தல்' எனச் சொற்பொருள் விரித்த ***மணக்குடவர்*** கருத்து 'செல்வம் பெருகிய காலத்து எல்லாருக்கும் பணி செய்ய வேண்டும். செல்வம் சுருங்கிய காலத்துத் தமது தன்மை குறையாமல் ஒழுக வேண்டும்' என்பது 'இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்' (218) முதலிய ***குறட்*** கருத்துக்களை வலியுறுத்துவது போன்றுள்ளது. பெரும்பாலும் ***மணக்குடவர்*** உரைக்கு விளக்கம் தரும் ***பரிப்பெருமாள்*** எழுத்து 'பெருக்கக் காலத்துப் பணிதல் புகழப்படும். சுருக்கக் காலத்துப் பணிதல் இகழப்படும்' என்னுங் கருத்தினதாய் ***மணக்குடவருரைக்கு*** மாறுபடுவது போன்றுள்ளது. ***கவிராசர்*** இக்குறளின் பிற்பகுதிக்கு 'வறுமைக்காலத்து வணங்காமல் விரதசீலங்களுடன் கூடியிருக்க வேண்டும்' என்கிறார். இது வறுமைக்காலத்து விரதசீலங்களை வலியுறுத்துவதாய் அதிகாரப் பொருண்மைக்கு ஏலாதாகிறது.

இங்ஙனம் அதிகார இயைபில்லனவும், வலிந்து கோடலாக உள்ளனவும், ஆய உரைகளை விடப் ***பரிமேலழகர்*** உரை நேரிது; தெளிவானது.

***தேவநேயர்*** 'செல்வக் காலத்துத் தாழ்மை மேன்மையையும், வறுமைக் காலத்துத் தாழ்மை தாழ்மையையுந் தருதலால் எல்லார்க்கும், நன்றாம் பணிதல்; அவருள்ளும் செல்வார்க்கும் செல்வந் தகைத்து ஆதலைக் கண்டு பணிதலும், நல்கூர்ந்தார் சொற்பொருள் சோர்வுபடுதலைக் கண்டு தாழாதிருத்தல் வேண்டும்' என்றும் விளக்கந் தருவர். இது ***பரிமேலழகர்*** உரைக்கு விளக்கம் போல்வது.

***இராம.:*** 'சிறிய சுருக்கத்து வேண்டும் பணிவு' என்ற பகுதிக்கு, 'யார்க்கும் அடிமைப்பட்டு விடாமலும் அஞ்சாமலும் கெஞ்சாமலும் இருப்பது மானமுடைமை' என்பர். இதுவும் ***பரிமேலழகர்க்கு*** விளக்கந் தருவதேயாம்.

இவற்றுள் 'பணிதல் - பணி செய்தல்' என்னும் பொருளைத் தராது. ***குறட்*** கருத்தும் மாறும் அதனால் ஏற்புடையதன்று; ***பரிப்பெருமாள்*** விளக்கம் பணிதலையே கருதுதலின் ***மணக்குடவர்*** உரையைப் பெயர்த்தெழுதினார் பிழை 'பணி செய்தல்' எனலாம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***பெருக்கத்து வேண்டும் பணிதல் :***

பணியுமாம் என்றும் பெருமை. - குறள்., 978

தையல் சிற்றிடை யாளொரு தாழ்குழல்
உய்ய மற்றவள் உள்ளத் தொடுங்கினான்
வைய முற்றும் வயிற்றின் அடக்கிய
ஐய னிற்பெரி யார்இனி யாவரே. - கம்ப., 1167

பெருக்கத் துயர்வாம் பணி வொழியல் பேணாப் பணிவு சுருக்கத்தில்
செருக்க லின்றி அமையாத சிறப்பிற் றேனும் உயர்மானம்
உருக்கும் வினையைச் செய நினையல். - விநாஅரசி.,144

உருத்திட்ப முறாக்காலைத் தலைநிறீஇ யுற்றதற்பின்
தருக்கற்று நனிவணங்கிப் பழுத்தகதிர்த் தடஞ்சாலி
பெருக்கத்து வேண்டுமால் பெரும்பணிவு மிகச்சிறிய
சுருக்கத்து வேண்டும்உயர் வெனும்மொழியின் சுவை தேற்றும்.
- காஞ்சி.திருநாட்டுப்.,97

## 97.4. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை. (964)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.***: தலையினின்று நீங்கின மயிரைப் போல இகழப்படுவர்: மாந்தர் தமது நிலையினின்று நீங்கித் தாழ ஒழுகினவிடத்து, எ-று.

***ஆ) பரிதி.***: தலையின் இழிந்த மயிரொப்பர் நிலைகெட்ட மனிதர்.

***இ) பரிப்.***: தலையினின்றும் நீங்கின மயிரைப் போல இகழப்படுவர் மாநதா. தமது நிலையினின்றும் நீங்கித் தாழ ஒழுகின இடத்து, எ-று.

மேல் தலைமக்கள் செய்யார் என்றதனால் குற்றம் என்னை என்றார்க்குக் கூறப்பட்டது.

***ஈ) காளி.***: ஒருவர்க்கு எல்லா உறுப்பினும் தலைமைப்பாடு[1] உடையது தலை, ஆதலால், மற்று அதினின்று இழிந்த மயிரானது பின்பு அத்தலைமைப்பாடு பெறுதல் இல்லை: மற்று அதனை ஒப்பர் குலமேம்பாடு உடைய மாந்தர் தம் நிலையினின்றும் இழிந்த இடத்து, எ-று.

***உ) பரிமேல்.***: குடிப்பிறந்த மாந்தர், தம் உயர்ந்த நிலையை விட்டு அதனின்றும் தாழ்ந்தவழி, தலையை விட்டு அதனின்றும் வீழ்ந்த மயிரினை ஒப்பர், (எ-று).

அந்நிலையை[2] விடாது நின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத் தாழ்ந்த வழி இழிக்கப்படுதலும் உவமையால் பெற்றாம்.

1. தலைமைப்பாடு - சிறப்பு
2. அந்நிலையை - தமது உயர்ந்த நிலையை

***ஊ) கவிராசர்.:*** நல்ல குடியிலே பிறந்தவர்கள் தங்களுடைய ஆசாரங்களை விட்டுத் தாழ்ந்து நடந்தால், தலையிலே இருந்து தரையிலே விழுந்த மயிரோடு ஒப்பர். எ-று.

தலையிலே மயிர் இருக்கிறபோது கோதவும் முடிக்கவும் படும்; தாழ விழுந்தால் கையாலும் தீண்டாமல் இகழப்படும்; அது போல ஆசாரத்தை விட்டவனும் இகழப்படுவன், (எ.ம்).

***ஏ) பழைய2:*** குடிப்பிறந்த மாந்தர் தலையை விட்டு நீங்கிய மயிரினை ஒப்பர்; தம்முடைய உயர்ந்த நிலையை விட்டு இழிந்த செயல்களைச் செய்த விடத்து.

தலையினிருப்பின் மயிரினுக்குச் சிறப்புச் செய்வர். தலை விட்டு நீங்கின் இழிவு செய்வர் எனக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'மானம்'*** குடிப்பிறந்தாரது இயல்பாகக் ***குடிமையை*** யடுத்த அதிகாரம் ஆதலின் குடிப்பிறந்தார்க்கே உரிய செப்பம், நாணம், ஒழுக்கம் முதலிய பண்பாலான உயர்வையே குறிப்பதாகவும், இன்றைய உலக வழக்குப் பதவிகளில் உயர்ந்திருத்தலையும், நிலைதவறுதல் ஓய்வு பெறுதல் முதலியவற்றையும் கருதி இக்குறளைக் கூறி வருகிறது. இங்ஙனம் கூறுதல் அதிகார இயைபிற்குச் சிறிதும் இயையாததாம் எனக.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***மாந்தர் நிலையின் இழிந்தக் கடை :***

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே -இனியவை.14

மானம் படவரின் வாழாமை முன்னினிதே. - இனியவை.28

மெலியார் வீழினும் ஒருவாற்றான் உய்ப
வலியார்மற் றொன்றானும் உய்யார் - நிலைதப்பி
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமால் உய்யா பிற. - நீதிநெறி., 96

நிலையில் பிரியேல். - ஆத்தி., 68

***முற்றும் :***

தலைமயிரும் கூருகிரும் வெண்பல்லும் தத்தம்
நிலையுடைய மானவரும் நிற்கும் - நிலைதவறாத்
தானத்திற் பூச்சியமே சாரு நிலைதவறும்
தானத்திற் பூச்சியமோ தான் : - நீதி வெண்பா., 28

ஒ) மேற்கோள் பகுதி :

*நச்சி.* : ஐந்தாம் வேற்றுமைப் பொருள் பற்றிவரும் வாய்பாடுகளுள் தீர்தல் என்பதற்கு மேற்கோள். - தொல்.சொல்.,79

*மயிலை.*: இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு நீங்கற்பொருளில் வந்ததற்கு மேற்கோள். - நன்.,298

*சங்கர.* : மேற்படி. - நன்., 299

## 97.5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
## குன்றி அனைய செயின். (965)

உரைப்பகுதி :

அ) *மணக்.*: மலைபோலப்பெரியஉயர்வுடையாரும் தமது தன்மை குறைபடுவர்; ஒரு குறைவு வருவனவற்றைக் குன்றி அளவாயினும் செய்வாராயின், (எ.று).

இது மிக்காராயினும் இகழப்படுவர் என்றது.

ஆ) *பரிதி.*: மலை போலப் பெருமை பெற்றோரும் குன்றுவர்; குன்றுகிற காரியம் குன்றியத்தனை செய்வாராயின். எ-று.

இ) *பரிப்.*: மலைபோலப் பெரிய உயர்வு உடையாரும் தமது தன்மை குறைவர்; குறைவு வருவன குன்றி அளவு ஆயினும் செய்வார் ஆயின். எ-று.

இது மிக்கார் ஆயினும் இகழப்படுவர் என்றது இத்துணையும் தன்மை குறைய ஒழுகல் ஆகாது என்று கூறப்பட்டது.

ஈ) *காளி.*: குன்றினை ஒத்த பெருமையோரும் குன்றுவர்; தமது மானம் குன்றுவனவாகிய சிறுமை ஒரு குன்றி அனைய செய்யினும், எ-று.

ஆதலான் மற்று இதன் பின்னரே பெருமையின் மிகுதியை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்.*: குடிப்பிறப்பான் மலைபோல உயர்ந்தோரும், தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை ஒரு குன்றியளவாயின் செய்வராயின் தாழ்வர்.

குன்றியனையவும் என்னும் இழிவு சிறப்பும்மை விகாரத்தால்

தொக்கது. தாழ்தற்கு ஏதுவாய செயல்களாவன - இளி வந்தன. சொற்பின் வருநிலை[1].

*காரி.:*சொற்பின் வருநிலை. மேலை யுரைத்த வெல்லாம் பொருட் பின்வருநிலை எனக்காண்க. 'கல்லாது போகிய நாளும் பெரியவர்கண் செல்லாது வைகிய வைகலும் -ஒல்வ, கெடாஅ தொழிந்த பகலும் உரைப்பின், படாஅவாம் பண்புடையார் கண்.'[2] 'ஏந்தல் வண்ணம், சொல்லிய சொல்லின் சொல்லியது சிறக்கும்'[3].

**ஊ) *கவிராசர்:*** குடிப்பிறப்பால் மலைபோல உயர்ந்தோரும், தாழ்தற்கு ஏதுவான காரியங்களை ஒரு குன்றியளவுமாத்திரம் செய்தாலும், தாழ்ந்து கெட்டுப் போவர்.

**எ) *பழைய2:*** குடிப்பிறப்பினால் மலைபோல் உயர்ந்தாரும் தாழ்தற்கு ஏதுவாகிய செயல்களை ஒரு குன்றிமணி அளவாயினுஞ் செய்வாராயின், தம்முடைய நிலையில் குன்றிப் போவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'குன்றின் அனையாரும்'***

குடிப்பிறப்பானும், அதற்கேற்ற பிற நற்பண்புகளாலும், 'நின்று கண்டோர்க்கும் சென்று கண்டோர்க்கும் விளங்கித் தோன்றும் மலையை' ஒத்துத் தந்நிலையிற் பெயராதாரும் குன்றியனைய குன்றுவ செய்யின் குன்றுவர் என்பது.

'குன்றுவர்' என்பதற்கு 'இகழப்படுவர்' எனச் செயப்பாட்டு வினையாய்ப் 'பிறரால் இகழப்படுவர்' என்பதைக் காட்டிலும், 'குடிப்பிறந்தார்களாதலானும், நாணம் அவர்களுடைய உடன்பிறப்பு ஆதலாலும், மனங்குன்றுவர்' என்னும் உரைகள் சிறந்தன.

***மு.கோ.*** 'குன்றி' என்பதனை ஆகுபெயராக்கிக் 'குன்றியின் மூக்கிலுள்ள கருப்பினளவு' என்பர். கருமை குற்றத்தின் நிறமாகக் கூறப்படுதல் கவிமரபேயாயினும் மலை, குன்றி என்பன பெருமை, சிறுமை களின் அளவு குறித்து வருதலின் ஏனோர் 'குன்றிமணியையே' கருதினர்.

---

1. முன்வந்த சொல் பின்னும் வந்து பொருள் வேறுபட்டிருப்பது. இக்குறளில் குன்றின் அனையாரும், குன்றியனைய எனச் சொற்கள் மீண்டும் வந்து பொரு ளால் மட்டும் வேறுபட்டிருத்தல் காண்க. ஈண்டு 'குன்றியனைய செயின்' என்னும் போதும், 'குன்றி' என்னும் சொல்லும் குன்றுவர் குன்றுப என்புழி வினைப் பகுதியாதலும் உடைமையின் இவை சொற்பின் வருநிலையாதல் எப்படி? குறிப்பாகக் குன்றின், குன்றி என்பன ஈறு மாறுபட்டிருத்தலின் சொற் பின்னாகாமை தெளிவு. ஆதலால் ஒலிஒற்றுமை கருதி கூறிய அளவிற்று இது.
2. நாலடி., 169
3. தொல். பொருள்.செய்.,232

**ஒ) மேற்கோள் பகுதி :**

***பேரா.*** **:**அனைய என்னும் உவமஉருபு வந்ததற்கு மேற்கோள்.
- தொல்.பொருள்.,286

## 97.6. புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்(று)
## இகழ்வார்பின் சென்று நிலை. (966)

**உரைப்பகுதி :**

***அ) மணக்.***: இம்மைப் பயனாகிய புகழைத் தாராதாயின், மறுமைப் பயனாகிய சுவர்க்கத்துப் புகுதலில்லை ஆயின், தன்னை இகழ்ந்துரைப்பார் பின் சென்று ஒருவன் நிற்கின்றது பின்னை என்ன பயனைக் கருதி? எ-று.

இது தம்மை இகழ்வார்மாட்டுச் சென்று நிற்றலைத் தவிர்க என்றது.

***ஆ) பரிதி.***: புகழில்லாதார்க்குத் தெய்வலோகம் இல்லை. அப்படி அறிந்திருந்தும் சத்துருக்களிடத்துப்[1] போய் ஒதுக்கி வாழலாமோ, எ-று.

***இ) பரிப்.***: இம்மைப் பயன் ஆகிய புகழைத் தாராது ஆயின் மறுமைப் பயன் ஆகிய சுவர்க்கத்துப் புகுதல் இல்லை ஆயின், பின்னை என்ன பயனைக் கருதித்தான் தன்னை இகழ்ந்து உரைப்பார் பின்னே சென்று ஒருவன் நிற்கின்றது? எ-று.

இது தன்னை இகழ்வார்மாட்டுச் சென்று நிற்றலைத் தவிர்க என்றது.

***ஈ) காளி.***: இங்ஙனம் குடிப் பிறந்தோர்க்கு இம்மைக் கண்ட பெரியது ஓர் இகழ்ச்சி அல்லது புகழ்ச்சி இல்லை; ஆயின், மறுமைக்கண் வான் உலகு உய்க்கும் வாய்ப்பு இல்லை. ஆதலால் இனி மற்று என்னை கொல்லோ தம்மை இகழ்வார் பின்னரே தாம் சென்று நிற்கும் நிலை; எனவே மானக் கேடு அல்லது மற்று ஒரு பயன் இல்லை, எ-று.

***உ) பரிமேல்.***: மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்ற நிலை, இவ்வுலகத்துப் புகழ் பயவாது; ஏனைப் புத்தேளுலகத்துச் செலுத்தாது, இனி அவனுக்கு அது செய்வது யாது?(எ-று).

புகழ் பயப்பதனைப் புகழ் என்றார்.[2] பயனாய இவ்விரண்டும் இன்றிக்[3] கொன்னே[4] மானங்கெடுகின்றது என்னை என்பதாம் இவை மூன்று பாட்டாலும் அவை[5] செய்தற் குற்றம் கூறப்பட்டது.

1. சத்துருக்களிடத்து - பகைவரிடத்து
2. காரியவாகுபெயர்.
3. பயனாய இவ்விரண்டுமின்றி - மானம் விடாமையின் பயனாக இம்மைப் பயனாகிய புகழைப் பெறுதலும் மறுமைப் பயனாகிய வானுலகை அடைதலும் கூறப்படுகின்றன.
4. கொன்னே - வீணாக
5. அவை - தான் இழிதற்குக் காரணமாகிய செயல்களை

***காரி. :*** மற்று - விட்டு.

***ஊ) கவிராசர்:*** மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே போய் நிற்கிற நிலை இந்த உலகத்திலே கீர்த்தி பயவாது: மறுமையிலே தேவலோகத்துச் செலுத்தாது. எ-று.

***ஏ) பழைய2:*** மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்ற நிலை, இவ்வுலகத்துப் புகழ் இல்லை; தேவருலகத்துஞ் செலுத்தாது; என்ன காரியஞ் செய்தான்?

இகழ்ச்சி செய்வார் பின்னே திரிபவனுக்குப் புகழ் இல்லை; சுவர்க்கமும் இல்லை என்றது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***பரிதி.*** கருத்துப் பொருளே காட்டுவர். ***காளிங்கர்*** 'புகழின்று புகழ்ச்சியில்லை' என்பர். 'ஆல்' என்பதனைப் பிரித்து 'ஆயின்' என்பர். இங்ஙனம் கூறுதல் மரபா என்பது சிந்தித்தற்கு உரியது.

***பரிமேலழகர்*** 'சென்று நிற்கின்ற நிலை புகழின்று; புத்தேள் நாட்டுய்யாது; என்மற்று' எனக்கூட்டி 'ஆல்' என்பவைகளை அசைநிலைகளாக்கிப் பொருள் கூறுவர். இது எளிமையும் இலக்கண அமைதியும் உடையது. இதுவே நேர்மையான உரை. 'மற்று' பிறிதேனும் பொருளில் வந்த இடைச் சொல். ***குழந்தை*** 'புத்தேள் நாட்டு உய்யாது - அவன் பெயரைத் தேவருலகத்துச் செலுத்தாது அதாவது அயல் நாட்டவரும் அறியார்' என்பர். இவர் கொள்கை 'சுவர்க்கமும் நரகமும் இல்லை. அங்கே மக்கள் போவதுமில்லை' என்பது. அதனால் பெயரும் பரவாது என்றனர்.

## ஒ) ஒப்புமைப் பகுதி :

***என் மற்று இகழ்வார்பின் சென்றுநிலை :***

என்பா யுகினும் இயல்பில்லார் பின்சென்று
தம்பா டுரைப்பாரோ தம்முடையார் - தம்பாடு
உரையாமை முன்னுணரும் ஒண்மை யுடையார்கு
உரையாரோ தாமுற்ற நோய். - நாலடி.,292

இம்மையும் நன்றாம் இயல்நெறியும் கைவிடாது
உம்மையும் நல்ல பயத்தலால் - செம்மையின்
நானம் கமழும் கதுப்பினாய் நன்றேகாண்
மானம் உடையார் மதிப்பு. - நாலடி., 294

## 97.7. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
## கெட்டான் எனப்படுதல் நன்று. (967)

**உரைப்பகுதி:**

***அ) மணக்:*** ஒருவன் தன்னை இகழ்வார்பின் சென்று வாழும் வாழ்க்கையின் அவர்பால் செல்லாது, அந்நிலையே நின்று கெட்டான் என்று பிறரால் சொல்லப்படுதல் நன்று, எ-று.

***ஆ) பரிதி.:*** சத்துருவின் பின் சென்று வயிறு வளர்ப்பதில், அன்றே கெட்டான் என்பது நன்று, எ-று.

***இ) பரிப்.:*** ஒருவன் தன்னை இகழ்வார்பின் சென்று வாழும் அவ்வாழ்க்கையின் அவர்பால் செல்லாத அந்நிலையிலே நின்று கெட்டான் என்று பிறரால் சொல்லப்படுதல் நன்று, எ-று.

மேல் இம்மை மறுமையில் பயன்படாது என்றார் ; அஃது எற்றுக்குப்[1] பொருள் பயக்குமே என்றாற்குக் கூறப்பட்டது. இவை இரண்டும் இகழ்வார்பால் சேறல் ஆகாது என்பது கூறிற்று.

***ஈ) காளி.:*** குடிமரபாளன் தனக்கு மானக்கேடு ஆம் மற்று இன்னாதார் பின் சென்று உயிர் வாழ்தலின் அப்பொழுதே மானித்து இறந்து விட்டான் என்று பலராலும் எடுத்து உரைக்கப்படுதல் சால இனிது; மற்று அதுதான் வந்து எய்தும் ஆயின், எ-று.

***உ) பரிமேல்.:*** தன்னை இகழ்வார் பின்னே சென்று பொருள் பெற்று அதனால்[2] ஒருவன் உயிர் வாழ்தலின், அது செய்யாது[3] இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று, ( எ-று).

ஒட்டுதல் - பொருந்துதல், அந்நிலையே என்றது செல்லாத முன்னை நிலைக்கண்ணே நின்று என்றவாறு; அப்பொழுதே என்றுமாம். புகழும் புத்தேள் நாடும் பயவாதேனும் பொருள் பெற்று உயிர் வாழ்வாம் என்பாரை நோக்கிக் கூறியது.

***ஊ) கவிராசர்:*** தன்னை இகழ்வார்பின் திரிந்து பொருள் பெற்று வாழ்றதிலும், அவர்கள் பின்னே திரிந்து அனுசரியாமற்[4] கெட்டுப் போனான் என்று சொல்லுகிறது நல்லது, எ-று.

---

1. எற்றுக்கு - எதற்கு
2. அதனால் - பொருளை பெறுதலால்
3. அது தன்னை இகழ்வார் பின்னே சென்று அதனால் உயிர்வாழுதல் செய்யாமல்.
4. அனுசரியாமல் - பின்பற்றாமல்

*ஏ) பழைய2:* தன்னை யிகழ்வார் பின்னே சென்று, பொருள் பெற்று அதனால் ஒருவன் வாழ்தலின், அப்படிச் செய்யாது செத்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*'ஒட்டார்'*

'இகழ்வார்' எனக்கூறி முன் குறளில் 'இகழ்வாரைப் பின் சேறலால் புகழும் இல்லை புண்ணியமும் இல்லை' என்றார். இக்குறளால் இறப்பது நல்லது என்கிறார்' என்பர் உரையாசிரியர் பலர், ஒட்டார் - இகழ்வார், இன்னார் - இன்னாதார் என்பார்கள். 'முற்கூறிய இகழ்வார்' வேறு இக்குறள் கூறும் ஒட்டார் வேறு. இகழ்வார் - இகழ்ந்து பேசுபவர். ஒட்டார் எவ்வகையானும் தம்மோடு பொருந்தாதவர்கள் பகைவர்கள், இவ்வேறுபாடு காட்டி 'முற்கூறியாங்கு இகழ்வார் பின்சென்று நிற்றலைக் காட்டிலும், ஒட்டார் (பகைவர்) பின்சென்று வாழ்தல் மானக்கேடாம், ஆதலால் இறத்தலே நன்று' என்ற ***இராமலிங்கர்*** உரை ஒட்டாருக்கும் இகழ்வாருக்கும் வேறுபாடு தோன்றக் கூறுதலாற் சிறந்தது.

'மானத்திற்கு அஞ்சிச் சாதலாற் புகழுண்டாம்; புகழால் சுவர்க்கம் பெறுவன் அதனால் நன்று' என்றது ***பழைய உரை.*** இயல்பாக சிறப்பவனுக்குப் புண்ணியம் இருந்தாலன்றிச் சுவர்க்கம் புகுதல் இல்லை. தானாக இறப்பானாயின் அவனுக்குப் புகழ் உண்டாயினும் அதனால் சுவர்க்கம் இல்லை ஆதலால் இவர் முடிபின் நோக்கும் அறியக்கூடவில்லை.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***ஒட்டார் பின்சென்று வாழ்தலின் :***

வற்றிமற் றாற்றப் பசிப்பினும் பண்பிலார்க்கு
அற்றம் அறிய உரையற்க. - நாலடி., 78

என்பாய் உகினும் இயல்பில்லார் பின்சென்று
தம்பாடு உரைப்ப ரோ. - நாலடி.,292

எஃகெறி செருமுகத் தேற்ற தெவ்வருக்
கொஃகின னுயிர்வளர்த் துண்ணு மாசையால். - கம்ப.,2297

கரும்பலர் செந்நெலங் கழனிக் கானநா
டரும்பனக் கவர்ந்துண வாவி பேணினேன்
அரும்பலர் நெடுந்தனை யீர்த்த காலொடும்
விரும்பலர் முகத்தெதிர் விழித்து நிற்கயான் - கம்ப.,2306

தாதையைக் கொன்றான் பின்னே தலைசுமந் திருகை நாற்றிப்
பேதையே னென்ன வாழ்ந்தா யென்பதோர் பிழையுந் தீர்ந்தாய்
சீதையைப் பெற்றே னுன்னைச் சிறுவறு மாகப் பெற்றேன்
ஏதெனக் கரிய தென்னா னிறுதியி னெல்லை கண்டான். - கம்ப.,7126

தேவியை விடுதி யாயிற் றிறலது தீரு மன்றே
ஆவியை விடுவ தல்லா லல்லதொன்றாவ துண்டோ
தாவரும் பெருமை யம்மா நீயினித் தாழ்த்த தென்னே
காவல விடுதி யின்றிக் கையறு கவலை நொய்தின். - கம்ப.,7436

......... எம்மு னுயிர்கொண்ட பகையை வாழ்த்தி

.....................................................................

கும்பிட்டு வாழ்கி லேன்யான் ....... - கம்ப.,7558

## 97.8. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
## பீடழிய வந்த விடத்து. (968)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** தனது பெரிய தகைமை[1] வலியழிய வந்தவிடத்துச் சாவாதே இருந்து உயிரினையோம்பி வாழும் வாழ்க்கை பின்பும் ஒருகாலஞ் சாவாமைக்கு மருந்தாமோ? எ-று.

பெருந்தகைமை அழிய வந்தவிடத்து என்று கூட்டுக.

***ஆ) பரிதி.:*** மான ஈனம் வந்தால் பிராணனை விட்டு மானத்தை ரக்ஷிப்பா னாகில் கீர்த்தி நிற்கும். பிராணன் நிலையில்லை, எ-று.

***இ) பரிப்.:*** தனது பெரிய தகைமை வலி அழிய வந்த இடத்துச் சாவாதே இருந்து உயிர் ஓம்பி வாழும் வாழ்க்கை பின்பும் ஒருகாலம் சாவாமைக்கு மருந்து ஆகுமோ? எ-று.

பெருந்தகைமை அழிய வந்த இடத்து என்று கூட்டுக. இஃது அதற்கு அழிவரவு[2] உளது ஆயின் சாவவேண்டும் என்றது.

***ஈ) காளி.:*** குடிப் பிறந்தோர்க்குத் தம் குடிப்பண்பு ஆகிய பெருந்தகைமை அழியவந்த இடத்து மானித்து[3] ஒழியாது பின்னும் இருந்து ஊன் ஓம்பும் செய்கை மருந்தோ? எனவே சாவா மூவாப் பதம் தரும் செய்கையோ அச்செய்கை. மருந்து என்றது அமுதம்.

1. தகைமை - தகுதி 2. அழிவரவு - அழிதல்
3. மானித்து - மானத்தைக் கருதி

உ) *பரிமேல்.:* உயர்குடிப் பிறப்புத் தன்வலியாகிய மானம் அழியவந்துழி, இறத்தலொழிந்து பயனில்லாத உடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னும் இறவாமைக்கு மருந்தாமோ?

மற்று என்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றி நின்றது. நற்குணங்கட்கெல்லாம் இடனாதற் சிறப்புப் பற்றிப் 'பெருந்தகைமை' என்றும், அவையெல்லாவற்றுள்ளும் அதற்கு வலியாதற் சிறப்புப் பற்றிப் 'பீடு' என்றும், அஃது அழிந்தால் நின்ற வெற்றுடம்பு இழிக்கப்படுதலின் அதனை 'ஊன்' என்றும், பின்னும் இறத்தல் ஒருதலை என்பார் 'மருந்தோ' என்றும் கூறினார். மானத்தின் தொழில் அதற்கு இடனாகிய குடிப்பிறப்பின்மேல் நின்றது.[5]

ஊ) *கவிராசர்:* உயர்ந்த குடிப்பிறப்பும் தன் மானம் அழிய வந்த போது பிராணனை விடவேணுமல்லாமற் பிரயோசனமில்லாத சரீரத்தைக் காக்கிறது இனிமேலும் சாகாமல் இருக்கிறதற்கு மருந்தாமோ? (எ-று)

ஏ) *பழைய2:* பெரிய தகையாகிய தன் மானம் அழிய வந்த விடத்துச் சாகாமல் உயிரை ஓம்பி வாழும் வாழ்க்கை பின் சாவாமைக்கு மருந்தாமோ?

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்குடவர்.*** பீடு - வலி என்பது பெருந்தகைமையின் வலி பீடு (பெருமை) ஆதலின் இங்ஙனம் கூறினராதல் கூடும்.

***வரத.*** விளக்கம் ஏற்புடையது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***ஊன் ஓம்பும் வாழ்க்கை :***

மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன இளிவினால் வாழ்வேன் மன். - நாலடி.,40

***முற்றும் :***

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் - இடமுடைய

4. மற்று என்னும் இடைச் சொல், ஒட்டார்பின் என்னும் குறளிற் கூறிய கெட்டான் எனப்படுதல் என்னும் வினையை மாற்றி இறவாமை என்னும் பொருளைத் தந்து நின்றது.
5. உயர்குடிப்பிறப்பில் நிகழும் மானத்தினது அழிதல் தொழிலை அக்குடிப்பிறப்பின் மேல் ஏற்றிப் 'பெருந்தகை பீடழிய வந்தவிடத்து' எனக் கூறினமையின் மானத்தின் தொழில் அம்மானத்திற்கிடனாகிய குடிப்பிறப்பின் மேல் நின்றது என்பர். இஃது இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்ற உபசார வழக்காம்.

வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின். - நாலடி.,300

இழித்தக்க செய்தொருவன் ஆர உணலின்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ ஒருவற்கு
அழித்துப் பிறக்கும் பிறப்பு. நாலடி.,302

பறைபட வாழா அசுணமா உள்ளம்
குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட்டால் சாவதாம் சால்பு. - நான்மணிக்.,4

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே. - இனியவை.,14

தனக்குத் தகவல்ல செய்தாங்கோ ராற்றால்
உணற்கு விரும்பும் குடரை - வணப்பற
ஆம்பற்றான் வாடலே போல அகத்தடக்கித்
தேம்பத்தாம் கொள்வ தறிவு. -அறநெறி.,88

இறந்திட வரினும் அல்லால்இடுக்கணொன் றுறினும் தம்பால்
பிறந்திடு மானந் தன்னை விடுவரோ பெரிய ரானோர்
சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பி யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை சூரவென் றொருபேர் பெற்றேன். -
- கந்த.பானு.வதை.,27

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ - கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். - வாக்கு.,6

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடிந்துண்கை - சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும். - நல்வழி.,14

தம்முடை யாற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஓம்புக - பின்னர்ச்
சிறுவரை யாயினும் மன்ற தமக்காங்கு
இறுவரை இல்லை எனின். -நீதிநெறி.,41

கரும்பலர் செந்நெலங் கழனிக் கானநாடு
அரும்பகை கவர்ந்துணை வாவி பேணினென்
இரும்பலர் நெடுந்தனை யீர்த்த காலொடும்
விரும்பலர் முகத்தெதிர் விழித்து நிற்கயான். - கம்ப.,2306

மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனோ. - கம்ப.,2408

புன்னுனை நீரின் நொய்தால்ப் போதேலே புரிந்துநின்ற
இன்னுயி ரிழத் நல் அஞ்சி இற்பிறப் பழிதல் உண்டே.
- கம்ப.,3486

..........................................ஓர்சிறு
மயிரினை யிழக்கினும் மாயுமே கவரிமா
மருந்தா யெனக்கே இருந்ததே நாரணா. - மனோன்.,3:4 - 52

மான மழிந்து வாழ்வதிலும் மரணமடைவது உத்தமம். -பழ.
மானமழியில் உயிர்காவலா? -பழ.
மானம் பெரிதா? உயிர் பெரிதா? -பழ.

## 97.9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
## உயிர்நீப்பர் மானம் வரின். (969)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** ஒரு மயிர்நீங்கின் உயிர்வாழாத கவரிமானைப் போன்ற மானமுடையார், மானம் அழியவரின் உயிர்விடுவர், எ-று.

***ஆ) பரிதி.:*** ஒரு மயிர் சிக்கினால் பிராணனை விடும் கவரிமான் போல, மானம் வந்தால் பிராணனையும் விடுவர் நல்லோர், எ-று.

***இ) பரிப்.:*** ஒரு மயிர் நீங்கின் உயிர் வாழாத கவரிமானைப் போன்ற மானம் உடையார் அம்மானம் அழியவரின் உயிரை விடுவார், எ-று.

மேல் சாவ வேண்டும் என்றார்: அது செய்யல் ஆகுமோ என்றாற்கு மானம் உடையார் சாவார் என்றது.

***ஈ) காளி.:*** தனக்கு அலங்காரம் ஆகிய மயிர்க்கற்றையின் ஒரு மயிர் போகின் மானித்துப் பின் உயிர் வாழாது அம்மயிர் துவக்கு உண்ட இடத்து[1] நின்று வற்றிவிடூஉம்[2] கவரிமா அன்ன கடப்பாடு உடையார் தம் குடிமையின் சிறிது நீங்கி மானிப்பது ஓர் மானம் வந்துறின் அப்பொழுதே உயிர் துறப்பர், எ-று.

***உ) பரிமேல்.:*** தன் மயிர்த்திரளின் ஒருமயிர் நீங்கினும் உயிர்வாழாத கவரிமாவை ஒப்பார். உயிர் நீங்கத்தான் மானமே எய்தும் எல்லைவரின் அதனைத் தாங்காது இறப்பர், (எ-று).

1. துவக்கு உண்ட இடத்து - சிக்கிய போது
2. வற்றிவிடூஉம் - சோர்ந்து போகின்ற

இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.[3] உயிரும் மானமும் உடனில்லாமைக்கண், பின்னும் போவதாய உயிரை நீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தை எய்துவர் என்பதாம். உவமை[4] அவர்க்கு[5] அஃது இயல்பு என்பது[6] விளக்கி நின்றது.

***ஊ) கவிராசர்.***: கவரிமான் தன் மயிர்களிலே ஒரு மயிர் அறுந்தாலும், பிராணனை விடும். அதுபோல, மானம் கெட வந்தால், உத்தமரான வர்கள் உயிரை விடுவார்கள, எ-று.

பிராணனும் மானமுஞ் சரியல்ல; பிறந்து பிறந்து இறக்கிறதான சீவனை விட்டாகிலும், பெறாமல் நிற்கிற மானத்தைக் காக்கவேணும்.

***எ) பழைய2.***: தன் பல மயிரினும் ஒரு மயிர் நீங்கின் உயிர் வாழாக் கவரி மாவை ஒப்பார் உயிரை நீக்கத்தக்க மானம் வந்த விடத்துத் தாங்காமல் உயிரை நீக்குவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'மயிர் நீப்பின்'*** என்பதற்கு 'ஒருமயிர் நீங்கின்' என்று எழுதிக் கவரிமானின் இயற்கையை மிகுதிப்படுத்தினர் பழம்புலவர்கள் என்பர் விலங்கியல் நூல்வல்லார். இது 'யாக்' என்னும் மலையாட்டு இனத்தைச் சார்ந்தது என்பர். பழையவர்கள் இது ஒரு மான்வகை. கவரி - அதன் வாலிலுள்ள அடர்த்தியான மயிர்க்கற்றை எனவும், அதில் ஒன்று உதிரினும் அது உயிர் வாழாது என்பதும் தொல்லோர் மரபுரை.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***மயிர்நீப்பின் வாழாக்கவரிமா :***

வான்மயிர் துடக்கின் தானுயிர் வாழாட
பெருந்தகைக் கவரி. -பெருங்.1:35:231 - 2

***உயிர்நீப்பர் மானம் வரின் :***

குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய

3. நீப்பினும் என்றவிடத்து இருக்க வேண்டிய இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.
4. உவமை - கவரிமான் அன்னார் என்ற உவமை.
5. அவர்க்கு - கவரிமான் ஒத்தார்க்கு
6. அஃது இயல்பு என்பது மானத்தைப் பெறும் அளவு வந்தால் உயிர்விடுதல் இயல்பு என்றது.

கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத் தீத்தணியத்
தாமிரந் துண்ணும் அளவை
ஈன்மரோ இவ்வுலகத் தானே. - புறம்.,74

உயிரினு மதிக்கற் பாலதுள்ளப் பேருறை யினுள்ள(து)
அயிறரும் பனிக்கும் தின்மை மானநாணதனை ஏற்றி
வயிரவில் மனத்த தாக்க கையது வையங் காக்கும்
செயிரில் வில்லதனை நோக்கிச் செங்கதிர்ப் பெயரன் சொன்னான்.
- சூளா.,1196

ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானந் தலைவருவ செய்பவோ. - நாலடி.,198

வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின். - நாலடி.,300

உள்ளங் குறைபட வாழார் உரவோர். -நான்மணிக்.,2

தோல்வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமை. - திரி.,27

மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே. -இனியவை.,14

மானம் படவரின் வாழாமை முன்னினிதே. -இனியவை.,28

............... யானுயிர் பேணிப் பழிபூணேன். -கம்ப.,2273

சிறந்தார் சொல்லு நல்லுரை சொன்னேன் செயலெல்லா
மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னைத்
துறந்தா யாகிற் றூயையு மாதி யுலகத்தே
பிறந்தா யாதி யீதல தில்லை பிறிதென்றான். - கம்ப.,2277

............... உயிர் துறந்த போதலால்
ஊன்றிய பெரும்பழி துடைக்க வொண்ணுமே. -கம்ப.,3767

எப்பொழு திப்பெரும் பழியி னெய்தினேன்
அப்பொழு தேயுயிர் துறக்கு மானையேன். - கம்ப.,5348

................. இடையொரு பழிவந் தாலது
துடைப்பர்தம் முயிரொடுங் குலத்திற் றோகைமார். - கம்ப.,10162

ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்தும்ஒண் பூணாம்
மானமே புரப்ப தவனிமேல் எவர்க்கும்
வரிசையும் தோற்றமும் மரபும்

ஞானமே யான திருவடி யுடையாய்
ஞாலமுள் ளளவும்நிற் றலினால்
ஈனமே உயிருக் கியற்கைஆ தலினால்
என்றனன் வீமனுக் கிளையோன். - வில்லி.பழம்.,18

மானமும் உயிரும் ஒருங்குநில்லாத வழிஉயிர் தன்னையே விடுத்துத்
தானுறு பொருளாய் மானமே கொளும்உன் தந்தைதன் செவிப்படில் என்னாம்
வானும்மதியும் இயங்குறும்அளவும்பழி இது வழிவழி வராதோ
யான்உனைவருந்தி
ஈன்றதுஇதற்கோஎன்செய்தாய் பாவிஎன் றிசைப்பாள். -பிரபு.பிரபுதேவர்.77

*முற்றும் :*

வருந்தலின் மானமா அனைய மாட்சியர் -கம்ப.,5352

மானம் நோக்கின் கவரிமாவனைய நீரார். -கம்ப.,1405

..........................................ஓர்சிறு
மயிரினை யிழக்கினும் மாயுமே கவரிமா
பெருந்தகை பிரிந்தும் ஊன்சுமக்கும் பெற்றி
மருந்தா யெனக்கே இருந்ததே நாரணா. - மனோன்.,4:3:49-52

.......... மொய்ம்பார் மானம் கெடவூழ் வந்து
உருக்கு மெனில்சா மரைமானை உன்னல் ஏம கண்டனே.
- விநா.அரசி.,144

**ஒ) மேற்கோள்பகுதி :**

***நச்சி. :*** மானக்கவரி : 'மயிர்நீப்பின் வாழாக் கவரி' ஆகுபெயர்.
- *சீவக., 2120*

## 97.10. இளிவரின் வாழாத மானம் உடையார் ஒளிதொழு தேத்தும் உலகு. (970)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** இளிவரவு உண்டானால், உயிர் வாழாத மானமுடையாரது புகழைத் தொழுது துதிக்கும் உலகு, எ-று.

***ஆ) பரிதி.:*** ஒரு மானஈனம் வந்தால் உயிர்விடுவார் புகழை உலகத்தோர் ஏத்துவர், எ-று.

***இ) பரிப்.:*** இளிவரவு உண்டானால் உயிர்வாழாத மானம் உடையாரது புகழைத் தொழுது துதிக்கும் உலகு, எ-று.

மேல் சாவார் என்றதனால் பயன் என்னை என்றாற்கு இது கூறப்பட்டது.

ஈ) *காளி.*: ....... இவரது பெருமை விட்டு விளங்கும் தோற்றம் குறிக்கொண்டு உள்ளத்தால் புகழ்ந்து உரைப்பர் உலகத்தோர், எ-று.

உ) *பரிமேல்.*: தமக்கோர் இழிவு வந்துழிப் பொறுத்து உயிர்வாழாது அதனை நீத்த மானமுடையாரது புகழ்வடிவினை, என்ஞான்றும் தொழுது துதியா நிற்பர் உலகத்தார், (எ-று).

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வான ஊர்தி - எய்து"[1] வராகலின், துறக்கச்செலவு[2] சொல்ல வேண்டாவா யிற்று. இவை நான்கு பாட்டானும் மானப் பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்.*: தமக்கு ஒரு குற்றம் வந்தபோது அதைப் பொறுத்துக் கொண்டு உயிர்வாழாமல் பிராணனை விட்டவர்களுடைய கீர்த்தியை எந்நாளும் உலகத்தார் கொண்டாடுவர், எ-று.

எ) *பழைய2.* : தம்க்கு ஓர் அபகீர்த்தி வந்த விடத்து உயிர் வாழாது உயிரை நீக்கும் மானமுடையார் புகழைத் தொழுதேத்தும் உலகம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

*முற்றும்:*

செல்வப் பெரும்புனல் மருங்கற வைகலும்
நல்கூர் கட்டழல் நலிந்துகை யறுப்ப
மானம் வீடல் அஞ்சித் தானம்
தளராக் கொள்கையோடு சால்பகத் தடக்கிக்
கன்னி காமம் போல உள்ள
இன்மை இயையா இடுக்கணாளர். -பெருங்.,4:2:20 - 25

கூனொடு வெதிரே பஞ்சு குருடுபோ ஊமை யானோர்
ஊனம தடைந்த புன்மை யாக்கையோ டழியு மம்மா
மானம தழிந்து தொல்லை வலியிழந் துலகில் வைகும்
ஏனையர் வசையின் மாற்றம் எழுமையும் அகல்வ துண்டே.
- கந்த.பானு.வதை.,24

1. புறம்.,27 , 2. துறக்கச் செலவு - சொர்க்கத்தை அடைதல்.

# 97. மானம்

| | இன்றி | சீரினும் | பெருக்கத்து | தலையின் | குன்றின் | புகழின்றால் | ஒட்டார்பின் | மருந்தோமற் | மயிர்நீப்பின் | இளிவரின் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 3 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| பரிதி. | 1 | 4 | 10 | 3 | 2 | 9 | 8 | 5 | 6 | 7 |
| பரிப். | 1 | 3 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| காளி. | 1 | 6 | 2 | 5 | 10 | 9 | 4 | 3 | 7 | 8 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

97-வது அதிகாரம் 'மானம்' முற்றிற்று.

**********

# 98. பெருமை

***அதிகாரப் பொருள் :***

***அ) மணக்.:*** பெருமையாவது மேன்மை, அஃதாவது சிறியார் செய்வன செய்யாமை. அது பின்பு காணப்படும்.

***இ) பரிப்.:*** பெருமை ஆவது மேன்மை. அஃது ஆவது சிறியர் செய்வன செய்யாமை. அது பின்பு காணப்படும். இது மானம் உடையார்க்கு உளது ஆவது ஒன்று ஆதலின் அதன்பின் கூறப்பட்டது. அன்றியும் குடிப்பிறந்தார்க்கு உளது ஆகும் நற்குணம் எனினும் அமையும். இவ்வுரை மேல் வருவன[1] வற்றிற்கும் ஒக்கும். குணங்கள் பலவும் சேரக் கூறுகின்றார் ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

***உ) பரிமேல்.:*** அஃதாவது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றம் கூறாமை என்று இவை முதலிய நற்குணங்களால் பெரியராது தன்மை நிலையினும்[2] மேன்மேலுயர்த்தற் பயத்தவாய இவை உளவாவது நிலையின் தாழாமையுள் வழியாகலின், இது[3] மானத்தின் பின் வைக்கப்பட்டது.

***ஊ) கவிராசர்:*** அஃதாவது செய்தற்கு அரிய காரியங்களைச் செய்கிறதும், ஐஸ்வர்யத்தினாலே கர்வியாமல்[4] இருக்கிறதும், பிறருடைய குற்றங்களைச் சொல்லாமல் இருக்கிறதும், முன்னிருந்த நிலையினும் அதிகமான ஆசாரமாய் நடக்கிறதும், முன்னிருந்த ஆசாரங்களிலே குறைபடாமல் இருக்கிறதும் ஆகிய நற்குணங்களால் பெரியாரது தன்மை.

---

1. மேல் வருவன - சான்றாண்மை முதலியவற்றிற்கும்
2. நிலையிலும் - தன்நிலையிலும்
3. இது - பெருமை
4. கர்வியாமல் - செருக்குக கொள்ளாமல்

*ஏ) பழைய2.:* அஃதாவது, குலத்தினும் மானத்தினும் செல்வத்தினும் கல்வியினும் பெரிதுடைமை, அறம் செய்தல், புகழ் செய்தல், பிறர் குற்றங் கூறாமை முதலிய என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*தேவநேயர்:* 'அறிவு, ஆற்றல், ஒழுக்கங்களால் மக்கள் அல்லது குடிகள் அடையக்கூடிய உயர்வு, பெருமையில் படிப்படியாக உயரும் நிலைமை மானத்தின் வழிப்பட்டது ஆதலின் அதன் பின் வைக்கப் பெற்றது' என்பர்.

*வரத. :* 'குடிப்பிறப்பு மானங்காத்தல் இவற்றான் இயல்பாகவே யமைந்த நிலையினின்றும் குணங்களானும் செயல்களானும் உயர்ந்தாரது தன்மை, தன்னளவில் வாழ்வதற்கும் மேம்படுதற்கும் அவனிடம் நிலமும் குணமும் செயலுமே காரணம் ஆதலின் பெருமையாக்கிக் கொள்ள வேண்டிய செல்வமாகும்' என்பர்.

*இராம.:* 'ஒருவன் தன்னுடைய காரியத்திறமையில் தனக்குள்ள தன்னம்பிக்கையினால் தன்னைச் சிறந்தவனாக எண்ணும் உணர்ச்சி, அரிய பலவும் செய்வோம் என்று, உரிமையோடு பெருமை கொள்ளும் உணர்ச்சி' என்பர்.

***குழந்தை*** முதலானோர் ***பரிமேலழகர்*** உரையை ஒட்டியே மொழிவர். 'பெருமை என்பது பெரியாரது தன்மை. பெருமை பண்பாதலின் அதனைப் பண்பையுடைய பொருளாகிய பெரியாரை விட்டுத் தனியே அறிய இயலாது. பெருமையையுடைய அவர்கண்ணும், இதுவாள்; இது உறை என்று அறிவது போலப் பொறிகளால் அறியப்படாமல் மனம் என்னும் அகக்கருவி கொண்டு அறிவான் உய்த்துணரப் பெறுவது. அதனைப் பொறியான் அறிய வேண்டுமாயின் பெரியவர் செய்யுந் தொழிலின் அரியவும் எளியவுமாகிய நிலையைக் கொண்டுதான் அறியவேண்டும்' என்று உளங் கொண்ட ஆசிரியர் ***வள்ளுவனார்,*** 'செயற்கரிய செய்வார் பெரியர்' (26) என்றார். இதனால் பெருமையாவது செயற்கரிய செயல்களைச் செய்வதால் விளைவது. அதற்கு ஓர் எடுத்துக் காட்டு கூறுவார் போலத் துறந்தாரில் ஓரினத்தாரையும், உலகவர்களிற் சிலரையும் கூறுகிறார்; 'உண்ணாது நோற்பார் பெரியர்', 'பிறர் சொல்லும் இன்னாச் சொல் நோற்பாரின் பின்' என. செயற்கரிய செயல் உணவொழிந்திருத்தலும் நோற்றலும். இவர்களை விடப்பெரியவர்கள் அடாப் பழியையும் பாவத்தையும் சுமத்தும் பிறர் கூறும் இன்னாச்சொல்லை, தாம் பல பிறவிகளில் ஈட்டிய தீவினைப்பயன் இவர்களால் ஒழிந்தது என்று அவற்றை ஒரு பொருளாகவும், மதியாத பொறுமையாளர்கள் என்பார்.

இவைகளையும், அவ்வதிகாரங்களிற் கூறப்பெறும் பெரியார் இயல்புகளையும் தொகுத்து, அவை அரசிற்குரியன. அவற்றுள் அடங்காது எஞ்சி நிற்கும் ஏனைய குணங்கள் குடிமக்களுக்கும் அவர்கட்கும் உரியன என்றுணரும் பொருட்டே அவை பெரியார் என்ற பண்பின் வாயிலாக அப்

பண்புகள் விதிக்கப்பட்டன. ஈண்டு பண்பின் மேல்வைத்துப் பண்பின் இயல்பு விளக்கப்பெற்றது.

இதனானே ஆசிரியர் ***பரிமேலழகரும்*** பிறரும் 'செயற்கரிய செய்தல் பெருமை' என்றனர். ***மணக்குடவர்*** 'சிறியார் செய்வன செய்யாமை அதாவது பெரியர் செய்வன செய்தல்' என்றார்:

***வரத.:*** பெருமையில் இயல்பாகவே அமைந்திருப்பன சிலவும் பின்னர் உயர்த்திக் கொள்வன சிலவுமாகப்பாகுப்படுத்தியுரைப்பர். தன்னளவில் வாழ்வதற்கும் மேம்படுதற்கும் அவரிடம் நிகழும் குணமாயின் அவை தன்னலம் பற்றியனவாகச் சிறுமைப்பாட்டின் பாற்படும் என்பதையும் சிந்தித்திருக்க வேண்டும்.

தன்னிடம் இன்னின்ன பெருமைகள் உள என்றறியப் பெறுதலே பெருமையாகாது· குன்றினதுயர்ச்சி யந்தகுன்றினுக்கறிய உண்டோ? எனல் போலப் பிறர் மதிக்கவும், தானறியாதும் இருப்பதேபெருமை. 'தன்பெருமைதானறியாத் தன்மையன்' என இறைவன் போற்றப் பெறுதலையும் இணைத்து ***இராமலிங்கர்*** கூறும் வரைவிலக்கணத்தை எண்ணித்துணிக. ஆசிரியர் 'பணியுமாம் என்றும் பெருமை' 'சிறுமை அணியுமாம்' என்பன முதலியவற்றால் உணர்த்துதலும் காண்க.

இவை கொண்டு பெருமையின் சிறப்பிலக்கணத்தைச் சிந்திக்க.

**98.1. ஒளிஒருவற் குள்ள வெறுக்கை இளிஒருவற் (கு)**
**அஃதிறந்து வாழ்தும் எனல். (971)**

***உரைப்பகுதி :***

**அ)** ***மணக்.***: ஒருவனுக்கு மனப்பெருமை புகழாம்; அதனை நீக்கி வாழு மென்று பிறர் சொல்லுதல் ஒருவனுக்கு இளிவாமாதலான், எ-று.

இது பெருமையாவது நிறையுடைமை என்று கூறிற்று.

**ஆ)** ***பரிதி.***: புகழாவது தருமம்; அது இல்லையாயின் அபகீர்த்தி பெறுவார்.

**இ)** ***பரி.***: 'வாழுமெனல்' பாடம்.

ஒருவனுக்கு மனப்பெருமை புகழ் ஆம்: அதனை நீங்கி வாழும் என்று பிறர்சொல்லுதல் இளிவு ஆம்ஒருவனுக்குஆகலான், எ-று.

இது மிகக் கொடுக்க வல்லாரைப் பெரியர் என்று கூறிற்று.

**ஈ)** ***காளி.***: தமது உள்ளம் என்றும் பெருமைக்கண் சேறலே, ஒருவர்க்கு 'இவர் பெரியர்' என்று பேர்விளங்கும் தோற்றமாவது: அதனால் அஃது ஒழிந்து உயிர் வாழ்தும் என்று கருதுதல் தமக்குப் பெரிதும் இளிவரவாம், எ-று.

**உ) *பரிமேல்.*:** ஒருவனுக்கு ஒளியாவது பிறரால் செயற்கரிய செய்வேம் என்று கருதும் ஊக்கமிகுதி[1] ஒருவனுக்கு மாசாவது அச்செயலை ஒழிந்து உயிர் வாழக் கடவேம் என்று கருதுதல், (எ.று).

ஒளி-தான் உளனாயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை, 'ஒளிநிறான் ஓங்கு புகழ் செய்யான்'[2] என்றார் பிறரும். மேலும் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்றாராயினும், ஈண்டு அவை[4] அளவிறந்த ஒப்புரவு ஈகை முதலியவாம். அவற்றினானாய[5] பெருமையை அதன்[6] காரணத்தின் மேலிட்டு உள்ள வெறுக்கை என்றும், அது தன்னையே அதன் காரியமாகிய ஒளியாக்கியும் கூறினார்.[7] இவ்வாறு இதன் எதிர்மறைக் கண்ணும் ஒக்கும்[8]. இதனான் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது.

***காரி:*** ஒளிதாய காலத்து மிகுந்து தோன்றுதல். 'ஒளிநிறான் ஓங்கு புகழ் செய்யான்' என்றார்.

**ஊ) *கவிராசர்.*:** ஒருவனுக்குக் கீர்த்தியாவது பிறராலே செய்தற்கு அருமையாகிய காரியங்களைச் செய்ய வேணும் என்று மேன்மேலும் நினைக்கிறதாம்; ஒருவனுக்குக் குற்றமாகிறது நல்ல காரியங்களைச் செய்யாமல் இழிவான காரியங்களைச் செய்து பிழைக்கிறது, எ-று.

செய்தற்கு அருமையாவன - தருமம் தானம் விரதம் சீலாசாரம் முதலியன.

**எ) *பழைய2.*:** ஒருவனுக்கு ஒளியாவது பிறராற் செய்தற்கரிய செயல் களைச் செய்வேம் என்று கருதும் ஊக்கமிகுதி; ஒருவனுக்கு மாசாவது அச்செயலின்றி உயிர் வாழக் கடவே மென்று கருதுதல்.

---

1. ஊக்கமிகுதி - வினை செய்தற்கண் கிளர்ச்சி மிகுதல்.
2. நாலடி.,9 3. குறள., 26 4. அவை - செயற்கரிய செயலகள.
5. அவற்றினாய - அளவு கடந்த உபகாரம், கொடை, கல்வி, ஆண்மை முதலியவற்றானாய.
6. செயற்கரிய செய்தலின் காரணமாகிய ஊக்கம் மிகுதியின்மேல் வைத்து உள்ள வெறுக்கை என்பதாம்.
7. உள்ளம் - ஊக்கம், வெறுக்கை - மிகுதி, உள்ளவெறுக்கை என்பது அதன் காரியமாகிய செய்தற்கரியனவற்றை உணர்த்திப்பின் அதன் காரியமாகிய பெருமையை உணர்த்துதலால் இருமடி ஆகுபெயர்.

   ஆகுபெயரால் பெறப்பட்ட பெருமையையே அதன் காரியமாகிய ஒளி என்று உருவகமாக்கி 'ஒருவர்க்கு உள்ளவெறுக்கை ஒளி' என்று கூறினார். ஊக்கமிகு செய்தற்கரியனவற்றைச் செய்தற்குக் காரணமாம். அதுவே பெருமைக்குக் காரணமாம் அப்பெருமையே ஒளிக்குக் காரணமாம்.
8. ஊக்கமிகுதி இல்லையேல் செய்தற்கரியனவற்றைச் செய்தலும் அவை செய்யாத போது பெருமையும் பெருமையில்லாதபோது ஒளியும் வினையின்மைப் பற்றி எதிர்மறைக்கண் ஒக்கும் எனக்கூறினார்.
9. நாலடி.,9

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறளில் ***'ஒளி' 'இளி'*** என்பன எதிர்ச் சொற்களாக இடம்பெற்று உள்ளன. ***'உள்ள வெறுக்கை' 'அஃதிறந்து வாழ்தும்'*** என்பன பொருள் மாற்றமுடையன.

**'ஒளி'**

'புகழ்' ***மணக்.;*** 'பெயர் விளங்குந் தோற்றம்' ***காளி.;*** 'தாம் உளவாங் காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை ' ***பரிமேல்.;*** 'புகழ்' ***பரிதி;*** 'கீர்த்தி' ***கவிராசர்,*** 'ஒருவனைச் சிறப்பித்து அவன் பெயரை விளங்கச் செய்யும் பெருமை. அதாவது ஒருவன் பெயரை விளங்கச் செய்வதால் அவனுக்கு வரும் பெருமை' ***தேவநேயர்;*** 'தான் செய்த உதவியால் பலரும் பாராட்டும் புகழுடைமை' ***வரத.;*** 'புகழ்' ***இராம.***

இவற்றுள் ***பரிமேலழகர்*** உரை சிறந்தது. 'உண்ணான் ஒளி நிறாஅன் ஓங்கு புகழ் செய்யான்' என்ற ***நாலடியார்*** பாடற் பகுதியும், 'ஒளி' பிறர்க்கீதல் முதலியன செய்து உள்ள காலத்து மிக்குத் தோன்றலையே காட்டுவது 'உறங்குமாயினும் மன்னவன் தன்னொளி' முதலான ***சிந்தாமணிப்*** பாடல்களிலும் ***சங்கச்*** செய்யுளிலும் அரசர்பாலுள்ள கடவுட்டன்மை, புகழ், வடிவு, மன்னவன் ஒளி, அருளாணை எனப் பல பொருள்கள் காணப்படுகின்றன. ஆதலால் அவற்றிற்கியைய அமைந்த ***பரிமேலழகர்*** உரை ஏற்றது.

**'இளி'**

'இளிவு' ***மணக்.;*** 'அபகீர்த்தி' ***பரிதி;*** இளிவரவு' ***காளி.*** 'மாசு' ***பரிமேல்.;*** 'குற்றம்' ***கவிராசர்,*** 'இழிவு' ***தேவநேயர்;*** 'குற்றம்' ***இராம.;*** 'தாழ்வு' ***வரத.;*** இளிவரல் என்னும் மெய்ப்பாடும் மென்மை அதாவது நல்குரவு பற்றி நிகழ்வது ஆகலின் ***இக்குறள் கூறும்*** இளிவரவும் அத்தகைத்தாகும் எனலாம்.

**'உள்ள வெறுக்கை'**

மனப்பெருமை' அதாவது 'நிறைவுடைமை' ***மணக்.;*** '(தமது உள்ளம் என்னும் பெருமைக்கண் சேறல்' ***காளி.;*** 'பிறரால்' செயற்கரிய செய்வேம் என்று கருதும் ஊக்க மிகுதி' ***பரிமேல்., கவிராசர், பழைய;*** 'ஒளிக்குக் காரணமான அருஞ்செயல்' ***தேவநேயர்,*** 'உயர்ந்த செல்வம்' ***வரத.;*** 'தன் நம்பிக்கை' ***இராம.;*** 'யாருஞ்செய்ய இயலாத ஒப்புரவு ஈகை முதலியவற்றை நான் செய்வேன் என்ற ஊக்கமிகுதி' ***மு.ரா.அரு.; குழந்தை.***

'வெறுக்கை' வெறுத்தல் என்னுந் தொழிற்பெயர், அதற்குக் காரணமான மிகுதிக்கு ஆய், மிகுந்த செல்வம் பொன், மணி முதலிய செல்வத் தொடர்பான பொருள்களுக்கும் ஆய் வருதல் இலக்கிய மரபு.

ஈண்டு உள்ளம்-முயற்சி. அதன் மிகுதிக்கு இயைந்து வந்தது. ***பரிமேலழகர்*** போன்றார் 'ஊக்கத்தின் மிகுதி' என்றனர். ஏனோர் சிலர் 'செல்வமிகுதி' என்றனர். இவற்றுள் 'ஊக்க மிகுதி' என்பதே ஏற்புடையது

***'அஃது இறந்து வாழ்தும் எனல்'*** இத்தொடரில் அஃது என்னும் சுட்டுப்பெயருக்கும் இறந்து என்னும் வினையெச்சத்திற்கும் பொருள் காணும் வகையில் சிறிது மாறுபாடு காணப்படுகின்றது.

'மனப்பெருமையை நீக்கி வாழும் என்று பிறர் சொல்லுதல்' என்பர் ***மணக்குடவர்.*** இவ்வுரையின் போக்கு இவர்கண்ட பாடம் 'அஃதிறந்து வாழும் எனல்' என்பதைக் குறிக்கும். இவ்வுரையிலும் 'அஃதிறந்து வாழும்' என்பது பிறர் கூற்றைக் கொண்டு கூறியதேயாம் இதற்கு ஈண்டியையபில்லாத பிறர்என்ற எழுவாயை வருவித்துப் பிறர் கூற்றாகக் கூறினல்லது பொருள் புலப்பாடின்று. 'அன்றியும், 'அஃது இறந்து வாழும் எனல் ஒருவற்கு இளி' என்பதற்கு, 'மனப்பெருமையை நீக்கி இவன் வாழ்கிறான் (வாழும்) எனல் ஒருவற்கு இளிவரவு ஆம்' என்று பொருள் உரைக்கும்போது 'வாழும்' என்பதற்கு ஒருவன் அல்லது இவன் என்னும் எழுவாயையும், 'எனல்' என்பதற்குப்' 'பிறன்' என்றஎழுவாயையும் வருவித்து முடிக்கவேண்டிய இன்றியமையாமை விளைகிறது. 'எனல்' (ஒருவற்கு) 'இளி என எனல்' என்ற தொழிற்பெயர் எழுவாய் 'இளி' என்ற பெயர்ப் பயனிலையைக் கொண்டு முடிந்ததேயாகிறது. ஆதலால் இடவழுவாகாது என்ற அமைதி கூறவேண்டிய இன்றியமையாமையே இல்லை.

***பரிமேலழகர்*** 'அஃதிறந்து வாழ்தும் எனல் ஒருவற்கு இளி' என்று பாடங் கண்டு, 'ஒருவற்கு மாசாவது அச்செயலை ஒழித்து உயிர்வாழக் கடவேம் என்றுகருதுதல்' என உரைத்தனர். இதில் 'ஒருவற்கு' என்னும் ஒருமை நோக்கின் 'வாழ்தும்' எனப் பன்மையாகக் கொண்ட பாடம் பொருந்தாது என மறுப்பர் சிலர். இதில் ஒருவற்கு இளி .....எனல் என்பதே முடிபு. இளி எழுவாய்; எனல் பயனிலை. 'ஒருவற்கு' என்னும் நான்கனுருபு ஏற்ற பெயர்க்கும் 'வாழ்தும்' என்ற வினை முற்றுக்கும் ஓரியைபுமின்று. 'வாழ்தும்' என்பது 'யாம் வாழ்தும்' என ஒருவன் தனக்குள் கருதுவதாகக் கொண்டு கூறும் தொடர். ஆகவே 'அஃதிறந்து வாழ்தும் எனல்' என்பது அவன் கருதுவதைக் கொண்டு கூறுந்தொடராதலின், 'வழக்கினாய உயர் சொற்கிளவியாய்' 'யாம் வந்தேம்' என்பது போல்வதோர் வழுவமைதியே யாம் என்க.

இதில் 'யாம் வாழ்தும்' என அவன் கருதுவதை ஆசிரியர் கொண்டு, வாழ்தும் எனல் ஒருவற்கு இளி எனக்கூறியதேயன்றி, 'ஒருவற்கு' என்ற நான்கனுருபு ஏற்ற எண்ணடியாகப் பிறந்த பெயர்க்கும் வாழ்தும் என்பதற்கும் இயைபு சிறிதுமின்று என்க

பெரும்பாலும் ***மணக்குடவர்*** உரையை யொட்டிச் செல்லும் ***பரிமேலழகர்*** இங்ஙனம் 'வாழ்தும்' எனச் சில ஏடுகளிற் பாடமிருப்பதைக் கண்டு அதனிற் சிறந்தது இது எனப்பொருள் கண்டுஇடர்ப்படுவதும் இலக்கண முடிவு காட்டுவதும் எற்றுக்கோ எனின், மனப்பெருமையையும் நீக்கி வாழும் என்பதும் புகழ்ச்சி வேண்டாப்புண்ணியமாய் ஒருவகை புகழாமேயன்றி அது இனியாகாது என்பதை எண்ணியே ***பரிமேலழகர்*** 'வாழ்தும்' என்ற பாடமே சிறந்தது என எடுத்து, அதனைப் பிறன் கூற்றாக்காது, அவனே கருதுவதாக்கி, அங்ஙனம் கருதுதலும் மாசு என்றார். இதனை எண்ணிப் பலர் கொண்ட பாடமும் உரையுமே சிறத்தலைத் தெளிக.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***ஒளி ஒருவற்குள்ள வெறுக்கை :***

தருமமுந் தகவுமிவர் தனமெனனுந் தகையரிவர். - கம்ப., 3859

***உள்ளவெறுக்கை:***

உள்ளவெறுக்கை. - குறள்., 600

***முற்றும்:***

ஐது குடியில் பிறந்தருநூல் ஆய்ந்து செல்வ துயர்ந்ததனால்
எய்தல் அரிது பெருமையஃது எய்தும் கொடைஒப் புரவாதி
செய்தற் கரிய செய்துபிறர் செயிர்கூறாமல் தருக்காமல்
உய்தி நெறியில் பிறழாமல் ஒழுகுவார்க்குள் ளுதிமைந்தா
- விநா.அரசி.,145

## 98.2. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான். (972)

### உரைப்பகுதி:

அ) ***மணக்.***: எல்லா உயிர்க்கும் பிறப்பால் ஒரு வேறுபாடில்லை; ஆயினும் தான் செய் தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினாலே[1], பெருமை ஒவ்வாது, எ-று.

எனவே இது பெருமையாவது குலத்தினால் அறியப்படாது என்பதும் அதற்குக் காரணமும் கூறிற்று.

ஆ) ***பரிதி.***: மனிதர் எல்லோரும் சனனத்தால்[2] ஒப்பர்; ஆசாரத்தினாலே நற்குலத்தராவர், எ-று.

நற்குலத்தராவர் என்றதால் இழிதொழிலாலே இழிகுலமாவர் என்பதாம்.

1. ஏற்றச் சுருக்கத்தினாலே - உயர்வும் இழிவும்
2. சனனத்தால் - பிறப்பால்

இ) ***பரிப்.***: எல்லா உயிர்க்கும் பிறப்பால் ஒரு வேறுபாடு இல்லை; ஆயினும் தத்தம் செய்தொழிலினது ஏற்றச் சுருக்கத்தினாலே பெருமை ஒவ்வாது, எ-று.

எனவே பெருமை ஆவது குலத்தினால் அறியப்படாது என்பதும் அதற்குக் காரணமும் கூறிற்று.

ஈ) ***காளி.***: மக்கள் ஆகிய அனைவர்க்கும் பிறப்பின்கண் ஒரு வேற்றுமை இல்லை. அம்மக்கட்குச் சிறப்பு ஒவ்வாது என்பது என்னையோ எனின், இயல்பு நீங்கிய இழிவு தொழில் ஒருவர்க்கு உளதாயின் இவர் சாலச் சிறியர் என்றும் தமக்கு இயல்பு ஆகிய பேரொழுக்கத்தின்கண் பிழையாது ஒழுகின் இவர் சாலப் பெரியார் என்றும் இங்ஙனம் வழங்கி வருவதால் யாவர்க்கும் சிறப்பு ஒவ்வாது என்பதைத் தெரிந்து கொள்ளப்படும், எ-று.

உ) ***பரிமேல்.***: எல்லா மக்களுயிர்க்குப் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமே எனினும், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா, அவைசெய்யும் தொழில்களது வேறுபாட்டான், (எ-று).

வேறுபாடு - நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும் இரண்டுமல்லவாயினவுமாய[3] அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தான் பஞ்சபூதபரிணாமமாகிய[4] யாக்கையைப் பொருந்திநின்று அதன்பயன் அனுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின் ‘பிறப்பொக்கும்’ என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக்கல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலின் ‘சிறப்பு ஒவ்வா’ என்றும் கூறினார்.

***காரி.***: பஞ்சபூத பரிணாமமாமாகிய ஆக்கையை என்றதனால், ஒன்றுஒன்றாதல் பரிணாமம்.

ஊ) ***கவிராசர்.***: எல்லா மனுஷருக்கும் பிறப்புச் சரியானாலும் அவரவர்கள் செய்கிற தொழில் வேற்றுமையினாலே, சிறப்பாகிய தன்மைகள் சரியாகா, எ-று.

ஏ) ***பழைய2.***: மக்கட் பிறப்பு எல்லா வுயிர்க்கும் ஒக்கும்; சிறப்பு ஒவ்வாது, அவரவர் செய்யுந் தொழில் வேற்றுமையால்.

---

3. நன்மையும், தீமையுமல்லாத வினைகளாவன துரும்புக் கிள்ளுதல், அழுக்குருட்டுதல், நீரைக் கையால் அடித்தல் முதலியன.
4. பஞ்சபூத பரிணாமம் - பால் தயிராதல் போல ஆடை, வீடாதல் போல் ஐம்பூதங்களும் கலப்பாலும் வளர்ச்சியாலும் மாறுபடுதல்.

### ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்குடவர்,*** குறள் நடையை ஒட்டி' எல்லாவுயிர்களுக்கும் பிறப்பால் வேறுபாடு இல்லை; ஆனாலும் தொழிலின் ஏற்றச் சுருக்கத்தால் பெருமை ஒவ்வா' என்பர், ***வரத.*** இதனைத் தழுவி உரைகூறி, 'தொழிலான் வேறுபடுதலை நஞ்சாய்த் தீமை செய்வனவும், மருந்தாயும் உணவாயும் நன்மை செய்வனவும் உற்றறியும் ஓரறிவுயிர் களிலும் உள' என அமைதி கூறி வற்புறுத்துவர். இவருரையில் வரும் ஏற்றச்சுருக்கம் என்பது உயர்வு தாழ்வைக் கருதுமா? சுருக்கம் உள்ளதன் மிகுதி. குறையைக் குறிக்குமா? என்பது சிந்தித்தற்கு உரியது.

***பரிமேலழகர்*** 'எல்லா மக்களுயிர்க்கும் எனவும், சிறப்பு - சிறப்பு இயல்புகள்' எனவும் உரை கூறிச் 'சிறப்பு - பெருமை சிறுமை' என்பன. 'அவையாவன நல்லனவும், தீயனவும், இரண்டுமாயினவும், அல்லனவும் ஆக அளவிறந்த பாகுபாடுகள் என்பன' முதலான விளக்கமுந்தந்தனர். இவ்வுரை யமைதி பின் வந்த ஆசிரியர்களின் கருத்தைக் கவர்ந்திருக்கிறது. அனைவரும் அவரை ஒட்டியே உரைத்தனர்.

***காளிங்கர்*** உரை 'மக்களுக்கு இயல்பானது பேரொழுக்கமுடையராதல். இயல்பில்லாதது இழி தொழிலைச் செய்தல். பேரொழுக்கத்தால் சிறப்பும், அஃதின்மையானும், இழிதொழில் செய்தலானும் விளைவது சிறப்பின்மை' என்னுங் கருத்தினது. இதனால் 'பேரொழுக்கம் உடையனாதல் பெருமை' என்பது பெறப்படும்.

***பரிமேலழகர்*** 'பெருமை சிறுமைகட்கு ஏதுவாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலால் சிறப்பொவ்வா' என்பர். ஆகவே தொழில் வேறுபாடுகள் வருணாச்சிரமங் கருதி விதிக்கப்பட்டன என்கிறார்.

***வ.சுப.மா.*** 'பிறப்பொத்தல்-ஒரு தாய் வயிற்றுப் பிறத்தலால் ஆவது; சிறப்பின் பாலால் உளதாம் வேறுபாடு சிறப்பொவ்வாமை என்பர். தமிழ் மரபில்லாத வருணாச்சிரம வேறுபாடுகொண்டு தொழிலின் ஏற்றத் தாழ்வைக் குறித்தலைக் காட்டிலும் இது ஓராற்றான் ஏற்புடையது.'

***பழைய உரை*** கூறும் விளக்கமும் எடுத்துக் காட்டும் ***அறன் வலியுறுத்தலிற்*** கண்டனவே.

***இராம.*** 'செய்தொழில் வேற்றுமையான்' என்பதனைத் 'தொழில் செய் வேற்றுமையான்' எனப் பிரித்துக் கூட்டிப் பொருள் காண்பர். இதனால்

இவர்காட்ட முயலும் பொருட்சிறப்பு 'தொழில் ஒன்றேயாயினும் செய்திறத்தான் விளைவது சிறப்பு ஆம்' என்பது.

***தேவநேயர்*** 'பிழையொடு படாத தொழில் வேறுபாடுகள் அதிகாரமுள்ளதும் இல்லாததும் இரண்டும் உள்ளதும், இரண்டும் இல்லாததும் வருவாய் குறைந்ததும், மிகுந்ததும் முதலாகப் பயனாலும், காலத்தானும், தூய்மையானும் விளையும் வேறுபாடுகள் பலவற்றைக் காட்டுவர்.

***குழந்தை*** 'செய்தற்கரியனவும் எளியனவும் ஆகிய செயல்களே அவற்றால் விளைவனவே பெருமை சிறுமைகள் என்பர்.'

ஆசிரியர் ***வள்ளுவனார்*** 'இகல் என்ப எல்லாவுயிர்க்கும் ' (851) 'உயிர்க்கெல்லாம் வேறல்ல நாணுடை மாந்தர் சிறப்பு' (1012) என்ற ஈரிடங்களில் 'எல்லாவுயிர்க்கும்' என்ற தொடரை ஆளுகின்றார் இவ்விரண்டிடங்களிலும் கூட மக்களுயிர் என்னாது இயங்குதிணையாகிய அஃறிணையுயிர்கட்கும் சேர்க்கை உணவு இணைவிழைச்சு பற்றி இகல் விளைதலாலும் அவ்விகல் பிளவு படுத்தலானும் எல்லா வுயிர் என்பது அனைத்துயிரிலும் இயங்குதிணையுயிர்களைக் குறித்தது. அதுபோலவே 1012 ம் ***குறளில்*** ' 'எல்லா உயிர்க்கும்' என்பது உயிர்ப் பொதுமையையே உணர்த்திற்று என்பதனை 'மாந்தர்' சிறப்பு என அவர்காட்டும் பிரித்துக் காட்டலே சான்றாய் நின்று வலியுறுத்தும் என்பது கொண்டு தெளியலாம். அது போன்றே ஈண்டும் கொள்ளுதல் தகும். 'கண் என்ப வாழும் உயிர்க்கு' (392). 'மன்னுயிர்க்கு ஆக்கம்' (457) போன்ற இடங்களில் 'ஈண்டு உயிர் என்பது உயர்திணை மேல் நின்றது எனவும், சிறப்புடைய உயிர் என்பது மக்களுயிருள்ளும்உணர்வு மிகுதியுடையதனை' எனவும் கூறுதலால் மக்கள்என்னும் பொருளையும் உணர்த்துமாயினும் 'எல்லாவுயிர்க்கும்' எனவருமிடங்களில் உயிர்ப்பொதுமையை யுணர்த்துதல் காண்க.

மணியின் மதிப்புப் போலப் பெருமை சிறுமைகள் பிறரால் மதிக்கப்படுவனவே யன்றித் தாங் கருதுவனவல்ல; ஆதலால் தொழிலின் உயர்வினைக் கொண்டே பெருமையும் மதிக்கப்படுகிறது எனப் பெருமையிலும் உயர்வும் தாழ்வுமுண்டு என்பதை யுணர்த்துவதே ***இக்குறளின்*** நோக்கம். பெருமையை மதிப்பீடு செய்வதே ***பெருமை*** என்னும் இவ்வதிகாரத்தின் பொருணோக்கிற்கும் ஏற்றதாகும்.

ஆதலால், மக்களுக்கு மட்டும் என்ன? பிறப்பால் ஒத்த எல்லாவுயிர்கட்குமே செய்தொழிலால் பெருமை ஒப்பாதல் இல்லை என்பதனைப்பட்டத்தி யானையையும், படை யானையையும், சுமை தூக்கும் யானையையும் கொண்டே துணியலாம். இங்ஙனமே எல்லா வுயிர்கட்கும்

ஆதலால் ***மணக்குடவர்*** உரையே ஆசிரியர் உள்ளக்கிடக்கையை உணர்த்தும் உரை எனலாம்.

மக்களுக்கு மட்டும் என்ன? ஏனைய உயிர்களும் பிறப்பால் ஒத்திருக்கின்றன. ஆனால் சிறப்பால் ஏற்றத் தாழ்வுடையன என்பதை உணர்த்த வந்த ***இக்குறட்கு மணக்குடவர்*** உரையே ஏற்புடையது. அதற்கு இயைய 'எல்லா உயிர்க்கும் பிறப்பொக்கும். செய்தொழில் வேற்றுமையான் சிறப்பு ஒவ்வா' என இரு தொடராக முடிப்பதும் ஏற்புடையது. 'ஒக்கும் ' என்பதைப் பெயரெச்சமாகக் கொண்டு 'ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா' என ஒரு தொடராக முடிக்கினும் இடர்ப்பாடின்று, தொழில் வேற்றுமையான் எய்தும் சிறப்புப்பலவாமாதலின், அது பண்புப் பெயராய், பால் பகுக்கக் கூடாமையின் 'ஒவ்வா' எனப் பன்மை முடிவு ஏற்றலுமாகும்.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

***சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் :***

இனைய தாதலின் எக்குலத்து யாவர்க்கும்
வினையி னால்வரும் மேன்மையும் கீழ்மையும்.

-கம்ப., 4161.

***முற்றும்:***

அவன் உங்கள் யாவரையும் ஒரே
ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான். - குர்ஆன்.4:1.

அவரவர் செயலுக்குத் தக்க பதவிகள்
இருக்கின்றன. - குர் ஆன்.46:9

இவ்வுலகத்தில் அந்தணராதலும், அரசராதலும், வணிகராதலும், மிலேச்சராதலும் பிறப்பினால் இல்லை, குணம் செயல்களாலேயே வேறுபடுக்கப்பட்டனர்.

பரமனிடத்துத் தோன்றியதுபற்றி எல்லோரும் எங்ஙனம் பிராமணராவர்? சாதியினாலும் தாய் தந்தையராலும் பிராமணத்தன்மை அமைவது அன்று. -சுக்கிரநீதி, அத்.1, சுலோ.38-39.

## ஓ) மேற்கோள்பகுதி:

***இளம்:*** குடிமையாவது அந்தணர் அரசர் முதலிய அக்குலத்தின் உள்ளாரெல்லாம் சிறப்பாக ஒவ்வாமையின் அச்சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவு. குடிவரவைக்குடிமை என்றார். 'பிறப்பொக்கும். .......... வேற்றுமையான்' எனப் பிறரும் குலத்தின் கண்ணே சிறப்பு என்பது ஒன்று உண்டென்று கூறினாராகலின். - தொல். பொருள்.,91.

## 98.3. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
## கீழல்லார் கீழல் லவர். (973)

**உரைப்பகுதி:**

அ) ***மணக்.***: மேலான இடத்திருந்தாலும், மேன்மையில்லாதார் மேன் மக்களாகார்: கீழான இடத்திருந்தாலும், கீழ்மையில்லாதார் கீழ்மக்களாகார், எ-று.

இடம் என்பது செல்வத்தினால் இருக்குமிடம்.

ஆ) ***பரிதி.***: இது நற்குலத்தார் அல்லாதார் மேலிருந்தும் கீழ்மையாவர். நற்குலத்தார் கீழிருந்தும் மேன்மையாவர், எ-று.

இ) ***பரிப்.***: மேலான இடத்தில் இருந்தாலும் மேன்மை இல்லாதார் மேன்மக்கள் ஆகார். கீழான இடத்து இருந்தாலும் கீழ்மை இல்லாதார் கீழ்மக்கள் ஆகார், எ-று.

இடம் என்றது செல்வத்தினால் இருக்கும் இடம். இது செல்வத் தினால் பெரியாரையும் பெரியார் என்று கொள்ளப்படாது என்றது.

ஈ) ***காளி.***: மனையும் மாடும் பொருளும் பூமியும் முதலியவற்றான் மேலாயினாரும் தம் குலமும் ஒழுக்கமும் குணமும் ஞானமும் முதலியவற்றான் மேம்பாடு உடையர் அல்லாதார் யாவர்? அவர் எஞ்ஞான்றும் சாலச் சிறியரே: இனி மற்று அம்மனையும் மாடும் முதலியவற்றால் கீழ்ப்பட்டிருந்தும் அக்குலமும் ஒழுக்கமும் முதலியவற்றால் சிறிதும் கீழ்மைப்பாடு உடையர் அல்லாதார் யாவர்? மற்று அவர் அஞ்ஞான்றும் கீழ் அல்லர்; எனவே அவரே சாலப் பெருமையர் என்பது பொருளாயிற்று, எ-று.

உ) ***பரிமேல்.***: செயற்கரிய செய்கலாதுசிறியராயினார், உயர்ந்த அமளி[1] முதலியவற்றின்மிசை இருந்தாராயினும், பெரியராகார்; அவை[2] செய்து பெரியராயினார், தாழ்ந்த வறுநிலத்து[3] இருந்தாராயினும், சிறியராகார்,(எ-று).

மேலிருத்தல் கீழிருத்தல்களால் செல்வ நல்குரவுகளும், மேல் கீழ்களால் பெருமை சிறுமைகளும், கருதப்பட்டன[4]. இவை இரண்டு

1. அமளி - படுக்கை
2. அவை - செயற்கரிய செயல்கள்
3. வறுநிலத்து - வெறுந்தரையில்
4. மேலல்லார் மேலிருத்தலால் செல்வமுடையும், கீழல்லார் கீழிருத்தலால் தரித்திரமுடைமையும், 'மேல்' என்றதால் 'பெருமையும்', 'கீழ்' என்றதால் 'சிறுமையும்' கருதப்படுகின்றன. மேலல்லார் என்றும் பெருமை இல்லாதவரே; கீழலல்லார் என்றும் சிறுமையில்லாதவரே ஆவார்.

பாட்டானும் முறையே குடிமை[5] மாத்திரத்தானும் செல்வமாத்திரத் தானும் அஃது[6] உளதாகாமை கூறப்பட்டது.

ஊ) ***கவிராசர்.***: செய்தற்கரிய காரியங்களைச் செய்யமாட்டாதவர் உயர்ந்த விடத்திலே இருந்தாலும் பெரியவர்களாகார்; செய்தற்கரிய விரத சீலாகார[7] தான தருமங்களைச் செய்யும் பெரியோர்கள் தாழ்ந்த விடத்திலே இருந்தாலும் சிறியராகார்.

ஏ) ***பழைய2.***: இழிதொழில் செய்வார் உயர்ந்த ஆசனத்திலிருந்தாலும் பெரியராகார்: உயர்ந்த தொழில் செய்வார் வறுநிலத்தில் இழிந்திருந் தாலும் சிறியராகார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'மேல்'*** மேலான இடம்: அதாவது செல்வத்தால் இருக்கும் இடம் என்பர் ***மணக்.***: 'நற்குலம்' என்பர் ***பரிதி.***; 'செல்வத்தால் மேலாயினர்' என்பர் ***காளி.***; 'உயர்ந்த அமளி முதலியவற்றின் மிகையிருந்தார்' ***பரிமேல்., கவிராசர், பழைய,***; ***மேலல்லார்'*** என்பதிலுள்ள 'மேல்' என்பதற்கு 'மேன்மை' ***மணக்.***; 'மேலிருத்தல்' ***பரிதி.***; 'சிறியர்' ***காளி.***, 'பெரியவராகார்' ***பரிமேல்., கவிராசர்*** முதலிய ஏனோர்.

இவையனைத்தையும் உள்ளடக்கி, 'மேல்-கீழ், சிறுமை-பெருமை நானாவிதம்' என்பவர் ***பழைய உரையாசிரியர்.***

***தேவநேயர்,*** 'பிறப்பொடுபட்ட குலப் பிரிவினைப்படி' முறையில் மேலிருந்தும் ஒழுக்கம் முதலிய பண்பு கெடின் அவர் மேலோர் ஆகார். அவற்றால் கீழ்ப்பட்டோராயினும், பண்பானுயர்ந்தார் உயர்ந்தாராவர்' என்பர்.

***வரத.*** மேலிருத்தல்-பதவியாலும் பணத்தாலும் மேலிருத்தல், கீழிருத்தல்- பதவி முதலியவற்றான் கீழிருத்தல் என்பர்.

இவ்வுரைகளில் ஒருசில செல்வம் செல்வாக்குகளால் மேலிருத் தலையும், சில அமளி முதலிய இடத்தான் மேலிருத்தலையும் கருதுகின்றன. மேலிருத்தல், குடிப்பிறப்பு, மான முதலிய இயல்பு நிலையானும் பண்பு, தொழில் முதலிய சேர்க்கை நிலையானும் விளைவது. இயல்பு நிலையால் உயர்ந்தார் செயற்கை நிலையால் தாழ்ந்தாராயின் மேலல்லவராவர். அவற்றான் கீழிருந்தார் செயற்கை நிலையான் உயர்வராயின் உயர்ந்தார் என்ற கருத்தை யளிப்பன ***பரிமேல்., வரத., கவிராசர்*** போன்றோர் உரைகள். இதனை யரண் செய்வது 'பார்ப்பான் பிறப்பொழுக்கங்குன்றக் கெடும்' என்னும் ஆசிரிய வசனம்.

---

5. குடிமை - குடிப்பிறப்பு 6. அஃது - பெருமை

7. விரத சீலாகார - நோன்பு, ஒழுக்கம், உணவு

நற்குலத்தாரே மேலிருத்தற்குரியர் அவர்கள் கீழிருந்தாலும் மேலோராவர் என்ற *பரிதியுரை* முற்கூறிய ஆசிரிய வசனத்தொடு மாறுகோடலாம் ஆதலின் சிறவாது.

*காளிங்கர்* உரை 'செல்வ முதலியவற்றால் சிறந்தாராயினும் குணம் தொழில் இவற்றாற் சிறவாராயின் இழிந்தாரேயாவர். செல்வ வளத்தாற் கீழ்ப்பட்டாராயினும் குலத்தானும் ஒழுக்கத்தானும் கீழாகாதார் உயர்ந்தாரே யாவர்' என்னும் கருத்தினதாகும் 'இயல்பான உயர்வோடு செயற்கையான உயர்வும் இருந்தாலல்லது உயர்வு நிலைக்காது' என்பதை விளக்குவதிக் *குறள்.*

இவற்றுள் குலவழியுயர்ந்தாராயினும் பண்பிற்றாழ்வராயின் தாழ்ந்தோரே; தாழ்ந்தோராயினும் பண்பாலும் தொழிலிலும் சிறந்தாராயின் சிறந்தாரே என்னும் கருத்தமைந்த உரைகள் சிறந்தன. ஆசிரியர்காலம் குடிப்பிறப்பானும் உயர்வுண்டு; என்ற கருத்து மேலோங்கி வலிமை பெற்று வந்த காலம். அதனைத் தளர்த்தி மேன்மைக் குணமே உயர்வை நிலைபெறச் செய்வதும் உயர்வையறிப்பதும் ஆம் என்பதை வலியுறுத்திக் குலப் பெருமையும் உடன் கூறுதல் ஏற்புடையதேயாம்.

## ஓ) மேற்கோள்பகுதி:

*சங்கர.:* 'கீழின் முன் வன்மை விகற்பமும் ஆகும்'. இச்சூத்திரத்துரையில் 'கீழ்மை என்னும் பண்பொடு புணர்தல் பதவியலுள் போந்தமையின் 'கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்' என்றாற்போலக் கீழ் என்பது பண்பாகுபெயராய் இத்தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகை யாம் என்க' என்பர்.

- நன்., 226.

## 98.4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
## தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. (974)

### உரைப்பகுதி:

அ) *மணக்.:* ........................

ஆ) *பரிதி.:* குலமகள் தன்கற்புநிலையில் நிற்றல் போல, பெருமையும் நன்னிலையில் நிற்கில் பெருமை பெறுமாம், எ-று.

இ) *பரிப்.:* தன்னைப் பிறர் விரும்பும் காலத்தினும், தன் உள்ளம் பிறரை விரும்பும் காலத்தினும் வேண்டியவாறு ஒழுகாத கற்புடைய மகளிரைப் போலப் பாதுகாத்து ஒருவன் ஒழுகுவனாயின் பெருமைஉண்டு ஆம்; அல்லது இல்லை ஆம்., எ.று.

இது பெருமையாவது நிறை உடைமை என்று கூறப்பட்டது.

ஈ) ***காளி.***: பிற மதில்காவலும் மக்கள் காவலும் அன்றித் தம் மனக்காவல் ஆகிய நெஞ்சு ஒருமைப்பாட்டால் கொண்டானைப் பிழையாத மகளிரைப் போலக் குடிப்பிறந்தோனது பெருமையும் அக்குடிப்பிறப்பிற் பிழையாவண்ணம் தன்னைத் தானே அமைத்துக் கொண்டு ஒழுகின் உண்டு. எ-று.

இனி மற்று இங்ஙனம் தாம் தம்மைப் பிழைவழிச் செல்லாது அமைத்துக் கொண்டு ஒழுகுதலை ஆளும் ஆட்சி சான்றாண்மைக்கு ஒரு தோற்றுவாய் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) ***பரிமேல்.***: கவராத மனத்தினையுடைய மகளிர் நிறையின்[1] வழுவாமல் தம்மைத் தாம் காத்துக்கொண்டு ஒழுகுமாறு போல, பெருமைக் குணனும், ஒருவன் நிறையின்[2] வழுவாமல் தன்னைத் தான் காத்துக் கொண்டொழுகுவானாயின், அவன் கண் உண்டாம், (எ.று).

'பொருளின் தொழில் உவமையினும் வந்தது[3]. கற்புண்டாதல் தோன்றநின்றமையின், உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் மனமொழி மெய்களை ஒடுக்கி ஒப்புரவு முதலிய செய்துபோதல். இதனால் அஃது உளதாமாறு கூறப்பட்டது.

***காரி.***: நிறையின் வழுவாமல் தம்மைத் தாம் காத்துக் கொண்டொழுகுமாறு என்று உரைத்ததனால் பொருளின் தொழில் உவமையினும் வந்தது.

ஊ) ***கவிராசர்.***: கபடமில்லாத மனத்தையுடைய ஸ்திரீகள் பதிவிரதாபாவங்கள் கெடாமல் காத்துக்கொண்டு நடக்கிறாப்போலே, பெருமைக்குணம் வேண்டினவர்களும் தம்முடைய நீதிநெறி முறைமை கெடாமல் தம்மைத்தாமே காத்துக் கொண்டிருக்கவேணும், எ-று.

எ) ***பழைய2.***: கவரா மனத்தையுடைய கற்புடைய மகளிர் நிறையின் வழுவாமல் தன்னைத் தான் காப்பது போலப் பெருமையும் ஒருவன் நிறையின் வழுவாமல் தன்னைத் தான் காத்து ஒழுகுவானாயின் அவனிடத்து உண்டாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஒருமை மகளிரும் பெருமையுடையானும் முறையே உவமமும் பொருளும் ஆவர். தன்னைத் தான் கொண்டொழுகல் பொதுத்தன்மை.

1. நிறை - கற்பு
2. நிறை - காப்பன காத்து கடிவன கடிந்து, ஒழுகும் ஒழுக்கம், 'நிறையெனப்படுவது மறைபிறரறியாமை'
3. பொருள் உவமேயம், அஃது இங்கு ஒருவன் என்ற பொருளைக் குறிக்கிறது.

*'தன்னைத்தான் கொண்டொழுகல்'*

'தன்னிலையில் நிற்றல்' ***பரிதி.***; 'பாதுகாத்து ஒழுகுதல்' ***பரிப்.***; 'அக்குடிப்பிறப்பின் வழுவாவண்ணம்' ***காளி.***; 'நிறையின் வழுவாமல் தன்னைத்தான் காத்துக் கொண்டொழுகுவானாயின்' ***பரிமேலழகரும்*** பிறரும் கூறுவர்.

***தேவநேயர்*** தன் கணவனையே கலந்து மகிழும் குலமகள் போல ஆடவனும் தன் மனைவியையே காதலித்துத் தன்கற்பைக் காத்துக் கொள்வானாயின் பெருமை உண்டாம் என்பர். இது உவமைக்கேற்ற பொதுத் தன்மை பெற்று வருவது; ஆடவர் மகளிர் இருவர்பாலும் கற்பொழுக்கத்தையே வலியுறுத்திச் சேறலின், ஏனோர் உரைகள் ஒழுகலுக்கு உரைப்பவற்றை மேலேகாட்டினோம்.

***வரத.:*** 'எந்தச்சூழ்நிலையினும் தன்னைக் காத்து ஒழுகும் மாதர் போல, எவ்வளவு பெரிய இன்பங்களைக் காணினும், தீமையிற் புகாது தன்னைத் தானே காத்துக் கொள்ளுபவனிடத்தில் பெருமையிருக்கும், இதற்கு இவர்தரும் விளக்கம்: 'மனிதன் அளவும் உயர்வும் உடையவன்; அளவில் நிற்றல் மானம்; உயர்தல் பெருமை; நிறைதல் சால்பு; ஆகவே ஒருவன் தன்னளவில் நின்று, முயற்சியால் தீநெறியிற் செல்லாது தடுத்து, நன்னெறியிற் செலுத்தி மேம்படலே பெருமை என்பது'.

***இராம.*** ஏனோர்போலாது, 'மகளிர் ஒருமையே போல, பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு' எனக்கூட்டிப் 'பெண்களின் கற்பைப் போலவே பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகுவதால் உண்டாவது' என உரைப்பர். மற்றும் 'பெண்களின் கற்பும், ஆடவர் பெருமையும் பிறர் சொல்லி வருவதுமல்ல ; பிறரால் காக்கப்படுவனவும் அல்ல தானே காத்துக் கொள்ளத்தக்கவை' என்பர். இக்கருத்து 'மகளிர் நிறை காக்குங் காப்பே தலை' என்பதை உளங்கொண்டுளதாயாது. பிறரை மனத்திற் புகுத்துதலும், தான் பிறர் மனம் புகுதலும் கற்பன்றாகலின் ***பரிப்பெருமாள்*** கூறும் விளக்கவுரை சிறிதும் இயைபிலது.

'ஒருமை மகளிர்' என்பதற்கு எதிர்ச்சொல் 'இருமனப் பெண்டிர்' என்பது (920).

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***தன்னைத்தான் கொண்டொழுகல்:***

வாயி னடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை யடங்குதல் திப்பியமாம் பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகு மிம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள்.

- திரிகடுகம்.,43.

*பெருமை தன்னால் விளைவது எனல்:*

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான். - நாலடி.,248.

பீடுபெற நில். -ஆத்தி.,80.

குலத்தலை மகளிர்தங் கற்பின் கோட்டகம்
நிலைப்படா நிறைந்தன பிறவும் என்பவே. -சீவக.,41.

*ஒருமை மகளிர்:*

தருமமே காத்ததோ சனக னல்வினைக்
கருமமே காத்ததோ கற்பின் காவலோ
அருமையே யருமையே யாரி தாற்றுவார்
ஒருமையே யெம்மனோர்க் குரைக்கற் பாலதோ. - கம்ப., 404

## 98.5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல். (975)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.***: பெருமையுடையவர் நெறியினானே செய்யவல்லர் ஆவர். செய்தற்கு அருமையுடைய செயல்களை, எ-று.

இது செய்தற்கு அரியசெய்வார் பெரியார் என்றது.

**ஆ)** ***பரிதி.***: ஒருவராலும் செய்தற்கரிய செய்வார் பெரியோர்; செய்ய மாட்டார் சிறியவர். எ-று.

**இ)** ***பரிப்.***: பெருமையுடையவர் நெறியினானே செய்ய வல்லர் ஆவர் செய்தற்கு அருமை உடைய செயல்களை, எ-று.

இது செய்தற்கு அரிய செய்வார் பெரியர் என்றது.

**ஈ)** ***காளி.***: தம் குடிமையால் பெருமை உடையவர் சால வல்லவர்; யாதினை எனின் நூல் நெறிப்பொருள் பலவற்றினும் வைத்துப் பலராலும் செய்தற்கு அருமை உடையவற்றைச் செய்து கோடல், எ-று.

***உ) பரிமேல்.***: அவ்வாற்றான்[1] பெருமை யுடையராயினார்' தாம் வறியராய வழியும் பிறரால் செய்தற்கரியவாய தம்செயல்களை விடாது. அவை[2] செய்யுநெறியால் கடைபோகச் செய்தலை வல்லவராவர், (எ-று).

1. அவற்றான் - செய்தற்கரிய செய்தலால்
2. அவை - செயற்கரிய செயல்கள்

வறியராய வழியும் என்பது முன்செய்து போந்தமை தோன்றப் 'பெருமையுடையவர்', என்றதனானும் 'ஆற்றுவார்' என்றதனானும் பெற்றாம். இதனால் அதனை[3]யுடையார் செய்தி கூறப்பட்டது.

ஊ) *கவிராசர்.*: பெருமையுடையவர்கள் தரித்திரரானாலும் செய்தற்கரிய தான தங்கள் நடக்கையை விடாமற் செய்வர், எ-று.

நல்ல நடக்கைகளை விட்டால் பெருமை போம், எ.ம்

ஏ) *பழைய2.*: பெருமையுடையராயினார் தாம் வறியராய வழியும் பிறர் செய்தற்கரிய செய்லகளை விடாது நெறியாற் கடை போகச் செய்ய வல்லர் ஆவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*பெருமையுடையர்'*

'குடிப்பிறப்பால் பெருமையுடையர்' என்பர் ***காளிங்கர்***. ஏனையோர் வாளா கூறுவர். 'ஆற்றலாற் பெருமையுடையர்' என்பர் ***பரிமேலழகர்*** ***காளிங்கர்*** நீங்க அனைவரும் 'அருமையுடைய செயல் ஆற்றின் ஆற்றுவர்' எனக் கூட்டி 'விடாமல் செய்யும் நெறியாற் செய்வர்' என்பார்கள். ***காளிங்கர்*** 'நூல்களாற் சொல்லப்பட்ட அரிய செயல்கள் அனைத்திலும் அரியதாய செயல்களை, என்பர்: 'ஆற்றின் -நூல் நெறியான்' என்பது இவருரை.

***இராம.*** 'ஆற்றின் அருமையுடைய செயல்- செய்வதற்கு அரிய காரியங்களையும் செய்வர்' என்பர். ஆற்றின் - அருமை; செய்வதற்கு அருமை என்பது இவர்பொருள். 'ஆற்றின்' என்ற ஐந்தனுருபு ஏற்ற சொல், ஆற்றுதற்கு' என நான்கன் பொருளில் வரக்கூடுமாயின் ஏற்றதாகலாம். இத்தகைய இடர்ப்பாடுகளைக் கண்டே முன்னோர்' 'ஆற்றின்'--'முறைப்படி', 'நெறியினானே' என்றனர். ***வரத.*** நெறிப்படச்செய்வர் என்பர்.

பல்லாற்றானும் இக்குறட்குப் ***பரிமேலழகர்*** உரையே ஏற்புடையது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

*முற்றும்:*

செயற்கரிய செய்வார் பெரியர். -குறள்.,26.

இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர். - நாலடி.,152.

பெருமையோ ராயினார் பெருமை பேசலார்
கருமமே யல்லது பிறிதென் கண்டது.- - கம்ப.,4019.

3. அதனை - பெருமையை

இருமை நோக்கின்நின் றியாவர்க்கு மொக்கின்ற
அருமை யாற்றலன் றோவறங் காப்பது - கம்ப.,4131.,

சிறுமுயற்சிசெய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனில் தாழ்வரோ தாழார்-அறனல்ல
எண்மைய வாயினும் கைவிட் டரிதெனினும்
ஒண்மையில் தீர்ந்தொழுக லார். - நீதிநெறி.,70

## 98.6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப் பேணிக்கொள் வேமென்னும் நோக்கு. (976)

**உரைப்பகுதி:**

அ) ***மணக்.***: சிறுமையுடையார்உணர்வின்கண் இல்லை, பெருமை யுடையாரைப் போற்றித் துணையாகக் கொள்வோம் என்னும் கருத்து.

இது பெரியாரைப் பெறுதலும் பெருமை என்று கூறிற்று.

ஆ) ***பரிதி.***: சிறியார்களிடத்து இல்லை; பெரியாரைப் பேணிக் கொள்ள வேணும் என்ற பெருமை, எ-று.

இ) ***பரிப்.***: சிறுமை உடையார்உணர்வின்கண் இல்லை, பெருமை உடையாரைப் போற்றித் துணையாய்க் கொள்வோம் என்னும் கருத்து, (எ.று).

எனவே பெருமை உடையார்மாட்டு உண்டு என்றவாறு ஆயிற்று. இது பெரியாரைப் பேணுதலும் பெருமை என்று கூறப்பட்டது.

ஈ) ***காளி.***: சிறியவர் உணரும் உணர்ச்சியுள் இல்லை; யாது எனின்? பெரியோரைப் பொருள் எனக் கருதி நமக்கு இது வேண்டும் என்று விரும்பிக் கைக்கொள்வோம் என்னும் விசாரம், எ-று.

உ) ***பரிமேல்.***: அப்பெற்றியராய[1] பெரியாரை வழிபட்டு அவரியல்பினை யாம் கோடும் என்னும் கருத்து, மற்றைச் சிறியராயினார் மனத்தின்கண் உளதாகாது, (எ-று).

குடிமை, செல்வம், கல்வி என்று இவற்றது உண்மை மாத்திரத்தால் தம்மை வியந்திருப்பார்க்கு அவை[2] நமக்கியல்பு என்று அமைந்திருப் பாரை வழிபட்டு அஃதுடையராதல் கூடாது என்பதாம்.

1. அப்பெற்றியராய - செயற்கரிய செயல்களைச் செய்யும் வழியால் முடிவு பெறச் செய்யுந் தன்மையராகிய
2. அவை - குடிமை, செல்வம், கல்வி முதலியவை

***காரி.:*** நோக்கு - கருத்து.

ஊ) ***கவிராசர்.:*** 'பெரியவர்களை வணங்கி நடந்து அவர்களியல்பினைக் கொள்வோ' மென்கிற நினைவு சிறியவர்களுக்கு இல்லை, எ-று.

ஏ) ***பழைய2.:*** சிறியராயினார் அறிவின் இல்லை, மானம் குலம் கல்வியுடைய பெரியாரைப் பேணி அவர் சொல்லும் நன்னெறியில் நடந்து கொள்வோம் என்னும் கருத்து.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறள் 'பெருமைக்கு' ஏற்றதாமா? என்ற ஐயம் எழ ***மணக்குடவர்*** 'பெரியாரைப் பெறுதலும் பெருமையாம்' எனக் குறிப்புரைத்தனர்.

***காளிங்கர்*** 'பேணிக் கொள்ளல் -விரும்பிக்கைக் கொள்ளல்' என்றனர். இவ்வுரைகளால், 'பெரியார்க்குப் பெரியாரைப் பேணிக் கொள்ளலும் பெருமைதருஞ் செயலாம்' என்ற முடிவே அனைவராலும் கருதப் பெறுவதென்க.

ஆசிரியர், 'உறாஅமை முற்காக்கும் பெற்றியார்ப் பேணிக் கொளல்' (442) முதலான இடங்களில் 'ஏ ட்பாக்கிக் கோடல்' என்ற பொருளிலேயே ஆண்டிருப்பதால், ***மணக்குடவர்*** 'பெருமையுடையாரைப் போற்றித் துணையாகக் கொள்வோம்' என்றனர்.

***பரிமேலழகர்*** 'அவரியல்பினை யாம் கோடும்' என்பர். இது துணையாகக் கோடலின் பயனேயாயினும் நேரிய பொருளன்று. ***கவிராசர்*** முதலானோர் கருத்தும் இது.

***தேவநேயர்*** 'பெரியாரைப் பேணிக் கொள்ளாமை, அறியாமை, செருக்கு தன்னலம் இவற்றின் விளைவு. இவற்றையுடையார் சிறியார்மாட்டு பேணுவோம் கொள்வேம் என்னும் நோக்கே உண்டாகாது' என விளக்கந்தருவர்.

தன்னலனையே இழந்து வாழ்பவர் பெரியவர், பிற நலனையே கொள்ளை கொள்பவர் சிறியார், ஆதலால் சிறியார்மாட்டுப் பேணிக்கொள்வோம் என்ற எண்ணமே உண்டாகாது' என நயம் தருவர் ***வரத***.

***இராம.*** 'பெரியாரைப் பேணிக் கொள்வேம்' என்பதில், கொள்வேம்' என்பதற்குக் கருத்தழுத்தம் தந்து 'தம்மின் அறிவாற்றல்களாற் பெரியாரை யணுகி, அறியவேண்டியவற்றையறிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் கொண்டு ஒழுகுவேம்,' என்ற பொருள் உரைப்பர். இந்த சிறந்த கருத்து ***மணக்குடவர்*** உரைக்கு விளக்கம் போன்றது.

## 98.7. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
**சீரல் லவர்கண் படின். (977)**

**உரைப்பகுதி:**

அ) ***மணக்.***: செல்வமானது தனக்கு நிகரில்லாதார்மாட்டே நிற்குமாயின், நிதியை இறப்பாரிடத்தே பொருந்தின தொழிலை உடைத்தாம், எ-று.

சீரல்லவர் - பெரியரல்லவர்.

ஆ) ***பரிதி.***: இறப்பதற்கு இடமாகிய சிறப்பாகிய சிறியோர் செய்த சிறப்பும் சிறுமையல்லது பெருமையல்ல, எ-று.

இ) ***பரிப்.***: செல்வம் ஆனது தனக்கு நிகர் இல்லாத இடத்தே நிற்கும் ஆயின், நிதியை இழத்தலிலே பொருந்திய தொழிலை உடைத்து ஆம், எ-று.

சீர் அல்லவர்-பெரியவர் அல்லவர், மேல்கூறியவற்றிற்குக் காரணம் கூறிற்று.

ஈ) ***காளி.***: ஒருவர்க்குச் செல்வச் சிறப்பு உளதாயின் அதுவும் பெருமைக்குக் காரணம் அன்றே? அங்ஙனம் சிறந்த செல்வச் சிறப்பும் சீர் அல்லாதவர் மாட்டதாமாயின் மற்று அதுதானே முறையின் நீங்கிய மிகையே புரிந்த தொழிலினை உடைத்து ஆகும் அவர்க்கு, எ-று.

உ) ***பரிமேல்.***: தனக்க ஒக்கும் பெரியாரிடத்து அமைந்திருத்தலைச்[1] செய்வதாய சிறப்புதானும், தனக்கு ஒவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின், அதனை ஒழிந்து தருக்கின்கண்ணே மிக்க செயலை உடைத்தோம், (எ-று).

தருக்கினை மிகச்செய்யும் என்பதாயிற்று.[2] சிறப்புகுடிமை . செல்வம் கல்விகளினாய மிகுதி. இவை இரண்டு பாட்டானும் அஃதிலார் செய்தி கூறப்பட்டது.

ஊ) ***சுவிராசர்.***: பெரியோரிடத்திலே சேர்ந்து இருக்கத்தக்கதான சிறப்பு சிறியவர்களுக்குண்டானாலும், அவர்கள் தம் கல்வியினையும் செல்வத்தினையும் அதிகமாகப் பார்த்துக் கொண்டு இறுமாந்து இருப்பார்கள், எ-று.

எ) ***பழைய2.***: பெரியாரிடத்து இருக்குஞ் சிறப்புத்தான் சிறியாரிடத்து உண்டாகுமாயின், அவர் மிகவும் தருக்கிப் பலரிடத்தும் மிகையே தொழிலாகச் செய்வர்.

---

1. அமைந்திருத்தலை - அடங்கியிருத்தலை
2. சிறியராரிடத்து உண்டான சிறப்பு கர்வத்தை மிகச் செய்யும்

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறட்பாவின் உரைகள் அனைத்துமே தெளிவில்லன வாகவும், ஒன்றோடொன்று வேறுபட்டனவாகவும் உள்ளன.

***மணக்.***: செல்வம் தனக்குப் பொருத்தமில்லாதார் மாட்டுப் பொருந்தும் எனின், செல்வம் சாவார்மாட்டுப் பொருந்தியது போலாம் அதாவது அவனுக்கும் பிறனுக்கும் பயன்படாதது போலாம் என்பர்.

சீரல்லவர்கண் படின் இறப்பார் (பால்) இருந்த தொழிற்று ஆம்' என இயைத்துப் பொருள் கண்டனர் ஆதல் வேண்டும்.

***பரிதி.***'சிறியோர் செய்த சிறப்பு சிறுமையல்லது பெருமையல்ல; அச்சிறப்பும் இறப்பதற்கு இடமாகிய சிறப்பு; அச்சிறப்பு சிறுமையேயாம் பெருமை அல்ல' என்றனர். செய்த சிறப்பு என்ற குறிப்பால் இவர் உரை பெரியோர்க்குச் சிறியோர் சிறப்புச் செய்தனராயின் அச்சிறப்பு பெற்ற பெரியோன் சிறந்தற்காகச் செய்ததே; பெருமையைத் தருவதாகாது என்பது. சிறப்பும் பெரியோன் நன்னோக்கத்துடன் செய்தாற்றான் பெருமையாம் என்பதால் அதிகார இயைபு உடையதாகும். இத்துணை வலியப்பொருள் காண வேண்டியிருத்தலின் உரை தெளிவற்றது எனலாம்.

***காளிங்கர்*** 'செல்வச்சிறப்பும் சீரல்லாதவர்கண் படுமாயின் செருக்கு விளைவிப்பதாகும்; அல்லது கேடு விளைப்பதாகும் 'என்பர்.

***பரிமேலழகர்*** 'பெரியோரிடத்து அமைந்திருக்கும் சிறப்பு சிறியாரிடத்துப்படுமாயின் செருக்கு விளைத்துக் குற்றம் பல விளைக்கும்' என்பர். ***கவிராசர்*** உரை ***பழைய*** உரை இக்கருத்தினவேயாம்.

***தேவநேயர்*** 'பெருமையைத்தரும் செல்வம் கல்வி மதி நுட்பம் பதவி முதலியன சிறியார் கட்படின் அடக்கமின்றிச் செருக்குமிக்க செயல்களைச் செய்யும்' என்பர்.

***மு.ரா.அரு.*** 'பெருமைகளைச் சிறியார் பெற்றாரானால் 'பெருமையும் குறைபடும்; அவர்கட்குச் செருக்கையும் உண்டாக்கும்' என்பர். ***வரத.*** இக்கருத்தினர்; மேலும் 'நன்மை தரும் சிறப்புக்கள் சிறியோரிடம் அமையுமானால் அவர்கட்கு அழிவையும் பழியையும் கொடுக்கும் எனலும் ஆம்' என்பர்.

***இராம.*** 'சிறப்பும் சீரல்லவர்கட்படின் இறப்பேபுரிந்த தொழிற்று ஆம்' எனக் கூட்டி ***மு.ரா.அரு.*** குறித்தப் பொருளே காண்பர்.

*கா.சு* 'இறப்பே புரிந்த தொழிற்று ஆம்' என்பதற்கு 'அவை வரம்பு கடந்த செயல்களைச் செய்விக்குந் தன்மையுடையனவாம்' என்பர்.

இவற்றுள் ***பரிமேலழகர்*** உரை தெளிவானது.

## 98.8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
## அணியுமாம் தன்னை வியந்து. (978)

***உரைப்பகுதி:***

அ) ***மணக்.***: பெருமை எக்காலத்தும் பிறரைத் தாழ்ந்தொழுகும்; சிறுமை தன்னைப் பெருக்க நினைத்து அலங்கரிக்கும், எ-று.

இது பெருமையாவது பணிந்தொழுகுதல் என்று கூறிற்று.

ஆ) ***பரிதி.***: மரபிற்பெரியார் செல்வம் பெற்றால் எல்லாரையும் பணியும்; சிறியார் செல்வம் பெற்றால் தன்னை வியந்துரைக்கும். எ-று.

இ) ***பரிப்.***: செல்வமும் கல்வியும் தமக்கு உள்ளது ஆகும் காலத்துத் தாம் பணிந்து ஒழுகுவர் எந்நாளும் பெருமைக் குணம் உடையார்; சிறுமைக் குணம் உடையார் அவை உளது ஆ⌐ காலம் தொடங்கித் தம்மை வியந்து கொண்டு அணிவர், எ-று.

இது பணிந்து ஒழுகுதலும் பெருமை என்றது.

ஈ) ***காளி.***: உலகத்து என்றும் யாவர்க்கும் தண்ணளிகொண்டு தாழ்ந்து ஒழுகுவதாம் பெருமை; இனிச் சிறுமை தன்னைத் தானே மதித்துச் சாலத் தன் திறம் அலங்கரித்து ஒழுகும், எ-று.

உ) ***பரிமேல்.***: பெருமையுடையார் அச்சிறப்பு[1] உண்டாயஞான்றும் தருக்கின்றி அமைந்தொழுகுவர்; மற்றைச் சிறுமையுடையார் அஃது இல்லாதஞான்றும் தம்மை வியந்து புனையா நிற்பர்,(எ-று).

பொருளின் தொழில்கள் பண்பின்மேல் ஏற்றப்பட்டன[2]. இஃது 'அற்றமறைக்கும் பெருமை'[3] என்புழியும் ஒக்கும். என்றும் என்பது பின்னும்[4] வந்து இயைந்தது. ஆம் என்பன இரண்டும் அசை.

---

1. அச்சிறப்பு - குடிமை, செல்வம், கல்விகளினாய சிறப்பு
2. பெருமை, சிறுமை என்பன அதனை உடையாரை உணர்த்தினமையின் அஞ்சும், அணியும் என்ற வினைகள் அஞ்சுவர், அணிவர் என்னும் பொருளைத் தந்தன. இது உபசார வழக்கு.
3. குறள்., 980. பெருமையுடையர் என்னும் பொருளின் தொழிலாகிய மறைக்கும் என்பதைப் பெருமை என்னும் பண்பின் மேல் ஏற்றி அற்றம் மறைக்கும் பெருமை என்று கூறப்பட்டது, இதுவும் உபசார வழக்கு.
4. பின்னும் - சிறுமை என்பதனோடும்

புனைதல்-பிறரின் தமக்கோர் மிகுதியை ஏற்றிக்கோடல் இதற்கு உயர்ந்தார் தாழ்வார் தாழ்ந்தோர் உயர்வார் இஃது ஒரு விரோதம் இருந்தவாறு என் என உலகியலை வியந்து கூறிற்றாக்குவாரும் உளர்[5].

*காரி.*: ஆம்-இரண்டும் அசை. "குறைக்குமாம் கூன்கத்தி கொண்டு"[6] என்பதும் அது.

ஊ) *கவிராசர்.*: பெருமையுடையவர்கள், அச்சிறப்பு உண்டான காலத்திலேயும், இறுமாப்பில்லாமல் வணங்கி நடப்பார்கள்; சிறுமைக்குணமுடையவர், அஃது இல்லாதபோதும், தம்மைத் தாமே மகிழ்ந்துகொண்டு இருப்பர். எ-று.

ஏ) *பழைய2.*: பெருமையுடையார் சிறப்பு உண்டாகில் தருக்கின்றி யாவரையும் வணங்கி நடப்பார்; மற்றைச் சிறுமையுடையார் சிறப்புண்டாகில் தம்மைக் கொண்டாடி அலங்கரித்துக் கொள்வார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*மணக்குடவர்*, 'பெருமை தாழ்ந்தொழுகும்'; 'சிறுமை அலங்கரிக்கும்' எனப் பணிதலும் புனைதலும் பொருள்களின் தொழிலாக இருந்தும் பண்பின் மேல் ஏற்றியே *குறள்* நடையை ஒட்டிக் கூறினர்.

*பரிதியார்* 'சிறியார் பெரியர்' எனப் பண்பைப் பண்பியாகப் பொருள் கூறிப் 'பணியும் அணியும்' எனப் பலர்பால் முற்றுக் கொண்டு முடியாது என்பதை யறிந்தும் 'பெரியார் பணியும், சிறியார் அணியும்'என்று வழுப்பட உரைத்தனர்.

*காளிங்கர்* முதல் ***தேவநேயர்***, ***இராமலிங்கர்***, ***குழந்தை*** வரையுள்ளார் அனைவரும், பெருமை யுடையார், சிறுமையுடையார் எனப் பொருளின் பெயராயும், அதற்கு இயையப் பணிவர், புனைவர் எனக்கொண்டு முடிக்குஞ் சொல்லைப் பலர்பால் முற்றாகவும் ஆக்கி உரை காண்பர்.

*பரிப்பெருமாள் மணக்குடவருரைக்கு* விளக்கம் காண்பவராதலின் அவருரை சிறுமை பெருமை என்றேயிருக்கவும் பெருமைக்குணம் உடையார், சிறுமைக்குணம் உடையார் எனக் குணப்பெயராக உரைப்பர். இதற்கு இலக்கண அமைதி காணும் *பரிமேலழகர்* "பொருளின் தொழில்கள் பண்பின் மேல் ஏற்றப்பட்டன" என்றார். சிறுமை பெருமைகள் பண்பாகு பெயராய்ச் சிறியார், பெரியாரை உணர்த்துவதாகக்கொள்ளின் ஏற்றப்பட்ட உபசார வழக்காகக் கொள்ள வேண்டாமே எனின். அற்றன்று 'கருத்தின்றான் நிலம் சூடினாள்' என்ற பண்புப் பெயர்கள் தொன்று தொட்டு சுவைப்

5. யார் உரை என்று அறியக் கூடவில்லை.
6. இடம் விளங்கா மேற்கோள்

பண்பாகு பெயராயும், நிறப் பண்பாகு பெயராயும் பொருட்களை யுணர்த்தும் பண்புகொள் பெயராக நிற்றல் போல இவை நில்லாமையான் ஏற்றிக் கூறப்பெறும் உபசாரமாதலே துணியப் பெறுவதாம் என்க. பண்பியின் செயலைப் பண்பு செய்வது போலக் கூறினமையின் உபசாரமாயிற்று. இங்ஙனம் ஆகுபெயராகத் துணியக்கூடாத இடங்களிலே வரும் பொருள் மாற்றத்தை "ஏற்றிக் கூறப்பட்டது" என்பதே ***பரிமேலழகர்*** மரபு.

*ஓ) ஒப்புமைப் பகுதி:*

***பணியுமாம் என்றும் பெருமை:***

.................................. தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே - *சீவக*,53.

## ஓ) மேற்கோள் பகுதி:

***நச்சி.:*** ஆம் என்ற இடைச்சொல் அசைநிலையாய் வந்ததற்குப் 'பணியுமாம்' என்பது மேற்கொள். - தொல்.சொல்.298.

***மயிலை.*** மேற்படி - நன்., 440
***சங்கர.:*** மேற்படி - நன்., 441

***சிவஞான.:*** போல்-போலும் என்றுரைக்க. செய்யும் என்னும் முற்று தன்மையில் சொல்லாமையின் ஆம் என்பதனை உடைமையொடு கூட்டுக. 'பணியுமாம் என்றும் பெருமை' என்புழிப்போல அசைச்சொல் எனினும் அமையும். - சிவஞான.சூ., 2.ஆதி.4

## 98.9. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
## பெருமிதம் ஊர்ந்து விடல். (979)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** பெருமையாவது செருக்கின்மை; சிறுமை செருக்கினை மேற்கொண்டொழுகு மாதலான், எ-று.

'மேல் குலத்தினாலும், செல்வத்தினாலும் பெரியாரைப் பெரியார் என்று கொள்ளப்படாது' என்றார்; இனிப் பெருமை இலக்கணம் கூறுவார், முற்படச் செருக்கின்மை பெருமை என்று கூறினார்:

***ஆ) பரிதி.:*** எல்லாரிடத்தும் தாழ்ச்சியான சொல் பெருமை கொடுக்கும்; பெருமையான சொல் சிறுமை கொடுக்கும், எ-று.

***இ) பரிப்.***: பெருமையாவது செருக்கு இன்மை: சிறுமை செருக்கினை மேல் கொண்டு ஒழுகும் ஆதலான், எ-று.

மேல்குலத்தினாலும் செல்வத்தினாலும் பெரியாரைப் பெரியார் என்று கொள்ளப்படாது என்றார்: இனிப் பெருமை இலக்கணம் கூறுவார் முற்படச் செருக்கு இல்லாமையே பெருமை என்று கூறினார்.

***ஈ) காளி.***: 'ஊர்ந்து விடும்' பாடம்.

பெரியோர்க்குத் தம் பெருமையாவது தம் குறிப்பான் ஒரு பெருந்தன்மை பாவியாமை: மற்றுச் சிறுமையாவது தம் சிறுமைக்குப் பெரிதும் கூசி மற்று அது இறைத்தற்காகப் பிற பெருந்தன்மை மேல் கொண்டு விடும்.

எனவே பெரியோர் பெருமையைத் தம்மேல் ஏறட்டுக் கொண்டு[1] தாமும் பெரியோராகப் பாவித்து நடப்பர்; ஒரு பயன் இல்லை; ஆயினும், என்னை பாபம், எ-று.

***உ) பரிமேல்.***: பெருமைக்குணமாவது காரணம் உண்டாயவழியும் அஃது[2] இயல்பாதல் நோக்கித் தருக்கின்றி இருத்தல்; சிறுமைக்குணமாவது அஃது இல்வழியும் அதனை[3] ஏற்றிக் கொண்டு தருக்கின் முடிவின்கண்ணே நின்றுவிடுதல்,(எ-று).

அளவறத் தருக்குதல் என்பதாயிற்று[4] விடும் என்று பாடம் ஓதுவாரும் உளர்[5] முற்றுத் தொடரும் எழுவாய்த் தொடரும் தம்முள் இயையாமையின் அது பாடமன்மை உணர்க.[6]

***ஊ) கவிராசர்:*** பெருமைக்குணமாவது செல்வம் உண்டானாலும், வறுமைவந்தாலும், இது முன்செய்த வினை என்று மகிழாமல் இருக்கிறது; சிறுமைக்குணமாவது செல்வம் இல்லாத போதும் செல்வம் உள்ளவனாகத் தன்னைத் தானே மதித்துக் கொண்டிருக்கிறது,எ-று.

***ஏ) பழைய2.***: பெருமைக்குணமாவது தருக்கின்றி யாவரையும் வணங்கி வழிபடுதல்; சிறுமைக் குணமாவது தருக்கித் தன் பெருமை காட்டி நடந்து விடல்.

---

1. ஏறட்டுக் கொண்டு - மேற்போட்டுக் கொண்டு
2. அஃது - பெருமை
3. அதனை - பெருமையை
4. அளவறத் தருக்குதலாவது செருக்கின் எல்லையிலே நின்றுவிடுதல். அதாவது அதற்கு மேலாகக் கர்வங் கொள்ள முடியாது என்பது.
5. காளிங்கர் இவ்வாறு பாடங் கொள்வர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்குடவர்*** 'சிறுமை பெருமிதம் ஊர்ந்துவிடல் ஆதலால் பெருமை பெருமிதம் இன்மை' எனச் சிறுமையின் இயல்பினை எடுத்துக்காட்டிப் பெருமையின் இலக்கண கூறுவார் பெருமிதமின்மை ஏதுவாக்கியமாகக் கொண்டனர்.

***காளிங்கர்*** 'சிறுமை தம் சிறுமைக்குக் கூசித் தனக்கு இல்லாததும் பிறருக்கு உரியதுமான பெருமையைத் தம்மேல் ஏறட்டுக் கொண்டு பெரியோராகப் பாவித்தல்' என்பர்.

இவற்றுள் ***பரிமேலழகர்*** உரையும், அவா வழிவநத பிற உரைகளும் சிறப்பு உடையன.

***இராம.*** 'ஊர்ந்துவிடல்' என்பதற்கு 'அகங்காரமே நடத்தித் தீர்ப்பது என' உலக வழக்குரை காட்டுவர்.

பெருமிதம் என்னும் சுவையும் அதன் வழிப்பிறக்கும் மெய்ப்பாடும் கல்வி முதலிய நான்கன் நிலைக்களனாகத் தோன்றுவன. அவை தான் தாழாமைக்குக் காரணமான அடக்கத்திற்கு அடித்தள மாகும் போது பெருமை எனப்படும். அங்ஙனமன்றி என்னோடொப்பார் யார்? என்ற செருக்காம்போது சிறுமையாம். இவ்வேறுபாடு கண்டு பெருமிதத்திற்கும் பொருள்கோடல் வேண்டும் என்பார் 'பெருமை பெருமிதம் இன்மை' என்றார். பெருமிதம் என்பதைச் சொல்லளவிற் கொண்டு இக்குறட்குப் பொருள் காணல் ஆகாது.

## ஒ) ஒப்புமைப் பகுதி:

### *பெருமை பெருமிதம் இன்மை:*

பெருமையோ ராயினும் பெருமை பேசலார். - கம்ப.,4019

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப - தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு.

-நீதிநெறி.,17

### *சிறுமை பெருமிதம் ஊர்ந்துவிடல்:*

சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிட - முதுமொழிக்.2-6

## 98.10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறி விடும். (980)

*உரைப்பகுதி:*

***அ) மணக்.***: பெருமை பிறருடைய குறையை மறைத்துச் சொல்லும்; சிறுமை அவர்க்குள்ள நன்மை சொல்லுதலைத் தவிர்த்துக் குற்றத்தையே சொல்லி விடும், எ-று.

இது குற்றம் கூறாமை பெருமை என்று கூறிற்று.

***ஆ) பரிதி.***: பெரியரானோர் சிறியோர் செய்த குற்றத்தை மறைப்பர். சிறியோர் பலர் செய்த குற்றத்தைத் தூற்றுவர், எ-று.

***இ) பரிப்.***: பிறருடைய குறையை மறைத்துச் சொல்லும் பெருமை: சிறுமை அவர்க்குள்ள நன்மையைச் சொல்லுத்லைத் தவிர்த்து குற்றத்தையே சொல்லிவிடும், எ-று.

எனவே புறம் கூறாமை பெருமை என்று கூறப்பட்டது.

***ஈ) காளி.***: 'குற்றமாகக் கொண்டு விடும்' பாடம்.

சிறுமையானது என்றும் தான் செய்யும் நெறி அற்றங்களை அடக்கிக் கொண்டு ஒழுகும்; மற்றும் பெருமையானது தான் அதனைக் குற்றமாகக் கொண்டு விடும். எனவே அதனை ஒருபொழுதும் தன்கண் அடக்க நிலை இல்லை என்பது பொருளாயிற்று, எ-று.

இவ்வாறு அன்றி,

"அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்."

என்பது பாடமாயின், தன்கண் ஓர் நெறி அற்றமாகிய குற்றம் வந்து உளதாம் ஆயின் அதனை அப்பொழுதே மாய்த்து விடும் பெருமையானது; மற்று இனிச் சிறுமைதான் தன் நட்பின் இனிய கிளையாகக் கொண்டு ஒழுகும், எ-று.

இன்னும் பிறவாறு பாடம் ஓதுவாரும் உளரெனின் அதற்கு ஏற்குமாறு அறிந்து உரைக்க.

***உ) பரிமேல்:*** பெருமை உடையார் பிறர் மானத்தையே கூறி அவமானத்தை மறையா நிற்பர்; மற்றைச் சிறுமையுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர், (எ-று).

மறைத்தலும் கூறலும் ஏனையிடத்தும் இயைந்தன.[1] அற்றம் - ஆகுபெயர்.[2] தான் என்பது அசை, இவை மூன்று பாட்டானும் இருவர்[3] செயலும் ஒருங்கு கூறப்பட்டன.

***ஊ) கவிராசர்:*** பெருமைக்குணமுடையார் பிறர் குற்றத்தை மறைத்துக் குணத்தையே சொல்லுவர்: சிறுமைக் குணமுடையவர் பிறர்குணங்களை மறைத்துக் குற்றத்தையே சொல்லுவர், எ-று.

***ஏ) பழைய2:*** பெருமையுடையர் பிறர் நன்மையைப் பாராட்டிக் குற்றத்தை மறைப்பர்; மற்றைச் சிறுமையுடையார் பிறர் நன்மையை விலக்கிக் குற்றமே கூறிவிடுவர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***காளிங்கர்,*** 'அற்றம் - சோர்வு' என்பர்; ***மணக்.*** 'குற்றம்' என்பர். ***பரிமேல்.*** 'அவமானம்' என்பர். இவை மூன்று பொருளும் முறையே காரண காரியத் தொடர்பாய் வளர்ந்தனவே என்பதை எண்ணித் துணியலாம். அதனாலேயே ***பரிமேலழகர்*** 'அற்றம்-ஆகுபெயர்' என்றார்.

***காளிங்கர்,*** 'சிறியோர் தாம் செய்த குற்றத்தைப் பிறர் அறியாதவாறு அடக்கிக் கொண்டு ஒழுகுவர். பெருமையுடையார் தாம் சோர்வால் செய்த குற்றங்களையும் குற்றமாகவே கொண்டுவிட்டுத் திருந்தி ஒழுகுவர் 'என்பர். இவ்வுரை முன்னோர் பின்னோர் போக்கி லிருந்து வேறுபட்ட கருத்தினது.

இவர் கண்ட பாடம் 'குற்றமாக் கொண்டு விடும்' என்பது இவர் கூறும் வேறொரு பாடம், 'சிறுமைதான் சுற்றமாச் சூழ்ந்து விடும்' என்பது. இதன் உரை 'சிறுமைதான் தன் நட்பின் கிளையாகக் கொண்டு ஒழுகும்' என்பது.

***மணக்குடவரும், பரிமேலழகரும், பரிப்பெருமாளும்*** கண்ட பாடம் 'குற்றமாக் கூறிவிடும்' என்பது. ***மணக்குடவர்*** 'பிறருடைய நன்மைகளை மறைத்தும் குற்றங்களையே சொல்லிவிடும்' என்பர். ***பரிமேலழகர்*** முதலானோரும் அங்ஙனமே, இவற்றுள் ***காளிங்கர்*** கண்ட உரை நீங்க ஏனைய முடிபில் ஒத்தனவே.

இக்***குறட்கும்*** பாட வேறுபாடுகள் பலப்பல இருந்தன என்றும், அவற்றால் உரைப்போக்குச் சிறிதுமாறினும் கருத்தால் மாறின்று என்பதும் ***காளிங்கர்*** உரையால் தெரிகிறது. அதனாலே ***காளிங்கர்***

1. மறைத்தல் என்பது சிறுமை என்பதனோடும் கூறல் என்பது பெருமை என்பதனோடும் நின்றன. சிறுமை மறைத்துக் கூறிவிடும், பெருமை கூறி மறைக்கும் என்று இயைக்க.
2. அற்றத்தால் (சோர்வால்) உண்டாகும் அவமானத்தை அற்றம் என்றது கருவியாகு பெயர்.
3. இருவர் - பெருமையுடையார், சிறுமையுடையார்.

இவற்றின் வேறான ஓர் உரையை ஊன்றிப் பார்த்துக் கண்டிருக்கிறார் எனத் துணியலாம். அதற்கு ஏற்ப அவர்கொண்ட பாடம் இவ்வதிகாரத்து 8,9ம் குறளிற் கூறிய முறையை மாற்றி 'அற்றம் மறைக்கும் சிறுமை; பெருமை தான் குற்றமே கூறிவிடும்' என்பது சிறியாரியல்பு தான் செய்த குற்றத்தையே மறைத்தலும் பெரியோரியல்பு தான் செய்த குற்றத்தைத் தாமே கூறுதலுமாம் என்பது முற்கூறிய பலர் கருத்தின் வேறாதல் காண்க.

பெரியோராயினும் சிறியோராயினும் அவர்கட்கு முக்குண வசத்தான் முறை கெடுதல் இயல்பாகவும், அவற்றைத் திருத்தும் வன்மை பெருமை சிறுமைகளாலேயே யாதலின் இவ்வதிகாரத்து ஒருவற்குளதாகும் நன்மைகள் யாவும் பெருமையால் ஆவன என்றும், தீமைகள் யாவும் சிறுமையால் ஆவன என்றும் தோன்ற பெருமை சிறுமைகளை வினைமுதலாக்கிக் கூறும் ***வள்ளுவர்*** உள்ளம் சிந்தித்தற்குரியது.

## ஓ) ஒப்புமைப் பகுதி:

***அற்றம் மறைக்கும் பெருமை:***

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு - குறள்., 984

***அற்றம் மறைக்கும்:***

அற்றம் மறைத்தல் - குறள்., 846

***முற்றும் :***

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்த திங்கெண்ணி யிருத்தல் -சிறுபஞ்ச.,15

....................... நங்கள் போல்வார்
அற்றங்கள் காப்பா ரறிவிற் பெரியார் கள்ன்றே - சூளா.,3

பெருமை யென்பதி தென்பிழை பேணல்விட்
டொருமை நோக்கி யொருவற் குதவலோ. - கம்ப.,4131

கோத்த மேகலையி னோடுத் துகின்மணிக் குறங்கைக் கடக்
காத்தன கந்தற் கற்றை யற்றமத் தன்மை கண்டு
வேத்தவை கீழு ளோர்கள் கீழ்மையே விளைத்தார்மேலோர்
சீர்த்தவர் செய்யத் தக்க கருமமே செய்தா ரென்ன. - கம்ப.,8960

மூரிநர சிங்க முனையரையர் மாதவருள்
சீரியதூர்த் தற்கிரட்டி செய்தாராம் - பூரியினை. - திருத்.,56.

# 98. பெருமை

| | ஒளியொருவற் | பிறப்பொக்கும் | மேலிருந்தும் | ஒருமை | பெருமையுடையவர் | சிறியார் | இறப்பே | பணியுமாம் | பெருமை பெருமிதம் | அற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக் | 7 | 1 | 2 | 8 | 10 | 9 | 3 | 5 | 4 | 6 |
| பரிதி. | 9 | 10 | 3 | 7 | 2 | 4 | 5 | 1 | 8 | 6 |
| பரிப். | 9 | 2 | 5 | 10 | 8 | 7 | 4 | 1 | 6 | 3 |
| காளி. | 9 | 2 | 5 | 10 | 8 | 7 | 4 | 1 | 6 | 3 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

98-வது அதிகாரம் 'பெருமை' முற்றிற்று.

*******

# 99. சான்றாண்மை

## அதிகாரப்பொருள்:

*அ) மணக்.*: சான்றாண்மையாவது நற்குணங்கள் பலவற்றாலும் அமைந்தார் இலக்கணம் கூறுதல். இது பெரும்பான்மையும் அறத்தினால் தலையளி[1] செய்தொழுகுவாரை நோக்கிற்று.

*ஆ) பரிதி.*: சான்றாண்மையாவது குலவொழுக்க நெறியிலே நிற்க வேண்டும்.

*இ) பரிப்.*: சான்றாண்மையாவது நற்குணங்கள் பலவற்றாலும் அமைந்தார் இலக்கணம் கூறுதல். இது பெரும்பான்மையும் அறத்தினால் தலையளிசெய்து ஒழுகுவாரை நோக்கிற்று.

*உ) பரிமேல்.*: அஃதாவது பலகுணங்களாலும் நிறைந்து அவற்றை ஆடல்தன்மை. பலகுணங்களாலும் என்பது சாலுதல்[2] தொழிலால் பெறப்படுதலின், அவற்றை என்பது வருவிக்கப்பட்டது. பெருமையுள் அடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக் கொண்டு நின்றலின் இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

*ஊ) கவிராசர்:* அஃதாவது பெருமையுள் அடங்காத பல குணங்களாலும் நிறைந்து அவற்றை ஆளுந் தன்மை.

*எ) பழைய2.*: அஃதாவது, நன்மையென்று சொல்லப்பட்ட பல குணங்களையும் ஆளுதல். 'சால்பு நிறைவு சால்பு மாட்சிமை சான்றாண்மை' என்பதனாலறிக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*மணக்.*: 'பல நற் குணங்களாலும் அமைந்தாரது இலக்கணம் கூறுதல்' என்ற உரையமைதி சான்றோரது இலக்கணம் என அவ்விலக்கணம் கூறுதற்குப் பெயராயினமை உணர்த்துகிறது. சான்றோரது ஆளுமை-சான்றாண்மை எனக்கருதியிருப்பர் போலும்.

1. தலையளி - கருணை
2. சாலுதல் - நிறைதல்

*பரிதி.* கூறும் 'குலவொழுக்க நெறியிலே நிற்றல்' என்பது குலங்களுக்கென்று தனித்தனி ஒழுக்கநெறிகள் உரைக்கப் பட்டுள்ளனவா? அங்ஙனம் உரைக்கும் தமிழ் நூல்கள் யாவை? குலனும் குடியும் ஒன்றென்கின்றன ***பிங்கலந்தை*** முதலிய நிகண்டுகள். குலமும் குடிமையும் என வேறாகச் சொல்கிறது ***நான்மணிக் கடிகை***(82). 'குடி-நிலவுலகில் பழைமையும் தறுகண்மையும் உட்கொண்டு பிறர் அறியவாழும் உயர்வுடையது' எனப் ***புறப்பொருள் வெண்பாமாலை*** குடியின் இலக்கணம் கூறுகிறது (பு.வெ.35). குலம் - பல குடிகளின் தொகுதி. ஆகையால் 'குலவொழுக்க நெறி' யென்றனர் போலும்.

***பரிமேலழகர்*** 'சான்று + ஆண்மை' எனப் பிரித்து, 'சான்று (பல குணங்களாலும்) நிறைந்து, அவற்றையாளுதற்றன்மை' என்றனர். சான்று-செய்து என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். இவரை ஒட்டித் ***தேவநேயரும், மு.ரா.அரு.***வும் ஏனோரும் கூறுவர்.

***மணக்குடவர்*** முதலாயினார் ஒரு சொல்லாகக் கருத்துப் பொருள் தந்தனர். ***பரிமேலழகர்*** முதலானோர் இருசொற்றொடராகக் கொண்டு பொருள் கண்டனர்.

***வரத.*** விளக்கம் சான்றாண்மைக்கு இயைபிலதாயினும் 'சான்றாண்மையையுடையோர் சான்றோர் அவர்களின் தன்மை சான்றாண்மை'என்பது ஓரளவு இயைபுடையதாகிறது.

***குழந்தை*** 'சால்பு-நிறைவு; சால்பையாளுதல் சான்றாண்மை' யெனக்கூறுவர். 'அன்பு முதல் ஐந்தும் சால்பு ஊன்றிய தூண்' என்ற ஆசிரியர் அவற்றைத் தனித்தனி அன்புடைமை முதலிய அதிகாரங்களாற் கூறியிருக்கவும் அவையனைத்தும் ஒருங்கிணைந்தாய சால்பினை ஆளுந்தன்மை இதனாற் கூறுவது. ஒன்றையாளுதல் மற்றொன்றற்குத் தடையாதலும் கூடுமன்றே. அங்ஙனமன்றி ஐந்தனையும் ஆள வேண்டியதன் இன்றிமையாமை இவ்வதிகாரத்தால் வலியுறுத்தப் பெறுதல் காண்க.

### 99.1. கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
### சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. (981)

***உரைப்பகுதி:***

அ) ***மணக்.***: நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சான்றாண்மை மேற்கொண்டொழுகுவார்க்கு, நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்கும் என்று சொல்லுவர் நூலோர், எ-று.

ஆ) ***பரிதி.***: பூலோகத்திலே வழங்குகின்ற நன்மையெல்லாம் உண்மையறிந்த நன்மையோர் செய்த ஒழுக்கம். எ-று.

இ) *பரிப்.*: உலகு இயற்கை அறிந்து சான்றாண்மையை மேலிட்டுக் கொள்ளும் அவர்களுக்கு நல்லவாயின் எல்லாம் இயல்பு என்று சொல்லுவர் அறிவோர், எ-று.

இது மேற்[1]கூறியவாறே அன்றி நற்குணங்கள் எல்லாம் வேண்டும் என்றது.

ஈ) *காளி.*: நமக்குக் கடன் இஃது என்று இருந்து சான்றாண்மையைக் கை விடாது தம்மாட்டுக் கைக்கொண்டு ஒழுகுமவர் யாவர்? மற்று அவர்க்கு இச்சான்றாண்மை அடியாக மற்றும் இது போலும் நல்லவை எல்லாம் கைக்கொண்டு ஒழுகுதல் கடன் என்று சொல்லுப யாவரும், எ-று.

உ) *பரிமேல்.*: நமக்குத் தகுவது இது என்று அறிந்து சான்றாண்மையை மேற்கொண்டு ஒழுகுவார்க்கு, நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்கும் என்று சொல்வர் நூலோர், (எ.று).

சில குணங்கள் இலவாயவழியும் உள்ளன செய்து கொண்டனவாயவழியும் சான்றாண்மை என்னும் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப் பெயர் பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவர் என்பதாம்[2].

ஊ) *கவிராசர்.*: 'நமக்குத் தக்கது இது,' என்று அறிந்து நல்ல குணங் களுடனே கூடி இருக்கிறவர்களுக்கு, எல்லா நற்குணங்களு மியல்பாயிருக்கும், எ-று.

எ) *பழைய2.*: நமக்குத் தகுவன இவையென்று அறிந்து சான்றாண் மையை மேற்கொண்டு ஒழுகுவார்க்கு நல்லனவாய குணங்கள் எல்லாம் இயல்பாய் இருக்கும் என்று சொல்லுவர் நூலோர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்குடவர்*** 'சான்றாண்மையைக் கைக்கொண்டு ஒழுகு வார்க்கு நல்ல குணங்கள் யாவும் இயல்பாயிருக்கும்' என்றனர். இதன் கருத்து 'சான்றோர்க்கு நல்ல குணங்களனைத்தும் இயல்பானவை. எனவே விட்டு நீங்காதன' என்பது.

***பரிதியார்*** 'உலகத்தில் உள்ள நன்மையனைத்தும் சான்றாண்மையாளர் செய்த ஒழுக்கம்' என்பர். இதில் சொற்பொருளோ

1. மேல்கூறிய இன்மையொருவர்க் கிளிவன்று - என்னுங் குறளில் (988)

2. நற்குணங்களில் சில இல்லாதிருந்த போதும் (அதாவது) பெரும்பான்மை யாயிருத்தலான் ஒருவன் சான்றாண்மையுடையனாகான், இஃதறிந்து பிறர் சார்பால் நற்குணங்களால் நிரம்பியவனும் சான்றோராகலான் இயல்பாகவே நற்குணங்களால் நிறைந்திருப்பவனே சான்றாண்மை என்பார் சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு 'நல்லவையெல்லாம் கடன் என்ப' என்றார்.

அல்லது கருத்தறிவிக்கும் பிண்டப்பொழிப்போ இல்லை. ஆதலால் அமைவுடைத்தன்று.

***காளிங்கர்*** 'சான்றாண்மையைத் தங் கடன் என்று கைக்கொண்டு ஒழுகுவார்க்கு இது போன்ற நன்மைகள் பல இவற்றின் அடியாகக் கிடைக்கும்' என்பர். சான்றாண்மையே நல்லன; இவற்றின் அடியாகப் பலநன்மைகள் இவர்கட்கு உண்டாகும் என்பது. ***பரிமேலழகர், கவிராசர்*** முதலானோர் ***மணக்குடவரை*** ஒட்டி உரைப்பர்.

***வரத.*** 'கடன் அறிந்து சான்றாண்மை மேற்கொள்பவர்கள் நல்ல செயல்கள் எல்லாவற்றையும் இயல்பாகச் செய்வார்கள்' என்பர். கடன் நாம் பலர்பால் பெற்ற பொருள் இன்பம் அனைத்தையும் அதேயுணர்வோடு பிறர்க்குஞ் செய்து வாழவேண்டும் என்ற ஒழுக்கத்தை மேற்கொள்வது என்பர். உரையில் 'கடமையாக' என்று உரைகண்டவர் விளக்கத்தில் கடனாக என்று உரை கண்டு அதன் தரத்தைக் குறைத்துவிட்டார் எனலாம்.

***இராம.*** கட்டாயமாகச் செய்ய வேண்டும், என்பர். இது கடமையுணர்ச்சியை உணர்த்துவது. கடனுக்காகச் செய்தற்கும் கடமைக்காகச் செய்வதற்கும் வேறுபாடுகண்டு அதனைக்கோடல் கடமையாகும்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***சான்றாண்மை:***

..... ..... தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி ..... ...... - கம்ப.,4165

## 99.2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
## எந்நலத் துள்ளதூஉம் அன்று. (982)

### உரைப்பகுதி:

அ) ***மணக்.:*** சான்றோர்க்கு நலமாவது குணநல்லராகுதல்; குணநலம், பிற நலமாகிய எல்லா நலத்தினும் உள்ளதொரு நலமன்று, எ-று.

இது குணநலம் சால்பிற்கு அழகு என்றது.

ஆ) ***பரிதி.:*** குணநலம் சான்றோர்க்குப் பொறுமை; பிறநலம் கல்வி, ஞானம், பெருமை எல்லாம் ஒன்றாகச் சொல்லப்படாது, எ-று.

இ) *பரிப்.*: சான்றோர்க்கு நலம் ஆவது குணம் நல்லார் ஆகுதல்; அக் குண நலம் பிற நலம் ஆகிய எல்லா நலத்தினும் உள்ளது ஒரு நலம் அன்று, எ-று.

இது குண நலம் சால்பிற்கு அழகு என்றது.

ஈ) *காளி.*: சான்றோர் நலம் யாதோ எனின், தமது உள்ளத்து அமைவு உடையார் என்னும் இந்நலமே. ஆதலால், இவ்வமைவுதான் வேறு யாவை? சில நன்மையினும் உள்ளது ஒன்று அன்று; எனவே எல்லா நன்மையினும் இவர்க்குச் சிறந்தது அதுவே என்பது பொருள். எ-று.

குணம் என்பது உள்ளத்து அமைவுடைமை.

உ) *பரிமேல்.*: சான்றோர் நலமாவதுகுணங்களானாய நலமே; அஃதொழிந்த உறுப்புக்களானாய[1] நலம் ஒரு நலத்தினும் உள்ளதன்று, (எ-று).

அகநலத்தை முன்னே பிரித்தமையின்[2] ஏனைப் புறநலத்தைப் பிறநலம்' என்றும், அது[3] குடிப்பிறப்பும் கல்வியும் முதலாக நூலோரெடுத்த நலங்களுள் புகுதாமையின் 'எந்நலத்துள்ளதூஉம் அன்று' என்றும் கூறினார். இவை இரண்டு பாட்டாலும் சால்பிற்கு[4] ஏற்ற குணங்கள் பொது வகையான் கூறப்பட்டன.

ஊ) *கவிராசர்.*: சான்றோர் நலமாவது குணங்களாலாகிய நலமே. இதல்லாமல் அவயவங்கள் நலமுஞ் செல்வநலமும் நலமல்ல, எ-று.

ஏ) *பழைய2.*: சான்றோர் மனமாவது குணங்களினால் ஆய நலமே; அஃது ஒழிந்த பிறவுறுப்புக்களினாய நலம் ஒரு நலத்தினும் உள்ளதன்று.

அவயவ நலமும் செல்வநலமும் உண்டாயிருந்து குணநலமில்லாவிட்டால், ஒரு பிரோயசனமு இல்லை, (எ.ம்).

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'குணநலம் பிற நலங்கள் எவற்றினுள்ளும் உள்ளதொன்றன்று; தனித்தது' என்னுங் கருத்தினது ***மணக்குடவர்*** உரை.

***பரிதி***, 'குணநலம்-பொறுமை; இதனைப் பிற நலங்களாகிய கல்வி, ஞானம் பெருமை எல்லாவற்றுள்ளும் ஒன்றாகச் சொல்லப்படாது, எனவே தனிச்சிறப்புடையது 'என்பது கருத்தாகிறது.

குணநலம்-உள்ளத்து அமைவு; பொறுமை என்பது தானே

1. உறுப்புக்கள் - குடிப்பிறப்பு, கல்வி, கேள்வி, செல்வம்
2. பிரித்தமையின் - குணநலமே சிறந்தது என்று பிரித்துக் கூறினமையின் ஏகாரம் பிரிநிலை.
3. **அது** - அகநலம்.
4. சால்பிற்கு - நிறைவிற்கு

இதன் போந்த பொருள். இங்ஙனம் கூறுபவர் ***காளிங்கர்.*** மற்றும் இந்நலம் சில நன்மைகளுள் உள்ள ஒன்றன்று; சிறந்தது. இதுவும் முன்கூறிய கருத்தினதேயாதலைக் காணலாம்.

***பரிமேலழகர்,*** 'சான்றோர் நலம் குணநலமே; குணநல மல்லாத உறுப்பழகின் நலங்களில் ஒன்றன்று. இது குணநலமாகிய அக அழகே அழகு; உறுப்பழகு நலமன்று' என்ற கருத்தினது. இப்பகுதிக்கு உரை தந்த ***கவிராசர்*** உறுப்பழகுகளுடன் செல்வ நலமும் உடன் கூறுவர். ***பழைய உரையும் பரிமேலழகரை*** ஒட்டியே செல்கிறது.

***இராம.*** 'பிறநலம்-குணநலம் அல்லாத மற்ற எச்செல்வ நலத்தையும் ' என்பர்.

***வரத.*** 'குணநலமே சான்றோர் விரும்பும் நலம். பிறநலம்-ஏனைய உடலுறுப்புகளை வளர்க்கும் பிற நலன்கள் அனைத்தும்' என்பர்.

***மு.ரா.அரு.*** 'உறுப்புக்களாலாகிய நலம், குடிப்பிறப்பு, கல்வி, ஞானம் முதலான எவ்வகை நலங்களிற்சேர்ந்ததில்லை' என்பர். இவர் கருத்து சான்றோர் நலன் குண நலனே; பிற நலம் எவ்வகைத்தான நலமுமன்று என்பது. ஏனைய பிற்கால உரைகளில் மாற்றமின்று.

இவற்றுள், ***'குணநலம்'*** என்பதற்குப் பொருள் காண்பதிலும், ***'பிறநலம்'*** என்பதை விளக்கும் முறையிலும், மாற்றம் இருப்பதைக் காணலாம்.

***பரிமேலழகர்,*** 'அந்நலம் குணநலமே. நூலோர் ஓதிய அகநலங்கள் குடிப்பிறப்பு, கல்வி, முதலியன; அவற்றுள் குணநலம் அடங்காது; பிறநலம் உடலழகு. ஆகவே குணநலம் அகநலமாகிய கல்வி முதலியவற்றின் ஒன்றன்று; உடல் உறுப்பு நலம் அன்று' என்பர். குணநலம் ஒழிந்த அகநலத்திலும், உறுப்புநலனிலும் வேறானது; தனித்தது என்பது கருத்து. ***பரிமேலழகர்*** ஒழித்த ஏனையோர் 'அக அழகு குணநலம்; அது புறநலங்களில் அடங்காது' என்ற முடிபினர். ***பரிமேலழகர்*** 'அக அழகு வகையிலும், புற அழகுவகையிலும் அடங்காதது குண நலம்' என்பர். இவ்வேறுபாடு உணர்தற்குரியது.

## 99.3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
## ஐந்துசால் பூன்றிய தூண். (983)

***உரைப்பகுதி:***

அ) ***மணக்.:*** அன்புடைமையும், பழிநாணுதலும், ஒப்புரவுடைமையும், கண்ணோட்டமும், மெய்யுரையும் என்று சொல்லப்பட்ட ஐந்தும் சால்பினைத் தாங்கும் தூண், எ-று.

இஃது இவை ஐந்தும் சால்பிற்கு அங்கம் என்றது.

ஆ) *பரிதி.*: அன்புடைமை, நாணுடைமை, ஒப்புரவு, கண்ணோட்டம் சத்திய வாய்மை இந்த ஐந்து காரியமும் திண்மையான குற்றத்தைத் தாங்கிய தூண்,எ.று.

இ) *பரிப்.*: அன்பு உடைமையும், பழி நாணுதலும், ஒப்புரவு உடைமையும், கண்ணோட்டமும், மெய்யுரையும் என்று சொல்லப்பட்ட ஐந்தும் சால்பினைத் தாங்கும் தூண், எ-று.

இவை ஐந்தும் சால்பிற்கு அங்கம் என்றது.

ஈ) *காளி.*: அன்பு முதலாக வாய்மையோடு எடுத்து எண்ணித் தொகுத்த ஐந்தும் சான்றோரது சால்பு தளராமல் ஊன்றி நிற்கின்ற தூண்; எனவே ஒருவர் சால்பின் நன்மையாவது இவையனைத்தும் இனிது ஒழுக என்பது பொருளாயிற்று, எ-று.

இனி ''ற்று இக்குணம் உடையயோர்க்கே மக்கட் பண்பு ஆகிய மரபு உள்ளது பிறர் மக்கள் உருவினரேனும் மக்கட் பண்பு ஏதும் இலார் என்று இங்ஙனம் இம்மரபு தெரிந்து உணர்த்தல் வேண்டி மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்[1]

உ) *பரிமேல்:* சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர்மேலும் உளதாய அன்பும், பழி பாவங்களின் நாணலும், யாவர்மாட்டும் ஒப்புரவு செய்தலும், பழையார்மேல் கண்ணோடலும், எவ்விடத்தும் மெய்ம்மை கூறலும் எனச் சால்பு என்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து, எ-று.

எண்ணொடு முன்னவற்றோடும் கூடிற்று[2] இக்குணங்கள்[3] இல்வழிச் சால்பு நிலை பெறாமையின், இவற்றைத் 'தூண் என்று கூறினார். ஏகதேசவுருவகம்[4].

*காரி.*: எண்ணொடு முன்னவற்றோடும் கூட்டுக.

---

1. இதனை 10-வது குறளாகக் கொண்டுள்ளமையால் இவ்வாறு எழுதுவர். மேலையதிகாரம் - பண்புடைமை என்னும் அதிகாரம்.
2. 'என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி ஒன்றும் வழியுடைய எண்ணினுட் பிரிந்தே' என்பது விதியாதலின் 'வாய்மை'யொடு என்பதன்கண் உள்ள எண்ணுப் பொருளில் வந்த 'ஒடு' என்னும் இடைச்சொல் பிரிந்து அன்பொடு, நாணொடு, ஒப்புரவொடு, கண்ணோட்டமொடு என இணைந்து நிற்கின்றது.
3. இக்குணங்கள் - அன்பு முதல் வாய்மை ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும்.
4. அன்பு முதலிய குணங்களைத் தூணாக உருவகஞ் செய்தவர் அதற்கேற்பச் சால்பினைச் சுமை (பாரம்) என்று உருவகஞ் செய்யாமையின் இக்குறள் ஏகதேச உருவகமாயிற்று.

ஊ) *கவிராசர்:* எல்லாரிடத்திலேயும் தயையாயிருக்கிறதும், பழி பாவங்களுக்கு பயப்படுகிறதும், எல்லாருக்கும் உபகாரம் பண்ணுகிறதும், பழையவர்கள்மேலே சினேகம் விடாமல் இருக்கிறதும், எப்பொழுதும் மெய்சொல்லுகிறதும் இந்த ஐந்தும் சால்பு என்கிற பாரத்தைத் தாங்குகிற தூண்களாம், எ-று.

இந்த ஐந்து குணங்களும் இல்லாதவர் சான்றோரென்னப் படார், (எ-று)

எ) *பழைய2.:* சுற்றத்தார்மேல் அன்றிப் பிறர்மேல் அன்பும் நாணமும் ஒப்புரவும் கண்ணோட்டமும் பொய் சொல்லாமையும் எனச் சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*அறத்துப்பாலில் பரிமேலழகர்* 'அன்பிற்குக் கூறிய தொடர்புடையார்கண் காதலுடையனாதல்' என்ற குறிப்பும், 'அருளுக்குத் தொடர்பு பற்றாது இயல்பாக எல்லார் மேலுஞ் செல்வதாகிய கருணை' என்ற குறிப்பும்,ஈண்டு 'அன்பு சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர் மேலும் உளதாய அன்பு' என்ற குறிப்பும் எண்ணி ஆய்தற்கு உரியன, அரசின் அறம் உரைப்பதாகலின் அரசன் இல்லறத்தானாகக் கருதப்படுதலின் அவன் சுற்றத்தார் மேலன்றிப் பிறர்மேலும் அன்பு செலுத்துவனாயின் அது அன்பாகக் கருதப்படுமே யன்றி அருளாகக் கருதப்படாது; அருள் துறந்தார் மேலது ஆகலின் எனவும் அமைதி காணலாம்.

'அன்பு முதலலைந்து காரியமும் திண்மையான குற்றத்தைத் தாங்கிய தூண்' எனச் சால்பினைக் குற்றமாகக் கூறியது பெரும் பிழையாதல் காண்க. ஐந்து குணங்களையும் தூண் என உருவகித்த ஏகதேச உருவகத்தால் சால்பினை ஒரு கோட்டையாக எண்ணுதல் தவறாகாது.அதனைப் பொறை என்றோ பாரம் என்றோ கூறுதலைக் காட்டிலும் ஒரு கஷ்டமாகக் கருதுதல் சாலச் சிறந்தது. ஆசிரியர் கருத்தும் அதுவாக இருத்தல் கூடும்.

*குழந்தை* 'சால்பு என்னும் கூரை' என்பர். ***தேவநேயர், மு.கோ.*** 'ஐந்துகால் மண்டபம்' என்பர், ***வரத,*** 'நிறைவு என்ற வீடு' என்பர்.

## ஒ) ஒப்புமைப் பகுதி:

*முற்றும்:*

அன்பொப் புரவு கண்ணோட்டம் அழியா வாய்மை நாணாதி
இன்பம் பெருக்கு நற்குணங்கள் எல்லாம் நிறைந்த சான்றோர்கள்
துன்புற் றவர்க்கும் இனியனவே சூழ்வர் துணையின் வினை முடிப்பர்
அன்பில் தளரார் நட்டார்க்கும் அடங்கித் தோற்றால் நாணாரே.

- விநா.அரசி..146

**99.4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு. (984)**

**உரைப்பகுதி:**

***அ) மணக்.***: தவத்துக்கு உறுப்பான சீலங்கள் பல உண்டாயினும், கொல்லாத நலத்தையுடையது தவம்; அதுபோலச் சான்றாண்மைக்கு உறுப்பான நற்குணங்கள் பல உண்டாயினும், பிறர் பழியைச் சொல்லாத நலத்தையுடையது சால்பு, எ-று.

***ஆ) பரிதி.***: கொல்லாமையான விரதத்திலும் பெரியது இல்லை அதிலும் பெரியது தனக்கு ஒருவன் செய்த குற்றத்தை சொல்லாதிருப்பது, எ-று

***இ) பரிப்.***: தவத்திற்கு உறுப்பு ஆன சீலங்கள் பல உள ஆயினும் கொல்லாத நலத்தை உடையது தவம்: அதுபோலச் சான்றாண்மைக் குணங்கள் பல ஆயினும் பிறரது பழியைச் சொல்லாத நலத்தை உடையது சால்பு, எ-று.

மேற்கூறிய சால்பிற்கு இலக்கணம் கூறுவார் முற்படப் புறஞ்சொல்லாமை எல்லாக் குணத்திலும் இன்றியமையாததாக வேண்டும் என்று கூறினார்.

***ஈ) காளி.***: யாதானும் ஒன்றினையும் தான் கொல்லாமையாகிய விரதம் கொண்ட இந்த நலத்தின் கண்ணதே நோன்பின் நன்மையாவது, மற்று இதுபோலத் தம்மாட்டு ஆயினும் பிறர் செய்தது ஓர் தீங்கினை இவர் இது செய்தனர் என்று எடுத்து உரையாத நன்மனக் கூறு உடையது யாது? மற்று அதன் கண்ணதே சால்பு உடைமையும், எ-று.

***உ) பரிமேல்.***: பிற அறங்களும்[1] வேண்டுமாயினும் தவம் ஓருயிரையும் கொல்லாத அறத்தின் கண்ணதாம்: அதுபோலப் பிற குணங்களும்[2] வேண்டுமாயினும் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் கண்ணதாம், (எ-று).

நலம் என்னும் ஆகுபெயர்[3]ப் பொருள் இரண்டனையும்[4]

---

1. பிற அறங்களும் - உண்டி சுருக்கல், வெயில் நிலைநிற்றல், நீர்நிலை நிற்றன் முதலிய நோன்புகளை பிற மேற்கொண்டு தம்முயிர்க்கு வரும் துன்பத்தைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்பலும் புலான் மறுத்து உயிர்கள் மேன் கருணை காட்டுதல் முதலாயின.
2. பிற குணங்கள்-அன்பு, நாண், ஒப்புரவு, வாய்மை முதலியவற்றை
3. 'கொல்லா நலத்தது' என்பதன்கண் உள்ள 'நலம்' அறம் என்னும் பொருளது; பண்புப்பெயர். 'சொல்லா நலத்தது' என்பதிலுள்ள 'நலம்' என்னும் பண்புப்பெயர் 'குணத்தினை' உணர்த்திற்று. நலம் பயப்பனவாகிய அறத்தையும், குணத்தினையும் நலம் என்றே கூறினமையால் காரியவாகு பெயர்.
4. இரண்டனையும் - அறம், குணம்.

தலைமை தோன்ற இவ்விரண்டிற்கும்[5] அதிகாரமாக்கிக் கூறினார்.

தவத்திற்குக் கொல்லா அறம் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர் குற்றம் சொல்லாக்குணம் சிறந்தது என்பதாம்.

***காரி.:*** நலம்-முன்னது அறம்; பின்னது குணம்,

***ஊ) கவிராசர்.:*** நோன்பாவது ஒரு சீவனையு கொல்லாமலிருக்கிறதாம்; அதல்லாத மற்றவை யெல்லாம் நோன்பலவாம். அதுபோல, பிறருடைய குற்றங்களைச் சொல்லாமலிருக்கிறதே சால்பென்பது, எ-று.

நோன்புக்குக் கொல்லாத விரதம் பெரியதானாற் போல பிறர் குற்றஞ் சொல்லாமலிருக்கிறதே சால்பிற்குச் சிறந்தது (எ.று)

***எ) பழைய2:*** தவ விரதமுடைய கொல்லா விரதமே விரதநலம்; பிறர் குற்றத்தைச் சொல்லா நலமே சால்பின் நலம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'ஒன்றாக நல்லது கொல்லாமை', 'அறவினை கொல்லாமை' எனப் பல்லாற்றானும் சிறப்பிக்கப்பட்ட கொல்லாமை ஈண்டுத் தவமாகக் கூறப்பட்டுள்ளது,

***பரிதியார்*** குறளமைதி, 'தவம் கொல்லாமையை விரதமாகப் பூண்டது, சால்பு பிறர் தீமையைச் சொல்லாத நலத்தையுடையது' என எடுத்துக்காட்டுவமை தோன்ற நிற்பது. அதனை உறழ் பொருளதாக்கிக் கொல்லாமையின் பெரியது பிறர் பழி கூறாமை' என உரை காண்பர். இதனாற்போதிய பயன் இன்மையோடு, தனிச்சிறப்புடையதாக ஆசிரியர் கூறிய 'ஒன்றாக நல்லது கொல்லாமை' எனவும் 'பின்சாரப் பொய்யாமை நன்று' எனவும் கூறிய கருத்தொடு மாறுகோடலுமாகும்; அதனாற் சிறப்பிலது.

'தனக்கு ஒருவன் செய்த குற்றத்தைச் சொல்லாதிருப்பது' என்ற ***பரிதி.*** உரையும், 'தம்மாட்டாயினும் பிறா செய்த தீங்கினைச் சொல்லாதிருப்பது' என்று ***காளிங்கர்*** உரையும், தனக்கு நேர்ந்த தோல்வியினாலோ அல்லது மாட்டாமையாலோ நேர்வதாகலாம், ஆதலால் அது நோன்மையாகாது. பிறர் குற்றம் கூறலே தவத்திற்குக் குற்றமாம், ஆதலால் இவ்வுரை சிறப்பின்று. ஆதலால் பிறர் உரைகளே இப்பகுதிக்குச் சிறந்தன.

***இராம.:*** 'பிறர் தீமை சொல்லா நலம்' என்பது பிறருடைய குற்றங்கள்', 'பிறர் தனக்குச் செய்த குற்றங்கள்' என்னும் பொருளதாகாது, 'பிறர்க்குத் தீமை பயக்கும் சொற்களை' எனபதே

5. இவ்விரண்டிற்கும் - தவத்திற்கும் சால்பிற்கும்.

நேரிய பொருள் என்பர். முற்கூறிய இரண்டும் தீமை பயப்பனவேயாயினும், ***இராமலிங்கர்*** கூறும் பொருள் தீமையென அனைத்தையும் சுட்டும். ஏனோர் கூறுவன புறங்கூறல், பழிகூறல் அல்லது தன்பொறுமை வெளிப்படுத்தல் வாயிலாகத் தற்சிறப்புரைத் தலாக முடியும். ஆதலால் இப்பகுதியில் ***இராமலிங்கர்*** உரை சிறந்தது. இதற்கு இவர் கூறும் விளக்கங்களும் ஏற்புடையன.

'அதுபோல' என உவமச்சொல் விரித்தும் இது எடுத்துக் காட்டுவமை என்னாதது உய்த்துணர வைத்த வாறாம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***கொல் பா நலத்தது நோன்மை.:***

நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. -குறள்., 325

## ஓ) மேற்கோள் பகுதி:

***பெருந்.:*** வெண்பாவை ஓசையூட்டுதற்கு மேற்கோள் - வீர.,14

***யா.வி.:*** இது 'எதுகைக்கும் இனமோனைக்கும் ஒத்துவந்த-தாயினும் எதுகை என்று வழங்கப்படும்' என்பர். -சூ., 53

அலகிட்டு ஓசையூட்டுதலுக்கு மேற்கோள். - சூ..54
ஒழுகிசைச் செப்பலோசைக்கு மேற்கோள். - சூ..57

## 99.5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
## மாற்றாரை மாற்றும் படை. (985)

## உரைப்பகுதி:

***அ) மணக்.:***பெரியார் பெருமையாவது எல்லோர்க்கும் தாழ்ந்தொழுதல்; சான்றோர் தம்பகைவரை ஒழிக்கும் கருவியும் அதுவே என்றவாறு,

***ஆ) பரிதி.:*** நல்லோர்க்குத் தொழிலாவது பெரியோர் தாழ்ந்தோர் என்னாமல் யாவரையும் இதஞ்செய்து[1] கூட்டிக் கொள்வது. அதுவே மாற்றாரை வெட்டும் ஆயுதம். எ-று.

***இ) பரிப்.:***பெரியாரது பெருமையாவது எல்லார்க்கும் தாழ்ந்து ஒழுகுதல் அதுவே சான்றவர் மாறுபட்டவரை வெல்லும் கருவி, எ-று.

இது சான்றவர்க்கு வலியாவது தாழ்ந்து ஒழுகுதல் என்றது.

1. இதஞ்செய்து - நன்மை செய்து

*ஈ) காளி.:* "யாற்றும்படை" - பாடம்.

ஐம்புலன்களின் வேகத்தை ஆற்றுவாரது ஆற்றலாவது யாதோஎனின், தாம் யாவர் மாட்டும் பணிவு உடையர் ஆதல்; மற்று அது அச்சான்றோர் தம்மொடு மாறுபடும் பகைவரை எதிர் ஆற்றும் கருவி, எ-று.

*உ) பரிமேல்.:* ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல், இனிச்சால்புடையார் தம் பகைவரைப் பகைமை ஒழிக்கும் கருவியும் அது[2], (எ-று).

ஆற்றல் அது[3] வல்லாரந்தன்மை.இறந்ததுதழீஇய எச்ச வும்மை விகாரத்தால் தொக்கது.[4] சால்பிற்கு ஏற்ற பணிதற் குணத்து சிறப்புக் கூறுவார், ஏனையதும்[5] உடன் கூறினார்.

*ஊ) கவிராசர்.:* ஒரு கருமத்தைச் செய்து முடிக்கிறவனது பலமாவது அந்தக் காரியத்துக்குத் துணையானவர்களை வணங்கிக் கூட்டிக் கொள்ளுகிறதாம்; சான்றோர் தம் பகைவரைப் பகைமை யொழிக்குங் கருவியும் அதுவே.

*ஏ) பழைய2:* ஒரு கருமத்தைச் செய்து முடிப்பார், ஆற்றலாவது அக்கருமத்திற்குத் துணையாவரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல்; சால்புடையார் தம் பகைவரை வெல்லும் படையாவது பகைவரைத் தாழ்ந்து துணையாகக் கூட்டிக் கொள்ளுதலாம்.

அது என்பது முன்சொன்ன பணிதல் எனக் கொள்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்.,* *பரிப்பெருமாள்*** உரைகள் மாற்றமில்லாதன.

***பரிதி.*** 'ஆற்றுவார்க்கும் தாழ்வு வராமல் பணிதல்' என்பதற்கு 'இதஞ் செய்து கூட்டிக் கொள்ளுதல்' என்றார். இது ஒரு வகை அரசியல் தந்திரமாமேயன்றிப் பணிதல் ஆகாமை காண்க. இதனையே அரண் செய்வது 'மாற்றாரை மாற்றும் படை' என்ற பின்னடி.

***மணக்குடவர், பரிப்பெருமாள்*** உரைகள் 'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்ற அடக்கம் உடைமையின் எதிரொலியாய்ப் பொதுமையின் அனைவர்க்கும் உரியதாய் அரசர்க்குச் சிறப்பின்றாகிறது. அதனை எண்ணிய ***பரிமேலழகர்*** 'காரியஞ்செய்து முடிப்பாரது ஆற்றல் அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல்,' எனப் ***பரிதியார், பரிபெருமாள் மணக்குடவர்*** மூவர் கருத்தையும் இணைத்து மொழிந்தனராதலைக் காண்க.

---

2, 3. அது என்றது பணிதலை

4. சான்றோர் மாற்றாரை மாற்றும் படையும் அது என்று இருக்கற்பால உம்மை இறந்தது தழுவியதாய்த் தொக்கு நின்றது; செய்யுள் விகாரம்

5. ஏனையதும் - பணிதல் என்பதும்.

ஆற்றுவார் ஆற்றல் - பணிதல் (985)
பசியாற்றல் (225)
இகழாமை (891)-(894. கூற்றத்தை:
ஆற்றுவார்க்கு ஆற்றாதார்)

இங்ஙனம் ஆசிரியர் இத்தொடரை நான்கிடங்களில் ஆளுவர். 'தவத்தான் வலியார்க்கு வலி' (225), (எடுத்த காரியத்தைச் செய்து) முடிக்க வல்லவர்களுடைய ஆற்றல்களாகிய பெருமை, அறிவு, முயற்சி இவைகளை யிகழாமை (891), ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வல்லவருடைய ஆற்றலாவது (985), ஆற்றுவார்க்கு ஆற்றாதார்-மூவகையாற்றல் உடையார்க்கு அவையில் ஆற்றாதார் (894), தொடர் ஒன்றா யினும் அதிகார இயையும் பாலியையும் நோக்கிப் பொருள் வேறுபடு தலைக் காண்போம். அங்ஙனமே ***பொருட்பாலின்*** கண்ணதாகிய (891, 985) இரண்டிற்கும் மாறுபாடின்றி உரைத்தலைக் காணலாம்.

'பணிதல்-இகழாமைப்போற்றிக் கோடல்' என்பதே சிறந்தது. காரிய முடிவன்றி யிகழ்ச்சிக் கருத்தன்மையான்.

***காளிங்கர்*** 'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றலை' நினைவிற் கொண்டு 'ஆற்றுவார்-ஐம்புலன்களின் வேகத்தை யாற்றுவார்' என்றனர்.

***வரத.*** கூறும்-'தம்மின் மெலியார் செய்யும் தீங்கினைத் தாங்கிப் பணிதல்' என்ற உரை 'மெலியார்மேல் மேக பகை' என்னும் ***வள்ளுவர்*** உள்ளத்திற்கு மாறாகிக் கால எல்லைக்குட்படாததாயின் தன் மாட்டாமையைக் குறிக்குமாதலானும் சிறப்பிலது. ஆசிரியக் கருத்தறிந்து, ஆற்றுவாரது ஆற்றலாவது பணிதல் என வேற்றுமையுருபுவிரித்துக் காணலே சிறப்பு ஆம்.

***இராம.*** 'ஆற்றற்கு வணக்கஞ் செலுத்தும் குணம் மாற்றாரையும் மாற்றும் கருவியாம்' என்பர். இது குறளமைதிக்கு ஒவ்வாதது. ஆசிரியர் 'ஆற்றுவார் ஆற்றல் பணிதல்' என ஒரு தொடரை முடித்து மீண்டும் 'அது .......படையாம்' எனச் சுட்டினை விரித்துக் கூறலால் ஒவ்வாதென்க. ஆசிரியர் நோக்குப் பணிதல் தாழ்வாகுமோ என்ற ஐயத்தை மாற்றி, அது படையாம் என்ற நயம் உணர்க படையெனின் கொலைக்கருவியாமே என்ற எண்ணத்தை மாற்ற மாற்றாரின் மாறுபட்ட எண்ணத்தை மாற்றும் படை என்பதும் சிந்திக்கத்தக்கது.

'பணிதல்-தன்னைப்போல் பிறரையும் எண்ணும் சரிநிகர் பண்பு தாழ்ச்சியன்று' என்பர் குழந்தை. அங்ஙனம், 'மாற்றார் துணையாவார் ஆயின் அவரைப பணிக' என நயந்தோன்றத் 'துணையாயின்' என்பதை வருவித்துரைத்த ***பரிமேலழகர்*** உரை நயமும் உயர்ந்தது.

## 99.6. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (986)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:***

***ஆ) பரிதி.:*** நல்லோர் என்கிற குணத்தை நிறுக்கிற கட்டளை யாது எனின் தமக்கு நிகர் இல்லாதவராயினும் அவர்க்குத் தாழ்ச்சி சொல்லி நடப்பது,(எ.று).

***இ) பரிப்.:*** சால்பிற்கு அளவு யாது எனின், தோல்வியைத் தனக்கு நிகர் அல்லாதார் மாட்டும் கொள்ளுதல், எ-று.

இஃது எல்லார்க்கும் இனிமை செய்ய வேண்டும் என்றது.

***ஈ) காளி.:*** சான்றோர் சால்பிற்கு உறுதிப்பாடாவது யாதோ எனின், தம்மொடு ஒப்பர் சீர்தூக்கும் துலைமை[1] இல்லார் மாட்டும் தம் தோல்விகண்டு ஒழுகுதல், எ-று.

***உ) பரிமேல்.:*** சால்பாகிய பொன்னின் அளவறிதற்கு உரைகல்லாகிய செயல்யாது எனின், அது[2] தம்மின் உயர்ந்தார் மாட்டுக் கொள்ளும் தோல்வியை இழிந்தார் மாட்டும் கோடல், (எ.று).

துலை-ஒப்பு. எச்சஉம்மையான் இருதிறத்தார் கண்ணும் வேண்டுதல் பெற்றாம்[3]. கொள்ளுதல்-வெல்லும் ஆற்றலுடையா ராயிருந்தே ஏற்றுக் கொள்ளுதல்[4]. இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோடு ஒப்பித்துக் கொள்ளாது தோல்வியான் அவரின்[5] உயர்வாராயின், அதனால்[6] சால்பளவு அறியப்படும் என்பதாம்.

***ஊ) கவிராசர்:*** சால்பு என்னப்பட்ட பொன்னின் அளவு அறிகிறதற்கு உரைகல்லாகிய செயல் ஏதென்றால், தன்னிலும் பெரியோர்களிடம் கொள்ளுந் தோல்வியைத் தன்னிலும் தாழ்ந்தவரிடமும் கொள்ளல், (எ-று).

---

1. துலைமை - ஒப்பு
2. அது - சால்பு
3. துலையல்லார் கண்ணும் என்ற எதிரதுதழீஇய எச்சவும்மையான் உயர்ந்தார் இழிந்தார் என்னும் இருதிறத்தார் மாட்டுந் தோல்வி வேண்டப்படுவதாம். உயர்ந்தார் மாட்டுக் கொள்ளுந் தோல்வி மாட்டாமையான் தோல்வி ஏற்றுக் கொள்ளப் படுதலின் அது ஏற்புடையதா என்பது ஆராயத்தக்கது.
4. ஏற்றுக் கொள்ளுதல் - அங்கீகரித்துக் கொள்ளுதல்
5. அவரின் - இழிந்தாரைக் காட்டிலும்
6. அதனால் - தோல்வியால் உயர்தலால்

*ஏ) பழைய2:* சால்பாகிய பொன் உரைத்தறிதற்கு உரை கல்லாகிய செயல் யாதெனின், தம்மினும் உயர்ந்தாரிடத்து அல்லது இழிந்தாரிடத்தும் தோற்றுப் போதலைக் கொள்ளுதலாம்.

தோல்வி: தோற்றுப் போதல் தலையிலார்: இழிந்தார் என்க "கட்டளை நிரைதல் உரைகல் ஒப்பாம்" என்பதனால் அறிக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'கட்டளை'***

'அளவு', 'நிறுக்கிற கட்டளை', 'உறுதிப்பாடாவது', 'உரைகல்' என்பர் முறையே *பரிப்பெருமாள்* முதலிய உரையாசிரியர்கள், 'நிறுக்கிற கட்டளை-நிறைகல்'; 'உரைகல்-மாற்றறிய உரைத்துப் பார்க்குங்கல்'. ஆகவே 'உரைகல்' என்பார் தரம் பார்ப்பார்; ஏனையோர் அளவு பார்ப்பார். இவற்றுள் 'தரம் பார்க்கும் உரைகல்' என்பார் உரை சிறந்தது. பொன்னின் தரத்தை உரைத்தலாகிய தொழிலால் அறிவோம். அதுபோல சால்பின் தரத்தைத் தோற்றலாகிய தொழிலால் அறிவோம் ஆதலின்.

## ஒ) ஒப்புமைப் பகுதி:

***தோல்வி துலையல்லார் கண்ணும் கொளல் :***

ஊற்ற முற்றுடை யானுனக் காரமர்
தோற்று மென்று தொழுதுயர் கையனைக்
கூற்ற முண்ணக் கொடுப்பனென் றெண்ணினாய். - கம்ப., 4143

## ஓ) மேற்கோள் பகுதி:

*காரி.:* துலை என்னும் உவமஉருபு முன்னோர் கூறிய உவமஉருபுத் தொகைச் சூத்திரங்களுள் இல்லையாகவும் இலக்கியங்களில் எடுத்தாண்டதற்கு மேற்கோள். - மாற., 113

# 99.7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு (987)

*உரைப்பகுதி:*

*ஆ) பரிதி.:* தமக்கு ஒருவர் பொல்லாங்கு செய்தால் தான் அவர்க்கு நல்லகாரியம் செய்யாத போது சான்றாண்மையால் என்னபயன், எ-று.

*இ) பரிப்.:* தமக்கு இன்னாத செய்தவர்கட்கும் இனியவற்றைச் செய்யாத காலத்துச் சால்புடைமையால் பயன் யாதோ, எ-று

இஃது இன்னாதார்க்கும் இனியவை செய்ய வேண்டும் என்றது.

***ஈ) காளி.:*** இன்னாங்கு செய்து ஒழுகுவார்க்கும் தாம் எப்பொழுதும் இனியவையே செய்யாத இடத்து மற்று என்ன பயன் உடையதோ? உலகத்துச் சான்றோர் தம் சால்புடைமை, எ-று.

***உ) பரிமேல்.:*** தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்கும் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின், அச்சால்பு வேறு என்ன பயனை உடைத்து, (எ.று).

சிறப்பும்மை அவர் இன்னா செய்தற்கு இடனாதல் விளக்கி நின்றது. ஓகாரம் அசை, வினா எதிர்மறைப் பொருட்டு[1]. தாமும்[2] இன்னா செய்வாராயின், சால்பால் ஒருபயனும் இல்லை என்பதாம். இவை ஐந்து பாட்டானும் சிறப்பு வகையால் கூறப்பட்டது,

***ஊ) கவிராசர்.:*** தனக்குப் பொல்லாத காரியங்களைச் செய்தவர் களுக்கும் தான் நன்மைகளைச் செய்யாவிட்டால் அவன் சான்றாண்மை என்ன பிரயோசனத்தைச் செய்யும்? (எ-று).

பொல்லாங்கு செய்தவர்களுக்கும் நல்லது செய்யா விட்டால் அவர்கள் சான்றோர் எனப்பட்டார், எ.று.

***ஏ) பழைய2:*** தமக்குப் பொல்லாதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின், அச்சால்பு வேறென்ன பயனை உடைத்து?

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

முன்னர் மிகுதியான் மிக்கவை செய்வாரைத் தகுதியான் வெல்லும் என்றார் இக்குறளால். தகுதி யாது? வெல்லும் உபாயம் என்ன என்பனவற்றை விளக்குவது இக்குறள்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும்:***

உபகாரஞ் செய்ததனை ஓராதே தன்கண்
அபகாரம் ஆற்றச் செயினும் - உபகாரம்
தாம் செய்வ தல்லால் தவற்றினால் தீங்கூக்கல்
வான்தோய் குடிப்பிறந்தார்க் கில். - நாலடி., 69

1. என்ன என்ற வினா சால்பு இல்லை என்பது பட நின்றமையின் எதிர்மறைப் பொருளதாயிற்று.
2. தாமும் - சால்புடையாரும்

நீர்த்தகவு இல்லார் நிரம்பாமைத் தந்நலியின்
கூர்த்தவரைத் தாம்நலிதல் கோளன்றால்-சான்றவர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
போர்த்துநாய் கவ்வினால் இல். -பழ.நா., 50

நல்லினம் சாரல் நயனுணர்தல் பல்லாற்றான்
நல்லினம் ஓம்பல் பொறையாளல்-ஒல்லும்வாய்
இன்னார்க் கினிய புரிதல் வெறிநிற்றல்
நல்நாப்பண் உய்ப்பதோர் ஆறு. -இன்.,38

என்னுயிர் நீத்தவேனும் யானுயிர்க் குறுதிசூழாது
என்னுயிர்க் காரணம்நாடி யானுயிர்க் கிறுதி செய்யின்
என்னை யிவ்வுலகு காவல். -யசோ., 139.

ஓவிய வுருவ நாயே னுளதொன்று பெறுவ துன்பால்
பூவிய னறவ மாந்திப் புந்திவே றுற்ற போழ்திற்
றீவினை யியற்று மேனு மெம்பிமேற் சீறி யென்மே
லேவிய பகழி யென்னுங் கூற்றினை யேவ லென்றான். -கம்ப., 4172

தீர்வகு மின்ன றம்மைச் செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ் செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய வமிழ்துண் டளித்த தன்றே - கம்ப.,1667

## 99.8. இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
## திண்மையுண் டாகப் பெறின். (988)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: ஒருவனுக்குச் சால்பாகிய நிலை உண்டாகப்பெறின் பொருளின்மை இளிவாகாது, எ-று.

இஃது அமைதியுடையராதல் பெறுதற்கு அரிது என்றது.

***ஆ) பரிதி.***: மிடி ஒருவர்க்குக் குற்றமன்று; அது முன்னை வினைப்பயன் செல்வமாவது யாவரையும் வணங்குதலால் இன்சொல்லினால் கூடிநடப்பதாவது, எ-று.

***இ) பரிப்.***: ஒருவனுக்குச் சால்பு ஆகிய நிலைமை உண்டாகப் பெறின் பொருள் இன்மை இளிவு ஆகாது, எ-று.

இஃது அமைவு உடையார் ஆதல் பெறுதற்கு அரிது என்று கூறிற்று.

*ஈ) காளி.:* ஒருவரை எளிமைப் படுத்துவது வறுமை; ஆயினும் அவ்வறுமையும் ஒருவர்க்கு இளிவரவு அன்று; தம்மாட்டுச் சார்பு என்று நூல்கள் எடுத்து உரைக்கும் திட்பம் உளதாகப் பெறின், எ-று.

*உ) பரிமேல்.:* சால்பு என்று சொல்லப்படும் வலி உண்டாகப் பெறின், ஒருவனுக்கு நல்குரவு இளிவாகாது, (எ-று).

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று, இன்மையான் வருவதனை இன்மைதானாக உபசரித்துக் கூறினார்[1]. சால்புடையார் நல்கூர்ந்த வழியும் மேம்படுதலுடையார் என்பதாம்.

*ஊ) கவிராசர்.:* சான்றோரென்று சொல்லப்பட்ட பலமுண்டாயிருந் தால், அவர்களுடைய தரித்திரங் குற்றமாகாது. எ-று.

நற்குணமுடையவன் தரித்திரனாயிருந்தாலும், பெரியவ னென்று சொல்லப்படுவான், (எ.ம்)

*ஏ) பழைய2.:* சால்பென்று சொல்லப்படும் வலி உண்டாகில், ஒருவனுக்கு வறுமை இழிவாகாது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*பரிதி.* உரை இக்குறட்கு இயைபிலது போலத் தோன்றுகிறது. *பரிதி.* எப்போதும் சொற்பொருள் காண்பராதல் அரிது. கருத்துப் பொருளே கூறுவர். ஆகவே சால்பு-நிறைவு. அது பணிதலும் இனியவை கூறுதலுமாகிய குணங்களால் விளைவது. அக்குணங்களாலய நிறைவுள்ள போது அது செல்வமாம் என்றெல்லாம் கருதி 'இன்மை'க்கு ஏற்ப உண்மையாகிய செல்வத்தை உரைத்திருப்பர் எனலாம், இங்ஙனம் கருதி இயைக்குங் கருத்தே இவர் எங்கும் எழுதுவது.

## 99.9. ஊழி பெயரினு தாம்பெயரார்
சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார். (989)

**உரைப்பகுதி:**

*அ) மணக்.:* சான்றாண்மைக்கு ஒரு கடல் என்று சொல்லப்படுவார்கள், காலம் தனது தன்மை குலையினும் தாம் நின்ற நிலை குலையார், எ.று

1. இன்மை - பொருளில்லாமை; அதனால் வருவது வறுமை அதனைப் பொருளில் லாமையே என்று கூறியது உபசார வழக்கு பொருளில்லாமை காரணம்; அதன் காரியம் வறுமை. வறுமையைப் பொருளில்லாமையாகக் கூறுவது உபசார வழக்கு இதனையே கருவியின் பெயர் காரியத்திற்கு ஆகியதாகக் கொண்டு ஆகுபெயர் எனலுமாம்.

ஆ) *பரிதி.*: ஊழிக்காலம் வந்தாலும் நிலைபெயரார், சான்றாண்மை என்னும் சமுத்திரம் பெற்றவர், எ-று.

இ) *பரிப்.*: சான்றாண்மைக்கு ஒரு கடல் என்று பிறரால் சொல்லப் படுபவர்கள், காலம் தனது தன்மை குலையினும் தாம் நின்ற நிலை குலையார், எ-று.

ஈ) *காளி.*: அயன் ஊழியாகிய கற்ப காலம்[1] பெயரும்[2] காலத்து அவன் படைப்பு ஆகிய உலகு போந்து[3] அழியும் அன்றே; அவ்வாறு ஊழிபெயரினும் தாம் தமது சான்றாண்மைக்கு ஒரு தனிச்சாகரம்[4] என்று பல நூலினும் எடுத்து உரைக்கப்படும் பணபினர், எ-று.

உ) *பரிமேல்.*: சால்புடைமையாகிய கடற்குக் கரை என்று சொல்லப் படுவார், ஏனைக்கடலும் கரையுள் நில்லாமல் காலந் திரிந்தாலும் தாம் திரியார், (எ.று).

சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாக்கி யும். அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலின் அஃது உடையானைக் கரையாக்கியும் கூறினார்; "பெருங்கடற் காழி அனையன்மாதோ"[5] என்றார் பிறரும், ஏகதேசவுருவகம்.[6]

*காரி.:* ஊழி - காலம். ஆழி - கரை. "பெருங்கடற் காழி அனையன் மாதோ"[7] என்றார் பிறரும் எனக.மன் ஒழியிசைக் கண் வந்தது.

ஊ) *கவிராசர்.*:சான்றாண்மையாகிய கடலுக்குக் கரை என்று சொல்லப்பட்ட பெரியோர்கள், உலகமாகிய பூமி பெயர்ந்தாலும், தங்கள் நிலையிற்றிரியார்.

எ) *பழைய2:* உகந்த காலம்[8] வருங்காலத்து அன்றி வாராக்காலத்து வந்தாலுஞ் சால்புடையார் தங்கள் சான்றாண்மை தவறார், 'சான்றாண்மைக்குக் கடல்' எனப்படுவார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்குடவர். பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர்*** முதலானோர் 'சான்றாண்மை'யையே 'சாகரம்' 'கடல்' என்றனர்.

1. அயன் ஊழியாகிய கற்பகாலம் - பிரமன் அழியும் காலம்
2. பெயரும் - அழியும்
3. போந்து - தோன்றி
4. தனிச் சாகரம் - ஒப்பற்ற கடல்
5. புறம்., 330
6. சான்றாண்மையைக் கடல் என உருவகித்து அதனை உடையாரைக் கரை என உருவகிக்காமல் விட்டமையால் இது ஏகதேச உருவகம்.
7. புறம்., 330
8. உகந்த காலம் - யுகத்தின் முடிவான காலம் (கலியுகம்)

***பரிமேலழகர்*** முதலானோர் 'சான்றாண்மையாகிய கடற்குக்கரை' என்றனர். கடலாகச் சொல்வதைவிடக் கரையாகச் சொல்வது சிறப்பு. ***காரி இரத்தினகவிராயரும்*** 'கரை' என்றே கொண்டமை காண்க. 'நீருழியிற் கடல் பெயரும்; கரையென்னும் எல்லை பெயராது 'என்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும்:***

சான்றோர் கடன்நிலை குன்றலும் இலர். -நற்., 327:4-5

இம்மூ வுலகில் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால் - தம்மின்
உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர்வாய்ச் சொல். -பு.வெ.,167

உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தம் கொள்கையின் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கொடிப்புல் கறிக்குமோ மற்று. -நாலடி.,141

ஒற்கந்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல் - வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புல்மேயா தாகும் புலி. -பழ.நா.,'71

தோல்வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமை -திரி.,27

நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் - பல்பொறிய
செங்கட் புலியேறு அறப்பசித்தும் தின்னாவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ். -நீதிநெறி.,761

மாதரார் ஏனையரேனும் வதையினுக் குரியரல்லர்
பேதைதா னிவனும் பெண்ணின் அனையனே பிறிதும் ஒன்றுண்டு
ஏதிலார் மன்னர் சென்னி யிடுதலுக் குரிய வாளின்
தீதுசெய் சிறுபுன்சாதி சிதைத்தலும் திறமன்று என்றான். -யசோ.,124

திறம்பு காலத்துள் யாவையுஞ் சிந்தையினுஞ் சிதையா. -கம்ப.,4964

ஊழி திரியும் காலத்து முலையா நிலைய....... -கம்ப., 4964

...... ........ ........ ஐயநின்
பெருமை யூழி திரியினும் பேருமோ. -கம்ப.,10326

***சான்றாண்மைக் காழி எனப்படுவார்:***

பெருங்கடற் காழி யனையன் மாதோ. -புறம்.,330

உறையார் விசும்பி னுவாமதி போல
நிறையா நிலவுத லன்றிக் - குறையாத
வங்கம்போழ் முந்நீர்வளம்பெறினும் வேறாமோ
சங்கம்போல் வான்மையார் சால்பு.

தலைப்படு சால்பினுக் குந்தள ரேன்சித்தம் பித்தனென்று
மலைத்தறி வாரில்லை யாரையுந் தேற்றுவன் - திருக்கோவை

## 99.10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான் தாங்காது மன்னோ[1] பொறை. (990)

***உரைப்பகுதி:***

***ஆ) பரிதி.:*** சான்றவர் நீதிமார்க்கத்தில் நடவாத போது உயிர் முதல் ஆகிய பாரத்தைத் தாங்குதல் கழியும், எ.று.

***இ) பரிப்.:*** சான்றார் தமது தன்மைகுறைவர் ஆயின் பெரிய நிலமானது உயிர் முதல் ஆகிய பாரத்தைத் தாங்குதல் கழியும், எ-று.

அவர்களும் தானுமாய்ப் பொறுக்கின்ற தனைத் தனிப் பொறுக்கல் ஆகாது என்று ஆயிற்று. மேல் ஊழி பெயரினும் சான்றோர் நிலை குலையார் என்றார். இது சான்றோர் நிலை குலையின் ஊழி பெயரும் என்றது.

***ஈ) காளி.:*** சான்றவர் தமது சான்றாண்மை சிறிது குன்றின், இப்பெருநிலம் தான் தாங்குதல் உடைய அல்ல பாரம்: எனவே இவர் சிலரின்றி அனைவரும் பாவியராயினராயின் ஆற்றவல்லாது இப்பூமி என்பது பொருள், எ-று.

அவர்களும் தானுமாய்ப் பொறுக்கின்றதனைத் தனிப் பொறுக்கல் ஆகாது என்று ஆயிற்று. மேல் ஊழி பெயரினும் சான்றோர் நிலைகுலையார் என்றார்.

1. மன்னோ - மன்னோ என்பதன்கண் 'மன்' என்னும் இடைச் சொல் ஒழியிசைப் பொருளிலும், 'ஓ' என்னும் இடைச்சொல் அசைநிலைப் பொருளிலும் வந்தன.

*உ) பரிமேல்.:* பல குணங்களானும் நிறைந்தவர் தம் தன்மை குன்றுவாராயின், மற்றை இருநிலந்தானும் தன் பொறையைத் தாங்காதாய் முடியும்[2], (எ.று).

தானும் என்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது.[3] அவர்க்கு அது[4] குன்றாமையும் அதற்கு அது[5] தாங்கலும் இயல்பாகலான், அவை[6] எஞ்ஞான்றும் உளவாகா[7] என்பது தோன்ற நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் அசை. இதற்கு இது நிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாக வருதலான் அதுவும் அது தாங்கலாற்றாது என்று உரைப்பாரும் உளர்.[8] இவை மூன்று பாட்டானும் அவற்றான் நிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்:* பல குணங்களாலேயும் நிறைந்த சான்றவர் தங்கள் நிலைமை கெட்டார்; பூமி பாரம் பெறாது, எ-று.

*ஏ) பழைய2:* நல்லோரைத் தாங்குகிறோம் என்றதனால் பூமி பாரம் தாங்குவது அல்லது பூமி பாரந்தாங்காது.

நிறையுடைய சான்றவர் தங்கள் சான்றாண்மையாகிய நிறை தப்பில் மற்றையப் பெரிய நிலம் பாரத்தைத் தாங்காது தள்ளிவிடும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'கூலியாள் கூலிக்காகச் சுமப்பதுபோல இருநிலம் சான்றாண்மைக் காகச் சுமக்கிறது' என்பர் ***மு.கோ.; பழைய உரை*** 'நல்லோரைத் தாங்குவதால் மலைகளையும், கடல்களையும், தீவுகளையும், உடன் தாங்குகிறதேயன்றி நல்லோரிலராயின் ஒன்றையுந் தாங்காது' எனப் பொருள் காண்பர்.

---

2. இருநிலந் தாங்காமைக்குக் காரணம் சான்றவர் சான்றாண்மை குன்றுதல், ஆகவே சான்றாண்மை குன்றுதல் காரணம், பொறை தாங்காமை-காரியம் சான்றாண்மை குன்றிய சான்றவர் வாழ்வு பயனற்றதாதலின் இங்ஙனம் கூறப்பட்டது.
3. நிலந்தானும் என்பதிலுள்ள உம்மை சான்றவர் சான்றாண்மை குன்றலைத் தெரிவித்தலின் எதிரது தழீஇய எச்சவும்மையாயிற்று. அந்த எச்சவும்மை இருநிலந்தான் தாங்காது எனச் செய்யுள் நோக்கித் தொக்கு நின்றது.
4. அவர்க்கு அது - சான்றவர்க்கு சான்றாண்மை
5. அதற்கு அது - பூமிக்குப் பாரம்
6. அவை - சான்றவர் சான்றாண்மை குன்றாமையும் பூமிக்குப் பாரந்தாங்கவும்.
7. 'உளவாகா நின்றன' என்பது பிரதி பேதம்.
8. இவ்வாறு உரைப்பவர் பரிப்பெருமாள்.

***காளிங்கர்*** 'சான்றோர் சான்றாண்மையிற் சிறிது குன்றுவாராயின் இப்பெருநிலம் பாரந்தாங்காது' என்பர். இதன் கருத்து 'நிலம் தான் மட்டும் சுமப்பதில்லை. சான்றோரும் சான்றாண்மையாற் பங்குபற்றுகின்றனர். அதனால் சுமக்கிறது' என்பர். அங்ஙனமே 'சான்றோர் சான்றோரல்லராயின் இப்பூமி ஆற்றவல்லாதது' என்பர். இது முன்னைய உரைகளிற் சிறிது மாற்றமான கருத்துடையது.

### ஓ) ஒப்புமைப்பகுதி:

***இருநிலந்தான் தாங்காது:***

நெடுநில மகண்முது காற்ற.............. -கம்ப.,753

புவிப்பாவை பரங்கெடப் போரில்வந்தோரை யெல்லாம்
அவிப்பானும்..... ....... ....... ......
....... ....... ........ ....... .......
.......... நின்றேன் ....... ....... - கம்ப., 1812

## 99. சான்றாண்மை

| | கடனென்ப | குணநலம் | அன்புநாண் | கொல்லா | ஆற்றுவார் | சால்பிற்குக் | இன்னாசெய் | இன்மை | ஊழி | சான்றவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 6 | 4 | 3 | 2 | 5 | 7 | 8 | 1 | 9 | 10 |
| பரிதி | 2 | 7 | 10 | 3 | 5 | 6 | 3 | 8 | 9 | 1 |
| பரிப். | 8 | 4 | 3 | 2 | 5 | 6 | 7 | 1 | 9 | 10 |
| காளி | 8 | 4 | 10 | 9 | 5 | 6 | 7 | 3 | 2 | 1 |
| பரிமேல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

99-வது அதிகாரம் 'சான்றாண்மை' முற்றிற்று.

*******

# 100. பண்புடைமை

## அதிகாரப் பொருள்:

*அ) மணக்.:*

*இ) பரிப்:* பண்பு உடைமை ஆவது யாவர் மாட்டும் அவரோடு ஒத்த அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவர் அவர் வருத்தத்திற்குப் பரிதலும்[1] பகுத்துண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை. இதுபெரும்பான்மையும் பொருளினால் தலையளி செய்வாரை நோக்கிற்று ஆகலான் பின் கூறப்பட்டது.

*உ) பரிமேல்.:* அஃதாவது பெருமை சான்றாண்மைகளில்தாம் வழுவாது நின்றே எல்லாரியல்புகளும் அறிந்தொத்து ஒழுகுதல்[2]. "பண்பு எனப்படுவது பாடறிந்தொழுகல்" [3] என்றார் பிறரும். அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

*ஊ)கவிராசர்:* அஃதாவது - பெருமை, சான்றாண்மைகளில் தாம் வழுவாமலிருந்து எல்லாரியல்பு மறிந்து ஒத்து நடக்கிறதாம்.

*ஏ) பழைய2:* அஃதாவது பெருமை, சான்றாண்மை வழுவாமை நின்று அவரவர் குணம் அறிந்து நடந்து கொள்ளுதல், 'பண்பெனப்படுதல் பாடறிந் தொழுகல்' என்பதனால் அறிக.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'எல்லாரிடத்தும் ஒத்த அன்புடன் கலந்து பழுகுதல்' முதலாகப் பழிநாணுதல் ஈறான நற்குணங்கள் பலவும் உடைமை பெரும்பாலும் பொருளாற்றலையணி செய்தலாகும்' என்பர் ***பரிப்பெருமாள்.***

***பரிமேல்.*** எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்துப்பழகுதல். 'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்' (கலி., 132). ***கவிராசர் பழைய2*** அனைவரும் இதனையே கூறுவர்.

1. பரிதல் - அன்பினால் வருந்துதல், 'பரிவதூஉம் சான்றோர் கடன்' என்புழிப்போல.
2. 'ஒழுகுதலுடையனாதல்' என்பது பிரதிபேதம்.
3. கலி., நெய்தல்., 16

***தேவநேயர்:*** 'அவரவர் பண்பறிந்து அவற்றிற் கேற்றவாறு ஒழுகல்.'

***இராம.*** 'யாரும் எப்போதும் வந்து தத்தங் குறைகளைச் சொல்லிக் கொள்ள இடங்கொடுத்துக் கேட்டு, கூடுமான பரிகாரந்தேட உதவும் தன்மை' என்பர்.

***கா.சு.*** 'உலகியல்பு அறிந்து அதற்கேற்ப நடத்தல்' என்பர்.

***வரத.:*** 'நல்லகுணங்களை எண்ணி அவைகளை இயல்பாகவே பெறுதல். சான்றாண்மை அறிவினாற் பெறுவது. சான்றாண்மை நற்குணங்களோடு பல நாள் பழகுவதால் குணங்களைத் தம்மியல்பாக அமைத்துக் கொள்ளும் பண்புப்பொருளின் தன்மை. பண்பு-பொருட்டன்மை. பண்புடைமை அதாவது பொருட்டன்மையை உணர்த்தாது இயல்பாகவே பெறுதலாம்.

***தேவநேயர்:*** 'பண்பு-பொருட்டன்மை. 'பண்புடைமை - பண்புடைமையயறிந்து உயிர்கள் அப்பண்புகளைத் தன்னியல்பாக அமைத்துக்கோடல்' என்பர்.

***மு.ரா.அரு.'*** முற்கூறிய சான்றாண்மை முதலியவற்றில் தவறாது நின்றே மக்களியல்பறிந்து அவரவர்க்குத்தக நடந்து கொள்ளுதல் என்பர்.

***சாமி. சிதம்:*** 'எல்லார்தன்மைகளையும் அறிந்துநடத்தல்' என்பர்.

***சி.இ.*** 'பிறர் விரும்பும் நற்குணம் உடைமை' என்பர்.

அறம், ஒழுக்கம் உடைமை, பெருமை, சான்றாண்மை களைப் போல வரையறுத்துணர்த்த இயலாத இலக்கணம் உடையது பண்புடைமை. ***அறத்துப்பாலில்*** ஒப்புரவு போல பொருட்பாலில் உலக நடையை-உலகத்தார் நடையை அறிந்து பொருளானும், குணநலங்களானும் பிறர் நச்ச நடந்து கொள்வது என்ற இலக்கணம் உடையதாக உரைகளால் துணியக்கூடும்.

ஆனால். 'பண்பெனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்' என்ற ***கலித்தொகைப்*** பாடற்பகுதி பண்புக்கு மிகமிக ஏற்புடைய அளவு கருவியாகும். பாடு-பெருமை, பக்கம்-அனுபவித்தலாகிய நுகர்ச்சி. முறைமை, ஒழுக்கம் முதலான பல பொருளைத் தரும் பெயர்ச் சொல். இத்தனைப் பொருளையும் இணைக்க பண்புடைமையின் பொருளாகும்.

சான்றோன் ஒழுக்கமுடனும் தன் பெருமைக்கு இழுக்கின்றியும் முறையறிந்து பக்கத்திலுள்ளாருடைய நுகர்ச்சியறிந்து அதற்கேற்ப நடத்தல் எனின் ஆசிரியர் கூறும் பண்பிலக்கணம் அமைவதைக் காணலாம்.

**100.1.எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு. (991)**

**உரைப்பகுதி:**

***அ) மணக்:***

***ஆ) பரிதி.***: பண்புடைமை என்பது சரீரத்தை மாய்க்க வேண்டாம்; பொருட் சேதப்பட வேண்டாம்; பொறுமையையும் சொல்லினாலே தேடலாம், எ-று.

***இ) பரிப்.***: 'எண்பதத்தான்' பாடம்.

யாவர் மாட்டும் எளிய காலத்தை எய்துதல் எளிது என்று சொல்லுவர்; பண்புடைமை என்று வழங்கப்படுகின்ற இதனை, (எ-று).

எளிய காலம் ஆவது - எல்லாரும் தத்தம் குறை சொல்லுதற்கு எளிய செவ்வி. அஃது உடையார்க்குப் பண்பு உண்டாம் என்றது. இது பெரும்பான்மையும் அரசரை நோக்கிற்று. மேற்கூறிய வகையேயன்றி இதனாலும் பண்பு உண்டாம் என்று கூறப்பட்டது.

***ஈ) காளி.***: 'எண்பதத்தான்' 'எளிதுமன்' பாடங்கள்'

போகச் சிறப்பினான்[1] எண்ணத்தக்க சுவர்க்கபதத்தின்கண்[2] சென்று எய்துதல் மிகவும் எளிது; என்னை எனின், கீழ்ச் சொன்ன முறையானே தமக்கு இனியோரும் இன்னாதோரும் ஆகிய யார் மாட்டும் தனக்கு எடுத்த பண்புடைமை என்னும் இம்முறை முற்றிய இடத்து, எ-று.

இனி மற்று இங்ஙனம் கூறிய பண்பு இல்லாதான் செல்வம் கொண்டு ஒரு பயன் தனக்கு இல்லாமையின் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

***உ) பரிமேல்.***: யாவர் மாட்டும் எளிய செவ்விய ராதலால்,[3] அரிதாய பண்புடைமை என்னும் நன்னெறியினை எய்துதல் எளிது என்று சொல்லுவர் நூலோர், (எ.று).

குணங்களான் நிறைந்து செவ்வி எளியருமாயக்கால் பண்புடைமை தானே உளதாமாகலின், 'எண்பதத்தால் எய்தல் எளிதென்றும்' அஃது உலகத்தை யெல்லாம் வசிகரித்தற்[4] பயத்ததாகலின் அதனைத்[5] தொல்லோர் சென்ற நன்னெறியாக்கியும், அதனை[6] எளிதின் எய்துதற்கு இது நூலோர் ஓதிய உபாயம் என்பார் அவர்மேல் வைத்தும் கூறினார்.

---

1. போகச் சிறப்பினான் - இன்பம் ஒன்றையே நுகரும் சிறப்பினான்.
2. சுவர்க்க பதத்தின் - பின்னுலகம்
3. எளிய செவ்வியராதல் - காட்சிக் கெளியராதல்
4. வசிகரித்தல் - தம்வயமாக்குதல் 5, 6. அதனை - பண்புடைமையை

***ஊ) கவிராசர்:*** எல்லார்க்கும் எளியனாய் நன்மையுடையனாய் இருந்தால், பண்புடைமை என்கிற குணம் தானே வந்து சேரும், எ-று.

***ஏ) பழைய2.:*** யாவரிடத்தும் எளிய செவ்வியராதல் கிடைத்தால் பண்புடைமையென்னும் வழக்கு கிடைத்தல் எளிதென்று சொல்லுவர் நூலோர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'எண்பதத்தான்'*** என்பது ***பரிப்பெருமாள், காளிங்கர்*** கண்ட பாடம். ***'எண்பதத்தால்'*** என்பது ***பரிமேலழகரும்*** பிறரும் கண்ட பாடம்.

***'எண்பதம்'*** 'எளிய காலம் அல்லது செவ்வி' என்பர் ***பரிப்., பரிமேலழகர்.*** 'சொல்' என்பர் ***பரிதி,*** "சுவர்க்க பதம்" ***காளிங்கர்*** இவற்றுள் 'பதம் - சொல்' என்னும் பொருளில் ***நன்னூலார்*** காலத்திற்கு முன்னும், 'சுவர்க்க முதலான பதவி' எனத் ***திருமுறையாசிரியர்*** காலத்திற்கு முன்னும் வழக்கின்மை கண்டு ***திருக்குறட்*** கால ஆட்சியன்மை தெளிக.

***பரிதியுரை*** இக்குறட் சொல்லமைதிக்கு ஏற்றதன்று. ***காளிங்கர்*** குறிப்பும் அங்ஙனமே. ***தேவநேயர், பரிமேலழகரை*** ஒத்துரைத்து, "என்ப" என்றதனால் இந்நூலுக்கு முன்பும் அற நூல்கள் பல தமிழில் இருந்திருக்க வேண்டும் என்பர்.

***வரத.*** 'பண்புடைமை என்னும் வழக்கினை யார்மாட்டு எய்தல் எளிது என்ப' எனக்கூட்டிப் பொருள் காண்பர். 'பண்பு - யார்மாட்டும் நெருங்கிப் பழகுதல்' என்பர்.

***இராம.*** 'நெகிழுங் குணமுடையாரை ஏனோர் எய்துதல் எளிது' என்பர்.

இங்ஙனம் எய்தல் என்பதற்குப் பொருள் காணும் வகையில் உரையாசிரியர்களிற் சிலர் வருவித்து இடர்ப்படுகின்றனர். ***பரிமேலழகர்*** குறளமைதிச் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் காண்பர். இதுவே சிறத்தல் காண்க.

## ஒ) ஒப்புமைப் பகுதி:

***யார் மாட்டும் எண்பதத்தால் :***

எளிவரும் இயல்வினன். -திருவாய்மொழி. 1.2.3

யாரும்ஓர் நிலைமையன்னென அறிவெளிய எம்பெருமான்.

- திருவாய்மொழி.1.3 :4

*முற்றும் :*

ஆன்ற குடியன் யெண்பதம்நல் லறநீ திகளின் வழுவாமை
சான்ற மக்கட் பண்பாகும் தன்னை யுடையார் நகையானும்
ஆன்று மிகழார் பகைஇடித்து மதியார் அவர்தம் நற்குணமே
ஏன்ற உலகம் பாராட்டும் எல்லாப் பயனும் அவர்மாட்டாம்.

- விநா.அரசி.,147

## 100.2. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
## பண்புடைமை என்னும் வழக்கு. (992)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:***

***ஆ) பரிதி.:***அன்புடைமை, குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை.

***இ) பரிப்.:*** யாவர் மாட்டும் அன்புடைமையும் அமைந்த குடி[1]யின்கண் பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்று உலகத்தாரால் வழங்கப்படுகின்றது, எ-று.

அன்பு உடையன் ஆகப் பிறர் வருத்தத்திற்குப் பரிதலும் கலந்து ஒழுகுதலும் கொடுத்தலும் முதல் ஆயின உள ஆம் குடிப்பிறப்பினானே பழிப்படுவ செய்யாமையும் புறங்கூறாமையும் முதல் ஆயின உள ஆம்; ஆதலான் இவ்விரண்டினையும் உடைமை பண்பு உடைமை என்று கூறப்பட்டது.

***ஈ) காளி.:*** யாவர் மாட்டும் பரிவுடைமை[2], நெறி அமைந்த தம் குடிப் பிறப்பு என்னும் இவை இரண்டும் ஒருவர்க்கு உளது ஆயின் பண்புடைமை என்னும் முறைமை ஆம், எ-று.

***உ) பரிமேல்.:*** பிறர்மேல்அன்புடையனாதலும்உலகத் தோடமைந்த குடியின்கண் பிறத்தலுமாகிய இவ்விரண்டும், ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் சொல்லும் நன்னெறி,(எ.று).

அமைதல் - ஒத்து வருதல், குடிப்பிறத்தல் என்றது பிறந்தார்

1. அமைந்த குடி - அறிவறிந்து அடங்கிய குடி
2. பரிவுடைமை - அன்புடைமை

செயலை. தனித்த வழி ஆகாது இரண்டுங் கூடியவழியே ஆவது என்பது தோன்ற முற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக உபசரிக்கப்பட்டன.[3] இவை இரண்டு பாட்டானும் பண்புடையராதற் காரணம் கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்.:*** பிறரிடத்திலே அன்புடையவனாக இருக்கிறதும், நல்ல குடியிலே பிறந்து உலகத்துக் கேற்க நடக்கிறதும் ஆகியஇந்த இரண்டு குணமும் ஒருவனுக்குண்டானால், அவனைப் பண்புடையவனென்று சொல்லுவார்கள், எ-று.

***எ) பழைய'2:*** பிறர்மேல் அன்புடைமையும், உலகத்தோடு அமைந்த குடியின்கட் பிறத்தலும், ஆகிய இவ்விரண்டும் ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் சொல்லி வழங்கும் வழக்கமாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

அன்புடைமை, குடிப்பிறப்பு இரண்டும் தாமே எய்தினன்றி தேடிக் கொள்வதன்று; ஆயினும் 'அன்புடையனாதலும்' என்ற உரை ஆக்கம்போற் குறித்தல் கொண்டு உயிர்க்குணமாகிய அன்பை வெளிப்படச் செய்தலாகிய செயற்கையையும் பிறப்பாகிய இயற்கையையும் இணைத்துப் பண்பென்றார் என்க.

முதற்குறளில் 'காட்சிக் கெளியனாதலால் பண்புடைமை எய்தல் எளிது' என்றவர் இக்குறளில் 'அன்புடைமையும், ஆன்ற குடிப்பிறத்தலுமாகிய இரண்டுமே பண்புடைமையாம் என உலகம் வழங்கும்' என்கிறார் ஆசிரியர். ஆதலால் இவை மூன்றியல்புமே பண்புடைமைக்கு இலக்கணம் ஆதல் சாலும்.

***பரிப். 'அன்பு' 'குடிப்பிறப்பு'*** இரண்டற்கும் கொடுக்கும் விளக்கம் மிகச் சிறந்தது. ***பரிதி.*** 'அன்புடைமையும், குடிப்பிறப்புமே பண்புடைமையாம்' என்பர்.

***காளிங்கர்*** 'அன்புடைமை - பரிவுடைமை' என்பர். ***பரிமேலழகரும், காளிங்கரும்*** பிற்காலச் சான்றோர்களும் 'அன்புடைமை' எனவேயுரைப்பர். 'பரிவதூஉம் சான்றோர் கடன்'

---

3. அன்புடைமையாலும், ஆன்றகுடிப் பிறத்தலாலும் உண்டாகும் பண்புடைமையை ஒற்றுமையைப் பற்றி 'வழக்கு' எனக் கூறினமையும் காரணங்கள் காரியங்களாக உபசரிக்கப்பட்டன. இங்ஙனம் வருவன காரணம் காரியமாகிய உபசார வழக்கு.

(நாலடி, 587) 'பரிவு நீக்கிய பகுதிக்கண்ணும்' (தொல்.பொருள்.144 - 38) முதலான இடங்களில் அன்பின் வெளிப்பாடாகிய இரங்கற் பொருளிலேயே வந்தமை கண்டு, ஈண்டும் இச்சொற்குக் ***காளிங்கர்*** உரை சிறத்தல் காண்க.

'ஆன்ற குடி 'அமைந்த குடி' ***பரிப்.;*** 'உலகத்தோடமைந்த குடி' ***பரிமேலழகரும்*** அவர் பின்னோரும், 'நெறியமைந்தகுடி' ***காளி.;*** எல்லா நல்லிணக்கமும் அமைந்த குடி' ***தேவநேயர்.*** பொருள் கூறுவார் அனைவரும் அமைந்தது எது என்பதில் சிறு மாற்றம் உடையராயினும் 'ஆன்ற - அமைந்த' என்பதில் ஒரு முடிபினரேயாவர். அன்புடைமைக்கும், குடிப்பிறப்பிற்கும் ***பரிப்பெருமாள்*** தரும் விளக்கம் மிகச் சிறந்தது.

## ஓ) ஒப்புமைப் பகுதி :

***அன்புடைமை ஆன்ற குடிப்பிறப்பு*** :

அன்பும் குடிப்பிறப்பும். - குறள்., 681

***பண்புடைமை என்னும் வழக்கு :***

.................... பகையன்று பண்பொழிந்
தீர மன்றிது வென்செய்த வாறுநீ. - கம்ப., 4130

## 100.3. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. (993)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** ...............

***ஆ) பரிதி.:*** மெய், வாய், கண், மூக்குச் செவி உண்டு; உறுப்பினால் குறைவில்லை என்பது நன்றல்ல. மக்கட்பண்பு உள்ளதே நன்று, எ-று.

***இ) பரிப்.:*** மக்கள் ஒப்பு ஆவது உறுப்பு ஒத்தல் அன்று; செறியத்தக்க[1] குணங்களை ஒத்தல்; அதனை ஒப்பதே ஒப்பு ஆவது, எ-று.

செறியத்தக்க குணங்கள் உள ஆதலின் செறியத்தக்க குணம் என்றார். பண்பு இல்லாதார் மக்கள் அன்று என்றது.

1. செறியத்தக்க - நெருங்கத்தக்க

***ஈ) காளி.*** : மெய், வாய், கை, கால், கண், மூக்கு, செவி முதலிய ஒத்தல் மக்கள் ஆவதற்கு ஒப்பு அன்று; மற்று யாதோ ஒப்பு எனின், ஒருவருக்குப் பெருமை பொருள் எனத்தக்க பண்பு ஒத்தல் யாது? மற்று அது அகத்து உறுப்பாகிய நெறிக்குறிப்பு[2] அன்றே[3], மற்று அதனைச் சிலரோடு சிலர் ஒப்பதே ஒப்பாவது, எ-று.

***உ) பரிமேல்.***: செறியத்தகாத உடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன்மக்களோடு ஒப்பாகாமையின் அது பொருந்துவதன்று, இனிப் பொருந்துவதாய ஒப்பாவது செறியத்தக்க பண்பாலொத்தல், எ-று.

வடநூலோர் அங்கம் என்றமையின்; உறுப்பு என்றார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உயிரின் வேறாய் நிலையுதலில்லா உடம்பொத்தல் அன்று, வேறன்றி நிலையுதலு டைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித்தாய அவர் பண்பினை யுடையனாக[4] என்பதாம்.

***காரி.:*** வெறுத்தக்க - செறியத்தக்க. உறுப்பு - உடம்பு. வடநூலார் அங்கம் என்றமையின் என்க.

***ஊ) கவிராசர் :*** பெறுதற்கரிய மனுஷசரீரத்தை எடுத்தாலும், நல்ல குணம் இல்லாவிட்டால் பெரியவர்களுடனே சரியன்று; நல்ல குணமும், நல்ல செயல்களும் உண்டாயிருக்கிறதே நல்லவர் களுடனே சரி, (எ-று)

***ஏ) பழைய2:*** உடம்புறுப்பால், பண்பில்லாத மக்கள் பண்புடை மக்களோடு ஒத்தல், ஒப்பன்று; உலகத்தாரால் வெறுக்கத்தக்கது. பண்பால் ஒப்பதே ஒப்பாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'உறுப்பொத்தல்'***

'மெய் முதலான உறுப்புக்களான் ஒத்தல்' எனப ***பரிதி., பரிப்., காளி., மு.கோ., சி.இ.*** இவர்கள் கூறினர். ***பழைய2, வரத., குழந்தை*** இவர்கள் 'உடம்புறுப்பால் ஒத்தல்' என்பர். ***பரிமேல்.*** ஒட்டிய பின்னவர்களும் 'உடம்பால் ஒத்தல்' என்பர்.

---

2. அகத்து உறுப்பாகிய நெறிக்குறிப்பு - அன்பு முதலிய அகத்துறுப்புக்கள்.
3. 'என்றே' என்பது பிரதிபேதம்.
4. உடம்பொத்தல் பண்பொத்தல் இரண்டனுள் உடம்பொத்த லன்று பண்பொத்தல் என்றது. அதனால் பண்பான் ஒப்பாகுக என்பதாம்.

'உறுப்பு - உடல்' எனப்பொருள் படுமாற்றை விளக்கவந்த ***பரிமேலழகர்*** 'உறுப்பினை அங்கம் என்பர் வடநூலார். வடமொழியில் அங்கம் - உடல் எனவும் பொருள்தரும் ஆதலின் உறுப்பு - உடல் எனப் பொருள் கண்டோம் என்பர்.

***'என்பும் உரியர் பிறர்க்கு'*** என்புழி 'என்பு - ஆகுபெயர்' என்ற ***பரிமேலழகர்*** 'உறுப்பு என்பது சினையிற் கூறும் முதலறி கிளவியாய், உடலையுணர்த்துதலுங் கூடும் ஆயினும், அவற்றைக் கூறாமல் உறுப்பு - அங்கம் - உடல் என வழிவழிப் பொருள் கூறினர். வடமொழிக் கண்ணும் அங்கம் என்பது இலக்கணையானே உடம்பினை யுணர்த்திற்றாதல் காண்க.

***'வெறுத்தக்க பண்பு'*** 'செறியத்தக்க குணங்கள்' ***பரிப்., பரிமேல்.;***

வெறுக்கை-பொருள், மிகுதி என்றிருத்தலின், பெருமை பொருள் எனத்தக்க பண்பு ஒத்தல் என்றனர் ***காளிங்கர்.***

***பழைய உரை,*** 'உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்று, வெறுத்தக்க' எனப்பிரித்து, 'பண்பிலார் உடலுறுப்பால் பண்புடையாரோடு ஒத்தல் ஒப்பன்று; உலகத்தாரால் வெறுக்கத்தக்கது' என்னும். இவ்வுரை 'ஒத்தல் ஒப்பன்று' என ஒருமைப் பயனிலை கொண்டு முடிந்த தொடர், திரும்ப 'வெறுத்தக்க' பன்மைப் பயனிலை கொண்டு முடியாமையைக் கருதி அதனை வெறுத்தக்கது என்ற திருத்தமுடையது. இத்தகைய மாற்றங்களே இவ்வுரையின் சிறப்பின்மையைக் காட்டுகிறது.

ஆகவே இவர் 'வெறுக்கத்தக்கது' என்பதன் திரிபே 'வெறுத்தக்கது' எனக் கருதுகிறார் எனல் தகும். அன்றியும் இவர்தரும் விளக்கம் 'ஒருவன் பண்பாளனாயிருக்கும் போது விரும்பப்படுவான். பண்பிலானாயின் பிணம் போல வெறுக்கப்படுவான்' என்ற கருத்தைத் தருவது போலும்.

***தேவநேயர்,*** 'மெய்வாய் முதலான உறுப்புகளாலும், முழு உடம்பாலும் ஒத்திருத்தல் ஒப்பன்று; உயிரை யொட்டிய பண்பான் ஒத்தலே ஒப்பு' என்பர்.

***இராம.*** 'தம் முன்னோர்களாய தமையன் தந்தையர்களின் உறுப்பொடு ஒத்தல் ஒப்பாகாது. வெறுக்கை தக்க பண்பு ஒப்பவே ஒப்பு' என்பர்

*வரத.* 'பண்பு வெறுத்தக்க (ஒத்தல்) ஒப்பதாம் ஒப்பு' எனக் கூட்டி, 'தகுதி, கல்வி, அறிவு முதலான குணங்களான் அளவு அதிகமாக ஒத்தலே ஒப்பு' என்பர். இவரும் வெறுக்கை - மிகுதி. தக்க - (மிகுதிக்கு) தக்க - என்ற கருத்தினரேயாவர்.

இவற்றுள், 'உடலின் புற ஒப்பு ஒப்பன்று. அகத் தோற்றமாகிய பண்பால் ஒத்தலே ஒப்பு' என்னும் கருத்தை வழங்கும் ***பரிமேலழகர்*** போன்றார் உரை ஏற்புடையது. ஆனால் உடல் முழுதும் ஒத்தல் வேண்டா. முகத்தோற்றம், கண், கால், தோள் முதலிய சிற்சில உறுப்புக்களின் ஒப்பைக் கொண்டே அறிதல் உலகியலாதலின், உறுப்பு ஒத்தல் எனலே போதுமானது என்பது ***வள்ளுவர்*** உள்ளமானால் இத்தனை முயற்சி தேவையில்லையே.

'விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே' (தொல்.சொல்.347) ஆதலின் செறிதற் பொருள் சிறந்ததாம். ஆனால், 'உயிரின் வேறாய், நிலையாத உடம்பு என்றும் உயிரின் வேறாகாது நிலையுதலையுடையது பண்பு' என்றும் ***பரிமேலழகர்*** விளக்கந் தருவது சிந்தனைக்குரியது. ஆசிரியர் 'என்போடியைந்த வழக்கென்ப' என்ற குறட்பாவால் உயிர்ப்பண்பாகிய அன்பைப் போல உடலும் செறியத்தக்கது என்கிறார்.

## 100.4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
## பண்புபா ராட்டும் உலகு. (994)

***உரைப்பகுதி:***

***ஆ) பரிதி.***: நயனொடு நன்றி புரிந்த பயன் உள்ளபேர்கொண்ட ஒழுக்கத்தைப் பாராட்டும் உலகம், எ-று.

***இ) பரிப்.***: பிறரால் விரும்பப்படுதலோடே கூட நன்னெறியின் கண்ணே பொருந்தின பொருள் உடையாரது குணத்தினை உலகம் கொண்டாடும், எ-று.

இவை எல்லாரும் புகழ்வர் என்றது.

***ஈ) காளி.***: ஒழுக்கத்துடனே நல்லறமும் தங்கியவழி இருமைப் பயனும் உளது அன்றே: அதனால் இப்பயனுடையார் பண்பினையே கொண்டாடும் இவ்வுலகு; எனவே உலகின் உள்ளோர் யாவரும் கொண்டாடுவர், எ-று.

*உ) பரிமேல்.:* நீதியையும் அறத்தையும் விரும்புதலால் பிறர்க்கும் தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை, உலகத்தார் கொண்டாடா நிற்பர், (எ-று).

புரிந்த என்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு[1], நயனொடு நன்றி புரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின்[2] அதனைப்[3] பாராட்டும் என்றார்.

*ஊ) கவிராசர்:* நீதியையும் தருமத்தையும் விரும்பியிருக்கிற படியினாலே, பிறருக்கும் தமக்கும் பலனாகிறவர்களுடைய நன்மையை உலகத்தார் கொண்டாடுவார்கள், எ-று.

*எ) பழைய2:* நீதியையும் அறத்தையும் விரும்புதலால் தயக்கும் பிறர்க்கும் பயன்படுதலுடையார் பண்பினைப் பாராட்டி நிற்பர் உலகத்தார்.

புரிதல் : விரும்புதல் ; செய்தலும் ஆம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***நயன்-*** 'பிறரால் விரும்பப்படுதல்' ***மணக்.,*** ***பரிப்.***; ஒழுககம்' ***காளிங்கர்;*** 'நீதி' ***பரிமேல்.*** முதலானோர்; 'நேர்பாடு' ***தேவநேயர்;*** 'தான் இன்பமாய் வாழ்தல்' ***வரத.***; 'இரக்கம்' ***இராம.***;

***நன்றி-*** 'நன்னெறி' ***மணக், பரிப்;*** 'நல்லறம்'-***காளிங்கர்;*** 'அறம்'- ***பரிமேல்.*** முதலானோர்; நல்வினை-***தேவநேயர்,*** பிறர்க்கு இன்பஞ் செய்தல்-***இராம.***:

'நயன் ஈன்று' (94) முன்னரும் வந்துளளது. அங்கும நல்வினை எனவே பொருள் தந்திருத்தலான் நல்வினை அல்லது நீதியென்றே பொருள் காணல் தகும். நன்றி என்ற பண்புக்கு எப்பொருளும் தகும்.

***பரிமேல்.*** 'புரிந்த பயன்உடையார்-விரும்புதலால் பயன் படுதல் உடையார்' என மூன்றனுருபு விரித்து ஏதுப் பொருளா தாக்குவர். ஏனோர் பெயரெச்சத் தொடராகவே விரிப்பர். இதனைக்

1. 'புரிந்த' என்ற செய்த என்னும் பெயரெச்சத்தைப் 'புரிதலால்' எனக் காரணப் பொருளாகக் கொள்ளுக என்பதாம்.
2. பண்பில்லாரிடத்து நயனொடு நன்றி புரிந்தாலும் அது காரணமாகத் தமக்கும் பிறர்க்கும் பயன்படுதல் இலவாம் என்றது.
3. அதனை - பண்பினை

கரணியர் பொருளது என்பர் *தேவநேயர்* காரணப் பொருளாதாக்கு வதே சிறப்பு.

அங்ஙனமே பயனுடையார்-பயன்படுதலுடையார் எனச் செயல்பாட்டு வினைப்பெயராக்கித் தனக்கும் பிறர்க்கும் பயன்படு தலுடையார் என்பர் ***பரிமேலழகர்.***

'பயனைக் கருதுவார்' என்பர் ***கா.சு.*** 'புரிதல்' என்பதற்குச் செய்தல் என்பதைக் காட்டிலும் விரும்புதல் சிறந்தது.

இவற்றுள் எவ்வகையானும் ***பரிமேலழகர்*** உரை தகுதியுடையது.

### ஒ) ஒப்புமைப் பகுதி :

**நயன் :**

நீதியார் கருணையின் வெறியினார் .................. கம்ப., 3892.

## 100.5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு. (995)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:***

***ஆ) பரிதி.:*** ஒருவரை இகழ்ந்து பேசினால் பலரும் சிரிக்கப்படும். பகைவருள்ளும் பண்புடையாளார் பெருமையைப் பாராட்டும் உலகம், எ-று.

***இ) பரிப்.:*** அறிவார்மாட்டு நகையாடுதலின் கண்ணும் இகழ்ச்சி தோற்றும் ஆயின்[1] இன்னாது ஆம்: பகை ஆகும் இடத்துப் பண்பு தோற்றம் ஆயின் பெருமை உளது ஆம், எ-று.

எனவே அறியாதார்மாட்டு இவை இரண்டும் இல்லை ஆம் என்றவாறு ஆயிற்று. இகழ்ச்சி என்றது பண்பு இன்மை: இஃது அறிவுடையார் மாட்டு ஒருதலையாகக் கொண்டு ஒழுக வேண்டும் என்றது.

1. தோற்றுமாயின் - உண்டாயின்

ஈ) ***காளி.***: தாம் சிலரோடு இளமைகொண்டு நகையாடும் இடத்தும் இகழ்ந்து உரை கூறி நகையாடும் இகழ்ச்சிப்பாடு இன்னாது; அதுவும் இன்றி இனி ஒருவரோடு பகை பூணுங்காலும் யாவர் மாட்டும் தான் இனியராய் விடுதல் யாவர் மாட்டு உளது ஆவது எனின், தாம் செய்யத் தகுவதாகிய நெறிப்பாடு அறிந்து ஒழுகுவார்மாட்டே உளவாம், எ-று.

உ) ***பரிமேல்.***: தன்னை இகழ்தல்[2] ஒருவற்கு விளையாட்டின்கண்ணும் இன்னாது; ஆகலான் பிறர் பாடறிந்து ஒழுகுவார்மாட்டுப் பகைமை உள்வழியும் அஃது உளதாகாது இனியவாய பண்புகளே உளவாவன, (எ-று).

'பாடறிவார்' எனவே அவ்வின்னாமை[3] அறிதலும் பெற்றாம். அதனை அறிந்தவர் பின் அது[4] செய்யார் என்பது கருத்து. இதற்குப் பிறரெல்லாம் இரண்டு தொடரும் தம்முளியையாமல் உரைப்பாரும்[5] இன்னாது என்னுஞ் சொற்குப் பிறவாது என்று உரைப்பாருமாயினார்[6].

ஊ) ***கவிராசர்:*** ஒருவகை விளையாட்டுக்கு இகழ்ந்து பேசுகிறதும் பொல்லாததாயிருக்கும். ஆனபடியினாலே, பிறருடைய குணங்களை அறிந்து நடக்கிறவர்களிடத்திலே பகை உண்டானாலும், அது பகையாகாது; நல்ல குணமே உண்டாம், எ-று.

எ) ***பழைய2:*** நகைத்து விளையாடுமிடத்தும் இகழ்ச்சி செய்தலின் -னாதாகலான், பிறர் குணமறிந்து ஒழுகுவாரிடத்துப் பகையுள்ள வழியும் இகழ்ச்சி உளவாகா இனிய பண்புகளே உளவாவன.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***பரிதியுரை*** சொற்பொருளன்று பொழிப்புமன்று; கருத்தியையும் இல்லை. 'நகையுள்ளும்' என்பதைச் செய்யுமென முற்றாகக் கொண்டு 'சிரிக்கப்படும்' எனப் பொருள் காண்பர். இரண்டாம் அடியிலும் அங்ஙனமே.

---

2. தன்னை இகழ்தல் - பிறர்தன்னை இகழ்ந்து பேசல்
3. அவ்வின்னாமை - நகையுள்ளும் இகழ்ச்சி இன்னாதென்பதை
4. அது - இன்னாமை
5. காளிங்கர், பரிப்பெருமாள் உரைப்பர்
6. தொகுப்பும் குறிப்பும் காண்க.

*பரிப்.,* 'பாடறிவார்' என்பதனைப் பிரித்து 'அறிவார் மாட்டு நகையுள்ளும் இகழ்ச்சி இன்னாது; என்றும் பகையுள்ளும் பண்பு பாடு உள' என்றும் இயைத்துப் பொருள் கண்டுள்ளார். இங்ஙனம் பாடறிதலைப் பிரித்தியைத்தலாற் போதிய பயனின்மையின் மரபுமன்று; சிறப்புமன்று. இவர் உரைப்போக்கு 'நகையுள்ளும் இகழ்ச்சி தோற்றுமாயின் இன்னாது எனவே இகழ்ச்சி தோன்றாமல் நகைக்கலாம்' என்பது பெறப்பட்டு, 'அது இனியது' என்பதும் எதிர்மறை முகத்தாற் பெறப்படும். இதனையும் ஆசிரியர் 'நகுதற் பொருட்டன்று நட்டல்', 'நகைவகையராகிய நட்பின்' 'பகைவரால் பத்தடுத்த கோடியுறும்' என்னும் பாக்களால் நட்பினும்நகைத்தலை விளக்குதலாலும் ஈண்டு நகையை ஒப்பியுரையார் என்பது உறுதி. ஆதலால் இவருரை ஏற்புடையதுமன்று. சில சொற்களுக்குப் பொருளும் இல்லை.

*காளிங்கர்* 'நெடுநாட் பழகிய நட்பினும் இகழ்ந்து உரையாடுவது இன்னாது' என்கிறார். இதுவும் முற் கூறியவாற்றான் நேரிது அன்றென்பது அறியப்படும்.

*வரத.:*'பகையுள்ளும் பாடறிவார்மாட்டு, நகையுள்ளும் இகழ்ச்சி இன்னாது' எனக்கூட்டிப் பொருளுரைப்பர். உரையிற் 'பண்புள' என்ற சொற்குப் பொருள் விடுபட்டமையை எண்ணி விளக்கத்தில் 'பண்புளபாடு' என 'உயர்வு' என்னும் பொருளைத் தரும் 'பாடு' என்பதனோடு 'பண்புளபாடு' என இயைத்து விளக்குவர்.

*இராம.*'பாடு - துன்பம்' எனப் பொருள் கண்டு, 'பாடு அறிவார்மாட்டுப் பகையுள்ளும் பண்புள; (அதனால் அவர்கள்) நகையுள்ளும் இகழ்ச்சி இன்னாது' எனக் கூட்டிப் பொருள் உரைப்பர்.

*சி.இ., குழந்தை* 'பாடு - இயல்பு' எனப் பொருள் கண்டு முன்னையரை ஒத்து உரைப்பர். ஆகவே, 'பாடு' என்னுஞ் சொற்குப் பொருள் காணும் வகையான் *குறட்*கருத்தை முழுதுமாற்றுவர் எனலாம்.

இவற்றுள் தன்னனுபவங் கூறுவது போல 'தன்னையிகழ்தல் விளையாட்டினும் இன்னாதது; ஆதலாற் பிறர் பெருமைகளையறிந்து ஒழுகுபவனிடத்தும் பகைமையிருப்பினும் இன்னா உளவாகா. இனிய பண்புகளே உளவாம்.' என்ற *பரிமேலழகர்* உரையே சிறந்தது. 'இரு தொடராக்கி இயையாமல் உரைப்பர்' என்ற *பரிமேலழகர்* குறிப்பு *காளிங்கர், பரிப்.* இருவரைச் சுட்டும். 'இன்னாது - பிறவாது' என்பர் யாரென்று அறியக் கூடவில்லை. பின்னுரைகளும் சிறப்பிலவே.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

*நகையுள்ளும் இன்னாதிகழ்ச்சி :*

நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர் . - பதிற்று.,70.12

கோதாட்டொழி. - ஆத்தி.,42

*பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு :*

................................ தெவ் வர்தொழும்
வீர ............................................ - கம்ப., 3710

புகையுடைத் தென்னி னுண்டு பொங்கன லங்கென் றுன்னும்
மிகையுடைத் துலக நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பிற் றீரா
நகையுடை முகத்தை யாகி யின்னுரை நல்கு வாயால்.
- கம்ப., 4237.

## 100.6. பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன். (996)

### உரைப்பகுதி :

*அ) மணக்.* :

***ஆ) பரிதி.***: பண்புடைமையாலே உலகம் என்றும், பெரியோர் என்றும் பெயராயிற்று, அது இல்லையாகில் மண்ணில் மாய்வது நன்று,எ-று.

***இ) பரிப்.***: பண்பு உடையாரைத் தோற்றி உலகமாகிய பலவகை உயிரும் உண்டாயிற்று; அத்தோற்றம் இல்லையானால் அவ்வுயிர்கள் எல்லாம் மண்ணின்கண் புக்கு மாய்வது நிலை, எ-று.

இது பண்பு உடையார் பிறத்தலானே உலக நடை தப்பாமல் வருகின்றது என்றது.

***ஈ) காளி.***: மக்கட்பண்பு உண்டாகிய மரபு உடையாளரைப்[1] பெற்று உண்டாயிற்று. ஒழுக்கம் என்று மறைநூலும் பிறவும் வகுத்து உரைக்கின்ற அனைத்தொழுக்கத்திற்கும் காரணமாகிய அம்மக்கட் பண்பு என்பது ஈண்டு இல்லையாயின் பிறந்தார்யாவரும் பெரும்பாவிகளே ஆனார். ஆதலால் அந்தப் பூமிக்கும் பெரும் பாரமே யாகும் இதனைத் தரிக்க மாட்டாது, எ-று.

***உ) பரிமேல்.***: பண்புடையார்கண்ணே படுதலால் உலகியல்[2] எஞ் ஞான்றும் உண்டாய் வாராநின்றது; ஆண்டுப்படுதல்[3] இல்லை யாயின், அது மண்ணின்கண் புக்கு மாய்ந்து போவதாம், (எ-று).

பட என்பது திரிந்து நின்றது[4]. உலகு ஆகுபெயர்[5]. மற்றைப் பண்பில்லார் சார்பின்மையின் ஓர் சார்புமின்றி[6] மண்ணின்கண் புக்கு மாயுமது வேண்டாவாயிற்று என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்[7] வந்தது. இவை நான்கு பாட்டானும் அதனை[8] உடையாரது உயர்ச்சி கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்:*** பண்புடையவர்களான நல்ல குணமுடையவர்கள் உண்டாகிற படியினாலே உலக இயற்கை எந்நாளும் உண்டாய் வருகிறது. பண்புடையவர்கள் இல்லாவிட்டால் உலக இயற்கை மண்ணிலே புகுந்து கெட்டுப் போம், எ-று.

***ஏ) பழைய2.***: பண்புடையாரிடத்தே உலகியல்பு உண்டாயிருத்தலால் எஞ்ஞான்றும் உலகியல்பு நடந்து வருகின்றது. பண்புடையாரிடத் தில்லையாயின் உலகியல்பு மண்ணிடத்து வீழ்ந்து மாய்ந்து போவதாம்.

உலகியல்பாவது மானம், குலம், ஈகை, ஒப்புரவு, நட்பு முதலாயின பல நன்மைகள் என்க. இவை பண்புடையாரிடத் திருத்தலால் உலகத்தினும் நடக்கிறது.

---

1. மரபு உடையாளர் - வழிவழி வரும் தொடர்புடையாளர்
2. இயல் - ஒழுக்கம்
3. ஆண்டுப்படுதல் - உலகியல் பண்புடையாரிடத்தே பொருந்துதல்
4. 'காரணப் பொருளில் வந்த பட என்னும் செவ்வென் எச்சம் பட்டு எனச் செய்தென்' எச்சமாகத் திரிந்து நின்றது.
5. உலகு என்னும் இடப்பெயர் உலகில் நிகழும் ஒழுக்கத்தை உணர்த்துதலால் இடவாகு பெயராம்.
6. சார்புமின்றி - ஆதாரமில்லாமல்.
7. தொகுப்புரை கண்டு திருத்திக் கொள்க.
8. அதனை - பண்பினை

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***பரிதியுரை*** செப்பம் இல்லது. ***பரிப்., காளிங்கர்*** இருவரும் ‘பட்டு’ என்பதற்குத் ‘தோற்றி’ என்றும், ‘பெற்று’ என்றும் பொருள் செய்கின்றனர். ***பரிமேல்*** ‘பண்புடையார் கண்ணே படுதலால் அதாவது சார்தலால்’ எனப் பொருள் கொள்வர். ‘பண்புடையாரைத் தோற்றி உலகம் உண்டு’ என முடித்துக்காட்டுவர் போலும். ‘தோற்றி - தோற்றுவித்த’ என்னும் பொருளைத் தரும் பிறவினை எச்சமாயின் ‘உலகம் தோற்றி உளதாயிற்று’ என முடிக்கலாம்.

‘மன் - நிலை’ என்பர் ***பரிப்பெருமாள்.*** இது ***தொல்காப்பியம்*** கூறும் பொருளன்று. ***நன்னூலும், பிங்கலந்தையும்*** கூறும் பொருள். ***பரிமேலழகரும்*** பிறர் சிலரும் ‘ஒழியிசைப் பொருளது’ என்று விளக்கமும் தருவர். இவற்றுள் ‘ஒழியிசைப் பொருள்’ என்பதே பொருணயம் பயப்பது. ஏனையோர் ‘அசைநிலை’ என்று கூடக்கூறாமல் வாளாவிடுத்தனர்.

மேலும், ***பரிப்.*** ‘உலகமாகிய உயிர்கள் அனைத்தும்’ என இடவாகு பெயராக்கி உரை கண்டவர் கருத்துரையில் ‘உலக நடை’ என்றனர். இங்ஙனம் இவர் உரையில் முரண்பட நிற்பன பல. இயைபு விரிந்து முரணீங்க உரை கோடல்தகும்.

***காளிங்கர்,*** பண்புடையாரைப் பெற்றதால் உண்டாயிற்று மக்கட் பண்பு. அது மறைநூலும் பிறவும் வகுத்து உரைக்கின்ற அனைத்தொழுக்கத்திற்கும் காரணமாயது என்பர். இதன் கருத்து பண்புடையாரால் உலகத்தில் பண்பு வளர்கிறது என்பதாயினும் தெளிவில்லை. இப்பாவின் பிற்பகுதிக்குக் கருத்தே கூறுவர். இவ்வுரை ‘இருநிலந்தான் தாங்காது மன்னோ பொறை’ என்ற குறட்பாவின் நினைவால் எழுந்தது எனலாம்.

***பரிமேலழகரும்*** அவர் பின்னோரும் ‘பண்புடையார் கண்ணே படுதலால் உலகியல் இடையறாது வருகின்றது’ என்பர். இப்பகுதிக்கு ‘மற்றைப் பண்பிலார் சார்பன்மையின் ஓர் சார்புமின்றி மண்புக்கு மாய்வது வேண்டாதாயிற்று’ என்பர். உரையில் மாய்ந்து போம் என்றவர் ஈண்டு மாயுமது வேண்டாவாயிற்று என்றல் முரணாகின்றது. இது பாடங் கொள்ளுதலால் நேர்ந்த பிழையாகலாம். இருக்க வேண்டிய பாடம் ‘மற்றைப் பண்பில்லார் சார்பின்மையின் ஓர் சார்புமின்றி

மண்புக்கு மாய்வது வேண்டியதாயிற்று' என்பதே. ஆதலால் 'வேண்டாவாயிற்று' என்பது 'வேண்டியதாயிற்று' என்றிருத்தல் நலம்.

***பரிமேலழகர்*** 'பண்புடையார் கண்ணே படுதலான்' என ஏழனுருபு விரித்து எழுதுவதால், 'உயிரீறாகிய உயர்திணைப் பெயர் எல்லாவழியும் இயல்பாம்' என்பதால் 'பண்புடையார் பட்டு' என இயல்பாய் இருத்தலே இயைபுடையது.

'பண்புடையாரைத் தோற்றி', 'பண்புடையாரைப் பெற்றதால்' என இரண்டனுருபு விரிக்கப்பெறின், இயற்கை மருங்கின் மிகற்கைத் தோன்றல்' இரண்டாம் வேற்றுமைக்குரிய விதியாதலின் இயைபுடையதாகும். ஆகவே இரண்டனுருபு விரித்து எழுதும் ஏனோர் உரை இயைபுடையதாகும். ஏடுகள் கண்டு தக்க பாடம் கோடல் சிறப்பு.

***தேவநேயரும்*** 'பண்புடையாரிடத்துப் படுதலால்' என்பர். இதுவும் முற்கூறிய தவறாகலாம். 'உடையார்' உயர்திணைப் பெயராதலின் இந்தப் பிழை கருதப்படுகிறது. இதனை வினையாலணையும் பெயராகக் கொள்ளின் வலி மிகலாம் என்பாரும் உளர். வினையாலணையும் பெயரும் பெயர் தானே என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

***வரத.*** 'பண்புடையார் செயலின் அளவுக்கு ஏற்ப உலக மக்கள் பயன்பட்டு வாழ்வார்கள். அப்பண்பாட்டின் பயனின்றேல் உலகம் குறைந்து அழியும்' என்பர். இதில், பயன்பட்டு வாழ்வார்கள் என்பதற்கு ஏற்பப் 'பயன்பெற்று' என்றிருப்பது நலமாகுமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. 'குறைந்து' என்னும் பொருளை உணர்த்தும் சொல் எது? இங்ஙனம் சிறு குறைகளை நிறைவிப்பது நல்லது.

## ஏ) ஒப்புமைப்பகுதி :

***பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் :***

உண்டால் அம்மஇவ் உலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
தஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்

தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. - புறம்.,182

ஆங்கு,
பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇயர் என்பது அல்லதை
ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே. -சிலப்.,1:13-19

*முற்றும் :*

ஓய்ந்தனன் இராம னென்னில் உலகமோ ரேழும் ஏழும்
ஓய்ந்துறும் இரவி பின்னும் திரியுமே தெய்வம் என்னாம்
விரிஞ்சன் முன்னா உயிரெலாம் வெருவல் அன்னை
ஆய்ந்தவை யுள்ள போதே அவருளர் அறமும் உண்டால் - கம்ப.,8829

## 100.7. அரம்போலு கூர்மைய ரேனும் மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர். (997)

*உரைப்பகுதி:*

*அ) மணக்.:*

*ஆ) பரிதி* : கல்வியின் கூர்மை அரம்போல் ஆனாலும் மரம் போல்வர் மக்கட் பண்புடையரல்லாதவர், எ-று.

*இ) பரிப்.*: அரத்தை ஒத்த கூர்மையை உடையர் ஆயினும் மக்கள் பண்பு இல்லாத மாந்தர் மரத்தை ஒப்பர், எ-று.

அரம் போலும் தனக்கு உள்ள கூர்மை பிறர்மாட்டு மடியாமையும், தான் பிறரைக் கூரியர் ஆக்குதலும் ஆம். இஃது உணர்வு உடையார்ஆயினும் உணர்வு இல்லாத மரத்தை ஒப்பார் என்றது; என்னை? உணர்வால் பயன் இன்மையின்.

*ஈ) காளி*: அரம் போலும் யாதானும் ஒரு பொருளை வகுத்து உள்புக்கு அறியும் அறிவின் கூர்மையை உடையாராயினும் யாதும் அறியாத திண்ணிய உருபினதாகிய மரம் அனையர்: யார் எனின் மக்கள் வடிவினராய் வைத்தும் அம்மக்கட் பண்பாகிய மரபு இல்லாதவர்கள், எ-று.

***உ) பரிமேல்.***: நன்மக்கட்கே உரிய பண்பில்லாதவர், அரத்தின் கூர்மை போலும் கூர்மையை உடையாரேயாயினும், ஓரறிவிற்றாய மரத்தினை[1] ஒப்பர், (எ-று).

அரம் ஆகுபெயர்[2]. ஓரறிவு-ஊற்றினை அறிதல். உவமை இரண்டனுள்[3], முன்னது[4] தான் மடிவின்றித்[5] தான் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய[6] தொழில்பற்றி வந்து; ஏனையது[7] விசேட அறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அவ்விசேட அறிவிற்குப்[8] பயனாய மக்கட்பண்பு இன்மையின், அது தானும் இல்லை என்பதாயிற்று.

***ஊ) கவிராசர் :*** மனுஷருக்குரிய பண்பில்லாதவர். அரத்தின் கூர்மை போலும் கூர்மையான புத்தியையுடையராயிருந்தாலும் ஓரறிவாகிய மரத்துக்குச் சரி.

அரமானது தன்னுடனே சேர்ந்தவற்றைப் பொடியாக்குவது போலே, கூர்மையான புத்தியிருந்தாலும் தயையில்லாத பேர் தங்களைச் சேர்ந்தவர்களைக் கெடுப்பர், எ-று.

***எ) பழைய2:*** நன் மக்கட்கு உரிய பண்பில்லாதவர், இரும்பைத் தேய்க்கும் அரத்தின் கூர்மை போலக் கூர்மையுடையரே ஆயினும் ஓரறிவியற்கையாகிய மரத்தினை ஒப்பர்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***வள்ளுவர்*** ஆட்சியில் 'அரம்' என்ற சொல் முன்னர் இரண்டிடங்களில் வந்துள்ளன. 'தேய்க்கும் (567)', 'தேயும்'(988) என்ற சொல்லினிணைப்பால் இரும்பு முதலிய தாதுப் பொருளை அராவும் அரத்தினையே குறிக்கின்றது.

சங்க கால வழக்கில் 'வேளாப் பார்ப்பான் வாளரந்துமித்த' (***அகநா.,***24.1) 'அரம்போழ் அவ்வளை' (***அகநா.,***6.1) 'அரங்கண்டன்ன

1. புல்மரம் முதல் உற்றறியும் ஓரறிவுயிர் என்பதால் கூறியது.
2. அரம் என்னும் பொருட்பெயர் அதன் பண்பாகிய கூர்மையை உடையது ஆதலால் பொருளாகுபெயர்.
3. அரத்தின் கூர்மை, மரம் என்னும் உவமானம் ஆகிய இரண்டு.
4. முன்னது - அரத்தின் கூர்மை
5. மடிவு - மடங்குதல்
6. மடிவித்தல் - கெடச் செய்தல்
7. ஏனையது மரம் என்பது.
8. விசேட அறியு மனனனுணர்வு; 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்பதனால் உயிர்கள் அனைத்திற்கும் இல்லாத சிறந்த அறிவுடைமை மனனனுணர்வாதலின் அதனை விசேட அறிவு என்றாராம்.

அருங்காட்டுள்' (*சீவக.,*341) 'அரம் போழ்ந்தறுத்த கண் நேர் இலங்குவளை' (*மதுரைக்.,* 316) என்பன பல இடங்களில் வாளரத்தை உணர்த்தும் மரபுகளும் பல உள. ஆதலால் ***காளிங்கர்*** வாளரத்தை மனங் கொண்டு, 'அரம் யாதானும் ஒரு பொருளை வகுத்து உள்புக்கு அரிவது போல, மதி யாதானும் ஒரு பொருளைப் பகுத்து உள்புக்கு ஆய்ந்து அறியும்' என்றனர். இதனை உளங்கொள்ளாத சிலர் அரம் என்னும் கருவிக்கு இவ்விளக்கம் பொருந்தாது என மறுத்தனர். அரம் வாளரமுமாம் என்பதை எண்ணி இவ்வுரையும் ஏற்புடையதாம்.

ஆசிரியர் ***வள்ளுவனார்,*** இவ்விரண்டுரைகளையும் கருத இடம் அளிப்பார் போல 'அரம்போலும் கூரியரேனும்' எனக் கட்புலனுக்கு மிக நுண்ணியதாய்ப் புலனாகும் அரக் கூர்மையை அறிவுக்காட்சிக்கு மட்டும் புலனாகும் மதிக்கூர்மைக்கு ஒப்புரைக்கக் கருதியவர் இங்ஙனம் கூறுவது கண்டு ***காளிங்கர்*** உரையும் ஏற்புடையதெனக் கருதல் தகும்,

***பரிமேலழகர்*** 'அரம்-அரத்தின் கூர்மை' என ஆகுபெயராக்கிப் பொருள் கண்டு, 'அதுபோலும் அறிவுக்கூர்மையையுடையரேனும்' எனப்பொருள்தருவர்.'அரம்போலும் கூர்மை மரம் போலும் கூர்மை யின்மை' என ஈருவமை கண்டு, 'முன்னது தொழில் பற்றிய உலகம் எனவும் பின்னது பண்பு பற்றியது' எனவும் கூறிவிளக்கந் தந்து இயைவிப்பர். இங்ஙனம் ஒரு பொருட்கே எதிர்எதிரான இரண்டு உவமைகளைத் தந்துரைத்தல் அணியிலக்கண மரபாயின் ஏற்புடையதாம், இப்பகுதி ஆய்வுக்குரியது. அறிவும் அதன் கூர்மையும் உடல் கொள் உயிர்ப் பண்பாமேயன்றி அஃதின்மையும் பண்பாகுமாயின் பண்புவமையாதல் கூடும்.

***பரிமேலழகர்*** 'ஓரறிவிற்றாய மரம்' என விதந்தமையான், ***தேவநேயர்*** 'மக்கட்குரிய ஆறறிவில்லாத உயிரினங்கள் ஓரறிவு ஐயறிவு ஈறாக ஐவகைப் பட்டிருத்தலின் மக்கட்பண்பிலாரை ஒப்புரைத்தல் பொருத்தமாகத் தோன்றவில்லை என மறுப்பர். 'மரம் எனவே' 'உற்றறியும் ஓரறிவுயிர்' எனப்படுதலின் அது ***வள்ளுவனாக்*** குறை கூறுவது போன்றுள்ளது. ஆனால் ***வள்ளுவர்*** 'அன்பு; நாண், உரம் முதலான பண்பிலாரை மரம் போல்வர்' எனப் பல விடங்களில் கூறுவர். பண்பிலார் மக்கள் போன்றிருந்தும் பயன்படாமை கருதி மரம் போல்வர் என்றதன்றி ஓரறிவுடைய மரம் எனல் வேண்டா விதப்பாகலாம். ஆனால் ***வள்ளுவர்*** மரபு பயன்படு மக்களுக்கும் பயன்படா மக்களுக்கும் ஏற்ற வகையில் மரத்தை ஒப்பித்தலை 70,216,600 முதலான குறட்பாக்களில் காணலாம்.

*வரத.:* மரம் தன்னினத்தை யழித்துவிட்டுத் தான் மட்டும் வளரும், அது போலப் பண்பிலார் தன்னினமழியத் தான் மட்டும் வளருவர் என்றார். *குறள்நோக்கம்* ஒருவனது அறிவுத்திறன் பக்கத்தில் உள்ளவர்களின் பண்பறிந்து நடந்து தன்னறிவைப் பிறர்க்கும் பயன்படுத்தும் பண்பு பற்றியது; தன்னலம் பற்றியதென்றல் ஏலாது. இங்ஙனமே ***இராமலிங்கனார்*** உரையும்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகலே பாடறிந்த தொழுகும் பண்புடைமையாகுமா? ஆகும் எனின் ***இக்குறளில்*** அதன் நிழலோட்டம் இருக்கிறது என்று கருதுதல் தகுமா? சிந்தித்தல் தெளிவு தரும்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***அரம்போலும் கூர்மையர்***

மதிதரு குமரரும் ..... ....... ..... - கம்ப.,314

***மக்கட் பண்பிலாதவர்:***

தீயவரொ டொன்றிய திறத்தரு நலத்தோர்
ஆயவரை யந்நிலை யறிந்தனர் துறந்தாங்கு. - கம்ப.,917

***மரம்போல்வர்:***

மரந்தா னேன்று நெஞ்சின ணாணாள் வரைபாராள். -கம்ப.,167

## 100.8. நண்பாற்றா ராகி நயம்இல செய்வார்க்கும்
## பண்பாற்றா ராதல் கடை. (998)

***உரைப்பகுதி:***

*அ) மணக்.:*

*ஆ) பரிதி.:* சிநேக மற்றும் பொல்லாப்பே செய்தாராயினும் அவர்களுக்கு நல்லதே செய்யாதான் கடைசி, எ-று.

*இ) பரிப்.:* நண்பு செய்யமாட்டாராய் விருப்பம் இல்லாதவற்றைச் செய்வார்க்கும் குணம் ஆயின செய்யார் ஆதல் குணம் உடையார்க்கு இழிவு, எ-று.

குணம் செய்யாமை இன்னா செய்தல்ஆம். ஆதலால் பிறர் வருத்தத்திற்குப் பரியாமையால்[1] வரும் குற்றம் கூறிற்று.

***ஈ) காளி.***: உலகத்து மக்கட் பண்பு உடையோர், தம்மொடு நட்புச் செய்தற்கு ஒல்லாருமாகி[2] ஒழுக்கக் கேடே செய்து ஒழுகுவார்க்கும் தாம் தமக்கு இயல்பாகிய மரபினைச் செய்யாராதல் சாலக் கடை. எனவே ஈண்டும் தம் பண்பினர் ஆதலே தலை என்பது பொருள் ஆயிற்று, எ-று.

***உ) பரிமேல்.***: தம்மொடு நட்பினைச் செய்யாது பகைமையைச் செய் தொழுகுவார்மாட்டும், தாம் பண்புடையராய் ஒழுகாமை அறிவுடையார்க்கு இழுக்காம், (எ-று).

நயம் - ஈரம்[3]. சிறப்பும்மை அவர்[4] பண்பாற்றாமைக்கு இடனாதல் தோன்ற நின்றது. அதனைச்[5] செய்யின் தாமும்[6] அவர்[7] தன்மையராவர் என்பார் 'கடை' என்றார்.

***ஊ) கவிராசர்.***: தன்னுடனே சினேகம் பண்ணாமற் பொல்லாங்கு செய்கிறவர்களுக்கும் தான் நல்லவனாய் நன்மை செய்யா விட்டால், அறிவுடையவனுக்குக் குற்றமாம், எ-று.

***ஏ) பழைய2.***: தம்மிடத்தில் நட்புச் செய்யாமல் பகை செய்வார்க்கும் தாம் பண்புடையராய் ஒழுகாமை, அறிவுடையார்க்கு, அவர் கடையராம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்குள்ள ***பரிதியுரையும் குறளை*** ஒட்டி இயங்குகிறது. ***நயம்இல*** - 'பொல்லாப்பு' ***பரிதி.***; 'விருப்பமில்லாதன' ***பரிப்.;*** 'ஒழுக்கக்கேடு' ***காளி.;*** 'பகைமையைச் செய்வார் மாட்டும்' ***பரிமேல்.;*** 'பொல்லாங்கு செய்தாரிடத்தும்' ***கவிராசர்,*** 'நயம் - ஈரம்' 'பகை' - ***பழைய2;*** 'தீமையே செய்வான்' ***தேவநேயர், வரத.;*** 'முறையல்லாதன' ***கா.சு.;*** இங்ஙனம் நயம் என்ற சொல் தனித்துச் சில பொருளினும், 'நயம் இல' என இணைந்த நிலையில் சில பொருளினும்

---

1. பரியாமையால் - இரங்காமையால்
2. ஒல்லாருமாகி - பொருந்தாதவராகி
3. ஈரம் - அன்பு
4. அவர் - நயமிலச் செய்வார்
5. அதனை - பண்புடையவராய் நடவாமையை
6. தாமும் - பண்புடையாரும்
7. அவர் - நயமிலச் செய்வார்

வந்தமை காண்கின்றோம். ஆசிரியர் ***வள்ளுவனார்***, 'நன்னயம்' - 'நல்ல உதவி' என்ற பொருளினும் 'நூல் நயம்' 'நூலின் கண் தோன்றும் இன்பம்; 'நகலானாம் நன்னயம்' - 'நல்ல நீதி' என்ற பொருள்களில் ஆளுவர். இவையனைத்தும் இணைத்து எண்ணும்போது 'நயம் - இனிமை' என்ற பண்புப் பொருளதாயிருந்து பின்னர் இங்ஙனம் வருதல் காணப்பெறும். ஆதலால் பொல்லாப்பு, ஒழுக்கக்கேடு, தீமை போன்றவற்றைக் குறித்த ஒரு பொருளைக் கருதாது அனைத்தும் அடங்க இனிமையல்லாத எனல் ஏற்புடையதாகும். நயம் என்றதன் போலி பெற்ற சொல்லே நயன் என்பது. அதன் பொருளும் இணைத்து எண்ணி முடிவு காணல் தகும். ஆசிரியர் வள்ளுவனார் ஒன்றைக் குறியாது நன்மையற்ற - இனிமையற்ற என்ற பொருளையே கருதுகிறார் எனல் தகும்.

'பாடறிந்தொழுகும் பண்பாளர்' என்றும், நன்மையே செய்வர் ஆகலின், அவரிடம் அனைவரும் நட்புச் செலுத்தக்கடமைப் பட்டவர்கள்; நயமிலசெய்யக்கூடாதவர்கள். அங்ஙனம் இருந்தும் அவர்கண்படாத சிலர் நண்பு செய்யாராதலைக் கண்டு நண்பிலராகி என்னாது நண்பாற்றாராகி என்ற நயம் ஓர்ந்துணர்தற்குரியது. 'நண்பு ஆற்றுதல் - நண்பினைச் செய்தல்', இத்தகைய கருத்தினைத் தரும் ***பரிமேலழகர்*** உரை ஏற்புடையது.

இக்***குறள்***, 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், எனன பயத்ததோ சால்பு' என்னும் குறட் கருத்தின் எதிரொலி எனலாம்.

### ஒ) ஒப்புமைப்பகுதி :

***நயம் இல செய்வார் :***

தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை

- கம்ப., 4124

## 100.9. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
## பகலும்பாற் பட்டன் றிருள். (999)

### உரைப்பகுதி :

***அ) மணக்.:***

***ஆ) பரிதி.***: தீவினைப்பயன் வந்தால் சிரித்து இதற்கெல்லாம் நான் கலங்கேன் என்று சொல்லமாட்டாதார்க்குப் பகலும் இருளாகத் தோன்றும், எ-று.

***இ) பரிப்.:*** எல்லாரோடும் கூடி இருந்து நகுதலைச் செய்ய மாட்டாதார்க்குப் பெரிய உலகம் பகல் பொழுதும் இருளின் பாற்பட்டது, எ-று.

எனவே இவனும் அறியான்; அறிவிப்பாரும் இல்லை என்றவாறு ஆயிற்று, இது கலந்து ஒழுகாமையால் வரும் குற்றம் கூறிற்று.

***ஈ) காளி.:*** யாவர் மாட்டும் கன்றிச்[1] சேறல் மரபு அன்று என்று கருதி எஞ்ஞான்றும் இனிது ஒழுகுதல் மாட்டாதார் யாவர்? மற்று அவர் தமக்கு மிகவும் பெரிய உலகமானது பகலுங்கூட இருளின்பாற் பட்டது ஆம்; எனவே மக்கட் பண்பு இல்லாதவர்க்கு இவ்வுலக நீதி யாதும் தெரியாது இருண்டே கிடக்கும் என்பது பொருள், எ-று.

***உ) பரிமேல்.:*** பண்பின்மையான் ஒருவரோடும் கலந்து உள்மகிழ்தல் மாட்டாதார்க்கு, மிகவும் பெரிய ஞாலம் இருளில்லாத பகற்பொழுதிலும் இருளின்கண் கிடந்ததாம், (எ.று).

எல்லாரோடும் கலந்தறியப் பெறாமையின் பண்பு இல்லார்க்கு உலகியல் தெரியாது என்பார், உலகம் இருளின் கட்பட்டது என்றார்[2]. பாழ்பட்டன்றிருள் என்று பாடம் ஓதி, இருள் நீங்கிற்றன்று என்று உரைப்பாரும் உளர்[3].

***காரி. :*** மாயிருஞாலம் - மிகவும் பெரிய ஞாலம்.

***ஊ) கவிராசர்:*** நன்மையா யொருவனுடனே சினேகம் பண்ணி மகிழமாட்டாதவனுக்குப் பகற்பொழுது இருளாயிருக்கும், எ-று.

பண்பில்லாதவன் உலக இயற்கை அறியமாட்டாமையால் உலகம் இருளாய் இருக்கும், (எ-று).

***ஏ) பழைய2 :*** பகைமை பற்றி மாயிரு ஞாலத்தில் ஒருவரோடொருவர் கலந்து நகைத்து மகிழ்த்து விளையாட வல்லரல்லார்க்குப் பகற்காலத்து இராத்திரிக் காலம் வந்து கலந்து இருட்டியது போலாம்.

பகைமையாற் கண்டுங் காணாமல் முகஞ்சாய்த்துப் போதலால் பகலின்பாற் பட்ட இருள் என்க. மாயிரு ஞாலம்: பெரிய பூமி. 'பகலின் பால் பட்டன்றிருள் என்றும் பாடம்.

---

1. கன்றி - சிவந்து
2. 'உலகியல் தெரியாது என்பார் மாயிருஞாலம் பகலும் இருளின் பாற் பட்டன்று' என்றார், என்றும் பாடமுண்டு.
3. இன்னாரென்று அறியக் கூடவில்லை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***பரிதி.*** உரை இவ்வதிகாரத்திற்கு இயைபுடையதன்று. 'இடுக்கண் வருங்கால் நகுக' (621) என்னும் ***குறளை*** நினைவிற் கொண்டு எழுதியது.

***பரிப்பெருமாள்*** உரையில் 'இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ நகலின் இனிதாயிற் காண்பாம்' என்ற ***நாலடியார்*** (137) அடி ஒளி வீசுகிறது என்றார். 'நகல்வல்லர் அல்லார்க்கு' என்பதற்குக் ***காளிங்கர்*** தரும் விளக்கம் தெளிவானது. இங்கு வந்துள்ள நகல் 'நகுதற் பொருட்டன்று நட்டல்', 'நகை வகையராகிய நட்பு' என்பவற்றுள் வந்துள்ள நகை போல்வதன்று என்று தோற்ற 'உள்மகிழ்தல்' எனப் ***பரிமேலழகரும்*** அவர் பின்னோரும் காணும் உரை சிறந்தது.

***'பகலும் பாற்பட்டன்று இருள்'***

'இருள் பாற்பட்டன்று' எனக்கூட்டிப் 'பகற்பொழுதும் இருளின் பாற்பட்டது' என்பர். 'பட்டன்று', அன்சாரியைப் பெற்ற உடன்பாட்டு இறந்தகால வினைமுற்று. ***பரிப்., காளி., பரிமேல்*** முதலியோர் 'பகலிலும் இருளின் கண் கிடந்ததாம்' என ஏழனுருபு விரித்துப் பொருள் காண்பர். ***பரிமேலழகரும்*** ஒப்பிய பாடம் 'பாழ்பட்டன்றிருள்' என்பது. இப்பாடம் கொள்வார் எவர்? என்பது அறியக் கூடவில்லை. ஆனால் அவர் கூறும் உரை, பகலிலும் இருள் நீங்கிற்றில்லைஎன்பதாம். இவ்வுரையைப் பகலும் - பகற்பொழுதின் கண்ணும், இருள் பால்பட்டன்று - பிரிந்தது அன்றாம் எனவும் கொள்ளலாம். பால் - பகுப்பு, பிரிவு, இவ்வுரையில் 'பட்டன்று' என்பது எதிர்மறைப் பொருள் தரவேண்டுமாயின் 'பட்டதன்று' என்பதன் விகாரமாகக் கொண்டு பொருள் காணுதலும் தகும். ***தேவநேயர்*** சங்க இலக்கிய ஆட்சி மரபு நோக்கி, பட்டன்று என்பது உடன்பாட்டு வினைச்சொல்: அதனை எதிர்மறையாக்கும் பாடமும், பொருளும், இலக்கண அமைதியும் பொருந்தா என மறுப்பர்.

## 100.10. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
## கலந்தீமை யால்திரிந் தற்று. (1000)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:***

***ஆ) பரிதி.:*** பண்பில்லாதவன் செல்வம் கனம்பெறப் பெற்றாலும் கெடும். அது எப்படியென்னில் பலர் கையில் பொல்லாங்கினாலே பால்கெட்டாற் போல, எ-று.

*இ) பரிப்.:* குணம் இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம் நல்ல பால் கலத்தின் தீமையால் கெட்டாற்போலத் தனக்கும் பிறர்க்கும் இன்பம் பயவாது கெடும், எ-று.

இது பகுத்து உண்ணாமையால் வரும் குற்றம் கூறிற்று.

*ஈ) காளி.:* உலகத்துப் பண்பு கேடன் ஆனவன் பெற்றது ஓர் பெருஞ் செல்வமானது எத்தன்மைத்தோ எனின், முந்நிலைப் பாலினும் நன்பால் ஆவது ஆன்பால்[1] அன்றோ? மற்று அதுதான் ஒரு கலத்தினது குற்றத்தினால் தன் உருபு திரிந்த அத்தன்மைத்து; எனவே இவன் ஈட்டிய பொருளும் யாதும் ஒரு தன்மை இன்றிக் கெட்டுவிடும், எ-று.

*உ) பரிமேல்.:* பண்பில்லாதவன் முன்னை நல்வினையான் எய்திய பெரிய செல்வம் அக்குற்றத்தால்[2] ஒருவற்கும் பயன்படாது கெடுதல், நல்ல ஆன்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும், (எ-று).

கலத்தீமை என்பது மெலிந்துநின்றது[3]. தொழிலுவமமாக லின் பொருளின்கண் ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது[4]. படைக்கும் ஆற்றல் இலனாதல் தோன்றப் 'பெற்ற' என்றும், எல்லாப்பயனுங்கோடற்கு ஏற்ற இடனுடைமை தோன்றப் 'பெருஞ் செல்வம்' என்றும் கூறினார். அச்செல்வமும் பயன்படாது என்ற இதனான் வருகின்ற அதிகாரப் பொருண்மையும் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்கு பாட்டானும் அஃதில்லாரது இழிவு கூறப்பட்டது.

*காரி.:* கலந்தீமை - செல்வந்தகைத்து என்பது போலும், செல்வம் அக்குற்றத்தால் ஒருவர்க்கும் பயன்படாது கெடுதல் என்று உரைத்துத் தொழிலுவமையாதலின் பொருள்களின்கண் ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது என்றார்.

---

1. ஆன்பால் - பசுவின்பால்
2. அக்குற்றத்தால் - பண்பில்லாத குற்றத்தால்
3. செல்வத்தகைத்து என்பது செல்வந்தகைத்து எனத் திரிந்தாற் போல கலத்தீமை என்பது கலந்தீமை என மெலிந்து நின்றது. கலத்தீமை என்பது 'கலத்தினது தீமை' என ஆறாம் வேற்றுமைத் தொகையாம். கலந்தீமை என்புழிக் கலந்தீமையுற்றிருப்பதால் என எழுவாய்த் தொடராகும். கலத்தீமை என்பது கலந்தீமை என மெலிந்து நின்றது எனின் மெலிதலுக்கும் அல்வழி வேற்றுமை பொருள் நோக்கமும் எதுகை முதலிய செய்யுள் நோக்கமும் இருத்தல் வேண்டும். அவை இரண்டையும் ஆசிரியர் குறிக்காமையால் மெலிந்து நின்றது என்பதை விலக்கி இரண்டு பாடமும் உண்டு எனல் ஏற்புடைத்து. எதுகைமோனை முதலியவற்றிற்குத் திருக்குறள் முதலிடம் தருவதில்லை என்பதும் எண்ணுக.
4. கலந்தீமையால் பால் திரிந்து, யார்க்கும் பயன்படாமை போல என்ற தொழிலிலும் பண்பிலான் பெற்ற செல்வமும் பயன்படாது என உவமேயத்திலும் திரிந்து நின்றது.

***ஊ) கவிராசர் :*** நல்ல குணமில்லாதவன் முன்செய்த நல்வினையாலே எய்திய பெருஞ் செல்வம் ஒருவருக்கும் பிரயோசனமாகாமற் கெட்டுப் போகிறது எப்படி என்றால் நல்ல பாலைக் காயாத பானையில் வார்த்தால் அது கெட்டுப் போவது போலே, (எ.று).

***எ) பழைய2:*** பண்பில்லான் முன்னை நல்வினையான் வந்த பெருஞ்செல்வம் எவர்க்கும் பயன்படாமையால் அச்செல்வங் குணங்கெட்டது. குணங் கெட்ட கலசத்திலிருந்த[5] பால் குணங்கெட்டது போலாம்.

நல்ல பால் கலசத்தின் பொல்லாக் குணத்தினாற் கெட்டது போல நல்ல செல்வம் குணம் உடையவனிடத்திருந்ததனாற் குணங்கெட்டது என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

“கரந்தீமையால்” என்பது ***பரிதி***. கண்ட பாடம். ஒரு கையின் தீமையால் பால் திரிவதை விடப் பலர்கைபட்டால் திரிவது உறுதியாதலின் இங்ஙனம் உரை கண்டனர். ‘கலப்பாலுக்குத் துளிப்புரை போல’ செல்வம் மிகுதியாயினும் பண்பின்மையாற் கெடும் என்பார். இங்ஙனம் கனம் பெறப் பெற்றாலும் என்றார். ***உரைவேற்றுமை ஆசிரியர்*** ‘கைதீமையால்’ இவர் கண்ட பாடம் என்றனர். செப்பலோசை சிதையும் என்பதையும் ***பரிதியார்*** அறியாதரல்லர். பாடம் திருந்தக் கொள்க. ‘கைக் குற்றத்தால் கறந்தபாலும் முறியும்’ என்பது இன்னும் வழங்கும் முதுசொல். அது கொண்டு இங்ஙனம் உரைத்தனர்.

***பரிப்பெருமாள்*** முதலானோர் அனைவரும் ‘கலந் தீமையால்’ எனப் பாடங்கண்டு பாலை வைத்திருக்கும் கலத்தின் (பாத்திரத்தின்) ‘தீமையால் பால் திரிந்தது போலும்’ என்றனர். இது ‘கலஞ் சிதைக்கும் பாலின் சுவையை’ என்னும் ***நான்மணிக்கடிகை*** 23-3 செய்யுட்கருத்து, செம்பின் கலத்தும், ஈயத் தகழியிலும் பால் வைத்தால் பால் நஞ்சாகும்.

செம்பிற் களிம்பு பாலிற்பகு நெய்யாற் கெட்டு துருசாய்ப் பால் பச்சையாய் விடும். அங்ஙனமே ஈயத்திற் பாலும், இந்த விஞ்ஞான அறிவும் இதற்கு விளக்கமாகும்.

5. கலசத்திலிருந்த - பாற்செம்பிலிருந்த.

# 100. பண்புடைமை

| | எண்பதத்தால் | அன்புடைமை | உறுப்பொத்தல் | நயனொடு | நகையுள்ளும் | பண்புடையார்ப் | அரம்போலும் | நண்பாற்றார் | நகல்வல்லர் | பண்பிலான் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | - | - | - | - | - | - | - | - | - | - |
| பரிதி. | 10 | 2 | 8 | 4 | 3 | 1 | 7 | 5 | 9 | 6 |
| பரிப் | 2 | 1 | 9 | 4 | 3 | 5 | 10 | 8 | 6 | 7 |
| காளி. | 10 | 8 | 6 | 3 | 9 | 1 | 2 | 4 | 5 | 7 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

100-வது அதிகாரம் 'பண்புடைமை' முற்றிற்று.

******

# 101. நன்றியில் செல்வம்

***அதிகாரப் பொருள் :***

***அ) மணக்.:*** நன்றியில் செல்வமாவது அறத்தையும் இன்பத்தையும் பயவாத செல்வத்தின் இயல்பு கூறுதல். இது பண்பிலாதார்க்கு உளதாவ தொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

***ஆ) பரிதி.:*** நன்றியில் செல்வமாவது தானும் புசியான் பிறருக்கும் ஈயான் செல்வம் நிலையில்லை, எ-று.

***இ) பரிப்.:*** நன்றியில் செல்வம் ஆவது அறத்தையும் இன்பத்தையும் பயவாத செல்வத்தின் இயல்பு கூறுதல். இது பண்பு இல்லார்க்கு உளது ஆவது ஒன்று ஆதலின், அதன் பின் கூறப்பட்டது.

***உ) பரிமேல்.:*** அஃதாவது ஈட்டியாற்கும் பிறர்க்கும்பயன்படுதல் இல்லாத செல்வத்தினது இயல்பு, உடையான் குற்றம் செல்வத்தின் மேல் ஏற்றப்பட்டது[1]. அதிகாரமுறைமை மேல் தோற்றுவாய் செய்தவனாதல் பெற்றாம்.

***ஊ) கவிராசர்.:*** அஃதாவது நல்ல குணமில்லாதவன் தேடின பொருள் தேடினவனுக்கும் பிறருக்கும் பயன்படாமற்போகிற படியினாலே, அவன் குற்றத்தை அந்தப் பொருள்மேலே வைத்துச் செல்லுகிறது.

***எ) பழைய2:*** அஃதாவது பொருளைத் தேடினவனுக்கும் பிறருக்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு, செல்வமுடையான் குற்றத்தைச் செல்வத்தின் மேல் வைத்தது.

---

1. நன்றி என்ற பண்பு அறிவுடைப் பொருளாகிய மக்களைச் சார்ந்து நிற்பது. அது மக்களின் உடைமையாகிய செல்வத்தின்மேல் நின்றது. ஆதலால் உபசார வழக்கு.

### ஐ) தொகுப்பும் குறிப்பும் :

தனக்கும் பிறர்க்கும் பயன்படாத செல்வம், என்பதில் அனைவரும் ஒரு கருத்தினர். இங்ஙனம் பயன்படாமையோடு, ஆசிரியர் ‘அன்பொரீஇ’ என்ற ***குறளால்*** அறநோக்காது ஈட்டிய ஒண் பொருளையும் கூட்டுவர். முன்னவரும் ‘தீதின்றி வந்த பொருள்’ என்றது காண்க. ***மணக்குடவர்*** அக்***குறள்*** நோக்கிலேயே வரைவிலக்கணம் எழுதுகிறார். இணைத்து எண்ணுக.

ஆதலால், தனக்கும் பிறர்க்கும் பயன்படாததும், தீயநெறியான் ஈட்டப்பட்டதும் நன்றியில் செல்வம் எனப்படும் எனலாம். ***அக்குறளிலுள்ள*** ‘திறனறிந்து’ என்பது ‘கற்றாமடிகொன்று பால் கொள்வது போலாது, குடிமக்கள் கொடுக்கும் பருவம் அறிந்து, வெருவந்த செய்யாது பொருளீட்டுதலை வற்புறுத்துவது. இதனை அறநோக்காது’ என்ற பகுதியாற் குறிப்பிடுவர் ஆசிரியர்.

ஏனைய ***பரிதியார், பரிமேலழகர்*** முதலானோர்களின் அதிகார விளக்கம் தான்துவ்வாதும் பிறர்க்கீயாதும் ஈட்டப்படும் செல்வத்தையே கருதுவது.

இவ்வதிகாரத்து ஆசிரியர் துவ்வாமையை மட்டும் முதற்குறளாலும் ஈயாமையை 2,3,4,7,8 குறள்களானும், இரண்டனையும் 5,6 குறள்களானும் குறிப்பிடுதல் காண்க.

அறனறிந்து தீதின்றி யீட்டுதல் பொருள் செயல் வகைக்கே யுரியதாகலின் அதனை விட்டு, உண்டும் உதவியும் பொருட்பயனை நுகராமையான் அறவழியீட்டிய பொருளும் நன்றியில் செல்வமாதல் கூடும் என்பதை இவ்வதிகாரம் குறிக்கிறது என்பதனை நுனித்தறியலாம்.

***தேவநேயர்*** ஈட்டியவனுக்கும் பிறருக்கும் பயன்படாத செல்வம் என்பர்.

***வரத.*** இன்பத்தையடையச் செய்யும் பொருள் தகுதியற்ற வரிடத்தும், தீமையரிடத்தும் இருந்தால் இன்பஞ் செய்யாமை மட்டுமின்றித் துன்பத்தையும் செய்வதாகலாம் அத்தகைய தீயாரிடம் உள்ள செல்வத்தின் தீமை குறித்து இவ்வதிகாரம் பேசுகிறது என்பர்.

திரண்ட செல்வம் பெறுதற்கு முன் நல்லவர்களாக இருந்தவர்கள் கூட ‘பெறலருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாவர்’ என்கிறது ***சீவகசிந்தாமணி.*** ஆதலால் தகுதியும், நன்மையும், இயல்பாகவே இல்லாதவர்களும், இருந்து பொருள் பெற்றமையால் மாறியவர்களும் என இருவகையர். அவர்களையும் உள்ளடக்கிப் பண்பிலார் என்றதாம்.

***இராம.*** 'உதவாத செல்வம்' என்பர்.

***குழந்தை*** 'நன்றியில் செல்வம்' என்பதற்குப் பதிலாக இவறன்மையெனப் பெயர் சூட்டி, 102வது அதிகாரமாக 101ஆவது அதிகாரமாகிய **நாணுடைமையை** யடுத்து வைப்பர். இவறன்மை - பற்றுள்ளம். பொருளைச் செலவழிக்க மனமில்லாத் தன்மை என்பர். ஏனோர் அனைவரும் 101 **நன்றியில் செல்வம்.** 102. **நாணுடைமை** என்பர். அதிகார முறை வைப்புக் காரணமும் கூறுவர். இவர் நூல் முழுவதுமே முறை வைப்பின் காரணங் கூறிற்றிலர். அதனால் முறை வைப்பு அவர் மனம் போல அமையலாயிற்று. ஏனோர் 'பெரும் செல்வம் கலந்தீமையாற் பால் திரிந்தற்று' எனத் தோற்றுவாய் செய்தமையால் நன்றியில் செல்வத்தைப் பின்வைத்தார் என்பர். இவர் தாம் செய்யும் மாற்றத்திற்கேற்பப் ***பண்புடைமையின் குறள்*** முறை வைப்பை மாற்றவில்லை. மாற்றியதற்குக் காரணமும் காட்டவில்லை.

அதிகாரப் பெயர்கள் பெரும்பான்மையும் அவ்வதிகாரத்தின் குறட்பாக்களில் ஆளப்பெற்றிருக்கும். அங்ஙனம் 'புதல்வர்' என்ற பெயர் காணப்பெறாமையானும், மக்கட்பெயரே காணப் பெறுதலானும் 'மக்கட்பேறு' எனப்பட்டது என்ற ***திரு.வி.க., கா.சு*** முதலான பலர் கருதுவது போல இவரும் இவ்வதிகாரம் பெரும்பாலும் இவறன்மை யையே பேசுவதாலும், இரண்டாங்***குறளில்*** 'இவறும்' என்ற சொல் லாட்சி காணப்பெறுதலானும் மாற்றினராதல் கூடும் என அமையலாம். ஆனால் அதிகார நிலைமாற்றம் ஏற்புடைமையை ஆய்ந்து அமைதி காண முடியாமையின் மேலும் சிந்திக்கத் தக்கது என விடப் பெற்றது.

**101.1. வைத்தான் வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்**
**செத்தான் செயக்கிடந்த தில். (1001)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** இடம் நிறைந்த பெரும்பொருளை ஈட்டிவைத்தானொருவன் அதனை நுகரானாயின், செத்தான்; அவன் பின்பு செய்யக் கிடந்தது யாதும் இல்லை, எ-று.

இஃது ஈட்டினானாயினும் தான் ஒரு பயனும் பெறான் என்றது.

***ஆ) பரிதி.:*** அறஞ்செய்யான்; தான் உண்ணான் புதைத்து வைத்துச் செத்தான். அதில் என்ன பயன்? தான் உள்ளபோதே தன்மம் செய்து உண்ணக்கடவன், எ-று.

**இ) பரிப்.:** இடன் நிறைந்த பெரும் பொருளை ஈட்டிவைத்தான் ஒருவன்அதனை நுகரானாய்ச் செத்தான்; அவன் பின்பு செய்யக் கிடந்தது யாதும் இல்லை. எ-று.

இஃது ஈட்டினான் ஆயினும் தான் ஒரு பயன் பெறான் என்றது.

**ஈ) காளி.:** வாய்ப்பு அமைந்த பெரும்பொருள் ஈட்டி வைத்தான் யாவன்? அவன் அதுகொண்டு அனுபவியானாகில், அவன் செத்தவனே என்பதனால் அவன் வேறு நடைப்பிணமே; என் எனின் பிணமும் தான் அறிந்து ஒன்று செய்யப்படுவது ஓர் செய்தி இல்லை; இவனும் அன்னன் ஆகலான் இவன் தன் குறிப்பினால் ஒரு செய்தி செயக் கிடந்தது இல்லை, எ-று.

**உ) பரிமேல்.:** தன் மனையகலமெல்லாம் நிறைதற்கு ஏதுவாய பெரும் பொருளை ஈட்டிவைத்து உலோபத்தால் அதனை உண்ணாதவன், உளனாயினும் செத்தானாம், அதன் கண் அவனால் செயக் கிடந்ததோர் உரிமை இன்மையான், (எ-று).

வைத்தான் என்பது முற்றெச்சம்[1]. உண்ணுதல் அதனால் ஐம்புலன்களையும் நுகர்தல். வாய்சான்ற பெரும்பொருளை வைத்தான் ஒருவன் அதனை உண்ணாது செத்தவழி அதன் கண் அவனால் செயக் கிடந்ததோர் உரிமை இல்லையாதலான், வையாது பெற்றபொழுதே நுகர்க என்று உரைப்பினும் அமையும்[2]. இதற்குச்[3] செத்தான் என்பது எச்சம்[4]. இதனால் ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

**ஊ) கவிராசர்:** தன் மனையெல்லாம் நிறையப் பொருள் தேடி வைத்தும் லோபத்தாலே அந்தப் பொருளை அனுபவியாதவன். பிராண னுடனே இருந்தாலும், செத்தவனோ டொப்பான். அந்தப் பொருளாலே அவனுக்குப் பிரயோசனமொன்றுமில்லை, எ-று.

தேடின பொருளைப் பிராணனுடனே இருக்கையிலே தர்மங் களிலே செலவழித்துத் தானும் நுகராவிட்டால், செத்துப் போன பிறகு அந்தப் பொருளால் இவன் செய்யப்போவதொன் றுமில்லை, எ-ம்.

1. வைத்தான் என்பது வைத்து எனப்பொருள்படுதலின் முற்றெச்சம்
2. தொகுப்பும் குறிப்பும் காண்க.
3. இதற்கு - இவ்வுரைக்கு
4. செத்தான் என்னும் தெரிநிலை வினைமுற்று, வினைமுற்று, வினையெச்சம் ஆகலாம் என்ற நெறிப்படி செத்த இடத்து என வினை எச்சமாயிற்று.

*ஏ) பழைய2.*: தன் மனையெல்லாம் நிறையத் தேடிவைத்து உலோபத்தால் அப்பெரும் பொருளை உண்ணாதவன் இருந்துஞ் செத்தானாம். அவனால் செய்யக் கிடந்ததொரு உரிமையில் மாட்டாமையால் செத்தானாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*வாய்* - 'இடம்' *மணக்.;* 'வாய்ப்பு' *காளி;* 'தனமனையக மெல்லாம்' *பரிமேல்.. கவிராசர், பழைய.*

*வைத்தான்* - 'ஈட்டி வைத்தான் ஒருவன்' என வினையாலணையும் பெயராக்குவர்' *மணக்.; மணக்குடவரை* ஒத்துக் *காளிங்கர்* உரைப்பர். *பரிமேல்.,* 'வைத்தான் உண்ணான் செத்தான் செயக்கிடந்தது இல்' என ஒரு தொடராக்கி 'வைத்தான்' என்பதை முற்றெச்சம் என்பர். *மணக்குடவர்* முதலானோர் வினையாலணையும் பெயராகக் கொண்டு உண்ணான் என்பதனை முற்றெச்சமாக்கிச் செத்தான் என்பதனுடன் முடிப்பர். எங்ஙனம் ஆயினும் கருத்து மாற்றம் இல்லை. இலக்கண மாற்றமே ஆயினும் வைத்தான் என்பதனை எழுவாயாக்கி, உண்ணானாகிச் செத்தான் செயக்கிடந்தது இல் என்றலே சிறந்தது. *பரிமேல்.* செத்தான் ஆம் என வினை வருவித்து முடிப்பர். *மணக்குடவர்* 'செத்தான்; அவன் பின்பு செயக்கிடந்தது இல்லை' என இரண்டாவது தொடருக்கு அவன் என்ற எழுவாயையும் சில சொற்களையும் வருவித்து முடிப்பர். *தேவநேயர். வரத., இராம.,* இவர்களும் அங்ஙனமே.

*பரிமேலழகர்* கூறும் வேறுரை *மணக்குட*வருடையதே யாதல் காண்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

*வைத்தான் வாய்சான்ற பெரும் பொருள்:*

கட்டுரை யிற்றம கைத்துள போழ்தே. -கம்ப., 450

..................... செல்வ மீண்டென
விட்டவர்......................... -கம்ப., 1418

*முற்றும்:*

கொடுத்தலும் துய்த்தலும் தேற்றா விடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும். -நாலடி., 274

வழங்கலும் துய்த்தலும் தேற்றா தான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம் - தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப அதுஅன்றோ
நாய்பெற்ற தெங்கம்பழம். -பழ.நா.,217

படரும் பிறப்பிற்கொன் றீயார் பொருளைத்
தொடரும்தம் பற்றினால் வைத்திறப் பாரே
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர். -பழ.நா.220

வைத்தப் பொருளைத் தான்நுகரான் வழங்கான் இருந்தும் செத்தானே
செத்த பின்னர் என் செய்வான் தீயார் கொள்வர் ஈட்டுதலான்
மெத்தம் வருத்த மேயன்றி வேறொன் றில்லை யாதலினால்
பொத்தும் வெறுக்கை நன்றியுறல் புசித்து வழங்க லேயாகும்
- விநா அரசி, 148.

தீயாலோ நீராலோ தேர்வேந்தர் தம்மாலோ
மாயாத தெய்வர் வலியாலோ - யாதாலோ
இப்பொருள்போய் மாய்கின்றதென்று பொருள் -வைத்தார்கள்
எப்பொழுது நீங்கா ரிடர்.
-பாரதம், பெருந்தேவனார்.

**ஓ) மேற்கோள் பகுதி:**

***யா.வி.***: இயற்சீரும் உரிச்சீரும் விரவிவந்த குறள் வெண்பாவிற்கு மேற்கோள். - சூ.,15

இயற்சீர் நின்று இயற்சீரோடு விகற்பித்துவந்த சிறப்புடை இயற்சீர் வெண்டளைக்கு மேற்கோள். - சூ.,18

## 101.2. பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்
## மருளானாம் மாணாப் பிறப்பு. (1002)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.***: பொருளினாலே எல்லாச்சிறப்பும் எய்தலாம் என்று பிறர்க்கு யாதொன்றும் ஈயாத உலோபம் செய்கின்ற மயக்கத்தினாலே மாட்சிமையில்லாத பிறப்பு உண்டாம், எ-று.

இது தீக்கதியுள்[1] உய்க்கும் என்றது.

1. தீக்கதி - மறுமையுள் நரகமும், இம்மையுள் கூன்குருடு செவிடு முதலியவற்றான் வருந்தும் பிறவி.

***ஆ) பரிதி.***: பொருளினாலே தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் எல்லாம்; இதன்றியில் ஈயாத குணத்தினாலே பிறப்பு உண்டாம், எ-று.

***இ) பரிப்.***: பொருளினாலே எல்லாச் சிறப்பும் எய்தல் ஆம் என்று ஈயாதே உலோபுகின்ற மயக்கத்தினாலே மாட்சிமை இல்லாத பிறப்பு உண்டு ஆம், எ-று.

இது தீக்கதியுள் உய்க்கும் என்றது.

***ஈ) காளி.***: நாம் படைத்த பொருளானே உள ஆம் நமக்கு எல்லா நன்மையும் என்று இங்ஙனம் கருதிப் பிறர்க்கு ஈயாது உலோபிக்கும் மதி மருட்சியானே உளதாம் மாட்சி இல்லாத பிறப்பு; எனவே இதனால் நரக யோனியும்[2] திருக்கும்[3] பிறவும் ஆகிய கடையான பிறப்பு உளதாம் இவர் ஈட்டிய பொருள் வெறும் பாவப் படைப்பு ஆகலாம், எ-று.

***உ) பரிமேல்.***: பொருளொன்றும் உண்டாக அதனால் எல்லாம் உண்டாம் என்றறிந்து அதனை ஈட்டி, பின் பிறர்க்கு ஈயாது பற்றுள்ளம் செய்யும் மயக்கத்தாலே, ஒருவனுக்கு நிறைத லில்லாத[4] பேய்ப் பிறப்பு உண்டாம், (எ-று).

இருமையினும் எய்தும் இன்பங்கள் பலவும் அடங்க எல்லாம் என்றும், ஈட்டுதற்கு முன்னுண்டாய அறிவு பின் மயங்குதலின் மருள் என்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த தீவினை பற்றி உணவுகள் உளவாயிருக்கப் பசித்து வருந்தும் பிறப்பு உளதாம் என்றும் கூறினார்.

***ஊ) கவிராசர்:*** பொருளொன்றுண்டானால், அதாலே எல்லாம் உண்டென்றறிந்து பொருளைத் தேடிப் பிறர்க் கீயாமல் அதன் மேலே ஆசை வைத்தால், அவன் பேயாய்ப் பிறப்பான், எ-று.

பொருள் தேடவறிந்தவன், அதனைச் செலவழித்துப் பலன் கொள்ள அறியாத மயக்கத்தினாலே, பசித்து வந்தவர்களுக்குக் கொடான். ஆனபடியினாலே, இவனும் பேயாய்ப் பிறந்து பசி அடங்காமல் திரிவான்.

---

2. நரகயோனி - நரகத்தில் பிறத்தல்
3. திருக்கும் - மாறுபாடு
4. நிறைதலில்லாத - மனநிறைவில்லாத

*ஏ) பழைய2.*: பொருளொன்றும் உண்டாக அதனால் எல்லாம் உண்டாம், என்று அறிந்து அதனை ஈட்டிப்பின் தானும் உண்ணாது பிறர்க்கும் ஈயாது பொருள்மேல் ஆசை பற்று மயக்கத்தாலே செத்தபின்பு பொல்லாத பேயாய்ப் பிறப்பானாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*இக்குறளின்* உரைகளில் ***'எல்லாம்'*** ***'மருள்'*** ***'மாணாப்பிறப்பு'*** என்பதன் உரைகள் சிறிது மாற்றந் தருவன.

***'எல்லாம்'*** - 'எல்லாச் சிறப்புக்களும்' ***மணக்.;*** 'தர்மார்த்த காம மோட்சம் எல்லாம்' ***பரிதி;*** 'எல்லா நன்மையும்' ***காளி.;*** 'இருமையானும் எய்தும் எல்லா இன்பங்களும்' ***பரிமேல்.,*** 'எல்லாக் கருமமும்' ***தேவநேயர்.***

***'மருள்'*** - 'மயக்கம்' ***மணக்.;*** 'மதிமருட்சி' ***காளி.;*** 'மயக்கம்' ***பரிமேல்.;*** 'மயக்கத்தால் பேயாக' ***கவிராசர்.;*** 'மயக்கம்' ***பழைய;*** 'செல்வம் நிலையானது பிறர்க்கீதலாற் குறையும் எனக் கருதும் மயக்க உணர்வு' ***தேவநேயர்,*** 'பொருளை சிறுகப் பிடித்துப் பயன்படாமற் செய்தல் மருள்' ***வரத.*** 'அறியாமை' ;மாயை' ***மு.கோ.***

***'மாணப் பிறப்பு'*** - ' மாட்சிமையில்லாத பிறப்பு, அதாவது தீக்கதி' ***மணக்.***; 'பிறப்பு' - ***பரிதி.***; 'நரகயோனியும் முடம் கூன் முதலான திருக்குப் பிறவும் முதலான பிறப்பு' ***காளி.;*** 'நிறைதலில்லாத பேய்ப்பிறப்பு' ***பரிமேல்.,*** ***கவிராசர்,*** ***பழைய***உரையாசிரியர் முதலானோர்; " சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும் (புறம் 28.,) முதலான எண் பேரெச்சமும் அவியுமாம்' என்பர் ***தேவநேயர்.*** 'இன்பப் பிறவியைத் துன்பமாக அனுபவிப்பது மாணாப் பிறப்பு' ***வரத.;*** மக்களுள் இகழத்தக்க பிறவி என்றும், பேய்ப்பிறப்பும், ஊமன், குருடு, முடம் என்பன சரியன்று என்றும் மறுப்பர் ***இராம.;*** 'நல்வாழ்வில்லாத பிறப்பு' ***குழந்தை.***; 'தனக்குப் பிறக்கும் குழந்தை தீதாம்' என்பது ***மு.கோ.;*** 'எடுத்த இப்பிறப்பு மாட்சியற்றுப் போம்' ***சி.இ.;*** இங்ஙனம் பல உரைகள் உள்ளன. கருத்துமாற்றமும் உள்ளன. இவை அவ்வக் காலச் சூழலால் அமைந்தவை.

'பேய்ப் பிறப்புண்டாம்' என்ற உரைகள் புதையல் காத்த பூதம் போலத் தானும் நுகராமல் நுகர்வார் நுகரவிடாமலும் காத்திருக்கும்

உலகியற் பழமொழி பற்றி எழுந்த கருத்தாம். பேய்ப் பிறப்பு உண்டாம் என்பதை விட இப் பிறப்பு பேய்ப் பிறப்பாம் எனல் தகும். மறு பிறப்பு பேய் நரகம் என்பவற்றை ஒத்துக்கொள்ளாதவர்கள் நல்வாழ்வில்லாப் பிறப்பு எனல் தகும். ஆனால் 'அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்,பேய்கண்டன்ன துடைத்து' (565) என்ற ஆசிரிய வசனத்தைக் கருதிப் பேய்ப் பிறப்பு எனறனர் போலும் ***பரிமேலழகர்.***

### ஓ) ஒப்புமைப்பகுதி:

**மருளானாம் மாணாப் பிறப்பு:**

மருளானாம் மாணாப் பிறப்பு - குறள்., 351.

**முற்றும் :**

சந்திக் கலாவெண் மதிவாணுத லாடனக்கும்
வந்திக்க லாகு மடவாட்கும் வகுத்து நல்கி
நிந்திக்க லாகாவுருவத்தின னிற்ப மென்புச்
சிந்திக் கலாப மயிலிற்கண் சிவந்து போனார். - கம்ப., 996

### ஒ) மேற்கோள்பகுதி:

தெய்வச்.: இவறு என்பது லோபம் குறித்துவந்தற்கு மேற்கோள்.
- தொல். சொல்.,391.

## 101.3. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
## தோற்றம் நிலக்குப் பொறை. (1003)

### உரைப்பகுதி:

**அ) மணக்.:** பொருளீட்டுதலை விரும்பிப் புகழை விரும்பாத மாந்தர் பிறந்த நிலத்துப் பாரமாவர், எ-று.

இஃது இவர் பிறப்பதினும் பிறவாமை நன்று என்றது.

**ஆ) பரிதி.:** கீர்த்தியும் தானமும் கிருபையும் இல்லாதவர் நிலத்துக்குப் பாரம், எ-று.

இ) **பரிப்.**: பொருள் ஈட்டுதலை விரும்பிப் புகழை விரும்பாத மாந்தர் பிறத்தல், நிலத்துக்குப் பாரம் ஆகும், எ-று.

இத்தன்மையார் பிறப்பதினும் பிறவாமை நன்று என்றது.

ஈ) ***காளி.***: இங்ஙனம் பொருள் ஈட்டம் காரணமாக உலோபித்துப் புண்ணியதானம் புகழினை விரும்பாத மக்கட் பெரும் பாவியரானவர் இவ்விடத்து வந்து உதிக்கின்றது எல்லாம் இப்பூமிக்கு ஒரு பாரமாம் இத்துணை, எ-று.

உ) ***பரிமேல்.***: யாம் பிறரின்றி மிக ஈட்டுதும் என்று பொருளினது ஈட்டல் மாத்திரத்தையே விரும்பி அதன் பயனாய புகழை விரும்பாத மக்களது பிறப்பு நிலத்திற்குப் பாரமாம் அத்துணையே, (எ-று).

இசை இருமைக்கும் உறுதியாய அறமாகலின், ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது ஈட்டல் துன்பத்தையும் வேண்டிய அறிவின்மை பற்றி, நிலக்குப் பொறை என்றார். பிறப்பு என்றது அதற்குரிய உடம்பினை.

ஊ) ***கவிராசர்***: 'யாம் வெகுவாகப் பொருள் தேட வேண்டு' மென்று நினைத்துப் பொருள் தேடிவைத்து, அதன் பயனாகிய கீர்த்தியையும் தர்மத்தையும் விரும்பாதவன் பிறந்தது பூமிக்குப் பாரமாம்.

பொருளைத் தேடினவன் தருமத்தை வேண்டல் செய்யாது, வைத்துக் காக்கிற துக்கத்தையும் அந்தப் பொருள் கெட்டுப் போனால் வருகிற துக்கத்தையும் வேண்டி அறிவின்மை பற்றி, நிலக்குப் பொறை என்றார்.

---

1. ஈட்டம் என்பது அம் ஈற்றுத் தன்மை பன்மை வினைமுற்று என்பர் கோ.வ. இங்ஙனம் இவர் எழுதநேர்ந்தது பரிமேலழகர் பிறரின் மிக ஈட்டுதும் என்று பொருளினது ஈட்டல் மாத்திரத்தையே விரும்பி என்று விளக்கி எழுதியதால் நேர்ந்த குறிப்பாகலாம் , இவறி என்பது விரும்பி என்னும் பொருளது, ஈட்டம் இவறி என இருப்பதால் பொருளீட்டம் மாத்திரத்தையே விரும்பி என்று உரைப் பாடம் இருந்திருக்கலாம். ஈட்டல் எனத் தொழிற்பெயராக்கியதால் குறட்கண் உள்ள ஈட்டம் என்னும் சொல் தன்மை பன்மை வினைமுற்றாகக் கருதப் பெற்றது என்பதை விடுத்துத் தொழிற்பெயராகவோ, தொழிலாகுபெயராகவோ, ஈட்டல் அல்லது ஈட்டம் எனக் கருதின் நலம். ஈட்டம் எனபது ஈட்டுதலும் என்னும் பொருளைத் தராது. 'அம்' ஈறு விகுதியாக வருமேயன்றிக் காலங்காட்டாது.

ஏ) *பழைய2.*: பொருள் தேடுதல் மேல் ஆசை வைத்துத் தேடிய பொருளாற் புகழைத் தேடாத மக்கள் சாகாமல் எல்லாரும் காணத் தோற்றியிருப்பது நிலத்திற்குப் பாரமாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*'இசைவேண்டா ஆடவர்'* என்பதற்கு *பரிதி* கீர்த்தியும் தானமும் கிருபையும் இல்லாதவர் என்பர். இவ்வுரை இயைபிலது போலத் தோன்றலாம். இவை மூன்றும் முறையே காரணகாரியத் தொடர்புடைய ஆகலான். 'இசை வேண்டா' எனவே அதன் காரணமாகிய தானமும் சீவதயையும் வேண்டாதவர் என்பது தாமே போதரும் ஆதல்நோக்கிக் கூறினராதலின் இயைபுடைத்தாம். *காளிங்கரும்* புண்ணியதானம் புகழினை எனல் காண்க.

*பரிமேலழகர்* "செல்வத்துப் பயனே ஈதல்" ஆதலின், ஈந்து இருமை யின்பத்தையும் விரும்பாத மனிதர் ஈட்டுங்காற் றுன்பம். ஈட்டிய வொண் பொருளைக் காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் ஆதலின் இருவகைத் துன்பத்தை இருமையிலும் எய்துவர் என்பதை எண்ணி வேண்டியதை நோக்கி நிலக்குப்பொறை என்றார் என்ற நயம் உணர்ந்தின்புறற்குரியது.

இக்*குறட்கு*. 'நிலக்குப்பொறை' 'ஆடவர்'. என்ற சொற்களுக்குத் *தேவநேயர்* தரும் நயமும் பொருளும் சிறியன. *குழந்தை* 'இவறி' என்பதற்கு 'விரும்பி' எனப்பொருள் தருவர். ஈண்டு விருப்பத்தின் மிகுதியாலான இறுகப்பற்றுதல் அல்லது உலோபித்தல் என்ற பொருளே சிறக்கும். நிலக்குப்பொறை- தாய்வயிற்றுக்குப் பொறை நிலத்திற்கும் பொறை என்பர் *மு.கோ.*

## ஒ) ஒப்புமைப்பகுதி:

### *ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்:*

தேங்குலாம் அலங்கண் மாலைச் செறிகழன் மன்ன போற்றி
பூங்குலாய் விரிந்த சோலைப் பொழிமதுத் திவலை தூவக்
கோங்கெலாம் கமழ மாட்டா குணமிலார் செல்வ மேபோற்
பாங்கெலாம் செம்பொன் பூப்ப பிரிந்தது பருவம் என்றான்

- சூளா., 161

ஒன்றிகலான் பொருள் காத்தவன் புகழெனத் தேயுங் கற்பினாள்.

- கம்ப., 2854

கண்ணு முகமுங் காட்டுவாய் வடிவு மொருகாற் காட்டாயோ
வொண்ணு மென்னி னஃதுதவா துலோவி னாரு முயர்ந்தாரோ.

- கம்ப., 33834

எல்லையிற் செல்வந் திரா விசையென - கம்ப., 7420.

***நிலக்குப் பொறை:***

நிலக்குப் பொறை - குறள்., 572

## 101.4. எச்சமென் றென்னெண்ணும் கொல்லோ ஒருவரால்
## நச்சப் படாஅ தவன். (1004)

***உரைபகுதி:***

***அ) மணக்.***: ஒருவராலும் நச்சப்படாத செல்வம் உடையவன் தனக்குப் பின்பு நிற்பதென்று யாதினை எண்ணுமோ? எ-று.

இது புகழில்லையாம் என்றது.

***ஆ) பரிதி.***: எச்சம் என்று எண்ணவும் வேண்டுமோ? ஒருவருக்கும் கொடாத பாவியை, எ-று.

***இ) பரிப்.***: ஒருவராலும் நச்சபடாத செல்வம் உடையான் தனக்குப் பின்பு நிற்கும் என்று யாதனை எண்ணுமோ? எ-று.

இது புகழ் இல்லை ஆம் என்றது.

***ஈ) காளி.***: இங்ஙனம் யாவராலும் யாது ஒன்றும் நச்சபடாதவனிடத்துக் குலமும் உருபும் ஒழுக்கமும் புதல்வரும் பொருளும் பூமியும் என்னும் எவ்வெச்சமும் இவனிடத்து இவை எல்லாம் உளவேனும் ஒன்றும் உளது என்று கருதார் உலகத்தோர் ஒரு பயன் இல்லாமை யினான், எ-று.

குலம், உருபு, குணம், ஒழுக்கம்,புதல்வர், பொருள், பூமி என்னும் எச்சத்தினுள்ளும் இவன்கண் உள்ளதாம் எச்சம் இது என்று என் எண்ணுங்கொல்லோ இவ்வுலகம்; எனவே யாது ஒன்றும் உளதாக எண்ணாது என்பது.

***உ) பரிமேல்.***: ஒரு பொருளும் ஈந்து அறியாமையின் ஒருவராலும் நச்சப்படுதல் இல்லாதவன், தான் இறந்தவழி ஈண்டு ஒழிந்து நிற்பதாக யாதனைக் கருதுமோ, (எ-று).

ஈண்டு ஒழிந்து நிற்கும் புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக்கு அதனோடு யாதும் இயைபு இல்லை என்பார் என் எண்ணுங்கொல்லோ என்றார். ஓகாரம் அசை. இவை மூன்று பாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்:*** ஒருபொருளையும் கொடுத்தறியாமையின், ஒருவராலும் நச்சப்படாதவன், தான் செத்துப்போனபிறகு ஈண்டு ஒழிந்து நிற்பதாக எந்தப் பொருளை நினைப்பனோ, எ-று.

பொருளைக் கொடுத்தவனுக்கே கீர்த்தியுண்டாகும், கொடாத வனுக்கு இம்மை மறுமை இரண்டிலேயும் அந்தப் பொருளாலே பிரயோசன மில்லை, எ.ம்.

***ஏ) பழைய2.:*** ஒருபொருளும் கொடுத்தறியாமையின் ஒருவராலும் நச்சப்படுதல் இல்லாதவன் செத்தால் நமக்கு ஒழிந்து வருவது யாதென்று எண்ணும் கொல்லோ?

எல்லாப் பொருளும் வைத்துச் சாகின்றவன் ஒழிந்து வருவது யாதெனக் கருதுவான் கொல்லோ என்றது. ஒழிந்து நிற்கும் புகழ் யாது என்றுமாம். ஒழிந்து நிற்பதும் வருவதும் புகழும் புண்ணியமும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

பலருக்குப் பயன்படுதலால் பலராலும் நச்சப்படும் செல்வத்தின் தன்மையை **அறத்துப்பாலின்கண்,** 'ஊருணி நீர் நிறைந்தற்று' (215) 'பயன்மரம்' (216) என்ற ***குறட்பாக்களில்*** 'உலகுஅவாம்' 'உள்ளூர் பழுத்தற்று' என்ற சொற்களால் ஆசிரியர் குறித்தலின் ஈண்டு ஒருவரால் நச்சப்படாதவன் என எதிர்மறை வாசகத்தார் குறித்தனர்.

***புகழ்*** அதிகாரத்தில் 231-234 ***குறள்களால்*** ஈதலால் புகழ் வரும் என்றார். ஈண்டு ஈந்து பிறர் நச்ச வாழாதவன் தனக்குப் பின் நிற்பது யாதோ என்று ஈயானை நோக்கி இரங்குகின்றார்.

எச்சம்-புகழ் என்று ஈண்டுக்கருதும் ***பரிமேலழகர்*** ஆண்டு எச்சத்தாற் காணப்படும் என்பதற்கு நன்மக்களது உண்மை யானும் இன்மையானும் என்றார்.

**காளிங்கர்** குலமும், உருவும், குணமும், ஒழுக்கமும், புதல்வரும், பொருள் பூமி முதலியவும் எச்சம் என்றும், இவற்றுள் எது இவனிடம் இறந்த பின்பும் இருத்தல் கூடுல் என்றும் எச்சத்திற்கு உள்ள பொருள் அனைத்தையும் தொகுத்து ஏற்பனவற்றைக் கூறுவர்.

**பரிமேலழகர்** 'உரைப்பாருரைப்பவை எல்லாம் இரப்பார்க் கொன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்' (232) ஆகலானும் இறந்தபின் எஞ்சி

பொன்றாது நிற்பது புகழ் ஒன்றேயாதலானும் புகழ் என்றுரை கண்டார். இதுவே தக்கதும் சிறந்ததும் ஆம். *பழைய உரைகாரர்* புகழோடு புண்ணியத்தையுங் கூறுவர்.

'எண்ணுமோ' என்பதின் வினை முதலாக நச்சப்படாதவனையே கருதுவர் ***மணக்., பரிமேல்., கவிராசர்., வரத.,*** முதலானோர். ***காளி.,*** 'உலகம் எண்ணுமோ' என்பர். உலகம் எண்ணுமோ என்பதைக் காட்டிலும் தான் எண்ணுமோ என்பதே சிறந்தது.

**பரிதி**. கொடாத பாவியை எச்சம் என்று எண்ணவும் வேண்டுமோ என்பர். ஒருவராலும் நச்சப்படாதவனைப் பாவி என்கிறார். இவர் உரை சிறப்பின்று.

எச்சம்-வாழ்க்கையின் மிச்சம் என்பர் **இராமலிங்கர்.**

### ஒ) ஒப்புமைப்பகுதி:

**ஒருவரான் நச்சப் படா அதவன்:**

தேங்குலாம் அலங்கண் மாலைச் செறிகழன் மன்ன போற்றி
பூங்குலாய் விரிந்த சோலைப் பொழிமதுத் திவலை தூவக்
கோங்கெலாம் கமழ மாட்டா குணமிலார் செல்வ மேபோற்
பாங்கெலாம் செம்பொன் பூப்ப பிரிந்தது பருவம் என்றான். - சூளா., 161.

## 101.5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய கோடியுண் டாயினும் இல். (1005)

### *உரைப்பகுதி:*

**அ) மணக்.**: பிறர்க்குக் கொடுத்தலும் நுகர்தலும் இல்லாதார்க்குப் பல கோடி பொருள் உண்டாயினும் அவை இன்மையோடு ஒக்கும்,, எ-று.

**ஆ) பரிதி.**: தானும் உண்டு தன்மமும் செய்யாதவன் திரவியம் கோடி உண்டாயினும் இல்லை, எ-று.

***இ) பரிப்.***: பிறர்க்குக் கொடுத்தலும் தாம் அது நுகர்தலும் இல்லா தார்க்குப் பல கோடி பொருள் உண்டு ஆயினும் இன்மையோடு ஒக்கும். எ-று.

இது நல்கூர்ந்தாரோடு ஒப்பா என்றது.

ஈ) ***காளி.***: ஒருவர் பொருள் பெற்றதனால் பயன் யாதோ எனின் நாள் தோறும் பிறர்க்கு உபகரித்தலும் தாம் உண்டு இன்பம் உறுதலும் அன்றே? அதனால் அவை இரண்டும் இல்லாத அரும்பாவிக்கு அளவு இறந்த கோடி பொருள் உண்டு ஆயினும் யாதும் இல்லை என்பதே துணிவு, எ-று.

உ) ***பரிமேல்.***: பிறர்க்கு ஈவதும் தாம் நுகர்வதுமாய இரண்டு செய்கையும் உடையரல்லார்தார்க்கு, பலவாக அடுக்கிய கோடிபொருள் உண்டாயினும் ஒன்றும் இல்லை, (எ-று).

இன்பத்தினும் அறம் சிறந்தமையின், கொடுத்தல் தொழில் முற்கூறப்பட்டது[1]. அடுக்கியகோடி என்றது ஈண்டு எண்ணப்படும் பொருள் மேல் நின்றது[2]. ஒன்றுமில்லார்போலப் பயனிரண்டும்[3] இழத்தலின், இல் என்றார்.

***காரி.***: அடுக்கிய கோடி என்பது எண்ணப்படும் பொருள் மேல் நின்றது. ''ஐந்தவித்தான் ஆற்ற''லும்[4] அது

ஊ) ***கவிராசர்.***: பொருளைப் பிறர்க்குக் கொடுக்கிறதும் தான் அனுபவிக்கிறதும் ஆகிய இந்த இரண்டும் இல்லாதவனுக்கு அநேக கோடி திரவியம் உண்டானாலும், ஒன்றுமில்லை, எ-று.

ஏ) ***பழைய2.***: பிறர்க்குக் கொடுப்பதும் தான் உண்பதும் இல்லார்க்குப் பலவாகிய கோடி பொருளுண்டாயினும் ஒன்றுமில்லாத வறியனாம்

இரண்டு மில்லாதவனுக்கு ஒன்று மில்லை யென்க. ஒன்று மில்லாதவர் போற பயனிரண்டும் இழந்தாராம் என்றது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***அடுக்கிய கோடி :***

அடுக்கிய கோடிபெறினும் -குறள்.,954

***முற்றும்:***

தென்கடல் வளாகம் பொதுமையின்றி
வெண்குடை நிழற்றிய வொருமையோற்கும்

---

1. இன்பத்தால் புகழில்லை அறத்தால் உண்டு ஆதலால் 'கொடுப்பதூஉம்' என முற்கூறினார்.
2. கோடி என்னும் எண்ணலளவைப்பெயர் அவ்வளவினதாகிய பொருளை யுணர்த்துதலின் எண்ணலளவையாகுபெயராம்.
3. பயனிரண்டும் -- ஈதலால் உண்டாகிய அறப்பயனையும் துய்த்தலால் உண்டாகிய இன்பப் பயனையும்.
4. குறள்., 26.

நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக்கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே -புறம்.,189

அருளைப் பொருளா அறஞ்செய்து வான்கண்
இருளிலியல் பெய்தாத தென்னோ நமரங்காள் -வளையா.,20

.................. தகவிழந் தழிவி னன்பொருள்
போகவா றொழுகலான் செல்வம் போலவே - கம்ப.,4630

## 101.6. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன் (று)
## ஈதல் இயல்பிலா தான்.[1] (1006)

***உரைப்பகுதி:***

***அ) மணக்:*** தானும் துவ்வாது பிறர்க்கும் ஒன்று ஈயாத இயல்பினை யுடையான் பெற்ற பெருஞ்செல்வம் குற்றமுடைத்து, எ-று.

***ஆ) பரிதி.:*** தானும் புசியான் தக்கார்க்கு ஒன்று ஈயான் செல்வமன்றோ பெருந்துயரம் உறுவது, (எ-று).

***இ) பரிப்.:*** தானும் துவ்வாது தக்கார்க்கும் ஒன்று ஈயாத இயல்பினை உடையான் பெற்ற பெருஞ்செல்வம் குற்றம் ஆம், (எ-று).

இஃது இறுதி பயக்கும் என்றது.

***ஈ) காளி.:*** தானும் உண்ணானாகித் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பும் இல்லாதானிடத்து உள்ள பெருஞ் செல்வமானது பெரும் பாவத் திறன் என்பது பொருள்,எ-று.

***உ) பரிமேல்.:*** தான்நுகரானாய அதனமேலும் தகுதியுடையார்க்கு அவர் வேண்டியதொன்றை ஈதலியற்கை இலனாயினான், இரண்டும்[2] செய்தற்கு இடன் உடைத்தாய செல்வத்திற்கு ஒரு நோய், எ-று.

1. செல்வத்தைத் தானும் நுகராமல் தக்கார்க்கும் ஈயாமல் இருப்பவன் ஏதம் நோய் என்புழி இயல்பிலாதான் என்ற உயர்திணை எழுவாய் ஏதம் என அஃறிணை முடிவு ஏற்பது வழு. இதற்கு அமைதி கூறுவார் செறலால் உயர்திணை அஃறிணையாயிற்று என்பர். இங்ஙனம் வருவதனை நச்சி இழிபினாலாய திணை வழுவமைதி என்பர்.
2. இரண்டும் - தான்நுகர்தலும், தக்கார்க்குக் கொடுத்தலும்.

தகுதி-தானம் கோடற்கு ஏற்புடைமை. ஏதம் ஆகுபெயர்[3] நுகரப்படுதலுமாகிய தொழிற்குரியதனை அன்றாக்கினமையின் நோய்[4] என்றார். ஈதலியல்பு இலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தல் முதலியவற்றால் துன்பமேயாம் என்று உரைப்பாரும் உளர்[5] இவை இரண்டு பாட்டானும் இவ்விருமையும் உடன் கூறப்பட்டன.

***ஊ) கவிராசர்:*** தான் அனுபவிக்கிறதும் கொடுக்கிறதும் இல்லாதவன் அச்செல்வத்துக்கே ஒரு நோய், எ-று.

பெரியோர்களுக்குக் கொடுக்கிறதற்கும் தான் அனுபவிக்கிறதற்கும் யோக்கியமாகிய பொருளைப் புதைத்து வைத்துச் சிறை செய்கிறபடியினாலே, அந்தப் பொருளுக்கு அவன் ஒரு வியாதியாம், எ-ம்.

***ஏ) பழைய2:*** தானனுபவியான் தக்கார்க்கு ஒன்றுங் கொடான் இரண்டியற்கையும் மில்லான் பெருஞ்செல்வம் அவனுக்கு வந்த துன்பமாம்.

தானும் அனுபவியான் தக்கார்க்கும் கொடாதவன் பெருஞ் செல்வம் தேடலுங் காத்தலுந் துன்பமாதலின் துன்பமாயிற்று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'பெருஞ்செல்வம்குற்றம் உடைத்து' என்பர் ***மணக்குடவர்.*** ***பரிதியார்*** 'செல்வமன்றோ பெருந்துயரம் உறுவது' என்பர்; செல்வம் துயருறும் என்பது இவர் கருத்து. ***காளி.,*** 'செல்வம் பெரும் பாவத்திரட்சி' என்பர். ***பரிமேல்.,*** 'ஏதந் தருவதனை ஏதம் என்றார்' என்பர். 'ஈயாதவன், செல்வத்தைப் பிடித்த நோய்' என்பர் '***கவிராசர்.***

இவ்வுரைகளில் செல்வம் ஈயாதவனுக்கு ஒரு நோய் என்பாரும், ஈயாதவன் செல்வத்திற்கு நோய் போல்வன் என்பாருமாக இரு திறத்தினர். இவருள் செல்வம் ஈயாதவனுக்கு ஏதம் என்பதே சிறந்தது.

இவையன்றி, ஈதல் இயைபிலாதான் எல்லாரானும் வெறுக்கப் படுதலின் அவன் சேர்த்த செல்வம் அவனுக்கே உயிருக்கிறுதியாவது போன்ற துன்பந்தரும் எனலும், சொல்லமைதிக்கியைந்த உரையாகலாம். ஏதம்-துன்பம் சிறந்தது தெளிக. ***இராம.*** இக்கருத்தினர்.

3. ஏதம் என்பதன் நேர்பொருள் நோயன்று; துன்பம் என்பதுதான். நோயால் விளையும் துன்பமாகிய காரியப்பெயர் அதனைத் தரும் கருவியாகிய நோயை யுணர்த்துதலால் காரியவாகுபெயர்.

4. 'ஏதம்' என்றும் பாடமுண்டு.
5. யார் என்று தெரியக்கூடவில்லை.

*வரத.*, ஈயாதான் செல்வத்திற்கே துன்பந்தருவன் என்பர் செல்வம் உயிரில்பொருளாய் உணர்ச்சியில்லாதது. அது துன்புறுதல் ஒருக்காலும் இல்லை. ஆயினும் 'வாரா மரபின வரக் கூறுதலும் என்னா மரபின எனக்கூறுதலுமாய் இன்ன என்னுங் குறிப்புரை' (தொல். சொல்.416) யாதல் போல ஏதப்படாத செல்வம் ஏதப்படும் என்பதும் குறிப்புரையாகும் என்க. வருங் ***குறளும்*** அது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***ஏதம் பெருஞ்செல்வம்:***

ஈட்டலும் துன்பம்மற் றீட்டிய ஒண்பொருளைக்
காத்தலும் ஆங்கே கடுந்துன்பம் - காத்தல்
குறைபடில் துன்பம் கெடில்துன்பம் துன்பக்கு
உறைபதி மற்றைப் பொருள். - நாலடி., 280

....................................... ஒண்பொருள்
செய்வம் என்பார்க்குந் துயிலில்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில். - நான்மணிக்.,7

***தக்கார்க் கொன்றீதல் இயல்பிலாதான்:***

.......................................... துணி வில்லாமை
மாண்டா ரமர்தான் வழங்காமையின் வச்சை மாக்கள்
பண்டார மொக்கின்றன................ - கம்ப., 3541

கண்ணு முகமுங் காட்டுவாய் வடிவு மொருகாற் காட்டாயோ
வொண்ணு மென்னினஃதுதாவா துலோவி னாரு முயர்ந்தாரோ
- கம்ப., 3834

## 101.7. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
## பெற்றாள் தமியள்மூத் தற்று. (1007)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.*** பொருளற்றார்க்கு யாதானும் ஒன்றைக்கொடாதவனுடைய செல்வம், மிக்க அழகினைப் பெற்றாளொருத்தி தமியளாய்[1] முதிர்ந்தாற் போலும், எ-று.

இது செல்வந் தானும் ஒரு பயன் பெறாது என்றது.

1. தமியளாய் - தனித்தவளாய்

*ஆ) பரிதி.*: செல்வம் தேடிவைத்து அறஞ் செய்யாதவன் என்போலும் எனின். மிகவும்உருவ நலம் பெற்றவள் தனியே இருந்து மூத்தற்கு ஒக்கும், எ-று.

*இ) பரிப்.*: வறியவர்க்கு ஒன்றைக் கொடுக்க மாட்டாதான் பெற்ற பெரிய செல்வம் அழகினைப் பெற்ற ஒருத்தி கொழுநனை இன்றி மூத்துத் தமியள் ஆய்க் கழிந்தது போலும். எ-று.

தமியள் மூத்தல்-தன்னைப் பிறர்க்கு ஈவார் இன்றித் தமியள் ஆகி மூத்தல். இது செல்வம் தானும் ஒரு பயன் பெறாது என்றது.

*ஈ) காளி.*: தம்மாட்டு ஒன்று அற்றார் ஆகிய வறியோர்க்கு ஒன்று உதவாதான் பெற்ற பெருஞ்செல்வமானது மிகநலம் பெற்றாள் கணவனோடு கலந்து இன்புறுதற்கு விதி இலளாகித் தானே தனியளாய் மூத்து இருந்த அத்தன்மைத்து: எனவே செல்வம் இருந்தும் இருந்திலன் என்பது பொருளாயிற்று.

*உ) பரிமேல்.*:ஒரு பொருளும் இலராயினார்க்கு அவா வேண்டிய தொன்றனைக் கொடாதானது செல்வம் கொன்னே கழிதல், பெண்டிரின் மிக்க நலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பார் இன்மையின் கொழுநன் இன்றித் தமியளாய் மூத்த தன்மைத்து, எ-று.

நலம் - வடிவின் நன்மையும் குணத்தின் நன்மையும் இரண்டும் ஒருங்குபெறுதல் அரிதாகலின், 'பெற்றாள்' என்றார். கொடுப்பாரும் கொழுநனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியோடு உவமை கூறினமையின், தானும் ஏற்பானுமேயன்றிச் செல்வமும் பயனிழந்து கழியும் என்பதாயிற்று.

*காரி.*: கொடுப்பாரும் கொள்வாரும் இன்றிக் குமரி இருத்தல் காண்க.

*ஊ) கவிராசர்*: ஒருபொருளும் இல்லாதார்க்குக் கொடாதவன் செல்வம் விருதாவிலே[2] போகிறது, நல்ல வடிவையும் குணத்தையுமுடைய யௌவன வயசுடைய ஸ்திரீ கொடுப்பாரின்மையின், புருஷன் இல்லாமல் தனியாயிருந்து மூத்த தன்மைத்து. எ-று.

காலங்கழிந்தால் அது பின்னை வாராது. பொருளுடையவனுக்குந் தன்பலம் போய் வயசுமுதிர்ந்தாற் பிறகு கொடுக்கக் கூடாது, எ-ம்.

2. விருதாவிலே - பயனின்றி

***ஏ) பழைய2:*** ஒருபொருளும் இல்லாராயினார்க்கு ஒன்றினையும் கொடாதவன் செல்வம் வைத்தவன் சாதல், பெண்களில் மிக்க நலம் பெற்றாளொருத்தி மணஞ் செய்து கொடுப்பார் இன்மையில் கணவனின்றித் தனித்திருந்து கிழவியாய்ச் செத்தவளோடு ஒக்கும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***பரிதி.*** அறஞ்செய்யாதவனை மிக நலம் பெற்றாளுக்கு உவமிப்பர். ஏனையோர் பயன்படாத செல்வத்தை நலம் பெற்றாள் தமியாள் மூத்தமைக்கு ஒப்பிடுவர். இவற்றுள் பின்னதே ஏற்புடையது. ***பழைய உரையாசிரியர்*** செல்வம் வைத்தவன் சாதல் நலம் பெற்றாள் தமியளாய் சாதலுக்கு ஒக்கும் எனத் தொழில் உவம மாக்குவர். ஆனால் உரையமைப்பு செல்வம் வைத்தவன் சாதல் தமியளாய்ச் செத்தவளோடு ஒக்கும் எனத் தொழிலைத் தொழிலையுடையாளோடு ஒப்பிடுகிறார். இது ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழையாகலாம்.

செல்வம் பயன்படாதது நலம் பெற்றாள் மூத்தது போலாம் என்றி யைத்துப் பொருள் கோடல் தகும். ***கவிராசர்*** தரும் கருத்துரையாகிய வயது முதிர்ந்தால் பிறகு கொடுக்கக்கூடாது என்பது தெளி வில்லது.

***குழந்தை,*** ஆடவனுக்கும் பயன்படாமல் தானும் வாழ்க்கை யின்பம் இழந்த குமரியோடு உவமை கூறியதால் செல்வமும் பயன்படாமல் செல்வமும் பயன்இழக்கும் என்பதாம் என விளக்கந்தருவர்.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

***மிகநலம் பெற்றான் தமியள் மூத்தற்று:***

அமரர்கோ னாணையின் அருந்துவோர்ப் பெறாது
குமரிமூத்த என் பாத்திரம் - மணி:13:76 - 77

குமரி மூத்தஅக் கொடுங்குழை நல்லாள் -மணி: 22:143

போகப் புணர்விலா இளமை - வளையாபதி., 12

...............................மலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்றான்
- கம்ப., 773

பழுதறு பெண்மை யோடு மிளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலு மென்றான்.
-கம்ப., 2874

101.8. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சுமரம் பழுத் தற்று. (1008)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** பிறரால் ஆசைப்படாதவனது செல்வம் ஊர் நடுவுள் பழுத்து நிற்பதொரு நச்சுமரம் பழுத்ததன்மைத்து, எ-று.

இது நச்சு மரப்பழம் தமது ஆசையாலே தின்பாருண்டாயின், அவரைக் கொல்லும் என்றது.

***ஆ) பரிதி.:*** பிறர் நச்சப்படாதவன் செல்வம் நடுவூரில் எட்டி மரம் பழுத்ததற்கு ஒக்கும், எ-று.

***இ) பரிப்.:*** பிறரால் நச்சப்படாதவன் செல்வம் ஊர் நடுவுள் பருத்து நிற்பது ஓர் நச்சு மரம் பழுத்த தன்மைத்து, எ-று.

தமது ஆசையால் தின்பார் உண்டு ஆயின் இது கொல்லும் என்றவாறு ஆயிற்று.

***ஈ) காளி.:*** தன்மாட்டு வந்து எமக்கு இது வேண்டும் என்று யாவராலும் விரும்பப்படாத அரும்பாவி பெற்ற பெருந்திருவானது எத்தன்மைத் தோ எனின், ஊர் நடுவாகிய மன்றினுள் ஒரு மரம் பழுத்தால் மற்று அஃது யாவர்க்கும் பொது அன்றே: அங்ஙனம் பொதுப்பட நுகர்தற்கு உரியமன்றினுள் நச்சு மரமாகிய காஞ்சிரை[1] பெரிதும் பழுத்து நின்ற அத்தன்மைத்து, எ-று.

***உ) பரிமேல்.:*** வறியார்க்கு ~~அணியனாயி~~ருந்தும் ஒன்றும் கொடாமை யின் அவரான்[2] நச்சப்படாதவன் செல்வம் எய்தல், ஊரிடை நிற்பதோர் நச்சு மரம் பழுத்தாற் போலும், எ-று.

நடுவூர் என்பது பின்முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை[3]. அண்மையுடைமைகளான் பயனில்லை என்பதாம்.

***காரி:*** நடுவூர் - முன்பின்னாகத் தொக்கதொகை.

1. காஞ்சிரை - ஒருவகை மரம்
2. அவரான் - வறியரான்,
3. ஊர் நடு என்பது ஊராயிற்று.

***ஊ) கவிராசர்:*** தரித்திரானவர்களுக்கு ஒன்றும் கொடாதவன் செல்வம் பெற்றிருக்கிறது, நடுத்தெருவிலே விஷமான எட்டி மரம் பழுத்தாப் போலே.

***ஏ) பழைய2.:*** ஒருவராலும் நச்சப்படாத கொடுமையாளன் செல்வம் ஊருக்கு நடுவே நச்சுமரம் பழுத்தது போலாம்.

நச்சு மரத்தின் பழத்தை நச்சினால் சாவுக்கு வருவதால் நச்சாத நச்சுமரம் பழுத்தது போலாம்: ஒருவராலும் நச்சப் படாத கொடுமையாளன் செல்வம் என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இது 'பயன்மரம் உள்ளூர்ப் பழுதற்றால்' (216) என்ற குறட்பாவின் மறுதலை அமைப்பு.

'ஊர்நடுவுள் பழுத்து நிற்பதொரு நச்சுமரம் பழுத்த தன்மைத்து' என்ற ***மணக்குடவர்*** உரையில் 'பழுத்து நிற்ப தொரு' என்பது மிகைஎனத்தோன்றுகிறது. ஆசிரியர் அங்ஙனம் எழுதார். ***பரிதியார்*** 'நச்சுமரம் - எட்டிமரம்' என்பர். ***காளி.***, 'காஞ்சிரங்காய்' என்பர்.

'பழுத்தற்று' என்ற வினைக்கேற்பச் செல்வம் என்ற பெயர்ச் சொல்லைச் செல்வம் எய்துதல் எனத்தொழிலாக்கி முடித்த ***பரிமேலழகர்*** சிறப்புடையர். ***தேவநேயரும்*** இம்முடிபினர்.

***பழைய உரை*** செல்வம் நச்சுமரம் பழுத்தது போலாம் என்றது பெயரொடு தொழில் உவமிக்கப்படுதலின் இழுக்குடைத்து எனலாம். அது போலவே இவர்சொல்லும் கருத்தும் எங்ஙனம் எனின் நச்சுப்படாதவன் செல்வத்தை நச்சினால் சாவு வரும் என்பதால் இது இக்குறட்குக் கருத்தாகாது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***நச்சுப்படாதவன் செல்வம்:***

கண்ணு முகமுங் காட்டுவாய் வடிவு மொருகாற் காட்டாயோ
வொண்ணு மென்னி னஃதுதவா துலோவி னாரு முயர்ந்தாரோ

- கம்ப., 3834

***முற்றும்:***

அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா

பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதும் கடப்பாட்ட தன்று - நாலடி., 261

ஒ) **மேற்கோள்பகுதி:**

***சுவாமி.:*** பொருத்தமில் புணர்ச்சிக்கு மேற்கோள் காட்டி,'ஊர் நடுவுள்' என்று உருபு பொருந்தலே முறை என்பர். - இ.கொ., 108

## 101.9. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
## ஒண்பொருள் கொள்வார் பிறர். (1009)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** பொருள் தேடுங்கால் பிறர்மாட்டு அன்பு செய்தலையும் நீக்கி, அது தேடினானாகிய தன்னைக் காத்தலும் இன்றி, அறத்தையும் செய்யாது தொகுத்த ஒள்ளிய பொருளைக் கொள்வார் பிறர், எ-று.

***ஆ) பரிதி.:*** அன்புநெறியை விட்டுத் தன்ம நெறியைவிட்டுத் தேடிய பொருள் தனக்காகாது பிறர்க்காம், எ-று.

***இ) பரிப்.:*** பொருள் தேடுங்கால் பிறர்மாட்டு அன்பு செய்தலை நீக்கி அது தேடினான். நுகர்தலும் இன்றி அறத்தையும் செய்யாது தொகுத்த ஒள்ளிய பொருளைக் கொள்வார் பிறர், எ-று.

இது நன்றியில் செல்வம் ஆவது இத்தன்மையது என்பதூஉம் அது பிறர் கொள்வர் என்பதூஉம் கூறிற்று. பிறர் என்றது தன் வழியின் உள்ளார் அல்லாதாரை.

***ஈ) காளி.:*** ஒருவன் தானும் உண்டு இனிது வாழாது தன்னையும் செறுத்து[1] மற்றும் வறியார்மாட்டு ஓர் இரக்கம் இன்றி அதனால் அறனையும் செய்யக் கருதாது தான் தொகுத்து வைத்த ஒள்ளிய பொருள் இனிக் கைக்கொள்வார் பிறர்; எனவே தான் தன் பயன் இழந்தான் என்பது பொருள், எ-று.

***உ) பரிமேல்.:*** ஒருவன் கொடாமைப் பொருட்டுச் சுற்றத்தார் நட்டார்கண் அன்பு செய்தலை ஒழிந்து, வேண்டுவன நுகராது தன்னைச்செறுத்து, வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தை நினைப்பதும் செய்யாது ஈட்டிய ஒள்ளிய பொருளைக் கொண்டு போய்ப் பயன்பெறுவார் பிறர், எ-று.

1. செறுத்தி - வறுத்தி

பயனாய அறனும் இன்பமும் செய்து கொள்ளாதானுக்குப் பொருளால் உள்ளது ஈட்டல் துன்பமே என்பது தோன்ற ஈட்டிய என்றும் அவன் வழியினுள்ளார்க்கும் உதவாது என்பது தோன்றப் பிறர் என்றும் கூறினார்.

***ஊ) கவிராசர்.***: ஒருவன், பொருளைக் கொடாமலிருக்கிற நிமித்தமாய்ச் சுற்றத்தார்மேலும் சினேகிதர் மேலும் அன்பு செய்தலை ஒழிந்து, தான் வேண்டுவனவற்றையும் அனுபவியாமல் தன்னை வருத்தியும், இரக்கிறவர்களுக்குக் கொடாமலும், தேடி வைத்த பொருள், அவன்வமிசத்தாருக்கும் ஆகாது. அதனைப் பிறர்கொண்டுபோய் அனுபவிப்பார்கள், எ-று.

பிறராவர் - அரசன் கள்ளர் அன்னிய ரென்பவர்.

***எ) பழைய2.***: ஒருவன் கொடாமைப் பொருட்டுச் சுற்றத்தார் நட்டாரிடத்து அன்பை ஒழித்து வேண்டியதனைப் புசியாது தன்னை வருத்தப்படுத்தி வறியார்க் கீந்து புண்ணியம் பெறுதலைக் கருதாது தேடிய நல்ல பொருளை அவனிருக்கவும் பிறர் கொண்டு போவார்.

அவன் பிள்ளைக்கு முதவாது; அரசன், கள்வர், நெருப்பு முதலாயினார் கொள்வர் என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***இக்குறள்*** 'தாமுடைமை வைத்திழக்கும் வன் கணவர்' என்பதை நினைவூட்டுகிறது. '***அன்பு*** - பிறர்மாட்டுச் செய்வது' என்பர் ***மணக்.;*** 'தன்மாட்டும் அன்பு செய்யாது' என்பதனை 'உண்ணாது' என்பதால் விளக்குவர் ***காளி.;*** 'சுற்றத்தார் நட்டார்கண் அன்பு செய்தலை ஒழித்து' என்பர் ***பரிமேல்., கவிராசர்*** முதலியோர். ***தேவநேயர், இராம.,*** இவர்களும் அங்ஙனமே கூறுவர். ***வரத., மணக்குடவரை*** ஒத்துரைப்பர். 'இனத்தாரிடத்து அன்பில்லாது' என்பர் ***கா.சு.***

இவற்றுள் ***பரிமேலழகரும்*** பிறரும் கூறுவன ஏற்புடையன '***பிறர்*** - தன்வழியில் உள்ளார் அல்லார்' என்பர் ***பரிப்.***, அவன் வமிசத்தாரல்லார்; அவராவர் அரசர், கள்ளர்,அன்னியர் என்பர் ***கவிராசர்:*** பிள்ளைக்கும் உதவாமல், அரசன் கள்வர் நெருப்பு முதலாயினார் கொள்வர் என்பர் ***பழைய2.:*** ***கள்வர்*** முதலியோர் என்பர் ***குழந்தை.***

***'ஒண்பொருள்'*** - ஒள்ளிய பொருள்' ***மணக்.' காளி., பரிமேல்.,*** முதலிய தொல்லாசிரியர்கள். இச்சொல் முன் 760ம் குறளிலும் வந்துள்ளது. அங்குப் ***பரிமேலழகர்*** ' நீதியால் சம்பாதித்த

பொருள்' என்றார். இங்கு அதுவே குறிப்புமொழியாய் ஒண்மையற்ற பொருளையுணர்த்திற்று, தனக்கும் தருமத்திற்கும் பயன் படாமையின்.

### ஒ) ஒப்புமைப்பகுதி:

***அறநோக்கா தீட்டிய ஒண்பொருள் கொள்வார் பலர்:***

கொடுத்தலுந் துய்த்தலும் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் ..........
ஏதிலான் துய்க்கப்படும் - நாலடி., 274

........... அறனெய்த .......... - கம்ப., 350

பண்டார மொக்கின்றன வள்ளுகி ராற்ப றித்தான் - கம்ப., 3541

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம்வேறு
பிறர்க்குதவி யாக்குபவர்பேறாம் - நன்னெறி.,

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார் - கொன்றை., 4

## 101.10. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
## வறங்கூர்ந் தனைய துடைத்து. (1010)

### உரைப்பகுதி:

***அ) மணக்.***: சீருடைய செல்வர் சிறுதுனியால் ஈயாதொழிதல் மாரி பெய்யாமை மிக்காற்போலும், எ-று.

மேற்கூறிய நன்றியில் செல்வமுடையாரன்றி நற்செல்வம் உடையாரும் பிறர்க்கு ஈயாராயின், மழை பெய்யாதாயின் உலகம்துன்பமுறுமாறு போல அவர் துன்பமுறுவர் என்றது.

***ஆ) பரிதி.***:சிறியார் பெரியோரிடத்திலிருந்து கொடுத்துப் பிரதாபிக்கிறது செல்வம் பொல்லாதான் கையிலேயிருந்து மிடைப்படுவது எதுக்கு ஒக்கும் மழைபெய்யாமல் உலகம் பார்ப்பதற்கு ஒக்கும், எ-று.

***இ) பரிப்.***: சீர்மையை உடைய செல்வர் சிறிது துனிதலால் ஈயாது ஒழிதல், மாரி பெய்யாமை மிக்காற் போலும், எ-று.

மேல் கூறிய நன்றியில் செல்வம் உடையார் அன்றி நற்செல்வம் உடையாரும் பிறர்க்கு ஈயார் ஆயின், மழை பெய்யாக் கால் உலகம் துன்பு உறுமாறு போலத் துன்புறும் என்றது.

*ஈ) காளி.:* அருளும் அன்பும் குறியும் முதலிய சீர்மைப்பாட்டினை உடைய செல்வர் பிறர்மாட்டுத் தம்மால் யாவரும் வெறுத்தக்க சிறு துனி ஆகிய வறுமைவரின், அஃது எனைத்தோ எனின், உலகு இன்புறுதற்கு உரித்தாகிய மழை வறம் கூர்ந்தாற்போல அதனை உடைத்து: எனவே பின்னும் தமக்கு உளவழி எல்லாம் பிறர்க்கு உபகரித்தலே[1] அவர்க்குக் கடன், எ-று.

உலகத்துச் சீர்மை உடையோர் தாம் பிறர்க்குச் செய்வன செய்தற்கு இயையாக்கால் பெரிதும் நாணுவார்: ஆதலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

*உ) பரிமேல்.:* புகழுடைத்தாய செல்வத்தினை உடையவரது நிற்குங் காலம் சிறிதாகிய வறுமை, உலகத்தையெல்லாம் நிலை நிறுத்தும் மேகம் வறுமை மிக்காற் போல்வதோர் இயல்பினை உடைத்து.

துனி-வெறுப்பு; அதனைச் செய்தலான் துனி எனப் பட்டது[2]. யாவர்க்கும் பயன்பட்டார் அதனான் வறியராய வழியும் அவ்வறுமை கடிதின் நீங்குதலின் பின்பும் செல்வராய்ப் பயன்படுவர் என்பது உவமையால் பெறப்பட்டது; படவே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படாது என்பதாயிற்று[3]. இதற்குச் சீருடைச் செல்வர் இரவலரோடு வெறுக்கும் நிலையில்வெறுப்பு மாரிவறங் கூர்ந்தனைய தன்மையை உடைத்து என அதிகாரத்தோடு பெருந்தாமை மேலும் ஓர் பொருள் தொடர்பு படாமல் உரைப்பாரும் உளர்[4]. இவை நான்கு பாட்டானும் அச்செல்வத்தது குற்றம் கூறப்பட்டது.

*காரி.:* வறங்கூர்தல் - வறுமைமிகுதல்.

*ஊ) கவிராசர்:* புகழுடைத்தாய செல்வத்தினையுடையவர் கொடுக்கிற தினாலே தரித்திரம் வாராது; வந்தாலும் கொப்பெனத்[5] தீரும். அது எதுபோலவெனில், உலகத்தையெல்லாம் நிலைநிறுத்தும் மழை ஒருவேளை இல்லாமற் போனாலும், கொஞ்சநாளையிலே வெகுமழைபெய்யும். எ-று.

*எ) பழைய 2.:* புகழினையுடைய செல்வத்தினையுடையவர் யாவர்க்குங் கொடுத்து வறியராய்க் கொடுத்தற்குப் பொருளில்லாம

---

1. உபகரித்தல் - உதவுதல்
2. துணியைச் செய்வதைத் துனி என்றே கூறினமையின் காரியவாகு பெயர், துனி- காரியம், வறுமை - காரணம்
3. தொகுப்பும் குறிப்பும் காண்க.
4. இவ்வாறு உரைப்பவர் - மணக்குடவர்.
5. கொப்பென - விரைவாக

லிருப்பது, மேகம்மழை பொழிந்து தன்னிடத்து நீரில்லாமல் செல்வது போலும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'சீருடைச் செல்வர்'*** - சீருடை என்ற அடை செல்வத்தையும் அடுக்கும்; செல்வரையும்அடுக்கும். ஆதலால் சீருடைய செல்வம் என்பது அறவழி ஈட்டிய செல்வம். அங்ஙனம் அறவழியீட்டுவார் பண்புடையரே யாவர். அவர்செல்வம் ஈந்தும் துய்த்தும் பயனெய்தி நன்றிச்செல்வம் ஆம். செல்வத்தை யுடையாரை (விசேடிக்குமாயின்) அடுக்குமாயின் அறவழிவந்த பொருளை அறவழிப் பயன்படுத்தும் இயல்பினை இயற்கையிலேயே படைத்தவர் என்ற பொருளைச் சிறப்பிக்கும். அத்தகையோர்க்குச் சிறுதுனி உண்டானால், அது அவர் செல்வம் பலருக்கும் பயன்படுதலைத் தடுக்கும், அது சிறுதுனிதான்; ஆயினும் அதனால் விளையுங்கேடு மழைவறங் கூர்ந்தது போலாம். ***மணக்குடவர்*** 'நன்றியில் செல்வம்உடையாரன்றி நற்செல்வம் உடையாரும்' என்ற விளக்கம் சீருடை என்னும் அடைமொழி செல்வத்தை விசேடிப்பதைக் குறிக்கிறது.

***துனி :*** சிறுதுனி யென்ற சொல்லாட்சி இல்லறமேற் கொண்ட காலத்தே ஒருவனும் ஒருத்தியுமாய இருவர்பால் தோன்றுவதாய் இன்பமிகுவிக்கும் வாயிலான வெறுப்பு உணர்ச்சியாய்க் கற்பின் பாற் படுவது; ஊடலுட் டோன்றுவது. (தொல்.பொருள், பேரா. 187, உரை.)

இங்ஙனம் கற்பிலக்கணத்துட் படுவதாகிய துனி பிற வகையாற் றோன்றும் வெறுப்புக்கும் பெயராய்ப் ***பரிமேலழகர்*** காலத்திற்கு முன்பே வழங்கியிருக்கலாம். இத்தனை அன்பையும் ஒரு தூணாகக் கொண்டு நயமில செய்வார்க்கும் பண்பாற்றுகின்ற சான்றோர்க்கும் யார் மாட்டும் வெறுப்புத் தோன்றாதே என எண்ணிய ***பரிமேலழகர்*** அவ்வெறுப்பின் காரணமாய வறுமை எனப் பொருள் கண்டனர்ஆகலாம்.

ஆயின், ***படைமாட்சியில்*** 'சிறுமையும் செல்லாத்துனியும் வறுமையும்இல்லாயின்' (769) எனத் துனியையும் வறுமையையும் ஆசிரியர் இணைத்து எண்ணுவதால் துனி வறுமையின் வேறாய்த் தனித்தது என்று எண்ணத் தோன்றுகிறது. ஆண்டு, ***பரிமேலழகர்*** வறுமை அரசன் பொருள் கொடாமையாலும், துனி இளிவரல் செயதல் மகளிரை வெளவல் முதலாயினவற்றான் விளைவது என வேறு காரணங்காட்டுவர். துனி-வெறுப்பு ஈண்டு அதனையுண்டாக்கும் வறுமைக்கு ஆயது காரிய ஆகுபெயர் என்பது. இது துனியாகிய வெறுப்பு வெவ்வேறுகாரணங்களால் விளைவது என்பதையும், 'செல்லாத்துனிக்கு மறுதலையாகிய சிறுதுனி ஆகுபெயராய்ச் சிறிதுகாலம் நிற்கும் வறுமையைக் குறிக்கும் என்பதையும் உறுதிப்படுத்தும் என்க.

ஆனால், ஆகுபெயர்ப் பொருளைக் குறியாது சிறு வெறுப்பே மாரி வறங்கூர்ந்தது போலப் பெரிதும் வருந்தந்தருவது எனல் சிறந்த பொருள் ஆகலாம்.

***மணக்.***: துனி-துனியால் ஈயா தொழிதல் எனத் துனியின் விளைவாகப்பொருள் கண்டார், 'மாரி வறங்கூர்ந்தனையது' என்ற உவமத்திற்கு ஏற்ப •ஆனால், அவர் உள்ளத்தில் ''நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும் நீர செய்யாதமைகலா ஆறு' என்ற ***குறளின்*** நிழல் ஓட விளக்கத்தில் '*சீ*ருடைச்செல்வர் பிறர்க்கு ஈயாராயின் மழை யின்மையான் உலகம் துன்புறுவது போல அவர் துன்புறுவர்' என்றார். அவர் என்பது செல்வரைக் குறிப்பதாயின் உவமமும்பொருளும் ஒத்த தாக இல்லை. முரண்படுதலின், ஏற்பார் துன்புறுவர் என்றிருத்தல் நலம்.

***பரிதி***யுரை குறட்கருத்திற்கு ஒத்ததாக இல்லை.

***காளி.***, '*சீ*ருடைச் செல்வர் தம்மால் வெறுத்தக்க சிறு துனி பிறர்மாட்டுவரின் மாரி வறங்கூர்ந்தனைத்து' என இயைத்துப் பொருள் கண்டு, 'நயனுடையான் நல்கூர்ந்தானாதல் செயுநீர செய்கலாதலை' எண்ணத்திற் கொண்டு விளக்கந்தருகின்றார். இது மாரி வறங்கூர்தலைப் போலும் என உவமத்தொடு இயைத்து, இன்று வறங்கூர்ந்த மாரி, ஒரு காலத்து வறம் நீங்கிப் பயன்படுதல் போலச் செல்வரும் வறுமை நீங்கின போதெல்லாம் பயன்படுவர் என்பர். இது ஏனையோர் உரையிலும் முழுதும் வேறான கருத்து. ***கவிராசர்*** உரைப்போக்கும் ,இதனை ஒட்டியதெனலாம்.

***பழைய உரை*** '*சீ*ருடைச் செல்வர் கொடுத்திளைத்து வறியராதல் மேகம் பொழிந்து வறண்டதுபோலும்' என்பர்.

இவ்வுரைகளில்எளிமையும் தெளிவும்உடையது ***பழைய உரை***எனலாம். ***கா.சு.***, ***சாமி.சிதம்.***, ***சி.இ.*** முதலியோரும் இக்கருத்தினராவர்.

***இராம.***,*சீ*ருடைச்செல்வர்-தமக்கும் பிறர்க்கும் செலவிடும் *சீ*ரான வாழ்க்கையையுடைய செல்வர் என்றும், 'வறங்கூர்ந்தது-சிறிது காலம்மாரி வறண்டிருப்பது' என்றும் பொருள் கண்டு ***பரிமேலழகரைக்*** கருத்தால் ஒப்பர்.

ஆகவே 'துனி-வறுமை' எனப்பொருள் காண்பார் ***பரிமேலழகர்*** முதற் ***குழந்தை*** வரைஅனைவரும் ஆதல் காண்க. இக்***குறளில்*** உயிர்நாடியாய்க் கருத்து வேற்றுமைக்கும் சிந்தனைக்கும் இடந்தந்தன 'சிறுதுனி' , *சீ*ருடைச்செல்வர்' என்ற இரு சொற்களேயாதல் காண்க.

# 101. நன்றியில் செல்வம்

| | வைத்தான்வாய் | பொருளானாம் | ஈட்டம் | எச்சமென் | கொடுப்பதூஉம் | ஏதம் | அற்றார்க்கொன் | நச்சப்படாதவன் | அன்பொரீஇத் | சீருடைச் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 3 | 7 | 2 | 6 | 8 | 10 | 4 | 5 | 1 | 9 |
| பரிதி. | 2 | 6 | 5 | 7 | 4 | 8 | 3 | 9 | 1 | 10 |
| பரிப் | 3 | 6 | 2 | 5 | 7 | 8 | 4 | 10 | 1 | 9 |
| காளி. | 9 | 6 | 2 | 4 | 7 | 5 | 8 | 3 | 1 | 10 |
| பரிமேல. | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

101-வது அதிகாரம் 'நன்றியில் செல்வம்' முற்றிற்று.

******

# 102. நாணுடைமை

*அதிகாரப் பொருள் :*

***அ) மணக்.:*** நாணுடைமையாவது அறம் பொருள் இன்பங்களில் பிறர் பழியாமல் ஒழுகுதல், இது பண்புடைமையின் பின் கூறற்பாலது; பண்பு இன்மையும் சேரச்சொல்ல வேண்டுதலின் பண்பின்மை யாகிய நன்றியில் செல்வத்தைக் கூறி அதன்பின் கூறப்பட்டது.

***ஆ) பரிதி.:*** நாணுடைமையாவது நீதியல்லாதது கண்டால் நாணுதல்.

***இ) பரிப்.:*** நாண் உடைமை ஆவது அறம் பொருள் இன்பங்களில் பிறர் பழியாமல் ஒழுகுதல். இது பண்பு உடைமையின்பின் கூறற்பாலது: பண்பு இன்மையும் சேரச் சொல்ல வேண்டுதலின் பண்பு இன்மை ஆகிய நன்றியில் செல்வத்தைக் கூறி அதன்பின் கூறப்பட்டது.

***உ) பரிமேல்.:*** மேற்சொல்லிய சால்பு[1], பண்பு[2] முதலிய[3] குணங்களால் உயர்ந்தோர் தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல் உடையராந்தன்மை, அதிகார முறைமையும் இதனாலே விளங்கும்.

***ஊ) கவிராசர்.:*** அஃதாவது நல்ல குணங்களை உடையவர்கள் தங்களுக்கு ஆகாத காரியங்களுக்கு நாணுகிற தன்மை.

---

1. சால்பு - பல குணங்களால் நிறைதல்
2. பண்பு - எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்
3. முதலிய என்றமையின் நன்றியில் செல்வமின்மை முதலியனவும் கொள்க.

*ஏ) பழைய2:* அதாவது பெரியோர்க் கொவ்வாத கருமங்களின் நாணுடையராதல்

**ஐ) தொகுப்பும் குறிப்பும்:**

***நாண்*** - ஓர் உயிர்க்குணமாயினும், தக்க இன்ன; தகாதன இன்ன எனப்பகுத்தறியும் ஆறறிவுடைய மக்களுயிர்க்கே உரிய சிறந்த குணம். கயிறு-திருமங்கலக்கயிறு, வில்லின் நாண் முதலியவாகித் தன்னையுடைய பொருளைக் கட்டுப்படுத்தி அடங்கி வணங்கச் செய்யும் கயிறுபோல மக்கள் பழிதக்க செய்யின் கயிறு போல செய்தவர்களை வணங்கியதலையும், மறைந்த செய்கையும், வாடிய முகமும், கோடிய உடலும், கெட்ட ஒளியும் கீழ்க்கண்ணோக்கமும் உடையராகச் செய்தலான் நாண் என்னும் பெயராயிற்று. இதனை ''நாண் முதற்பாசந்தட்ப'' (***சீவக.*** 470) என்பதாலும் அதனுரையானும் தெளிக. இதனைச் சுருங்கச் சொன்ன ***மணக்குடவர்*** அறமாதியாய பேறுகள் மூன்றையும் ஒருவன் பெறும்போது பிறர்பழியாமல் ஒழுகுதல் என்பர். 'நீதியல்லாதன கண்டால் நாணுதல்' என்பர் ***பரிதி.*** 'தமக்கு ஒவ்வாத கருமங்களில் நாணுதல்' என்பர் ***பரிமேலழகர்*** முதலியோர். 'தமக்குப் பொருந்தாத தம் தகுதிக்கு ஏலாத செயல்களில் நாணுதல்' என்பர் ***மு.ரா, அரு.*** இது இருபாலார்க்கும் உரிய பொதுக்குணம் ஆயினும் மகளிர்க்கே உரிய சிறப்புக் குணம். ஆடவர்களுக்கும் உரியதே அதனாலே தொன்னூல்களும் பின்னூல்களும் நாணத்தை உயிர்க்குணம் என்றன.

***தேவநேயர், கா.சு.*** முதலிய பிற்கால உரையாசிரியர்களும் ***பரிமேலழகரை*** ஒத்துரைப்பர். ***மணக்குடவர்,*** இது பண்புடைமையின் பிற் கூறற்பாலது; அதனையடுத்துப் பண்பின்மையும் கூறவேண்டுதலின் கூறி அதனையடுத்து இதனைக்கூறினார் என்பர். ***குழந்தை நாணுடைமையும்*** ஒரு பண்பாதலின் அதனையடுத்து இதனை 101வது அதிகாரமாகக் கூறி, பண்பின்மையைக் கூறும் ***நன்றியில் செல்வத்தை*** 102 ஆவது ஆக்கினர். ***பரிமேலழகர், கவிராசர்*** முதலானோர்க்கும் பண்புடைமையின் பின் நாணுடைமையிருத்தலே கருத்து என்பதைச் சால்பு பண்பு முதலிய குணங்களான் உயர்ந்தோர் தமக்குத் தகாத கருமங் களில் நாணுதல் உடையராந் தன்மை' என முறைவைப்பை மொழிந்த ***பரிமேலழகர்*** அதிகார முறைமையும் இதனாலே காண்க என்றார். ஆகவே ***மணக்குடவர்*** கண்ட ஏடே ***பண்புடைமை, நன்றியில் செல்வம், - நாணுடைமை*** என்ற முறையில்

அமைந்திருந்ததுஅதற்கும் அனமதி கூறுவார் ***பண்புடைமை*** கூறி, அதன் இன்மையாகிய நன்றியில் செல்வங் கூறி அதனையடுத்து ***நாணுடைமை*** கூறினார் எனல் காண்க. நாண் வெளிப்படுவது நன்றியில் செல்வம் உடையராதல் போன்ற பண்பின் வழியே ஆதலின் இதுவும் ஒருவகையான் இயைபுடைத்தாதலைக் காணலாம்.

ஆசிரியர் ***வள்ளுவனார்*** தாம் செய்யும் தொழிலால் நாணுதலே நாணம்; பிற காரணங்களான் நாணுதல் குலமகள் நாணுவதாம் என்ற வருங் ***குறளே*** நாணம் இரு பாலார்க்கும் பொது; காரணத்தான் நாணுவது ஆடவர் நாணம்; இயல்பான் எழுவது மகளிர் நாணம் என வேறுபடுத்திக் காட்டுதலைக்காண்க. ***பழைய உரையாசிரியர்*** கருத்தும் இதுவே

**102.1. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணுப் பிற. (1011)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: தாம் செய்யும் வினையினாலே நாணுதல் நாணமாம்; அஃதல்லாத நாணம் அழகிய நுதலினாலே நல்லாராகிய கணிகையர் நாணத்தோடு ஒக்கும், எ-று.

மேற்கூறிய நாணம்[1] எத்தன்மைத்து என்றார்க்கும், இது கூறப்பட்டது.

***ஆ) பரிதி.***: மனத்து ஒன்றும் நினையாமல் கருமப்படியே நாணுதல் அல்லாது நாணுதல் குலமகளைக் கண்டு பொதுமகள் நாணுதற்கு ஒக்கும், எ-று

***இ) பரிப்.***: தாம் செய்யும் வினையினாலே நாணுதல் நாணம் ஆம்: அஃது அல்லாத நாணம் அழகிய நுதலினாலே நல்லார் ஆகிய கணிகையர் நாணத்தோடு ஒக்கும் என்றது. மேல்கூறிய நாணம் எத்தன்மைத்து என்றார்க்கு இது கூறப்பட்டது.

1. 'நாண்வேலி' என்ற குறளிற் கூறிய

ஈ) ***காளி.***: என்றும் தான் தீயகருமம் காரணமாக நாணுதலே நாணாவது; மற்று ஏனைய எல்லாம் மகளிர் நாணும் நாணாம்: எங்ஙனம் எனில் ஆண்மகன் ஆகியும் தருவதற்கு[2] ஒதுங்கின் அவனோடு பெண்ணோடு வாசி[3] இல்லை என்பர் பலரும்: அதனால் அதற்கு நாணுதல் அண்மைப்பாடு என்பது பொருள், எ-று.

உ) ***பரிமேல்.***: நன்மக்கள் நாணாவது இழிந்த கருமம் காரணமாக நாணுதல், அஃதன்றி மனமொழி மெய்களது ஒடுக்கத்தான் வருவனவோ எனின், அவை அவரள[4]வல்ல அழகிய நுதலினை யுடைய குலமகளிர் நாண்கள்[5], எ-று.

பிற குலமகளிர்[6] நாண் என்றதனால் ஏனையது[7] நன்மக்கள் நாண் என்பதும் நாணுதல் என்றதனால் கருமத்ததிழிவும் பெற்றாம். திருநுதல் நல்லவர் என்பது புகழ்ச்சிக்குறிப்பு[8] ஏதுப்பன்மைப்பற்றிப் பிற என்றார்[9] இனி அற்றமறைத்தல் முதலியன பொதுமகளிர் நாணோடு ஒக்கும் என்று உரைப்பாரும் உளர்[10]; அவர்க்கு நாண் கேடுபயக்கும் என விலக்கப்பட்டமையானும் அவர் பெயரால் கூறப்படாமையானும் அஃது உரையன்மை அறிக. இதனால் நாணினது இலக்கணம் கூறப்பட்டது.

***காரி.***: திருநுதல் நல்லவர் என்பது புகழ்ச்சிக் குறிப்பு.
திருநுதல் - அழகியநுதல்.

ஊ) ***கவிராசர்:*** நல்லவர்களுடைய நாணமாவது பொல்லாத காரியங்களுக்குப் பயப்படுகிறது. இதுவல்லாத பிற, நல்ல நெற்றியை யுடைய குலஸ்திரீகளின் நாண்கள், (எ-று).

எ) ***பழைய2:*** நன்மக்கள் நாணாவது இழிந்த கருமங் கண்ட விடத்து இது நன்மையன்று என்று நாணுதல்; அதுவன்றி மன மொழி மெய்கள் ஒடுக்கத்தான் வருவனவோ எனில், அது நன்மக்களாகிய

2. தகுவதற்கு - பொருந்துவதற்கு
3. வாசி - வேறுபாடு
4. அவர் - நன்மக்கள்
5. 'நாண் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உள்ள தன்மை' நக்கீரர்; 'செய்த்தகாதனவற்றின் கண்உள்ளமொடுங்குதல்' நச்சினிர்க்கினியார்.
6. 'திருநுதல் நல்லவர்' என்றும் பாடமுண்டு.
7. ஏனையது - கருமத்தால் எண்ணுவது.
8. புகழ்ச்சிக்குறிப்பு - புகழ்ச்சிப் பொருளில் வந்த குறிப்புச் சொல்.
9. மனமொழிமெய்களின் ஒடுக்கம் மூன்றாதலின் ஏதுப்பன்மை பற்றிப் 'பிற' என்றார் என்பர்.
10. இவ்வாறு உரைப்பவர் பரிதியார்.

ஆண் பாலன்றிப் பெண்பாலுள் கற்புடைய திரு நுதலினையுடைய நல்ல குலமகளிர் நாணங்களாம்.

ஆண்பாலில் நன்மக்கள்கருமங் காரணமாக நாணுவர்; அது செயற்கை நாண்; குலமகளிர் நாண் இயற்கை நாண் என்றது. நாண் இருவகையாக நாணின் இலக்கணம் கூறியது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*மணக். 'திருநுதல் நல்லார்'* என்ற தொடரைக் குறிப்பு மொழியாகக் கொண்டு 'கணிகையர் என உரைத்தனர். *பரிதியும்* இங்ஙனமே உரைப்பர். உண்மை நாணன்று; போலித்தனமானது என்பதும் ஆம். *பரிதியுரை* இவ்வதிகாரத்திற் இயைபில் கூற்றாகும்.

*காளிங்கரும், பரிமேலழகரும்* அவர் பின்னோரும் செயற்கை நாண்-ஆண் நாண்; இயற்கை நாண்-பெண் நாண் என்னும் கருத்தினர். இவர்களனைவர்க்கும்திருநுதல் நல்லவர்-குலமகளிர் என்பதே கருத்து. *பரிமேலழகர்* கணிகையர் என்ற *மணக்குடவருரை*யை மறுப்பர்.

*வரத.:* ஆடவன் நாணம் பிறர்பழிக்கும் செயலைச் செய்யக் கூசுவது; பெண் நாணம் தங்களுக்கு உரிமையல்லாத பொருளை அனுபவிக்கக் கூசுவது என்பர். உரிமையல்லாத பொருளைக் காண்டலால் விளைவது நாணும், தீண்டலால் விளைவது பயிர்ப்பும் ஆம். காண்டலும் அனுபவமாம் எனின் இக்கருத்து ஏற்புடைத்தாகும்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***திருநுதல் நல்லவர் நாணு :***

பெண்ணெனை வுற்ற பெரும்பழிக்குநாணும் - கம்ப., 1598

***முற்றும்:***

இழிந்த தொழிலின் நாணுவதே எய்தற் கரிய நாணென்பர்
ஒழிந்த மனவாக் குடலொடுக்கம் ஒளிவாழ் நுதலார் நாணேயாம்
- விநா. அரசி., 149

102.2. ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. (1012)

*உரைப்பகுதி :*

*அ) மணக்.*: உணவும் உடையும் ஒழிந்தனவும் புன்மக்களெல் லார்க்கும் வேண்டும்; நல்ல மக்களுக்கு விசேடமாக வேண்டுவது நாணுடைமை, எ-று.

இது நாணம் வேண்டும் என்றது.

*ஆ) பரிதி.*: தேவர்கதி[1] மக்கள்கதி விலங்கின்கதி பட்சிகதி இவையெல்லாம் நவதாதுவினால்[2] எடுத்த சரீரம்; அதில் மானிடர் விசேஷம்; அது எப்படி என்றால் நாணம் என்னும் மனப்பயம் உண்டாகில், எ-று.

*இ) பரிப்.*: ஊணும் உடையும் ஒழிந்தனவும் பின்மக்கள் எல்லார்க்கும் வேண்டும்; தலைமை மக்களுக்கு விசேடம் ஆக வேண்டும் அது நாண் உடைமை, எ-று.

இஃது நாணம் வேண்டும் என்றது.

*ஈ) காளி.*: உணவின் உடையது அச்சம் உலகத்து உயிர்கட்கு எல்லாம் வேறுபாடு உடைய அல்ல; எனவே உணவின் குறைபாட்டுக்கு அஞ்சுவது ஓர் அச்சம் எவ்வுயிர்க்கும் ஒக்கும்: மற்று யாதோ மக்கள்வேற்றுமை எனின் தமது முறைமைக் குறைபாட்டிற்கு உள் அஞ்சி நாணுவது ஓர் நாணம் உடைமையே மக்கட் பிறந்தார்க்குச் சிறந்தது, எ-று.

*உ) பரிமேல்.*: ஊணும் உடையும் அவை ஒழிந்தனவும் மக்களுயிர்க்கு எல்லாம் பொது; நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல[3], எ-று.

---

1. கதி - பிறப்பு
2. நவதாது - தோல், எலும்பு, குருதி, சுவேதநீர், மச்சை, கொழுப்பு, நரம்பு ஆகியன.
3. அவையல்ல - ஊண், உடை முதலியன.

ஒழிந்தன-உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு - அவ்வுயிர் களின் வேறுபாடு[4]. அச்சம் என்று பாடம் ஓதுவாரும் உளர்[5]

*ஊ) கவிராசர்.:* உண்கிறதும் உடுக்கிறதும் முதலாக மற்று முண்டான தெல்லாம் மனுஷஜீவனுக்கெல்லாம் சரியானாலும் நல்லவர் களுக்கு அழகாவது நாணமுடையது, எ-று.

*ஏ) பழைய2.:* ஊணும் உடைமையும் மற்றும் ஒழிந்தனவும் மக்களுயிர்க் கெல்லாம் வேறாகாது பொதுவாம்; இனி வேறாவதும் நன்மக்கட்குச் சிறப்பாவதும் ஊணும் உடைமையும் அல்ல நாணமாம்.

ஊணும் உடைமையும் ஒழிந்தனவும் பொது; நாண் சிறப்பு என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*'உயிர்க்கு எல்லாம்'* - 'புன்மக்கள் எல்லாருக்கும்' எனப்பொருள் கண்டனர்; பின்பு சிறப்புடை மாந்தரைக் குறிப்பதால், நாற்கதிகளையும் விதந்து அவற்றுட்சிறந்தது மக்கட்கதி என்று கூறி நாணத்தை மனப்பயம் எனக்குறித்து, நாணுடைமையால் மக்கட்கதி சிறந்தது என்றனர் *பரிதி.;* இத்தனை விதந்தும் பாவிற்கு ஏற்ற பொருளாக இல்லை. வேண்டாதன இனைத்தலாகிறது. இத்துணை முயன்றும் 'உடைஎச்சம்' என்ற தன் சொற்பொருள் விடுபட்டது.

*காளி. 'ஊணுடை அச்சம்'* எனப்பாடங் கண்டு, உணவின் உடையது அச்சம் என்றனர். 'உடை' என்ற வினைப்பகுதி. 'உடையது' என்பதன் விகாரமாதற்கு இயைபின்மையின் அச்சம் ஊண் உடையது எனச் சிதைத்து விகுதி கூட்டிப் பொருள் கூறுவர். இவர் கூறும் கருத்தமைதிக்கு ஏற்ற சொற்கள் குறட்பாவில் இல்லை. இவர் கண்ட பாடமும் உரையும் விளக்கமும் 'தெண்ணீர் அடுபுற்கையாயினும் இரத்தல் அச்சம் என இரவச்சத்திற்கூறியதை நினைத்து விளைந்தது எனலாமா? இவர் உணவின் குறைபாட்டிற்கு அஞ்சுவது எல்லா உயிர் கட்கும் பொது; முறைமைக் குறைபாட்டிற்கு அஞ்சி நாணுபவர் மக்கள்

4. உயிர்களின் வேறுபாடாவன மக்களுக்கு ஏனை விலங்குகளைக் காட்டிலும் உடை சிறப்பானது, நன்மக்களுக்கு நாணுடை சிறப்பானது. மக்களின் நன்மக்கள் சிறப்புடையர்.
5. எச்சம் என்பதனை அச்சம் எனப் பாடங் கொண்டவர் காளிங்கர்.

என்ற கருத்துக் கொணர முயலுகிறார். ***பரிமேலழகர்*** உரை சிறந்தார்க்கும் ஏனையோர்க்கும் வேறுபாடு காட்டுதலால் சிறந்தது தெளிந்த கருத்தினது. உடையணிதல் நாணத்தால் ஆகவே ஊண் உடை எச்சம் எல்லா மக்களுக்கும் பொது என மக்களையே விதந்தார். அவருட்சிறந்ததான நாணுடையவன் என்றனர். எச்சம் - ஒழிந்தன, அதை உறக்கமும் அச்சமும் காமமும் என விரித்தனர். ***காளிங்கர்*** சொன்ன அச்சமும் இதில் அடங்கி யிருத்தலைக் காணலாம். 'ஓதுவாரும் உளர்' என்றதால் ***காளிங்கர்*** கண்ட பாடத்தையும் ஒப்பினராதல் காண்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

கழிந்து விடநாண் மண்கோடல் கருதார் நலமெல் லாம்வளர்ப் பார்
அழிந்து நாண்மற் றுயிர்வாழார் ஆவி யழிந்து நாணாள்வார்
- விநா. அரசி., 149

## 102.3. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும் நன்மை குறித்தது சால்பு. (1013)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** ஊணைக் குறித்த - பாடம்.

பலவகை உயிரும் மேற்கூறிய எல்லாவற்றினும் உண்டியைக் கருதிற்று; அதுபோல, சால்பு நாணமாகிய நன்மையைக் கருதிற்று, எ-று.

இது சான்றோர்க்கு நற்குணங்கள் பலவும் வேண்டு மாயினும், இஃது இன்றியமையாதது என்றது.

***ஆ) பரிதி.:*** காயத்தை[1] இடங்கொண்டு இருக்கும் உயிர்போலே நாண் என்னும் நன்மையைக் குறித்திருக்கும் சால்பு, எ-று.

***இ) பரிப்.:*** மேல் கூறிய எல்லாவற்றிலும் உண்டியைக் கருதிற்றுப் பலவகைஉயிரும்: அதுபோல நாணால் ஆகிய நன்மையைக் கருதிற்றுச் சால்பு, எ-று.

1. காயம் - உடம்பு

இது சான்றோர்க்கு நற்குணங்கள் பலவும் வேண்டும் ஆயினும் ஈது இன்றியமையாதது என்றது.

***ஈ) காளி.:*** ஊனைக் குறித்த-பாடம்.

தத்தம் உடம்பை வளர்த்தற்பொருட்டு ஊணை நத்தி[2] வாழும் உயிர் அவை: அது போல மக்கட் பிறப்புத் தன்னிலும் உணர்வு இலராகிய மக்கள் எல்லாம் ஒழுகுப: இனி அவ்வாறு அன்றி மற்றுத் தம் முறைமைக்கு ஒரு குறைவருதலை நாணுவது ஓர் நாண் என்று உரைக்கப்படும் நன்மையை வளர்த்தலைக் குறித்து ஒழுகுவர் உலகத்துச் சால்புடை மக்கள். எ-று.

***உ) பரிமேல்.:*** எல்லா உயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக் களனாகக் கொண்டு அதனைவிடா; அதுபோலச் சால்பு நாண் என்னும் நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனைவிடாது, (எ-று).

உடம்பு என்பது சாதியொருமை[3]. நன்மை ஆகுபெயர்[4]. உயிர் உடம்போடு கூடியல்லது பயன் எய்தவாறு போலச் சால்பு நாணோடு கூடியல்லது பயன் எய்தாது என்பதாம். ஊனைக் குறித்த என்று பாடம் ஓதுவாரும் உளர்.[5]

***ஊ) கவிராசர்.:*** எல்லா உயிர்களும் உடம்பைத் தமக்கு நிலையாகக் கொண்டிருப்பதுபோல, நாணமென்னப்பட்ட நன்மையை யுடையதே நற்குணம், (எ-று).

***ஏ) பழைய2.:*** 'உயிர்க்கெல்லாம்' - பாடம.

ஊனைக் குறித்து விடாதிருக்கும் உயிரெல்லாம் அப்படி போல் நாணென்னும் நன்மையைக் குறித்து விடாதிருப்பர் சான்றோர்.

ஊனை விட்டு நீங்கில் உயிர்போம்; நாணைவிட்டு நீங்கிற்சால்பும் போம் எனக் கொள்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக் ***குறள்*** 'அன்பு நாண் ஒப்புரவு' என்னும் 983 ஆம் ***குறள்*** கூறும்

2. நத்தி - விரும்பி.
3. உடம்பு பால்பகா அஃறிணைப் பெயர் ஆதலின் சாதியொருமை யாயிற்று.
4. நன்மைக்கு ஏதுவான குணத்தை யுணர்த்துதலால் காரியவாகு பெயர்.
5. காளிங்கர் இவ்வாறு பாடங் கொண்டுள்ளார்.

ஐந்து தூண்களில் இரண்டாவது தூணையடிக்கொண்டு எழுந்தது எனலாம்.

*மணக்.,* *'ஊனைக்குறித்த'* எனப் பாடங் கண்டு 'உயிரெல்லாம் (ஊணை) உண்டியைக் கருதிற்று' என்பர். ''உண்டிமுதற்றே உணவின்பிண்டம்' என்ற *புறப்பாட்டின்* உதவியினால் இக்கருத்து இவர் சிந்தனையைக் கவர்ந்திருக்கிறது. அதனால் உயிர்கட்குப் பல வகைத்தேவைகளிருப்பினும் அவற்றுட் சிறந்தது உணவு. அதுபோலச் சான்றோர்க்கு நல்ல குணங்கள் பல இன்றியமையாது வேண்டுவனவாயினும், அவற்றுள் நாணம் மிக இன்றியமையாததாயிற்று எனக் கருத்துக் கொணருவர்.

ஏனையோர் அனைவரும் *'ஊனைக் குறித்த உயிரெல்லாம்'* எனப்பாடங்கண்டு ஊன் - ஊனினாகிய உடம்பை ஆகுபெயரான் உணர்த்திற்றாகக் கொண்டு 'உடம்பு' எனப் பொருள் கண்டனர்.

ஊணின்றிச் சிலபொழுது உயிர்வாழும் ஆயினும் உடம்பின்றி உயிர் உலவ முடியாமையைக் கண்டு அனைவரும் 'ஊன்' எனப்பாடம் கண்டனர் போலும்.

*பரிதி.* உயிருக்கு உடல் இடம்; சால்பிற்கு இடம் நன்மையெனக் கருத்து உரைப்பர். *காளி, மணக்குடவரை* ஒட்டி, தத்தம் உடம்பை வளர்க்க ஊணைவிரும்பி வாழ்வன உயிர்கள். அது போல மக்களுள்ளும் உணர்வுடையோர் நாணைக் குறித்து வாழ்வர் என்பர். முதற்பகுதிக்குத் 'தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூ னுண்பான்' என்ற *குறள்* துணை செய்திருக்கிறது.

இவற்றுள், *பரிமேலழகரும்* அவரை ஒட்டி ஏனோரும் கூறும் உரைகள் சிறந்தன. 'ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம்' என ஆசிரியர் முற்குறளிற் கூறி அடுத்து இதன் கண்ணும் ஊண் கூறல் கூறியது கூறலாம் ஆதலானும் ஊண் என்ற பாடம் *காளிங்கர்* உரையில் ஒராற்றானும், *பரிமேலழகர்* முதலியோர் உரையில் ஒராற்றானும் பொருள் காணப்பெற்றுச் சிறத்தலானும் ஆசிரியர் பொருட்சிறப்பையன்றித் தொடைச்சிறப்பைக் கருதாத பருவபுக்கினராதலானும் *'ஊனைக் குறித்த'* என்ற பாடமும் உரையுமே சிறந்தன.

*மு.கோ.* 'ஊனை' எனப் பாடங்கொண்டு புலாலுண்ணாமை எனப்பொருள்கண்டு இயைபு கூறுவர். அப்பொருள் இவ்வதிகாரத்திற்கு இயைபில்லாததும், *புலால் மறுத்தலில்* வற்புறுத்தப்பட்டதுமாம் என விடுக்க.

**ஒ) ஒப்புமைப்பகுதி :**

***நாண் என்னும் நன்மை :***

ஈறில் நாணுக - கம்ப., 5993

## 102.4. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
## பிணியன்றோ பீடு நடை. (1014)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: சான்றோர்க்கு நாணுடைமையாவது அழகன்றோ? அஃது இல்லையாயின், பெரியநடை நோயன்றோ? எ-று.

இது சான்றோர்க்கு அழகாவது நாணுடைமை என்றது.

***ஆ) பரிதி.***: நாணுடைமையன்றோ மனிதர்க்கு ஆபரணம்; இந்த ஆபரணம் இல்லாதபோது பிணியன்றோ மதயானைபோல ரிஷபம்[1] போல நடக்கிற நடை, எ-று.

***இ) பரிப்.***: சான்றோர்க்கு நாண் உடைமை அழகு அன்றோ? அஃது இல்லை ஆயின் பெரிய நடை நோய் அன்றோ? எ-று.

இது சான்றோர்க்கு அழகு ஆவது நாண் உடைமை என்றது.

***ஈ) காளி.***: நாண் உடைமை ஆகின்ற இது சான்றோர்க்கு அணிகலம் போல்வது ஓர்அலங்காரப் பண்பிற்று; அதனால் அஃது ஒருவர்க்கு இல் எனின் அவர் நடிக்கும் பெருமையும் ஒழுக்கமும் பெருந்துயரை விளைக்கும் பிணியாம், எ-று.

***உ) பரிமேல்.***: சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம், அவ்வாபரணம் இல்லையாயின் அவர் பெருமிதத்[2]தையுடைய நடைகண்டார்க்குப் பிணியாகும், எ-று.

அழகுசெய்தலின் அணி என்றும், பொறுத்தற்கு அருமையின் பிணி என்றும் கூறினார். ஓகார இடைச்சொற்கள்

1. ரிஷபம் - காளை.
2. பெருமிதம் - மேம்பாடு

எதிர்மறைக்கண் வந்தன. இவை மூன்றுபாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

*காரி.:* அன்றோ என்பது இரண்டும் இடைச்சொல்: ஓகாரம் எதிர்மறைக்கண் வந்தது.

***ண) கவிராசர்:*** பெரியோர்களுக்கு நாணுடைமை ஆபரணமாம்; அவ்வாபரணமில்லையாயின் அவர் பெருமிதத்தைஉடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.

***ஏ) பழைய2.:*** சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்: அவ்வா பரணமில்லையாயின் அவர் பெருமிதத்தை உடைய நடைகண் டார்க்குப் பிணியாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'பிணியன்றோ'*** என்பதற்கு 'நாணாகிய அணியில்லையாயின் அந்நாணமில்லாதவனுக்குப் பீடுநடை பிணியாம்' என்பர் ***மணக்., பரிதி.,*** முதலியோர். 'நாணின்மை உளதாயின் அவனது பீடுநடை கண்டவர்க்குப் பிணியாம்' என்பர் ***பரிமேலழகர்*** முதலானோர். இவற்றுள், நாணமில்லாத பீடுநடையாளனுக்கு அந்நடையே பிணியாம் எனின் துன்பந்தருவதாம் என்பது, பிணி என்பது துன்பந்தருவது என்பது பொருள். புகழ் புரிந்தில்லிலானுக்கு ஏறுபோற் பீடுநடையில்லை யாதல் போல நாணமில்லர்தானுக்கு அந் நடையுளதாகாது. உண்டாயின் அவனுக்குத் துன்பந்தருவதாம் என்பதினும் கண்டவர்க்குத் துன்பந்தருவதாம் என்பதில் பொருட்சிறப்பு இருக்கலாம். நாணமிலி அவ்வின்மை மறைப்பதற்கோ அறியாமலோ பீடுநடை நடப்பனாயின் அது அவனுக்கு ஒருபோதும் பிணியாகாது. காண்பவர்க்கே துன்பந்தருவதாகும் என்று ***பரிமேலழகர்*** கருதியிருப்பர்போலும். பூதங்கள் ஐந்தும்அகத்தே நகுதல்போல அவனுக்கே பிணியாம் என்பதும் பொருந்துவதாம். நயங்கண்டு தெளிக.

***பரிதியார் 'பீடுநடைக்கு', 'ஏறுபோற் பீடுநடை'*** என்ற ஆசிரிய வசனத்தை உளங்கொண்டே 'மதயானைபோல ரிஷபம் போல நடக்கிறநடை' என உரை கண்டனர்.

***காளிங்கர் 'அஃதிலரேல்'*** எனப்பாடங் கண்டு, பீடும் நடையும் என உம்மைத் தொகையாகக் கொண்டு 'அவர் நடிக்கும்

பெருமையும், ஒழுக்கமும் பிணியாம்' என்பர். இங்ஙனம் உம்மை விரித்துப் பொருள் கொள்ளின் பல எழுவாய் ஒருமைகொண்டு முடியும் குற்றமாம் என விடுக்க.

***இராம.*** ***'அணி*** - அழகு'; ***மணக்.***, முதலியோர் 'ஆபரணம்' என்பர். இவையிரண்டும் அழகுபயப்பதும் அழகுமாய்க் காரண காரியத் தொடர்புடைய ஒத்த கருத்தினதாம்.

***வரத.,*** 'மக்கட் சமுதாயத்திற்கே பிணியாம்' என்பர்.

***பரிமேலழகர்*** ஓகார இடைச்சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன என்றார். ***தேவநேயர்*** 'அன்று' என்னும் எதிர்மறையையடுத்த ஓகார இடைச்சொல் வினாப்பொருளதாய் ஓசை வேறுபாட்டான் உடன் பாட்டுப் பொருள்தந்து அழைத்தேற்றஞ் செய்தன என்பர். இங்ஙனம் அன்றி 'வாரான் அல்லன்' என்ற இரு எதிர்மறைகள் ஒருடம்பாட்டை வினையாய் விடுவான் எனத் தேற்றப்பொருளைத் தருவதுபோல எதிர்மறை பொருளைத்தரும். ஓகார இடைச்சொல் அன்று என்னும் எதிர்மறைக் குறிப்பு முற்றுடன் சார்ந்து இரண்டு எதிர்மறை ஒருடம்பாட்டை யுணர்த்தியதாம் என்றலே இயைவது. இதனைக் கருதியே ***பரிமேலழகர்*** விளக்கந் தந்தனராதலைக் காண்க.

அடுத்துவரும் பிறர்பழியும் நாணுவார் என்பதற்குப் ***பரிமேலழகர்*** 'ஒப்பமதித்தல்' எனக் கூறி, ஒப்பமதித்தலாவது அதுவும் தமக்கு வந்ததாகவே கருதுதல் என விளக்கந் தருவதால் இக்குறளில் 'பிணியன்றோ' என்பதற்கு நாணிலியின் பெருமித நடை கண்ட பிறர்க்குத் துன்பந் தருவதாகும் என்றனர். இதுவே இயைபுடையது எனலாம்.

## ஓ) ஒப்புமைப்பகுதி :

***அணியன்றோ நாணுடைமை :***

நாணணிகளையும் மாணெழில் சிதைக்கும் - மணி., 11:78

***சான்றோர்க்கு (நாண்) அஃதின்றேல் :***

நாணெலாந் துறந்தே னில்லி னன்மையி னல்லார்க் கேய்ந்த
பூணெலாந் துறந்தேன் ...... .......

- கம்ப., 8834

**102.5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்(கு)
உறைபதி என்னும் உலகு. (1015)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: 'தம்பழிபோல்' - பாடம்.

பிறர்க்குவரும் பழியையும் தமக்குவரும் பழியைப் போல அஞ்சி நாணுபவர்களை நாணுக்கு இருப்பிடம் என்று செல்லுவர் உலகத்தார், எ-று.

இது தம்பழிக்கு அஞ்சி நாணுதலேயன்றிப் பிறர் பழிக்கும் அஞ்சி நாணவேண்டும் என்றது.

***ஆ) பரிதி.***: தன்குற்றமும் பிறர்குற்றமும் கண்டு நாணுவர் அன்றோ நாணமிருக்கின்ற மாளிகை, எ-று.

***இ) பரிப்.***: பிறர்க்கு வரும் பழியையும் தமக்குவரும் பழியையும் அஞ்சி நாணும் அவர்களை நாணுக்கு அஃது இருப்பிடம் என்று சொல்லுவர் உலகத்தார், எ-று.

இது தம் பழிக்கு நாணுதலே அன்றிப் பிறர் பழிக்கும் நாணவேண்டும் என்றது.

***ஈ) காளி.***: 'தன்பழிபோல்' - பாடம்

பிறர் மாட்டு ஒரு பழிகாணினும்தான் பெரிதும் கூசித்[1] தன் மாட்டு ஒரு பழி கூறினும்தான் பெரிதும்நாணிக் கழிவான்[2] யாவன்? மற்று அவன் நாணுக்கு எல்லாம் நன்று ஆக உறையும் ஆசு[3] என்று எடுத்து உரைப்பர் உலகத்தோர், எ-று.

***உ) பரிமேல்.***: பிறர்க்கு வரும் பழியையும் தமக்குவரும் பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை, உலகத்தார் நாணுக்கு உறைவிடம் என்று சொல்லுவர், (எ-று).

ஒப்பமதித்தல்-அதுவும் தமக்கு வந்ததாகவே கருதுதல் கருத்துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வர் என்பதாம். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

---

1. கூசி - நாணி
2. கழிவான் - நீங்குபவன்
3. ஆசு - குற்றம்.

*ஊ) கவிராசர்.*: பிறருக்கு வருகிற பழியும்தமக்கு வருகிற பழியும் சரியாக எண்ணி நாணுகிறவர்களை உலகத்தார் நாணம் இருக்கும் இடமென்று சொல்லுவார்கள், எ-று.

பிறர்பழியும் தன்பழியும் சரியாக எண்ணுகிறது பிறருக்கு வந்தது தனக்கு வந்ததாகப் பார்த்து நாணுகிறதாம்.

*ஏ) பழைய2.*: 'தம்பழிபோல்' -பாடம்

பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழிபோல ஒப்பமதித்து நாணுவாரை, உலகத்தார், நாணிருக்கும் இடன் என்று சொல்லுவர்.

உறைபதி : உறைந்திருக்கும் இடம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

*முற்றும் :*

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரில் கீழல்லர் - முன்னைத்தம்
ஊழ்வலி உன்னிப் பழிநாணி உள்ளுடைவார்
தீய செயினும் சில -நீதிநெறி., 76

........ ........ மகனைத் திரிவா னென்றா னரசன்
தோற்றான் மெய்யென் றுலகஞ் சொல்லு பழிக்குஞ் சோர்வான்
- கம்ப., 1745

காவா யென்றாள் மகனைக் கணவன் புகழுக் கழிவாள் - கம்ப., 1747

## 102.6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
## பேணலர் மேலா யவர். (1016)

## உரைப்பகுதி :

*அ) மணக். :*

*ஆ) பரிதி. :*நாணம் என்னும் வேலியிட்டு நீதியை நடத்தாத போது பூமியில் பெரியோர்கள் எப்படி உளங்கொள்ளப் பெற்றார்கள். எ-று.

*இ) பரிப்.*: நாண் ஆகிய வேலியை அமைத்துக் கொள்வார்கள் அல்லது பெரிய உலகத்தினைப் பெறுதற்கு விரும்பார்கள் மேன் மக்கள், எ-று.

இது நாணம் அழிய வரும்[1] பொருள், கொள்ளார் என்றது இது பொருளினும் நாணம் சிறந்தது என்றது.

*ஈ) காளி.*: தமது மேன்மைக்கு வரம்பாகிய நாணினை வேலியாகக் கொள்ளாது மற்று இப்பரந்த ஞாலம் முழுதும் பேரினும்[2] நாணம் இழப்பவரினும் வியன் ஞாலம் விரும்பலர் மேலாயவர், எ-று.

இனி மற்று இவ்வாறு நாணுச் சிறப்பு உடையம் என மக்கள் தாம் பிறந்த குடி முழுவதும் பேணுதல் செய்யும் கூறுபாட்டினை உடையர் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை யதிகாரம்.

*உ) பரிமேல்.*:உயர்ந்தவர் தமக்கு ஏமமாக நாணினைக் கொள்வதன்றி, அகன்ற ஞாலத்தைக் கொள்ள விரும்பார்,(எ-று).

பழிபாவங்கள் புகுதாமல் காத்தலின், வேலி என்றார் நாணும் ஞாலமும் தம்முள் மாறாயவழி[3] அந்நாணினைக் கொள்வதல்லது அவைபுகுதும் நெறியாய ஞாலத்தினைக் கொள்ளவிரும்பார் என்பதாம். மன்னும் ஓவும் அசை. நாணாகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பார் என்று உரைப்பாரும் உளர்[4].

*ஊ) கவிராசர்.*: பெரியோர்கள் நாணுடைமையைத் தமக்குப் பாது காப்பாகக் கொள்ளுவதல்லாமல், பெரியதான பூமியைக் கொள்ள நினையார், எ-று.

*ஏ) பழைய2.*: உயர்ந்தவர் தமக்குக் காவலாகிய நாண் என்னும் நிலத்தைக் கொள்வதன்றி, அகன்ற ஞாலத்தைக் கொள்ள விரும்பார்.

மேலாயவர் வியன் ஞாலத்தைக் கொள்ளாது பேணலாம் வேலியைக் கொள்ளும் என்றது.

வேலி : காவலும், நிலமும்.

---

1. அழியவரும் - கெடவரும்
2. பேரினும் - இடம் பெயர்ந்தாலும்
3. நாணும் ஞாலமும் தம்முள் மாறாய வழி நாணும் ஞாலமும் என்னும் இரண்டனுள் யாதாவதொன்றனைக் கொள்ள நேர்ந்தவிடத்து
4. இவ்வுரை இலந்தையடிக் கவுணிய சாம்பசிவ சர்மா வெளியிட்ட மணக்குடவர் உரையில் மணக்குடவரதாகக் காணப்படுகிறது, மலர்நிலையம், 1955.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*பரிப்.* 'நாணாகிய வேலியை அமைத்துக் கொள்வதல்லது. உலகத்தினைக் கொடுத்தாலும் விரும்பார்கள்' என்பர். இதனையே *பரிமேலழகர்* 'வேலி கோடல் காப்பின் பொருட்டேயாதலின் உயர்ந்தவர் ஏமமாக நாணைக் கொள்வதல்லது ஞாலம் கொள்ளார் என்றனர். ஞாலம் தன்கையைவிட்டுப் பெயர்ந்துபோயினும், நாணம் இழப்பவரினும் என்பவற்றைக்கொண்டு 'உலகம் பெறுதலைக் காட்டினும் நாணம் பெயராமை பெரிது' என்பதை நிலை நிறுத்தினர்.

இந்த மூவகையுரைகளும் முடிபும், கருத்தும் சிறிது மாறினும் ஞாலத்தையிழந்தாலும் நாணத்தை விடேன் என்பதுதான். முற்குறளிலும் 'உயிரினும் நாண் சிறந்தது' என்றதை வலியுறுத்தியது போல இக்குறளில் 'உலகம் பெறுவதினும் நாணம் சிறந்தது' என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

*பரிதியுரைப்* போக்கு 'நாண் வேலி கொள்ளாத போது வியன் ஞாலம், பேணினர்கொல் மேலாயவர்' என்று பாடங்கொண்டிருப்பர் என எண்ணத்தூண்டுகிறது. இது பாடமாயின் அவருரையும் ஒருவாற்றான் பொருந்தும். *பழைய உரை* நாணையும் நிலமாக உருவகித்து, மேலாயார் நாணாகிய நிலத்தைக் கொள்வதன்றி ஞாலம் கொள்ளார் என்கிறது. இவ்வுருவகத்திற்கு இடமிருப்பின் இதுவும் ஏற்புடையதே. மேலாயவர் நாண் வேலி கொள்ளாது வியன்ஞாலம் மன்னோபேணலர் எனக்கூட்டி மேலான அரசர் தமக்கு நாண் வேலியைக் கட்டிக் கொள் ளாமற் பெரும்பாலும் உலகப் பாதுகாப்பிற்கு ஒப்பர் என்பது. மன்னும்-ஓவும் அசைநிலை யாக்கப்படாமல் மிகுதிப் பொருட்டதுமாகிறது.

*வரத.,* நாண் வேலி கொள்ளாதாரை, வியன் ஞாலத்தவர் மேலாயவராகப் பேணலர் என்பர். இதில் கொள்ளாது என்ற வினை எச்சம் வினையாலணையும் பெயராதற்கும் மேலாயவர் என்ற வினைப்பெயரை மேலாயவராக என எச்ச வாய்ப்பாட்டாக்குதற்கும் ஏற்ற விதியின்மையின் சிறப்பின்று என்க.

**102.7. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்**
**நாண்துறவார் நாணாள் பவர். (1017)**

*உரைப்பகுதி* :

*அ) மணக்.:* நாணுடைமைப் பொருட்டாக உயிரைத் துறப்பார்: உயிர்ப் பொருட்டாக நாணைத் துறவார், நாணம் வேண்டுபவர். எ-று.

இது நாண் உயிரினும் சிறந்தது என்றது.

*ஆ) பரிதி.*: நல்லோர்க்கு ஒருபிழை வந்த காலத்தில் உயிர் துறப்பர் அல்லது நாண் துறவார், எ-று.

*இ) பரிப்.* : நாண் பொருட்டு ஆக உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டு ஆக நாணைத் துறவார்: நாணம் வேண்டுவார், எ-று.

இது நாணம் உயிரினும் சிறந்தது என்றது.

*ஈ) காளி.*: தமக்கு ஒருவாற்றான் ஒரு நாணக்கேடும் உளது ஆயின் அது காரணமாகத் தம் உயிரினையும் துறப்பது அல்லது உயிர் பேணுதல் பொருட்டாக நாணத்தை விடுத்து ஒன்றனை இயற்றார்: யார் எனின் நாணுதல் அறிந்து எப்பொழுதும் ஆண்டு வருகின்ற அறிவினர், எ-று.

*உ) பரிமேல்.*: நாணினது சிறப்பு அறிந்து அதனை விடாது ஒழுகுவார் அந்நாணும் உயிரும் தம்முள் மாறாயவழி[1] நாண் சிதையாமற் பொருட்டு உயிரை நீப்பர்; உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை நீக்கார்,(எ-று).

உயிரினும் நாண்சிறந்தது என்பதாம் இவை இரண்டு பாட்டானும் அவர்செயல் கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்.*: நாணினுடைய நன்மையை அறிந்து அதனை விடாமல் நடக்கிறவர்கள், அந்த நாணம் கெட வந்தால் பிராணனை விடுவார்கள், பிராணன் போவதென்றாலும், நாணத்தை விடார்கள்.

*எ) பழைய2.*: 'நாணிறவார்' பாடம்.

நாண் சிதையாமற் பொருட்டு உயிரை விடுவர்; உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை விடார்; நாணினை ஆள்பவர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

### *நாணால் உயிரைத் துறப்பர் :*

நாணில் வாழ்க்கை பசித்தலில் துவ்வாது - முதுமொழிக்.,4:3

உயிர் நீப்பர் மானம் வரின் - குறள்., 969

ஈன்றவர் இடர்ப்பட எம்பி துன்புறச்
சான்றவர் துயருறப் பழிக்குச் சார்வுமாய்த்

1. மாறாய வழி - மாறுபட்ட வழி

தோன்றவல் லேனுயிர் துறந்த போதலால்
ஊன்றிய பெரும்பழி துடைக்க ஒண்ணுமோ - கம்ப., 3767

ஆயிர நாமத் தாழி யையனுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்கு வேனோ நாண்டுறந் தாவி நச்சி - கம்ப., 7828

நாணெலாந் துறந்தே னில்லி னன்னமயி னல்லார்க் கேய்ந்த
பூணெலாந் துறந்தேன் ........ ........ ....... - கம்ப., 8834

## 102.8. பிறர்நாணத் தக்கது தானாணா னாயின்
## அறநாணத் தக்க துடைத்து. (1018)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** உயர்ந்தார் பலரும் நாணத்தகுவதொன்றனைத் தான் நாணாது செய்வனாயின், அவனை அறம் நாணியடையாது ஒழியும்[1] தகுதி உடைத்தாம், எ-று.

இது நாணமில்லாதாரை அறம் சாராது என்றது.

***ஆ) பரிதி.:*** பிறர்கண்டு நாணத்தக்க ஒழுக்கத்திலே நடவாத போது அவன்பால் அறம் என்னும் தர்மம் நாணிவராது, எ-று.

***இ) பரிப்.:*** உயர்ந்தார் பலரும் நாணத்தகுவது ஒன்றனைத் தான் நாணாது செய்வன் ஆயின், அவனை அறம் நாணி அடையாது ஒழியும் தகுதி உடைத்து ஆம், எ-று.

இது நாணம் இல்லாதாரை அறம் சாராது என்றது.

***ஈ) காளி.:*** தான் செய்த குற்றங்களைச் சான்றோர் கண்டு நாணி அஞ்சுமா போலத் தான் நாணான் ஆயின், தன்னை அறம் நாணத் தக்கது உடைத்து; எனவே அறம் முதலாகிய நாற்பெரும் பொருளுள் அறம் என்னும் பெரும் பொருளும் தன்னை அணுகா, எ-று.

***உ) பரிமேல்.:*** கேட்டாரும் கண்டாரும் நாணத்தக்க பழியை ஒருவன் தான் நாணாது செய்யுமாயின், அந்நாணாமை அவனை அறம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினையுடைத்து,(எ-று).

தான் எனச் செய்வானைப் பிரிக்கின்றாராகலின், பிறர் என்றார். நாணோடு இயைபில்லாதானை அறஞ்சாராது என்பதாம்.

***ஊ) கவிராசர்:*** கேட்டவர்களும் கண்டவர்களும் நாணத்தக்க பழியை

1. ஒழியும் - நீக்கும்

ஒருவன் தான் நாணாமல் செய்தால், அந்நாணாமை அவனைத் தருமம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினை உடையது, எ-று.

பழிபாவங்களுக்கு நாணாதவர்களைத் தருமம் சேராதென்பது கருத்து.

*ஏ) பழைய2*: கேட்டாருங் கண்டாரும் நாணத்தக்க பழி ஒருவன் தான் நாணாது செய்யுமாயின், அவனைக் கண்டால் தன்மதேவதை[2] நாணி நீக்கத்தக்க குற்றமுடைத்து.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*பரிதி*யுரையில் 'பிறர்கண்டு நாணத்தக்க வற்றில் நாணி ஒழுக்கத்திலே ஒழுகாதபோது' என்றிருப்பின் கருத்து நன்கு விளங்கும். அல்லது ஒழுக்கத்திலே என்பதற்கு நேர்பொருள் கொள்ளாது செயலிலே என்று பொதுப்பொருள் கொள்ளின் நலம்.

*காளி., 'நாண்* - அச்சம்' என்பர். '*அறம்* - இல்லறமோ - துறவறமோ' என்னும் *இராம. உரை* சிறப்பின்று; 'அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு' என்புழிப்போலஅறக்கடவுள் என்றலே சிறப்பு.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

*முற்றும் :*

அஞ்சலள் ஐயன தல்லல் கண்டும் உள்ளம்
நைஞ்சிலள் நாணிலள் என்ன நாண மாமால் -கம்ப., 1600

## 102.9. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
## நாணின்மை நின்றக் கடை. (1019)

*உரைப்பகுதி :*

*அ) மணக்.*: ஒழுக்கம் தப்புமாயின், அத்தப்புதல் குலத்தினைச் சுடும்; அதுபோல நாணின்மை நிற்குமாயின், தமது நலத்தினைச் சுடும், எ-று.

இது நலம் இல்லையாம் என்றது.

2. தன்மதேவதை - அறக்கடவுள்

***ஆ) பரிதி.:*** குலங்கெடும் ஆக்கம் கெடும் பெருமைகெடும் நாண மில்லாக் கடை[1], எ-று.

***இ) பரிப்.:*** ஒழுக்கம் தப்பும் ஆயின் அத் தப்புதல் குலத்தினைச் சுடும்: அதுபோல நாண் இன்மை நிற்கும் ஆயின் தமது நலத்தினைச் சுடும் எ-று.

இது நலம் இல்லை ஆம் என்றது.

***ஈ) காளி.:*** தம் குலப் பண்பினைச் சுட்டுவிடும் அக்குலத்துக்கு ஏற்ற கோட்பாட்டைத் தாம் பிழைப்பர்[2] ஆயின்; அது போல எல்லா நன்மையும் சுட்டு விடும் ஒருவர் உள்ளத்து நாணம் இல்லாமை நின்ற இடத்து, எ-று.

***உ) பரிமேல்.*** : ஒருவனுக்கு ஒழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப்பொன்றனையும் கெடுக்கும், ஒருவன்மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவன் நலம் யாவற்றையும் கெடுக்கும், எ-று.

நிற்றல் - ஒருபொழுதும் நீங்காமை. நலம் சாதியொருமை யாகலின் பிறப்பு, கல்வி, குணம், செயல், இனம் என்று இவற்றான் வந்தனஎல்லாம் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாணழிவு இறப்பத்[3] தீது என்பதாம்.

***காரி.:*** கொள்கை-ஒழுக்கம் இருவழியும் சுடுதல்- கெடுத்தல் ஒழுக்கம் வழுவினும் நாணழிவு இறப்பத் தீது என்பதாம்.

***ஊ) கவிராசர் :*** ஒருவனுக்கு ஆசாரம் தப்பினால், அது அவன் குடிப் பிறப்பொன்றையே கெடுக்கும்; நாணங் கெட்டால் அது அவனுடைய நன்மைகளையெல்லாம் கெடுக்கும், எ-று.

ஆசாரம் கெடுகிறதிலும் நாணம் அழிகிறது மிகப் பொல்லாதது.

***எ) பழைய2 :*** ஒருவன் ஒழுக்கநெறி பிழைக்குமாயின், அவன் குலம் ஒன்றினையுஞ் சுடும்; நாணினை நீத்துவிட்டவிடத்து அவன் நலம் எல்லாவற்றையுஞ் சுடும்.

---

1. 'நாணமில்லாக்கடை' என்பதில் கடை என்பது வினையெச்ச விகுதி.
2. பிழைப்பர் - தவறுவர்.
3. இறப்ப - மிக.

## ஏ) ஒப்புமைப்பகுதி :

*குலம்சுடும் கொள்கை பிழைப்பின்:*

............ .................. நடந்த நன்மையால்
நலத்தினிற் பிறந்திலை கோளில் கீடம்போல்
நிலத்தினிற் பிறந்தமை நிரப்பி னாயரோ - கம்ப., 10160

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் - குறள்.,133

## 102.10. நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை நாணால் உயிர்மருட்டி யற்று. (1020)

## உரைப்பகுதி :

*அ) மணக்.:* மனத்தின்கண் நாணமில்லாதார் இயங்குதல், மரப்பாவை[1] கயிற்றினாலே இயங்கி உயிருள்ளதுபோல மயக்குமதனை ஒக்கும், எ-று.

இது நாணமில்லாதார் மக்களல்லர் என்றது.

*ஆ) பரிதி.:* நாணமில்லாதவன் நட்பு எப்படி என்றால் மரப்பாவை கயிற்றினாலே விழிமருட்டி[2] ஆடுதற்கு ஒக்கும், எ-று.

*இ) பரிப். :* மனத்தின்கண் நாணம் இல்லாதார் இயங்கும் அது, மரப்பாவை கயிற்றினால் இயங்கிய உயிர் உள்ளதுபோல மயக்கும் அதனை ஒக்கும், எ-று.

இது நாணம் இல்லாதார் மக்கள் அல்லர் என்றது.

*ஈ) காளி.:* தமக்குத் தகுவதனைச் செய்யாமைக்கும், தகாததனைச் செய்கைக்கும் நாணுவது அன்றே ஒருவர்க்கு நாணமாவது: மற்று அது தம் உள்ளத்து இல்லாதார் உளர் போல இயங்கித் திரிகின்ற இயக்கம் எத்தன்மைத்தோ எனின், மரத்தினான் மக்களைப் போலும் வடிவு பாவித்த பாவையானது ஊடு சென்று[3] இயக்கும் கயிற்றுவலியான்[4] உயிருடை உருபு என்று தன்னையும் பிறர் மதிக்குமாறு அவர் மதியினைமருட்டிய அத்தன்மைத்து; எனவே

1. மரப்பாவை - மரத்தாற் செய்யப்பட்ட பொம்மை.
2. விழிமருட்டி - விழியால் மயக்கி
3. ஊடு சென்று - இடையே சென்று
4. வலியான் - வலிமையினால்

இவரும் ஊழ் வலியினால் ஒரு மக்கள் உருபுபோல இயங்கித் திரியும் இத் துணை யல்லது அகத்தது ஓர் உணர்வு இன்று என்பது பொருள், எ-று.

*உ) பரிமேல்.*: தம் மனத்தின்கண் நாண் இல்லாத மக்கள் உயிருடையார் போன்று இயங்குகின்ற இயக்கம், மரத்தால் செய்த பாவை இயந்திரக் கயிற்[5]றினானாய தன் இயக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினால் போலும்,(எ-று).

கருவியே கருத்தாவாயிற்று[6]. நாண் இல்லாத மக்களியக்கம் நாணுடைய[7] பாவையியக்கம் போல்வது அல்லது உயிரியக்கம் அன்று என்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லாரது இழிவு கூறப்பட்டது.

*காரி.*: மரப்பாவை நாணால் உயிர்மருட்டியற்று என்பது கருவியே கருத்தாவாயிற்று. "ஆயிரு திணையின் இசைக்குமன் செல்லே"[8] என்பதற்கும் நச்சினார்க்கினியர் இவ்வாறு உரைத்தார் என்க.

*ஊ) கவிராசர்* : மனத்திலே நாணமில்லாத மனுஷர் நடமாடித் திரிகிறது மரப்பாவை சூத்திரக் கயிற்றினாலே உயிருடையதாக மயக்கினாற் போலும்.

நாணமில்லாதவர் பிணத்தோ டொப்பர் (எ.ம்.)

*எ) பழைய2.* : நாணந் தன்அகத்தில்லாத மக்கள் உயிர் உடையார் போலத் திரிவது, மரத்தாற் செய்த பாவை கயிற்றால் உயிரு டையார் போல மயக்கினாற் போலும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***பரிதியார்,*** 'உயிர் மருட்டி - விழி மருட்டி' என்பர். இவர் கண்ட பாடம் 'விழிமருட்டியற்று' என்பதாகலாம். உயிர்-மதி என்பர் ***காளிங்கர்.*** உயிரின் வடிவும் தன்மையுந் உணர்வேயாதலின் இவ்வுரை ஓரளவு இயையும்.

---

5. இயந்திரக்கயிறு - இயந்திரங்களை இயக்கும் கயிறு.
6. நாண் என்ற கருவி மருட்டுதல் தொழிற்கு வினை முதலாயிற்று ஆதலின் இங்ஙனம் கூறினார். (காரி. பார்க்க)
7. நாணுடைய - கயிற்றையுடைய
8. தொல்.சொல்.1

ஔ) ஒப்புமைப்பகுதி :

***நாண் அகத்தில்லார் இயக்கம் :***

மரந்தா னென்னும் நெஞ்சினள் நாணாள் - கம்ப., 1617

***மரப்பாவை நாணால் உயிர் மருட்டி :***

நாணாதுலகம் ஆளல்போல் நடித்தல்
நாணாற்பாவை உயிர்மருட் டுதலே - மனோன்., 4:3:270-277

# 102. நாணுடைமை

| | கருமத்தால் | ஊணுடை | ஊனைக் | அணியன்றோ | பிறர்பழியும் | நாண்வேலி | நாணால் | பிறர்நாணத் | குலம்சுடும் | நாணகத்து |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 9 | 1 | 2 | 4 | 10 | 8 | 3 | 5 | 6 | 7 |
| பரிதி. | 5 | 1 | 2 | 3 | 6 | 10 | 8 | 9 | 7 | 4 |
| பரிப். | 9 | 1 | 2 | 5 | 10 | 4 | 3 | 6 | 7 | 8 |
| காளி. | 4 | 1 | 2 | 6 | 7 | 10 | 8 | 3 | 9 | 5 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

102-வது அதிகாரம் 'நாணுடைமை' முற்றிற்று.

******

# 103. குடிசெயல்வகை

**அதிகாரப்பொருள்:**

*அ) மணக்.*: குடி செயல் வகையாவது குடியோம்புதல்[1] வேண்டும் என்று கூறுதல். இது நாணமுடையார் செயலாதலின், அதன்பின் கூறப்பட்டது.

*இ) பரிப்.*: குடி செயல்வகை ஆவது தம் குடியை ஓம்புதல் வேண்டும் என்று கூறுதல். இது நாணம்உடையார் செயல் ஆதலின் அதன் பின் கூறப்பட்டது.

*உ) பரிமேல்.*: அஃதாவது ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம். இது தாழ்வின்கண் நாணுதலுடையார்க்கு உளதாவதாகலின் நாணுடைமையின்பின் வைக்கப்பட்டது, (எ.று)

*ஊ) கவிராசர்.*: அஃதாவது ஒருவன் தான் பிறந்த குடியை உயரச் செய்தலின் திறம்.

*ஏ) பழைய2.*: அஃதாவது, ஒருவன் தான் பிறந்த குடியைச் செல்வக் குடியாகச் செய்தல்.

**ஐ) தொகுப்பும் குறிப்பும் :**

*குடி*-குலம்-இல்-குடும்பம் என்பன தான் பிறந்த குடியையே உணர்த்தும். இவற்றுள் 'குலம்' என்ற சொல் சங்ககால வழக்கன்று. பல குடிகளின் தொகுதியே குலம். ஆகவே குடிப்பிறந்தற்கேற்ற

1. குடியோம்புதல் - தான் பிறந்த குடியைப் பாதுகாத்தல்.

ஒழுக்கமுடையார், அதிற்றாழாமையே குடிசெயல்வகையாகும். ஆசிரியர் கூறும் செயல்வகைகள் ஆளுதல் உடைமையாக்கிக் கொள்ளுதலும், தம் குடியைச் சுமக்கும் வன்மையும், அறிவும், முயற்சியும் முதலாயின.

பழைய உரையாசிரியர்களில் ***மணக்குடவர்*** 'குடியோம்பல்' என்பர். ***பரிமேலழகர்*** முதலானோர் 'பிறந்த குடியை உயரச் செய்தல்' என்பர். பொருளாதார உயர்வும், அரசியல் உயர்வுமாயின், அது பிறரைத் தாழ்த்தித் தாம் உயரும் உயர்வே ஆகும். ***வள்ளுவர்*** இதனைக் கருதிற்றிலர். ஒழுக்கத்தால் உயர்தலையே குறித்தல் காண்க.

***தேவநேயர்*** 'அரசியலுலகத்துப் பிற்றை நாள் தோன்றிய கட்சிகள் யாவும், குடிசெயல்வகையிற்றோன் றியனவே' என்பர்.

இன்று குடி என்றது தான் பிறந்த இல்லளவில் நிற்காது தாய்வழிக்குடி, தந்தை வழிக்குடி, மாமன்மாமியர்வழிக்குடி உற்றார் உறவினர், ஏன்? சாதியர்கூடக்குடி என்ற பொருளில் அடங்குவர். பிறந்த குடியொன்றே இங்குக் கூறப்படுவது. முற்கூறிய வழிவழியாயின் அது தன் இனப்பற்றாய்த் தன்வளர்ச்சிக்கு உதவாமல் இனப்பற்றாகிவிடும்.

ஆகவே குடிசெயல் தான்பிறந்த குடியை ஒழுக்கத்தாலும் பண்பாட்டாலும் உயரச்செய்தலேயாம் என்பது பெறப்படும். இங்ஙனமின்றிப் பொருளாலும், பதவிகளாலும் உயரச் செய்வோம் எனிலோ அது தன்னலமாயும் இனம்பேணுதலாயும் மாறிப் பொறாமைக்கும் போருக்கும் வித்திட்டதாகும். ஆதலால் ஆசிரியர்வழி குடிசெயல்வகையைக் குறிக்கொள்ளுதலே நன்று என்க.

**103.1. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையில் பீடுடைய தில். (1021)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: ஒருவன் கை கருமஞ்செய்தலினாலே உண்ணேன் என்று சொல்லுகின்ற பெருமைபோலப் பெருமையுடையது பிறிது இல்லை, எ-று.

***ஆ) பரிதி.***: என் உறவின்முறையார் கிளை பெருத்து வாழ, நான் அவர் களுக்குக் கொடாமல் இருக்க என்னும் பெருமையில் பெருமை இல்லை, எ-று.

***இ) பரிப்.***: ஒருவன் கை கருமம் செய்தலினாலே உண்டிலேன் என்று சொல்லுகின்ற பெருமை போலப் பெருமை உடையது பிறிது இல்லை, எ-று.

மேல் எப்பொழுதும் இடைவிடாமல் வினை செய்ய வேண்டும் என்றார்: அது பெரியோர்களால் செய்யல் ஆகுமோ என்றார்க்கு இதனின் மிகுத்தது ஓர் பெருமை இல்லை என்றது.

***ஈ) காளி.:*** ஒருவன் தன் குடிகளாம்படி எப்பொழுதும் அதற்கு ஏற்ற கருமம் செய்யவேண்டிப் பிறிது ஒன்றிற்கு அக்கை உதவேன் என்னும் இப்பெருமை போலப் பெருமையுடையது பிறிது இல்லை, எ-று.

***உ) பரிமேல்.:*** தன்குடி செய்தற்பொருட்டுத் தொடங்கிய கருமம் முடியாமையின் எண்ணியகருமம் செய்தற்கு யான் கையொழியேன் என்னும்ஆள்வினைப்[1] பெருமை போல, ஒருவனுக்கு மேம்பாடு உடைய பெருமை பிறிதில்லை, (எ-று).

குடி செய்தற்கு என்பது அதிகாரத்தான் வந்தது. பல வகைத்தாய் கருமச் செயலான் செல்வமும் புகழும் எய்திக்குடி உயருமாகலின், பீடுடையது இல் என்றார். குடிசெய்தற் கருமமே நடத்தலால், தன் கருமஞ்செய்ய என்றும், பிறர்கருமஞ் செய்ய என்றும் உரைப்பாரும் உளர்[2]; தன்கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல் தலைமை அன்மையானும், அவை உரையன்மை அறிக.

***காரி.:*** கைதூவாமை - கையொழியாமை.

***ஊ) கவிராசர்:*** தன் குடியை அதிகமாக்குவதின் பொருட்டுத் தொடங்கிய காரியம் முடியாமையின், எண்ணிய கருமம் செய்கிற தற்குக் கையொழியேன் என்று சொல்லுகிறவனுக்கு அது போலே பெருமையான காரியம் வேறொன்றுமில்லை.

***எ) பழைய2.:*** 'கைதூவான்' பாடம்.

கருமஞ் செய்யுமிடத்து ஒருவன் கை ஒழியாமல் பல கருமங்களையும் செய்யுமாயின், அப்பெருமையினால் அவன் பிறந்த குடி பெரிய குடியாம்.

கைதூவாமை : கையொழியாமை. பெருமையினாற் பெருமையுடையது வீடு என்க. இல் என்பது வீடு. பெருமையினாற் பெருமையுடையது பிறிதில்லை என்றும் ஆம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்குடவர்*** ' ஒருவன் கை கருமஞ் செய்ய துவ்வேன்

1. ஆள்வினை - முயற்சி
2. யாவர் என்று தெரியவில்லை.

என்னும் பெருமையின்' எனக்கூட்டி, 'ஒருவன் உழைக்க நான் உண்ணமாட்டேன்; என்னும் பெருமையின் பெருமையுடையதில்லை' என்கிறார். இவ்வுரை ***ஆள்வினையுடைமை***யல்லது ***மடியின்மையோடு*** தொடர்புடையதாய்க் கூடிசெயலாகிறது.

***பரிதியார்,*** 'ஒருவன் கருமஞ் செய்ய - என் உறவின்முறையார் அனைவரும் (தொழில்செய்து) கிளைபெருத்து வாழ, கைதூவேன் என்னும் பெருமையின் - நான் அவர்களுக்குக் கொடாமல் இருக்க என்னும் பெருமையின் பெருமை இல்லை' எனப் பொருள் காண்பர். குடிப்பிறந்தார் அவரவர்களும் கிளைத்துவாழ நான் அவர்களுக்குக் கொடுக்காம லிருப்பேன் ஆக என்பது குடிசெயல்வகையின் உயர்ந்த பெருமை, அதனைக் காட்டிலும்உயர்ந்த பெருமை இல்லை என்பதாம். தன் உதவியின்றியே அவர்களை வாழ வைத்த பெருமையின் பெருமையில்லை என்றானாம். இவ்வுரை வலிந்து கோடல் ஆயினும் சிறப்புடையது.

***பரிப்பெருமாள்*** கருத்து ***மணக்குடவர்*** உரைப்போக்கை மாற்றுகிறது எனலாம். ஒருவன் கை எப்போதும் ஓய்வின்றி உழைத்துக்கொண்டேயிருப்பதால் சாப்பிட நேரமில்லை என்கிறான். அதுவே அவனுக்குப்பெருமை. அதிற் சிறந்த பெருமையில்லை என்பது. ***மணக்.பொழிப்பும், பரிப்.*** விளக்கமும் கருத்தும் இணைந்தே இயங்குவன ஆதலால் இப்படியும் கருதப் பெறுகிறது.

***காளிங்கர்*** 'எப்போதும் தங்குடிகள் ஆகும் வண்ணம் கருமஞ் செய்ய வேண்டி, பிறிதொன்றற்கும் அக்கையை உதவேன் என்னும் பெருமை' என்பர்.

***பரிமேலழகர்*** 'தங்குடிகளுயரத் தொடங்கிய கருமம் முடிவு போகாமையின் யான் கைஒழியேன் என்னும் பெருமை' என்பர்.

இங்ஙனம் ***'கைதூவாமை'*** என்ற சொல் பலபொருள் தந்து, கொண்டு கூட்டுவதிலும், கருத்துக் காண்பதிலும்ஆசிரியர்களை மயக்கி நிற்கிறது. பழைய உரைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கில் இருப்பதைக் காணலாம். ***மணக்குடவர்*** மட்டும் ***கைதுவ்வேன்*** எனப் பாடம் திரித்தனர் ஆவர்.

இவ்வுரைகள் யாவும் 'பிறந்தகுடியை' எனத் தன் குடியை யுணர்த்தும் நோக்கிலேயே செல்கின்றன. பாலியையையும் ***அங்க இயலுக்கு*** ஒழிபானவற்றையும் கருதி அரசன் தன்கீழ் வாழுங்குடி களையுயர்த்துவேன் என்று கோடலும் பொருந்துவதாம். சிந்தித்து இயையுமேல் ஏற்க.

***தேவநேயர்*** 'குடிசெயல் - குடிகளைக் காத்தல் மட்டுமன்று; மேன்மேல் உயர்த்துதலும் வேண்டும்' என்பர். ***பழைய உரையாசிரியர்*** 'பீடு உடையது இல்' எனப்பிரித்துப் 'பெருமையையுடையது வீடு' எனக் கூறி 'பிறிதில்லை' என்ற பண்டையோர் உரைகளை வேறுரையாகக் கூறுவர்.'செயும் ஒருவன்' என்றிருந்தால் ***வரத.*** உரை ஏற்புடையதாகும்.

இவர் விளக்கம் எங்கெங்கோ சென்று, வறுமையும் சூழ்நிலையுங் காரணமாக நிறுத்தாமல் அதனை விடாமல் நடத்துவது என்ற கருத்தைக் கொணர்கிறது.

பிற்கால உரைகளிற் பெரும்பாலான ***பரிமேலழகர்*** வழிச் செல்வன.

### ஒ) ஒப்புமைப்பகுதி :

***கருமம் செய ஒருவன்கைதூவேன்***

கருமம் மறுத்த கைதூ வமைத்து -பெருங். 1:36:42

### ஓ) மேற்கோள்பகுதி :

***இளம்.:*** இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்: இரு மூன்றில் வேளாளர்க் குரிய உழவு ஒழிந்த தொழிலுக்கு மேற்கோள். - (தொல். பொருள்., 74)

## 103.2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
## நீள்வினையான் நீளும் குடி. (1022)

### உரைப்பகுதி :

***அ) மணக்.:*** முயற்சியும் நிரம்பின அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினாலும், வளருகின்ற வினையினாலும் குடி உயரும், எ-று.

***ஆ) பரிதி.*** : உத்தியோகமும் அறிவுடைமையும் இந்த இரண்டு குணத்தினால் குடி தழைக்கும், எ-று.

***இ) பரிப்.:*** முயற்சியும் நிரம்பின அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினாலும் வளருகின்ற வினையினாலே குடி உயரும், எ-று.

இஃது ஒரு வினையைச் செய்யுங்கால் நல்லதும் தீயதும் அறிய வேண்டுதலின் அறிவு வேண்டும் என்று கூறப்பட்டது. வளருகின்ற வினையாவது ஒருவினையைச் செய்து முடித்தால் அவ்வளவிலே நின்று அமையாது பின்னும் ஒரு வினனயைத்

தொடங்குதல். மேல் குடி ஓம்ப வேண்டும் என்றார் அஃது ஓம்பும் ஆறு என்னை என்றார்க்கு இது கூறப்பட்டது.

*ஈ) காளி.:* குடிசெயல்வகைக்கு வேண்டும் ஆண்மைத் தொழிலும் அதற்கு அமைந்த அறிவு உடைமையும் என உரைத்த இரண்டினது நெடுமுயற்சியால் நெடிது வாழும் தன் குடி முழுதும், எ-று.

*உ) பரிமேல்.:* முயற்சியும் நிறைந்த அறிவும் என்று சொல்லப்பட்ட இரண்டினையும் உடைய இடையறாத[1] கருமச்செயலால், ஒருவன் குடி உயரும், எ-று.

நிறைதல் - இயற்கையறிவு[2] செயற்கை யறிவோடு[3] கூடி நிரம்புதல். ஆள்வினை மடி புகுதாமற் பொருட்டு ஆன்ற அறிவு உயர்தற்கு ஏற்ற செயல்களும் அவை முடிக்குந்திறமும் பிழையாமல் எண்ணுதற்பொருட்டு. இவை இரண்டுபாட்டானும் அச்செயற்குக் காரணம் கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்.:* முயற்சியும் நிறைந்த அறிவும்என்று சொல்லப்பட்ட இரண்டையு முடையதாய் எந்நாளும் இடைவிடாதே செய்கிற கருமத்தாலே ஒருவன்குடி உயரும், எ-று.

நிறைந்த அறிவாவது-சுபாவமாய் இருக்கிற அறிவுடனே பிறிதொன்றைக் கண்டு அறிகிறதுமாம்.

*எ) பழைய2.:* ஆள்வினையுடைமையும் நிறைந்த அறிவுடைமையும் என்று சொல்லப்பட்ட இரண்டினையுடைய இடைவிடாக்கருமஞ் செய்வான் ஒருவன் குடி, பெரிய குடியாம்.

ஆள்வினை-பலகருமம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்குடவர்*** உரைப்போக்கு 'என இரண்டின் நீள்வினையின் நீளுங்குடி' எனப் பாடம் இருக்கக்கூடும் என்பதைக் குறிக்கும். ஏனையோர் அனைவரும் 'இரண்டின் நீள்வினையான்' என இணைத்து

1. இடையறாத - நடுவே நீங்காத
2. இயற்கையறிவு - முற்பிறப்பிற் செய்த நல்வினையால் இப் பிறப்பில் கல்வி கேள்விகளின் உதவியின்றி உண்டாய நல்லறிவு.
3. செயற்கையறிவு - கல்வி கேள்விகளான் ஆன நல்லறிவு.

இவ்விரண்டாலும் வளருகின்ற வினையினால் என்பர். ***மணக்குடவர்*** உரையினும் ஏனோருரை சிறப்பின்று. நிறைந்த அறிவிற்குக் ***கவிராசர்*** தரும் விளக்கம் நயமானது. ***பழைய உரைகாரர்*** ஆள்வினை என்பதற்கு ஏனோர்போல முயற்சியென்னாது 'ஆளப்படுகின்ற பலவாகிய செயல்கள்' என்பர். இவ்வுரை சிறப்பினதன்று. ***வரத***. 'ஆன்ற அறிவு-தன்நுண்ணறிவும் நூலறிவும்ஆகிய இரண்டும்' என்பர். ***தேவநேயர்*** ஆள்வினை-சோம்பலை நீக்கவும், ஆன்ற அறிவு வெற்றிபெறச் சூழ்தற்கும் வேண்டியன' என்பர். ***இராம***. 'நீள்வினை சேர்ந்த ஆள்வினை' எனக்கூட்டி 'விடாமுயற்சி' எனப் பொருள் காண்பர். ***கா.சு***. ஆள்வினை-சுறுசுறுப்பு' என்பர்.

ஆகவே, முயற்சியும், நிறைந்த அறிவும் ஆகிய இரண்டினாலும் இடையறாது இயற்றப்படும் செயல்களால் குடி உயரும் என்ற உரையே சிறந்தது எனலாம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும் :***

அடுத்த பருவம் குறித்தமடி யாக்கி மானம் கருதுவார்
கெடுத்தல் புரிந்தார் ஆதலினால் கிளரக் குடிஊன்றலின்மைந்தா.

- விநா. அரசி., 150

## 103.3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான்முந் துறும். (1023)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.***: குடியை ஓம்புவன் என்று கருதி முயலுமவனுக்குத் தெய்வம்[1] மடிதற்றுக் கொண்டு தான் முற்பட்டு முயலும், எ-று.

மடிதற்றல்-தொழில்செய்வார் ஆடையை இறுக உடுத்தல்.

***ஆ) பரிதி.*** : தன்குடியைப் பரிபாலனம்[2] பண்ணவேணும் என்பானாகில், தெய்வம் பிரியமாகி வேண்டின வரங்கொடுத்து ரட்சிக்கும், எ-று.

1. தெய்வம் - ஊழ்
2. பரிபாலனம் - பாதுகாப்பு

*இ) பரிப்.*: குடியை ஓம்புவோன் என்று கருதி முயலும் அவனுக்குத் தெய்வம் மடி தற்றுத் தான் முற்பட்டு முயலும், எ-று.

மடி தற்றுதல் - தொழில் செய்வார் ஆடை உடுப்பது ஓர்திறன். மேல்சுற்றத்தார் நல்வினை இலர் ஆயின் ஓம்பும் ஆறு என்னை என்றார்க்குத் தெய்வம் அருள் செய்யும் என்று கூறப்பட்டது. இத்துணையும் குடி ஓம்புதல் வேண்டும் என்று கூறிற்று.

*ஈ) காளி.:* தம் குடி தளராமல் பேணுதலைச் செய்வல் என்னும் அவ்வொப்பிறந்தோர்க்குத் தெய்வந் தானே மடியானதனைத் தாறு அறக் களைந்து[3] மற்று அவன் உஞற்றின்கண்[4] தான் வந்து முன் நிற்றலைச் செய்யும், எ-று.

*உ) பரிமேல்.:* என் குடியினை உயரச்செய்யக் கடவேன் என்று கொண்டு அதற்கு ஏற்ற கருமங்களில் முயலும் ஒருவனுக்கு, தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும், எ-று.

முயற்சியை அதன் காரணத்தால் கூறினார். தற்றுதல்-இறுக உடுத்தல். முன்னடப்பார்செயல் நியதிமேல் ஏற்றப்பட்டது[5].

*காரி.:* மடிதற்றுதல் - ஆடையை இறுக உடுத்தல். முன் நடப்பார் செயல் நியதிமேல் ஏற்றப்பட்டது. ஊழினுள் ஒரு பொருட்கிளவிக்குள் அடங்க நியதி மேல் ஏற்றப்பட்டது காண்க.

*ஊ) கவிராசர்.*: தன் குடியை யுயரச் செய்யவேணு மென்று நினைத்து அதற்கேற்ற கருமங்களைச் செய்கிற ஒருவனுக்குத் தெய்வம் ஆடையைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு சகாயமாய்[6] வந்து முன் நிற்கும், எ-று.

*ஏ) பழைய2.*: தன் சிறிய குடியைப் பெருங்குடியாகச் செய்யக் கடவேன் என்று கொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் அவனுக்குத்தெய்வந்தான் புடைவையை வலிந்து கட்டிக்கொண்டு தான் முந்துற்று நிற்கும்.

மடி : புடைவை, தறல்: உடுத்தல்

---

3. தாறு அறக்களைந்து - அடிக்குருத்து நீங்கும்படி
4. உஞற்றின்கண் - முயற்சியின்கண்
5. காரி., காண்க.
6. சகாயம் - உதவி.

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'மடிதற்று'*** - 'ஆடையை இறுக உடுத்து' ***மணக்., பரிப்., பரிமேல்.*** முதலானோர் கண்ட உரை. இது மரபுவழி வருந்தொடரை அடியாகக் கொண்ட உரை. இன்றும் 'துணியை வரிந்து கட்டிக்கொண்டு வந்தான்' என்ற வழக்குண்மை காணலாம்.

***காளிங்கர்*** 'சோம்பலைத் தாறு அறக் களைந்து' என்றனர் 'தற்று' என்ற வினையெச்சம் தாறு என்பதன் அடியாகப் பிறத்தல் இயையுமாயின் ஏற்புடையதாம். இவர் சொற்பொருள் விரித்தலாகத் 'தாறு அறஒழித்து' என்கிறார்.

'இறுக உடுத்தி' எனப்பொருள் கொள்ளும் ***பழைய உரையாசிரியர்*** 'தறல் - உடுத்தல்' என்கிறார். ***தேவநேயர்*** 'தறுதல் - உடுத்தல்' என்கிறார். இதில் தொழிற்பெயர் விகுதியாகிய அல், தல் ஒழியின் வினைப்பகுதி 'தறு' என்பதாகும். அது உறு -உற்று, பெறு- பெற்று, என்பன போலத் தறு-தற்றாதல் இயையும். ***காளிங்கர்*** கூறும் பொருளில் தாறு - தற்றதால் இயையாது. ஆதலின் ***காளிங்கர்*** கூறும் பொருளுக்கு ஏற்ற சொல்லிலக்கணம் ஆய்ந்து க ணத்தக்கது.

தெய்வம் சோம்பலை நீக்கித் துணையாகத் தான் முந்துறும் எனின், தெய்வத்திற்கும் சோம்பலிருப்பது போலவும், அது மடியான தனை நீக்கி உதவமுன்வரும் என்பது போலவும் பொருள் தந்தது தெய்வத்திற்கு இழுக்குப் பயப்பதாகும். இங்ஙனன்றித் 'தெய்வம், குடி செய்வானுடைய மடியைத் தற்று உதவத் தான்முந்துறும்' எனின் குறையிலதாகும். ஆதலால் ***காளிங்கர்*** உரைக்கருத்தாகப் பின்னதைக் கொள்ளுதல் தகும்.

மடி போகூழாற்றோன்றுவதாகலின் 'அதனைக்களைந்து' எனவே போகூழ் மாறி ஆகூழாகித் துணை செய்யும் என்றவாறாம். எங்ஙனம் ஆயினும் 'ஆடையை இறுக உடுத்து' என்ற மரபு விளக்கவுரையே சிறந்தது.

**103.4. சூழாமல் தானே முடிவெய்தும் தன்குடியைத்**
**தாழா துஞற்று பவர்க்கு. (1024)**

**உரைப்பகுதி :**

***அ) மணக்.***: தம் குடியைத் தாழச்செய்யாதே உயரச்செய்யக் கருது வார்க்கு அவ்வுயர்ச்சி எண்ணாமல் தானே முடிவு பெறும், எ-று,

கருதினவளவிலே அவரது நல்வினை தானே முடிக்கும்; இவர் தம்கண் அதனை மேற்கோடல் வேண்டுவது என்றவாறு.

ஆ) *பரிதி.*: தன் குடி தழைக்கவேண்டும் என்று உத்தியோகம் பண்ணுவார்க்குத் தெய்வம் தானே நினைத்தகாரியம் தந்து முடிக்கும், எ-று.

இ) *பரிப்.*: தம் குடியைத் தாழச் செய்யாதே உயரச் செய்யக் கருதுவார்க்கு அவ்வுயர்ச்சி எண்ணாமல் முடிவு பெறும், எ-று.

யாதானும் ஒரு வினையை முடியும் ஆறு எண்ணி அதன் பின் முயன்று முடிக்க வேண்டும் அன்றே: இஃது அவ்வாறே அன்றி இவன் கருதின அளவிலே அவரது நல்வினை தானே முடிக்கும்: இவன் அதனை மேற்கோடலே வேண்டுவது என்றவாறு ஆயிற்று.

ஈ) *காளி.* :'சூழாது' பாடம்.

வருந்தித் தாம் ஒன்று சிந்திக்க வேண்டாமல் தானே வந்து முடிவுபெறும்: யாதோ எனின், தம் குடிசெயல்வகையை இதற்கு ஒரு குறைவரல் ஆகாது என்று நாளும் விரைந்து இயற்றும்[1] அவர்க்கு அக்குடி செயல்வகை, எ-று.

உ) *பரிமேல்.* : தம் குடிக்காம் வினையை விரைந்து முயலவார்க்கு, அவ்வினை முடிக்குந்திறம் அவர் சூழவேண்டாமல்[2] தானே முடிவுஎய்தும், எ-று.

குடி ஆகுபெயர்[3], தெய்வம் முந்துறுதலான பயன கூறியவாறு, இவை இரண்டு பாட்டானும் அதற்குத் தெய்வம் துணையாதல் கூறப்பட்டது.

*காரி.*: அவரால் என்று சுட்டி உரைபோக்கியது, முன் நடப்பாரை.

ஊ) *கவிராசர்.*: தன் குடியை உயரச் செய்யவேணு மென்று அதற்கேற்ற காரியங்களைச் செய்யப்போனால், அந்தக் கருமம் தனக்குத் தானே முடியும், (எ-று).

---

1. விரைந்து இயற்றும் - விரைந்து முடிக்கும்
2. சூழ வேண்டாமல் - ஆராயாமல்
3. குடி என்பது அது வளர்தற்கு ஏற்ற கருவியாகிய தொழிலை (முயற்சியை) உணர்த்துதலால் காரியவாகுபெயர்.

தெய்வம் துணையானாற் சீக்கிரமாக எல்லாக் காரியமும் முடியும், (எ-ம்).

*ஏ) பழைய2.*: 'சூழாமைத் தானே' பாடம்.
தம் குடிக்காம் வினையைத் தாழ்வுபடாமல் முயன்று செய்வாராயின், வினை முடிக்கும் திறம் ஆராய்ந்து பார்க்க வேண்டாமல் தானே முடிவெய்தும்.

தம் குடி என்பது தங்குடிக்கேற்ற தொழில் என்க. உஞற்றல் - செய்தல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'தாழாது'*** என்பதற்குத் 'தாழச் செய்யாது' தாழ்ந்து போகாமல், உயரச் செய்யவேணுமென்று உரை காண்பவர்கள் ***மணக்., கவிராசர், பழைய உரையாசிரியர்*** முதலானோர்.

'விரைந்து' 'தாமதியாமல்' என்றவர்கள் ***பரிமேலழகரும், காளிங்கரும்.*** இங்ஙனம் உரைகண்டால், 'குடியை' என்பதற்கு இயற்பொருள் காணாது ஆகுபெயராக்கிக் 'குடியுயர்தற்கு வேண்டிய வினைகளை' என்று உரை கொள்ள வேண்டியிருக்கிறது. ஆசிரியரே 'குடியைத் தாழாது உஞற்றுபவர்க்கு' என்றலின் குடியைத் தாழ்ந்து போகாமல் முயல்பவர்க்கு என்ற உரையே எளிமையும், அதிகார இயைபும் உடையதாகிறது.

## 103.5. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
## சுற்றமாச் சுற்றும் உலகு. (1025)

**உரைப்பகுதி :**

*அ) மணக்.*: குற்றப்பட ஒழுகுதல் இலனாய்த் தன்குடியை ஓம்பி வாழும் அவனை, உலகத்தாரெல்லாரும் தமக்கு உற்ற சுற்றமாக நினைத்துச் சூழ்ந்து வருவர், எ-று.

*ஆ) பரிதி.*: குற்றத்தை நீக்கிக் குடியை ஆக்கிச் செய்வானைச் சுற்றமாகச் சுற்றும் உலகம், எ-று.

*இ) பரிப்.*: குற்றம் பட ஒழுகுதல் இலன ஆகத் தன குடியை ஓம்பி வாழும் அவனை உலகத்தார் எல்லாரும் தமக்குச் சுற்றம் ஆக நினைத்துச் சூழ்ந்து நிற்பர், எ-று.

இது குடி ஓம்புவார்க்குப் பயன் கூறிற்று.

***ஈ) காளி.:*** பிறர் இவன் குடி ஓம்பாக் குணம் இலன் என்று உரைக்கும் குற்றம் இலன் ஆய், மற்று என்றும் குடி வாழ்தலைச் செய்து வாழ்வானையே சுற்றமாகச் சூழ்ந்து வாழும் இவ்வுலகு; எனவே தன் குடி தாங்கலே அன்றித் தன்னை அடைந்தோர் அனைவரையும் தாங்கும் தன்மையவன் என்பது பொருள், எ-று.

இங்ஙனம் குடிசெயல்வகை கூறி வாழ்வினையில் ஒரு பக்கமே உழவு ஆம் ஆகலான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

***உ) பரிமேல்.:*** குற்றமாயின செய்யாது தன் குடியை உயரச் செய்து ஒழுகுவானை, அவனுக்குச் சுற்றமாக வேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார்,(எ-று).

குற்றமாயின-அறநீதிகட்கு[1] மறுதலையாய செயல்கள், தாமும் பயன் எய்தல் நோக்கி யாவருஞ் சென்று சார்வர் என்பதாம்.

***ஊ) கவிராசர்:*** குற்றமான காரியங்களைச் செய்யாமல் தன் குடியை உயரச் செய்கிறவனை உலகத்தாரெல்லாருந் தங்களுக்கு நல்ல உறவாகச் சுற்றிக் கொண்டிருப்பார்கள், எ-று.

குற்றமாவன-தர்மம் நீதிகளுக்கு மறுதலையாய செயல்கள்.

***எ) பழைய2.:*** 'சுற்றமாய்ச் சுற்றும்' - பாடம்.

குற்றமாயின செய்யாது குடிக்கேற்ற வினைசெய்து வாழ்கின்றவனைச் சுற்றமாகத் தாமே சென்று சுற்றிக் கொள்வர் உலகத்தார்.

குடிக்கேற்ற வினை செய்யச் செல்வக் குடியாக, அயலாருஞ் சுற்றத்தாராகச் சுற்றுவர் என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'குடிசெய்து வாழாக் குற்றம் உடையவன் இவன் என்ற குற்றமிலனாய்க் குடிசெய்து வாழ்வானை' என்ற ***காளிங்கர்*** உரை ஒரே கருத்தை இருமுறையடுத்துப் பயனின்றி மொழிதலின் சிறப்புடையதன்று. ஏனோர் உரைகள் சிறக்கும்.

1. அறநீதி - தரும சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நீதிகள்.

*வரத.* 'குற்றம் இலனாய் - முயற்சி யின்மையும், அறிவின்மை யும் ஆகிய குற்றங்கள் இல்லாதவனாய்' என்பர். ***தேவநேயர்*** 'நீதிக்கும் நேர்மைக்கும் மாறான செயல்கள்' என்பர். இவையனைத்தும் ***பரிமேலழகர், மணக்.,*** உரைகளின் எதிரொலியாக இருத்தலாலும் ***பரிமேலழகர்*** உரை சிறந்தது.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வான் :***

நங்குலத் துதித்தவர் நவையி னீங்கினார் - கம்ப., 2506

## 103.6. நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
## இல்லாண்மை யாக்கிக் கொளல். (1026)

## உரைப்பகுதி :

***அ) மணக்.:*** ஒருவனுக்கு மிக்க ஆண்மை என்று சொல்லப்படுவது தான் பிறந்த குடியை ஆளுதலுடைமையை மனத்தின்கண் பெருக்கிக் கோடல், எ-று.

ஆளுதலுடைமை - குடியோம்புதலை எப்பொழுதுஞ் சிந்தித்தல், எனவே, இது குடியோம்புதல் வேண்டும் என்றது.

***ஆ) பரிதி.:*** நல்ல சேவகன் என்று பேர்பெறுவது, தான் பிறந்த குடியை இரட்சிப்பது, எ-று.

***இ) பரிப்.:*** ஒருவனுக்கு மிக்க ஆண்மை என்று சொல்லப்படுவது தான் பிறந்த குடியை ஆளுதல் உடைமையை மனத்தின் கண் பெருக்கிக் கோடல், எ-று.

ஆளுதல் உடைமை-குடி ஒம்புதலை எப்பொழுதும் சிந்தித்தல்: எனவே இது குடி ஓம்புதல் வேண்டும் என்றது.

***ஈ) காளி.:*** நல் ஆண்மைப்பாடு என்று சிறப்பித்து உரைக்கப்படுவது ஒருவனுக்கு யாதோ எனின், தான் பிறந்த குடியினைத் தளராநெறியினை[1] ஆண்டு ஒழுகும் மாட்சிமையை நாளும் அழியாமல் ஆக்கிக் கொண்டு ஒழுகுதல், எ-று.

1. தளரா நெறி - தாழாத நெறிகளை

*உ) பரிமேல்.:* ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று உயர்த்துச் சொல்லப்படுவது, தான் பிறந்த குடியினை ஆளுந்தன்மையைத் தனக்கு உளதாக்கிக் கோடல், எ-று.

போர்த்தொழிலின் நீக்குதற்கு நல்லாண்மை என விசேடித்தார்[2]. குடியினையாளுந்தன்மை குடியிலுள்ளாரை உயரச் செய்து தன்வழிப்படுத்தல், அதனைச் செய்து கோடல் நல்லாண்மை யாமாறு வருகின்ற பாட்டால் பெறப்படும்.

*ஊ) கவிராசர்.:* ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லுகிறது தான் பிறந்த குடியை ஆளுந் தன்மையைத் தனக்கு உளதாக்கிக் கோடல், எ-று.

குடியினை உயரச் செய்தலாவது-தன் வங்கிசத்திலே பிறந்தவர்களை உயரச்செய்து தன்வழியே நடக்கப்பண்ணிக் கொள்ளுகிறதாம்.

*ஏ) பழைய2.:* ஒருவனுக்கு நல்லாண்மை என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, தான் பிறந்த குடியினைத் தானாளுந் தன்மை தனக்காக்கிக் கொண்டானாகில், எ-று.

இல்லாண்மை ஆக்கிக்கொளல் : கருமத்தால் தான் எல்லார்க்கும் தலைவன் ஆதல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'இல்லாண்மை யாக்கிக் கொளல்'***

'தன் குடியோம்புதலைத் தான் எப்போதும் சிந்தித்தல்' என்பர் *மணக்.; பரிதி.* 'ஆண்மை இரட்சிப்பது' எனக்கண்டு குழப்புவர். *காளி.* 'தளரா வழியைக் கண்டு ஒழுகும் மாட்சி' என்பர். *பரிமேல்.* 'தான் பிறந்த குடியினை ஆளுந்தன்மையெனத் தனக்குள்ளதாக்கிக் கோடல்' என *மணக்குடவரை* ஒத்து மொழிவர்.

தான் பிறந்த இல்லை அதாவது குடியை ஆளுந்தன்மைய தாக்கிக் கொள்ளுதல் என்றலும் அமையும். இப்பகுதிக்குப் *பழைய உரை* தரும் விளக்கம் சிறந்தது..

2. ஆண்மை என்று வாளா கூறாது நல்லாண்மை என்றது போர்த் தொழிலைக் காட்டும் ஆண்மையை நீக்குதற்காம்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***நல்லாண்மை :***

ஆயது கடனே யன்றோ ஆண்பிறந் தமைந்தார்க் கைய
ஏயது சொன்னா யென்றான்................ - கம்ப., 8550

**103.7. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்**
**ஆற்றுவார் மேற்றே பொறை. (1027)**

***உரைப்பகுதி :***

*அ) மணக்.*: போர்க்களத்துச் செல்வர் பலருளராயினும் போர் தாங்கல்[1] வன்கண்ணர் மாட்டே உளதானாற் போல, ஒரு குடியிற் பிறந்தார் பலருளராயினும் குடியோம்பல் வல்லவர் கண்ணதே குடியாகிய பாரத்தைப் பொறுத்தல், எ-று.

*ஆ) பரிதி.*: சமர்பூமியிலே[2], மாற்றானை[3] வெல்வார் போலத் தம் உற்றார்மேல் வருகிற துன்பங்களைச் செயித்து, அழிகிற குடியைத் தாங்குவார்க்கன்றோ, பெருமை உண்டாயது, எ-று.

*இ) பரிப்.*: போர்க்களத்துச் செல்வார் பலர் உளர் ஆயினும் போர் தாங்குதல் வன்கண்ணர் மாட்டே உளது, ஆனால் போல, ஒரு குடிப்பிறந்தார் பலர் உளர் ஆயினும் குடி ஓம்ப வல்லவன் கண்ணதேகுடி ஆகிய பாரத்தைப் பொறுத்தல், எ-று.

*ஈ) காளி.*: 'ஆர்த்தார்[4] எல்லாம் போருக்கு உரியர் அல்லர்' என்னும் பழமொழி வழக்கினால் அமர் இடத்து அஞ்சாது நின்று எறிந்து ஆசு[5] அழியாமல்தாங்கும் தறுகண்ணாளரைப்[6] போலத் தமர்[7] இடத்தும் ஒன்று உற்ற இடத்துத் தள்ளாமல் பற்றித் தாங்க வல்லவர் யாவர்; மற்று அவர் மேலதேயாகும் குடிப்பாரம் அனைத்தும், எ-று.

---

1. தாங்கல் - எதிர்த்து வெல்லுதல்
2. சமர்பூமி - போர்க்களம்
3. மாற்றானை - பகைவனை
4. ஆர்த்தார் - ஆரவாரித்தார்
5. ஆசு - பற்றுக்கோடு
6. தறுகண்ணாளர் - வன்கண்மையுடையவா.
7. தமர் - தம்மைச் சேர்ந்தவர்

*உ) பரிமேல்.*: களத்தின்கண்[8] சென்றார் பலராயினும் போர் தாங்குதல் வன்கண்ணர் மேலதானாற்போல குடியின்கண் பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அதுவல்லார் மேலதாம், எ-று.

பொருட்கு ஒக்க வேண்டும் சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன[9]. நன்கு மதிக்கப்படுவார் அவரே என்பதாம். இவை மூன்றுபாட்டானும் அது செய்வார் எய்தும் சிறப்புக் கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்.*: சண்டை பண்ணுகிற போர்க்களத்திலே அனேகம் பேர் போய் நின்றாலுஞ் சண்டை பண்ணி வெல்லுதல் பலவான்கள் மேலதானாற்போல, குடியிலே பிறந்தவர்கள் பலரானாலும் அதன் பாரம் பொறுத்தல் அதுவல்லார் மேலதாம், எ-று.

குடியைத் தாங்குகிறவனே பெரியவன்,(எ-ம்)

*எ) பழைய2.*: செருக்களத்துப் பலருள்ளும் ஒரு வன்கண்ணன், போர் செய்து வென்று எல்லாரையும் காப்பதுபோலக் குடியின்கட் பிறந்தார் பலர்மேற் பாரத்தையும் மாற்றித் தாம் பொறுக்க வல்லாரே பாரந்தாங்க வல்லார், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*பரிப்பெருமாள்* 'ஒருகுடிப்பிறந்தார் பலருள் மூத்தோன் வருக என்னாது அறிவுடையார் ஆறு அரசுஞ் செல்வதால்' என்பதனை எண்ணி, 'பாரந்தாங்கற்கு வன்கண்ணராய் ஆற்றுவார் மேற்றே பொறை' எனல் காண்க.

*பரிதி.* 'பொறை - பெருமை' என்பர். இது பொருளாகாது.

*காளி.* 'ஆர்த்தார் எல்லாரும் போருக்குரியர் அல்லர்' என வருவித்தெழுதும் பகுதி 'ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை நாகமுயிர்ப்பக் கெடும்' என்பதை நினைத்து எழுதியதாம்.

---

8. களத்தின்கண் - போர் செய்யும் இடத்தின்கண்

9. உவமேயத்தில் 'பிறந்தார் பலராயினும்' என்றும், 'அதன் பாரம் பொறுத்தல்' என்றும் வருவித்தற்கு ஏற்ப உவமானத்தில் 'சென்றார் பலராயினும்' என்றும் 'போர் தாங்குதல் மேலதானாலும்' என்பதும் வருவிக்கப்பட்டன.

103.8. குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். (1028)

**உரைப்பகுதி :**

***அ) மணக்.:*** குடியோம்புவார்க்குப் பருவம் இல்லை; தம் குடும்பத்தின் குறையை நினைத்து மடிசெய்து[1] அதனை உயர்த்துவதனால் உளதாகும் குற்றத்தை நினைக்கக் குடிகெடும் ஆதலான், எ-று.

இது குடிசெய்வார் இன்பநுகர்ச்சியை விரும்பார் என்றது.

***ஆ) பரிதி.:*** தன்குடி தழைக்க வேண்டும் என்று விசாரிப்பார்க்குப் பருவமில்லை; மடித்த[2] புத்தியும், மானமும் உண்டாகில் தன் குடிமை கெடும், எ-று.

***இ) பரிப்.:*** குடி ஓம்புவார்க்கு நன்மைப் பருவம் இல்லை ஆம்; தத்தம் குடும்பத்தின் குறையை நினைத்து, மடி செய்தலினால் உளது ஆகும் குற்றத்தை நினைக்கக் கெடும் ஆதலான், எ-று.

மேல் துன்பத்திற்குக் கொள்கலம் ஆக வேண்டும் என்றார்; அவ்வாறு அன்பு உற்று ஒழுகுதல் ஆகுமோ என்றார்க்குக் குடிசெய்வார் இன்ப நுகர்ச்சியை விரும்பார் என்று கூறப்பட்டது.

***ஈ) காளி.:*** இவ்வுலகத்துப் பயிர் செய்வார்க்குப் பருவம் வேண்டினாற் போலக் குடிசெய்வார்க்கு ஒரு பருவம் பார்த்து இருக்க வேண்டுவது இல்லை; எனவே எஞ்ஞான்றும் இனிய பருவம் என் இதனை இங்ஙனம் பெற்று வைத்து இயற்றாது[3] மடிப்பதும் செய்து மற்று இக்குடி தாங்குதற்கு யான் இக்கருமம் செய்வது என்னை என்று மானிக்கும்[4] மானம் தான் கருதவே கெட்டு விடும் அக்குடி, எ-று.

***உ) பரிமேல்.:*** தம்குடியினை உயரச் செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தையும் கருதுவாராயின் குடிகெடும்; ஆகலான் அவர்க்குக் காலநியதி இல்லை, எ-று.

---

1. மடிசெய்து - சோம்பி
2. மடித்த - சோம்பிய
3. இயற்றாது - வினைசெய்யாமல்
4. மானிக்கும் - அபிமானிக்கும்

காலத்தை நோக்கி மடிசெய்தல் -வெயில் மழை பனி என்பன உடைமை நோக்கிப் பின்னர்ச் செய்தும் என்று ஒழிந்திருத்தல். மானங் கருதுதல் - இக்குடியிலுள்ளோர் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன் யானோ என்று உட்கோடல்[5] மேல் 'இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது[6]' என்றது உட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோ என்று கருதினும் அது கருதற்க என்று மறுத்தவாறு.

***ஊ) கவிராசர்:*** தன் குடியை உயரச் செய்கிறவன் அதனைச் செய்யாமல், காலத்தை நோக்கி மடியினைச் செய்துகொண்டு மானத்தை நினைத்தானாகில், அக்குடி கெடும். குடிசெய்கிறவன் காலம் பாராமற் செய்யவேணும், எ-று.

காலம் நோக்கி மடி செய்தல் - பனி, குளிர், வெயிலென்று பின்னர்ச் செய்கிறோமென்கிறது. மானமாவது - 'இந்தக் குடியிலே பிறந்தவர்கள் எல்லாருஞ் சுகமாக இருக்க நான் ஒருவன் மட்டும் பிரயாசைப் படுவேனோ' என்று நினைக்கிறதாம். இப்படி நினைத்தாற் குடி உயராது.

***எ) பழைய2.:*** தம் குடியினை உயரச் செய்வார், செயலையே நோக்கிச் செய்யாது, காலத்தை நோக்கி மடியாகிய சோம்பு செய்துகொண்டு, மானத்தையும் கருதுவாராயின், குடிகெடும்; ஆதலால் அவர்க்குக் கால நியதி இல்லை, எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

ஆசிரியர் இந்நூலில் ***மானம்*** என்ற சொல்லையாண்ட ஆறிடங்களிலும் 'பெருமை' என்ற பொருளிலேயே ஆண்டிருக்க ***மணக்குடவர்*** 'குற்றம்' எனப் பொருள் கோடல் பொருந்தாது.

இவர் கருத்தை, தம் குடும்பக்குறையை நினைந்து உடனே உயர்த்த முயற்சியாமல் மடி செய்து உயர்த்துவதனால் உண்டாகும் குற்றத்தை நினைக்க, குடியே முழுகிப்போகும்; ஆதலால் குடிசெய் வார்க்குப் பருவமில்லை; உடனே செயல் இன்றியமையாதது என்று சில சொல் வருவித்து முடித்து விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இவரோ 'குடிசெய்வார் இன்ப நுகர்ச்சியை விரும்பார்' எனப் பொதுவகையால் தரும் கருத்தை இக்குறளில் அமைத்துக் காண்டலும் அரிய முயற்சியாகும்.

5. உட்கோடல் - கருதுதல்
6. குறள்., 841

*பரிமேலழகர்* உரையிலிருந்தே இவருரையை எண்ணிப் பார்த்து இக்கருத்துக்களைப் பெற வேண்டியுள்ளது. பெரும்பாலும் *மணக்குடவர்* உரைக்கு விளக்கம் போன்றனவே *பரிமேலழகர் பரிப்பெருமாள்* உரைகள் என்பதை முன்னரே குறித்தோம்.

*மணக்., பரிப்.,* முதலியோர் கூறும் மடித்தலைச் செய்து மடித்தபுத்தி என்பன தன் இன்பங்கருதிச் சோம்பியிருத்தலைக் கருதுவன. *காளிங்கரும்* உவமை கொண்டு பருவத்தை விளக்கி, அங்ஙனம் பருவம் பார்த்தல் வேண்டாம், பருவம் வந்து குடி செய்வதற்குள் குடியே கெட்டு விடும்' என்ற கருத்தினர், இவர் கருத்தில், ஞாலங்கருதினும் என்பன முதலாய 482 முதல் 485 வரையுள்ள குறட்பாக்களின் கருத்துக் காட்சியளிக்க, அதனை மறுத்து விரைந்து செய்க என்கிறார்.

*கவிராசர்* 'மானம்' என்பதற்குக் கொடுக்கும் விளக்கம் நம் குடிமக்கள் உயர நாம் மட்டும் துன்பப்பட வேண்டுமா என்னும் நினைப்பு என்பர். மேலும் பருவம் நோக்கி மடி செய்தல் எனக் கொண்டு, 'பனி, குளிர், மழை, வெய்யில் முதலிய பருவ நோக்கிச் சோம்பியிருத்தல்' என்பர். இத்தனையும் காலத்தை நோக்கி என்ற *பரிமேலழகர்* உரைக்குறிப்பின் விரிவு.

ஆகவே, மடிசெய்து மானங்கருத (குடி) கெடும் (ஆதலால்) குடிசெய்வார்க்குப் பருவம் இல்லை எனப் பின்னதை ஏதுவாகவும், முன்னதைப் பயன்முடிவு ஆகவும் கொள்ளும் உரைகள் தெளிவானவை.

## 103.9. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
## குற்றம் மறைப்பான் உடம்பு. (1029)

**உரைப்பகுதி :**

*அ) மணக்.*: சுற்றத்தார்மாட்டு உளதாகிய குறையை மறைக்கக் கருதுவான் உடம்பு துன்பத்திற்குக் கொள்கலமாம், எ-று.

*ஆ) பரிதி.*: தன் குடியையும் குலத்தையும் இரட்சிப்பான் குடும்பத்தின் குற்றம் மறைப்பவன் துன்பத்திறகெல்லாம் இருப்பிடம், எ-று.

*இ) பரிப்.*: சுற்றத்தார்மாட்டு உளது ஆகிய குறையை மறைக்கக் கருதுவான் உடம்பு துன்பத்துக்குக் கொள்கலம் ஆம், எ-று.

மேல் ஒழியாது கருமம் செய்தல் பெருமை என்றார்: அது துன்பம் காக்கும் என்றார்க்குத் துன்பத்திற்கு நாணல் ஆகாது: அதனால் புகழ் ஆதலான் என்று கூறப்பட்டது.

ஈ) ***காளி.***: தன் குடியாகிய குடும்பத்தை வந்து உற்ற குற்றத்தை மாய்த்துப் பாதுகாப்பவனது உடம்பானது எஞ்ஞான்றும் வருத் தத்திற்கே கொள்கலம் கொல்லோ: எனவே தன் குடி தாங்குதல் பொருட்டு வருந்துகின்றவனே ஆண்மகன் ஆவான் என்று அவனை வியந்து உரைத்தல் கருத்து, எ-று.

உ) ***பரிமேல்.***: மூவகைத் துன்பமும் உறற்பாலதாய தன் குடியை அவை உறாமல் காக்க முயல்வானது உடம்பு, அம்முயற்சித் துன்பத்திற்கே கொள்கலமாம் அத்துணையோ, அஃது ஒழிந்து இன்பத்திற்கே ஆதலில்லையோ,(எ-று).

"உறைப்பெயல் ஓலைபோல மறைக்குவன் பெருமநின் குறித்து வருவேலே"[1] என்புழியும் மறைத்தல் இப் பொருட்டா யிற்று[2]. என்குடி முழுதும் இன்புற்றுயரவே நான் இருமையும் எய்துதலான் இம்மெய்வருத்த மாத்திரம் எனக்கு நன்றென்று முயலும் அறிவுடையான் அஃதொரு ஞான்றும் ஒழியாமை நோக்கி, இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ என்றார். இது குறிப்புமொழி[3]. இவை இரண்டு பாட்டானும் அவர் அது செய்யும் இயல்பு கூறப்பட்டது.

ஊ) ***கவிராசர்.***: தன் குடியிலுண்டான குற்றத்தைப் போக்கடிக்கப் பாடுபடுகிறவனுடைய உடம்பு துக்கத்துக்கு இருப்பிடமாம், எ-று.

'என் குடியிலுள்ளவர்களெல்லாம் இன்பமுற்று உயரவே, யான் இம்மையிலே கீர்த்தியும் மறுமையிலே தேவலோகமும் பெறுகிறபடியினாலே, இந்த உடம்பு வருத்தம் நல்ல' தென்று சொல்லுவர் அறிவுடையவர்.

எ) ***பழைய2.***: தன் குடும்பம் உற்ற குற்றத்தை நீக்குவான் உடம்பு, துன்பத்திற்கே கொள்கலமோ, இன்பத்திற்கே கொள்கலமோ தெரிகிலம்.

1. புறம்., 290
2. இப்பொருட்டாயிற்று - துன்பம் வராமல் காத்தல் என்னும் பொருளதாயிற்று.
3. குறிப்பால் பொருளுணர்த்துவது, அது ஈண்டு உடம்பு இடும்பைக்கே கொள் கலமாயினும் அவன் இருமையின்பமும் அடைதற்குக் காரணமா யிருத்தலால் அஃது அவனுக்கு இன்பத்திற்கே கொள்கலம் ஆயிற்று என்பது குறிப்பு.

தொழில் செய்வதனால் துன்பம் என்றும், இல்லறத்தினால் இன்பமென்றும் சொல்வார். கொள்கலங் கொல்லோ என்று குறிப்பு மொழியால் சொல்லியது என்க. கொள்கலம் : கொள்ளும் பாத்திரம். எந்நாளும் விடாது தொழில் செய்வானை நோக்கிப் புகழாப் புகழ்ச்சியாகச் சொல்லியது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***பரிப்பெருமாள்*** 'மேல் துன்பத்திற்குக் கொள்கலமாக வேண்டும்' என்றார். இதனால் குடிசெய்வார் இன்பநுகர்ச்சியை விரும்பார் என்பது கூறப்படுகிறது என்பது முறைவைப்புக் காரணத்தையறிவிக்கிறது. ***மணக்., பரிப். குறள்*** வைப்பு முறை ***'இடும்பைக்கே'*** என்பதை யடுத்தது 'குடிசெய்வார்க்கு' என்னும் குறள். இதனை அதிகார இறுதியிலமைக்கும் ***குறள்*** முறைவைப்பான் அறியலாம். ***காளிங்கர்*** 'தம்குடி தாங்க வருந்துகின்றவனே ஆண்மகன் என வியந்தவாறு' என்பர். ***பரிமேலழகர்*** இதனைக் குறிப்பு மொழியாகக் கொண்டு தரும் விளக்கம் சிறந்தது. ***பழைய உரையாசிரியர்*** 'குடி செய்வான் உடம்பு இடும்பைக்குக் கொள்கலமோ? இன்பத்திற்குக் கொள்கலமோ தெரிகிலம்' என்பர். இங்ஙனம் கொள்முறை சிறிது மாறுபடினும் கருதுகோள் ஒன்றாகிறது.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

நெடும்பல் மால்வரை தூர்த்து நெருக்கவும்
துடும்பல் வேலை துளங்கிய தில்லையால்
இடும்பை யெத்தனை யும்படுத் தெய்தினும்
குடும்பந் தாங்கும் குடிப்பிறந் தாரினே. - கம்ப., 6855

கருங்கடல் தொட்டனர் கங்கை தந்தனர்
பொரும்புலி மானொடு புனலும் ஊட்டினர்
பெருந்தகை என்குலத் தரசர் பின்னொரு
திருந்திழை துயரநான் தீர்க்க கிற்றிலேன். - கம்ப., 26

இடும்பைக் கிடும்பை யியலுடம்பி தன்றோ. - நல்வழி

**103.10. இடுக்கண்கால் கொன்றிட வீழும்**
**அடுத்தூன்றும்**
**நல்லாள் இலாத குடி. (1030)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** இடும்பையாகிய நவியம்[1] அடுத்துத் தனது வேரை வெட்டுதலானே வீழும்; பக்கத்திலே அடுத்து ஊன்றுகின்ற முட்டுக்கோல் போலத்தாங்கவல்ல நல்ல ஆண்மக்கள் இல்லாத குடியாகிய மரம், எ-று.

இது குடியோம்புவாரில்லாக்கால் அக்குடி கெடும் என்று கூறிற்று.

***ஆ) பரிதி.:*** துன்பம் சற்றே தோற்றின மாத்திரத்திலே கெடும்; குடியைத் தாங்குகின்ற பலவான் பிறவாத குடி, எ-று.

***இ) பரிப்.:*** இடும்பை ஆகிய நவியம் அடித்தூரை வெட்டுதலானே விழும்; பக்கத்திலே மடுத்து ஊன்றுகின்ற முட்டுக்கால் போலத் தாங்க வல்ல நல்ல ஆண்மகன் இல்லாத குடி ஆகிய மரம், எ-று.

இது குடி ஓம்புவார் இல்லாக்கால் அக்குடி கெடும் என்று கூறப்பட்டது.

***ஈ) காளி.:*** வந்து உற்ற இடுக்கணானது முன் நின்ற நிலையை அழித்திட வீழ்ந்து அறும்; யாது எனின் அவ்விடுக்கண் வந்த இடத்துத் தளராமல் முகம் வைத்து உறுதி செய்யும் நல் ஆண்மகன் இல்லாத குடியானது, எ-று.

***உ) பரிமேல்.:*** துன்பமாகிய நவியம் புகுந்து தன்முதலை வெட்டிச் சாய்க்க ஒரு பற்றின்றி[2] வீழா நிற்கும். அக்காலத்துப் பற்றாவன[3] கொடுத்துத் தாங்க வல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம், எ-று.

முதல்-அதன் வழிக்குரியார்[4]. வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலும் உடைமையின்,

1. நவியம் - கோடாலி
2. பற்றின்றி - ஆதாரமின்றி
3. பற்றாவன - விழாது தாங்கவல்ல முட்டுக்கள்
4. அதன் வழிக்குரியார் - அக்குடியில் தோன்றியவர், அதாவது சந்ததிகள்.

மரமாக்கினார். 'தூங்குகின்ற வாவலுறை தொன் மரங்களென்ன, ஓங்குகுல நையவதனுட் பிறந்த வீரர். தாங்கல் கடன்'[5] என்றார்பிறரும். இது குறிப்புருவகம்[6] இதனான் அவரில்லாத குடிக்கு உளதாம் குற்றம் கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்.***: குடியைத் தாங்கவல்ல நல்ல பிள்ளை பிறவாவிட்டால், அந்தக் குடி குற்றமாகித் தோன்றிக் கெட்டுப் போம், எ-று.

***ஏ) பழைய2.***: 'கால்தோன்றிட', 'அடுத்தூன்று', 'நல்லாளில்லாத' பாடம்.

துன்பமாகிய பொறை காலாகிய அடிமரத்தில் தோன்ற அப்பொறை மிகுத்து அசைந்து முரிந்து சாய, ஒரு பற்றின்றி வீழும், அக்காலத்துப் பற்றாகக் கொடுத்துத் தாங்கவல்ல நல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'கால்கொன்றிட', 'வீழும்' 'ஊன்றும்'*** என்ற சொற்களின் ஆற்றலால் இடுக் கண்ணை-நவியமாகவும், கால்கொல்லல் - வேரை வெட்டுதலாகவும், குடியை மரமாகவும், குடிசெய்வான் ஊன்று கோலாகவும் கருதி ***மணக்குடவரும் பரிமேலழகரும்;*** உருவகித்தனர்.

***காளிங்கர்*** 'அடுத்தூன்றும் நல்லாள்' என்றவுடன், 'மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண்' என்ற (624) ***குறள்*** நினைவில் வர அங்குத்தாம் எழுதிய உரையையே 'தான் சென்று முகம்படுத்த இடத்து' என்பதை நினைவு கூர்ந்து 'முகம் வைத்து உறுதிசெய்யும் நல்ல ஆண்மகன்' என உரை எழுதினர்.

***பரிதி.*** 'பலவான் பிறந்தகுடியும் துன்பம், சிறிது தோன்றின உடனே அழியும்' என இயைபில் பொழிப்புரைத்தனர். இவர் 'தோன்றிட' எனப் பாடம் கொண்டிருக்கலாம். ஆனால் கால் என்பது சற்றே என்று பொருள் தருமாயின் ஒருவாறு பொருந்தும்.

***வரத.*** முன்னோர் வழிச்செல்ல முனையாது இடுக்கண்கால் கொல்லுதல் வேர்ப்பூச்சி வேரையரித்தல் என்றும், அடுத்தூன்றும் நல்லாள் 'சிதலை தினப்பட்ட ஆலமரத்தை மதலையாய்த் தாங்கும் விழுதாகவும்' கண்டு காட்டுவர்.

5. ***சீவக,*** 498
6. தொகுப்பும் குறிப்பும் காண்க.

இவ்வுரைகளுள் அணி பெற எழுதிய *மணக்குடவர் பரிமேலழகர்* உரைகள் சிறந்தன.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

***நால்லாள் உள்ளகுடி வீழாமை :***

........................................ இவனே
முழுமுதல் தொலைந்த கோளி யாலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ - புறம்., 58:1-5

சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கட் டோன்றிற் றான்பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும். - நாலடி.,197

தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்ன
ஓங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகுந்தலை சாய்க்கவரு தீச்சொல்
நீங்கண்மட வார்கள்கட னென்றெழுந்து போந்தான். - *சீவக.*, 498

நைந்தடியற்ற வாலம் நடுங்கி வீழ்கின்றதென்று
வந்தவீழுன்றி வீழாவகை நிலைப்பிக்குமா மாபோல்
மைந்தனை உள்ளோன் வாதை வந்துமெய் வருத்துங்கலை
தந்தையைத் தளராவண்ணம் தாங்குவர் தவத்தின் நன்றால்.
- கம்ப.,உத்தர.இராச.,43

# 103. குடிசெயல்வகை

| | கருமம் | ஆள்வினை | குடிசெய்வல் | சூழாமல் | குற்றம் | நல்லாண்மை | அமரகத்து | குடிசெய்வார்க்கு | இடும்பைக்கே | இடுக்கண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 4 | 3 | 8 | 7 | 9 | 1 | 2 | 6 | 5 | 10 |
| பரிதி. | 5 | 10 | 1 | 2 | 7 | 4 | 3 | 6 | 8 | 9 |
| பரிப் | 4 | 3 | 8 | 7 | 9 | 1 | 2 | 6 | 5 | 10 |
| காளி. | 6 | 9 | 1 | 8 | 10 | 5 | 4 | 7 | 3 | 2 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | *7 | 8 | 9 | 10 |

103-வது அதிகாரம் 'குடிசெயல்வகை' முற்றிற்று.

# 104. உழவு

*அதிகாரப்பொருள்:*

***அ) மணக்.:*** உழவாவது உழவின் திறனும் அதனால் வரும் பயனும் கூறுதல், எ-று.

***இ) பரிப்.:*** இது குடி செய்வார்க்கு இன்றியமையாமையின் அதன் பின் கூறப்பட்டது. எ-று.

உழவு, தொழில், வரைவு[1], வாணிகம், சிற்பம், வித்தை[2] என்று சொல்லப்பட்ட அறுவகைத் தொழிலும் குடி செய்வார்க்கு வேண்டும் அன்றே? அவை எல்லாவற்றின் இயல்பும் கூறாதார், உழவு ஒன்றும் கூறியது எற்றுக்கு எனின் அவற்றுள் கல்வி பொருள்தரும் என்பது முன்பே கூறப்பட்டது. தொழிலாவது ஒருவன் ஏவல் செய்தல். அரசர் ஏவலால் அமைச்சர் செய்யும்தொழில் ***அமைச்சியலுள்*** கூறப்பட்டது. ஏனையோர் செய்யும் தொழிலும் வரைவு வாணிகமும் சிற்பமும் மேலை அதிகாரத்தில் 'ஆள் வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நீளும் குடி' என்றதனாலே சொன்னாராம்: என்னை? அவை எல்லாம் முயற்சியானும் அறிவானும் வருதலின்; ஆயின் உழவும் அதனுள் அடங்காதோ எனின் அடங்கும்: அஃது ஈண்டுத் தொழிலை நோக்கிக் கூறப்பட்டது அன்று. முயன்று பொருள் ஈட்டினார் எல்லாரும் குடி ஓம்புங்கால், தானியத்தால் ஓம்ப வேண்டுதலின் அதனை உண்டாக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

---

1. வரைவு - வரையறச் செய்தொழுகல்
2. வித்தை - கல்வி

*உ) பரிமேல்.*: அஃதாவது சிறுபான்மை வாணிகர்க்கும் பெரும் பான்மை வேளாளர்க்கும் உரித்தாய உழுதல் தொழில். செய்விக்குங்கால் ஏனையோர்க்கும் உரித்து. இது, மேல் குடியுயர்தற்கு ஏது என்ற ஆள் வினைவகையாகலின், குடி செயல்வகையின் பின் வைக்கப்பட்டது, எ-று.

*ஊ) கவிராசர்.*: அஃதாவது வாணிகர்க்கும் வேளாளர்க்கும் உரித்தாய உழுதற் தொழில், எ-று.

*ஏ) பழைய2.*: அஃதாவது உழவுத் தொழில் செய்தல், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***இராமலிங்கர்*** 'உணவு உற்பத்தி செய்யும் பயிர்த்தொழில். அதன் இன்றியமையாச் சிறப்பையும், அதனைச் செய்வார் மேற் கொள்ளும் தொழினுட்பங்களையும் சொல்வது' என்பர்.

***வரத.*** உழவு, 'தொழில் வகையனைத்தினும் சிறந்தது; அனைத் தையும் இயக்கவல்லது. ஆதலால் ஆசிரியர் இதனை மட்டும் கூறி, ஏனையவற்றைப் பேசாது விடுகிறார். உழவின்முறை, பெருமைகளும், உழவர் பெருமையும் இவ்வதிகாரத்து முறையே கூறப்படுகின்றன' என்பர்.

***தேவநேயர்*** 'அரசன் முதல் நாட்டுமக்கள் அனைவருக்கும் இன்றியமையாத உணவையளிக்குந் தொழில் ஏனைய தொழில்களுக்கு இன்றியமையாத காரணமாவது; அரசியலுக்கு உரிய வரியில் பெரும் பகுதியை வழங்குவது; வேளாளர்க்கும் வணிகர்க்கும் உரிய குலத் தொழிலாவது; இத்தொழிலைப் பாண்டியம் எனவும் இலக்கியங்கள் வழங்கும். குடிகள் அனைத்தும் வாழவும் வளரவும் உதவுவதாதலின் குடிசெயலின் பின் வைக்கப்பட்டது' என்பர்.

***பரிமேலழகர்*** கூறும் அதிகாரப் பாயிரம மேறகுடியுயாதறகேது வானது; ஆகலின் ஆசிரியர் முறையைப் பின்பற்றியது; பொருளோடு பொருந்தாதது என மறுப்பர்.

***குழந்தை.*** 'உழவின் சிறப்பறிந்து வாழும் தொழிற் சிறப்பைக் கூறுவது'.

***கா.சு.***'உழைப்பிற் சிறந்தது உழவு முயற்சி' என்பர்.

*பரிமேலழகர்* தரும் விளக்கம் 'இருமூன்று மரபின் ஏனோர் பக்கத்தை' நினைத்து எழுதியது. 'செய்விக்குங்கால் ஏனோர்க்கும் உரித்து'' என்பது வடநூன் மரபுமன்று; உழுதுண்ணும் வேளாளரே உழுவித்துண்பாராயுமிருந்தமை சங்ககால கூற்று ஆதலின் இது வேண்டா கூற்றாம்.'உழவுக்கும் அக்னி ஹோத்திரத்திற்கும் என்ன உறவு' என்ற முதுசொல்லும் கண்டு தெளிக.

ஆசிரியர் *வள்ளுவனார்* வருணப் பாகுபாடு பற்றி இத் தொழிலை மட்டும் கூறினாரல்லர். எல்லாத் தொழிலுக்கும் இன்றியமையாது வேண்டப்படும் மூலப்பொருள்களை விளைவிக்கும் சிறப்புப் பற்றியே கூறுகிறார் என்பதை இவ்வதிகாரத்து முதலாறு குறட்பாக்களானும் தெளிக.

*பரிப்பெருமாள்* எழுப்பும் சிந்தனையும் அவர் கூறும் விளக்கங்களும் மனங் கொள்ளத்தக்கவை.

**104.1. சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை. (1031)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** உழவு ஒழிந்த எல்லா நெறிகளிலும் சுழன்று திரிந்தாலும் ஏருடையவர் வழியே வருவர் உலகத்தார்; ஆதலான், வருந்தியும் உழுதலே தலைமையுடையது, எ-று.

இஃது உழவு வேண்டும் என்றது.

***ஆ) பரிதி.:*** பூமியைப் பிரதட்சணம்[1] பண்ணின தர்மமும், உழவு செய்து கொடுத்த தர்மத்திற்கு நிகரில்லை, எ-று.

***இ) பரிப்.:*** உழவு ஒழிந்த எல்லா நெறிகளினும் சுழன்று திரிந்தாலும் ஏரின் வழியே வருவர் உலகத்தார்; ஆதலான் வருந்தியும் உழுதலே தலைமை உடைத்து, எ-று.

இஃது உழவு வேண்டும் என்றது.

***ஈ) காளி.:*** கடல் ஓடியும் மலை ஏறியும் காடு மண்டியும்[2] நாடு பரந்தும் ஓடித்திரிதலே அன்றியும் உண்பான் பொருட்டு இதனைப் பிற பிற முயன்று அலம் வந்தும்[3] அதனால் ஒரு பயனும் இல்லை: ஆதலால்

1. பிரதட்சணம் - வலம் வருதல்
2. காடு மண்டியும் - காட்டில் நெருங்கிச் சென்றும்
3. அலம் வந்தும் - வருந்தியும், அலம் - துன்பம்

ஏர் கொண்டு வாழ்வார் தமது வழிச்சேறலே பயன் உள்ள வாழ்வாம் மற்று:அது எங்ஙனம் எனில் உழவைப் பொருட்டாக உழுகருவிக்குக் காடுபுக்கு மரம் தடிதலும்[4] கனவியகொழுவும்[5] அதற்கு ஏற்ற பல கருவியும், வன்புலம் மென்புல வடிவத்தியற்றலும்[6] படைக்கால்[7] அமைத்தலும் முதலிய பலவகைப் பயிர்வளம் முற்றிய அவை அனைத்தும் உழந்தும் உழவு இயற்றலே தலைமைப்பாடு ஆவது, எ-று.

***உ) பரிமேல்.:*** உழுதலான்வரும் மெய்வருத்தம் நோக்கிப் பிற தொழில்களைச் செய்து திரிந்தும், முடிவில் ஏருடையார் வழியதாயிற்று உலகம்; ஆதலான் எல்லாவருத்த முற்றும் தலையாய தொழில் உழவே, எ-று.

ஏர் ஆகுபெயர். பிறதொழில்களான் பொருள் எய்திய வழியும் உணவின் பொருட்டு உழுவார்கண் செல்லவேண்டுதலின் 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றும், வருத்தமிலவேனும் பிற தொழில்கள் கடை என்பது போதர 'உழந்தும் உழவே தலை' என்றும் கூறினார். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்.:*** உழுதுபயிரிடுகிறவன் உடம்பு வருத்தத்தைப் பார்த்து அந்தத் தொழிலைச் செய்யாமல் மற்றைத் தொழிலைச் செய்து திரிந்து பொருளை அடைந்தவிடத்தும், உண்பதற்காகப் பயிரிடுகிறவனண் டைக்கு வரவேணும். ஆனபடியினாலே, உழுது பயிரிடுகிறதே பெரிய தொழில், எ-று.

மற்றைத் தொழில்களெல்லாம் அதன்பிறகே, எ-ம்.

***எ) பழைய2 :*** 'உழன்றும்' பாடம்.

உழவுத் தொழிலான் மெய்வருத்தம் நோக்கிப் பிற தொழில்களைச் செய்து திரிந்தும் முடிவிலே உழுவாரிடத்தாயிற்று உலகம்; ஆதலால் எல்லா வருத்த முற்றும் தலைமையான தொழில் உழுதலே, எ-று.

பிற தொழிலால் பொருள் தேடி உழுவாரிடத்துக் கொள்ள வேண்டுமாதலால், உழுதலே வேண்டும் என்கிறது.

---

4. மரம் தடிதல் - மரம் வெட்டுதல்
5. கனவியகொழு - கனத்த கருவியும்
6. வன்புலம் மென்புல வடிவத்தியற்றலும் - புஞ்சை நஞ்சை நிலத்திற்கேற்றவாறு வடிவமைத்தல்
7. படைக்கால் - கொழுவைப் பொறுத்தும் ஏர் நுனி

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்., பரிமேல்.,*** உரைகள் ஒத்த கருத்தின. ஆயினும் ***'சுழன்றும்'*** என்பதற்கு 'எல்லாத்தொழிலினும் சுழன்று திரியினும்' என வாளா கூறினர் ***மணக்.; பரிமேல்.,*** 'உழுதலான் வரும் மெய் வருத்தம் நோக்கிப் பிற தொழில்களை மேற்கொண்டு திரிந்தாலும்' என ஏற்ற காரணம் கூறினர்.

***பரிதியுரை*** சமயச் சார்புடையதாய் இக் குறட்பாவின் கருத்திற்குச் சிறிதும் இயைபிலது.

***காளிங்கர்*** சுழலுதற்காரணங்களை இரு வகைப் படுத்துகிறார். 'ஒன்று காடு சுற்றுதல் முதலான பயனில்லாத வெறும் சுழற்சி; மற்றொன்று நேரே உழவைச் செய்து பயன் கொள்ளாது உழவுக்காக ஏருப், ஏருக்காக மரமும் மரத்திற்காகக் காடு சுற்றலும் போன்ற வழிவழித்தொழிலைச் செய்து வருந்துதல்' என்பர்.

***பரிமேலழகரும்*** அவர் வழி வருவோரும், 'மெய்வருத்த நோக்கு உழவை விட்டுப் பிற தொழில் செய்துபொருளீட்டினாலும் உணவின்பொருட்டு உழவன் மாட்டே செல்ல வேண்டுதலின் இங்ஙனம் கூறினர் என்பர், இவ்வுரை ஏனையவற்றினும் நயமிக வுடைத்தாதலை உன்னுக. உழவின் சிறப்பை உன்னவைத்தலால் என்க. 'சுழன்றும் - பூமியைப் பிரதட்சணம் செய்தும்' என்னும் ***பரிதியுரை*** இயைபின்று. 'பல தொழிலைச் செய்து கொண்டிருந்த போதிலும்' என்ற ***வரத.உரையும்,*** 'மீண்டும் மீண்டும் சிந்தித்தாலும்' என்ற ***இராமலிங்கர்*** உரையும் ***பரிமேலழகர்*** கருத்துக்கு அடுத்தது தான்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில் மிகும்.

-மனோன்., 3:2:68

உழுவித் திருவர் இருவர்உழு வித்து முழுவதும் உணலாகும்
உழுதுண் பவரே தமக்குரியர் உபகா ரியர்என் பார்அவரே.

-விநா. அரசி.,151

தொழுதூண் சுவையின் உழுதூ ணினிது.

- கொன்றைவேந்தன்

வேதநூ ல்முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரும் உழுவார்தந் தலைக்கடைக்கே. - ஏரெழுபது

## ஒ) மேற்கோள்பகுதி :

*இளம்.*: இரு மூன்றுமரபின் ஏனோர் பக்கம்: இரு மூன்றில் வேளாளர்க் குரிய உழவின் சிறப்புக்கு மேற்கோள். -தொல். பொருள்.,74

## 104.2. உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றா(து) எழுவாரை எல்லாம் பொறுத்து. (1032)

## உரைப்பகுதி :

*அ) மணக்.*: 'ஆற்றார் தொழுவாரே' பாடம்.

உலகத்தாராகிய தேரினுக்கு அச்சாணிபோல்வார் உழுவாரே; அதனைச் செய்யாதாரே பிறர்பெருமிதத்தினால் செய்வனவெல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பார், எ-று.

இஃது உழுவார் தம்மையும் அரசரையும் பெரியராக்கு தலன்றி உலகத்தையும் தாங்குவர் என்பதாம்.

*ஆ) பரிதி.*: உழவுத் தொழில் அன்றோ உலகம் அசையாமல் தாங்குகிற ஆணி. உழவு இல்லாதார் தொழுது, வயிறு வளர்ப்பவர், எ-று.

*இ) பரிப்.*: உலகம் ஆகிய தேருக்கு அச்சு ஆணி போல்வார் உழவரே: அதனைச் செய்யாதவர் பிறர் பெருமிதத்தினால் செய்வன எல்லாம் பொறுத்துத் தொழுது நிற்பர், எ-று.

இஃது உழுவார் தம்மையும் அரசனையும் பெரியர் ஆக்குதல் அன்றி உலகத்தையும் தாங்குவர் என்று கூறிற்று.

*ஈ) காளி.*: உழுது விளைத்துக் குடிமை செய்வார் யாவர்? மற்று அவரே உலகின் கட்டளை[1] குலையாமைக்கு ஓர் அச்சு ஆணி

1. உலகின் கட்டளை - உலகின் இயங்கு முறை

ஆவர்: அதனால் மற்று அதின் முயலாதார் யாவரும் பிறரை வழிபட்டுத் தாழ்ந்து ஒழுகு வாரே; உணவு காரணமாக அவர் செய்வன எல்லாம் பொறுத்து,எ-று.

***உ) பரிமேல்.:*** அவ்வுழுதலைச் செய்யமாட்டாது பிறதொழில்கள் மேற் செல்வார் யாவரையும் தாங்குதலால், அது[2]வல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர், எ-று.

"காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு"[3] என்றாற் போல. உழுவார் என்றது உழுவிப்பார் மேலும் செல்லும்[4]. 'உலகத்தார்' என்றது ஈண்டு இவரை யொழிந்தாரை. கலங்காமல் நிறுத்தற்கண் ஆணி போறலின் 'ஆணி' என்றார். பொறுத்தலான் என்பது திரிந்து நின்றது. ஏகதேச வுருவகம்[5]. அஃதாற்றார் தொழுவாரே எல்லாம் பொறுத்து என்று பாடம்[6] ஓதி, அதுமாட்டாதார் புரப்பார்செய்யும் பரி பவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரேயாவர் என்று உரைப்பாரும் உளர்[7].

***காரி.:*** தொழுவார்-உழுதல்லாத தொழில் செய்வார்."காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு[8]", என்றாற் போல, உழுவார் என்பது உழுவிப்பார் மேலும் சென்றது.

***ஊ) கவிராசர்.:*** உழுகிற தொழிலைச் செய்ய மாட்டாமல் மற்றைத் தொழில்களைச் செய்து திரிகிறவர்களை யெல்லாந் தாங்குகிற படியினாலே, உழுகிறவர்கள், உலகத்து ஜனமாகிய தேரைத் தாங்குகிற அச்சாணி, எ-று.

***எ) பழைய2.:*** உழுவார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணி. உழவுத் தொழில் செய்யா தொழிந்து பிறதொழில் செய்வாரை எல்லாம் தாங்கிப் பொறுத்து நிற்றலான், எ-று.

தொழுவாரே எல்லாம் பொறுத்து என்று பாடமோதி, உழமாட்டாதவர், காப்பவர் செய்யுஞ் செயலெல்லாம்,பொறுத்து அவரைத் தொழுவார் என்று உரைப்பாரும் உளர்.

---

2. அது - உழுதலில்
3. பட்டினப்பாலை, 283
4. உழுவார் என்ற தன்வினை உழுவித்து என்னும் பிறவிக்கண் வந்தது. கொன்று, தொட்டு என்பனவும் இத்தகையனவே.
5. உழுவாரை 'ஆணி' என்று உருவகஞ் செய்தவர் உலகத்தாரைத் தேர் என்னாமையின் இக்குறள் ஏகதேச உருவகமாயிற்று.
6. பாடம் ஓதுபவர், மணக்குடவர், காளிங்கர்
7. இவ்வாறு உரைப்பவர் காளிங்கர்.
8. பட்டினப்பாலை

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'உழுவார் உலகத்திற் காணி அஃதாற்றார் தொழுவாரே' என்பன ***மணக்., காளி., பரிப்.,*** உரைகள். இக்கருத்து பின்வரும் 3ஆம் குறளிலும் ஒருபுடை வருதலான் ***பரிமேலழகர்*** போன்றோர் 'அஃதாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து' எனப்பாடம் கண்டு 'அதுவல்லார் உலகத்தார்க்கு ஆணி' யென உரை கண்டனர். பிற்கால உரையாசிரியர் அனைவரும் ***பரிமேலழகரையே*** ஒட்டியுரை காண்பர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***உலகத்தார்க்காணி :***

ஆணியா யுலகுக் கெல்லா மறப்பொரு ணிரப்பு மண்ணல்

- கம்ப., 4875

***முற்றும் :***

தொழுதுண் பவரே பிறர்க்குரியார் தொழின்முற் றுழந்தும்
உழவினர்பால் முழுதும் அடுப்ப வேண்டுதலின் முதன்மைத்
துழவென் றறி மைந்தா. - விநா.அரசி., 151

அலகிலா மறைவிளங்கு மந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளக்கு மழைவிளங்கு மனுவிளங்கும்
உலகெலா மொளிவிளங்கு முழவரு முழவாலே. -ஏரெழுபது

உழுங்குலத்திற் பிறந்தாரே உலகுய்யப் பிறந்தாரே. -ஏரெழுபது

## 104.3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
## தொழுதுண்டு பின்செல் பவர். (1033)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** உலகின்கண் வாழ்வாராவார் உழுதுண்டு வாழ்பவரே; மற்று வாழ்கின்றாரெல்லாரும் பிறரைத் தொழுது உண்டு அவரேவல் செய்கின்றவர், எ-று.

இது செல்வமாவது உழவினால் வரும் செல்வம் என்றது.

***ஆ) பரிதி.:*** உழுது உண்டு ஏற்றவர்க்கு, இட்டு வாழ்வதே வாழ்வு. மற்றது தொழுது, வணக்கம் செய்து, வயிறு வளர்ப்பது, எ-று.

***இ) பரிப். :*** 'மற்றெல்லார்' பாடம்.

உலகின்கண் வாழ்வார் உழுது உண்டு வாழ்வாரே; மற்று வாழ்வார் எல்லாம் பிறரைத் தொழுது உண்டு அவர் ஏவல் செய்கின்றவர், எ-று.

இது செல்வம் ஆவது உழவினால் வரும் செல்வம் என்றது.

***ஈ) காளி. :***'மற்றல்லாதார்' பாடம்.

அரசரும் அன்னரோ எனில் அவரும் இவர் இடு பொருளை[1] நத்திடும் இயல்பு[2] அல்லது, தாம் அவர்க்கு இடுவது இல்லை. ஆதலால் உழுது உண்டு வாழ்கின்றாரே வாழ்கின்றார் என்று சொல்லப்படுவார்: மற்றையர் அனைவரும் பிறர் ஏவல்செய்து தொழுது உண்டு பின் செல்கின்றனர், எ-று.

***உ) பரிமேல்.:*** யாவரும் உண்ணும் வகை உழுதலைச் செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்றாரே தமக்கு உரியராய் வாழ்கின்றவர்; மற்றையாரெல்லாம் பிறரைத்தொழுது அதனால் தாமும் உண்டு அவரைப் பின்செல்கின்றனர், எ-று.

மற்று என்பது வழக்குப் பற்றி வந்தது[3]. தாமும் மக்கட் பிறப்பினராய் வைத்துப் பிறரைத் தொழுது அவர் சில கொடுப்பத் தம்முயிர் ஓம்பி அவர்பின் செல்வார் தமக்குரியரல்லர் என்பது கருத்து.

***காரி.:*** மற்றெல்லாம் என்பதற்கு மற்றையாரெல்லாரும் என்று உரைத்து, மற்று என்பது வழக்குப் பற்றி வந்தது என்றார். 'சிற்றின்பம் வெஃகி'[4] என்பதில் மற்றை மற்று என வந்தது என்றார். ஈண்டு உயர்திணையாய் மற்றை யார் மற்று என வந்தது என்றார்.

***ஊ) கவிராசர்.:*** எல்லாரும் உண்ணத்தக்கதாக உழுது பயிரிட்டுத் தாமும் உண்டு வாழ்கிறவர்கள்; மற்றவர்களெல்லாரும் பிறரைத் தொழுது அதனாலே தாமுண்டு அவரைப் பின் செல்லுகிறவர்,எ-று.

1. இடுபொருளை - இடுகின்ற பொருள்
2. நத்திடும் இயல்பு - விரும்பும் இயல்பு
3. மற்றென் கிளவி வினைமாற்று அசைநிலை என்னும் இரு பொருளில் வரும் என்பது தொல்காப்பியம். 'பிறிது' என்னும் பொருளில் வரும் என்பது நன்மை. இங்குப் பிறிது என்னும் பொருளில் வந்துள்ளது.
4. குறள்., 173

பிறரைத் தொழுது அவர்கள் கொடுக்க வாங்கிக்கொண்டு தம் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளுகிறவர்கள் தமக்குரியரல்லர், எ-று.

*ஏ) பழைய2.*: உழுதுண்டு வாழ்கின்றவரே தம்மிச்சையில் வாழ்கின்றவர்; மற்றையரெல்லாம் பிறரைத் தொழுது அதனால் உண்டு, அவர் பின் செல்பவர், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'உழுது உண்டு'*** என்பதற்கு ***மணக்., பரிதி.,*** முதலாயினார்; 'தாள் தந்தது உண்ணலினூங்கு இனியதில்' என்பதனை 'மனங்கொண்டு 'உழுதுண்டு' என்றே உரை கண்டனர். ***பரிமேல்.***, 'ஐம்புலத்தாறு ஓம்பல் தலை' 'பாத்துண்டற்றால்' என்பவற்றை எண்ணி 'உழுது - யாவரும் உண்ணும் வண்ணம் உழுதலைச் செய்து' என்றனர். இவ்வுரையின் சிறப்புக்கருதியே ***தேவநேயர்*** முதலான பின்னுரையாசிரியர்களும் இங்ஙனமேயுரைப்பர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும்:***

வீழ்குடி யுழவரோடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும் - சிலம்பு.5:43-44

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்வா ரென்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறை யன்றோ. - கம்பர்.ஏரெழுது

தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது. -கொன்றை.,46

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. - நல்வழி.,12

நெற்பயிர் விளை. - ஆத்தி.,72

## ஓ) மேற்கோள்பகுதி :

***நச்சி.***: இருமூன்று மரபின் ஏனோர்பக்கம் என்பதில் வாணிகர்க்கும் வேளாளர்க்கும் உரிய உழவுத்தொழில் சிறப்புக்கு மேற்கோள்.
- தொல். பொருள்.,75

*அடியார்.*: வீழ்குடி உழவரோடு விளங்கியகொள்கை; வீழ்குடி-உழவின் மேல் விரும்பும் குடி; காணியாளர் யாவரும் விரும்புங்குடி என்றுமாம். 'உழுதுண்டு ....... செல்பவர்'என்பதனாற்கொள்க.

- சிலம்பு, இந்திர.,43

## 104.4. பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காணபர் அலகுடை நீழ லவர். (1034)

***உரைப்பகுதி :***

*அ) மணக்.*: பல அரசர் குடை நிழலும் தம்அரசர் குடை நிழற்கீழே வரக்காண்பர், குடையில்லா நிழலையுடையவர், எ-று.

குடையில்லா நிழலாவது பைங்கூழ் நிழல். இது தாம் வாழ்தலேயன்றித் தம் அரசனையும் வாழ்விப்பர் என்றது.

அலகுடைய நீழல் - கதிர்களையுடைய நெற் பயிரின் நிழல்.

*ஆ) பரிதி.*: அரசர் பல குடைநீழலும் தம் குடை நிழலிலே காண்பர்; அலகுடைநீழலாய உழவினால், எ-று.

*இ) பரிப்.*: பல அரசர் குடை நிழலையும் தம் அரசன் குடை நிழல் கீழே வரக் காண்பர்: குடை அல்லாத நிழலை உடையவர், எ-று.

குடை அல்லாத நிழல்ஆவது பைங்கூழ் நிழல்: இது தாம் வாழ்தலே அன்றித் தம் அரசனையும் வாழ்விப்பர் என்றது.

*ஈ) காளி.*: 'தம்கொடைக்கீழ் ' பாடம்.

கொற்றக் குடைமுதல்[1] ஆகிய அளவு இறந்த குடைநிழற்கீழ் வாழ்வாரையும் அவர் அவர்க்குத் தாம் கொடுக்கும் கொடைவழி வருதலை நாளும் நாளும் கொண்டு ஒழுகுபவர்: இவ்வுலகு இயல்பு உடையார் யார் எனின் தமக்கு உழவைத்தரும் கலப்பைத் தண் நிழலினை உடையவர், எ-று.

அலகு என்பது கலப்பை.

*உ) பரிமேல்.:* உழுதல் தொழிலான் நெல்லினை உடையராய தண்ணளியுடையோர் பலவேந்தர் குடைநிழலதாய மண்முழு தினையும் தம் அரசன் குடைக்கீழே காண்பர், எ-று.

1. கொற்றக் கொடை முதல் - வெற்றியையுடைய வெண் கொற்றக் குடை முதல்.

அலகு[2] கதிர்; அஃது ஈண்டு ஆகுபெயராய் நெல்மேல தாயிற்று. உடையஎன்பது குறைந்துநின்றது.[3] நீழல் போறலின், நீழல் எனப்பட்டது[4] நீழலவர் என்றது இரப்போர்க்கெல்லாம் ஈதல் நோக்கி. ஒற்றுமை பற்றித் தம் குடை என்றார்.[5] குடைநீழல் என்பதூஉம் ஆகுபெயர்[6] 'ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே''[7]என்றதனால் தம்அரசனுக்குக் கொற்றம் பெருக்கி மண்முழுதும்அவனதாகக் கண்டிருப்பர் என்றதாம்; ''இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்[8]'' என்றார் பிறரும்.

***காரி :*** முன்னது நீழல். நிழலதாய மண்; பின்னது நீழல், தண்ணளி: அது செங்கோல்போல. நீழல் போறலின் நீழல் எனப்பட்டது.

அலகு - நெற்கதிர்: தம்குடை - தம் அரசன்குடை.

***ஊ)கவிராசர்.:*** உழுகிற தொழிலாலே நெல்லையுடையோர், பலவேந்தர் குடை நிழலதாய பூமியெல்லாம். தங்கள் ராசாவின் குடையின் கீழே காண்பர், எ-று.

உழுது பயிரிடுகிறதினாலே தங்கள் ராசாவுக்குச் செல்வம் பெருகி உலகெல்லாம் இவனதாகக் காண்பர், எ-ம்.

இரக்கிறவர்களுக்கு உறவும், பூமியாளுகிறவனுக்குச் செல்வமும் உழவரே.

***ஏ) பழைய2.:*** பல வேந்தர் குடை நிழலும்தம் மன்னன் குடைநிழலிலே தங்கி நிற்பக் காண்பர், அலகாகிய நெற்கதிர் விளைவிக்கும் தொழிலுடையர்.

அலகு - நெற்கதிர். நீழல் - தொழில். பல குடை நீழலுந் தங்கொடைக் கீழ்க் காண்பர் என்றும் பாடம்; அதற்குப் பொருள் தாம் கொடுக்கும் கொடைக்கை நீழலிற் காண்பர்.

---

2. அலகு - செந்நெற்கதிர் அலகு; அலகு என்னும் முதற்பெயர் அதில் ஒட்டியிருக் கின்ற நெல்லாகிய சினையைக் காட்டுதலால் இது முதலாகுபெயராம்.
3. 'உடைய நீழலவர்' என்னும் குறிப்புப் பெயரெச்சத் தொடர் ஈறுகெட்டு 'உடைநீழல்' என்று நின்றது.
4. உழவனிடத்துள்ள தண்ணளி இரவலனுக்கு நீழலாயிருத்தலின் நிழல் என்றே கூறினார். நீழல் போன்ற தண்ணளியை நிழல் என்று கூறியது உவம ஆகுபெயர்.
5. அரசர்க்கும் உழுவார்க்கும் உள்ள ஒற்றுமை பற்றி அரசரது குடையைத் தங்குடைஎன்று கூறினார்.
6. குடைநீழல் என்னும் தானியின் பெயர் (இடத்து நிகழ்பொருளின் பெயர்) அதற்குத் தானமாகிய நிலத்தை யுணர்த்துதலால் தானியாகு பெயராம்.
7. புறம்., 35
8. சிலம்பு நாடுகாண், 149

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்., பரிப்,*** இருவரும் 'குடை யல நீழலவர் எனப் பிரித்து' 'குடையல்லாத நீழல் பைங்கூழ் நீழல்' எனப்பொருள் காண்பர். 'அலகுடை நீழலான்' என்பர் ***பரிதி.***

***காளிங்கர்*** 'தங்கொடைக்கீழ்க் காண்பர்' எனக் கூட்டித் 'தாம் கொடுக்கும் கொடைவழி வருதலை நாடோறும் கொண்டு ஒழுகுவர்' என்பர்; 'அலகு-கலப்பை' என்பர்.

***பரிமேல்.*** 'அலகு-கதிர். ஆகுபெயராய் நென்மேலதாய் அழகு உடை நீழலவர்-நெல்லினையுடைய தண்ணளிமிக்கார்' 'நீழல்-தண்ணளி' என்பர். இவரே 'உழவன் தள்ளா விளைவுடன் தக்கானுமாயிருத்தலின் அரசன் குடையையும் ஒற்றுமை பற்றித்தன்குடை என்றார்' என்பர். ***கவிராசர், பழைய உரையாசிரியர்*** இவர்கள் கருத்தும் இதுவே.

***வரத.*** 'தங்குடைக்கீழ்க்காண்பர் - தங்கள் தொழிலை, எதிர்பார்க்கச் செய்வர்'. 'குடை' யென்பதற்குத்தொழில் நேர் பொருளாகாமையின் விளக்கம் பல தருவர்.

***இராம.***'தானியக் கதிரை யாளுகின்ற உழவர்கள், ஏனைய செல்வங்களை யாளும் ஏனையோரையும் தமது நீழலை நாடிவரச் செய்வர்'என்பர். மேலும் ***பரிமேலழகரை*** மறுப்பர்.

இங்ஙனம் இவர்கள் கூறும் உரைப்போக்கை மாற்றுவன 'அலகு', நீ'ழல்' என்ற சொற்களே யாம் இவற்றுள் ***பரிமேலழகர்*** உரை சிறப்பானது என்பதை அவர் காட்டும் மேற்கோள்களே அரண் செய்கின்றன.

***தேவநேயரும்*** இப்பொருளே கொள்வர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும் :***

இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் - சிலம்பு.,10:149-50

சீரைத் தேடின் ஏரைத் தேடு - கொன்றை.,29

மேழிச் செல்வம் கோழை படாது - கொன்றை.,77

குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளு மிவைநான்கும் படைத்துடைய ரானாலென
மடைவாளை வரும் பொன்னிவளநாடர் தங்களலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே
- ஏரெழுபது

## 104.5. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
## கைசெய்தூண் மாலை யவர். (1035)

*உரைப்பகுதி :*

***அ) மணக்.:*** பிறரை இரவார்: தம்மை இரப்பார்க்குக் கரத்தல்[1] இன்றி யமையாதொன்றாயினும் ஈவர்: கையாலே உழவுத் தொழிலைச் செய்து உண்ணும் இயல்பினை யுடையார், எ-று.

***ஆ) பரிதி.:*** தாங்கள் ஓரிடத்திலும் இரவார் இரப்பவர்க்கும் கரவாது கொடுப்பார்: ஆதலால் உழவே நன்று, எ-று.

***இ) பரிப்.:*** பிறரை இரவார்: தம்மை, இரப்பார்க்குக் கரத்தல், இன்றியமையாது ஒன்று ஆயினும் ஈவர்; கையினாலே உழவுத் தொழிலைச் செய்து உண்ணும் இயல்பினை உடையார், எ-று.

உழவினால் பயன் கூறுவார் முற்பட இல்லறம் செய்வது இவர்கண்ணது என்று கூறினார்.

***ஈ) காளி.:*** பிறர்மாட்டுத் தாம் ஒன்று இரப்பதும் செய்யார்: தம்மாட்டு இரப்போர்க்கு உள்ளது ஒன்று ஈவதும் செய்வர்: யாவர்? மற்று அவர் தமது கைக்கொண்டு இனிய தொழில் செய்யும் இடத்தும் கரவார்: தம்மாட்டு இரப்போர்க்கு ஒன்று ஈயும் இடத்தும் கரவார்: மற்று இவ்வாழ்வினைத் தமக்கு இயல்பாக உடையவர், எ-று.

***உ) பரிமேல்.:*** தம் கையால் உழுது உண்டலை இயல்பாக உடையார் பிறரைத் தாம் இரவார்: தம்மை இரப்பார்க்கு அவர்வேண்டியது ஒன்றனைக் கரவாது கொடுப்பர், எ-று.

---

1. கரத்தல் - மறைத்தல்.

செய்து என்பதற்கு உழுதலை என வருவிக்க[2]. கைசெய்தூண் மாலையவர்[3] என்பது ஒருஞான்றும் அழிவில்லாத செல்வமுடையார் என்னும் ஏதுவை உட்கொண்டு நின்றது.

*காரி.*: மாலை-இயல்பு

***ஊ) கவிராசர்.***: தன் கையால உழுது பயிரிட்டு உண்கிறவர் பிறரைத் தாம் இரவார். தங்களைக் கேட்டு இரக்கிறவனுக்கு அவர் வேண்டினதை யொளியாமற் கொடுப்பார், எ-று.

உழுகிறவர்கள் செல்வம் பழுதுபடாது, எ-ம்.

***எ) பழைய2.***: தம் கையால் உழுதுண்டலை இயல்பாக உடையார், பிறரைத் தாம், இரவார்: தம்மை இரப்பார்க்கு ஒன்றினைக் கரவாது கொடுப்பர், எ-று.

## *ஐ) தொகுப்பும் குறிப்பும் :*

***காளிங்கர்*** பாடம் 'இரப்பார்க்கொன்றீவர் கரவார் என்பது. இதனை அவர் உரையான் உணருக.

***மு.கோ.*** 'கரவாது கை செய்து' - தொழின் மக்களும் வஞ்சனையின்றி மடியும், ஏமாற்றமும், குறைய உழைத்தலும் இன்றி உழைத்து', ***வள்ளுவர்*** தொழில் பற்றிய கொள்கையும் இது' என்பர். இதனை முதற்கண் சிந்தித்தவர் ***காளிங்கர்.*** 'கரவாது கை செய்து", கரவாது ஊண்மாலையவர்: இரவாது இரப்பார்க்கொன்றீவர்' என எல்லாவிடத்தும் கூட்டிப் பொருள் நயங்கொள்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***கைசெய்தூண் மாலையவர் :***

பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிற லூர்களும் -சிலம்பு.10:148-150

2. செய்து என்பது பொதுவினையாதலின் அதிகாரம் நோக்கி உழுதலைச் செய்து என வருவிக்கப்பட்டது.
3. ஏதுவிகர்ப்ப விசேடணமானது ஏதுவை உட்கொண்டுள்ள அடைமொழியாம். அவ்வடைமொழியால் விசேடிக்கப்பட்ட கைசெய்தூண் மாலையவர் என்பது என்றும் அழிவற்ற செல்வமுடையவர் என்னும் ஏதுவைக் குறிப்பது அதனைக் கருதி நிற்கும் தொடர் இது.

வம்மின் புலவீர் நும்மெய் வருத்தக் கைசெய் துண்மின்
- திருவாய்., 3-9:6

*ஈவர் கரவாது :*

இரப்போர்க்குக் கரப்பிலார் - சம்பந்தர், புகலி.,8

கைவினை கரவேல் - ஆத்தி., 40

## ஒ) மேற்கோள்பகுதி :

*இளம்.:* இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்: இருமூன்றின் வேளாளர்க்குரிய விருந்தோம்பல் கூறியதற்கு மேற்கோள்.
- தொல்.பொருள்., 74

## 104.6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
## விட்டேமென் பார்க்கு நிலை. (1036)

*உரைப்பகுதி :*

*அ) மணக்.:* உழவையுடையவர், அத்தொழிலைச் செய்யாது கைம் மடங்குவராயின், யாதொரு பொருளின்கண்ணும் விரும்புவதனையும் விட்டோம் என்பார்க்கு அந்நிலையின்கண் நிற்றல் இல்லை, எ-று.

எனவே, துறவறத்தின்கண் நிற்பாரை நிறுத்துதல் உழவர் கண்ணது என்றது.

*ஆ) பரிதி.:* உழவினால் உழவுத்தொழில் விட்டாராகில் ஆசையை விட்டோம் என்பார்க்கு நிலை இல்லை, எ-று.

*இ) பரிப். :* உழவை உடையவர்கள் அத் தொழிலைச் செய்யாது கைமடங்குவர் ஆயின் யாது ஒரு பொருளின்கண்ணும் விரும்புவதனையும் விட்டோம் என்பார்க்கு அந்நிலையின்கண் நிற்றல் இல்லை, எ-று.

எனவே துறவு அறத்தின் நிற்பாரை நிறுத்துதல் உழுவார் கண்ணது என்றது. விழைவது - ஆசை.

*ஈ) காளி.:* உழவு தொழிலினார் தமது ஒழுக்கம் ஆகிய குடிமை செய்வார் ஈண்டு உரைத்த பெரியோரைப் போலத் தாமும் இவ்வொழுக்கம் தணிவர்[1] ஆயின், இப்பெரியோர்க்கும் அந்நிலைமை இல்லையாம்; என்பதனால் அவர்க்கும் அவ்வுடல் முடியுமளவும் உண்ணாமை நிலைபெறுதல் அரிது, எ-று.

கை என்பது ஒழுக்கம்; விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும் என்றது விரும்பத் தகுவது விட்டொழிந்தோம் என்போர்களுக்கும் என்றது.

*உ) பரிமேல்.:* உழுதலை உடையார்கை அதனைச் செய்யாது மடங்கு மாயின், யாவரும் விழையும் உணவும் யாம் துறந்தோம் என்பார்க்கு அவ்வறத்தின்கண் நிற்றலும் உளவாகா, எ-று.

உம்மை இறுதிக்கண்ணும் வந்து இயைந்தது[2]. உணவின்மையால், தாம் உண்டலும் இல்லறம் செய்தலும் யாவர்க்கும் இல்லையாயின், அவர் உறுப்புமாத்திரமாய கைவாளா இருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடு என்னும் பயன்கள் நிகழா என்பதாம். ஒன்றனை மனத்தால் விழைதலும் ஒழிந்தேமென்பார்க்கு என உரைப்பாரும் உளர்.[3] இவை ஐந்து பாட்டானும் அதனைச் செய்வாரது சிறப்புக் கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்.:* உழுகிறவர்கள் கை மடங்கி அந்தத் தொழிலைச் செய் யாவிட்டால், எல்லோரும் வேண்டி உண்ணத்தக்க உணவும் துறந்தவர்களுக்கு அந்தத் துறவறத்திலே நிற்கிறது மில்லாமற் போம், எ-று.

உழுது பயிரிடுவது இல்லாவிட்டால், உலகத்திலே இம்மை மறுமை வீடென்கிற பயன்கள் நிகழா, எ-ம்.

*எ) பழைய2.:* உழுது வாழாமற் கை மடங்குமாயின் யாவரும் அருந்து வன பொருந்துவன எல்லாம் விட்டுத் துறந்தோம் என்னும் தவ முடையார்க்கும் நிலையில்லை, எ-று.

ஒன்றினை மனத்தால் விழைதலும் ஒழிந்தவர் என்றும் ஆம்.

1. தணிவர் - நீக்குவர்
2. 'விழைவதூஉம்' என்னும் உம்மை நிலை என்பதன் கண்ணும் வந்து பொருந்தியது.
3. இவ்வாறு உரைப்பவர் மணக்குடவர்

ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'கைமடங்கின்'*** 'உழவுத்தொழிலைச் செய்யாது கைமடங்கு வராயின்' 'உழவர் தந்தொழிலைச் செய்யாது விட்டாராயின்' என ***மணக்., பரிப்., பரிதி.,*** முதலியோர் எழுதுவர்.

***காளிங்கர்*** 'ஒழுக்கந்தணிந்தால்' என்பர்; உழவினர்ஒழுக்கம் இது என்பதை விளக்க 'ஒழுக்கமாகிய குடிமை செய்யாராயின்' என்பர். 'உழவர் குடிமை செய்தலை விடுவாராயின் விழைவதும் விட்டேம் என்ற பெரியோர்க்கும் அந்நிலையே இல்லையாம் என்பதே காட்டும் கருத்து.

***பரிமேலழகர் 'விழைவதும் விட்டோம்'*** 'அனைவரும் விழையும் உணவையும் விட்டேம் என்பார்க்கும்' என்பர். ***தேவநேயர்*** 'உணவும் யாம் துறந்தேம் என்பார்க்கு உணவின்மையால் யாதொரு கேடுமிராது ஆதலின் ***பரிமேலழகர்*** உரை தன் முரணாம்.' 'எதனையும் விரும்புதலையும் விட்டேம்' என்ற ***மணக்குடவர்*** உரையும் அங்ஙனமே. தன்முரணாயிருத்தலால் பொருந்தாவுரைகள்என மறுப்பர்.

'விழைவதும் விட்டேம் என்பார்க்கு' என்ற தொடரில் 'என்பார்க்கு' என்பதில் பொருட்சிறப்பு இருப்பதால் 'உணவையும் துறந்தேம்' என்றது 'உண்ணா நோன்பிகளைக்' குறிப்பதன்று, 'உணவையும் விரும்பேம்' என்று சொல்கிறவர்கள். உழவினர் கைம்மடங்கின் அந்நிலையில் நிற்கமுடியாது' எனப் பற்றறுதியின் எல்லை குறித்ததேயாம்; நோன்பிகளையன்று என்க.

***இராம.*** 'விழைவதூஉம் விடுதல் - அனுபவிப்பதை விட்டதுமல்லாமல். ஆசைப்படுவதையும் விட்டோம் எனல், அவர்கள் தந்நிலையைக் காக்க உழவினார் உழைப்பு வேண்டும் என்பது' என்பர்.

இவ்வுரைகளுள் ஒன்றினொன்று சிறந்து விளங்குவதாயினும் 'உழவன் கைம்மடங்கினால், பற்றற்றாருக்கும் நிலை இல்லை' என்ற எளிமையான கருத்தைத் தரும் உரை சிறந்தது. உரை மாற்றங்களும் தெளிவின்மையும் சில சொற்களை ஏற்ற பெற்றி வருவித்து விளக்குவதாலேயே விளைந்தன ஆகும்.

## 104.7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும் வேண்டாது சாலப் படும். (1037)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** 'வேண்டாமல் சான்று' - பாடம்.

ஒரு பலப்புழுதியைக் கஃசாக உணக்கு[1]வனாயின், ஒரு கையாற் பிடித்த எருவும் இடவேண்டாமல் அமைந்து விளையும். எ-று.

மேற்கூறிய உழவு செய்யுந்திறன் கூறுவார் முற்படப் புழுதி உணக்க வேண்டும் என்றார்.

***ஆ) பரிதி.:*** கையில் அரைக்கழஞ்சுபொடி உதிர உழுவானாகில் பிடி எருவும் வேண்டாம் தானே விளையும். எ-று.

***இ) பரிப்.:*** ஒரு பலப் புழுதியைக் கைசா உணக்குவன் ஆயின் ஒரு கையால் பிடித்தஎருவும் இடாமல் அமைவுபடும், எ-று.

மேல் கூறிய உழவு செய்யும் திறன் கூறுவார் முற்படப்புழுதி உணக்க வேண்டும் என்றார்.

***ஈ) காளி.:*** 'கைசா' -பாடம்.

முன்னம் தான் நீர் பதம் கொண்டு உழுத ஈரப் புழுதி எண் கழஞ்சும்[2] இருகழஞ்சாகக் கீழ்ப்புழுதி கிளர்ந்து[3] மேற்பட்டு உணங்குமாறு பின்னும் பின்னும் பெயர்த்து இனிது உணக்கப்பெறின், பிடித்து ஒரு பிடி எருவும் கூட வேண்டாவாறு அங்ஙனம் உழுது காய்ந்த புழுதிச் சுவடு தானே தன் வேர் ஊறு சுவையாக மிகவும் விளையும், எ-று.

தொடி என்பது ஒருபலம் என்றது. கஃசா என்பது கால் பலமாக என்றது. சாலப்படும் என்பது மிகவும் விளையும் என்றது.

***உ) பரிமேல்.:*** ஒரு நிலத்தினை உழுவதன் ஒருபலப்புழுதி கஃசாம் வண்ணம் அதனைக் காயவிடுவனாயின், அதன் கண் செய்த பயிர் ஒரு பிடியின்கண் அடங்கிய எருவும் இடவேண்டாமல் பணைத்து[4] விளையும், எ-று.

1. உணக்க - உலர்த்த
2. கழஞ்சு - நிறுத்தலளவைப்பெயர்
3. கிளர்ந்து - கிளறிவிட்டு
4. பணைத்து - செழித்து

பிடித்து - பிடியின்கண்ணது. பிடித்த என்பதன் விகாரம் என்பாரும் உளர். வேண்டாமல், சான்று என்பன திரிந்து நின்றன[5]

*காரி.:* பிடித்தது என்பதன் விகாரம் ஆம்.

***ஊ) கவிராசர்:*** ஒரு நிலத்தை உழுகிறவன் ஒருபலப்புழுதி மண் கஃசாகத் தக்கதாகக் காயவிட்டால், அதிலே இடுகிற பயிருக்கு ஒரு பிடி எருவும் போடாமல் தானே நன்றாய்ப் பணைத்து விளையும், எ-று.

***எ) பழைய2.:*** 'வேண்டாது சால்பு' - பாடம்.

ஒருபலம் புழுதி காற்பலமாக உழுது காயப்போடுவானாகில் ஒரு பிடிஎருவும் போடாமல் நன்றாக நிறைய விளையும், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'தொடி'*** ; ***'கஃசு'*** என்ற நிறுத்தலளவைப் பெயர்களின் பொருள் மாறியுள்ளன.

***'தொடி'*** - ஒரு பலம்' ***மணக்.;*** 'அரைக்கழஞ்சு' ***பரிதி.;*** "எண்கழஞ்சு ***காளி.;*** 'எண்கழஞ்சு கொண்டது ஒரு பலம்' இவர் கருத்து. 'ஒருபலம்' ***பரிமேல்., கவிராசர், பழையஉரைகள்.*** 'மூன்றுபலம் எடை கொண்டது' ***வரத.*** இதனால் தொடி', 'கஃசு' என்பன காலந்தோறும் பல்வேறு நிறையளவைக் காட்டினவாகும். ***வள்ளுவர்*** காலத்தது எது என்பது உணருமாறு இல்லை.

***'கஃசு'*** - 'ஒருகழஞ்சு' என்பர் ***காளி.;*** 'நாற்பலம்' ***பரிமேல். பழைய;*** 'ஒருபலம்' ***வரத.;*** இது நிறுத்தலளவைப் பெயராக இருந்தும் எங்கும் ஓரளவினது என்பதை அறிந்தும் இங்ஙனம் மாறுபாடுகின்றமை காண்க. எங்ஙனமாயினும் 'தொடி' யைக் காட்டிலும் 'கஃசு' நிறையிற் குறைந்தது என்பதை ***வள்ளுவரே*** காட்டிவிட்டனர்.

***பரிதியுரை*** 'உழவன் உழுது முடித்தபின்னர் அவன் கையில் ஒட்டியசேறு உலர்ந்து ஓரரைக்கழஞ்சு பொடியாவது உதிர வேண்டும்' என்பர். இது ***கவிராசர்*** கண்ட உரையேயன்றி மரபின் வருவதன்று' என்க. இவர் 'தொடி' என்பதற்கு 'வளையல்' எனப்பொருள்கண்டு ஆடவர்களும் கைவளையணிதல் அக்காலவழக்காதலின், 'தானிப் பெயரான தொடியைக் கை எனத் தானத்திற்கு ஆக்கி, இங்ஙனம் உரைத்தனராதல் வேண்டும்.

5. வேண்டாமல் என்பது வேண்டாது என்பதன் திரிபு எனவும், சாலப்படும் என்பது சான்றுபடும் என்பதன் திரிபு எனவும் கூறுவர்.

உரைபிழையன்று; ஆனால் மரபுவழி வாராததேயாம். இக்குறள் புழுதியோர் உழும் வகை கூறுவது.

104.8. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. (1038)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: 'நன்றாம்' - பாடம்.

உழுகின்றதினும் நன்றாம் எருவிடுதல்; களைகட்ட பின்பு நீர் விடுதலினும் நன்றாம் அதனைஅழியாமறகாத்தல். எ-று.

இது பலகால் உழவேண்டும் என்பதூஉம், எருவிட வேண்டும் என்பதூஉம், களைபறிக்க வேண்டும் என்பதூஉம், பசுப்புகுதாமல் காக்க வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

***ஆ) பரிதி.***: உழவினும் எருக்கட்டு நன்று; அதனினும் தண்ணீர் கட்டுதல் நன்று; அதனினும் வேலி இடுதல் நன்று, எ-று.

***இ) பரிப்.***: உழுகின்றதனினும் நன்று ஆம் எரு இடுதல்: களை கட்ட பின்பு நீர் விடுதலினும் நன்று ஆம் அழியாமல் காத்தல், எ-று.

இது பல கால் உழவேண்டும் என்பதூஉம், எரு இட வேண்டும் என்பதூஉம் களைபறிக்க வேண்டும் என்பதூஉம், பசுப் புகுதாமல் காக்க வேண்டும் என்பதூஉம் கூறிற்று.

***ஈ) காளி.***: கூறிய புழுதி உழவாயினும் சேற்று உழவாயினும் உழுசால்[1] எப்பற்றும் ஒழியாமல் செல்லும்ஏர் மிகுதியினும் மிக நன்று: மற்று அதனினும் நன்று அந்த நிலத்திற்கு ஏற்ற எருக் கொணர்ந்து இடுதல்; இனி, அதனினும் நன்று ஆண்டு எழு பைங்கூழ் அருகு[2] எழு களை கட்டல்; அங்ஙனம் களை தவிர் நன்மையே அன்றிப்பின்னும் சால நன்று நீர் முறை பிழையாமை நீர்பெய்தல்: மற்று அதனினும் சால நன்று அங்ஙனம் சிறந்த பயிர் பயன் பழுது படாமல் முன்னுறக் கொண்டே கடிந்து காப்பது ஓர் காப்பு, எ-று.

***உ) பரிமேல்.***: அப்பயிர்க்கு அவ்வுழுதலினும் எருப்பெய்தல் நன்று; இவ்விரண்டும் செய்து களைக்கட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால் யாத்தலினும்[3] நன்று, எ-று.

1. உழுசால் - கலப்பை செல்லும் வழி
2. அருகு - பக்கத்தில்
3. நீர்கால் யாத்தல் - நீரைக் கால்வாயிலிருந்து பாயச் செய்தல்.

ஏர்-ஆகுபெயர்[4]. காத்தல் பட்டி[5] முதலிய[6]வற்றான் அழிவெய்தாமல் காத்தல், உழுதல், எருப்பெய்தல், களை கட்டல், நீர்கால்யாத்தல், காத்தல் என்று இம்முறையவாய இவ்வைந்தும் வேண்டும் என்பதாம்.

***காரி.***: கட்டபின் - களைகட்டல், "களை கட்டதனோடு நேர்"[7] என்பதும் காண்க.

***ஊ) கவிராசர்.***: பயிருக்கு உழுகிறதிலும் எருப்போடுகிறது நல்லது; உழுது எருப்போட்டுப் பயிரிட்டபிறகு, களைபறித்து வேலிகட்டிக் காக்கிறது தண்ணீர் நிறைக்கிறதிலும் நல்லது, எ-று.

பயிரிடுகிறவனுக்கு உழுதல், எருப் போடுதல், களைபறித்தல் தண்ணீகட்டல், மாடு மேயாமல் காத்தல் என்று சொல்லப்பட்ட ஐந்து வகையுஞ் செய்ய வேண்டும்.

***ஏ) பழைய2.***: 'கட்டிப்பின்' பாடம்.

உழுதலே நன்று; அதனினும்நன்று எருவிடுதல்; அதனினும் நன்று விதைத்து முளைத்த பின்பு களை வெட்டுதல்; அதனினும் நன்று நீர் விடுதல்; அதனினும் நன்று செவற்காத்தல்[8] எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'நீர்பாய்ச்சுதலைக்காட்டிலும் ஆடுமாடு அழிக்காமல் பாது காப்பது' என்பர் ***மணக்குடவர்.*** இவர் கண்டபாடம் 'நன்றாம்' என்பது போலும். ***பரிதியும்*** இக்கருத்தினராக 'வேலிகட்டுதல் நன்று' என்பர். ***காளிங்கர்*** 'ஏரைப் பகுதியாகக் கொண்டுஉழுவதினும் புழுதி யுழவாக இருந்தாலும், சேற்றுழவாக இருந்தாலும் கொழு எல்லாப் பக்கமும் செல்ல உழுவது நல்லது; அதனினும் நன்று நிலத்திற்கேற்ற எருவிடுதல்; அதனினும் நல்லது பயிர்களின் நடுவே முளைக்கும் களைகளைப் பிடுங்குதல்; அதனினும் நன்று விளைவு பழுதுபடாமல் காப்பது' என்பர். இவர்தரும் விளக்கம் உழுதொழிற் பழக்கம் இவர்க்கு உள்ளதைப் புலப்படுத்தும். ***பரிமேலழகர்*** 'உழவினும் எருவிடுதலும், களை பிடுங்கிய பின் நீர்பாய்ச்சுதலும் பயிரைக் காத்தலும் நன்று' என்பர்.

4. ஏர் என்னும் கருவியின் பெயர் அதன் காரியமாகிய உழுதலை உணர்த்துதலால் கருவியாகு பெயர்.
5. பட்டி - ஆடு, மாடு
6. முதலிய என்றமையின் பறவை, பூச்சி முதலியனவும் அடங்கும்.
7. குறள்., 550
8. செவற்காத்தல் - தழைச்சத்து குறைவாயின் பயிர் சிவந்துபோம் ஆதலின் பயிர் சிவக்காது காத்தல் என்பது பொருள்.

***காளிங்கருக்குத்*** 'தொடிப்புழுதி கஃசாவுணக்கின்' என்ற கருத்தே மனத்தில் நிலவ, அடுத்துவரும் இக்குறட்கும் அக்கருத்தைத் தொடர்பு படுத்த எண்ணிக் கூறிய 'புழுதியுணவாயினும்' என அதனை அனுவதித்ததோடன்றி 'உழுசால் எப்பற்றும் ஒழியாமற் செல்லப் பலகால் உழவேண்டும்' என்றும் பொருள் விளக்கம் தந்தனர்.

முற்குறளில் 'நன்றாக உழுக; புழுதியாம் படியுழுக, அங்ஙனம் உழின் பிடிஎருவும் வேண்டாம்' என்றவர், இக்குறளில் 'ஏர் உழுதலினும் எருவிடுதல் நன்று' என்பராயின் முன்னொடு பின்கருத்து முரணாதல் அறியப்படுமாலோ எனின், அறியப்படாது, என்ன உழுதாலும் நாழிமுகவாது நாணாழியாகலின் நிலத்தில் அப்போதுள்ள ஊட்டச்சத்தையே நிலம் உதவும், மேலும் சத்து தரின் 'தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளையும்' ஆதலின், அது கருதி, 'எருவிடுதல் நன்று' என்று கூறிய ***வள்ளுவர்*** மனக்கருத்தை உற்று நோக்கி, 'நிலத்திற்கு ஏற்ற எருவை'என்ற ***காளிங்கர்*** உரை நயம் மிக உயர்ந்தது என்க.

எருவிடுதற்குப் பின் களைகட்டலை யிட்ட ஆசிரியர் உள்ளமே, நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் ஆங்கே பொசிதல்போல நிலவளத்திற்கு ஏற்றவகையில் பயிருக்கிட்ட எருவின் சத்தை, களை உண்டு செழிக்கும்; பயிர் வளர்ச்சியையும் கெடுக்குமாதலின் களைகட்டல் இன்றியமையாதது என்பார். கட்டபின் என உடம்பொடுபுணர்த்துக் களை கட்டுக; அதன் பின் நீர்சால் யாக்க; அங்ஙனம் யாத்தலின் எருசத்தும் நிலவூட்டமுங்கலந்த அந்நீரை மோட்டை போகாமற் காத்தல் நன்று என்றும், அப்பயிரைக் காத்தல் நன்று என்றும் இருபாற் பொருளும் இயையக் கூறினார் எனல் தகும்.

நீரினும் அதன் காப்பு நன்று என்புழி "இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப் பெயர்க்கிளவியும் வினைக் கொருங்கியலுங் காலந்தோன்றின் சுட்டுப்பெயர்க் கிளவி இயற்பெயர் வழியாதலை" ***தொல்.*** சொல். சேனா. நூற்பா 38 கொண்டு துணியலாம். அது என்னும் சுட்டுப்பெயர் முன் கூறப்பட்டதனைச் சுட்டுதலே மரபு. 'நீரினுநன்று அதன் காப்பு' எனின் அது என்னும் சுட்டுப் பெயர் இக்குறளிற் கூறப்பெறாத பயிரைக் காப்பது நன்று என்ற பொருளைத்தருவது யாங்ஙனம்? இட்ட எரு பயிருக்கே பயன்படுதல் வேண்டிக் களைகட்டுக என்றவர், அதன்பின் இட்ட எருகரைந்து பயிருக்கே பயன்பட நீரினைப் பாய்ச்சுக. அதனைக் காக்க எனின், எருக்கரைந்த நீர் இடுமோட்டை நண்டுவளை மோட்டை இவைகளின் வழியாகப் புறம் பொசியாது காக்க என்ற பொருளே சிறக்கும் எனலாம். இயைவன ஏற்க.

ஓ) ஒப்புமைப்பகுதி.:

*நீரினும் நன்றதன் காப்பு :*

பைங் கூழ் விளைவின்கண் போற்றான் உழவும் - திரிகடுகம்.,59

*முற்றும் :*

ஏரினும் சிறப்பெற்று எருப் பெய்த பின்
சீரிதென்று களையடச் செப்பினார்
நீரினும் சிறப்பாம் நெடுங்காவ லென்று
ஆரினும் சிறப்பெய்த அளிப்பவர். - பேரூர்ப்புராணம்,
நாட்டு., 50

## 104.9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்(து) இல்லாளின் ஊடி விடும். (1039)

உரைப்பகுதி:

*அ) மணக்.*: நிலத்திற்கு உரியவன் நாடோறும் அந்நிலத்தின்பால் செல்லாது மனையகத் திருப்பானாயின், அது தான் செல்லாமை யால் புலந்த[1] இல்லாளைப் போலப் புலந்துவிடும், எ-று.

*ஆ) பரிதி.*: வயல் தலைக்குச் செல்லாமல் இருப்பின் வயல் என்னும் பெண் வாடும்; குலமகள் தன் கணவனைக் காணாமல் வாடுமாப் போல, எ-று.

*இ) பரிப்.*: நிலத்திற்கு உரியவன் நாள்தோறும் அந்நிலத்தின்பால் செல்லாது மனையகத்து இருப்பான் ஆயின், அது தான் செல்லாமையினால் புலந்த இல்லாளைப் போலப் புலர்ந்து விடும். எ-று.

இது நாள்தோறும் சென்று பார்க்க வேண்டும் என்ப தூஉம், பாராக்கால் பயன் குன்றும் என்பதூஉம் கூறிற்று. இவை மூன்றினாலும் உழும் திறன் கூறிற்று.

*ஈ) காளி.*: 'நிலமடந்தை புல்லாள் புரளவிடும்' பாடம்.

1. புலந்த - ஊடிய

தன் நிலக் கிழத்தியைப் பயிர் முகத்துத் தான் சென்று பல நாளும் விழிஓட்டிப் பாரானாகில், அந்நில மடந்தை அவனை என்றும் மேவாளாகித் தனக்கு அலங்காரம் ஆகிய பயிர்க்காலம் அழிந்து தன்னோடு பொருந்தி வாழாளாகிப் புலந்த இவன் வாழ்க்கையைப் புரள விடும், எ-று.

நிலம் புலந்து இல்லாளை ஊடிவிடும் என்பாரும் உளர்.[2] கற்புடை மகளிரை ஊடி விடும் என்பது பொருள் அல்ல. கிழவன் என்றது அந்நிலத்துக்கு உரியன் என்றது.

இனி மற்று இங்ஙனம் உழுது குடிசெய்து இனிது வாழ்வார்க்கும் அதனை அவ்வாறு இயற்றாது இகழ்ந்து இருப்பின், இல்வாழ்க்கை புரளும் என்பதனால் வறுமை வந்து எய்தும் குறிப்பு உணர்த்தியமையான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

***உ) பரிமேல்.***: அந்நிலத்திற்கு உரியவன் அதன்கண் நாடோறும் சென்று பார்த்து அடுத்தன செய்யாது மடிந்திருக்குமாயின், அஃது அவன் இல்லாள்போலத் தன்னுள்ளே வெறுத்துப்பின் அவனோடு ஊடிவிடும், எ-று.

செல்லுதல் ஆகுபெயர்[3]. பிறரை ஏவியிராது தானே சேறல் வேண்டும் என்பது போதரக் கிழவன் என்றார். தன்கட்சென்று[4] வேண்டுவன செய்யாது வேறிடத்திலிருந்த வழி மனையாள் ஊடுமாறுபோல[5] என்றது அவன் போகம் இழத்தல் நோக்கி. இவை மூன்று பாட்டானும் அதுசெய்யுமாறு கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்.***:அந்நிலத்தையுடையவன் நாள் தோறும் போய்ப் பார்த்து அந்தப்பயிருக்குச் செய்யவேண்டியது செய்யாமல் மடிந் திருந்தால், அந்தப்பயிர், அவன் பெண்சாதியைப் போலே, தன்னுள்ளே வெறுத்துக்கொண்டு அவனுடனே பிணங்கிப் போம், எ-று.

பெண் சாதியைச் சேராமல் விட்டுப் பிரிந்திருந்தால், அவள் வெறுத்துப் பிணங்கி வாடி இருக்கிறாப் போலே, பயிரும் நாள் தோறும் பாராவிட்டால் வாடி இளைத்து விளையாமற்போம், எ-ம்.

2. இங்ஙனம் உரைப்பர் யார் என்று தெரியவில்லை.
3. செல்லுதல் என்னும் கருவியின் பெயர் அதன் காரியமாகிய பார்த்து அடுத்தன செய்தலை உணர்த்துதலால் கருவியாகுபெயர்.
4. 'அதன்கட் சென்று' என்று பாடம் உண்டு.
5. 'இல்லாளூடுமாறு போல' என்றும் பாடமுண்டு.

*ஏ) பழைய2.*: பயிர்செய்யும் நிலத்தின்கட் செல்லாமல், பயிர்த் தலைவன் தான் இருந்து, செய்வாரைக் கண்டு செய்விப்பானாகில், நிலமாகிய குலமகள் தன் மனையாளைப் போலத் தன்னுள்ளே வெறுத்து அவனுடனே பிணங்கி விடும், எ-று.

கிழவனொடு இல்லாளைப் போல ஊடி விடுதல். கிழவன்; பயிர்த் தலைவன். மனையாள் தலைவன் பிரியிற் பிணங்குவது போல நிலம் மிகுதியாக விளையாதென்க. 'தானேறிப் பாரா உழவும்' என்பது காண்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'இல்லாளின் ஊடிவிடும்'*** எனப்பாடங் கொண்டவர்கள், ***மணக்., பரிதி., காளி., பரிமேல்.*** முதலியோரும், ***பரிமேலழகர்*** வழிவரும் பின்னோரும்.

***'இல்லாளை ஊடிவிடும்'*** என்று பாடம் கொள்வார் யார் என்று தெரியவில்லை. ***காளிங்கர்*** உரையால் அவர் கொண்ட பாடம் 'புல்லாள் புரளவிடல் புலந்து விடும்' என்பது என்று அறியப்பெறும். புலத்தல்- வாடுதல், பொலிவு அழிதல் இரண்டற்கும் பெயராதலின் இல்லாள் பொலிவழிந்து போகந்தராமை போல நிலமும் பயிர்வாடி விளைச்ச லாகிய போகத்தைத் தராதொழியும் என்ற உவம நலம் தோன்ற நிற்பது.

'பலதாரம் மணந்தவன் ஒருத்தியிடம் செல்லாமலே இருந்தால் அவள் புலப்பதுபோல, நிலப்பரப்பை வரம்புக்கு மீறி வைத்திருப்பவன் தன் பண்ணையனைத்தையும் சென்று பார்க்க முடியாமையால், அந்நிலம் ஊடிவிடும் என்றுரைத்துப் பெருநிலக் கிழமையைக் குறை கூறுகிறது' என்பர் ***குன்றக்குடி அடிகளார்.*** இது இன்றைய நிலைக்கு ஏற்புடைத் தாமேயன்றி ***வள்ளுவர்*** கால நிகழ்ச்சியாகாது; 'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் உடையதே நாடு' என்பவராதலின்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

*முற்றும்:*

அகனில் வேறு பாட்டின் இயல்செவ்வி யறிந்து மள்ளர்
தகவினை முயற்சி செய்யக் காமநூல் சாற்று நான்கு
வகைநலார் பண்பு செவ்வி அறிந்துசேர் மைந்தர்க் கின்பம
மிகவிளை போகம் போன்று விளைந்தன பைங்கூழ்எல்லாம்,

- திருவிளை., திருநாட்டு.,26.

பூமி விரும்பு. ஆத்தி., 82

மாடு மேய்க்காமல் கெட்டது.
பயிர் பார்க்காமல் கெட்டது. - பழ.,

உங்கள் மனைவியர் உங்களுக்குரிய பண்ணை, எனவே உங்கள் பண்ணைக்கு நீங்கள் விரும்பியவாறு சென்று உங்களுக்கு வேண்டிய வற்றைத் தேடி முற்படுத்திக் கொள்ளுங்கள்.
- குர்ஆன்., 2:223

## 104.10. இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
## நிலமென்னும் நல்லாள் நகும். (1040)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** 'இரப்பாரை' பாடம்.

பொருளிலோம் என்று சோம்பி இரப்பாரைக் கண்டால் நிலம் ஆகிய நல்லாள் இகழ்ந்து நகும், எ-று.

இது நிலம் மடியில்லாதார்க்கு வேண்டியது கொடுக்கும் என்றது.

***ஆ) பரிதி.:*** ...........

***இ) பரிப்.:*** 'யிருப்பாரை' பாடம்.

பொருள் இலேம் என்று தளர்ந்து இருப்பாரைக் கண்டால் நிலம்ஆகிய நல்லாள் இகழ்ந்து நகும். எ-று.

இது நிலம் மடி இல்லாதார்க்கு வேண்டியது கொடுக்கும் என்றது.

***ஈ) காளி.*** :'இரப்பாரை' பாடம்.

வறுமையால் கால் தளர்ந்து ஒருவர்பால் சென்று பெரிதும் இல்லா ஆளரேம்[1] என்று இங்ஙனம் தம் நாவினால் காணும் அளவில் இளி வந்த சொல்லி இரப்பாரைக் காணும் அளவில் நில மடந்தை என்னும் இத்தூயவள்நகுவள்; எனவே தாம் வேண்டுவ விளைத்துக் கொண்டு இனிது இவர் அலவுறுவதே என்று இவர்க்கு இரங்கிச் சிரிக்கும் என்பது பொருள், எ-று.

***உ) பரிமேல்.:*** யாம் வறியேம் என்று சொல்லி மடிந்திருப்பாரைக்

1. இல்லா ஆளரேம் - அடிமையான்யிலேம்

கண்டால், நிலமகள் என்று உயர்த்துச் சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகாதிருக்கும், எ-று.

உழுதல் முதலிய செய்வார் யாவர்க்கும் செல்வம் கொடுத்து வருகின்றவாறுபற்றி நல்லாள் என்றும் அது[2] கண்டு வைத்தும் அது[3] செய்யாது வறுமையுறுகின்ற பேதைமை பற்றி நகும் என்றும் கூறினார். இரப்பாரை என்று பாடம் ஓதுவாரும் உளர்.[4] இதனான் அதுசெய்யாத வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. வருகின்ற அதிகார[5] முறைமைக்குக் காரணமும் இது.

***ஊ) கவிராசர்.***: 'நாம் தரித்திரர்' என்று விசாரப்பட்டு இருக்கிறவரைக் கண்டு பூமிதேவிதன்னுள்ளே சிரிப்பாள், எ-று.

உழுது பயிரிட்டு உண்ணமாட்டாத படியினாலே சிரிப்பாள். எ-ம்.

***ஏ) பழைய2.***: யாம் வறியமென்று மடிந்திருப்பாரைக் காணில் நிலமகள் என்னும் நல்லாள் நகைப்பள், எ-று.

நாமிருப்ப நம்மிடத்தில் உழுது உய்யாமல் இருப்பது என் இவன் வறியனாக என்று நகைக்கும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***மணக்., காளி.,*** பாடங்கள் 'இரப்பாரை' என்பது. ***இக்குறட்பா***வைப் பத்தாவது ***குறளாகக்*** கொண்டமையின், வருகின்ற அதிகாரம் ***நல்குரவாத***லின் அதற்கேற்ப 'இலமென்றசைஇ இருப்பாரை' என்ற பாடமே சிறக்கும் எனக் கருதியிருப்பார் போலும் ***பரிமேலழகர்*** முதலானோர். ***இரவும் இரவச்சமும் நல்குரவை***யடுத்து வருவதொன்றேயாகலான், இவ்வதிகாரத்திற்கியைய 'இருப்பாரை' என்ற பாடமே சிறப்பது.

## ஒ) ஒப்புமைப்பகுதி: இல்லை

## ஓ) மேற்கோள்பகுதி :

மயிலை :உருவக இலக்கணம் விளங்கநில்லாமல் அதனிடத்து மயங்கி நின்றதற்கு மேற்கோள். - நன்.,409

***சங்கர. :*** மேற்படி - நன்.,420

2. அது - உழுதல் முதலிய தொழில்கள்.
3. 'அவை' என்றும் பாடமுண்டு.
4. மணக்குடவரும், காளிங்கரும் இங்ஙனம்
5. வருகின்ற அதிகாரம் - நல்குரவு.

# 104. உழவு

| | சுழன்றுமேர்ப் | உழுவார் | உழுதுண்டு | பலகுடை | இரவார் | உழவினார் | தொடிப்புழுதி | ஏரினும் | செல்லான் | இலமென்று |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 9 | 7 | 8 | 5 | 6 | 2 | 3 | 4 | 10 |
| பரிதி. | 6 | 1 | 2 | 4 | 3 | 5 | 8 | 9 | 7 | 10 |
| பரிப். | 1 | 9 | 7 | 8 | 5 | 6 | 2 | 3 | 4 | 10 |
| காளி. | 2 | 1 | 3 | 9 | 5 | 4 | 7 | 8 | 10 | 6 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

104-வது அதிகாரம் 'குடிசெயல்வகை' முற்றிற்று.

******

# 105. நல்குரவு

## அதிகாரப் பொருள் :

*அ) மணக்.*: நல்குரவாவது பொருளில்லாதார்க்கு உளதாகும் குற்றம் கூறுதல். இஃது உழவில்லாதார்க்கு உளதாவ தொன்றாதலின், அதன்பின் கூறப்பட்டது.

*இ) பரிப்.*: நல்குரவு ஆனது பொருள் இல்லாதார்க்கு உளது ஆகும் குற்றம் கூறப்பட்டது. இஃது உழவு இல்லாதார்க்கு உளது ஆவது ஒன்று ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.

*உ) பரிமேல்.*: அஃதாவது நுகரப்படுவன[1] யாவும் இல்லாமை, எ-று.

*ஊ) கவிராசர்.*: அஃதாவது தான் அனுபவிக்க வேண்டினது ஒன்றும் இல்லாமை, எ-று.

*எ) பழைய2.*: அஃதாவது வறுமை; உண்பன உடுப்பன யாவும் இல்லாமை, எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*மு.ரா.அரு.* 'உண்ணப்படுவன ஒன்றும் இல்லாமை' என்பர் இது *பரிமேலழகரை* ஒட்டியது. *வரத.* 'நல்குரவு-வறுமை; பொருளின்மை என்றும் கூறலாம்' என்பர். மேலும் தொழில் முயற்சியின்மையாற்றான் வறுமை தோன்றுகிறது என்பர். ***தேவநேயர்*** 'நுகர்வன யாவும் இல்லாமை. நல்கூர்வது, நல்குரவு, நல், நன்மை. கூர்தல்-மிகுதல். நன்மையின்மையை நன்மை மிகுதல் என்றது மங்கல வழக்கு. வெறுமையாகிய வறுமை நிரப்பு எனப்பட்டது போல நல்கு

1. நுகரப்படுவன உண்பன, தின்பன, மோப்பன முதலியன.

ஊர்தல்-பிறர் நல்குவதன் மேல் ஊர்தல் எனலுமாம். தனிமனிதனுடைய சோம்பேறித்தனம். அவனை மட்டுமன்றி நாட்டையும் வருத்தும் என்பதால் உழவின் பின் வைக்கப் பெற்றது' என்பர். 'நிரப்பு' என்பதனை ஏவல் வினைப்பகுதியாகக் கொண்டு, 'நிரப்பப் பெற வேண்டுதலின் நிரப்பு என்றார் எனலுமாம்.

***வை.மு.கோ.*** 'நல்குஊர் என்பன கொடுத்ததைப் பெற்றுக் கொள் என்னும் பொருளதாக, அதற்குக் காரணமான வறுமையைக் காட்டிற்று. காரியச் சொல் காரணப் பொருளைக்காட்டிய உபசார வழக்கு' என்பர்.

***குழந்தை*** 'வறுமை : யாதொரு தொழிலும் செய்யாமையால் உண்டாவது' என்பர். ***இராம.*** 'ஏழைகளின் மனவேதனையை நினைப் பூட்டுவது' என்பர்.

இவற்றுள் நல்குரவு ஒருபண்பாதலின் 'வறுமை', 'நுகரப் படுவன இல்லாமை' எனப் பண்பாகப் பொருள் தருதலே சிறக்கும். 'நுகர்வன இன்மை' என்ற பொருள் அனைத்தின் இன்மையையும் காட்டுவதாகலின் இப்பொருள் ஏனையவற்றினும் சிறந்தது.

105.1. **இன்மையின் இன்னா தியாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.** (1041)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** நல்குரவு போல இன்னாதது யாது எனின், நல்குரவு போல இன்னாதது தானே, எ-று.

***ஆ) பரிதி.:*** இன்மையாகிய பொல்லாப்புக்குள்ளும் பொல்லாப்பு யாது எனில், மிடியே, எ-று.

***இ) பரிப்.:*** நல்குரவு போல இன்னாதது யாது எனின் நல்குரவு போல இன்னாதது தானே, எ-று.

**இது தன்னை ஒத்த இன்னாதது பிறிது இல்லை என்றது.**

***ஈ) காளி.:*** ஒருவர்க்கு இல்லாமையிற் காட்டினும் பொல்லாதது யாதோ எனின், இல்லாமையின் பொல்லாதது பின்னும் அவ்வில்லாமையே, பிறிது ஒன்றும் இல்லை: இதனைப் பற்ற இன்னாங்கு[1] உடையது. எ-று.

1. இன்னாங்கு - துன்பம்

*உ) பரிமேல்.:* ஒருவனுக்கு வறுமைபோல இன்னாதது யாது என்று வினவின், வறுமைபோல இன்னாதது வறுமையே, பிறிதில்லை, எ-று.

இன்னாதது துன்பஞ்செய்வது ஒப்பது இல்லை எனவே மிக்கது இன்மை சொல்ல வேண்டாவாயிற்று.

*ஊ) கவிராசர்:* ஒருவனுக்குத் தரித்திரம் போலப் பொல்லாதது எது என்றால், தரித்திரமே பொல்லாதது, எ-று.

*ஏ) பழைய2.:* ஒருவனுக்கு வறுமை போலப் பொல்லாதது யாது எனின், வறுமைப் போலப் பொல்லாதது அவ்வறுமை தானே பொல்லாதது; பிறிதில்லை, எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

இக்குறள் 'தானே உவமை தனக்கு' என்றாற்போல இன்னாமை யான் இன்மைக்கு ஒப்பாவது இன்மையே வேறு ஒன்றும் இன்று என்கிறது. உரைகளுள் கருத்துமாற்றம் இல்லை.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

*முற்றும் :*

அரிது மற்றம்ம இன்மைய திளிவே -நற் 262 :10

எற்றுள்ளும் இன்மையின் இன்னாத தில்லை -நான்மணிக்.,30

வறுமை போல இன்னாது வறுமை யன்றி வேறில்லை
மறுவின் மொழிகள் சோர்வுபடும் -விநா.அரசி.,152

## 105.2. இன்மை எனஒரு பாவி மறுமையும்
## இம்மையும் இன்றி வரும. (1042)

*உரைப்பகுதி:*

*அ) மணக்.:* நல்குரவு என்று கூறப்படுகின்ற நிகரில்லாத பாவத்தை யுடையவன், இம்மையின் கண்ணும் மறுமையின் கண்ணும் நுகர்ச்சி[1] இன்றிவிடும், எ-று.

தன்மம், பண்ணாமையால், மறுமையின் கண்ணும் நுகர்ச்சியில்லாமை ஆயிற்று, இது நல்குரவு துன்பமாக்கும் என்றது.

1. நுகர்ச்சி - அனுபவித்தல்

***ஆ) பரிதி.:*** இல்லாமை என்னும் தீயபாவி வந்தால் இம்மையிலும் மறுமையிலும் துன்பம் தரும், எ-று.

***இ) பரிப். :*** இன்றி விடும்-பாடம்.

நல்குரவு என்று கூறப்படுகின்ற நிகர் இல்லாத பாவத்தை உடையவன் இம்மையின் கண்ணும் மறுமையின் கண்ணும் நுகர்ச்சி இன்றி விடும், எ-று.

தானம் பண்ணாமையால் மறுமையினும் நுகர்ச்சி இல்லை ஆயிற்று. இஃது இன்பம் இல்லை ஆக்கும் என்றது.

***ஈ) காளி.:*** இல்லாமை என்று எடுத்து உரைக்கப்பட்ட இணை இறந்த பாவி யாதொருவர்மாட்டு வரும்பொழுதே இம்மை ஆக்கமும் மறுமை ஆக்கமும் என்பன யாவும் இன்றித் தானே வந்து கைக் கொண்டு நிற்கும், எ-று.

***உ) பரிமேல்.:*** வறுமை என்று சொல்லப்படுவதொரு பாவி, ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமை இன்பமும் இம்மை இன்பமும் இல்லையாக வரும், எ-று.

இன்மை என ஒரு பாவி என்பதற்கு மேல் "அழுக்காறென ஒரு பாவி"[2] என்புழி உரைத்தாங்கு உரைக்க. மறுமை இம்மை என்பன ஆகுபெயர்[3]. ஈயாமையானும் துவ்வாமை யானும் அவை[4] இலவாயின. இன்றிவிடும் என்று பாடமோதிப் பாவியால் என விரித்துரைப்பாரும் உளர்[5].

***ஊ) கவிராசர்:*** தரித்திரம் என்று சொல்லப்பட்ட பாவி ஒருவனுக்கு வந்தால், அவனுக்கு இம்மை இன்பமும், மறுமைப் பயனும் இல்லையாம், எ-று.

இம்மையின்பமாவது-வேண்டிய வஸ்துக்களை அனுபவித்த லாம்.மறுமைப்பயனாவது தான தருமங்களைப் பண்ணுகிறதாம்.

***எ) பழைய2.:*** வறுமையென்று சொல்லப்பட்ட ஒரு பாவி ஒருவனிடத்து வரும்போது மறுமை இன்பமும் இன்மை இன்பமும் இல்லாமல் வரும், எ-று.

2. குறள்., 168
3. மறுமை, இம்மை என்பன மறு உலகத்தில் நுகரப்படும் இன்பத்தையும் இவ்வுலகத்தில் நுகரப்படும் இன்பத்தையும் உணர்த்துதலான் இடவாகு பெயர்களாம்.
4. அவை - இன்பங்கள்; இன்பங்கள் யாவும் ஈதல் பயனாய் வருதலின் இங்ஙனம் கூறினார்.
5. மணக்குடவர், பரிப்பெருமாள் கொண்ட பாடமும் உரையுமாகும்.

பொருளில்லாமையால் மறுமைக்குப் புண்ணிய மில்லை; இம்மைக்குப் புசிப்பன இல்லை என்க.

### ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'இன்றிவிடும்'*** எனப்பாடங் கொண்டு, 'பாவியால் இன்மையின் கண்ணும் மறுமையின் கண்ணும் நுகர்ச்சியின்றி விடும்' என்பது ***மணக்குடவரின்*** பழையபாடம் என்பது மலர்நிலையப் பதிப்புப்பாடம். உரைக்கொத்தும், ***மணக்., பரிப்.,*** உரையும் இங்ஙனமே பாடபேதங் காட்டுகின்றன.

***பரிப்பெருமாள், திருப்பதிப் பதிப்பும், பொன்னுச்சாமி நாடார் மணக்., பதிப்பும்*** 'இன்றிவிடும்' என்றே கூறுகின்றன. ஆதலால் பிறருரையாகப் ***பரிமேல்.*** காட்டும் பாடமும் உரையும் முடிபு வழுவும், பொருள் விளக்கமின்மையுங் கருதிப் ***பரிமேலழகர், காளிங்கர்*** பாடமே கொண்டு திருத்தினர் போலும் எனத் துணியலாம்.

### ஒ) ஒப்புமைப்பகுதி:

***இம்மையும் இன்றி வரும் :***

பொருளிலார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு -குறள்., 247

ஈதலுந் துய்த்தலும் இல்லோர்க் கில் -குறுந்., 63:1.11.2

***ஒருபாவி :***

பசிப்பிணி என்னும் பாவி யதுதீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்னா நிமிராது -மணி., 11:80-81

இல்லையுண்டாய் விடின் இம்மை மறுமைக்கும்
புல்லென்று காட்டும் புணர்வது மன்றே - வளையாபதி., 39

## 105.3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
## நல்குர வென்னும் நசை. (1043)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** தொன்றுதொட்டு வருகின்ற குடிப்பிறப்பினையும் வடிவழகினையும் ஒருங்குகெடுக்கும், நல்குரவு என்று சொல்லப்படுகின்ற ஆசைப்பாடு, எ-று.

நல்குரவு ஆசையைப் பண்ணுதலினால், ஆசையாயிற்று. தோல்-ஆகுபெயர்[1]. இது குலத்தினையும் அழகினையும் கெடுக்கும் என்றது.

***ஆ) பரிதி.***: பெருமையும் சரீரமும் கெடுக்கும் நல்குரவு, எ-று.

***இ) பரிப்.***: தொன்றுதொட்டு வருகின்ற குடிப்பிறப்பினையும் வடிவழகினையும் ஒருங்கு கெடுக்கும் நல்குரவு என்று சொல்லப்படுகின்ற ஆசைப்பாடு, எ-று.

நல்குரவு ஆசையைப் பண்ணுதலினால் ஆசை ஆயிற்று, தோல்-ஆகுபெயர். இது குலத்தினையும் அழகினையும் கெடுக்கும் என்றது.

***ஈ) காளி.:*** தமக்கு அனாதி முதலாக வருகின்ற குடி வரலாற்று ஒழுக்கத்தையும் தமது வலியினையும் எல்லாம் ஒக்கக் கெடுக்கும் யாதோ எனின் நல்குரவு என்று சொல்லப்படுகின்ற பிறர்மாட்டு ஒன்றை நச்சுதல்[2] என்னும் புல்லிமையாகிய நசை உரு[3], எ-று.

தொல் வரவு என்பது தொன்றுதொட்டு வருகின்ற குடி வரலாறு. தோல் என்பது வலி.

***உ) பரிமேல்.:*** நல்குரவு என்று சொல்லப்படும் ஆசை. தன்னால் பற்றப்பட்டாருடைய[4] பழைய குடிவரவினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருங்கே கெடுக்கும், எ-று.

நசை இல்வழி நல்குரவும் இல்லையாகலின் நல்குரவையே நசையாக்கி அஃது அக்குடியில் தொல்லோர்க்கு இல்லாத இழிதொழில்களையும் இளிவந்த சொற்களையும் உளவாக்கலான் அவ்விரண்டனையும்[5] ஒருங்கு கெடுக்கும்[6] என்றார்: "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்[7]" என்றார் பிறரும். தோலாவது "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்"[8] என்றார் தொல்காப்பியரும். இதற்கு உடம்பு என்று உரைப்பாரும் உளர்[9]: அஃது அதற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்கும் என்றற்கோர் பொருட் சிறப்பு இல்லாமை அறிக.

---

1. தோல் என்னும் சினைப்பெயர் அதனைப் பற்றிய அழகை யுணர்த்திய சினையாகுபெயர்.
2. நச்சுதல் - விரும்புதல்.
3. புல்லிமையாகிய நசை உரு - இழிந்த விருப்பமாகிய வடிவம்.
4. பற்றப்பட்டாருடைய - பிடிக்கப்பட்டவருடைய
5. அவ்விரண்டினையும் - தொல்வரவையும், தோலையும்
6. 'தொகையாகக் கெடுக்கும்' என்றும் பாடமுண்டு.
7. மணிமேகலை, பாத்திரம், 76
8. தொல்.பொருள்.செய்.,551
9. மணக்குடவர், பரிதியார் இங்ஙனம் உரைப்பர்.

***காரி.:*** தோலாவது 'இழுமென் மொழியால் விழுமியது நுவலினும்'[10] என்றார் தொல் காப்பியனாரும்.

***ஊ) கவிராசர்.:*** ஒருவனுக்குத் தரித்திரம் என்று சொல்லப்பட்ட குற்றம், தன் வங்கிசத்தார் நடந்த நல்ல நடக்கையையும், அதற்கேற்ற நல்ல வசனங்களையும் கெடுக்கும், எ-று.

***எ) பழைய2.:*** நல்குரவென்று சொல்லப்படும் ஆசை வநது படிததால, அவனுடைய பழைய குடி மரபினையும் பழைய புகழினையும் ஒருமிக்கக் கெடுக்கும், எ-று.

தோல் என்பது பெருமை; உடம்பு என்றும் ஆம். ஆசையில் லார்க்கு வறுமை இல்லை: ஆதலால் ஆசையே வறுமை என்றார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்பாவில் கருத்து மாற்றம் ***'தொல்வரவு' 'தோல்' 'நல்குரவென்னும் நசை'*** என்ற மூன்று இடங்களில் காணப்படுகிறது.

### *தொல்வரவு*

'தொன்றுதொட்டு வருகின்ற குடிப்பிறப்பு' ***மணக்.;*** 'பெருமை' ***பரிதி.;*** 'குடிவரலாற்று ஒழுக்கம்' அஃதாவது பழைமையான குடிவரலாறு ***காளி.; இராம.; வரத.;*** 'தன்னால் பற்றப்பட்டாருடைய பழைய குடிவரவு' ***பரிமேல்.;*** 'தன் வங்கிசத்தார் நடந்த நல்ல நடத்தை' ***கவிராசர்;*** 'பழையகுடி மரபு' ***பழைய.;*** 'பழைமையாய் வருகிற சிறந்த தொழில்' ***கா.சு.***

***வரவு'*** என்ற பொதுச்சொல் ஆசிரியர்களைப் 'பிறப்பு', 'பெருமை', 'தொழில்', 'வரலாறு', 'நடத்தை' என்றெல்லாம் எண்ணச் செய்திருக்கிறது. இவையனைத்தும் சேர்ந்த ஒன்று பெருமை அதுவே அக்குடியின் வரலாறாக அமைவதால் 'வரலாறு' என்ற உரை சிறக்கும்.

### *'தோல்'*

'வடிவழகு' ***மணக்.;*** 'சரீரம்' ***பரிதி.;*** 'வலி' ***காளி.;*** 'தன் குடிவரவிற்கேற்ற சொல்' ***பரிமேல்., கவிராசர், பழைய, தேவநேயர்;*** 'புகழ்' ***இராம.;*** 'கல்வி நலன்' ***வரத.;*** 'உடல் வனப்பு' ***வ.சுப.மா.***

தோலைப்பற்றி நிற்பதாகிய அழகிற்குப் பெயராய் இடவாகு பெயராக உரை கண்டனர் சிலர். தோல் என்னும் சினைப் பெயரை

10. தொல்.பொருள்.செய்., 551

முதலாகிய உடலுக்காக்கி உடலின் உடைமையாகிற வலிமைக்கு ஆக்கினர் ***காளிங்கரும், பரிமேலழகரும். தொல்லாசிரியர்*** சிலரும் அம்மை முதலிய வனப்பு எட்டனுள் ஒன்றாகிய 'தோல்' என்பதனை நினைவிற் கொணர்ந்து, 'அதற்கேற்ற சொல்லினை' எனப்பொருள் கண்டு, விளக்கத்தில் தோலாவது 'இழுமென் மொழியாற் விழுமியது நுவறலும்' என்றார் ***தொல்காப்பியனாரும்*** என மேற்கோளும் காட்டினர்.

இப்பகுதிக்கு உரை கண்ட ***இளம்பூரணர், 'மார்க்கண் டேயனார் காஞ்சியில்*** ஒரு பகுதியைக்காட்டி, 'ஆதிசேடசயனத்தில் அறிதுயில் கொளளும் திருமால் நிலையாமையுணர்த்தும் (காஞ்சி) அறிவு எளிது எனின், நிலையாமை ஞானம் யார்க்கு வேண்டுவது? இம்மை மறுமை, நன்மை தீமை செய்பவன் செய்பொருள் உண்டென்பார் உளராயினன்றோ நிலையாமை ஞானம் வேண்டும். இத்தனையும் உண்டென்று அறிபவர் யார்? அது முடியும்போது முடியட்டும்' என்றதை எடுத்துக்காட்டி அமைகின்றார். இதில் விழுமியது நுவலல் ஆகுமா? இதன் பிற்பகுதியில் அமைந்திருக்கலாம் போலும்.

***பேராசிரியர்*** 'மெல்லென்ற சொல்லான் அறம்பொருளின்பம் வீடென்னும் விழுப்பொருள் பயப்பச் செய்வன: அவை செய்த காலத்துள்ளன; பிற்காலத்து வரின் கண்டுகொள்க' எனக் கையுதறிவிட்டார். பின்னதோ பொருட்டொடர் நிலைச் செய்யுளான் ஆசிரியப்பாட்டான் ஒருகதை மேற்றொடுக்கப்படுவன. இவற்றுள் எண்வகையைச்சாரும் ***பரிமேலழகர்*** காட்டும் தோல், நல்குரவென்னும் நசையுடையானைப் புலவோர் பழைய குடிவரவையும், அதற்கேற்ற சொல்லையும் சொல்லமாட்டார்கள் அதாவது அவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொள்ளார் என்பதைக் கூறுகிறார் எனலாமா?

எங்ஙனமாயினும் 'அதற்கேற்றசொல்' என்று ***பரிமேலழகர்*** சொல்வது ஏனோர் கூறுவதுபோலப் புகழ் மேலதாகத் தானே நிற்கிறது. தோல் என்ற வனப்போடு இணைத்துச் சிந்திப்பதன் பயனாக எதனைக் காட்டமுயல்கிறார் ***பரிமேலழகர்*** என்பது சிந்தனைக் குரியது. ***தேவநேயர்***, 'தோல்' என்பதன் இலக்கணத்தை விளக்கும் நூற்பா ஒருவகை வனப்பு என்னும் பனுவலின் பெயராக அமைதலால் அதனை இங்கு ஆளுவது பொருத்தமில்லை. அன்றியும் வருங்***குறள்*** இளிவந்த சொற்பிறக்கும் என்றதால் கூறியது கூறலுமாகும் என மறுப்பர்.

***"நல்குரவென்னும் நசை"***

'நல்குரவே நசை' என்பவர்கள் ***மணக்., காளி., பரிமேல்.,*** முதலியோர். ***மணக்.*** அதற்குக் காரணம் காட்டும்போது 'ஆசையைப் பண்ணுதலான் நல்குரவு ஆசையாயிற்று' எனவும் 'பிறர்மாட்டு ஒன்றை நச்சச் செய்வதால் நல்குரவு நசையாகிறது' எனவும், 'நசையில்வழி நல்குரவும் இல்லையாதலின் நசை நல்குரவாயிற்று. ஆசையில் லார்க்கு வறுமையில்லையாதலின் நசையே நல்குரவு' எனவும் முறையே காரணங்காட்டுவர்.

இதனால் நல்குரவால் நசையா? நசையல் நல்குரவா? என்ற ஆய்வுள்ளம் பிறக்கிறது. நல்குரவுக்கு இலக்கணம் 'உண்பன உடுப்பனவாகிய நுகரப்படுபொருள் இல்லாமை 'எனப் ***பரிமேலழகர்*** முதலானோர் கூறுவர். அங்ஙனமாயின் 'பசி-உணவின் மேல் ஆசை; குளிர், மானம்-ஆடையின் மேலாசை. இப்படி அவசியத் தேவைகளின் மீது ஆசை பிறக்குமானால் அவை நசையால் ஆன நல்குரவன்று; கூழுக்கு உப்புவேண்டும் என்பதும், குளிருக்கு ஆடைவேண்டும் என்பதும் ஆசையன்று; தேவை. இங்ஙனம் வருவன நல்குரவால் ஆன நசை, இங்ஙனம் அன்றி உடுத்தப் பட்டும், உறங்க மெத்தையும் வேண்டும் என்பது நசையால் உண்டான நல்குரவு. இவற்றுள் ***வள்ளுவர்*** கூறுவது இன்றியமையாத் தேவைகளில் உண்டாகும் நசையை யன்று; வறுமையால் கண்டதை எல்லாம் விரும்பும் தகுதியற்ற ஆசையையும் அன்று. ஏதோ வாழ்க்கைக்கு வேண்டிய அளவிருந்தும் மிகைபட விரும்பும் ஆசையே நல்குரவு என்கிறார். ***குமரகுருபர அடிகளாரும்*** 'அல்கா நல்குரவு அவா எனப்படுமே, செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்றதும் இது. இதனை ஊன்றியறிந்த ***கா.சு.*** 'பொருள் சிறிது இருந்தும் வறுமையென்று உணர்தற்கு ஏதுவாய ஆசை என்றனர். இக்கருத்தின் ஆழம் ***வள்ளுவர்*** உள்ளத்தையுணரச் செய்கிறது.

'தொல்வரவுந் தோலும்' என்பதற்குத் 'தோல் என்பது இழுமென் மொழியான் விழுமியது நுவறல்' என்பார் ***பரிமேலழகர்***. தோல் தொடர்நிலைச் செய்யுளுக்குரிய எண்வகை வனப்புள் ஒன்றாமே யன்றித் தனிமகன் ஒருவனைப் பற்றி உலகவர் கூறும் உரையாகா. அங்ஙனமும் ஆகலாம் என்பாராயின் தொல்வரவு தொன்மையெனக் கூறாதது ஏன். தானம் தவம் விரதம் முதலியவற்றான் உடலிளைத்தல் அது அழகேயாம். விரதந்தனிலிளைத்த மேனி நல்ல பிராமம் என்பதாற் றெளிக. ஆகவே வறுமையால் வந்த இளைப்பே அழகைக் கெடுப்பது. ஆதலாலேயே ***சாத்தனார்*** ' மாணெழில் சிதைக்கும்' எனக் கூறினர்.

## ஓ) ஒப்புமைப்பகுதி :

*முற்றும் :*

குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும்மாணெழில் சிதைக்கும்
-மணி.,11,76-80

*நல்குரவு என்னும் நசை :*

பிறந்த குலமாயும் பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியும் மாயும் - கறங்கருவி
கன்மேல் கழூஉம் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு -நாலடி., 285

நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம் -நான்மணி.,81

குருட்டாயன் நீள்கானம் கோடல் சிவணத்
தெருட்டாயம் காலத்தால் சேரான் - பொருட்டாகான்
நல்லறமும் பேணானாம் நாரம் இவர்த்தானாம்
பொல்லாங் குறைவிடனாம் புல். -இன்., 15

நசையில் பெரியதோர் நல்குரவு இல்லை · முதுமொழிக்.,6:7

நல்குர வடைந்த நசைசால் ஆடவர் -பெருங்.5:6:53

## 105.4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
## சொற்பிறக்கும் சோர்வு தரும். (1044)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.***: நல்குரவு, குடிப்பிறந்தார்மாட்டேயும் இளிவரவான சொற்கள் பிறக்கும் சோர்வினை உண்டாக்கும், எ-று.

***ஆ) பரிதி.***: ................

***இ) பரிப்.***: நல்குரவு குடிப்பிறந்தார் மாட்டேயும் இளிவரவான சொற்கள் பிறக்கும் சோர்வினை உண்டாக்கும், எ-று.

இது குடிப்பழி உண்டாக்கும் என்றது.

ஈ) ***காளி.***: குடிப்பிறந்தார் மாட்டேயும் வறுமை வந்த இடத்துமற்று அஃது யாது செய்யுமோ? எனில் அவரது நன்கு தெரிந்து உரைக்கும் நாவுக்கும் பெரிதும் இளிவந்த சொல் பிறப்பது ஆகிய உரைச் சோர்வு பாட்டினைக் கொடுக்கும். அது அன்றி மற்றும் இரப்புரை வந்து விழும், எ-று.

உ) ***பரிமேல்.***:இளிவந்த சொல்பிறவாத குடிப் பிறந்தார் மாட்டேயும், அது பிறத்தற்கு ஏதுவாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும், எ-று.

சிறப்பும்மை[1] அவர்[2]மாட்டு அது[3] பிறவாமை தோன்ற நின்றது. இளிவந்த சொல் இளிவருவதற்கு ஏதுவாகிய சொல்[4]. அஃதாவது எமக்கு ஈயவேண்டும் என்றல். சோர்வு தாம் உறுகின்ற துன்பமிகுதி பற்றி ஒரோவழித் தம்பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக நினைத்தல்.

ஊ) ***கவிராசர்***: பொல்லாத வசனங்களைச் சொல்லாத நல்ல குடியிலே பிறந்தவர்களுக்குத் தரித்திரம் வந்தால், அது பொல்லாத வசனங் களைச் சொல்லத்தக்கதாய் நல்ல குணங்களை மறப்பிக்கும், எ-று.

தரித்திரம் வந்தால், நல்ல குணங்களை மறந்துவிடுவர், எ-ம்.

எ) ***பழைய2.***: இகழ்ச்சியாகிய சொல் பிறவாத குடிப்பிறந்தாரிடத்தும் இகழ்ச்சியாகிய சோர்வினை வறுமையுண்டாக்கும், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'இளிவந்த சொல்'*** - 'இளிவரவான சொல்' ***மணக்.***, 'உரைச் சோர்வு பாடு' ***காளி.:*** 'இளிவருதற்கு ஏதுவாய சொல். அஃதாவது எமக்கு ஈயவேண்டும் என்றல்' ***பரிமேல்.;*** 'பொல்லாத சொல்' ***கவிராசர்;*** 'இகழ்ச்சி' **பழைய.**

இவற்றுள் ***பரிமேலழகர்*** இவ்வுரை கூறுதற்கு அவர் மனத்துள் நின்று உதவிய கருத்து 'இரவின் எளிவந்தது இல்' என்ற மேல்வரும் (1066) குறளின் தொடர்.

1.சிறப்பும்மை - இற்பிறந்தார் கண்ணேயும் என்ற இழிவு சிறப்பும்மை.
2.அவர் - இற்பிறந்தார்
3.அது - இளிவந்த சொல்.
4.சொல்லுக்கு இளிவந்த தன்மை யில்லாமையால் அதனால் வந்த பயனுக்குரிய இழிவை சொல்லின்மேல் ஏற்றிய உபசார வழக்கு. கருவியாகுபெயர் எனலுமாம், கோ.வ. 'ஈயென கிளவி இழிந்தோன் கூற்றே' ஆதலால் இழிவதற்கு ஏதுவாகிய சொல்லாகிய 'ஈ' என்பது ஆகுபெயர்.

இதனுடன் 'இலன் என்னும் எவ்வம் உரையாமையும் ஈதலும் குலனுடையான் கண்ணே உள' என்பது நின்று, தன் வறுமையால் பிறனைக் கேட்பதோடு, தன்பால் வந்திரந்தானுக்கு இல்லை என்றலும் குலனுடையானுக்கு இல்லாத குணமாதலின் (223) அதுவும் பிறத்தற்குச் ஏதுவாய்ச் சோர்வுபடும் எனவும் இணைத்து எண்ணலாம்.

### ஒ) ஒப்புமைப்பகுதி :

***இன்மை இளிவு :***

இன்மையிளிவாம் - வளையாபதி.,37

## 105.5. நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
## துன்பங்கள் சென்று படும். (1045)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** வறுமை எனப்படும் இடும்பையுள் பலவாகிய வன்மை உடைய துன்பங்கள் வந்து சோர்வுபடும், எ-று.

இது துன்பங்கள் சென்றுளவாம் என்றது. பல்குரைத் துன்பம்-இரப்பார்க்கு உரைக்கத் துன்பம்.

***ஆ) பரிதி.:*** மிடியன் என்கிற விதத்தினாலே, பலபல துன்பும் உண்டாகும்.

***இ) பரிப்.:*** நல்குரவு ஆகிய துன்பத்தின் உள்ளே பல துன்பங்களும் சென்று தோற்றும், எ-று.

குரை-அசை: மேல் கூறியவே அன்றி எல்லாத் துன்பமும் உண்டாம் என்பது.

***ஈ) காளி.:*** வறுமை என்று சொல்லப்படுகின்ற இத்துன்பத்தின் கண்ணே மற்றும் பல தன்மையாகிய துயரம் ஆவது தான் இனிது உண்ணப்பெறாத துயரமும், தன் சுற்றம் ஓம்பப் பெறாத துயரமும் சான்றோர்க்கு உதவப்பெறாத துயரமும், வருவிருந்து ஓம்பப் பெறாத துயரமும் பிறவும் சென்று சேரும்; எனவே வறுமைத்துயர் உற்றோன் மற்று உறாத்துயர் ஒன்றும் இல்லை. எல்லாத்துயரும் உறுவன் என்பது பொருள், எ-று.

***உ) பரிமேல்.:*** நல்குரவு என்று சொல்லப்படும் துன்பம் ஒன்ற னுள்ளே பல துன்பங்களும் வந்து விளையும், எ-று.

குரை-இசைநிறை[1]. செலவு விரைவின்கண் வந்தது[2]. துன்பமும்[3] தானும் உடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத்துன்பமடியாகச் செல்வர் கடைநோக்கிச் சேறல் துன்பமும், அவரைக் காண்டல் துன்பமும், கண்டால் மறுத்து நிகழுந்துன்பமும், மறாவழியும் அவர் கொடுத்தது வாங்கல் துன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டல் துன்பமும் முதலாயின நாடோறும் வேறு வேறாக வருதலின் 'எல்லாத் துன்பங்களும் உளவாம்[4]' என்றும் கூறினார். இவை ஐந்து பாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது.

***காரி.:*** குரை-இசைநிறை, செலவு-விரைவின்கண் வந்தது.

***ஊ) கவிராசர்.:*** தரித்திரம் என்னப்பட்ட துன்பத்திலே பல துன்பங்களும் வந்து விளையும், எ-று.

பல துன்பமாவன - தரித்திரனானவன் ஐசுவரியவான்கள் வாசலிலே நிற்கிற துன்பமும், அவர்களைக் காண்கிற துன்பமும், கண்டால் அவர்கள் இன்று நாளை என்று மறுக்கிற துன்பமும், அவர் கொடுக்கிற துன்பமும், கொடுத்தால் அது கொண்டுவந்து சாப்பிடத்தக்கது, உடுக்கத்தக்கது இவற்றைத் தேடுகிற துன்பமும் முதலாயின.

எ) ***பழைய2:*** நல்குரவாகிய வறுமையென்று சொல்லப்படும் துன்பம் ஒன்று வரவே பல துன்பங்களும் வந்து விளையும், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'பல்குரைத்துன்பங்கள்'*** 'குரை-வலிமை' ***மணக்.:*** இவர் தரும் அடிக்குறிப்பு 'இரப்பார்க்கு உரைக்கத் துன்பம்' என்பது. 'குரை'

1. செய்யுளில் இசையை நிறைக்க வரும் இடைச்சொல் இசைநிறை.
-தொல்.சொல்.சேனா, 272
2. 'செலவு வரவின்கண் வந்தது' எனவும் பாடமுண்டு. (கோ.வ.) 'செலவினும் வரவினும்' என்னும் (தொல்.சொல்.நச்சி.28) சூத்திரத்தால் செலவும் வரவுமே ஒன்றற்கொன்று பொருள் தொடர்புடையன என்று அறிவிக்கப்படுகிறது. பரிமேலழகரும் சென்றுபடும் என்பதற்கு வந்து விளையும் எனப் பொருள் கண்டனர். அங்ஙனமாக அவரே 'விரைவின் கண் வந்தது' என்று எழுதுவதற்கு இயைபில்லை. ஆதலால் எழுதுவோரால் நேர்ந்த இயைபில் பாடமாகும்.
3. கோ.வ. நல்குரவு நிகழ்ந்தபொழுதே (வறுமை) துன்பம் நிகழ்தலின் விரைவு பற்றி நல்குரவைத் துன்பமாக்கிக் கூறினார். இது காரணம் காரியமாகிய உபசார வழக்கு என வேறு ஒரு விளக்கம் காட்டுவர். இது பரிமேலழகர் காட்டிய 'விரைவின்கண்' என்ற பாடத்திற்குக் கூறிய விளக்கம்.
4. 'பல்குரைத் துன்பங்கள் சென்று படும்' என்றும், 'பல துன்பங்களும் வந்து விளையும்' என்றும் பாடமுண்டு.

என்பதற்கு 'வலிமை' என்ற பொருள் இன்மையின் இவரே நன்கு சிந்தித்துப் பல்கு உரை துன்பம்-மிகுதியாக (இரப்பார்க்கு) உரைக்கத் துன்பம் எனக் கொண்டிருப்பர் போலும். 'குரை' என்பது ***தொல்காப்பியத்துள்*** இல்லை. ***நன்னூலும்*** (நன்.459), ***பதிற்றுப்பத்தும்*** 'ஓசை' யென்னும் பொருளைத்தரும் உரிச்சொல் என்கின்றன. ***பரிதி.*** 'பலபலவாகிய துன்பம்' என்பர். 'பல தன்மையவாகிய துயரம்' எனப் பொருள் கண்டு விளக்கமுந்தருவர் ***பரிமேலழகர்.*** இவர் உரையே சிறந்தது. ***வரத.*** 'குரையை' அசைநிலையாக்கிப் 'பலதுன்பங்கள்' என்றார். இதுவும் நேரிது. ***தேவநேயர்*** 'குரை-பெருமை' எனக் கொண்டு 'பெரிய துன்பங்கள்' என்பர். ***கா.சு.*** 'பல்வகைத் துன்பங்கள் சென்றடங்கும்' என்பர் ***இராம.*** இக்கருத்தினரே.

இவற்றுள் எல்லாவகையானும் ***பரிமேலழகர்*** உரை சிறக்கும்.

'படும்' என்பதற்கு 'விளையும்' என்பதினும், 'அதனுள் அடங்கும்', 'அழியும்' என்ற உரைகள் நல்குரவானாம் துன்பத்தை மிகுவித்தலின் சிறந்ததாகும். அதனாலேயே 'படும்-அழியும்' எனப் பொருள் கண்டு இத்துன்பத்தின்முன் ஏனைய துன்பங்கள் இல்லையாம் என்றார்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

மெய்வலியும் செல்நிலையும் வாழ்நாளும் தூஒழுக்கும்
மெய்யா அளிக்கும் வெறுக்கைஇலார் - வையத்துப்
பல்கிளையும் வாடப் பணையணைத்தோள் செய்திரங்க
ஒல்குயிர்நீத் தாரும் நரகு. - இன்., 14

## ஓ) மேற்கோள்பகுதி:

***இளம்.*** : குரை என்னும் இடைச்சொல் அசைநிலைப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். -தொல்.சொல்., 267

***சேனா.***: ஷை. -தொல்.சொல்., 272

***தெய்வச்.***: ஷை. -தொல்.சொல்., 267

***நச்சி.***: ஷை. -தொல்.சொல்., 274

105.6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (1046)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: நல்ல பொருளினை மிகவும் ஆராய்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொல்லும் பொருள், சோர்வு படும், எ-று.

ஏற்றுக்கொள்வார் இல்லை என்றவாறாயிற்று. இது கல்வி கெடும்: சுற்றத்தாரும் கைவிடுவர் என்பது.

***ஆ) பரிதி.***: நல்லகாரியங்களை நன்றாகச் சொன்னாலும் மிடியார் சொல் சோர்வு படும், எ-று.

***இ) பரிப்.***: நல்ல பொருளை மிகவும் ஆராய்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார் சொல்லும் பொருள் சோர்வு படும், எ-று.

ஏற்றுக் கொள்ளார் என்றவாறு ஆயிற்று. இது கல்வி கெடும் என்றது.

***ஈ) காளி.***: மிக நன்று ஆகிய பொருளினைத் தமது நல்ல அறிவினால் நன்கு தெரிந்து சொல்லினும் அச்சொல்லுகின்றவர் வறியோர் ஆயின், அங்ஙனம் சொல்லுகின்றவர் சொற்பொருள் செவி ஏற்றுக் கொள்ளாது உக்குவிடும் கைப்பொருள் உடையாரிடத்து, எ-ம்.

***உ) பரிமேல்.***: மெய்ந்நூற்பொருளைத் தெளிய அறிந்து சொன்னா ராயினும், நல்கூர்ந்தார் சொல்லும் சொல் பொருளின்மையைத் தலைப்படும், எ-று.

பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாம் இவர் சொல்லியன விரும்பிக் கேட்குமாயின்[1] கண்ணோடி இவர் உறுகின்ற குறை முடிக்க வேண்டும் என்றஞ்சி யாவரும் கேளாமையின் பயனில் சொல்லாய் முடிதல்; கல்வியும் பயன்படாது என்பதாம்.

***ஊ) கவிராசர்.***: மெய்யான தரித்திரங்களை அறிந்து நல்ல பொருளைச் சொன்னாலும், தரித்திரச் சொல் பொருள் இல்லாததாய்த் தோன்றும், எ-று.

1. கேட்டோமானால் என்றும் பாடமுண்டு.

பிரயோசன மல்லாததாவது - தரித்திரன் சொல்லை ஐசுவரியவான் விரும்பிக்கேட்டால் அவன் குறை தீர்க்க வேணும் என்று பயப்பட்டு யாவரும் கேளார்: ஆனபடியினாலே பிரயோசனம் இல்லாததாய் முடிதல்.

*ஏ) பழைய2:* மெய்ந்நூற் பொருளைத் தெளிய அறிந்து சொன்னா ராயினும் வறுமை கூர்ந்தார் சொல்லிய சொற்பொருள் இகழ்ச்சிப்படும், எ-று.

வறுமையாளர் சொல்லிய மெய்ப்பொருள் கேட்டவர் இவர் நம்மை யாதானுங் கேட்பர் என்று இகழ்வர் என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'நற்பொருள்'*** - 'நல்ல மெய்ந்நூற்பொருளை' என்பர் ***பரிமேலழகர்.*** 'நல்ல பொருளை' என்ற ஏனோர் உரைகள் சிறக்கும். 'மெய்நூற்பொருள்' என்பது ஈண்டு இயைபுடைத்தன்று. 'சிறந்த நூற்பொருளை' என்றனர் ***தேவநேயர்.***

## ஓ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினும் செல்வர்வாய்ச் சொல்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல். -நாலடி.,115

இல்லார் வாய்ச் சொல்லின் நயம் இன்னா -இன்னா.,29

வென்றி யாக்கலும் மேதக வாக்கலும்
அன்றி யுங்கல்வியோடழ காக்கலும்
குன்றி னார்களைக் குன்றென வாக்கலும்
பொன்துஞ்சு ஆகத்தி னாய்பொருள் செய்யுமே. -*சீவக.,* 1922

பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினி னஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை யிலராயின்
மண்டினர் போவர்தம் மக்களும் ஒட்டார் -வளையா.,65

எனைத்துணைய வேணும் இலம்பட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்பா டிலவாம். -நீதிநெறி.,10

வறுமையில் கல்விபோலப் புலப்படா மருங்குல்
-திருவிளை.தாடா. அவதா., 58

நூலுறு கல்வியை நுனித்து நாடியே
வாலறி வெய்திய வரத்தி னோர்களும்
மேலுறு திருவொடும் மேவு றார்எனின்
ஞாலமங் கவர்தமை நவையுள் வைக்குமால். -கந்த, மாயையுப.,11

ஏழைச் சொல் அம்பலம் ஏறாது. -பழ.,

### ஓ) மேற்கோள்பகுதி :

***சுவாமி.:*** படுசொல்வந்தே வேறுபொருள் படும் என்பதற்கு மேற்கோள்.
-இ.கொ., 78

**105.7. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். (1047)**

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:***

***ஆ) பரிதி.:*** மிடி வந்தால் தன்மம் சாராது, பெற்ற தாயாகிலும் பிறர் போல பாராமுகம்[1] பண்ணுவாள்,எ-று.

***இ) பரிப்.:*** அறத்தைப் பொருந்தாத நல்குரவாளன் தன்னைப் பெற்ற தாய் ஆயினும் எதிலாரைப் போல நோக்கப்படுவான், எ-று.

அறம் சாரா நல்குரவு ஆவது பொருளும் இன்பமும் சிந்தித்து நல்கூர்தல். இது சுற்றத்தாரும் கைவிடுவர் என்றது.

***ஈ) காளி.:*** பிறர்க்கு உதவியாகிய அறத்தோடு தனக்கு ஓர் இயைபு இல்லாத நல்குரவு ஆகின்ற இது பின்னும் யாது செய்யுமோ எனில்; மற்று நல்கூர்ந்தானைப் பெற்ற தாயானும் உட்படப் பிறன் ஒருவனைப் போலக் காணப்படும்: எனவே இவனால் என்னை? இனி இதுவும் யாம் முன் செய்த பாவத்தில் ஒன்று என்று இகழப்படும், எ-று.

1. பாராமுகம் - (அலட்சியம்) விரும்பி நோக்காமை

*உ) பரிமேல்.*: அறத்தோடு இயைபு இல்லாத நல்குரவு உடையான், தன்னை ஈன்றதாயானும் பிறனைக் கருதுமாறுபோலக் கருதி நோக்கப்படும், எ-று.

அறத்தோடு கூடாமை[2] காரணகாரியங்களுள் ஒன்றாயினையயாமை[3], நல்குரவு ஆகுபெயர்[4], சிறப்பும்மை[5] அவளது இயற்கை யன்புடைமை விளக்கி நின்றது. கொள்வதின்றாதலேயன்றிக் கொடுப்பது உண்டாதலும் உடைமையின் அது[6] நோக்கிச் சுற்றத்தார் யாவருந் துறப்பர் என்பதாம்.

*காரி.*: நல்குரவினையுடையான் என்று உரைத்ததால் ஆகுபெயர் என்றார் என்க.

*ஊ) கவிராசர்.*: தருமத்துடனே கூடாத தரித்திரத்தையுடையவன் தன்னைப் பெற்ற தாயாலும் புறத்தியாரைப் போலப் பார்க்கப் படுவான், எ-று.

தரித்திரம் தருமத்துடனே கூடாமை - காரியம் காரணம் இரண்டும் ஒன்றாய்க் கூடி நினைத்தப்படி முடியாததாம். தரித்திரனானவன் தான் வாங்கிக் கொள்ளுகிறதே அல்லாமல் கொடுக்கக்கூடாதபடியினாலே, சுற்றத்தாரும் அவனைத் துறப்பர், (எ-ம்).

*எ) பழைய2*: புண்ணியஞ் சாரா வறுமையாளனைப் பெற்ற தாயும் பிறனைப் பார்ப்பது போலப் பார்ப்பாள், எ-று.

அறஞ்சாரா வறுமை: முற் பிறப்பிற் புண்ணியஞ் செய்யா வறுமை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*பரிதி.* 'நல்குரவு (வந்தால்) அறம்சாரா; ஈன்ற தாயானும் பிறன் போல நோக்கப்படும்' எனக்கூட்டிப் பொருள் கொள்வர். இதற்கு 'ஒருவன்' என்னும் எழுவாய் வருவித்தல் இன்றியமையாத தாகிறது.

2. அறத்தோடு இயைபில்லாமை என்றும் பாடமுண்டு.
3. அறத்தின் காரியம் செல்வம்; பாவத்தின் காரியம் வறுமை, ஆதலின் அறஞ் சாரா நல்குரவு என்றது காரண காரியங்களுள் ஒன்றானுமியையாமையான் என்று கூறப்பட்டது.
4. நல்குரவு என்னும் பண்புப்பெயர் நல்குரவு உடையவனை உணர்த்துதலின் பண்பாகுபெயராம்.
5. 'ஈன்றதாயானும்' என்பதிலுள்ள ஏது சிறப்பும்மை தாயினது இயற்கையன்புடைமையை விளக்கி நின்றது.
6. அது - கொடுப்பது.

*பரிப்.* 'நல்குரவு - நல்குரவாளன்' எனப் பண்பின் பெயரை ஆகுபெயரான் பண்பியின் மேலதாக்கினர். 'அறஞ்சாரா நல்குரவிற்கு' இவர் தரும் விளக்கம் சிறந்தது.

'வாழ்வுக்குப் பொருந்தாத வறுமை' என்பர் *வ.சுப.மா.* 'முற்பிறப்பில் அறஞ்செய்யாமையால் கரணியத் தொடர்பும், இப்பிறப்பிற் செய்யாமையால் கருமியத் தொடர்பும் இன்மையாம்' என்பர் ***தேவநேயர்.*** 'ஒருவனிடம் அறஞ்செய்ய முடியாத வறுமை வருமானால்' என்பர் ***வரத.***: இவரது எண்ணம் 'நயனுடையான் நல்கூர்ந்தானாதல்' என்பதை (219) உளங்கொண்டு எழுந்த உரையிது.

***குழந்தை*** 'அறஞ்சாரா நல்குரவு - அறநெறியில் நடக்க விடாமை' என்பர். இக்கருத்தும் ***வரத.*** போன்றதே.

வறுமை மடிமையினானும், ***ஆய் ஆண்டிரனைப்*** போலக் கைப்பொருளை அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலும் முதலான அறவழியில் அளித்தலானும் கள்ளுங்கவறும் கணிகையரின்பமும் மேற்கோடலானும் எய்தப் பெறும். அவற்றுள் மடிமையான் வருவன தாயால் அருவெறுக்கப் படுமாயினும், திருத்தப் பெறுந் தன்மையது. ஈகை முதலியவற்றான் அறவழிவந்த வறுமை அனைவரானும் போற்றப்படுவது. 'சாஅயின்றென்ப ஆய் கோயில்' என்பதனானும், 'கெடுவாக வையாது உலகம்' என்பதனானும் தெளியலாம். தாயான் வெறுக்கப்படுவது மில்லாதது. ஏனையதே தாயினும் வெறுக்கப்படுவது என்பதை 'ஈன்ற தாயானும் ஏதிலான் போல நோக்கப்படும்' என்றார். அருமந்தமகன் செய்யும் அனைத்துக் குற்றங்களையும் பொருட்படுத்தாதவள் தாய் என்பார் 'ஈன்றதாய்' என்றார். இதனை 'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்' என்ற (923) குறட்பாவைக் கொண்டு தெளிக. இதனால் பொதுமை யானாய நல்குரவினும் 'அறஞ்சாரா நல்குரவின் கொடுமை' மிகுத்துக் கூறப்பட்டமை ஏற்புடைத்தாதல் காண்க. ஆசிரிய வசனங்கள் துணை நிற்றலானும் கொள்க.

மிடிவந்தால் தன்மஞ் சாராது என்பதால் தாய் பிறன் போல நோக்காள் என்பதை உலகியலையும் கொண்டு தெளிக.

## ஓ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்
குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைத்த
இலம்பாடு நாணுத்தரும் எனக்கு -சிலம்பு-கனாத்.,69-71

........... .................. .......... - இல்லாளை
இல்லாளும் வேண்டாள்மற்று ஈன்றெடுத்ததாய் வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல் நாலடி., 34

கல்லோங் குயர்வரைமேல் காந்தள் மலராக்கால்
செல்லாவாம் செம்பொறி வண்டினம் - கொல்லைக்
கலாஅற் கிளிகடியும் கானக நாட
இலாஅஅர்க் கில்லை தமர், -நாலடி., 283

ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம் - நீத்தருவி
தாழா உயர்சிறப்பின் தண்குன்ற நன்னாட
வாழா தார்க் கில்லை தமர். -நாலடி., 290

நல்கூர்ந்தார்க் கில்லை சுற்றம் என்றுநுண் நுசுப்பு நைய
ஒல்கிப்போய் மாடஞ் சேர்ந்தார் ஒருதடங் குடங்கைக் கண்ணார்
- *சீவக*., 2535

பெண்டிர் மதியார் பெருங்கிளை தானது
கொண்ட விரகர் குறிப்பினின் அஃகுப
வெண்டறை நின்று வெறுக்கை இலராயின்
மண்டினர் போவர்தம் மக்களும் ஒட்டார். - வளையா.,65

சுற்றமும் மனைவாழ்க்கையும் துணையும்
அற்றபோ தணையா ரவர். -அப்பர்.காட்டுப்பள்ளி.,5

.......... எல்லாத் துயரும் உடனாகும்
பிறனின் நோக்கும் ஈன்றாளும் பிள்ளாய் அதுவந் திடின்
இறத்தல் - விநா.அரசி.,152

கெட்டார்க்கு உற்றார் கிளையிலும் இல்லை -பழ.,

**105.8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு. (1048)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: இன்றும் வரும்போலும்; நெருநலும் என்னைக் கொன்றது போலுற்ற நிரப்பிடும்பை, எ-று.

இது நாடோறும் அச்ச முறுத்தும் என்று கூறிற்று.

***ஆ) பரிதி.***: நேற்று மிடியாக்கின மிடி இன்றும் வரும் என்று விதனப் படுவார், எ-று.

***இ) பரிப்.***: இன்றும் வரும் போலும்; நெருநலும் என்னைக் கொன்றது போலும் நிரப்பு இடும்பை, எ-று.

இது நாள்தோறும் அச்சம் உறுத்தும் என்று கூறியவாறு.

***ஈ) காளி.***: இன்றும் என்னை வந்து ஒறுப்பது கொல்லோ? நெருநலும் வந்து கொன்றது போல உயிரையும் உடலையும் செறுத்தும்[1] ஒறுத்தும்[2] அடர்த்தும்[3] வருகின்ற வறுமைத் தொழில், எ-று.

இனி மற்று இவ்வாறு வறுமை கூர்ந்தவர்க்கும் இரவுத்தொழில் அல்லது பிறிது தொழில் இன்மையான் இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

***உ) பரிமேல்.***: நெருநற்றும் கொன்றது போன்று எனக்கு இன்னாத வற்றைச் செய்த நல்குரவு, இன்றும் என்பால் வரக்கடவதோ, வந்தால் இனியாது செய்வேன், எ-று.

அவ்வின்னாதனவாவன மேற்சொல்லிய[4] துன்பங்கள். நெருநல் மிக வருந்தித் தன்வயிறு நிறைத்தா னொருவன் கூற்று.

***ஊ) கவிராசர்.***: நேற்றுக் கொன்றது போல வந்து பொல்லாத காரியத்தைச் செய்த தரித்திரம் இன்றைக்கு என்னிடத்திலே வருகிறதோ? வந்தால், அதற்கு என்ன செய்வேன்?. எ-று.

பொல்லாத காரியமாவன - முன் சொல்லிய துன்பங்கள்.

***எ) பழைய2***: நேற்றுத் துன்பப்படுத்தியது போல இன்றைக்குந் துன்பப்படுத்த வருங் கொல்லோ வறுமை; வந்தால் யாது செய்வேன், எ-று.

நெருநல் : நேற்று. நிரப்பு : வறுமை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இது வறியன் வருந்திக்கூறும் வாய்பாட்டைக் கொண்டு கூறிய குறள்.

1. செறுத்தும் - சினந்தும் 2. ஒறுத்தும் - தண்டித்தும்
3. அடர்த்தும் - நெருக்கியும் 4. மேற்சொல்லிய - 1045-ஆம் குறளில் சொல்லிய.

105.9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது. (1049)

*உரைப்பகுதி :*

***அ) மணக்.***: நெருப்பினுள்ளே கிடந்து உறங்குதலும் ஆகும்: நிரப் பிடும்பையுள் உறங்குதல் யாதொரு முகத்தினானும் அரிது, எ-று.

இஃது உறங்கவொட்டாது என்றது.

***ஆ) பரிதி.***: நெருப்பினுள்ளும் நித்திரை செய்யலாம், அக்கினித் தம்பம்[1] பண்ணி; மிடி வருத்தத்திலே நித்திரை வாராது, எ-று.

***இ) பரிப்.***: நெருப்பினுள்ளே கிடந்து உறங்கலும் ஆகும்: நிரப்பு இடும்பையுள் உறங்குதல் யாதொரு காலத்தினும் அரிது, எ-று.

இஃது உறங்க ஒட்டாது என்றது.

***ஈ) காளி.***: யாதானும் ஒருவாற்றான் நெருப்பினுள் கிடந்து கண் துஞ்சலும் இனிதாய் இருக்கும்: எனினும் அங்ஙனம் புற நெருப்பு அன்றி அகம் சுடும் வெவ்வழலாகிய வறுமைத் தீயினுள் அது தணிக்கும் மருந்து பிறிது இன்மையான் யாதானும் ஒருவாற்றானும் கண்துஞ்சல் வறியோர்க்கு அரிது, எ-று.

***உ) பரிமேல்.***: மந்திர மருந்துகளான் ஒருவனுக்கு நெருப்பிடையே கிடந்து உறங்கலுமாம்: நிரப்புவந்துழி யாதொன்றானும் உறக்க மில்லை, எ-று.

நெருப்பினும் நிரப்புக்கொடிது என்றவாறா யிற்று. இதுவும் அவன் கூற்று[2]. இவை நான்கு பாட்டனும் நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம் கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்.***: மந்திர மருந்துகளினாலே ஒருவனுக்கு நெருப்புக் குள்ளே நித்திரை பண்ணலாம்: தரித்திரம் வந்தால், ஒன்றினா லேயும் நித்திரை வாராது, எ-று.

நெருப்பினும் தரித்திரம் பொல்லாது, எ-ம்.

***எ) பழைய2.***: 'யாதானும்' பாடம்.

மந்திரத்தால், மருந்தால், நெருப்பினுங்கிடந்து உறங்கலாம்: வறுமை வந்தால் யாதொன்றினாலும் கண்ணுறங்கு வதரிது, எ-று.

1. அக்கினித்தம்பம் - சுட்டு ஒன்றுவிக்கும் நெருப்பும் சுடாதவாறு செய்தலாம்.
2. நேற்று வருந்தி இன்று தன்வயிற்றை நிறைத்துக் கொண்டவன் சொல்லிய சொல்லாம்.

ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*'நிரப்பு'* - வயிற்றுத் தீயாகிய அகத்தீ; குடரைக் கொளுத்துவது. *நெருப்பு*-புறத்தீ; உடல் மீந்தோலைப் பொசுக்குவது; துஞ்சலுமாம் என்பது தூங்குதற் கருமையையே உணர்த்தியது. அதனினுங் கொடியதாய் இயலாத ஒன்று பசியுடன் உறங்குதல் என்பதாம்.

*பரிமேல்., மணக்.* முதலானோர் 'மந்திரம் மருந்து', 'அக்னித் தம்பம்' முதலியவற்றால் நெருப்பிடைத் துயிலலாம்; வறுமையோடு உறங்கமுடியாது என்பர்.

*வரத.* 'நெருப்பில் விழுந்தவன் பிழைத்தாலும் பிழைப்பான்: தீப்புண் பட்டவன் உடல் துன்புறுவன்; மனக்கவலை வாழ்க்கைக் கவலையடையான்' எனப்பொருள் கூறுவர். 'துஞ்சல்' என்பதற்குப் 'பிழைத்தல்' என்னும் பொருள் நேர்பொருளாகாமையும் 'தங்கல்' என்பதன் கருத்துப் பொருளாங்கோடல் ஒருவகையான் ஆம் எனினும் ஏனைய வலிந்துகோடல் ஆம் எனவும் கருதக் கிடைக்கின்றன.

**105.10. துப்புர வில்லார் துவரத் துறவாமை**
**உப்பிற்கும் காடிக்கும் கூற்று. (1050)**

**உரைப்பகுதி:**

*அ) மணக்.*: நுகரும்பொருள் இல்லாதார் அப்பொருளின் மேற் பற்றறத் துறவாது வருந்துதல், உப்பிற்கும் காடிக்கும்[1] கேடாக வேண்டியாம், எ-று.

துறப்பாராயின், நன்று என்றவாறாயிற்று, நல்கூர்ந்தார்க்குத் துன்ப முறுதலன்றி, இன்ப நுகரும் நெறி உளவோ என்றார்க்கு, இது துறப்பாராயின், இன்பம் உறலாம் என்று கூறிற்று.

*ஆ) பரிதி.*: மிடியினாலே துயரப்படுவார் மூன்றுவகை ஆசையைத் துறவாமல் இருப்பது, உப்புக்கும் காடிக்கும் கூற்று, எ-று.

*இ) பரிப்.*: நுகரும் பொருள் இல்லாதார் அப்பொருளின்மேல் பற்று அறத் துறவாது வருந்துதல் உப்பிற்கும் காடிக்கும் கேடு ஆக வேண்டி,எ-று.

துறப்பார் ஆயின் நன்று என்றது நல்கூர்ந்தார்க்குத் துன்பம் உறுதல் இன்றி இன்பம் நுகரும் நெறியும் உளவோ? என்றார்க்குத் துறப்பார் ஆயின் இன்பு உறல் ஆம் என்று கூறப்பட்டது.

1. காடி - புளித்த நீர்.

*ஈ) காளி.*: தமக்கு உணவுக்கு உரம் ஆகிய கைப்பொருள் இல்லாதார் முதிரத் துறவாமை முன்னம் தாம் யாவர் மாட்டும் இனிது ஒழுகும் இனிமைக்கும் தமது நடுவு நிலைமைக்கும் ஒரு கூற்று; எனவே அஃது இவற்றைக் கொல்லும் என்பது பொருள், எ-று.

இதில் உப்பு என்பது இனிமை. காடி என்பது நடுவு நிலைமை. அஃதாவது சிறு மக்கள் பலர் கண்புதைத்து நகையாடும் இடத்து அவருள் ஒருவனை இவன் காடிச்சால் என்று நடு இருத்துவர். நடுநிலை ஆக வழக்கு என்பது அறிக. துப்புரவு இல்லாதார் என்பது உண்டிக்கு உரம் ஆகிய கைப்பொருள் இல்லாதார் என்றது. துவரத் துறவாமை என்றது முற்றத் துறவாமை.

*உ) பரிமேல்.*:நுகரப்படும் பொருள்களில்லாதார் தம்மால் செயற்பாலது முற்றத் துறத்தலேயாகவும் அது செய்யா தொழிதல், பிறர் இல்லின் உளவாய உப்பிற்கும் காடிக்கும் கூற்றாம், எ-று.

மானமழியாமையின் செயற்பாலது அதுவே[2]யாயிற்று. முற்றத்துறத்தல்-சுற்றந்தானேவிட்டமையின்[3] ஒருவாற்றான் துறந்தராயினார் நின்ற தம் உடம்பினையும் துறத்தல். அது செய்யாது கொண்டிருத்தல் இரண்டனையும்[4] ஆளப் பண்ணுதலின், அதனை[5] அவற்றிற்குக்[6] கூற்று என்றார். இனி முற்றத் துறத்தலாவது துப்புரவு இல்லாமையின் ஒருவாற்றால் துறந்தாராயினார் பின் அவற்றை மனத்தால் துறவாமை என்று உரைப்பாரும் உளர்[7]. இதனான் அஃது உளதாயவழிச் செய்வது கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்.*: அனுபவிக்க வேண்டும் பொருள்கள் இல்லாதவர் தங்களால் செய்யத்தக்கதாவது, துறந்து சந்நியாஸம் பண்ணுகிறதே. அது செய்யாவிட்டால் புறத்தியார் வீட்டிலே இருக்கிற உப்புக்கும், காடிக்கும் கூற்று வரும், எ-று.

தரித்திரனானவனுக்கு மானம் அழியாமற் செய்ய வேண்டினது துறவேயாம். சுற்றத்தார் சேராமல் துறந்தாலும், தான் துறந்தவன் கனம் பெறுவன், (எ-ம்).

*ஏ) பழைய2*: புசிக்கப்படும் பொருள் இல்லாதவர் செய்ய வேண்டுவது யாது எனில், முற்றத்துறக்க வேண்டும் துறந்து தவசியாகாமற் றிரிவது பிறர் மனையில் உப்பிற்குங் காடிக்குங் கூற்றுவனாம், எ-று.

2. அதுவே - முற்றத்துறத்தலே
3. சுற்றந்தானே விட்டமையின் - சுற்றத்தார் வறியவரிடமிருந்து கொள்வது இன்மையானும் கொடுப்பது வுண்மையானும் தானே நெகிழ விட்டமையால்
4. இரண்டனையும் - உப்பையும் புளித்த நீரையும்
5. அதனை - துவரத் துறவாமையை 6. அவற்றிற்கு - உப்பிற்கும் காடிக்கும்
7. யாவர் எனத் தெரிந்திலது.

துப்புரவு - புசிப்பு: துவரத் துறத்தல் - முழுதுந் துறத்தல்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்.*** 'நுகர்பொருள் இல்லாதார் அப்பொருளின்மேல் உள்ள பற்றினை அறத்துறத்தல் வேண்டும்' என்பர். ***வள்ளுவர் 'ஊழ்'*** என்னும் அதிகாரத்தில் 'உறற்பால ஊட்டாகழியும் எனின் துறப்பார் மன்' (378) என்பதால் 'துப்புரவில்லார் துறக்காமைக்குக் காரணம் அவர்கள் ஊழ்வினைதான்' என்கிறார். அதனைக் கருதாத ***மணக்குடவர்*** 'துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கேடு' என்று அவன் செயல் போலக் கூறல் சிறிதும் ஏற்புடையதன்று.

***பரிமேலழகர்*** - இவருரையில் 'துப்புரவு இல்லார் என்பதனு ரையை மட்டும் சிந்தித்துத் துப்புரவில் உப்பும் காடியும் அடங்கத்தானே செய்யும்; அதற்குக் கேடு என்பதில் என்ன பொருட்சிறப்பு இருக்கிறது என்று எண்ணி, 'இவன் இரந்து பிழைப்பதால், பிறன் இல்லின் உளவாய உப்பிற்கும் காடிக்கும் கேடு' எனப் போக்குக்காட்டுவர். ***வரதராசரும்,*** 'நாட்டின் உணவுக்கும் உப்புக்குமே கேடு' என்பர். 'இரத்தல் இன்னாது' என்பதனை ***ஈகையில்*** (229) வேறோராற்றான் வலியுறுத்திய ஆசிரியர் கருத்தையே காட்டுதலின் கூறியது கூறலுமாகும். அதனால் இதுவும் சிறப்பின்று.

மேலும், ***பரிமேலழகர்*** 'முழுதுந் துறந்து விடுதலேயாகவும்' எனவும், 'தம் உடம்பினையுந் துறத்தல்' எனவும் உரை கூறுதல் 'பிறப் பறுக்கலுற்றார்க்கே உடம்பும் மிகை' எனத் துறத்தலைப் பிறப்பறுப் பார்க்கே ஆசிரியர் விதித்தலின் ஆசிரிய வசனத்தோடு மாறுகோளாத லான் சிறப்பின்று. ***வரத.பரிமேலழகரை*** ஒட்டியுரைப்பர்.

***காளிங்கர்,*** 'உப்பு-இனிமை, காடி-நடுநிலைமை; சிறுவர் கண்புதைத்து விளையாடும்போது ஆட்டத்தினைக் கண்காணிப் பானுக்கு அக்காலத்து வழங்கிய பெயர்' என்பர். உப்பு இனிமைப் பொருளில் சங்ககால வழக்கன்றாயினும் ஆசிரியரே 'கடலிற்றோன்றிய உப்பு' 1328ம் ***குறளில்*** ஆண்டிருப்பதால் பொருந்தும். 'காடி-காடிச்சால், அதிலிருந்து 'நடுநிலை' எனப்பொருள் கொணருதல் ஒருக்கால் வட்டார வழக்காய் அவர் காலத்ததாகலாம். இலக்கியங்களில் எங்கும் ஆட்சி யிருப்பதாக அறியக்கூடவில்லை. ஆதலால் இக்***குறளுக்கு*** உரைகாணும் வகையினும், அவற்றை இயைபுறுத்தி விளக்கும் வகையினும் ***காளிங்கர்*** பெரிதும் முயன்றுள்ளார் எனலாம். அன்றியும் துப்பு+உரவு எனப்பிரித்து 'உணவு உரமாகிய கைப்பொருள்' என்பதும் சிறப்பிலது.

*பரிதியார்* கூறும் மூவகையாசையையும் துறவாமல் இருப்பது என்பதும் பொருத்தமிலது. மிடியே மிடியால் விளைவது என்பதை 'அல்கா நல்குரவு அவா எனப்படுமே' என்பது கொண்டு தெளிக.

மிடியர் துவரத்துறப்பாராயின், அது நோன்பின் பாற்பட்டுத் தவத்தின்பாற்பட்டு நோற்பார்சிலர் என்பதனுள் எண்ணப்பட்டு நுகர்வது நுகர்ந்து வாழும் செல்வமாவது எய்தலாம் என்னும் குறிப்பினது எனலாம்.

'உப்பிற்கும் காடிக்கும் கூற்று' 'தரைக்குப் பாரம்' 'சோற்றுக்குத் தண்டம்' என்பன போன்ற முதுமொழி யமைந்த தொடராட்சியாம்.

# 105. நல்குரவு

| | இன்மையின் | இன்மையென | தொல்வரவும் | இற்பிறந்தார் | நல்குரவு | நற்பொருள் | அறஞ்சாரா | இன்றும் | நெருப்பினுள் | துப்புரவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 2 | 3 | 8 | 5 | 4 | 10 | 7 | 6 | 9 |
| பரிதி. | 6 | 8 | 2 | 10 | 4 | 1 | 3 | 9 | 5 | 7 |
| பரிப். | 1 | 2 | 3 | 8 | 9 | 4 | 5 | 7 | 6 | 10 |
| காளி. | 8 | 9 | 6 | 2 | 3 | 1 | 7 | 10 | 4 | 5 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

105-வது அதிகாரம் 'நல்குரவு' முற்றிற்று.

******

# 106. இரவு

*அதிகாரப் பொருள் :*

*அ) மணக்.*: இரவாவது பிறர்மாட்டுச் சென்று இரந்து கோடல். இது நல்கூர்ந்தார் செயலாதலின், அதன்பின்கூறப்பட்டது, எ-று.

*இ) பரிப்.*: இரவு ஆவது பிறர் மாட்டுச் சென்று இரந்து கோடல். இது நல்கூர்ந்தார் செயல் ஆதலான் அதன்பின் கூறப்பட்டது.

*உ) பரிமேல்.*: இனி மானம் தீரா இரவு இரவாமையோடு ஒத்தலின் அதனாலும் வீடெய்தற் பயத்ததாய உடம்பு ஓம்பப் படும் என்னும் அறநூல் வழக்குப்பற்றி மேல் எய்திய[1] துவரத்துறத்தல்[2] விலக்குதற் பொருட்டு இரவு கூறுகின்றார்.

*ஊ) கவிராசர்.:* அஃதாவது இரந்து உண்டு பிழைக்கிறது, எ-று

*ஏ) பழைய 2:* அஃதாவது வறுமையால் இரத்தல், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

*பரிமேலழகர்* இரவை இருவகையாகப் பிரித்து 'மானந்தீரா இரவே' இவ்வதிகாரத்தால் கூறப்பெறுவது என்பர். ஏனோர் உரைகள் இயல்பானவை.

1. மேல் எய்திய - நல்குரவு அதிகாரத்தில் 10-வது குறளிற் கூறிய
2. துவரத் துறத்தல் - முற்றுந் துறத்தல்.

*தேவநேயர்* 'பொருட்குறை மட்டுமன்றி உறவினருதவியும், முன்னோர் தேட்டுமில்லாத உடற்குறையுடையோரும் இரத்தல் ஏற்புடையது' என்பர்.

*வரத.* 'பொருளைப் பெற தன்னிலையைத் தாழ்த்திக் கொண்டும், கொடுப்போனைப் புகழ்ந்துயர்த்தியும் இரத்தல் என்பர். பிற்கால உரைகளில் கருத்து மாற்றமின்று.

**106.1. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்**
**அவர்பழி தம்பழி அன்று. (1051)**

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: தமக்கு இல்லாதவிடத்து இரக்கத்தக்காரைக் காணின் இரந்து கொள்க; அவர் இல்லை என்பாராயின், அஃது அவர்க்குப் பழியாம். தமக்குப் பழியாகாது, எ-று.

இது கூறுகின்ற இரத்தல் எல்லார்மாட்டும் செய்யலாகாது என்பதூஉம், தக்கார் மாட்டு இரத்தல் ஆம் என்பதூஉம் கூறிற்று.

***ஆ) பரிதி.***: தாதா[1] வானவனைத் தேகி[2] என்று கேட்க நாஸ்தி[3] என்றால் அவர் பேரில் குற்றம்; தம்மிடத்தில் குற்றமில்லை, எ-று.

***இ) பரிப்.***: தமக்கு இல்லாத இடத்து இரக்கத் தக்காரைக் காணின் இரந்து கொள்க. அவர் இல்லை என்பர் ஆயின் அஃது அவர்க்குப்பழி ஆம்; தமக்குபழி ஆகாது, எ-று.

ஈண்டுக் கூறுகின்ற இரத்தல் எல்லார் மாட்டும் செய்யல் ஆகாது என்பதூஉம், தக்கார் மாட்டு இரத்தல் ஆம் என்பதூஉம் கூறிற்று.

***ஈ) காளி.***: இங்ஙனம் வறியோர்மாட்டு இரக்கம் உடையாரைக் கண்ட இடத்துத் தாம் ஒன்று இரக்கவேண்டின் இரந்து கொள்க; மற்று அவர் கரக்க[4] நினைப்பின் அஃது அவர் பழியாம்; இத்துணை அல்லது வேறு தம்பழி என்பது ஒன்று அன்று, எ-று.

***உ) பரிமேல்.***: நல்கூர்ந்தார் இரத்தற்கு ஏற்புடையாரைக் காணில், அவர்மாட்டு இரக்க; இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழியாகாமையான், எ-று.

1. தாதா - கொடையாளி
2. தேகி - கொடு
3. நாஸ்தி - இல்லை
4. கரக்க - மறைத்து வைக்க

இரவு என்னும் முதனிலைத் தொழிற்பெயரது இறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தால் தொக்கது[5]. இரத்தற்கு ஏற்புடைய ராவார். உரையாமை முன்னுணரும் ஒண்மை உடையராய் மாற்றாது ஈவார். அவர் உலகத்து அரியராகலின் காணின் என்றும், அவர்மாட்டு இரந்தார்க்கு இரவான் வரும் இழிவின்மையின் இரக்க என்றும், அவர் ஈதலில் குறைகாட்டாமையின் கரப்பின் என்றும் காட்டுவராயின்[6] அப்பழி தூவெள்ளறுவை[7]க்கண் மாசுபோல அவர்கள் கடிது சேறலின் அவர்பழி என்றும், ஏற்பிலார்மாட்டு இரவன்மையின் தம்பழியன்று என்றும் கூறினார்.

> ***காரி.***: இரத்தக்கார் - இரத்தற்கு ஏற்புடையார் என்று உரைத்து, இரவு என்னும் முதனிலைத் தொழிற்பெயர் இறுதிக்கண் நான்கனுருபு விகாரத்தால்தொக்கது என்றார் என்க. "உள்ளப்படுவன[8]" என்னும் கோவை யாருள் 'உரைத்தக்கவர்' என்பதும் அது.

**ஊ) *கவிராசர் உ.***: தரித்திரர் தமக்கிரத்தற் கேற்றவர்களைக் கண்டால் அவரிடம் இரக்க; அவர்கள் இல்லையென்று ஒளித்தாராயின் அவர்களுக்குக் குற்றமாவதல்லது தமக்குக் குற்றமில்லை, எ-று.

இரத்தற்கேற்றவர்கள் - கேட்பதற்கு முன்னே அறிந்து கொடுக்கிறவர்களும், கேட்டது மறாமற் கொடுக்கிறவர்களுமாம்.

**எ) *பழைய உ.***: வறுமை கூர்ந்தார் இரக்கத் தக்கவரைக் காணில் அவரிடத்து இரக்க; இரந்தால் அவர் இல்லை யென்றாராயின் அவர்க்குப் பழியாகாமற்றமக்குப் பழியாகாது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'இரத்தக்கார்'*** என்பதற்குக் ***காளிங்கர், வரத.***, 'வறியார் மாட்டு இரக்கம் உடையார்' என்பர். ***பரிமேலழகர்*** 'குறிப்பறிந் தீவாரையும் மறுக்காது யீவாரையும்' குறிப்பர். ***பரிதியுரை*** 'மறுக்காது ஈவாரைக்' குறிக்கிறது. ***பரிமேலழகர்*** தரும் விளக்கம் இக்குறட் கருத்தை நன்கு விளக்குவது.

***தேவநேயரும், பரிமேலழகரை*** ஒத்துரைப்பர். இவர்கட்கு 'இல்லெனன்னும் எவ்வம் உரையாமையீதல்' என்ற ஆசிரிய வசனம் வழிகாட்டியுள்ளது. இக்கருத்தை ***இராமலிங்கனார்*** 'மறுத்து இரக்கத்தக்க செல்வ நிலையுள்ளவர்களையே கேட்க வேண்டும்' என்பர்.

5. இரத்தற்குத் தக்கார் என்பது இரத்தக்கார் என்றாயது நான்கனுருபு இறுதிக் கண் தொக்கதாம்.
6. காட்டுவாராயின் - குறைகளைக் காட்டுவாரானால்
7. தூவெள்ளறுவை - மிக வெண்மையான ஆடை
8. திருக்கோவையார், 87

அவர் கூறும் மறுப்பு; 'குறிப்பறிந்து கொடுப்பவர்கள் கேட்டும் இல்லையென்னார்கள்'. அப்போது 'அவர்பழி தம் பழியன்று' என்றது பொருளற்ற தொடராய்விடும். அன்றியும் செல்வ முடையவனைக் காண்பது போல இரக்கக்குணமுடைய அவரைக் குறிப்பான் அறிவது எப்படி? ஆகையால் ***பரிமேலழகர்*** உரை ஏற்புடையதன்று' என்பர். 'அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சங்கடுத்தது முகம் காட்டுமாதலின்' இரத்தக்காரின் இரக்கக்குணங் கண்டு துணிதல் எளிதேயாதலின், இல்லை என்னாமை யால் பழிவரப் போவதில்லை என்ற காரணம் மிகப் பொருத்தமானது.

'அவர்பழி-இல்லை யென்றலால் இரக்கப்பட்டாருக்கு வருவது பாவமும், இரப்பார்க்கு வருவது பழியும்' என்ற பொருள் நயமுடையத்து.

***வரத., இராமலிங்கனார்*** மறுப்புரைக்கு மறுப்புக் கூறுவார் போல, 'நல்லமனமுடையாரைக் காணின் கேட்கலாம். என்ன இருந்தாலும் ஈயென இரத்தல் இழிந்தது ஆயினும் 'ஈயேன் என்றல், அதனினும் இழிந்தாதலைக் கருதி, அவர் பழி தம் பழியன்று என்றதாம்' என்பர். 'இரக்கமுள்ளவர் கொடுக்காமலிருப்பதும் உண்டு அது அவர்கள் காலச் சூழ்நிலையும் பொருள் நிலையும் ஆம்' எனப் ***பரிமேலழகர்***க்குத் துணைபுரிவர் இவர்.

இவைகளனைத்தையும் எண்ணி, பொருணிலையும், இரக்கக் குணமும் உடையாரிடம் கேட்க, இல்லை என்றால் அவர்களுக்கே பழியாம் என்ற உரையே சிறந்தது.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***இரக்க இரத்தக்கார் காணின் :***

ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதா மாண்கடன் -நாலடி., 98

தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்பர் எனப் பட்டார்க்கு
உற்ற குறையை உரைப்பதாம் - தெற்ற
அறையார் அணிவளையாய் தீர்தல் உறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய். - பழ.நா., 134

புரந்தாடு மையர் திருவெங்கை வாணர் பொருப்பில் நின்ற
வரந்தாழ் அயில்கண் மடமா திரத்தக்கர் ஆதலினால்
இரந்தாய் குவமிவர் தந்தன நாமின் றினிய நெஞ்சே
கரந்தால் நமக்குப் பழியுள தாயின் கழறுகவே. - திருவெங்கை.,6

இயல்வது கரவேல் -ஆத்தி.,3

**106.2. இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை**
**துன்பம் உறாஅ வரின். (1052)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: 'ஒருவர்க் கிரத்தல்' - பாடம்.

இரத்தல் ஒருவர்க்கு இன்பமாம்; இரக்கப்பட்ட பொருள்கள் தான் வருத்தமுறாதவகை எய்துமாயின், எ-று.

இது வேண்டிய பொருள் பெறின் துன்பமாகாது என்றது.

***ஆ) பரிதி.***: தேகி என்பார்க்கு மகிழ்ச்சி எய்தும்; தாதாவிடத்திலே தயவுண்டாகில், எ-று.

***இ) பரிப்.***: இரத்தல் ஒருவற்கு இன்பம் ஆம்: இரக்கப்பட்ட பொருள்கள் தாம் வருத்தம் உறாவகை எய்தும் ஆயின், எ-று.

பழிக்கப்படாது ஆயினும் துன்பம் ஆகுமே என்றார்க்கு, வேண்டின பொருள் பெறின் துன்பம் ஆகாது என்று கூறப்பட்டது. இவை மூன்றினானும் இரவு தீது என்பாரை மறுத்தவாறு ஆயிற்று.

***ஈ) காளி.***: 'இரந்தவர்' பாடம்.

பின் எஞ்ஞான்றும் இரப்பு என்னும் துன்பம் உறார் ஆயின், ஒருவர்பால் சென்று ஒருவர் இரத்தல் பெரிதும் துன்பமே அன்றே. அதுவும் ஒருவர்க்கு இன்பம் தரும். எப்பொழுது எனில் அங்ஙனம் ஒருவர் மாட்டு இரந்தவர் பின்பு எஞ்ஞான்றும் ஒருவறுமைத் துயர் உறாவாறு வாய்ப்பைப் பெற்று வருவாராயின், எ-று.

***உ) பரிமேல்.***: ஒருவற்கு இரத்தல் தானும் இன்பத்திற்கு ஏதுவாம். இறந்த பொருள்கள் ஈவாரது உணர்வுடைமையான் தான் துன்புறாமல் வருமாயின், எ-று.

இன்பம் ஆகுபெயர்[1]. உறாமல் என்பது கடைக்குறைந்து நின்றது. துன்பம் சாதியொருமைப் பெயர். அவையாவன ஈவார்கண் காலமும் இடனும் அறிந்து சேறலும் அவர் குறிப்பறிதலும், அவரைத் தம் வயத்தராக்கலும், அவர் மனநெகிழ்வன நாடிச் சொல்லலும் முதலியவற்றான் வருவனவும், மறுத்துழி வருவனவுமாம். அவை[2]யுறாமல் வருதலாவது அவர் முன்னுணர்ந்து ஈயக்கோடல். 'இரந்தவர் துன்பமுறாவரின்' என்று பாடம் ஓதி, 'இரக்கப்பட்டவர்

1. இன்பம் என்பது இன்பத்திற்கு ஏதுவை யுணர்த்துதலால் காரியவாகு பெயர்.
2. அவை - துன்பங்கள்

பொருளின்மை முதலியவற்றால் துன்புறாது எதிர்வந்து ஈவாராயின்' என்று உரைப்பாரும் உளர்[3]. இவை இரண்டு பாட்டானும் நல்குரவான் உயிர் நீங்குமெல்லைக் கண் இளிவில்லா இரவு விலக்கப்படாது என்பது கூறப்பட்டது.

***காரி.***: உறாமல் என்பது, உறா எனக் கடைக்குறை யாயிற்று. துன்பம் - சாதிப்பெயர்.

***ஊ) கவிராசர்.***: இரக்கிறதும் சுகமாம், இரக்கப்பட்ட பொருள் இரக்கிறவனைத் துக்கப்படுத்தாமல் வந்தால், எ-று.

துக்கப்படாமல் வருகிறதாவது-கொடுக்கிறவர்கள் இன்று நாளை என்று திருப்பாமலும், மானமழிய வைது திட்டாமலுங் கொடுத்தாற் சுகமாம் என்பதாம்.

***எ) பழைய2.***: இரத்தலாவது துன்பமே யல்லாமல் இன்பமும் ஆம்; ஒருவற்கு இரந்த பொருள்கள் ஈவார் துன்பமுறாமல் தானுந் துன்பமுறாமல் வருமாயின், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'இரந்தவை துன்ப முறாவகை வரின்' என்ற ***மணக்குடவர்*** உரை, 'இரவலன் இரந்த பொருள்கள் தமக்குத் துன்பமில்லாமல் வந்து சேருமாயின்' எனவும், 'இரந்த பொருள்களால் இரக்கப்பட்டவன் துன்பமுறாவகை வரின்' எனவும், இரந்தவன், அவன் இதுபோதில்லை என்பதால் மனம் வருந்தாமல் வரின் எனவும், நிரம்பக் கொடுத்தலால்' இரந்தவன் வாழ்நாள் முழுதும் வருந்தாவகை நிரம்பக் கொடுத்தால்' எனவும் பல பொருள் தந்து 'மயங்க வைத்தல்' என்னும் குற்றத்திற்கு இலக்காகிறது. அவர் தரும் விளக்கமும் அத்தகையதே. இதே கருத்து இலனென்னும் எவ்வம் உரையாமையீதல்' என்பதற்கும் அமைதலின் பல பொருள் தரும் சிறப்பினது எனலுமாம்.

இவற்றுள் முதலுரை 'கேட்ட பொருள்கள் கேட்டவன் துன்புறா மல் தானே தன்னிடம் தேடிவந்து சேரின்' என்னும் கருத்தின தாயின் மிக்க இன்பம் பயப்பதாம். துன்பம் துய்த்தல் முதலானவற்றான் விளைவது. இது இலனென்னும் ***குறளாற்*** போதராமையிற் சிறந்ததாம். இதனைக் கொள்ளின் ***குறளும்*** குற்றமுடையதாகாது. கருதிக் கொள்க.

***பரிதியுரை*** வழக்கம் போலக் கருத்தேயாகும். ***பரிப்பெருமாள்*** இக்குறட்பாவை நான்காவதாகக் கருதினமையின் இவை மூன்றினாலும்' என்றது ***மணக்குடவரும் பரிப்பெருமாளும்*** கொண்ட குறள் முறை வைப்பினைக் கருதிக் கூறியதாம்.

3. இங்ஙனம் கொண்டவர் காளிங்கர்

உரையொன்றாயினும், ***மணக்குடவர்*** 'வேண்டிய பொருள் துன்பமாகாது' என்பர். ***பரிப்பெருமாள்*** 'பழிக்கப் படாதாயினும் துன்பமாகுமே என்றாற்கு வேண்டின பொருள் பெறின் துன்பமாகாது' எனச் சிறிது விளக்கிக் கருத்துரைப்பர். எங்ஙனமாயினும் 'வேண்டினபொருள்' என்பது மயங்க வைப்பதாம்.

***தேவநேயர், பரிமேலழகர்*** கருத்திற்கே சிறிது விளக்கந் தந்து தெளிவிப்பர். துன்பம் இன்பங்களின் தோற்ற வாயில்களை விரிப்பதும், ***பரிமேலழகர்*** கொள்ளும் வேற்றுரைக்கும் பாடத்திற்கும், 'என்று முகமன் இயம்பாதவர்கண்ணும், சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்' என்று நன்னெறியடிகளை மேற்கோள் காட்டி அரண் செய்வதும் பாராட்டுக் குரியது. 'இரந்தவர்' எனப்பாடம் கொள்பவர் ***காளிங்கர். காளிங்கர்*** உரை 'கொடுப்பவரின் வரையாதீயும் வள்ளன்மையையும், பொருள், மிகுதியையும்' குறிப்பது. ***இராம.*** 'கேட்பாரு கொடுப்பாரும் வருந்தாமல் வரின் இருவருக்கும் இன்பம்' என்பது இக்***குறட்கருத்து*** என்பர். இவற்றுட் சிறந்தன இயைத்துப் பொருள் கோடல் தகும்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***இன்பம் ஒருவற்கு இரத்தல் :***

வேளாண் வாயில் வாய்ப்பக் கூறி -பொருந.,75

புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
யுள்ளிச் சென்றோர்ப் பழியலர். -புறம்.,

பிச்சை புக்குண்பான் பிளிற்றாமை முன்னினிதே -இனியவை., 39:1

## 106.3. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னின்(று)
## இரப்புமோர் ஏஎர் உடைத்து. (1053)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** கரப்பிலாத நெஞ்சினை யுடைய ஒப்புரவறிவார், முன்பே நின்று, இரத்தலும் ஓர் அழகுடைத்து[1], எ-று.

இஃது ஒப்புரவறிவார்மாட்டு இரத்தலாம் என்றது.

***ஆ) பரிதி.:*** நாஸ்தி என்னும் சொல் அறியாதார் உலகம் செய்யும் முறைமை அறிவாரிடத்திலே தேகி என்பதும் பெருமை உடைத்து, எ-று.

1. ஏர் என்பதற்கு எழுச்சி எனப்பொருள் கண்டு இங்ஙனம் விளக்கந் தருவர்.

***இ) பரிப்.:*** கரப்பு இல்லா நெஞ்சினை உடைய ஒப்புரவு அறிவார் முன்பே நின்று இரத்தலும் ஓர் அழகு உடைத்து, எ-று.

ஏர் யாமும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கருதுதல். இஃது ஒப்புரவு அறிவார் மாட்டு இரக்கல் ஆம் என்றது.

***ஈ) காளி.:*** இரவலர்க்கு என்றும் இலரென்பது இலருமாய் நெஞ்சினால் ஈதல் கடப்பாட்டின் பயனும் அறிவார் யாவர்? மற்று அவர்முன் நின்று பிறர் ஒன்று இரக்கும் இரப்புத் தானும் இங்கு ஓர் அழகு உடைத்து, எ-று.

***உ) பரிமேல்.:*** கரத்தலில்லா நெஞ்சினையுடைய மானமறிவார் முன்னர் நின்று அவர்மாட்டு ஒன்று இரத்தலும், நல்கூர்ந்தார்க்கு ஓர் அழகுடைத்து, எ-று.

'சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு'[2] என்றதனால் அவர்க்கு[3] அது[4] கடன் எனப்பட்டது. அதனை யறிதல் - சொல்லுத லுற்று உரைக்கலாகாமைக்கு ஏதுவாய அதன் இயல்பினை அறிதல். அவ்வறியுடையார்க்கு முன்னிற்றல் மாத்திரமே அமைதலின் முன்னின்று என்றும், சொல்லு மாத்திரமே அமைதலின் முன்னின்று என்றும், சொல்லுதலான்வரும் சிறுமை எய்தாமையின் ஓர் ஏருடைத்து என்றும் கூறினார். உம்மை அதன் இழிபு விளக்கி நின்றது.[5]

***ஊ) கவிராசர்.:*** ஒளியாமற் கொடுக்கவல்லவர்களும், இரக்கிறவன் மனது அறிந்து கொடுக்கிறவர்களுமாய் இருக்கிறவர்கள் முன்னே நின்று இரக்கிறதும் தரித்திரற் கொரு அழகாம், எ-று.

தரித்திரர் கேட்ட பொருள் குப்பென வந்தால் அது மிக நன்மையாம்.

***எ) பழைய2:*** 'கரப்பில்லார்' - பாடம்.

ஒளித்தலில்லாத நெஞ்சுடைய கொடுக்கு முறைமை யறிந்து கொடுப்பார் முன்னே நின்று இரத்தல் வறுமையாளர்க்கு ஓர் அழகுடைத்து.

ஏர் : அழகு, கடனறிவார் : இரப்பவர் மான மறிவார்.

---

2. குறள்.,963
3. அவர்க்கு - கரப்பில்லா நெஞ்சத்தார்க்கு
4. அது - மானமறிதல்
5. இரப்பும் என்பதிலுள்ள உம்மை இரத்தல் தொழிலின் இழிவை விளக்கி நின்றது. இது இழிவு சிறப்பும்மை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***டன்'***

'ஒப்புரவு' ***மணக்., பரிதி.;*** 'கடப்பாடு' ***காளிங்கர்;*** 'மானம்' எனப் பொருள் கூறுவர் ***பரிமேலழகர்.*** எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையே மானம் ஆதலின் இங்ஙனம் உரைத்தனர் போலும். 'இரப்பவன் மனம் அறிந்து கொடுப்பவன்' என்பர் ***கவிராசர்.*** 'கொடுக்கும் முறைமை' என்பர் ***பழைய உரை 2.***

இவற்றுள் ஈகை புண்ணியப் பயனையுடையது ஒப்புரவு உலகத்தோடு ஒத்து ஒழுகும் ஒழுக்கம் ஆதலின் 'ஒப்புரவு', 'கடமை', கடப்பாடு என்ற பொருள்கள் சிறந்தன.

***'ஏர்'***

'அழகு' ***மணக்., காளி., பரிமேல்., பழைய.;*** 'பெருமை' ***பரிதி.;*** 'யாமும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கருதுதல்' என்பர் ***பரிப்.***; இப்பொருள் ஏர்-எழுச்சி. இங்ஙனம் செய்ய வேண்டும் என்ற உள்ளத்தினூக்கம் என வந்ததாம். ஏர் எழுச்சிப் பொருட்டாதலை, 'வலனேர்பு எழுதரு' (***திருமுருகு.*** 1வரி) 'பனிக் கடல் பருகி வலனேர்பு ***(முல்லை 4)*** முதலிய ஆட்சியாற் கொள்க.

## ஓ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

தொடுத்துங் கொள்ளாது அமையலென் அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிபிறந் தோயே -புறம்.,164:10-14

.......... நின்னுழை வந்தோர்
மாண்டவ ரல்லவர் மாண்பில ரென்றான் -கம்ப.,442

......... வண்டினம் வச்சை மாக்கள்
என்றவர் நிதியம் வேட்ட விரவல ரென்ன வார்ப்ப - கம்ப., 1065

............ மேன்மை தோன்ற
வெறிபடை யரக்க ரேற்றா ரேற்றதை மாற்றா னென்னை
வறியவ ரொருவன் வண்மை பூண்டவன் மேற்சென் றென்ன
- கம்ப., 7290

**106.4. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. (1054)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** கரத்தலைக் கனவின்கண்ணும் அறியாதார் மாட்டு, இரந்து சேறலும்[1] கொடுப்பதனோடு ஒக்கும், எ-று.

***ஆ) பரிதி.:*** தேகி என்பது நல்லதே; அது எதனால் என்னில் பொல்லாரி டத்தில் கேளாது இருப்பாராகில், எ-று.

***இ) பரிப்.:*** கரத்தலைக் கனவின்கண்ணும் அறியாதார்மாட்டு இரந்து சேறலும் கொடுப்பதனோடு ஒக்கும், எ-று.

ஈதல் போலும் என்றது இரந்தேம் என்று சிறுமை உறுதல் இன்றி உயர்ந்தாரைப் போலப் பெருமிதத்தர் ஆவர் என்றது. மேல் இகழாது ஈவார்மாட்டு இரக்கல்[2] ஆம் என்றார். அவர் மூவகையர் ஆதலின் முற்பட உதவுவார்மாட்டு இரக்கல் ஆம் என்று கூறப்பட்டது. கரத்தல் கனவிலும் தேறாதார் என்றமையால் உதவுவார் என்று கொள்ளப்படும்.

***ஈ) காளி.:*** இரத்தலும் ஈதலே போலும் இனிமையை உடைத்து; அஃது எவ்விடத்து எனில், இல்லை என்னும் சொல்லினைக் கனவிலும் அறியாதவர் இடத்து; எனவே இரவு பகல் என்னும் பொழுது வரைவு இன்றி எப்பொழுதும் பிறர் மாட்டு இரக்கம் உடைய இயல்பினரிடத்து, எ-று.

***உ) பரிமேல்.:*** தமக்கு உள்ளது கரத்தலைக் கனவின் கண்ணும் அறியாதார்மாட்டுச் சென்று ஒன்றனை இரத்தலும், வறியார்க்கு ஈதலே போலும், எ-று.

உம்மை ஈண்டும் அவ்வாறு நின்றது.[3] தான்[4] புகழ் பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின் 'ஈதலே போலும்' என்றார். ஏகாரம் ஈற்றசை.

***காரி.:*** ஏகாரம் - ஈற்றசை.

***ஊ) கவிராசர்.:*** தன் உடைமையை இரக்கிறவர்களுக்குக் கொடாமல் ஒளிக்கிறதைக் கனாவிலேயும் அறியாதவர்களிடத்திலே போய் ஒரு பொருளை இரக்கிறது தான் கொடுக்கிறதோடொக்கும், எ-று.

1. இரந்து சேறல் - பிச்சை எடுக்கச் செல்லுதல்.
2. இரக்கல் - இரத்தல்
3. உம்மை இரத்தலின் இழிவை விளக்கி நின்றது.
4. தான் - இரத்தல்.

ஒளியாமற் கொடுக்கிறதினாலே தன் புகழ் கெடாது. அதனாலேயே கொடுக்கிறதற்குச் சரியா மென்றார்.

*ஏ) பழைய2.*: தமக்கு உள்ளதை ஒளித்தல் கனவினும் அறியா தாரி டத்தும் சென்று இரத்தல், தாம் ஒருவற்கு ஈதலே போலும், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

***'இரத்தலும் ஈதலே போலும்'*** என்பதற்குப் பொருள் காண் பதில் உரையாசிரியர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர்.

'இரந்து சேறலும் கொடுப்பதோடொக்கும்' ***மணக்.;*** இதற்குப் ***பரிப்பெருமாள்*** தரும் அமைதி, 'ஏற்றாரும் ஈந்தார் போலப் பெருமிதத்தாராவர்' என்பது. ***காளிங்கர்*** 'கனவிலும்' என்றதால் கனவுக்குரிய இரவினும், கனவினும் என்ற உம்மையாற் போந்த நனவு நிகழும் காலமாகிய 'பகலினும்' என்றார். 'இர' என்னும் பகுதியடியாக 'அல்' என்னும் தொழிற்பெயர்கள் விகுதியுணர்த்தி வந்த சொல் இரக்கல் என்பது. அரிய ஆட்சி. 'ஈதலே போலும்' என்பதற்குப் ***பரிமேலழகர்*** தரும் உரையும் நயமுடையதே. ***தேவநேயர்.*** 'இழிவுந் துன்பமுமின்றி வருதலானும், ஈவோனுக்குப் புகழைத் தருதலானும், 'ஈதலே போலும்' என விளக்குவர்.

***இராம.*** 'இரப்பவர், தாம் சென்று இரப்பதையும், ஏற்பதைப் போலவே வரவேற்பார்கள்' என்பர். இதில் இருவகையான கருத்து அமைதலைக் காணலாம். இரப்பான் இரக்கின்றான்; ஈவான் அவன் தன்னிடம் வந்து இரத்தலையும் அவனுக்குத் தான் ஈந்ததைப் போல மகிழ்ந்து வரவேற்பான் என்பது ஒன்று. இவர் தரும் கருத்து விளக்கத்தாற் போந்தது 'ஒருவன் இரப்பவனுக்கீகின்றான். ஏற்கின்ற இரப்பான் ஈவானுக்குப் புகழையும் புண்ணியத்தையும் கொடுக்கிறான்; அவன் அவற்றை ஏற்றுக் கொள்வதாகக் கருதுகிறான்' என்பது. ***குறட்***கருத்து இரப்பவனே ஈவான் எய்தும் இன்பத்தை யடைகிறான் என்பது. இவர் கூறும் பின் உரையின் போக்கு இரத்தல், இரக்கப்படுவானுக்கு ஈதலாகிறது என்பது. ஆகவே ஆசிரியர் கருத்தை ஒட்டிப் போகாமையின் இவர் உரை சிறப்புடையதாகாது.

கரத்தல் கனவினும் தேற்றாதார் இரப்பார் இரத்தல் இல்லாத நாளை இன்ப நாளாக எண்ணார்; இரப்பார் இரந்து, ஈவார்க்கு இன்பம் உண்டாக்கும் ஈகையையே செய்கின்றார்கள். ஆதலின் இரத்தலும் ஈதலே போலும் என்றார் எனலும் ஏற்புடையதாம். இவ்வுரைக்கண் இரப்பார்க்கே ஈவார் எய்தும் இன்பம் விளைதலைக் காணலாம்.

### ஓ) ஒப்புமைப்பகுதி :

***கரத்தல் கனவிலும் தேற்றாதார் :***

இரந்தோர்க் கெந்நாளும் காலம் பகராதார் -சம்பந்தர், சீகாழி,9

புயல்மறந்து மீன்கனிபுக் கூன்சலிக்குங் காலத்தானும்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய மெய்யர்
-சம்பந்தர், கழுமலம், 3

கரவி லாளர் விழக்களை கண்ணிலா
இரவ லாளரி னெங்கு மிரிந்தவால் -கம்ப., 6858

### ஓ) மேற்கோள் பகுதி :

***சிவஞான.:*** "காட்டிய கண்ணே தனைக்காணா" காட்டிய என்பது தன் வினைப் பொருள்பட நின்றது. "தேற்றாதார் மாட்டு" என்புழிப் போல.
-சிவஞான.சூ.9.அதி.,2

106.5. கரப்பிலார் வையகத் துண்மையான் கண்ணின் (று)
இரப்பவர் மேற்கொள் வது. (1055)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** ஒருவன் முன்னே நின்று இரத்தலை இரப்பார் மேற்கொள்வது கரப்பிலாதார் உலகத்து உண்டாதலானே; மற்றொன்றாலன்று, எ-று.

மேல் கரவாதார்மாட்டு இரக்க என்றார்; உலகத்தில் அவரைப் பெறுதல் அரிது என்பதற்கு இது கூறினார்.

***ஆ) பரிதி.:*** தேகி என்றால் நாஸ்தி என்னாதபேர் பூமியில் இருக்கையினாலே இரப்போர் பெரியவர், எ-று.

***இ) பரிப்.:*** கரப்பு இல்லாதார் உலகத்து உண்டு ஆதலானே ஒருவன் முன்னே நின்று இரத்தலை இரப்பார் மேற்கொள்வது, எ-று.

மேல் கரவாதார் மாட்டு இரக்க என்றார்: அஃது உலகத்துப் பெறுதல் அரிது என்றார்க்கு இது கூறப்பட்டது.

***ஈ) காளி.:*** 'கண்ணின்' - பாடம்.

ஏற்பவர்க்கு இங்ஙனம் இல்லை என்பது இல்லாத அன்புடையாளரும் இவ்வுலகத்துச் சிலர் உளர் ஆகலான், இது

காரணமாக இவ்விரவு தொழிலைத் தம்பால் என்றும் மேற்கொள்வது, எ-று.

***உ) பரிமேல்.***: சொல்லுதல் மாட்டாது முன்னிற்றல் மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற்பொருட்டு அதனை மேற்கொண்டு போதுகின்றது[1], அவர்க்கு[2] உள்ளது கரவாது கொடுப்பார் சிலர் உலகத்து உளராய தன்மையானே, பிறிதொன்றால் அன்று, எ-று

அவரில்[3]லையாயின், மானநீக்க மாட்டாமையின் உயிர் நீப்பர் என்பதாம்.

***ஊ) கவிராசர்.***: இரக்கிறவர்கள் தம் குறையைச் சொல்ல மாட்டாமல் முன்னே நின்ற மாத்திரத்திலே அது அறிந்து தமக்குள்ளது ஒளியாமற் கொடுக்கிறவர் சிலர் உலகத்திலே உண்டான படியினாலே, இரக்க வருகிறார்கள், எ-று.

அப்படிக் கொடுக்கிறவர்கள் இல்லாவிட்டால் மானத்தை விடாமல் பிராணனை விடுவர், எ-ம்.

***ஏ) பழைய2.***: சொல்லமாட்டாமல் முன்னே நிற்றல் மாத்திரத்தால் இரப்பார், உயிரோம்பற் பொருட்டு அதனை மேற்கொண்டு போகின்றது. தமக்கு உள்ளது ஒளியாமல் கொடுப்பார் சிலர் உலகத்து உண்டாய் இருத்தலான், எ-று.

ஒளியாமற் கொடுப்பவர் உலகத்துச் சிலர் இருப்பதனால், கேளாமல் முன்நின்று இரப்பவர் இரப்பினை மேற்கொள்வது என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'கண்ணின்று'*** என்பதொன்றே பிரித்துப் பொருள் காணுமாற்றானும் பாட வேறுபாட்டானும் பொருள் மாற்றந் தருகிறது.

***'கண்நின்று'***

'முன்னே நின்று' ***மணக்.;*** (சொல்லுதல் மாட்டாது) 'முன்னிற்ற மாத்திரத்தான்' என்பர் ***பரிமேல்.;*** 'கண் முன்னே நிற்றலளவினாலேயே' எனச் சொற்பொருள் கண்டவர் இவராகலாம். ***பரிதி.*** கொள்கின்ற 'இரப்போர் பெரியவர்' என்ற உரை அவர் கொண்ட பாடம் 'இரப்பவர் மேலானவர்' என்பதாகலாம்.

1. போதுகின்றது - வருகின்றது
2. அவர்க்கு - இரவலர்க்கு
3. அவர் - கரப்பிலார்

*காளிங்கர்* உரையில் 'இரப்பவர்' என்ற எழுவாய்ச் சொல் இன்று; ஆதலால், இவர் உரைநடையில் 'இரப்பவர் தம்பால் மேற் கொள்வது' என வருவித்துரைத்தல் இன்றியமையாதது. கண்ணின் - தம்பால் என ஏழனுருபாகவோ, இடப் பெயராகவோ கொண்டனர் ஆகும்.

*இராம.* 'கண் + இன்று' எனப்பிரித்து 'ஆலோசிக்காமல்' எனப்பொருள் காண்பர். மேலும் 'அறிதல் இல்லாதவராக' என்றும் பொருள் கொள்வர். இவரே முன் 'கண் + நின்று' எனப் பிரித்து 'முன் நின்று' எனப் பொருள் கண்டிருக்கிறார். (184 குறள்). ஆதலால் ஈண்டு இங்ஙனம் கொள்ளுதல் இயைபிலது. *தேவநேயர்* 'வாய்திறந்து கேளாமல் ஒருவர்க்கு முன் நிற்கும் நிலையினாலேயே இரக்கும் மானமுள்ளோர் இரப்பது கரப்பிலார் உலகத்துண்மையான்' என்பர். இது பெரும்பாலும் *பரிமேலழகர்* கருத்தைத் தழுவியதே. பின்னுரையாசிரியர் பலரும் *பரிமேலழகரை* ஒட்டியே செல்வர்.

ஆகவே 'கண் + நின்று' என்ற பாடமும் அதற்கேற்பக் கொள்ளும் உரைகளுமே ஏற்புடையன.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***கரப்பிலார் :***

கரவி லாளர் விழக்களை கண்ணிலா
இரவ லாளரி னெங்கு மிரிந்தவால் -கம்ப., 6858

## 106.6. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். (1056)

## உரைப்பகுதி :

*அ) மணக்.:* கரப்பிடும்பை இல்லாதாரைக் காண்பாராயின், நிரப்பி னான்[1] ஆகிய இடும்பை யெல்லாம் ஒருங்கு கெடும், எ-று.

*ஆ) பரிதி.:* நாஸ்தி என்னாமல் கொடுக்கும் பெரியோரைக் கண்ட அளவில் தன் மிடி கெடும், எ-று.

*இ) பரிப்.:* கரப்பும் இடும்பையும் இல்லாதரைக் காண்பார் ஆயின் நிரப்பினால் ஆகிய இடும்பை எல்லாம் ஒருங்கு கெடும், எ-று.

இவை இரண்டும் இல்லாதார் என்றமையால் இச் செல்வரா யினார்மாட்டு இரக்கலாம் என்றது.

1. நிரப்பினான் - வறுமையினால்

ஈ) *காளி.*: 'முழுதும் ஒருங்கு கெடும்' பாடம்.

தம்பால் வந்து இரப்பார்க்குத் தாம் இல்லை என்னும் இவ்விடும்பை இல்லாதார் யாவரும் அவரைக்கண்ட இடத்துப் பிறர் இரப்பு என்கிற இடும்பையானது எல்லாம் ஒன்று ஒழியாமையே கெட்டு விடும்: எனவே இரக்கம் உடைய செல்வச் சிறப்பினர் ஈயுங் காலத்தும் பிறர்மாட்டுச் சென்று இனி ஒரு குறை கூறி இரக்க வேண்டாதவாறு ஈவாரும் உலகத்து உளர், எ-று.

உ) *பரிமேல்.*: உள்ளது கரத்தலாகிய நோயில்லாரைக் கண்டால் மானம் விடாது இரப்பார்க்கு நிரப்பான்வரும் துன்பங்களெல்லாம் சேரக் கெடும், எ-று.

கரத்தல் ஒருவற்கு வேண்டுவதொன்று அன்மையின் அதனை நோய்[2] என்றும், அஃது இல்லாத[3] இரக்கத்தக்காரைக் கண்டபொழுதே அவர்[4] கழியுவகையராவராகலின் எல்லாம் ஒருங்கு கெடும் என்றும் கூறினார். இடும்பை ஆகுபெயர்[5]. முழுதும் கெடும் என்று பாடம் ஓதி, எஞ்சாமல் கெடும் என்று உரைப்பாரும் உளர்[6].

ஊ) *கவிராசர்*: தமக்கு உள்ள பொருளையொளிக்கிறதாகிய வியாதி யில்லாதவரைக் கண்டால் மானம் விடாமல் இருக்கிறவர்க்கு, இரப்பி னாலே வரப்பட்ட துக்கங்களெல்லாம் சேரக் கெட்டுப்போம், எ-று.

ஒளிக்கிறதாவது - கேட்டவர்க்கு உதவாதது.

எ) *பழைய2.*: 'உள்ளத்தில் ஒளித்தலாகிய துன்பம் இல்லாரைக் காணில், மானங் கெடாமல் இரப்பவற்கு வறுமைத் துன்பமெல்லாம் ஒரு மிக்கக் கெடும், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கரப்பு இடும்பை' எனப்பிரித்து உம்மைத்தொகையாகக் கொள்வர் *பரிப்பெருமாள்.காளிங்கர்* உரை 'காணின் நிரப்பு இடும்பை எல்லாம் என்பதற்குப் பிறர்மாட்டுச் சென்று இனி ஒரு குறையுங்கூறி இரக்க

2. 'இடும்பை' என்றும் பாடமுண்டு.
3. அஃது இல்லாத - உள்ளது கரத்தலாகிய நோய் இல்லாத.
4. அவர் - இரவலர்
5. இடும்பை என்னும் காரியப்பெயர் அதனைத் தரும் நோய்க்கு ஆயினமையின் காரியவாகுபெயர்.
6. உரைப்பவர் காளிங்கர்.

வேண்டாதவாறு ஈவாரும் உளர் என, இலனென்னும் எவ்வம் உரையாமையை' எண்ணி உரை கூறுவர். ***பரிமேலழகர்*** கூறும் நயமும் உரையும் மிக ஏற்புடையன.

***காளிங்கர்*** பாடம் 'முழுதும் கெடும்' என்பது. ***பரிமேலழகர்*** பாடமாகிய 'ஒருங்கு கெடும்' என்பதனோடு பெரிதும் மாற்றம் இல்லாதது ஆயினும் 'முழுதும் கெடும்' என்பது சிறிது சிறிதாகத் தேய்ந்து முழுதுங்கெடுமோ உடனே கெடுமோ, என்ற ஐயம் நிகழ்தல் கூடும். ஆதலின் முன் பின்னாக வஙாறி 'ஒருசேரக் கெடும்' என்ற பொருள் சிறப்புப் பற்றி 'ஒருங்கு கெடும்' என்பதையே ***பரிமேலழகர்*** கொண்டனர்.

**106.7. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின்**
**மகிழ்ந்துள்ளம்**
**உள்ளுள் உவப்ப துடைத்து. (1057)**

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: இரப்பாரைக் கண்டால் உதாசனித்தலும்[1] இன்றி அவர் சொன்ன மாற்றத்தை இகழ்ந்துரைத்தலும் செய்யாது, வேண்டப்பட்டதனைக் கொடுப்பாரைக் காணில், இரந்து சென்றவர் மனம் மகிழ்ந்து நின்று உள்ளுள்ளே இன்புறுந் தன்மையுடைத்து, எ-று.

***ஆ) பரிதி.***: கேளாது கொடுப்பவரிடத்திலே தேகி என்பது மிடி கெட்டுச் சந்தோஷமாகும், எ-று.

***இ) பரிப்.***: இரப்பாரைக் கண்டால் உதாசனித்தலும்[1] இன்றி அவர் சொன்ன மாற்றத்தை இகழ்ந்து உரைத்தலும் செய்யாது, வேண்டப் பட்டதனைக் கொடுப்பாரைக் காணில், இரந்து சென்றவர் மனம் மகிழ்ந்து நின்று உள்ளுள்ளே இன்புறும் தன்மை உடைத்து ஆம், எ-று.

மேல் இரக்கத் தக்கார ஆவார எததன்மையார் என்றார்க்கு இது கூறப்பட்டது.

ஈ) ***காளி.***: தம்மாட்டு ஒருவர் இரந்து வந்த இடத்துத் தாம் அவரை அனாதரித்து[2] அவமதி பண்ணாது அகம் மகிழ்ந்து ஈவாரைக்

1. உதாசனித்தலும் - அலட்சியப்படுதலும்
2. அனாதரித்து - ஆதரிக்காமல்

காணப்பெறின், அவ்விரப்போர் உள்ளம் பெரிதும் மகிழ்ந்து மற்று அவர் உபகாரவளத்தை[3] உள்ளுதொறும் சால உள்ளுள்ளே உவப்பதனை உடைத்து, எ-று.

*உ) பரிமேல்.*: தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால் அவ்விரப்பாராது உள்ளம் மகிழ்ந்து உள்ளுள்ளே உவக்கும்[4] தன்மை உடைத்து, எ-று.

இகழ்ந்தெள்ளாது எனவே, நன்குமதித்தலும் இனியவை கூறலும் பெறுதும். நிரப்பிடும்பை கெடுதலளவேயன்றி ஐம்புலன் களானும்[5] பேரின்பம் எய்தினாராகக் கருதலான், உள்ளுளுவப்ப துடைத்து என்றார். இவை ஐந்துபாட்டானும் அவ்விரத்தக்காரது இயல்பு கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்.*:தன்னை அவமதியாமலும் பொல்லாத வார்த்தைகளைச் சொல்லாமலும் கொடுப்பாரைக் கண்டால், இரக்கிறவன் மனது தன்னுள்ளே வெகு சந்தோஷத்தை அடையும், எ-று.

அவமானம், பேசாதவர்கள் நல்லவசனம் சொல்லுவர்: அதனாலே சந்தோஷமாம், எ-ம்.

*ஏ) பழைய2.*:தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால் அவரை இரப்பார் உள்ளம் மகிழ்ந்து உள்ளே உவக்குந் தன்மை உடைத்தாம், எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'கேளாது கொடுப்பவரிடத்திலே' என்ற *பரிதியுரை* 'இகழ்ந்து எள்ளாது' என்பதன் கருத்திற்கு இயையாமையின் இவருரை ஏற்புடையதன்று. 'இகழ்தலும் எள்ளுதலும் இரப்பவன் கேட்ட பின்னர் நிகழ்வன வாகலான்' என்க.

கருத்துமாற்றமில் லாத *குறள்* இது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

**இகழ்ந்து எள்ளாது ஈவார் :**

எளியர் இவரென்று இகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்தல் இனிது — இனியவை., 30

3. உபகார வளத்தை - செய்த உபகாரத்தின் சிறப்பை
4. உள்ளுக்குள்ளே உவக்கும் - மனத்துக்குள் மகிழும்
5. ஐம்புலன்களாலும் - செவி முதலிய ஐந்து இந்திரியங்களாலும்

நம்மாலே யாவரிந் நல்கூர்ந்தார் எஞ்ஞான்றும்
தம்மாலாம் ஆக்கம் இலரென்று - தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமும்
தெருண்ட அறிவி னவர். - நாலடி., 301

**106.8. இரப்பாரை[1] இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. (1058)**

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: 'இரப்பவரில்லாயின்' - பாடம்.
குளிர்ந்த இடத்தையுடைய பெரிய உலகம் இரக்குமவர்களை உடைத்தல்லவாயின், உள்ள மக்களது இயக்கம் மரப்பாவை சென்றுவந்து இயங்கினாற்போலும், எ-று.

இஃது இரத்தலும் ஈதலும் உலகியல்பாதலான், இரத்தல் இழிவு என்று கொள்ளப்படாது என்றது.

***ஆ) பரிதி.***: 'இரப்பவரில்லாயின்' - பாடம்
தேகி என்பார் இல்லாத நாட்டின், தாதாக்கள் மரப்பாவை விளையாடுதற்கு ஒக்கும், எ-று.

***இ) பரிப்.***: குளிர்ந்த இடத்தை உடைய பெரிய உலகம் இரக்கும் அவர்களை உடைத்து அல்ல ஆயின், இதனின் உள்ள மக்களது இயக்கம் மரப்பாவை இயங்கினாற் போலும், எ-று.

மேல் கூறிய இரத்தல் இழிந்தது ஒன்று அன்றே: இதனைச் செய்க என்று விதித்தது என்னை என்றார்க்கு இரத்தலும் ஈதலும் உலகு இயல் ஆதலான் இழிவு என்று கொள்ளப்படாது என்றது.

ஈ) ***காளி.***: 'ஈன்கண் மாஞாலம்' - பாடம்.
இனிது இடம் உடைத்தாகிய பெரிய உலகமானது இரப்போரை இலதாயின், இனிது அறம் இயற்றும் இயல்பு உடையோர் யாரையும் இலது இவ்வுலகு என்பதாம்: அதனால் மற்று ஈண்டு வாழும் மக்கள் உருபு அனைத்தும் மரத்தினால் மக்கள் உருபாக இயற்றிய மரப்பாவையானது போயும் வந்தும் திரிகின்ற அத்தன்மைத்து; எனவே இருமைப் பெறுதியும் அறியா உருபினவாம் என்பது பொருளாயிற்று, எ-று.

ஈன்கண் மாஞாலம் என்பது இடம் மிகவும் பெரிய உலகம் என்பது.

1. இரப்பார் மூவகையர்: பொருள் இருந்தும் இல் என இரப்பார்: தொலைவாகி இரப்பார் இடனின்றி இரப்பார்.

உ) ***பரிமேல்.***: வறுமையுற்று இரப்பார் இல்லையாயின், குளிர்ந்த இடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகள், உயிரில்லாத மரப்பாவை இயந்திரக்கயிற்றால்[2] சென்று வந்தாற் போலும், எ-று.

ஐகாரம் அசைநிலை[3], ஞாலம் என்னும் ஆகுபெயர்ப்[4] பொருட்கு உவமையோடு ஒத்த தொழில் வருவிக்கப்பட்டது[5]. ஞாலத்துள்ளார் என்றது அவரை ஒழிந்தாரை. அவர்க்கு[6] ஈதலைச் செய்து புகழும் புண்ணியமும் எய்தாமையின், உயிருடை யரல்லர் என்பதாம்: "ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்து, வாழ்வாரே வன்கணவர்" என்றார் பிறரும். இத்தொடை யின்பம் நோக்காது 'இரப்பவரில்லாயின்' என்று பாடம் ஓதுவாரும் உளர்[7].

ஊ) ***கவிராசர்.***: தரித்திரத்தினாலே இரக்கிறவர்கள் இல்லாவிட்டால் குளிர்ந்த இடத்தையுடைய உலகத்துள்ளே சனங்கள் பிறந்து சஞ்சரிக்கிறது, உயிர் இல்லாத மரப்பாவை சூத்திரக்கயிற்றினாலே கூத்தாடுவதனோடு ஒக்கும், எ-று.

இரக்கிறவர்களுக்குக் கொடுத்துப் புகழும், புண்ணியமுஞ் செய்து கொள்ளாதவர்கள் செத்தாரோடு ஒப்பர், எ-ம்.

"ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வரே வன் கணவர்" என்று சாத்திரங்களும் செல்லும்.

எ) ***பழைய2.***: வறுமையுற்று இரப்பவர் இல்லையாயின், குளிர்ந்த நிலத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் போக்குவரவுகளும் (உயிரும்) இல்லாத மரப்பாவை யந்திரக் கயிற்றாற் சென்று வந்தாற்போலும், எ-று.

இரப்பார் இல்லையாயிற் கொடுப்பதில்லை: கொடுப்பதில் லாமையாற் புகழும் புண்ணியமும் இல்லை; புகழும் புண்ணியமும் இல்லாமையால் இன்பமில்லை; இன்பமில்லாமையால் மரப்பாவையாம் என்க.

---

2. இயந்திரக் கயிறு - சூத்திரக்கயிறு
3. இரப்பாரை என்பதில் உள்ள ஐகாரம் அசைநிலை: பொருள் நோக்கியதன்று
4. ஞாலம் என்னும் இடப்பெயர் ஞாலத்தில் உள்ளவரை உணர்த்துதலின் இடவாகுபெயர். ஞாலம் - பூமி.
5. உவமையும் பொருளுமாகிய ஞாலத்துள்ளார், மரப்பாவை என்னும் உவமானத்தோடு ஒத்த செலவு வரவுத் தொழில்கள் வருவித்துரைக்கப்பட்டன.
6. அவர்க்கு - வறுமையுற்று இரப்பார்க்கு
7. மணக்குடவர் ஓதுவர்

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இரப்பார் இல்லாயின்' என்ற பாடம் ***மணக்குடவரதாகலாம்*** என்பதை 'இரக்கும் அவர்களை உடைத்தல்லவாயின்' என்ற அவர் உரையைக்கொண்டு அறியலாம்.

***காளிங்கர்*** 'ஈன்கண்மாஞாலம்' எனப்பாடங்கொண்டு 'இனிது இடம் உடைத்தாகிய பெரிய உலகம்' என உரையினும், 'ஈன்கண் மாஞாலம் என்பது இடம் மிகவும் பெரிய உலகம்' என விளக்கக் குறிப்பினும் எழுதுவர். உரையைக் கொண்டு ஈன்-இனிது. அது இன் என்பதன் நீட்டல் விகாரமாதல் கூடும் என உரைவேற்றுமையாசிரியர் உரைப்பர். இனிமைப்பொருளைத்தரும் 'இன் ' என்பது 'ஈன்' என நீண்டு அப்பொருளைத் தருதல் கூடுமா என்பது ஆய்தல் இன்றியமையாதது. 'ஈனோர்க்கு உரைப்பாம்' (***சீவக.,***29பாட்டு) என்ற வழி இவ்வுலகில் உள்ளோர்க்கு எனப் பொருள்படுதல் போல, 'ஈன்கண்மாஞாலம்' என்பதும், 'இந்நிலவுலகம்' என்ற பொருளே தருவது. 'இவ்விடத்ததாகிய பெரிய பூமி' என்பது பொருள்.

இங்ஙனமே 'ஆன் ஆவகைய திணைநிலைப் பெயரே' என்னும் நூற்பாவில் (***தொல், பொருள்.*** 24) ***இளம்பூரணர்*** 'ஆன் என்பது அவ்விடம்; அ என்னும் சுட்டு நீண்டு இசைத்து இவ்விடம் இவ்வுலகம் என்னும் பொருளதாயினமையை ***நச்சினார்க்கினியர் சிந்தாமணி*** 29ம் பாட்டில் இசைத்தனர் என்க. பிற்காலத்து ***தணிகைப்புராணம், வீரட்டானப் படலம்*** 390ம் செய்யுளினும் 'ஈன் வருகென்ன' என வருதல் காண்க. ***ஐங்குறுநூறு செவிலி கூற்றுப் பத்து*** முதற் பாட்டில் 'ஈனும் உம்பரும் பெறலருங்குரைத்தே'என 'ஈன் இந்நிலவுலகத்தும்' என வருதல் காண்க. ஆதலான் 'ஈன் இனிதென'க் ***காளிங்கரே*** எழுதியிருந் தாலும் 'இனிமை' என்ற பொருளில் 'இன்' என்பதன் விகாரமாகிய ஈனின்மையானும் ஆன்றோராட்சி யின்மையானும் 'இந்நிலவுலகத்து' எனப்பொருள் கோடலே சிறந்ததாம். 'இனிது' என்ற பொருள் குறிப்பு முற்றாய் இனிதாகிய இடம் என அதனை விசேடித்து வருமேயன்றி நின்றாங்கு நிற்கப் பொருளியைமாறு செய்தல் சாலாது என்க.

இத்தனையாய்வுகளைக் காட்டிலும் 'ஈர்ங்கண்மாஞாலம்' என்ற பாடமே சாலச்சிறந்தது என்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும்:***

பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்

செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவ தன்மையிற் கையற வுடையது — புறம்., 38:12-15

அறஞ்சேய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர் நன் னாட்டுக்கு
இறைவ னாகிய பெருவிறல் வேந்தே — மணி., 41:40-43

கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில் லை — கம்ப., 165

புலவா், இரப்பாரை இல் லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்றென்று-உரைப்பாவில்
வைதலை அஞ்சி வளத்தார் இரப்பவர் தாம்
எய்தலை நோக்கி இருந்துதவ . . . . . . . . . — நெஞ்சு., 197-198

குறிப்பினுணர்ந்து மொழியாமுன் கொடுப்பார் முன்னின்றிரந்துயிரைத்
துறப்ப தின்றிச் சிலர்வாழ்வர் தூய்மை மானம் கெடாமையினால்
இறப்ப உயர்ந்த கொடைமையரே எனினும் இரப்பார் இல்லாக்கால்
சிறப்பென் பெறுவர் அவரானே சிறப்பர் கரவாதவர்மைந்தா
— விநா. அரசி., 153

## 106.9. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
## மேவார் இலாஅக் கடை. (1059)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: 'மேவார் இல்லாத கடை' - பாடம்.
இரந்து கோடலைப் பொருந்துவார் இல்லாதவிடத்து ஈயக் கருதி யிருப்பார்மாட்டுப் புகழ் யாதான் உண்டாம், எ-று.

இஃது இரப்பாரில்லாராயின் புகழுடையார் இலராவர்; ஆதலால் இரவு பழிக்கப்படாது என்றது.

***ஆ) பரிதி.***: கொடுப்பார்க்கு என்ன பெருமை உண்டு? தேகி என்று கேட்பார் இல்லாத இடத்து, எ-று.

***இ) பரிப்.***: இரந்து கோடலைப் பொருந்துவார் இல்லாத இடத்து ஈயக் கருதி இருப்பார்மாட்டுப் புகழ் யாதான் உண்டு ஆம்?, எ-று.

இரந்து கோடல் இழிபு அல்ல ஆயினும் பழிக்கப்படும் என்றார்க்குப் பழிக்கப்படும் ஆயின், உலகத்து இரப்பர் இல்லை ஆம்: அவர் இல்லார் ஆகப் புகழ் உடையார் இலர் ஆம்: ஆதலால் பழிக்கப் படாது என்று கூறப்பட்டது.

*ஈ) காளி.*: ஈவார் மாட்டு என் உளதாம்? யாவர் மாட்டும் தம் பெயர் தோன்ற நிற்பதோர் தோற்றம் தம்பால் சிலர் தம்மைப் பெருமை கூறி இரந்து கொள்ளும் தொழிலைப் பொருந்துவார் ஆகிய அறிகுனர் இவ்வுலகத்து இ ல்லாக்கால், எ-று.

*உ) பரிமேல்.*: அவர்பால்[1] சென்று ஒன்றனை இரந்து கோடலை விரும்புவார் இல்வழி, கொடுப்பார்மாட்டு என்ன புகழுண்டாம்; யாதும் இல்லை, எ-று.

தோற்றம் ஆகுபெயர்[2]. மேவுவார் என்பது விகாரமாயிற்று. கொடுத்தல் வன்மை வெளிப்படாமையின், அதனாற் புகழெய்தார் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் உலகிற்கு இரப்பார் வேண்டும் என்பது கூறப்பட்டது.

*ஊ) கவிராசர்.*: ஐஸ்வரியவான்களிடத்திலே தரித்திரர்கள் வந்து இரவாவிட்டால், கொடுக்கிறவர்களுக்கு என்ன புகழுண்டாம்; ஒரு கீர்த்தி யுமில்லை, எ-று.

கொடுக்கிறதில்லாவிட்டால் கீர்த்தியு மில்லையாம்.

*ஏ) பழைய2*: கொடுப்பவர்பாற்சென்று இரந்து கொள்வதனை விரும்பாதவர் இல்லாதவழிக் கொடுப்பாரிடத்து என்ன புகழுண்டாம்? யாதும் இல்லை, எ-று.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*'தோற்றம் '* - 'புகழ்' *மணக்.. பரிமேல்.*; 'தோற்றம்' *காளி;* பெருமை *பரிதி., வரத.*; எல்லாம் 'புகழ்' என்ற கருத்தினவேயாதலின் கருத்துமாற்றம் இன்று.

*பரிப்பெருமாள்* இக்குறள் ஐரததலைப பழகககூடாது' என்பதை வலியுறுத்துவதாகக் கூறுவர். உலகிற்கு இரப்பாரும் இன்றியமையாது வேண்டப்படுவர் என்பதை விளக்குவதாகக் கூறுவர்.

தோற்றம்-புகழும் பெருமையுமே யன்றிப் பெருமிதமான ஏறுபோர் பீடு நடையுமாம் என்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

*முற்றும்:*

பரப்புநீர் வையத்துப் பல்லுயிர்கட் கெல்லாம்

1. அவர்பால் - ஈவார்பால்.
2. தோற்றம் என்னும் கருவிப்பெயர். அதனாலாகிய புகழை உணர்த்துலால் கருவியாகு

இரப்பாரில் வள்ளல்களும் இல்லை -இரப்பவர்
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்த லான். -அறநெறிச்.,219.

கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை . . . . .
- கம்ப., 165

## 106.10. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி. (1060)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** ஒருவனை இரந்தால் அவன் ஈந்திலன் என்று தான் வெகுளாதொழிதல் வேண்டும்: பொருளரிது என்பதற்குத் தன்னுடைய நிரப்பிடும்பை தானேயும் அமையும் சான்று, எ-று.

இஃது இரப்பார்க்கு வேண்டியதோர் இயல்பு கூறிற்று.

***ஆ) பரிதி.:*** கொடுப்பவருடன் ஏற்பவன் கோபிப்பானல்லன்: திரவியத்தின் அருமை மிடியவற்குத் தெரியும். அதற்கு . . . . . சாட்சி, எ-று.

***இ) பரிப்.:*** ஒருவனை இரந்தால் அவன் ஈந்திலன் என்று தான் வெகுளாது ஒழிதல் வேண்டும்: பொருள் அரிது என்பதற்குத் தன்னுடைய நிரப்பு இடும்பை தானேயும் அமையும் சான்று, எ-று.

வெகுளாமைக்குக் காரணம் பிறகு கூறவேண்டா என்றது. இஃது இரப்பாற்கு வேண்டுவது ஓர் இயல்பு கூறிற்று.

***ஈ) காளி.:*** இரப்பு என்னும் இளிவு நோய் கொண்டவன் யாவன் அவன் பின்னும் ஒருவரோடு வெகுளாமை வேண்டும்: என்னை காரணம் எனில், முன்னும் பிறர்மாட்டு இரந்து வெகுளி கொலை முதலிய கொடுவினை செய்து தனக்கு இக்குற்றம் புகுந்ததனால் தான் இக்காலத்து அனுபவிக்கின்ற இரப்பு என்னும் பேர் இடும்பை தானேயும் அமையும் இதற்குச் சான்று, எ-று.

இனி மற்று இரப்பு என்பது இக்குற்றம் எல்லாம் உடைத்து ஆகலான் இது பெரிதும் அஞ்சத்தகுவது ஒன்று என்பதனான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

உ) *பரிமேல்.*: ஈவானுக்குப் பொருள் உதவாவழி இவன் எனக்கு ஈகின்றிலன் என்று அவனை இரப்பார் வெகுளாதொழிதல் வேண்டும்; அது வேண்டியபொழுது உதவாது என்பதற்கு வேறு சான்று வேண்டா, நிரப்பாகிய தன்னிடும்பை தானேயும் சான்றாதல் அமையும், எ-று.

யாவர்க்கும் தேடவேண்டுதலும் நிலையின்மையும் முதலிய பிறசான்றும் உண்டு என்பதுபட நின்றமையின் உம்மை எச்சவும்மை, தனக்கேயன்றி[1] மற்றை இரந்தார்க்கும் அற்றைக் கன்று பொருள் கடைக் கூட்டற்கு அவனு[2]றும் துன்பத்தைத் தனக்கேயாக வைத்துத் தானுறுந்துன்பம்தான் அறிந்து வெகுளற்க என்பதாம். இதனால் அவர்க்கு[3] இன்றியமையாததோர் இயல்பு[4] கூறப்பட்டது.

*காரி.*: வெகுளாமை - வெகுளாதொழிதல் வேண்டும்; என்பது பல்லோர் படர்க்கையுல்லாத விதிபற்றிச் செய்யு மென்னும் முற்றாக்கினார் என்க.

ஊ) *கவிராசர்.*: கொடுக்கிறவர்களுக்குப் பொருளுதவாதபோது ‘இவன் நமக்குக் கொடுக்கவில்லை’ என்று அவனைக் கோபித்துக் கொள்ளாமல் இருந்தால், அவன் தரித்திரம் நாளிலே விட்டுப்போம் எ-று.

நாம், பொருள்தேடுகிறதுக்கு இத்தனை பிரயாசப்படு கிறோமே; அப்படியல்லவா அவனும் வருத்தப்படுகிறான்’ என்று எண்ணி, கோபியாமல் இருக்கவேணும். அப்படி நற்குணமாய் எண்ணினால், அதனாலே அவன் வறுமை தீரும், எ-ம்

எ) *பழைய2.*: ஈவானுக்குப் பொருள் உதவாத வழி ஈகின்றிலன் என்று அவனை இரப்பான் வெகுளாது ஒழிதல் வேண்டும். வேண்டிய பொழுது உதவாதுஎன்பதற்கு வேறு சாட்சி வேண்டாம் தன் வறுமையாகிய இடும்பை தானே தனக்குச் சாட்சியாம், எ-று.

வெகுளல்: கோபித்தல். நிரப்பிடும்பை; வறுமைத் துன்பம். கரி: சாட்சி.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

‘தனக்குப் பொருள் அரிதாயிருத்தல் போல ஈபவனுக்கும் இப்போது இருத்தல் கூடும்; ஆதலால் வெகுளுதல் கூடாது’ என்னும் கருத்தினர் ***மணக்குடவர்.*** ***பரிமேலழகர்*** கருதுவது இதுவே.

1. தனக்கேயன்றி - இரப்பவனாகிய தனக்கன்றி
2. அவன் - ஈவான்
3. அவர்க்கு - இரப்பவர்க்கு
4. இயல்பு - ஈவானைச் சினவாமை

'பொருளருமை வறியனாகிய தனக்குத் தெரியுமாகையால் ஏற்பவன் ஈபவனைக் கோபித்தல் கூடாது' என்பது *பரிதியார்* கருத்து.

'இரப்பவன் வெகுளியும் கொலையும் முதலான தீவினை முன்னரும்செய்து, இத்தகைய வறுமை உற்றிருக்கிறான் இவன் மேலும் இத்தகைய பாவம் செய்யவேண்டாம் இப்போதுள்ள இந்நிலையே சான்றாக அமையும்' என்பர் ***காளிங்கர்***. இவர் கண்ட பாடம் 'இரப்பிடும்பை' என்பது.

*மு.ரா.அரு.* 'எப்போதும் இரந்து இரந்து வறுமையைப் போக்கிக் கொள்ளும் தான், இப்போது நீக்கிக்கொள்ள முடியாமை போல, எப்போதும் கொடுத்துதவும் அவனுக்கும் தற்போதும் பொருளின்றிப் போயிருக்கும் அதனால் வெகுளாமை வேண்டும்' என்பர்.

***தேவநேயர்*** 'வறிஞன் தான் இரப்பது, தான் இரப்பவனுக்கு ஈயாமல் சினந்ததனாலேயே' என்றுணர்க என்பர்.

இவ்வுரைகள் அனைத்தும் முடிவில் ஒத்தனவாயினும், வெகுளாமைக்குக் காரணம் காட்டும் வகையில் சிறிது மாற்றம் உடையன. 'நாம் கேட்டும் இன்று இல்லையாதல் போல, கொடுப்பவனுக்கும் கொடுக்க இயலாத சூழலிருக்கலாம் என்ற மன்னிப்பு மனப்பான்மை கொண்டது' ஒன்று. மற்றொன்று 'நமக்கு ஏன் இந்நிலை வந்தது! மேலும் இது வரவேண்டாம் என்று இகழாதிருத்தல். இது பட்டறிவுப்பண்பாலாவது! இங்ஙனம் வேறுபாடு கண்டு சிறந்தது கொள்க.

***இராம.*** 'இரப்பவனை ஈபவன் வெகுளாதிருக்க வேண்டும். அவன் அப்படி வெகுண்டு தானே இன்று இரப்பவன் நிலைக்கு வந்துள்ளான் என்பதை எண்ணி இகழற்க' என்பர். இக்***குறட்போக்கு*** இரப்பவனுக்குக் கூறும் அறிவுரையே யன்றி ஈபவனுக்கன்று ஆதலின், இரண்டனுருபு விரித்துப் பொருள் கோடல் இயைபின்று.

### ஒ) ஒப்புமைப்பகுதி :

***இரப்பான் வெகுளாமை வேண்டும் :***

பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே - இனியவை.,40

***சாலும் கரி :***

சாலும் கரி ............... - குறள்.,25

# 106. இரவு

| | இரக்க | இன்பம் | கரப்பிலா | இரத்தலும் | கரப்பிலார் | கரப்பிடும்பை | இகழ்ந்து | இரப்பாரை | ஈவார்கண் | இரப்பான் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 3 | 8 | 6 | 9 | 7 | 5 | 4 | 2 | 10 |
| பரிதி. | 1 | 9 | 4 | 3 | 2 | 6 | 5 | 8 | 7 | 10 |
| பரிப். | 1 | 4 | 8 | 6 | 9 | 7 | 5 | 2 | 3 | 10 |
| காளி. | 1 | 4 | 7 | 2 | 5 | 3 | 6 | 9 | 8 | 10 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

106-வது அதிகாரம் 'இரவு' முற்றிற்று.

******

# 107. இரவச்சம்

*அதிகாரப் பொருள் :*

***அ) மணக்.:*** இரவச்சமாவது இரத்தலைத் தவிரவேண்டும் என்று கூறுதல். மேல் நல்கூர்ந்தார் ஈவார்மாட்டே இரத்தல் அமையும் என்று பொதுப்படக் கூறினாராயினும். மேலாயினார்க்கு அது தகுதியன்று என்பது குறித்து இவ்வதிகாரம் கூறப்பட்டது. மேலதனோடு இயையும் இது, எ-று.

***இ) பரிப்.:*** இரவு அச்சம் ஆவது இரத்தலைத் தவிர்தல் வேண்டும் என்பது கூறுதல். மேல் நல்கூர்ந்தார் ஈவார் மாட்டே இரத்தல் அமையும் என்று பொதுப்படக் கூறினார். ஆயினும் மேலாயினார்க்கு இது தகுதி அன்று என்பது குறித்து இவ்வதிகாரம் கூறப்பட்டது. மேலதனோடு இயையும் இது.

***உ) பரிமேல்.:*** அஃதாவது மானந்தீரவரும் இரவிற்கு அஞ்சுதல்[1] அதிகார முறைமையும் இதனானே விளங்கும், எ-று.

***ஊ) கவிராசர்.:*** அஃதாவது மானங் கெடுகிறதாகிய இரப்புக்குப் பயப்படுகிறதாம்.

***எ) பழைய 2.:*** அஃதாவது மானத்தால் இரப்பதற்கு அஞ்சுதல்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

பழைய உரையாசிரியர் அனைவரும் 'இரத்தலால் மானம் அழியவரின் அங்ஙனம் இரத்தற்கு அஞ்சுதல்' என்ற ஒரே கருத்தினர் ஆவர்.

1. 'இரவினை அஞ்சுதல்' எனவும் பாடம்.

***தேவநேயர்*** 'உழைக்கக்கூடியவர் மானந்தீரவரும் இரப்பிற்கு 'அஞ்சுதல்' என்பர். இவர் கருத்து உழைக்கக்கூடாதவர் மானமழியவரினும் இரந்து உண்ணலாம் என்பதுபோலும். அங்ஙனமாயின் இரப்பின் இழிவை மிகுதிப்படுத்தியது ஆகாது; அச்சமும் ஆகாது.

***வரத.*** ' துன்பமும் இழிவும் உண்டாவதால் இரவுக்கு அஞ்சுதல்' என்பர்.

***இராம.*** பிச்சை கேட்கக் கூசுவது. அஞ்சுதல்-கூசி விலக்குதல்' என்பர்.

***கா.சு.*** இரத்தலால் மானக்குறைவு வருமாயின் அதற்கு அஞ்சுதல்' என்பர். இவை பெரும்பான்மையும் ஒத்த கருத்தின.

**107.1. கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி உறும். (1061)**

**உரைப்பகுதி :**

***அ) மணக்.:*** ............

***ஆ) பரிதி.:*** ஈனக்குணம்[1] பண்ணாமல் கொடுக்கிற தாதாவல்லா தாரிடத்திலே கேளா திருப்பது கோடிதனம் பெறும், எ-று

***இ) பரிப்.:*** இல்லை என்னாது மனம் மகிழ்ந்து கொடுக்கும் கண் போல்வார் மாட்டும் ஒரு பொருளை இரந்து செல்லாமை இரந்து பெற்ற பொருளினும் கோடி மடங்கு மிகுதி உடைத்து, எ-று.

இஃது ஈவார் மாட்டும் இரக்கல் ஆகாது என்றது.

***ஈ) காளி.:*** தாம் கருதிச் சென்றது ஒன்றைக் கரத்தல் இல்லாத செறிந்த அன்பினை உடையராகிய கண்போலும் கேளிர் மாட்டும் ஒன்று இரத்தல் என்பது பெரிதும் இளிவரவு அன்றே: அதனால் அது செய்யாமை தானே கோடி பொருளினைப் பெறும், எ-று.

அல்லது காவாதுவந்தீயும் என்று பாடம் ஓதுவாரும் உளர்[2]

***உ) பரிமேல்.:*** தமக்குள்ளது கரவாது இவர் வரப்பெற்றேம் என்று உண்மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார் மாட்டும்

1. ஈனக்குணம் - இழிந்த குணம்
2. இன்னார் என்று அறியக் கூடவில்லை

இரவாதே ஒருவன் வறுமை கூர்தல், இரந்து செல்வம் எய்தலின் கோடி மடங்கு நன்று, எ-று.

நல்குரவு மறைக்கப்படாத நட்டார்மாட்டும் ஆகாது என்பதுபட நின்றமையின், உம்மை உயர்வு சிறப்பின் கண் வந்தது[3]. அவ்விரவான் மானந்தீராது என்னும் துணையல்லது அதற்கு மிகுதி[4] கூடாமையின், வல்லதோர் முயற்சியான் உயிரோம்பலே நல்லது என்பது கருத்து.

ஊ) *கவிராசர்2.*: தமக்குள்ள பொருளை ஒளியாமல், இரவலர் வந்தது தான் செய்த புண்ணியமென்று சந்தோஷப்பட்டுக் கொடுக்கிற கண்போலச் சிறந்தவர்களிடத்திலேயும் இரவாம லிருககிறது, இரந்து கொண்டு செல்வம் அடைகிறதிலுங் கோடி நன்மை, எ-று.

எ) *பழைய2.*: தமக்குள்ளது ஒளியாமல் உவந்து கொடுக்கும் கண் போல உரியாரிடத்தும் இரந்து செல்வம் பெறுதலிற் கோடி மடங்கு அதிகம், இரவாமல் இருக்கும் இன்பம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இதற்கு ***மணக்குடவர்*** உரையில்லை.

*பரிதியார்* கண்ட பாடம் 'கண்ணல்லார் கண்ணே' என்பதாம். 'கண் அல்லார்-கண்ணோட்டமும் இல்லார்' எனக் கருதியிருப்பார் போலும்.

*பரிப்.*: 'உறும்-மிகுதியுடைத்து' என்ற உரை ஏற்புடையது.

***காளி.*** 'உவந்தீயும்' என்பதன் கருத்துரையாகச் 'செறிந்த அன்பினையுடையராகிய கண்போலும் கேளிர்' என்பர். 'காவாது வந்தீயும்' என வேறுபாடமும் காட்டுவர்.

'கரவாத-உவந்தீயும் கண்அன்னார்' எனப் பெயரெச்ச அடுக்காக் கொண்டு கண் அன்னார் என்னும் பெயரொடு முடித்துக் காட்டுவர். அங்ஙனம் கூறுங்கால் கரவாத என்னும் பெயரெச்சத்து ஈறு விகாரத்தாற்றொக்கதாம்.

***பரிமேல்.***: 'உவந்து-இவர்வரப்பெற்றோமே என உண் மகிழ்ந்து' என்பர். உவந்தீவார்மாட்டு இரந்தமையான் மானந் தீராதாயினும் மிகுதி கூடாது ஆதலின் இரத்தல் கூடாது என்ற இவர் உரை நலம் மிகச் சிறந்தது.

3. கண்ணன்னார் கண்ணும் என்பதில் உள்ள உம்மை.
4. மிகுதி - மேம்பாடு.

*தேவநேயர்.* 'இரவாமை என்பதற்கு இரவாது வறுமை கூர்ந்து இறத்தல்' என்று வரைவிலக்கணம் காண்பர்.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

*உவந்தீதல் :*

ஈத்துவக்குந் தன்மையார் -சம்பந்தர். ஆக்கூர்.,9

*கண்ணன்னார் :*

கண்போல் நண்பின்கேளிர் -புறம்., 71:15

கண்புரை தோழர் -பெருங்.,2:17:161

*முற்றும் :*

மறுமையும் இம்மையும் நோக்கி ஒருவர்க்கு
உறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி உறும். -நாலடி.,95

கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை - இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு -நாலடி.,305

நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாழ்வில்
கனக்கரி யானது கைத்தவ மென்னின்
எனக்கிதன் மேனலம் யாவதுகொ லென்றான் -கம்ப.,445

இரந்து கோடலி னியற்கையுந் தருமமு மெஞ்சக்
கரந்து கோடலே நன்றினி நின்றதென் கழறி -கம்ப., 6728

கண்ணிற் சிறந்தார் தம்மிடத்தும் காழ்த்த மானம் கெடநாவால்
பண்ணிற் குரிய அறங்குறித்தும் படர்ந்தொன் றிரவார்
பெருமையினால் - விநா.அரசி., 154

தனியொருவனுக்கு உணவில்லை யெனில்
ஜெகத்தினை அழித்திடு வோம்
- பாரதியார், பாரதசமுதாயம்.,2

## 107.2. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
## கெடுக உலகியற்றி யான். (1062)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: துப்புரவு இல்லாக்கால் இறந்துபடாதே பிறர்மாட்டு இரந்து கொண்டும் உயிர்வாழ்தல் வேண்டுமாயின், உலக நடையை இவ்வாறாகக் கற்பித்த முதல்வன் மிகக் கெடுவானாக வேண்டும், எ-று.

இஃது இரக்குமதனின், இறத்தல் அமையும் என்றது.

***ஆ) பரிதி.***: இரந்து உயிர்வாழச் சென்றுகேட்ட இடத்திலும் இல்லை என்பது ... பிரமன் திரிந்து கெடுக, எ-று.

***இ) பரிப்.***: துப்புரவு இல்லாக்கால் இறந்துபடாதே பிறர்மாட்டு இரந்து கொண்டும் உயிர்வாழ்தல் வேண்டும் ஆயின் உலக நடையை இவ்வாற்றால் கற்பித்த முதல்வன் மிகக் கெடுவான் ஆக வேண்டும், எ-று.

இரக்கும் அதனின் இறக்க அமையும் என்றது. இவை மூன்றினாலும் இரவினால் வரும் குற்றம் கூறப்பட்டது.

***ஈ) காளி.***: குடிப்பண்பினார்க்குத் தமக்கு ஒன்று இரத்தல் இளிவரவு என்று ஒழியாது புறத்து ஈவாரைத் தேடி எங்கும் பரந்து சிறிது இரந்து கொண்டும் தமது உயிர் வாழ வேண்டுவது ஆயின் இவ்வுலகினைப் படைத்தோன் தான் உயிர் வாழாது பரந்து கெட்டு விடுக; என்பதனால் உலகத்துச் சிலரை உயர்ந்தோராகப் படைக்கும் விதாதா[1] ஆகியும் பின்னும் அவர்கள் இயல்பாவதாயின் அவரும் இழந்தோரே ஆகலின் பெரிதும் வஞ்சனை உடைத்து இவன் படைப்பு, எ-று.

***உ) பரிமேல்.***: இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ் வார்க்கு முயன்று உயிர்வாழ்தலை யன்றி இரந்தும் உயிர் வாழ்தலை வேண்டி விதித்தானாயின், அக்கொடியோன்[2] தானும் அவரைப்[3] போன்று எங்கும் அமைந்து கெடுவானாக, எ-று.

---

1. விதாதா - பிரம்மாவின் பெயர்.
2. கொடியோன் என்றது பிரம்மனை
3. அவரை - இரந்து பிழைப்பவர்களை

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும், அதற்கு[4] வேண்டுவதாய உண்டியும், அதற்கு[5] ஏதுவாய செய்தொழிலும் பழவினை வயத்தான் கருவொடு கலந்தவன்றே அவன்[6] கற்பிக்குமன்றே? அவற்றுள்[7] சில உயிர்க்கு இரத்தலையும் ஒரு செய்தொழிலாகக் கற்பித்தானாயின் அத்தீவினையால் தானும் அத்துன்பமுறல் வேண்டும் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் அவ்விரவின் கொடுமை கூறப்பட்டது.

*காரி.:* "நாறாத் தகடேபோல்"[8] என்பது போலத் திட்டுதல் காண்க.

***ஊ) கவிராசர்.:*** இந்த உலகத்தைப் படைத்தவன் இதிலே பிறக்கிற ஜீவன்களுக்குச் செல்வத்துடனே வாழ விதியாமல் இரந்து பிழைக்கவென்று படைத்தானானால், அவனும் இரக்கிறவர்களைப் போலே எங்கும் இறந்து கெட்டுப்போகவேணும், எ-று.

சீவன்களுக்கெல்லாம் ஆயுஸும், வேண்டிய உண்டியும், அதற்கேற்ற தொழிலும், பழவினை வசத்தினாலே கருவொடு கலந்த அன்றே அவன் கற்பிக்குமன்றே? அவற்றுட் சில பேர்க்கு இரக்கிற தொழிலைக் கற்பித்தானாயின், அவனும் கெடுவன், எ-ம்.

செய்தது அனுபவிக்க வேணும் என்கிற நியாயத்தாலே இரப்பைப் படைத்தவனும் கெடவேணும். முற்பகை செய்யிற் பிற்பகை விளையும் அன்றோ.

***எ) பழைய2.:*** இவ்வுலகத்தைப் படைத்தவன் இன்னுந் தன்னை இரந்து உயிர் வாழப் படைத்தானாகில், இவனும் இரப்பவனைப் போல எங்கும் இரந்து அலம் வந்து கெடுக.

பல மக்களை இரவாமற் படைத்தும், சில மக்களை இரக்கப் படைத்தும், வைப்பதென், ஒரு தன்மையாற் படையாமல் என்று இரப்பவன் கூறிய வசை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

### *"உலகு இயற்றியான் பரந்து கெடுக"*

***வரத.*** 'உலகு அதனை இயற்றியானும் பரந்து கெடுவதாக' என்பர். ***இராம.*** 'உலகினை ஆளும் அரசனும் அவன் ஆட்சியும் பரந்து கெடுக' என்பர். இவ்வண்ணம் உம்மை விரித்துப் பொருள் கோடலால்

4. அதற்கு - அவ்வாழ்நாளுக்கு
5. அதற்கு - உண்டிக்கு
6. அவன் - பிரமன்
7. அவற்றுள் - வாழ்நாள், உண்டி, செய்தொழில் என்பவற்றுள்
8. நாலடி.,266

ஆம் சிறப்பு யாது? என்று அறியக்கூடவில்லை. உலகியற்றியான் - காக்கும் காவலன் என்பதைக் காட்டிலும் 'படைத்த கடவுள்' என்பதே ஏற்புடையதாகும். ***காளி.*** 'பரந்து கெடுக' என்ற தொடரினைப் பிரித்து 'பரந்து இரந்து' என உரை கொள்ளும் ***காளிங்கர்*** உரையும் செப்பமின்று. ***கவிராசர்*** 'இரக்கின்றவர்களைப் போலப் படைப்பானும் இறந்து கெடுக' என்பர். இவைகளையன்றிப் படைத்தோன் அங்ஙனம் படைத்திருக்க மாட்டான் என்ற கருத்தால் 'இரப்பான் கெடுக' என்பர். இவைகளையன்றிப் படைத்தோன் அங்ஙனம் படைத்திருக்க மாட்டான் என்ற கருத்தால் 'இரப்பான் கெடுக' என்பதே ***மணக்குடவர்*** கருத்தென்னும் உரைவேற்றுமை யுரை ஆய்தற்குரியது. ஏற்றது போலத் தோன்றவில்லை.

**ஔ) ஒப்புமைப்பகுதி :**

***கெடுக உலகியற்றியான் :***

படைத்தோன் மன்ற அப்பண்பி லாளன் -புறம்.,194.5

ஐதேகம்மஇவ் வுலகு படைத் தோனே -நற்.,240.1

***முற்றும்:***

தனியொருவனுக்கு இங்கு உணவிலை எனின்
சகத்தினை அழித்திடுவோம் -பாரதியார்

நாறாத் தகடேபோ நன்மலர் மேல் பொற்பாவாய்
நீறாய் நிலத்து விளியரோ - வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கந் துறந்து. -நாலடி., 266

## 107.3. இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
## வன்மையின் வன்பாட்ட தில். (1063)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: வறுமையாலுற்ற துன்பத்தைப் பிறர்மாட்டு இரந்து பெற்ற பொருளினாலே தீர்ப்பேம் என்று கருதுகின்ற வன்மைபோல், வன்பாய் இருப்பது பிறிது இல்லை, எ-று.

இஃது இரந்தாலும் நல்குரவு தீராது என்றது.

***ஆ) பரிதி.***: மலையை எடுத்து மயிரிற்கட்டலும் கடுகில் ஏழு கடலை அடக்கலும் ஆகிய அவை அருமைய்யல்ல: தன் மிடியை இரந்து தீர்ப் பேன் என்பது அருமை, எ-று.

***இ) பரிப்.***: வறுமையால் உற்ற துன்பத்தைப் பிறர்மாட்டு இரந்து பெற்ற பொருளினானே தீர்ப்பேம் என்று கருதுகின்ற வன்மை போல வன்பாய்[1] இருப்பது பிறிது இல்லை, எ-று.

இது இரந்தாலும் நல்குரவு தீராது என்றது.

***ஈ) காளி.***: வறுமை என்கின்ற வல்லிடும்பையைப்[2] பிறர்பால் சென்று இரந்து கொண்டு தீர்க்கக் கடவோம் யாம் என்று கருதும் இவ்வன்கண்மையைக் காட்டில் வன்மைப் பாடு உடையது பிறிது யாது ஒன்றும் இல்லை குடிப்பிறந்தோர்க்கு, எ-று.

***உ) பரிமேல்.***: வறுமையான் வருந்துன்பத்தை முயன்று நீக்கக் கடவேம் என்று கருதாது இரந்து நீக்கக்கடவேம் என்று கருதும் வன்மைபோல, வலிமைப் பாடுடையது பிறிதில்லை, எ-று.

நெறியாய முயற்சி நிற்க நெறியல்லாத இரவால் தீர்க்கக் கருதுதலின், வன்மையாயிற்று. வன்பாடு முருட்டுத்தன்மை; அஃதாவது ஓராது செய்து நிற்றல். இதனான் வறுமை தீர்தற்கு நெறி இரவன்று என்பது கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்.***: 'தரித்திரத்தினாலே வந்த துக்கத்தை, முயற்சியாலே நீக்கக்கடவோ' மென்று நினையாமல், 'இரந்துண்டு நீக்கக்கடவோ' மென்று நினைக்கிற வன்மைப்போல வேறு வலிமைப் பாடுடையது இல்லை, எ-று.

வறுமை தீருவதற்கு நியாயமான முயற்சியும் உற்சாகமும் இருக்க, நியாயம் அல்லாத இரப்பால் தீர்க்க நினைக்கிறதனால் வன்மை ஆயிற்று.

***எ) பழைய2.***: வறுமையான் வருந்துன்பத்தை தாம் அனுபவிக்கக் கடவம் என்று கருதாது, இரந்து நீக்கக் கடவோ மென்று கருதும் வன்மைபோல வன்மைப்பாடு இல்லை.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'இன்மையிடும்பை'***

இன்மையான் வரும் துன்பம் என மூன்றனுருபு விரித்துத் துன்பத்திற்கு இன்மையை ஏதுவாக்கி உரைத்தனர் ***மணக்., பரிமேல்., கவிராசர்., பழைய2, மு.ரா.அரு.*** முதலிய உரையாசிரியர்கள். 'வறுமை என்கிற வல்லிடும்பை' என உருவகமாக்கினார் ***காளிங்கர்.***

1. வன்பாய் - வலிமையாய்
2. வல்லிடும்பை - வலிய துன்பம்.

'இன்மையின் இடும்பை' எனக் கிழமைப் பொருளதாக்கினார் *இராம.*: 'வறுமைத் துன்பம்' என இருபெயரொட்டாயும், வறுமையின் துன்பம் எனத் தற்கிழமை ஆறாம் வேற்றுமையாகவும் கொள்ள வைத்தனர். *கா.சு., தேவநேயர்* முதலானோர்.

இடும்பை இன்மை இரந்து தீர்வாம்-இடும்பை பயக்கும் வறுமையைப் பிறரிடம் இரந்திரந்தே சாவேம் (தீர்வாம்-அழிவேம் காவேம் என்பது) என்றும் இன்மை இடும்பை - துன்பமில்லாத தொழில் இரத்தலே யாதலின் இரந்தே தீர்வோம் என்றும், இடும்பை, இரத்தல் இடும்பையும் இன்மையான் வரும் இடும்பையும் என இருவகைப்படும். அதில் இரப்பான் வருமிடும்பையை எனவும், எண்ணி எண்ணிப் பலபொருள் காண முயல்வர் *மு.கோ.;* அதிகாரம் *இரவச்சமாதலால்* இன்மையான் வரும் இடும்பையை இரந்து தீர்வாம் என்பதனின் வேறான பொருள்வகைகள் இயையுமாயின் கொள்ளலாம்.

*பரிதி.* வன்மை என்பதற்கு எழுதும் விளக்கங்கள் சிறந்தனவாம். ஆனால் இன்றியமையாதன வல்ல. இன்மையிடும்பையைத் தனி வாக்கியமாகக் கோடல் சிறப்பின்று.

### ஒ) ஒப்புமைப்பகுதி :

***வன்மையின் வன்பாட்டதில் :***

இலம் என்னும் வன்மையின் வன்பாட்டதில் - நான்மணி.,30

துன்பகல்வோம் என்று துருபதன்பால் ஏற்றயர்ந்தான்
முன்பு துரோணன் முருகேசா-இன்பமிக -முருகேசர்.,107

### 107.4. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
### காலும் இரவொல்லாச் சால்பு. (1064)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: தம் சுற்றத்தளவு உணவுக்கு வருவாய் இல்லாக் காலத்தினும் பிறரை இரத்தற்கு இசையாத சால்பு[1] அகன்ற உலகமெல்லாம் கொள்ளாத பெருமையே உடைத்து, எ-று.

இஃது இரவாதார் பெரியர் என்றது.

***ஆ) பரிதி.***: பூமி இடம்போதாதே மிடியார்க்குத் தனம் தேடுவோம் என்று உழலும் காலுக்கு, எ-று.

---

1. சால்பு - நிறைந்த குணம்

***இ) பரிப்.:*** தன் சுற்றத்து அளவு உணவுக்கு வருவாய் அகல இல்லாத காலத்தினும் பிறரை இரத்தற்கு இசையாத சால்பு என்பது அகன்ற உலகம் எல்லாம் கொள்ளாத பெருமை உடைத்து, எ-று.

இஃது இரவாதார் பெரியர் என்றது. இவை இரண்டினாலும் இரவாமையால் வரும் நன்மை கூறப்பட்டது.

***ஈ) காளி.:*** உலகு இடம் எங்கும் சென்று பூரித்தும் பின்னும் புறம் போகும் தன்மையும் உடைத்தே: யாதோ எனின்? தமக்கு ஒன்றிற்கும் ஒரு திறவு இல்லாத இடத்தும் இரந்து கோடல் இல்லாமை என்கிற இந்தப் பெரிய சால்பு உடைமை, எ-று.

***உ) பரிமேல்.:*** நுகர வேண்டுவன இன்றி நல்கூர்ந்த வழியும் பிறர்பால் சென்றிரத்தலை உடம்படாத அமைதி, எல்லா உலகமும் ஒருங்கு இயைந்தாலும் கொள்ளாத பெருமை உடைத்து, எ-று.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவொல் லாமை அதன்மேற் ஏற்றப்பட்டது[2]. இதனான் அந்நெறி யல்லதனைச் சால்புடையார் செய்யார் என்பது கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்.:*** உண்ண உடுக்க இல்லாமல் தரித்திரம் வந்தபோதும், பிறரிடத்திலே போய் இரப்பதற்குச் சம்மதியாத நன்மை, எல்லா உலகமுங் கொள்ளாத பெருமையை உடையது, எ-று.

தரித்திரம் வந்தவிடத்தும் இரவாமல் முயற்சியாலே பிழைக்கிறது உத்தமமாம், எ-று.

***எ) பழைய2.:*** புசிக்கப் படுவன ஒன்று மின்றி வறுமையுற்ற வழியும், பிறர் பாற் சென்று இரக்க உடன்படாத அமைதி, எல்லா வுலகும் நிறைந்து பின்னும் பெருகிய பெருமை உடைத்து, எ-று.

இரவெல்லாமை : இரவுக்குப் பொருந்தாமை, சால்பு: அமைதி. தகை : பெருமை என்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்குடவர்*** 'இடமில்லாக் காலும்' என்பதற்கு 'இடனில் பருவத்தும்' என்ற ஆசிரிய வசனத்தை யகங்கொண்டு 'சுற்றத்தளவு வருவாயில்லாத காலத்தும்' என்றனர். ***காளிங்கர்*** தனக்குப் பிழைக்கும் வழி இல்லாத இடத்தும் என்றனர். ***பரிமேலழகர்*** 'நுகரவேண்டியன

2. இரவொல்லாமை - யாசித்தற்கு உடன்படாதிருத்தலை அச் சால்போடு ஒற்றுமை செய்து கூறியது காரியம் காரணமாய உபசார வழக்காம்.

இன்றி நல்கூர்ந்த வழியும்' என்றனர். ***கவிராசர்*** 'உண்ண உடுக்க இல்லாத இடத்தும் 'என்றனர். ***பழைய உரையுமது.***

'இடமெல்லாம் கொள்ளாத்தகைத்து' என்பதில் 'இடமெல்லாம்' என்பதற்கு ***மணக்.,*** 'அகன்ற உலகமெல்லாம் கொள்ளாத' என்றனர். ***காளிங்கர்*** 'உலகு இடமெல்லாம் சென்று பரவிப் பின்பும் புறவழியும்' என்பர். 'எல்லா உலகமும் ஒருங்கியைந்தாலும் கொள்ளாத் தன்மைத்து' என்றனர். ***கவிராசர்*** முதலிய அனைவரும் ***பரிமேலழகரை*** ஒட்டியுரைப்பர். இதில் இருவகைக் கருத்துக்கள் கொள்ளக் கிடைக்கின்றன. ஒன்று சால்பு அகன்ற இந்த உலகமெங்கும் நிரம்பிப் புறமும் வழியும் என்பது மற்றொன்று ஆயிரத்தெட்டு நூற்றெட்டு முதலாகச் சொல்லப்படுகின்ற உலகங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அதனுட்பெய்தால் கொள்ளாத தன்மையையுடையது என்பது. இவை இரண்டுமே உயர்வு நவிற்சியாயினும் முன்னது சிறிது இயற்கையோடு இயைபுடையது.

***பரிதி.,*** 'பணம்தேட முற்படுகின்ற வறிஞன் காலுக்குப் பூமியும் இடம்போதாதே' என்பர். இது ஓரளவு குறட்கருத்தை விளக்குகின்றது. இவர் 'கால் உறுப்பின் பெயராகக் கொண்டதால் இங்ஙனம் கருத்துக் கொணர உதவிற்று. நேரே இரவச்சத்தைக் குறியாமை காண்க. ஆதலால் ஒல்லாக்கால் என்பதை வினை எச்சமாகக் கொண்டு உரைக்கும் ஏனோருரையே சிறந்தது.

### ஒ) ஒப்புமைப்பகுதி :

***இரவொல்லாச் சால்பு:***

உரவோர் என்கை இரவா திருத்தல் - கொன்றை.,85

***முற்றும் :***

இரந்து கோடலி னியற்கையுந் தருமமு மெஞ்சக்
கரந்து கோடலே நன்றினி நின்றதென் கழறி - கம்ப.,6728

## 107.5. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த(து)
## உண்ணலின் ஊங்கினிய தில். (1065)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.:*** மோரிலும் காடியிலும் அடப்பெறாது தெளிந்த நீரினாலே அடப்பட்ட புற்கை[1]யாயினும், தனது தாளாண்மை யால் வந்ததனை உண்ணுதலின் மிக இனிதாயிருப்பது பிறிது இல்லை, எ-று.

1. புற்கை - புல்லரிசிச்சோறு

***ஆ) பரிதி.:*** நல்ல தண்ணீரிலே சமைத்த புற்கையாயினும் தம் முயற்சியிலே வந்தது போதும்,எ-று.

***இ) பரிப்.:*** மோரினும், காடியினும் அடப்பெறாது தெளிந்த நீரிலே அடப்பட்ட புற்கை ஆயினும் தனது தாளாண்மையால் வந்ததனை உண்டலின் மிக இனிது ஆய் இருப்பது பிறிது இல்லை, எ-று.

இரந்து கொண்டு அக்காரம்[2] பாலோடு அயிறலின்[3] புற்கை அயிறல் இனிது என்றது.

***ஈ) காளி.:*** அடுபுற்கை[4] தன்னினும் பசைபடு புற்கை[5] அன்றி வெறுந் தெளிநீர்ப் புற்கை[6] ஆயினும் அது தமது தாளாண்மையால் தரப்பட்டது. ஆயின் அதனைத்[7] தாம் உண்டு இன்புறுதலின் மேற்பட்ட இனிமை உடையது யாதும் இல்லை எனவே பிறர் பால் சென்று இரந்து பெறுவது அமுதமே ஆயினும் இனிது அன்று என்பது பொருள்.

***உ) பரிமேல்.:*** நெறியாய முயற்சி கொடுவந்து தந்தது தெளிந்த நீர்போலும் அடுபுற்கையே யாயினும், அதனை உண்டற்குமேல் இனியதில்லை, எ-று.

தாள்தந்த கூழ் செறிவின்றித் தெண்ணீர் போன்ற தாயினும் இழிவாய இரவான் வந்ததன்றித் தம்முடைமையாகலின், அமிழ்தத்தோடு ஒக்கும் என்பதாம். இதனால் நெறியினான் ஆயது சிறிதேனும் அது[8] செய்யும் இன்பம் பெரிது என்பது கூறப்பட்டது.

***ஊ)கவிராசர்.:*** நியாயமான முயற்சியால் தான் கொண்டு வந்து தெளிந்த தண்ணீர்போல இருக்கிற புல்லரிசிக் கூழானாலும், அதைச் சாப்பிடுவதற்கு மேலே நல்லதில்லை, எ-று.

தான் தேடிவந்த பொருள் எத்தனை கொஞ்சமானாலும், குற்றமான இரப்பாலே வந்ததல்லாமல், தனது உடைமை ஆதலின், அமுதோ டொக்கும்.

***ஏ) பழைய2:*** தெளித்த நீர்போலச் சமைத்த கூழாயினும் தான் தொழில் செய்து வந்ததாயின், அதனை யுண்ணலின்மேல் இனிய தொன்று மில்லை.

---

2. அக்காரம் - சர்க்கரை
3. அயிறலின் - உண்டலின்
4. அடுபுற்கை - சமைத்த சோறு
5. பசைபடு புற்கை - குழைந்த சோறு
6. தெளிநீர்ப் புற்கை - நீர் சுரந்த சோறு
7. அதனை - கூழை
8. அது - வழியாலாயது

புற்கை : கேழ்வரகு முதலாய கூழ். தாள் : தொழில். தந்தது : கொடுத்தது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'மோரினும் காடியினும்' புற்கை அடப்பெறுவதில்லை - நீரில் அடுவதே மரபு. ஆதலால் ***மணக்குடவர்*** உரை சிறப்பின்று.

புற்கை-புல்லரிசிச்சோறு. இன்று புக்கை என வழங்குகிறது. மற்றும் சோற்றுக்கஞ்சிக்கும் பெயராயிற்று. புற்கையாயினும் என்ற இழிவு சிறப்பும்மை உண்பனவும் தின்பனவும் பருகுவனவும் குடிப்பனவும் கறிப்பனவுமாகிய தொடுகறி சிறிதுமில்லாத கஞ்சி என்பதை உணர்த்திற்று. ***காளிங்கர்*** உம்மைப் பொருளை வேறு விதமாக விளக்குவர். ***பரிமேல்.*** 'நீர்போலும் அடுபுற்கை' என்பர். இது சிறந்த கருத்து. வயிற்றுத்தீச் சிறிதுநேரமாயினும் தணியக்கூடிய அளவு பிசைந்துண்ணும் சோற்றுத் திரளாயின்றி புற்கை வெந்த நீரேயாயினும் என்ற கருத்தமைந்த உரைகள் சிறந்தன.

இக்குறட்பாவில், 'தமது பாத்துண்டல்' என்றதன் கருத்தும் சிறிது விரவி உள்ளது. ***பழைய உரை*** "புற்கை கேழ்வரகு முதலிய புல்லினத்தின் அரிசியாலான கூழ்' என்னும், ***வரத.*** 'தெளிந்த நீரும் புல்லரிசியுணவும்' என உம்மைத் தொகையாக விரிப்பர். இவர் உரை நீராகாரம் எனப்படும் சோறூறிய நீரைக் கருதச் செய்கிறது. இவற்றுள் 'நீர்போலும் புற்கை' என்ற உரை சிறந்தது.

***'உண்ணலின்'*** உண்ணலைப் போல என இன்னுருபு ஒப்புப் பொருளில் உரைப்பதும், ***ஊங்கு*** இந்தவுலகில் என்பதும் இத்துணை சிறப்பில. 'ஊங்கு' என்ற சுட்டு நீண்டு இடப்பெயர் இவ்விடம் என்ற பொருளைத்தராது ஆங்கு ஈங்கு என்பதற்கு இடைப்பட்ட இடத்தையே சுட்டும் ஆதலின்,

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***முற்றும் :***

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர் - கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும். -நாலடி.,200

எண்ணிற் சிறந்தார் முயற்சியினால் ஏலா உப்பில் வறும்புற்கை
உண்ணற் கமைந்த தமைத்ததென உவப்பர் ஏம கண்டனே
- விநா.அரசி.,154

இரந்து பிழைப்பதினும் விறகுவெட்டிப்
பிழைப்பது கண்ணிய மானது. - நபிகள் நாயகம்.

107.6. ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில். (1066)

*உரைப்பகுதி:*

*அ) மணக்.:* இப் பசுவிற்குத் தண்ணீர் தருமின் என்று பிறரை இரப்பினும், நாவினுக்கு இரத்தல் போல இளிவரவு தருவது பிறிது இல்லை, எ-று.

இஃது அறத்திற்காக இரத்தலும் ஆகாது என்றது.

*ஆ) பரிதி.:* பசுவிற்குத் தண்ணீர் தாருங்கோள் என்று கேட்பினும் இரப்பது போல் ஈனம் இல்லை, எ-று.

*இ) பரிப்.:* இப்பசுவிற்குத் தண்ணீர் தருமின் என்று பிறரை இரப்பினும் நாவிற்கு இரத்தல் போல இளிவரவு தருவது பிறிது இல்லை, எ-று.

இஃது அறத்துக்காக இரக்கலும் ஆகாது என்றது. இவை மூன்றினாலும் இரத்தலைத் தவிர வேண்டும் என்று கூறப்பட்டது.

*ஈ) காளி.:* தமக்கும் தம் கிளைக்கும் இரத்தல் இன்றி ஒரு பசுவிற்கு இத்துணை நீர்வேண்டும் என்று பிறர்பால் சென்று இரப்பது தகுமேயும் அன்றே? மற்று அதுசொல்லி இரப்பினும் அதுவும் அவ்விரவினுட்படுதலின், குடிமரபாளர்[1] தமது நாவிற்கு இரத்தலின் மேற்பட்ட இளிவரவு உடையது பிறிது ஒன்றும் இல்லை, எ-று.

இனிது மற்று இரப்பு முதல் ஆகிய இளிவு தொழிற்குச் சாகாமை குடிக்கு இழிபு ஆகிய கயமையாம் ஆதலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலையதிகாரம்.

*உ) பரிமேல்.:* தண்ணீர் பெறாது இறக்கும் நிலைமைத் தாயதோர் ஆவினைக் கண்டு அறம்நோக்கி இதற்குத் தண்ணீர்தரல் வேண்டும் என்றறிந்து சொல்லுங்காலும், அவ்விரவு போல ஒருவன் நாவிற்கு இளிவந்தது பிறிதில்லை, எ-று.

ஆகாத்தோம்பல் பேரறமாகலின் ஆவிற்கு என்றும், பொருள் கொடுத்துக் கொள்ளவேண்டாத எண்மைத்தாகலின் நீர் என்றும், இரக்கின்றானுக்கு இளிவு அச்சொல்லளவே[2] யாகலின்

1. குடிமரபாளர் - வழிவழியாக நற்குடிப்பிறந்தோர்.
2. அச்சொல்லளவே - இப்பசுவிற்குத் தண்ணீர்தரல்வேண்டும் என்ற சொல் மாத்திரமே.

நாவிற்கு என்றும், அதுதான்[3] எல்லா இளிவினும் மேற்படுதலின் இளிவந்ததில் என்றும் கூறினார். இதனால் அறனும் முயன்று செய்வதல்லது[4] இரந்து செய்யற்க என்பது கூறப்பட்டது.

*காரி.*: அறனும் முயன்று செய்வதல்லது, இரந்து செய்யற்க என்பது இதனான் கூறப்பட்டது என்க.

***ஊ) கவிராசர்.***: தண்ணீர் கிடையாமல் வருத்தப்படுகிற பசுவைக் கண்டு தருமபுத்தியாய் நினைத்து, 'இந்தப் பசுவுக்குத் தண்ணீர் கொடுங்கோ' ளென்று கேட்டாலும், அந்த இரப்பைப் போல நாவுக்குக் குற்றமானது வேறொன்றில்லை, எ-று.

தருமத்துக்கானாலும் இரந்து செய்யலாகாது, எ-ம்.

***ஏ) பழைய2:*** தண்ணீர் குடியாமல் நிற்கும் பசுவினுக்குந் தண்ணீர் தரவேண்டும் என்று இரந்து சொல்லும்போதும், அவ்விரப்பைப் போல ஒருவர் நாவினுக்கு இழிவுவந்தது பிறிதில்லை.

ஆவினைக் காத்தோம்பல் பெரிய அறம்; ஆதலின் அதற்கு நீர் எளியபொருள் விலை கொடுத்துக் கொள்ள வேண்டாத பொருள்; அதனை யிரந்தாலும் நாவினுக்கு இழுக்காம் என்றது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

'பொருள் கொடுத்துக் கொள்ளலாகாத' என்ற ***பரிமேலழகர்*** விளக்கம் நீரும் காற்றும், வெப்பமும் இலவசப் பொருள்கள் என்ற பொருளாதார நுணுக்கத்தை யடியாகக் கொண்டது. அறனும் முயன்று செய்வதே நல்லது. இரந்து செய்யற்க என்ற ***காரிரத்ன கவிராயர்*** உரை மிகமிகச் சிறந்தது.

'தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள் ஆடிய பெருமாளன்பர்க்கு ஆவன ஆகுமென்று' என்ற ***பெரியபுராணப் பகுதி*** பசுக்கள் ஒருவனதுடைமை யாமேயன்றி அனைவர்க்கும் பொதுவாகா என்பதைக் குறிக்க ***வரத.*** விளக்குவது இயைபிற்றன்று.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

### *இரவின் இளிவந்த தில் :*

நினைக்கிலை யென்கை நிமிர்ந்திட வந்து
தனக்கிய லாவகை தாழ்வது தாழ்வில்
கனக்கரி யானது கைத்தல மென்னின்
எனக்கிதன் மேனலம் யாதுகொ லென்றான் -கம்ப.,445

3. அதுதான் - அச்சொல் தான்
4. முயன்று செய்வதல்லது - முயற்சித்து முடியச்செய்வதல்லது.

இரந்து கோடலி னியற்கையுந் தருமமும் மெஞ்சக்
சரந்து கோடலே நன்றினி நின்றதென் கழறி - கம்ப.,6728

ரவி லாளர் விழக்களை கண்ணிலா
இரவ லாளரி னெங்கு மிரிந்தவால் - கம்ப., 6858

தளர்வொடு மெலிந்தும் வையந்தனிக்குடை நிழற்றும் பைம்பொற்
கிளரொளிப் பூணான் வீமன் பாவையைக் கேட்டல் செய்யான்
அளியென வுயிரை யுண்மை யறத்தினை யறவிட்டாலும்
இளிவென வெண்ணி மானம் பூண்டவ ரிரப்பர் கொல்லோ - நைடதம்.

*முற்றும்:*

இரத்தலின் ஊங்கு இளிவரல் இல்லை - முதுமொழிக்.,6:9

ஏற்ப திகழ்ச்சி. - ஆத்தி., 8

ஒன்றும் வேண்டல ராயினும் ஒருவர்பா லொருவார்
சென்று வேண்டுவ ரேலவர் சிறுமையின் தீரார். -கம்ப 6726

**107.7. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பார் இரவன்மின் என்று. (1067)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: பிறர்மாட்டு இரந்து செல்வார் எல்லாரையும் யானிரந்து கொள்ளா நின்றேன்; இரக்குமிடத்து இல்லை என்பவர்மாட்டு ஒரு பொருளை இரந்து சொல்லன்மின் என்று சொல்லி, எ-று.

இரந்து சொல்லாமை இரந்து பெற்ற பொருளினும் கோடிமடங்கு மிகுதியுடைத்து என்றவாறு. இஃது ஈவார் மாட்டும் இரத்தலாகாது என்றது.

***ஆ) பரிதி.***: ...... வேண்டுவன இரப்போரை இல்லை என்போரைக் கேளாமல் இருக்க என்று இரப்போரை வேண்டிக் கொள்வேன், எ-று.

***இ) பரிப்.***: பிறர் மாட்டு இரந்து செல்வார் எல்லாரையும் யான் இரந்து கொள்ளா நின்றேன்; இரக்கும் இடத்து இல்லை என்பார்மாட்டு இரவாது ஒழியுங்கோள் என்று, எ-று.

யாவர்மாட்டும் இரத்தல் ஆகாது என்று கூறுவார் முற்படி ஈயாதார் மாட்டு இரக்கல் ஆகாது என்றது.

***ஈ) காளி.***: பிறர்பால் காணாது சென்று இரப்பாரை எல்லாம் யானும் ஒன்று இரப்பல்; அஃது யாதோ எனின் அங்ஙனம் இரந்து உயிர்

கருதுகின்ற அவ்விரப்பான்கண்ணும் அது கொண்டு உயிர் நிலை பெறாது பின்னும் கரப்பார்கண் அவ்விளிவரவு ஆகிய இரத்தலைச் செய்யன்மின் எனவே: இந்த எளிமைபட்டும் இரக்க வேண்டின் இரவாது இரத்தல் இனிது என்பது பொருள், எ-று.

***உ) பரிமேல்.***: இரப்பாரையெல்லாம் யான் இரவா நின்றேன்யாது சொல்லி எனின், நுமக்கு இரக்க வேண்டுமாயின் தமக்கு உள்ளது கரப்பாரை இரவாதொழிமின் என்று சொல்லி, எ-று.

இரண்டாவது விகாரத்தால் தொக்கது[1]. இவ்விளிவந்த செயலான் ஊட்டிய வழியும் உடம்பு நில்லாதாகலின் இது[2] வேண்டா என்பது தோன்ற இரப்பன் என்றார். இதனான் மானந்தீரவரும் இரவு விலக்கப்பட்டது.

***ஊ)கவிராசர்.***: இரக்கிறவர்களையெல்லாம் யான் இரவா நின்றேன், 'நீங்கள் இரந்தாலும், தமக்கு உள்ளது ஒளிக்கிறவர்களை இரக்க வேண்டாம்' என்று கூறி.

ஒளிக்கிறவர்களை இரந்தால், மானங் கெடப் பேசுவார்கள் ஆனபடியினாலே, ஒளிக்கிறவர்களை இரக்கலாகாது, எ-று.

***எ) பழைய2.***: இரப்பாரையெல்லாம் யானிரப்பன் கேளுங்கோள் நுமக்கு இரக்க வேண்டுமாயின், உள்ளது கெடாமல் ஒளிப்பாரிடத்து இரக்க வேண்டாம், எ-று.

ஒளிப்பவரிடத்து இரக்க வேண்டா. ஒளியாமற் கொடுப் பவரிடத்து இரந்து கொண்மின்கள் என்று இரக்கின்றேன். என்றது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

கருத்துமாற்றமில்லாத தெளிவான குறள் இது. இதனை ஆசிரியர் கூற்று என்பர் ***வரத.; தேவநேயர், மு.ரா.அரு.*** 'இது இரத்தலின் கொடுமையால் வருந்திய இரவலன் ஒருவன் கூற்றாக' உரைப்பர். ***காளிங்கர்*** கரப்பான் நீர் இரப்பின் அது கொண்டு உம் உயிர் நிலைபெற்று விடப்போவதில்லை; பின்னும் கரப்பார் கண் இரவாதீர் என்று இரப்பன்' என்கிறார். இவருரை 'இரத்தலால் பயனில்லை. இறக்கும் வரையில் இரப்பான் வந்த செல்வம் இருக்கப் போவதில்லை; மீளவும் இரக்க நேரும். அங்ஙனம் இரவாதீர்' என்ற கருத்தை வழங்குகிறது. இதனால் செல்வ நிலையாமையும், வினைகழியாமையும், அதனாலாய வறுமைதொலையாமையும் சுட்டி இரவாமையை வலியுறுத்துகிறது இது ஏனோர் உரையினும் சிறந்தது.

---

1. கரப்பாரை என்பதன் கண் உள்ள 2ம் வேற்றுமையுருபு 'ஐ' காரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது.
2. இது - இளிவந்த சொல்.

*கவிராசர்* போன்றார் 'கரப்பார் மானங்கெடப் பேசுவர்; அதனால் இரக்கவேண்டாம் என இரப்பேன்' என்பார்.

ஆசிரியர் அறிவுரையாக இருப்பதைவிட பட்டறிவாளன் தன்னனு பவங்கூறுவதாகக் கொண்டார் கருத்து இங்கு மிக ஏற்புடையது.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

***இரப்பின் கரப்பார் இரவன்மின்:***

கரவ லாளர் தம்மனைக் கடைகள்தோறும் கால நிமிர்த்
திரவ லாழி நெஞ்சமே - சம்பந்தர்,கோவலூர்.,2

மான அருங்கலம் நீக்கி இரவென்னும்
ஈன விளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கும் எனின் -நாலடி., 301

## 107.8. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும் பார்தாக்கப் பக்கு விடும். (1068)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: ஒருவன் வறுமையாகிய கடலை நீந்திக் கடக்க அமைத்துக் கொண்ட இரத்தலாகிய அரணில்லாத தோணி, இரக்கப்பட்டார் மாட்டுக் கரத்தலாகிய கல்லோடே தாக்க இறந்து விடும், எ-று.

***ஆ) பரிதி.***: இரவு என்னும் ஏமாப்பில் தோணி இல்லை என்னும் பார்[1] தாக்க உடையும். எ-று.

***இ) பரிப்.***: ஒருவன் வறுமை ஆகிய கடலை நீந்தி ஏறுவது ஆக அமைத்துக் கொண்ட இரத்தல் ஆகிய அரண் இல்லாத தோணி இரக்கப்பட்டார்மாட்டுக் காத்தல் ஆகிய கல்லோடே தாக்கப் பிரிந்து விடும், எ-று.

இது நல்குரவு தீராமைக்குக் காரணம் கூறிற்று. இவை இரண்டினாலும் இரவினால் பயன் இன்மை கூறப்பட்டது.

***ஈ) காளி.***: இரவு என்று யாவராலும் இழித்து உரைக்கப்படுகின்ற இந்தச் சேமச் செறிவு[2] இன்றிப் பெரிதும் நொய்தாகிய[3] தோணி,

1. பார் - பூமி
2. சேமச் செறிவு - பாதுகாப்புத் தோணி
3. நொய்தாகிய - இலேசான

ஒருவர் 'இல்லை போ' என்னும் மிக்க பார் தாக்கவே உடைந்து விடும்; எனவே வறுமைக்கடல் நீந்துவதற்கு இரப்பு என்பது ஓர் கைத்தோணி[4] என்று கருதுவது தம் அறியாமை, எ-று.

***உ) பரிமேல்.***: இவ்வறுமை என்னும் கடலை இதனால்[5] கடத்தும் என்று கருதி ஒருவன் ஏறிய இரவு என்னும் சேமமற்ற தோணி, அதன்கண்[6] ஓடுங்கால் கரத்தல் என்னும் வன்னிலத்தோடு[7] தாக்குமாயின் பிளந்து போம், எ-று.

முயற்சியான் கடப்பதனை[8] இரவாமல் கடக்கலுற்றான் அதன்[9] கரை காணாமையின் 'ஏமாப்பில் தோணி' என்றார். ஏமாப்பின்மை தோணிமேல் ஏற்றப்பட்டது.[10] அது[11] கடத்தற்கு ஏற்ற தன்மையாலும், நிலம் அறியாது செலுத்தியவழி உடைதலானும். அதன்கண் ஏறற்க என்பதாம். இஃது அவயவவுருவகம்[12].

***காரி.***: ஏமாப்பில் தோணி-காவலற்ற தோணி. பார்-வன்னிலம். முருகாற்றுப்படையுள் ''பார்முது பனிக்கடல்''[13] என்பதும் அது. பரிபாட்டுள் ''பார் துகள்பட''[14] என்பதும் அது. அதனை இக் காலத்தார் சில்லந்தட்டிற்று[15] என்பர். இஃது அவயவ உருவகம்.

***ஊ) கவிராசர்.***: 'தரித்திர மென்கிற சமுத்திரத்தை இரப்பு என்னும் படகினாலே தாண்டுவோ' மென்று இரப்பென்னும் படகிலே

4. கைத்தோணி - சிறிய தோணி
5. இதனால் - இரப்பன் என்னும் காவலற்ற தோணியால்
6. அதன்கண் - வறுமை என்னும் கடலில்
7. வன்னிலம் - கற்பாறை
8. கடப்பதனை - கடப்பதாகிய வறுமைக் கடலை
9. அதன் - வறுமைக் கடலின்
10. ஈண்டு இரவுப் பொழுதை பாதுகாவல் இல்லாத தோணி என்று கூறியது உபசார வழக்கு.
11. அது - இரவென்னும் ஏமாப்பில் தோணி
12. (அவயவியை)உறுப்பையுடைய முதற்பொருளை நீக்கி உறுப்புக்களை, (அவயவங்களை) மட்டும் உருவகஞ் செய்தது அவயவ உருவகமாம். இங்கு 'வறுமை' என்னும் அவயவியை நீக்கி இரவுகரவு என்னும் அவயவங்களைத் தோணி என்றும் பார் என்றும் உருவகஞ் செய்தமையின் இக்குறள் அவயவ உருவக அணியாம். வறுமை என்னும் முதலுக்கு இரவும் கரவும் உறுப்பாதலின் இரவென்னும் ஏமாப்பில் தோணி என்பதும் கரவு எண்ணும் பார் என்பதும் உருவக அணிகளாம்.
13. திருமுருகாற்றுப்படை., 45.
14. பரிபாடல்., 5:1
15. சில்லந் தட்டிற்று - இது தோணி கரை தட்டியதைக் குறிப்பது.

ஏறிக்கொண்டு தரித்திரமென்னுங் கடலிலே ஓடுகிற போது, தன்பொருளை யொளிக்கிறவன் என்கிற கெட்டித்தரையோடு தாக்குமாயின், அப்படகு பிளந்துபோம், எ-று.

இரக்கிறவன், இல்லை என ஒளிக்கிறவனைக் கண்டவுடனே கெடுவன், எ-ம்.

*ஏ) பழைய2.:* வறுமையென்னும் கடலை இதனாற் கடப்போம் என்று ஒருவன் ஏறிய, இரத்தல் என்னும் ஏமாப்பில்லாத் தோணி அக்கடலினோடு மிடத்துக் கரத்தல் என்னுங் கற்பாறையிற் றட்டுப் படுமாயின் பக்கு விட்டு உடைந்துபோம்.

ஏமாப்பு : இறுமாத்தல். பக்கு: ஒட்டுவிடுதல்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'தோணி'*** - 'வறுமையாகிய கடலைக் கடக்குந் தோணி' ***மணக்.:*** 'வறுமைக்கடல்' ***பரிமேல்.***; தரித்திரமென்கிற சமுத்திரம் ***பழைய*** அனைவரும். 'வாழ்க்கையாகிற கடல்' ***வரத.***; 'தரித்திரமாகிய கடல்' ***மு.ரா.அரு., தேவநேயர்.***

இவற்றுள் வறுமையைக் கடலாகவும், இரத்தலைத் தோணியாகவும் உருவகித்தமை பொருட் சிறப்புடையது.

'கரவு'ம் மனத்துளிருப்பதாய் வெளித் தெரியாதது. பாறையும் கடலுள் மறைந்ததாய் தாக்கினால் அன்றித் தெரியாதது ஆதலால் கரவைப் பாராக உருவகித்த ஆசிரியர் உள்ளம் பெரியது.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***முற்றும் :***

இயைவது கரத்தலின் கொடுமை இல்லை.

- முதுமொழிக்.,6:5

107.9. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூம் இன்றிக் கெடும். (1069)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** இரப்பு என்று நினைக்க உள்ளம் கரையும்; இரக்கப்பட்டவர் கரக்குமதனை நினைக்க, கரைந்து நின்ற உள்ளமும் மாய்ந்து கெடும். எ-று.

இஃது இரப்பார்க்கு ஆக்கமில்லை என்றது.

***ஆ) பரிதி.:*** தேகி[1] என்பார்க்கு உள்ளம் உருகிப்போம்; இல்லை என்று கரப்பவர்க்கு நெஞ்சு எப்படி உருகுமோ அப்படி, எ-று.

***இ) பரிப்.:*** இரப்போம் என்று நினைக்க உள்ளம் கரையும்; இரக்கப் பட்டவர் கரக்கும் அதனை நினைக்கக் கரைந்து நின்ற உள்ளம் மாய்ந்து கெடும், எ-று.

இஃது இரப்பார்க்கு ஊக்கம் இல்லை ஆம் என்றது.

***ஈ) காளி.:*** அறிவு உடையோர்க்கு இரவு என்பது தம் குடிமைக்கு[2] ஒருவடு[3] என்று இங்ஙனம் கருதுப அன்றே? அதனால் அவ்வின்னா இரவினை உள்ளவே தமது உள்ளம் சால்பு உடைமையும் இனி நாம் ஒருவர்பால் இரந்து சென்றால், அவர் இல்லை போ என்றதனையும் தாம் உள்ளவே பின்னைப் பண்டு உள்ளதூஉம் இன்றிக் கெடும், எ-று.

***உ) பரிமேல்.:*** உடையார் முன் இல்லார்சென்று இரந்து நிற்றலின் கொடுமையை நினைந்தால் எம் உள்ளம் கரைந்து உருகாநிற்கும். இனி அந்நிலையைக்கண்டு வைத்தவர் இல்லை என்றலின் கொடுமையை நினைந்தால் அவ்வுருகுமளவு தானும் இன்றிப் பொன்றிவிடும், எ-று.

'இரவினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ, கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு'[4] என்றார் பிறரும். இரவினும் கரவுகொடிது என்பதாம். இதற்குப் பிறரெல்லாம் இரக்கின்றவர் உள்ளம் உருகும் என்று உரைத்தார்[5].

1. தேகி - 'கொடு' என்பர்.
2. குடிமைக்கு - குடிப்பிறப்பிற்கு
3. வடு - குற்றம்
4. நாலடி.,305
5. இவ்வாறு உரைப்பர் காளிங்கர்.

***ஊ)கவிராசர்.***: ஐசுவரியவான்கள் முன்னே தரித்திரர்கள் போய் நின்று இரந்து நிற்கிற கொடுமையை நினைந்தால், எம் மனசு உருகும்; ஐசுவரியவான்கள் பொருள் இருக்கையிலே இல்லை என்கிற கொடுமையை நினைத்தால், அவ்வுருகுமளவு தானுமின்றிப் பிராணன் போம்,எ-று.

'இரப்பை நினைத்தால் நம் உள்ளம் உருகுகின்றதே! இரந்து பெறும் யாசகர்மனம் எவ்வாறு இருக்குமோ!' என்றார் பிறரும்

***எ) பழைய2.***: உடையார் முன் இல்லார் சென்று இரந்து நிற்றலின் கொடுமையை நினைத்தால் உள்ளமுருகும்; இனி அவர் இல்லை என்னுங் கொடுமையை நினைத்தால் உருகியது போக நின்றது நில்லாமற் கெடும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

'இரத்தலை நினைக்க உள்ளம் உருகும்; இரந்தும் இரக்கப் படுவார் இல்லை என்பாராயின் அதனை நினைக்க உருகியது போக உள்ள உள்ளமும் அழிந்து போம்' என்பார் ***பரிமேலழகர்.***

***மணக்.*** 'கரைந்துநின்ற உள்ளமும் அழியும்' என்பர். ***காளி.*** 'தமதுள்ளம் சால்புடைமையும், நாம் இரந்துபோகஇரக்கப் பட்டார் இல்லைபோ என்பதனையும் நினைக்க முன்னுள்ளதூஉம் போம்' என்பர். இவருரை உள்ளது எது என்பதனை விளக்கிற்றிலது. ஏனைக் ***கவிராசர், பழைய உரைகள், பரிமேலழகரை*** ஒட்டியனவே.

***தேவநேயர்*** இரப்பானையும் கரப்பானையும் கண்ட சான்றோர் ஒருவர் கூறுவதாகக் கருதி, 'இரக்குநிலையைக் காணின் உள்ளம் உருகும் அவனுக்குக் கரப்பான் சொல்லும் கொடுமையை நினைத்தாலே உருகும் நிலையும் இல்லாது முற்றும் இறந்து போம்' என்பர்.

இவையன்றி வஞ்சினன் ஒருவன் கூறுவதாகப் ***பரிமேலழகர்*** உரைக்கிறார். அங்ஙனம் உரைப்பார் யார் என்பது அறியக்கூடவில்லை. ***மு.ரா.அரு.***வும் கண்டார் கூற்றாகக் கருதி உரை கூறுவர்.

***இராம.*** 'பிச்சை கேட்கும் பரிதாபத்தை நினைத்தாலே ஒருவன் உள்ளம் உருக வேண்டிய நிலையிலிருக்க இரக்கப்பட்டான்

தன்னிடம் உள்ளதை இல்லை என்கிறானே! அதனை நினைக்கிறபோது அவன் காக்கும் அவன் பொருளும் உண்மையாகவே இல்லாமற் போய்விடத் தான் செய்யும்' என்பார்; இது புதிய நோக்கு. இக்கருத்து 'கரவுள்ள உள்ளதூம் இன்றிக் கெடும்' என்ற பாடம் தந்தது.

ஏனோர் கண்ட 'இரத்தலை நினைக்க உள்ளம் உருகும்; இரக்கப்பட்டார் கரவுள்ள கருகியது போக, எஞ்சியுள்ள உள்ளமும் கெடும்' என்ற உரைக்குப் பாடம் 'கரவுள்ள உள்வதூஉம் இன்றிக் கெடும்' என்றிருந்திருக்கக் கூடும். நினைப்பும் ஒழிந்து மூர்ச்சையுண்டாம் என்பது. இதனை யுற்றாராய்ந்து சிறப்பின்றாயின் மறுக்க, இக்கருத்தை அநுவதித்ததே அடுத்த 'கரப்பவர்க்கியாங் கொளிக்கும் கொல்லோ' என்றதையும் எண்ணுக.

## 107.10. கரப்பவர்க் கியாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
## சொல்லாடப் போஒம் உயிர். (1070)

***உரைப்பகுதி:***

***அ) மணக்.***: 'இரப்பார்க்குச்' - பாடம்.

எமக்கு யாதும் இல்லை; சிறிது ஈயவேண்டும் என்று சொல்லுவார்க்கு, குறித்தவர்கள் இல்லை என்று சொன்ன அளவிலே அவர் உயிர்போய்ப் பிணம்போல நிற்பார்; பொருள் உடையராய் வைத்து அவர் சொன்ன இல்லை என்னுஞ் சொல்லையே சொல்லி ஈயாதார்க்கு உயிர் எவ்விடத்து ஒளித்து நிற்கின்றதோ, எ-று.

இது பிணத்தை ஒப்பர் என்றது.

***ஆ) பரிதி.***: நாஸ்தி[1] என்பார்க்கு எப்படியோ தெரியாது. இரப்பவர்க்கு தேகி என்று கேட்க உயிர்விடும், எ-று.

***இ) பரிப்.***: எமக்கு யாதும் இல்லை; சிறிது ஈய வேண்டும் என்று சொல்லுவார்க்கு, அக்குறித்தவர்கள் இல்லை என்று சொன்ன அளவிலே உயிர்போய்ப் பிணம்போல நிற்பார்கள்.

உடையராய் வைத்து அவர் சொன்ன இல்லை என்னும் சொல்லையே சொல்லி ஈயாதார்க்கு உயிர் எவ்விடத்து ஒளித்து நிற்கின்றதோ? எ-று.

1. நாஸ்தி என்பார் - 'இல்லை' என்பார்.

இது பிணத்தை ஒப்பர் என்றது.

**ஈ) காளி.**: அவர்போல் அன்றித் தாம் கைப்பொருள் உடையர் ஆகியும் கரப்பவராகிய கடுவினையாளர்க்கு அவர் உயிர் அவரது உடலில் யாங்குக் கரந்து நிற்குமோதான்? இது அறிகின்றிலோம்; இது சால வியப்புடைத்து; எனவே இரப்பவர் உயர்குடி மரபினோர்க்கு அவ்விரவு என்னும் உரையாடவே உக்குவிடும்[2], எ-று.

**உ) பரிமேல்.**: கரப்பார் இல்லை என்று சொல்லாடிய துணையானே இரப்பார்க்கு உயிர்போகா நின்றது; இனிச் சொல்லாடுகின்ற அவர் தமக்கு உயிர் பின்னும் நிற்றலான் அப்பொழுது[3] எப்புரையுள்[4] புக்கு ஒளித்து நிற்கும், எ-று.

உயிர்போகலாவது[5] இனி யாம் என்செய்தும் என்று இரங்கிச் செயலற்று நிற்றல். "அந்நிலையே, மாயானோ மாற்றி விடின்"[6] என்றார் பிறரும். கேட்டாரைக் கொல்லவற்றாய சொல் சொல்வாரைக் கோறல் சொல்ல வேண்டாவாயினும் அது[7] காண்கின்றிலம் இஃது என்னோ என்பதாம். வறுமையுற்றுழி மறையாது இரக்கப்படுவாராய கேளிர்கட்கும் அதனைச் சொல்லாட உயிர்போம். ஆனபின் மறைக்கப்படுவாராய பிறர்க்குச் சொல்லாடியக்கால் போகாது எங்கே ஒளித்து நிற்கும். இரண்டானும் போமே அன்றோ என இரவஞ்சினான் ஒருவன் கூற்றாக்கி உரைப்பாரும் உளர்[8]. இவை மூன்று பாட்டானும் அவ்விரவின் குற்றமும் கரவின் குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன.

**ஊ) கவிராசர்.**: ஒளிக்கிறவர்கள் இல்லை என்று சொன்னவுடனே, இரக்கிறவன் பிராணன் போம்; இரக்கிறவன் தா வென்று கேட்ட பொழுது ஒளிக்கிறவன் பிராணனும் போகா நிற்கும். பிராணன் போனால், பின்னை இல்லை என்று எப்படிச் சொல்லுவா னென்றால், ஏழு புரை[9]யிலே ஒரு புரைக்குள்ளே ஒளித்திருக்கும், எ-று.

---

2. உக்கு விடும் - பிளக்கும்
3. அப்பொழுது - இரப்பாரை நோக்கிக் கரப்பார் பொருள் இல்லை என்னும் அக்காலத்தில்
4. எப்புரையுள் - எந்த துளையில்
5. உயிர் போகலாவது - இரப்பவர்க்கு உயிர் போதலாவது.
6. நாலடி., 308
7. அது - சொல்வாரைக் கொள்ளுதல்
8. இன்னார் என்று அறியக்கூடவில்லை
9. ஏழுபுரை - கண் இரண்டு, காது இரண்டு, மூக்கிரண்டு, வாய் ஒன்று

ஒளித்திருக்கிறதாவது - இரக்கிறவன் கேட்டதற்கு 'என்ன சொல்லுவோ'மென்று ஏங்கி இருத்தலாம். இரக்கிறவனுக்குப் பிராணன் போகிறதாவது 'இவன் இல்லை என்றானே. இனி நாம் என்ன செய்வோம்?' என்று ஏங்கியிருத்தலாம். ஆதலால், இரப்பிலும் இல்லை என்கிறது பொல்லாததாம்! எ-ம்.

*ஏ) பழைய2.*: கரப்பார் இல்லை என்று சொன்ன அளவிலே இரப்பார்க்கு உயிர்போகும்: இனி இல்லையென்று சொல்வார்க்கு உயிர் யாங் கொளித்து நிற்குமோ போகாமல், எ-று.

இல்லை என்ற அளவிற் கேட்பார்க்கு உயிர் போகச் சொல்வார்க்கு உயிர் போகாது என்கொலோ என்றது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

இக்குறட்பாவிற்கு உரையாசிரியர் அனைவரும் கொண்டு கூட்டுவகையானும், தேவையான சொற்களையும் தொடர்களையும் வருவித்துரைத்தலானும், கூறுவார் இவர் என்ற மாற்றத்தானும், பொருள் காண முயன்றுள்ளனர் எனலாம். இத்துணை தூரம் இக்குறட் சொல்லமைதி அவர்களை மயங்க வைத்திருக்கிறது எனலாம்.

*மணக்குடவர்,* சொல்லாட இரப்பவர் உயிர்போம்; கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல்லோ: எனக்கூட்டிப் பொருள் காண்பவர், ***சொல்லாட*** - (கரப்பவர் இல்லை என்று) சொன்னவுடனே என்ப்பொருள் கூறுவர், பின்னர், 'இரப்பவர் சொல்லாட' என்பதற்கே, இன்று இரப்பவர் நாளை செல்வராய் ஈவாராய் இருந்து கரந்தவர்க்குப் பின்னும் உயிரியங்கக் காணுதலின், அவர் உயிர் எங்கு ஒளித்திருந்திருக்குமோ' அவன் இல்லை என்ற உடன் இறந்திருக்க வேண்டுமே என்று சில் சொல் வருவித்தமை காண்க.

உயிர்போம் எனின் உயிர் அழியும் என்பது பொருளன்று 'பிணத்தை ஒப்பர்' எனக்கண்டனர். இதனால் இரவலர் புரவலராகி இல்லை என்றாராயின் அவர் உயிர் எங்கே நிற்கும் எனக் கருத்து மொழிவர். இரந்தவர் புரப்பவராதற்கு விளக்கமுந்தருவர். 'ஈதலியையாக்கடை சாதல் இனிது' என்ற ஆசிரிய வசனமும் (230) 'கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக் கெடும்' (1078) என்ற ஆசிரிய வசனமும் கரப்பார் உயிரும் போயிருக்க வேண்டுமே! அங்ஙனம் போகாமை ஒளிந்திருக்க வேண்டும். அங்ஙனம் ஒளிந்த முறை எதுவோ என்று வினவுகிறார். 'புக்கிலமைந்தின்று கொல்லோ... உயிர்க்கு' என்பது போல.

***பரிதியார்*** சொல்லாடல் - 'தேகி (கொடு) என்று இரப்பவன் புரப்பவனை நோக்கிக் கூறும்போதே பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து, ஊனோம்பு வாழ்க்கை மருந்தோ' என்று உயிரைவிடுவர். இல்லை என்பார்க்கு எப்படியோ தெரியாது என்பர். குறட்சொல்லாட்சிக் கேற்ற பொருள் முற்றும் அமைய உரையின்மை கண்டு, கொள்ளற் குரியது.

***காளிங்கர்,*** இரப்பவன், உயர்குடி மரபினோர்க்கு, (இரப்பவர் - இரப்பவர்க்கு) என நான்கனுருபுவருவித்து, சொல்லாட உயிர்போம். (சொல்லாட-இரவு என்று பேச) (கைப்பொருள் உடையராயும்) கரப்பவர் உயிர் யாங்கு ஒளிக்குங் கொல்லோ? என இயைத்துப்பொருள் காண்பர். இவர் 'மானம் அழிய வாழாமை முன் இனிதாகலின் இரப்பவர் உயிர் இரவு என்ற உடனே ஒடுகிறது. எங்கு ஒளிந்திருக்குமோ அறியோம் என்பர். எங்கு - எப்புரையுள். உடல் ஒன்பதும் அதற்கு மேல் ஆயிரமுமான ஒட்டைகளையுடையது ஆதலின், எங்கு-எப்புரையுள் என்றார் என்பர்.

***பரிமேலழகர்*** சொல்லாடலாகிய இரப்பவர் தொழிலைக் கரப்பவர்கதுக் கூட்டிக் கரப்பார் (இல்லை என்று சொல்லாட) இரப்பார்க்கு உயிர்போகா நின்றது. கரப்பார்க்கு இன்னும் உயிரிருக் கிறதே, அதனால் அவர் உயிர் அவருடம்பில் எங்காவது ஒளிந்திருக்க வேண்டும் என்றுரைத்தனர்.

பின்னர் ஈவான் இல்லையென்றதனாலோ, இரத்தலால் மானமழிதலாலோ இரப்பவனுயிர் போதல் இயற்கை. கரப்பான் கல்நெஞ்சனாதலின் அவன் உயிர் யாங்கொளிக்குமோ என்பதனாற் போந்தபயன் யாதாகக் கூடும் என்று எண்ணிய உரையாசிரியர் கேட்டாரைச் கொல்லும் சொல் சொல்வாரையும் கொல்லுதலும் இயல்பு. அதனைச் சொல்ல வேண்டாம்; ஆயினும் அதனை நாங்கள் பார்த்ததில்லை; இஃது என்றோ என்று வியந்து அமைதியுங்காட்டினர்.

மேலும் வறுமைவரின் கூசாமல் இரக்கத்தக்காராகிய கேளிர் மாட்டும் இரத்தல் செய்ய உயிர்போம். ஆகவே மறைக்கப்படுவாரய் பிறர்க்குச் சொல்ல இவருயிர் போகாதது என்றே' என்ற ஐயத்தை எழுப்பி, எங்கேயாவது ஒளிந்திருக்க வேண்டும் என்ற ***வள்ளுவர்*** உரையை அமைதியாகக் காட்டுவார். ***வரதராசரும்*** இம்முடிபினரே யாவர். ***கா.சு., குழந்தை*** 'சொல்லாட இரப்பான் உயிர்போம். கரப்பார்க்கு யாங்கு ஒளிக்குமோ' எனக்கூட்டிப் பொருள் முடிவு காண்பர். ***மு.வ.*** 'சொல் ஆட-சொல் தடுமாறி வர' என்பர்.

இவைகளை இணைத்து எண்ணின், கரப்பான் மனம் எல்லாம் இருந்தும் எள்ளளவு ஈதல் கூடாது என்ற கொள்கையால் இறுகிப் பிடித்த கல்மனம். அது இரப்பார் மனத்துக் கலக்கத்தைப் பாராது. ஆதலால், அது இறக்கவேண்டுவதில்லை. ஆனால் 'கரவுள்ளம் உள்ளதூஉம் இன்றிக்கெடும்' என்று இகழப்படுதற்கு நாணி, குடிக்குற்றப்பட்டார் மறைந்து வாழ்தல் போலக் கரப்பார் உயிரும் எங்கு மறைந்து வாழ்ந்ததோ என்றார் எனலும் தகுமாயின் கொள்க.

## ஒ) ஒப்புமைப்பகுதி :

***இரப்பவர் சொல்லாடப் போஒம்உயிர் :***

புறத்துத்தன் இன்மை நலிய அகத்துத்தன்
பின்ஞானம் நீக்கி நிறீஇ ஒருவனை
ஈயாய் எனக்கென் றிரப்பானேல் அந்நிலையே
மாயானோ மாற்றி விடின். - நாலடி.,307.

# 107. இரவச்சம்

| | கரவாது | இரந்தும் | இன்மை | இடமெல்லாம் | தெண்ணீர் | ஆவிற்கு | இரப்பன் | இரவென்னும் | இரவுள்ள | கரப்பவர்க்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 7 | 8 | 3 | 10 | 9 | 3 | 1 | 4 | 5 | 6 |
| பரிதி. | 1 | 9 | 5 | 2 | 3 | 4 | 10 | 8 | 7 | 6 |
| பரிப். | 2 | 8 | 4 | 10 | 9 | 3 | 1 | 5 | 6 | 7 |
| காளி. | 1 | 5 | 8 | 2 | 7 | 10 | 9 | 3 | 4 | 6 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

107-வது அதிகாரம் 'இரவச்சம்' முற்றிற்று.

# 108. கயமை

## அதிகாரப் பொருள் :

*அ) மணக்.*: கயமையாவது இழி குணத்தாராகிய மாந்தரியல்பு கூறுதல். இவர் மேற் கூறப்பட்ட எல்லாரினும் இழிந்தாராதலின், இது பின் கூறப்பட்டது.

*இ) பரிப்.*: கயமை ஆவது இழி குணத்தர் ஆகிய மாந்தரது இயல்பு கூறுதல். இவர் மேற்கூறப்பட்டார் எல்லாரினும் இழிந்தார் ஆதலின் இறுதியில் கூறப்பட்டது.

*உ) பரிமேல்.*: அஃதாவது மேல் அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும் சிறப்பு வகையான் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினால் யாவர்க்கும் எய்தவைத்தமையின் ஆண்டுக்[1] குறிப்பால் கூறியனவும் ஈண்டு ஒழிபியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்கள் யாவும் இலராய கீழோரது தன்மை. அதனால் இஃது[2] எல்லாவற்றிற்கும் பின்[3] வைக்கப்பட்டது.

*ஊ) கவிராசர்.*: அஃதாவது - நற்குணங்களொன்றும் இல்லாத துர் ஜனர்தன்மைகளைச்[4] சொல்லுகிறதாம்.

*ஏ) பழைய2.*: அஃதாவது பொல்லாக் குணம் எல்லாமுடைய கீழ்மக்களது தன்மை கூறியது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

*கா.சு.* நற்குணம் இல்லாத கீழோரது தன்மை.

---

1. ஆண்டு - அரசியலுள்ளும் அங்கவியலுள்ளும்
2. இஃது - இக்கயமை
3. எல்லாவற்றிற்கும் பின் - பொருட்பாலின் எல்லா அதிகாரங்கட்கும் பின்
4. துர்ஜனர் தன்மைகள் - தீயோரியல்புகள்

***இராம.*** கயமை-கீழ்த்தன்மை. சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத எந்த நற்குணமும் இல்லாதமிகவும் கீழ்த்தரமான மனிதர்கள் உண்டு; அவர்கள் இயல்பு இது என்பது இவ்வதிகாரம்.

***வரத.*** தனிமனித வாழ்க்கையில் ஒருவற்கு வேண்டிய அற வகைக்குணங்களும் சமுதாய வாழ்க்கைக்கு வேண்டிய நற்குணங் களும் சிறிதும் இல்லாத கீழமக்களின் தன்மை. இது முயற்சி யின்றியே இரப்பால் வாழலாம் என்னும் கீழோர் தன்மை யாதலால் இரவச்சத்தின் பின் வைக்கப்பெற்றது என்பர்.

***தேவநேயர்*** 'குடி மக்களிற் கடைப் பட்டவரும், ஐம்பெருங் குற்றங்களைத் துணிந்து செய்பவரும், தண்டிக்கும் அரசனுக்கு அன்றி வேறு யாருக்கும் அஞ்சாதவரும் ஆன கீழ்மக்களின் தன்மை. அதனால் இது இறுதியிற் கூறப்பட்டது' என்பர்.

***சாமி-சிதம்பரனார்*** 'நல்ல குணமில்லாத கீழோர் தன்மை'.

இவ்வுரைகளில் இருபால்களானும் விதிக்கப்பெற்ற குணமில்லா மையும், விதிக்கப்பெறாத தீயகுணம் உண்மையும் கயமையாம் என்பது சொற்செறிவுடையதாயினும், ***தேவநேயர்*** விதந்து எழுதுவனவும் ஏற்புடையனவேயாம்; விளக்கமுடையன வுமாம்.

***வள்ளுவர்*** கயமையிற் சுட்டும் நெஞ்சத்து அவலமின்மை, விரும்பிய செய்தல், மறை வெளிப்படுத்தல், பிறர்மேற் குற்றங்காணல், துன்பம் வந்தால் தன்னையே விற்றுக்கொள்ளுதல் முதலிய பொதுமையிற் குறிப்பன சிலவற்றையே ஆசிரியர் குறித்தலின் அவையே கயமை யிலக்கணமாம் ஆதலின், பிறர் காட்டுவன அவை போல்வன எனல் தகும்.

**108.1. மக்களே போல்வர் கயவர்[1] அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்ட தில். (1071)**

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** மக்களையொப்பவர் கயவர், அம்மக்களை யொக்குமாறு போல ஒப்பது ஒன்றனோடு மற்றொன்று உவமை கூறப்படுமவற்றில் யாங்கண்டறிவது இல்லை, எ-று.

உறுப்பொத்துக் குணம் ஒவ்வாமையால், கயவர் மககளலலர் ஆயினார்.

1. மக்கள் ஏனைய ஐயறிவோடு தக்க இன்ன, தகாதன இன்ன என்று பகுத்தறியும் ஆறறிவு உடையவர்கள். அஃது செயற் படாமையின் கயவர் என்றார்.

ஆ) ***பரிதி.:*** பொல்லாதவரும் நல்லவர்போல இருப்பர்; குணத்தினால் கயவர் என்று காணப்படும், எ-று.

இ) ***பரிப்.:*** கயவர் மக்களை ஒப்பவர்; அம்மக்களை ஒக்குமாறு போல ஒப்பது ஒன்றனோடு மற்று ஒன்று உவமை கூறப்படும் அவற்றில் யாம் கண்டு அறிவது இல்லை, எ-று.

உறுப்பு ஒத்துக் குணம் ஒவ்வாமையால் கயவர் மக்கள் அல்லர் ஆயினார்; உறுப்பு ஒத்தலால் உவமிக்கப்பட்டார். இது குணம் இலர் என்றது.

ஈ) ***காளி.:*** கை கால் முதலிய புறத்து உறுப்பு எல்லாம் கண்ட இடத்து விலங்கு ஒத்தல் அன்றி மக்கள் ஒப்பு உடையார் இக்கயவரும்; ஆனால் மற்று அம்மக்கள் பண்பு உடையோர் தமது பண்பு ஒப்புமை சிறிதும் அக்கயவர்பால் யாம் கண்டது இல்லை; இது என்ன வியப்போ, எ-று.

உ) ***பரிமேல்.:*** வடிவான் முழுவதும் மக்களை ஒப்பர் கயவர்; அவர் மக்களை ஒத்தாற்போன்ற ஒப்பு வேறு இரண்டு சாதிக்கண்[2] யாம் கண்டதில்லை, (எ-று).

முழுதுமொத்தல் தேற்றே[3] காரத்தால் பெற்றாம். அவர் என்றது அவர்[4] மாட்டு உளதாய ஒப்புமையை[5]. மக்கட் சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவு ஒத்தலின் குணங்களது உண்மையின்மைகளானல்லது வேற்றுமை அறியப்படாது என்பதாம். இதனான் கயவரது குற்றமிகுதி கூறப்பட்டது.

***காரி.:*** ஒப்பாரி - ஒப்பு. அவர் என்றது, அவர்மாட்டு உளதாகிய ஒப்புரிமையை, ஒப்புமையை அன்ன ஒப்பாரி எனக் கூட்டுக. "அம்பலம் போல் படிச்சந்தமும் இதுவே"[6] என்பதும் அது.

ஊ) ***கவிராசர்:*** துர்ஜனர் வடிவாலே மனுஷரோடு ஒப்பர்; வடிவொத்தாலும் குணம் ஒவ்வாது. இப்படி ஒப்பாரை மிருக சாதியிலேயும் விருட்ச சாதியிலேயும்[7] கண்டதில்லை. எ-று.

எ) ***பழைய2.:*** வடிவினால் மக்களையே யொப்பர் கயவர். அவரன்ன ஒப்பார் இப்படி யாம் கண்டதில்லை.

2. வேறு இரண்டு சாதிக்கண் - மக்கட்சாதி, கயசாதியுமாகிய இரண்டும் ஒழிந்த ஏனைய சாதிக்கண்
3. தேற்றம் - துணிவு
4. அவர் - கயவர்
5. ஒப்புமையை - வடிவால் ஒத்திருத்தலை
6. திருக்கோவை, 32
7. விருட்ச சாதி - மரம் விலங்கு இவற்றில்

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்.*** கயவர் மக்களே போல்வர்; அவர்கள் (அக்கயவர்கள்) அம்மக்களை ஒக்குமாறு போல அவர்கட்கு (கயவர்கட்கு) ஒப்பாவது வேறொன்றை யாம்கண்டது இல்லை என இயைத்தும் சில வருவித்தும் உரைப்பர்.

இதில் இரண்டு இடர்ப்பாடு இவர்க்குத் தோன்றியுள்ளன ஒன்று: 'அவர் அன்ன' என்ற சுட்டின் பொருளை அண்மையிலுள்ள கயவரைச் சுட்டியதாகக் கொள்ளாது, மக்களைச் சுட்டியதாகக் கொண்டு, 'அம்மக்களை யொக்குமாறுபோல' என உரை கண்டது. அதனால் ஒப்பாரி-ஒப்பது எனப் பொருள் கூற நேர்ந்தது. 'அவ்வொப்பது' என்பது ஒன்றன் பால் வினைப் பெயராதலின் அதற்கு இயைய ஒன்றனோடு ஒன்று உவமை கூறப்படுமவற்றின் என்பதை வருவித்துரைக்க வேண்டியதாயிற்று.

இவர் கூறும் உறுப்பொத்துக் குணம் ஒவ்வாமையால் கயவர் மக்கள் அல்லர் என்னும் கருத்துரை மக்களல்லாத வேறு உவமையைக் கருத நேர்ந்ததாயிற்று. கருதிப்பார்த்து உவமை கூறப்படுமவற்றுள் 'யாம் கண்டறிவது ஒன்றுமில்லை' என்ற முடிவு காணப்பட்டது.

இதில் ஒப்பார் என்ற சொல் உயர்திணைப் பலர்பாலாயிருத்தலின் ஒப்பாரி-ஒப்பு எனப்பொருள் காணவேண்டியதாயிற்று. ஒப்பாரி - ஒப்பானது என்ற பொருளில் ***சங்க*** நூல்களிலோ, ***கீழ்க்கணக்கு*** நூல்களிலோ ஆட்சியில் இல்லாத ஒன்று. இதனைப்படைத்து மொழியும் பொருளுமாக நாம் கருதுவதில் தவறு இல்லை.

***பரிமேலழகரும்*** அவர் வழி வருவோரும் ***மணக்குடவரைப்*** பின்பற்றி அவர் மக்களை ஒத்தாற்போன்ற ஒப்பு வேறு இரண்டு சாதிக்குள் கண்டதில்லை எனக் கூறினர். இரண்டு சாதி என்பது மக்களே போல்வர் கயவர் என்பதாற் சுட்டப்பெற்ற மக்கட் சாதியை விட்டு, வேறிரண்டு சாதியைக் குறிப்பது போலத் தோன்றி, அதனை மறுக்க கயமைச் சாதியும், மக்கட் சாதியும் என விளக்கந்தர வேண்டியதாயிற்று. அதற்காக இவரும் ஒப்பாரி-ஒப்பு என்றே கூறினர். அது பொருந்தாமை முற்காட்டப் பெற்றது.

அன்றியும் "இவரியார் என்குவையாயின்" (புறம். 201.1) 'இவனியார் என்குவையாயின்' (புறம். 13.1) எனச் சங்ககால ஆட்சியுண்மையாலும், 'தன்னொழி மெய்ம்முன் யவ்வரின் இகரந்துன்னும் என்று துணிநரும் உளரே' என்ற (நன் - நூற்., 206) விதியுண்மையாலும், கயவர் மக்களே போல்வர்; அவர் அன்ன ஒப்பார் - மக்களை ஒத்த கயவரையும் கண்டதில்லை என்னுங் கருத்தினதாகிய ***காளிங்கர்*** உரையே சிறந்தது.

***காளிங்கர்*** உரைநடையோ 'கைகால் முதலிய உறுப்புடைமையான், கயவர் விலங்கு ஒப்பாரல்லர். மக்கள் ஒப்புடையர்' ஆனால் மக்கட்

பண்புடையோர் தம் பண்பு ஒப்புமை அவர் (கயவர்) பால் இன்மையான் யாம் கண்டதில்லை. அங்ஙனமாகக் கயவர் மக்களே போல்வார் எனல் எப்படி? இஃதென்ன வியப்பு? என்னுங் கருத்தினது. ஆகவே இவருரை குடினோக்கிற்கு இயைந்த கருத்தினதாதல் கூடும்.

பிற்கால உரைகளில், ***கா.சு.*** 'கயவரும் மனிதரைப் போலவே இருக்கிறார்கள். குணங்களால் வேறுபட்ட இருவேறு வகையினர் இப்படி உருவத்தால் ஒத்திருப்பதை வேறு எங்கும் கண்டதில்லை' என்பர்.

***தேவநேயர்,*** 'கயவர் வடிவால் மேன் மக்களை ஒத்திருப்பர்; இத்தகைய ஒப்பை வேறு எந்த ஈரினத்திடையேயும் யாம் கண்டதில்லை. மக்கள் - மக்கட் பண்பமைந்த மேலோர், கயவர் - அஃதில்லாத கீழோர். இவர்களை விலங்கு என்றும் மாக்கள் என்றும் (410,420) ***குறள்*** கூறும் என்பர். இவரும் ஒப்பாரி- ஒப்பு என்பர்.

***சி.இ.*** கயவர் மக்களை யொத்தாற் போன்ற ஒப்பு வேறு எங்கும் யாம் கண்டதில்லை என்பர். ***சபாபதி, குழந்தை, வரத.,*** முதலானோரும் இங்ஙனமே கூறுவர்.

இவ்வுரைவேறுபாடுகளை எண்ணும்போது கயவர்(வடிவால்) மக்களே போல்வர்; பண்பாலும் சிறந்த மக்களைக் கயவர் ஒப்பாதலை யாம் அறிந்தது இல்லை என்ற வேற்றுமையணியமைந்த ***குறணோக்***கிற்கு இயைந்ததாம் எனல் தகும்.

ஒப்பாரி - ஒப்பு என உரை கண்டவர்கள் அனைவரும், ஒப்பு+ஆர்+இ எனப்பிரித்து ஒப்பு ஆர்தலை உடையது எனப்பொருள்கொண்டு, ஒப்பானது என்றனராகலாம். இகரம் - வினைமுதற் பொருளில் வந்த விகுதி. ஆர்தல் - நிறைதல் பொருந்துதல்.

## ஓ) ஒப்புமைப் பகுதி: இல்லை.

## ஓ) மேற்கோள் பகுதி:

***பேரா.:*** வேறுபடவந்த உவமத் தோற்றத்திற்கு மேற்கோள் காட்டி, ஒவ்வாப் பொருளை ஒப்புமை கொண்டது என்னை? மக்களைக்கயவர் ஒவ்வார் என்னும் கருத்தினான் மக்கள் போல்வர் கயவர் என்ற மையின் அதுவும் வேறுபடவந்த உவம்மாயிற்று என்பர்.

- தொல்.பொருள்., 307.

## 108.2. நன்றறி வாரின் கயவர் திருவுடையர்
## நெஞ்சத் தவலம் இலர். (1072)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** நன்மையறிவாரினும் கயவர் திருவுடையர்; இம்மை மறுமைக்கு உறுதியாயின செய்யப் பெறுகின்றிலோம் என்னும் கவற்சி[1] நெஞ்சின்கண் உறுதலிலராதலான், எ-று.

இது தாம் அறியார் என்றது.

***ஆ) பரிதி.:*** நன்றறிவாரில் கயவர் திருவுடையார்; அது எப்படி என்றால் மனத்திலே ஆலசியம்[2] இல்லை, எ-று.

***இ) பரிப்.:*** நன்மை அறிவாரினும் கயவர் திரு உடையர்; இம்மை மறுமைக்கு உறுதி ஆவன செய்யப் பெறுகின்றிலோம் என்னும் கவற்சி நெஞ்சின்கண் உறுதல் இலர் ஆகலான், எ-று.

இஃது அறம் அறியார் என்றது.

***ஈ) காளி.:*** நன்னெறி அறியும் சான்றோரினும் கயவர் சால நலம் பெரிது உடையர்; தமது உள்ளத்து யாதும் ஓர் இடர் இலார்; எங்ஙனம் எனில், நன்னெறி ஆகிய கல்வியும், அறிவும், ஆசாரமும், குலமும், தருமமும், தவமும், பிறவும் குறைபடாமல் கொண்டு மேற்படவேண்டும் என்றும், குறைபடும் ஆயின் குடிமைக்கு அது வடு என்றும், இங்ஙனம் நெஞ்சம் அஞ்சி அவலிக்கும் அவலம் எஞ்ஞான்றும் இலர், எ-று.

***உ) பரிமேல்.:*** தமக்கு உறுதியாவன அறிவாரின் அவை அறியாத கீழ் மக்கள் நன்மையுடையர். அவர்[3] போல அவை காரணமாகத் தம் நெஞ்சத்தின்கண் கவலை இலராகலான், (எ-று).

நன்று என்பது சாதி யொருமை[4]. உறுதிகளாவன: இம்மை மறுமை வீடுகட்கு உரியவாய புகழறஞானங்கள். இவற்றை அறிவார் இவை செய்யாநின்றே மிகச் செய்யப்பெறுகின்றிலேம் என்றும். செய்கின்ற இவை தமக்கு இடையூறு வருங்கொல் என்றும், இவற்றின் மறுதலையாய பழிபாவம் அறியாமை என்பனவற்றுள் யாது விளையுமோ என்றும், இவ்வாற்றான் கவலை எய்துவார்; கயவர் அப்புகழ் முதலிய ஒழித்துப் பழிமுதலிய செய்யாநின்றும் யாதும் கவலை யுடையரல்லராகலான்

---

1. கவற்சி - கவலை
2. ஆலசியம் - தாமதம்
3. அவர் - நன்றறிவார்
4. நன்மையுடைய செயல்கள் பலவற்றைக் குறிப்பதால் நன்று என்பது சாதி ஒருமை என்றார்.

'திருவுடையர்' எனக் குறிப்பால் இகழ்ந்தவாறு. இதனான் பழி முதலியவற்றிற்கு அஞ்சார் என்பது கூறப்பட்டது.

*காரி.:* திரு - நன்மை. திருவுடையர் எனக்குறிப்பால் இகழ்ந்த வாறாயிற்று.

***ஊ) கவிராசர்:*** தமக்கு உறுதியான காரியங்களை அறிகிறவர்களைப் பார்க்கிலும் அவை அறியாத துர்ஜனர் நல்லவர்கள். அது ஏனென்றால், இம்மை மறுமை மோட்சங்களுக்கு உரிய புகழ் தருமம் ஞானம் இவற்றை அறிந்து செய்கிறவர்கள், வெகு தானதருமங்களைப் பெற்றோமில்லை என்றும், செய்கிற இவற்றிற்கு என்ன விகாதம்[5] வருமோ வென்றும், இவற்றிலே தப்பிதம் வந்தால் பகைபழி பாவங்கள் எது வருமோ வென்றும் மனத்திலே விசாரப்படுவர். துர்ஜனர், புகழ் தருமம் ஞானங்களைச் செய்யாமல், பகைபழிபாவங்களைச் செய்யாநின்றும், ஒரு விசாரமும் இல்லாமல் இருப்பர். எ-று.

***எ) பழைய 2:*** மக்களைப் போலக் கயவருமிருக்கின்றார்; இது என்ன ஆச்சரியம் என்றது.

நன்றறிவார் கவலையுடையவர்; கயவர் நெஞ்சிற் கவலை யில்லாமையாற் செல்வமுடையவராம்.

**ஒ) ஒப்புமைப் பகுதி:** இல்லை.

**ஓ) மேற்கோள் பகுதி:**

*நச்சி.:* புளிமா என்னும் நேரீற்றியற்சீர் நிரையசைச் சீரோடு தளைப் பட்டு வந்ததற்கு மேற்கோள். - தொல்.பொருள்.செய்.74

*பெருந்த:* வெண்பாவை ஓசையூட்டுதற்கு மேற்கோள். வீர.. 114.

*யா.வி.:* இலர் என நிரையசை ஓரசைச்சீர் இக்குறளில் வந்துள்ளது என்பர். - சூ.: 14.

இது வருக்கமோனைக்கும் மெல்லின எதுகைக்கும் ஒத்து வந்த தாயினும் எதுகை என்று வழங்கப்படும் என்பர். - சூ., 53

**ஐ) தொகுப்பும் குறிப்பும் :**

இக்குறளில் ***நன்று, திரு, அவலம்*** என்ற சொற்கள் உரையாசிரியர்களால் சிறிது பொருள் மாற்றமடைகின்றன.

1. '*நன்று*-நன்மை', ***மணக்., கா.சு. இராம.***: 'நன்னெறி' ***காளி.:*** 'உறுதியாவன' ***பரிமேல்., பழைய,*** தனக்கும் பிறர்க்கும் நன்மையாவன

5. விகாதம் - இடையீடு

***தேவநேயர்***; தமக்கு உறுதியைத் தரும் இம்மை மறுமை மோட்சங்களுக்கு உரிய புகழ் அறம் ஞானங்கள்' ***மு.ரா.அரு***; நன்று எனவே இனம் பற்றி நன்மை தீமைகளை என்பர் ***வரத.***

2. ***திரு*** - 'நலம் பெரிதுடைமை' ***காளி.***: 'நன்மை' ***பரிமேல்.*** 'நல்லோர்' ***கவிராசர்,*** 'முகமலர்ச்சி' ***கா.சு.;*** 'பேறுபெற்றவர்' - ***தேவநேயர்.***

3. ***அவலம்*** - 'கவற்சி' ***மணக்.***: 'ஆலசியம்' ***பரிதி:*** நெஞ்சம் அஞ்சி அவலிக்கும் அவலம்' ***காளி;*** 'கவலை' ***பரிமேல்; கா.சு.***, ஏனோரும்.

இங்ஙனம் சொற்பொருள் மாறினும் கருத்துமாறற்ம் இல்லை.

## 108.3. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
## மேவன செய்தொழுக லான். (1073)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: கயவர் தேவரை யொப்பர்; அத்தேவரும் இக்கயவரைப் போலத் தாம் வேண்டியன செய்தொழுகுவாராதலான், எ-று.

இது கயவர் வேண்டியன செய்வார் என்றது.

***ஆ) பரிதி.***: தேவர்க்கு நிகர் கயவர் அது எப்படி எனில், தே தெய்வமும்[1] பத்தி பண்ணுவார்க்கு நன்மைதரும்; அல்லாதார்க்குத் தீமை தரும். அதுபோல, கயவரும் தமக்கு இதம்செய்வார்களுக்கு இதமும் அகிதஞ்[2] செய்வார்களுக்கு அகிதமும் செய்வர். எ-று.

***இ) பரிப்.***: கயவர் தேவரை ஒப்பவர்: அத்தேவரும் இக்கயவரைப் போலத் தாம் வேண்டியன செய்து ஒழுகுவர் ஆதலான், எ-று.

இது கயவர் வேண்டிற்றுச் செய்வார் என்றது.

***ஈ) காளி.***: குடிமை என்னும் பண்பு உடைய மக்களைக் கயவர் ஒவ்வார் ஆதலால், மற்று யாரை ஒப்பாரோ? எனில், ஈசன் முதல் ஆம் தேவரை ஒப்பர் கயவர்; என்னை காரணம் எண்ணின் அவரும் பிறரால் இடித்துரை பெற்று அஞ்சி நடத்தல் இன்றித் தாம் வேண்டுவன செய்யும் தகுதியார் ஆதலால் அவர் போல் மற்று இக்கயவரும் இருபெருங்குரவரும் சான்றோரும் பிறரும் தம்மின் பெரியோர் என்று அஞ்சிக்கை இன்றி அவர் இடித்துரைக்கும் இடத்து இடித்துரை கைக்கொண்டு ஒழுகும் இயல்பினர் அன்றித் தாம் வேண்டியன செய்து ஒழுகலான், எ-று.

1. தே தெய்வம் - தெய்வங்களுக்குத் தெய்வம்
2. அகிதம் - தீமை

***உ) பரிமேல்.:*** தேவரும் கயவரும் ஒரு தன்மையர், அஃதுயாதனான் எனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பாரின்றிக் கயவரும் தாம் விரும்புவன வற்றைச் செய்தொழுகலான், (எ-று).

உயர்ச்சியும் இழிவுமாகிய[3] தம் காரணவேறுபாடு[4] குறிப்பால் தோன்ற நின்றமையின், இது புகழ்வார் போன்று பழித்தவாறாயிற்று[5]. இதனால் கயவர் விலக்கற் பாடின்றி வேண்டிய செய்வர் என்பது கூறப்பட்டது.

***காரி.:*** மேவன-விரும்புவன. புகழ்வார் போன்று பழித்தலும் காண்க.

***ஊ) கவிராசர்:*** தேவர்களும் கயவர்களும் ஒரு தன்மையர்; அது எப்படி யென்றால் தேவர்கள் எப்படிச் செய்தாலும் தண்டிப்பாரில்லை; துர்ஜனரும் தங்களைத் தண்டிப்பாரில்லையென்று தாங்கள் நினைத்தபடியே செய்வர், எ-று.

***எ) பழைய 2:*** 'அவரன்ன' , 'மேவின' பாடம்.

தேவரும் கயவரும் ஒரு தன்மையர்; யாதினாலென்னில், தேவரும் தடையின்றி விரும்பினவற்றைச் செய்வர்; கயவருந் தடையின்றி விரும்பினவற்றைச் செய்தொழுகலான்.

அவர் நன்மை செய்வர்; இவர் தீமை செய்வர் என்று குறிப்பு மொழியாற் கூறியது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மேவன***-நன்மைசெய்வார்க்கு நன்மையும், தீமை செய்வார்க்குத் தீமையும் என்பர் ***பரிதி.*** இவை தேவர் குணமாகாமையோடு கயவர் குணமாதலின் உவமைக்கு ஏலாது. மேவன-தாம் விரும்புவன எனப்பொருள் கண்டு. விரும்பியவற்றை எனலே சிறந்த உரை. ***குழந்தை*** செய்வன தவிர்வன பாராமல் விரும்பியதைச் செய்வார் என்பர். ***தேவநேயர்*** வினையியல்பு பற்றாது அதன் முடிப்பு பற்றியதாம் என்ற விளக்கம் சிறந்தது.

தேவரியல்பு கூறுவார் போன்று கயவரியல்பு கூறியவாறாம்.

## ஒ) ஒப்புமைப் பகுதி:

### ***தேவர் மேவன செய்தொழுகல்:***

குரும்பி தேரிய முதையலூர் படப்பையும்

---

3. 'உயர்ச்சியும் தாழ்ச்சியுமாகிய' என்றும் பாடமுண்டு.
4. உயர்வுக்குக் காரணம் விரும்பியது செய்யாமை. இழிவுக்குக்' காரணம் விலக்கப்படுவன வற்றையல்லாமல் விரும்புவனவற்றைச் செய்தல்
5. இதனைப் புகழ்வது போல் பழித்தல் என்பர்.

குன்றின்ன ண் குகள் செல்ல
இரும்பு லாரிய புனம்வயல் கொல்லையான்
ஈன்றகன் றுகள் செல்ல
அரும்பு மூசிய குறுஞ்சுனை கற்களை
யாவிவண் டுகள் செல்ல
வரம்பி லார் இமை யார்இயன் முறை தெரி
வயினெனக் கலப்போர்சார். - தணிகை. திருநாட்டுப்., 16

## 108.4. அகப்பட்டி யாவரைக் காணின் அவரின்
## மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். (1074)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** மனையகத்திருந்த பொற்பிலராகிய பெண்டிரைக் காணின், அவரிலும் மிகப்பொற்பிலராயவரைப் பெற்றேம் என்று இறுமாப்பர் கயவர், எ-று.

இது நிறையிலர் என்றது.

***ஆ) பரிதி.:*** துர்ச்சனமான பேரைக் கண்டால் அவர்களுடனே கூடிக்கொண்டு நல்லோரைக் கெடுப்பார்கள், எ-று.

***இ) பரிப்.:*** மனையகத்து இருந்து பறட்டையாம் பெண்டிரைக் காணில் அவரினும் மிகப் பறட்டை ஆயினதனைப் பெற்றேம் என்று இறுமாப்பர் கயவர். எ-று.

இது நிறை இலர் என்றது.

***ஈ) காளி.:*** மனையினின்றும் புறப்பட்டால் பட்டி[1]புக்குப் பயிர் அழிக்கும் பட்டி மாட்டினை ஒத்தார் சிலரைத் தான்காணின், இதற்கு 'இவரினும் பெரியேன் ஆக வேண்டும் யான்' என்று மற்று அவரது பட்டிமையிலும் மிகப்பட்டு இறுமாக்கும் கீழ் ஆனது: எனவே தானும் நெறிகெட ஒழுகும்; பிற நெறிகேடரைக் காணினும் நமக்குத் துணையும் உண்டு என்று பெரிதும் இறுமாக்கும் கீழ் என்பது பொருள்.

அகப்பட்டி என்பது மனையுள் வாழும் பட்டிமாடு என்றது.

***உ) பரிமேல்.:*** கீழாயினான், தன்னின் சுருங்கிய பட்டியாயொழுகுவரைக் கண்டானாயின். அவ்வொழுக்கத்தின்கண் அவரின் தான் மேம்பட்டு அதனால் தன் மிகுதிகாட்டி இறுமாக்கும்,(எ-று).

---

1. பட்டி - வேலி கட்டப்பட்ட வயல்

அகப்பட்டி-அகமாகியபட்டி[2], பட்டிபோன்று வேண்டியவாறே ஒழுகலின், 'பட்டி' என்றார்."நோதக்க செய்யும் சிறுபட்டி[3]" என்றார் பிறரும். இதனால் அவர் மேம்பட்டுமாறு கூறப்பட்டது.

***காரி.:*** செம்மாத்தல் - உறுமாத்தல்.

***ஊ) கவிராசர்:*** கீழானவன், தன்னிலும் கொஞ்சமானவன் துன்மார்க்கனாய் நடந்தால், அவனைக்கண்டு அவன்முன்னே தன் நடக்கைகளைக் காட்டி, தான் அவனினும் பெரியவன் என்று இறுமாந்து கொண்டிருப்பன். எ-று.

***ஏ) பழைய2:*** கீழ்மகனாயினான் தன்னிற் சுருங்கி அகப்பட்டியாய் ஒழுகுவாரைக் கண்டானாயின், அவ்வொழுக்கத்தின்கண் அவரின் தான் மேம்பட்டு அதனால் தன் மிகுதி காட்டி இறுமாக்கும்.

அகமாகிய பட்டி: அகப்பட்டி. பட்டியாவது: கள்ளத்தின் வேண்டியவாறு ஒழுகல். பட்டிமாடு என்றது போலக் காண்க.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***'அகப்பட்டியாவரைக்காணின்'*** - 'மனையகத்திருந்தும் பொற் பில்லாப் பெண்டிரைக் காணின்' ***மணக்.:*** 'துர்ச்சனமான பேர்' ***பரிதி:*** 'மனையினின்றும் புறப்பட்டால் பட்டிபுக்குப் பயிர் அழிக்கும் பட்டிமாட்டினை ஒத்தார்' **காளி.:** (கீழாயினான்) தன்னின் சுருங்கிய பட்டியாய் ஒழுகுவாரைக் காண்பானாயின்' ***பரிமேல்.: தேவநேயர்:*** 'தன்னைப் போன்றவர்களைக் கண்டால்' ***வரத.*** அகந்தையான பட்டித்தனம் உள்ளவர்களைக் கண்டால்' ***இராம:*** என்றெல்லாம் பலவகையான் உரை காண்பர்.

***'அகப்பட்டி'*** என்ற சொல் ***வள்ளுவராட்சி*** ஒன்றில்மட்டும் உள்ளது. ***சங்க*** இலக்கியங்களில் இல்லை. பட்டி என்பது மட்டும் பல்வேறு பொருளில் ஆட்சியில் உள்ளது. 'காவலில்லாதவன்' என்ற பொருளில் 'நோதக்க செய்யும் சிறுபட்டி' எனக் ***கலித்தொகை*** 51ம் பாடலில் ஆட்சியுள்ளது. பட்டிமாடு ***(தாயுமானவர்)*** பட்டிமகன் (***விறலி)*** எனப் பிற்கால இலக்கியங்களில் உவம ஆகுபெயராயும், வேறுவகையானும் ஆட்சியுள்ளது. ஆதலால் இஃதோர் அருவழக்கு எனலாம்.

செம்மாக்கும்-இறுமாக்கும் என்ற பொருளே மிகப்பொருந்துவது.

---

2. அகப்பட்டி - பட்டி (அடங்காப் பிடாரி) போன்று விரும்பியவாறு ஒழுகுபவர்
3. கலி. குறிஞ்சி. 15.

## 108.5 அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
## அவாவுண்டேல் உண்டாம் சிறிது. (1075)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** கயவர் ஆசாரமுடையராதற்குக் காரணம் அச்சமே; அஃதொழிய, ஒருபொருள்மேல் ஆசையுடையராயின், அது காரணமாகவும் சிறிது ஒழுக்கம் உண்டாம், எ-று.

இஃது இயல்பான் ஒழுக்கம் இலர் என்றது.

***ஆ) பரிதி.:*** கயவர்க்குப் பயம் உண்டாகில் வணங்குவர்: பிரயோசனம் உண்டாகிலும் வணங்குவர்.. எ-று.

***இ) பரிப்.:*** கயவர் ஆசாரம் உடையர் ஆதற்குக் காரணம் அச்சமே: அஃது ஒழிய ஒரு பொருள்மேல் ஆசை உடையர் ஆயின் அது காரணம் ஆகவும் சிறிது ஒழுக்கம் உண்டாம், எ-று.

இஃது இயல்பான் ஒழுக்கம் இலர் என்றது.

***ஈ) காளி.:*** கீழ்கள் ஆகியவரது ஆசாரம் அவர்க்கு இயல்பின் உளதாவது அன்று: மற்று என்னை எனின், பிறர் தம்மைச் செறுத்தும் சிறைசெய்தும் நெருங்கின் என்னை என்று இங்ஙனம் அஞ்சும் அச்சமே அதற்குக் காரணம்; அஃது ஒழிந்த இடத்தும் உண்டு எனின் அவர் சில செய்வர் எமக்கு என்னும் அவா உளதாயின் அது பெறும்வழி உளவாயின் சிறிதும் அவ்வாசாரம் உண்டாகவும் கூடும்; எனவே கயவர்க்கு ஆசாரம் இயல்பு அல்ல என்றும், உண்டு எனின் அது கள்ளம் என்றும் பொருள் ஆயிற்று, எ-று.

***உ) பரிமேல்.:*** கயவரதாய ஆசாரம் கண்டது உண்டாயின் அதற்குக் காரணம் அரசனான் ஏதம் வரும் என்று அஞ்சும் அச்சமே. அஃதொழிந்தால், தம்மால் அவாவப்படும் பொருள் அதனால்[1] உண்டாமாயின் சிறிது உண்டாம்[2], (எ-று).

ஆசாரத்தின் காரணத்தை 'ஆசாரம்' என்றும்[3] அவாவப்படுவதனை 'அவா'[4] என்னும் கூறினார். எச்சத்தின்கண் என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது[5]. பெரும்பான்மை அச்சம், சிறுபான்மை

1. அதனால் - ஆசாரத்தால்
2. சிறிதுண்டாம் - கீழ்மக்களிடத்து சிறிதுளதாயிருக்கும்
3. கீழ்மக்களது ஆசாரத்துக்குக் காரணமாய 'அச்சத்தை' ஆசாரம் என ஒற்றுமை செய்து கூறியதால் இது காரணம் காரியமாய உபசார வழக்கு.
4. அவப்படுவதனை அவா என்றது காரியவாகுபெயராம்.
5. எச்சம் என்னும் இறுதியின் 'கண்' என்னும் ஏழாம் வேற்றுமையுருபு தொக்கு நின்றது. எச்சம்-ஒழிந்தால் என்பது பொருள்.

பொருட்பேறு இவ்விரண்டானும் அன்றி இயல்பாக உண்டாகாது என்பதாம். வேண்டிய செய்தலே இயல்பு, ஆசாரஞ் செய்தல் இயல்பன்று என்பது இதனால் கூறப்பட்டது.

***காரி.:*** ஆசாரம் - ஒழுக்கம். அது வடசொல்.

***ஊ) கவிராசர்:*** துர்ஜனருடைய ஆசாரம் கண்டால் பயம் வரும். அது ஏனென்றால், அவர்கள் மனதிலே கபடம் எண்ணிக் கொண்டு, ஆசாரம் பண்ணுவார்கள். அது தெளிய வறிந்து, கபடமில்லாவிட்டால், சில நாள் ஆசாரமாய் நடந்து பிறகு கெட்டுப்போவார்கள், எ-று.

***எ) பழைய 2:*** கயவர்க்கு ஆசாரங் கண்டதில்லை; கண்டது உண்டாயின் அதற்குக் காரணம் அரசன் தண்டிப்பான் என்னும் அச்சமே. அது ஒழிந்தால், ஆசாரத்தால் அவாவப்படும் பொருள் உண்டானாற் சிறிது ஆசாரம் உண்டாம்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

அச்சமும் - ஆதாயமுமே கயவர் ஒழுக்கமுடையராதற்குக் காரணம் என்பதில் யாருக்கும் மாறுபாடின்மையின் இக்குறள் கருத்துமாற்றமில்லது எனலாம். ஆயினும் ***'எச்சம்'*** என்பதற்குப் பொருள்காணும் வகையில் சிறிது மாறுபடுகின்றனர்.

***மணக்.,*** எச்சம்-அஃதொழிய வினைமுதற் பொருளில் வந்த அம் விகுதிபெற்ற எச்சம் என்ற பெயர்ச்சொல்லை எஞ்ச என செயவென் வினைஎச்ச வாய்பாடாகக் கொண்டனர். இங்ஙனம் கொள்ளும் மரபுண்டேல் கொள்ளலாம்.

***பரிதி.,*** எச்சம் என்பதற்குப் பொருள் கூறாதுவிட்டார்.

***காளி.,*** (அஃது) ஒழிந்த இடத்தும் அதாவது எஞ்சிய இடத்தும் என இடப்பொருளதாக்குவர். ***பரிமேலழகரும்*** இக்கருத்தினர் என்பதை 'எச்சத்தின்கண்' என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது என்ற அவர் குறிப்பு அறிவிக்கும். ***தேவநேயர்*** எச்சம்-அச்சமில்லாத வழி என்பர்.

ஐயுங்கண்ணும் அல்லாப் பொருள்வயின், மெய்யுருபுதொகா இறுதி[illegible]ான' ஆதலின் கண்உருபு இறுதி தொக்கது. ***கவிராசர்*** 'கயவரிடம் ஒழுக்கங்கண்டால் பயம்வரும்' என கீழ்களது ஆசாரம் அச்சமே எனக் கூட்டியும், அவாவுண்டேல் சிறிது (ஆசாரம்) உண்டாய் (பின்கெடுவர்) என்பர்.

இவர் உரை கயவர்கள் கபடமுடையார் ஆதலின் அவர்களிடம் ஒழுக்கமுடைமை காணப்படின் ஏனோர் அனைவருக்கும் அச்சம் வரும்.

அவர்களிடம் ஆசாரம் உண்மையாகவே உண்டாகுமானால் நீடிக்காது. சில நாளிலிருந்து சிதையும் என முன்னோர் கருத்தில் புதியது ஒன்றைத் தருவர்.

நஞ்சிற் கொல்லாமையும் தீயிற் சுடாமையும் உண்டாவது போலாம் அவர்களிடம் ஆசாரம் உண்டாவது. ஆதன் விளைவு நாம் அனைவரும் அஞ்சத்தான் வேண்டும். ஒருகால் உண்மையாயின் ஆசாரம் நீடித்திருக்காது என்பது. அவர் தரும் புதிய கருத்து.

***வரத., பரிமேல், குழந்தை, பழைய.,*** அனைவரும் கருத்தான் ஒத்தவர்கள்.

***வ.சு.ப.மா.*** அச்சமே கயவர்களின் இயல்பு. புகழாசையிருந்தால் சிறிது இருக்கலாம் என்பர். எச்சம்-புகழ் எனப்பொருள் காண்பர்.

இவ்வுரைகளில் கயவரியல்வு அச்சமே என்பதும், கயவர் ஒழுக்கமாயிருத்தல் அச்சத்தாலேயே என்பதும், கயவர் ஒழுக்கமாயிருப்பராயின் அதனைக்கண்டு நாம் யாதானுமோர் பயன்கருதிக் கபடமாக ஒழுக்கத்துடமிருக்கிறார்கள் என்று ஏனோர் அஞ்சுக என்பதும் ஆகிய மூன்று கருத்துக்களைக் காணலாம்.

'அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழிலாதலின் அது கயமையாகாது. ஆனால் அச்சத்தையே தம் ஒழுக்கமாக எப்போதும் கைக்கொண்டிருப்பாராயின் அது கயமையாம் என்பது. பசிக்குணவு தாகத்திற்குத் தண்ணீர் போல அச்சத்தால் ஆசாரத்தைக் கொள்வதும் கயமையாம்.

கயவர் ஆசாரம் பிறரை ஏய்ப்பதற்காக இருக்குமானால் பிறர் அஞ்சக் காரணமாய் என்பது நேரே கயமையிலக்கணமாகாது. பிறர்மாட்டுத் தோன்றுகின்ற அச்சங் காரணமாகக் கயமை அளந்தறியப்படுதலின்.

இங்ஙனம் பல நோக்கில் இக்*குறள்* அமைந்திருப்பதாக உரைக் கண்ணாடியால் கண்டாலும், கயவர் திருந்தி ஒழுக்கமுடையார் போல் நடித்தல் அச்சத்தாலும், தன்னலத்தாலுமே என்பதும், இவையிரண்டு காரணங்களும் நிறைய ஆசாரமும் நீங்குமாதலின் இவ்வுரையே கயமையின் முழு இயல்புமாதலைக் கண்டு இவ்வுரை சிறந்தது எனலாம்.

எச்சம் அவாவுண்டேல் சிறிது (ஆசாரம்) உண்டாம் என்பதற்குப் புகழில் விருப்பமிருந்தால் ஆசாரம் சிறிதுண்டாம். புகழ் எய்திய பிறகு ஆசாரம் போய்விடும் ஆயினும் உண்டான புகழ் மறையும் வரை ஒழுக்கம் சிறிது நிற்கும் என்ற ***வ.சு.ப.மா.*** உரை கொள்ளத்தக்கதொன்று. ஆனால் எச்சம்-புகழ் என்பதே நேரிய இலக்கண வேலி வேண்டாத இயற்கைப் பொருள்.

## ஓ) ஒப்புமைப்பகுதி:

***கீழ்தள தாசாரம் :***

பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம் - கொன்றை., 64.

***முற்றும்:***

கற்பன கல்லாக் கயவர் கருமங்கள்
நிற்பன அல்ல நினைந்தன செய்வரால்
அச்சமே கீழ்கள ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாஞ் சிறிது. - இன்னிசை. இருநூறு. அதி. 18-9.

## ஓ) மேற்கோள்பகுதி:

***நச்சி.:*** வினை எஞ்சு கிளவியும் வேறுபல் குறிய என்பதனால் பெறப்படும் எனக்கூறி ஏலும் என்பது இதன் குறிப்பு என்பர்.
- தொல்.சொல்., 230.

***மயிலை.:*** வான்பாக்கு இன வினைஎச்சம்: இன்ன என்றதனால் 'அவாவுண்டேல் உண்டாம்' என்றற்றொடக்கத்தனவும் இவ்வாய்பாடுகளிலே அடக்கிக்கொள்க என்பர். - நன்., 342.

## 108.6. அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
## மறைபிறர்க் குய்த்துரைக்க லான். (1076)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** கயவர் அறையும் பறைபோல்வர்; தாம் கேட்டமறைகளைப் பிறர்க்குக் கொண்டு சென்று அறிவித்தலான், எ-று.

இஃது அடக்கமிலர் என்றது.

***ஆ) பரிதி.:*** இரகசியமான விஷயத்தை எங்கும் உரைத்தால் அறைபறைக்கு ஒப்பர் கயவர், எ-று.

***இ) பரிப்.:*** கயவர் அறையும் பறை போல்வர்: தம் கேட்ட மறைகளைப் பிறர்க்குக் கொண்டு சென்று அறிவித்தலான், எ-று.

இஃது அடக்கம் இலர் என்றது.

***ஈ) காளி.:*** ஒருவன் தான் வாய்க்கொண்டு ஒக்கடித்து உணர்ந்த தாளப் பகுதியைப் பிறர்க்கு அவ்வாறு உரைவழி புலப்படாமைக் குறிக்கொண்டு தன் கைகொண்டு அதன்கண் உறவைத்த இடத்து, மற்று அஃது அதனை யாவர்க்கும் புலப்படச் சாற்றும் பறைக்கருவியை ஒப்பர். என் எனில், ஒருவர் தம்மை நம்பி மறையை ஓம்பு என்று உரைப்ப; மற்று அந்த

மறையினை அடக்கல் ஆற்றாது அப்பொழுதே பிறர்க்குச் சென்று அச் செவிக்குச் செல்லுமாறு அதனை விளக்கச் செலவு படுத்து உரைக்கும் தீமை உடையார், எ-று.

***உ) பரிமேல்.***: தாம்கேட்ட மறைகளை இடந்தோறும் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான், கயவர் அறையப்படும் பறையினை ஒப்பர்,(எ-று).

மறை - வெளிப்படின் குற்றம்விளையும் என்று பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல். பிறர் - அம்மறைத்தற்குரியார். 'உய்த்து' என்றார் அவர்க்கு அது பெரும்பாரமாதல் நோக்கி. பறை[1] ஒருவன் கையால் தன்னை அறிவித்த தொன்றனை இடந்தோறுங் கொண்டுசென்று யாவரையும் அறிவிக்குமாகலான், இது தொழிலுவமம். இதனால் அவரது செறிவின்மை[2] கூறப்பட்டது.

***காரி:*** மறை - வெளிப்படின் குற்றம் விளையும் என்று, பிறரை மறைத்து ஒருவன் சொல்லிய சொல்.

***ஊ) கவிராசர்:*** கயவர் தாங்கள் கேட்ட காரியத்தை எங்கெங்கும் எல்லாருக்கும் சொல்லுவர்; அதனாலே அடிக்கப்பட்ட கிடுகோடு[3] ஒப்பர், எ-று.

***எ) பழைய.***: தாங்கேட்ட இரகசியங்களை இடந்தோறும் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்கெல்லாஞ் சொல்லுதலால், கயவர் நகரியில்[4] தட்டப் பறை சாற்றுதற்கு ஒப்பார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் : இல்லை.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***அறைபறை:***

அறைபறை யெழுந்தபின். - சிலம்பு., கால்கோள் வரி.1.

அறைபறை யனைய நீரார் அருமறைக்காவ ரோதான். - கம்ப., 1102

***கயவர் மறை பிறர்க்குய்த்துரைப்பர்:***

புயலமை கூந்தல் பொலந்தொடீஇ சான்றோர்

---

1. பறை தன்னையுடையவன் சொல்லுகின்ற சொல்லை பலரையும் அறியச்செய்யுமாறு போல கீழ்மக்கள் தாம் கேட்ட மறைபொருளைப் பலவிடங்களில் சென்று பலருக்கும் அறிவிப்பர். ஆதலால் பறை கீழ்மக்கள் சொல்லுக்கு உவமானமாயிற்று. ஆதலால் இது தொழிலுவமை.
2. செறிவின்மை - அடக்கமின்மை
3. கிடுகு - பறைக்கு மற்றொரு பெயர். இன்று 'கிடுகொட்டி' என வழங்கும்
4. நகரி என்பது 'நகரா' என்று வழங்கும் வாயகன்ற ஒருமுகப்பறை

கயவர்க்கு உரையார் மறை. - பழ.நா., 181

பெருமலை நாட பிற ரறிய லாகா

அருமறையை ஆன்றோரே காப்பர் - அருமறையை
நெஞ்சில் சிறியார்க்கு உரைததல்பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று. - பழ.நா., 182

***அறைபறை அன்னர் கயவர்:***

அறைபறை யனைய நீரார் அருமறைக்காவரோ தான். - கம்ப., 1102

## ஒ) மேற்கோள்பகுதி:

பெருந்.: பழித்தலுவமைக்கு மேற்கோள் - வீர., 158

## 108.7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
## கூன்கைய ரல்லா தவர்க்கு. (1077)

**உரைப்பகுதி:**

***அ) மணக்.:*** தம்கதுப்பினை ஒடிக்கும் வளைந்த கையினை உடையரல்லாதார்க்கு, ஈரக்கையையும் தெளியார் கயவர், எ-று.

***ஆ) பரிதி.:*** ஈகிற கை விதிர்த்துக்[1] கொள்ளார் கயவர்; கொறடாலே[2] அடிப்பவர்க்குக் கொடுப்பர். எ-று.

***இ) பரிப்.:*** கதுப்பினை[3] ஒடிக்கும் வலிய கையினை உடையர் அல்லாதார்க்கு ஈர்க்கையும் நெறியார்கள் கயவர், எ-று.

ஈரக் கை - உண்டு கழுவின கை. கூன் கை என்று பாடம் ஓதினும் அமையும். இஃது இரப்பார்க்குக் கொடார் என்றது.

***ஈ) காளி.:*** பிறர் தம்பால் இரந்து கொள்ளும் இடத்து ஈரக்கை விதித்தலும் இலர் கயவர் ஆனவர்; கொடிறுபோல இடுக்கிப் பிடித்து உடம்பை உடைக்கும் திறமையால் கூரிய கையினை உடையோர் அல்லாத குணம் உடையவர்க்கு. எ-று.

***உ) பரிமேல்.:*** கயவர் தம் கதுப்பினை நெரிப்பதாக வளைந்த கையினை உடையரல்லாதார்க்கு, தாம் உண்டு பூசிய கையைத்[4] தெறித்தல் வேண்டும் என்று இரந்தாலும் தெறியார், (எ-று).

1. விதிர்த்து - உதவி
2. கொறடாலே - பல்லைப் பிடுங்குங் கருவி
3. கதுப்பினை - கன்னத்தை
4. பூசிய கையை - கழுவிய கையை

வளைந்த கை - முறுக்கிய கை. மெலிவார்க்கு[5] யாதுங்கொடார். நலிவார்க்கு[6] எல்லாம் கொடுப்பார் என்பதாம்.

**ஊ) *கவிராசர்:*** துர்ஜனர், தங்கள் தாடையில் அடிக்க வல்ல கைகளை உடையவர்க்கல்லாமல் மற்றவர்களுக்கு, சாப்பிட்டுக் கழுவின கையைத் தெறிக்கச் சொன்னாலும் தெறியார்.

**எ) *பழைய2.*:** கயவர், தம் கன்னத்தினைக் குத்தி உடைப்பதாய, கொடிய கையை உடைப்பவர்க்குக் கொடுப்பர்; அப்படிச் செய்யாமல் இதமாகக் கேட்பவர்க்குத் தாம் உண்டு கழுவிய கையின் நீரையுந் தெறியார்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும் :

***மணக்.,*** 'கூன்கை' எனப்பாடங் கொண்டு வளைந்த கை என்பர்.

***பரிதி.,*** ஈகை விதிரார் எனப் பாடங்கொண்டு 'ஈகிற கையை விதிர்த்துக் கொள்ளார்' என்பர். ஈகை -ஈயுந்தொழில் செய்யும் வலக்கை.

***காளி.,*** கொடிறு - இடுக்கினோடு என்னும் கருவி. கொடிறு போல இடுக்கிப் பிடித்து என்பர். கதுப்பு என்பர் ***பரிமேலழகரும்*** பிறரும். கதுப்பு அல்லது கன்னம் என்ற பொருளே சிறந்தது. இவர்கள் பாடம் கூன்கையர் என்பது.

***இக்குறள்*** 'எச்சிற் கையாலும் காக்கை ஓட்டான்' என்ற முதுசொல்லை நினைப்பிப்பது இல்லை.

## ஒ) ஒப்புமைப்பகுதி:

***ஈர்ங்கை:***

ஈர்ங்கை மறந்தவென் விரும்பே ரொக்கல். - புறநா., 393:10

***முற்றும்:***

இட்டக் கடைத்தாரர் ஈண்டும் பலிமரீஇப்
பட்ட வழங்காத பான்மையார் - நட்ட
சுரிகையாற் காணும் சுலாக்கோலாற் காணும்
சொரிவதாம் ஆபோல் சுரந்து. - அறநெறி., 183

மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்போல்
கைவிதிர்த் தஞ்சப் படும். - நீதிநெறி., 73

ஈறிலா வணக்கஞ் செய்தி யாமிரந் திடவெய் தாதே
சீறுமா கண்டு வந்த திறத்தினைத் தெரிய தாகக்

5. மெலிவார்க்கு - உணவின்மையான் வருந்தி இரப்பவர்க்கு
6. நலிவார் - வறுத்துபவர்

கூறுநீ யறிஞ வென்றான் ...... ...... - கம்ப., 6792

அழுக்கற் றெவர்க்கும் வடுக்காண்பர் அச்சம் ஆசை யாலன்றி
ஒழுக்கம் புரியார் மறைபிறர்பால் உய்த்து மொழிவார் தம்போல
விழுக்குக் கேதம் கவலார்முன் ஏற்ற மாகிச் செம்மாப்பார்
மழுக்கு ளார்க்கே பயன்படுவார் வறிதும் வறியார்க் கிடார்கயவர்.
- விநா.அரசி., 155.

பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் எனவேண்டார் - மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர் இடாரே
சரணம் கொடுத்தாலும் தான். - நல்வழி., 18.

## 108.8. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ். (1078)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.***: பிறர் தம் குறையைச் சொல்ல அதற்கு இரங்கிப் பயன்படுவர் மேன்மக்கள். அவ்வாறன்றி, கரும்பு பயன்படுமாறுபோலத் தம்மை நெருக்கினால் பயன்படுவர் கீழ்மக்கள், எ-று.

இஃது ஒறுப்பார்க்குக் கொடுப்பர் என்றது.

***ஆ) பரிதி.***: வார்த்தை சொன்னமாத்திரத்திலே பயன்படுவர் நல்லோர்; கரும்புபோலத் தண்டிக்கப் பயன்படுவர் கீழோர், எ-று.

***இ) பரிப்.***: பிறர் தம் குறையைச் சொல்ல அதற்கு இரங்கிப் பயன்படுவர் மேன்மக்கள். அவ்வாறு அன்றிக் கரும்பு பயன்படுமாறு போலத் தம்மை நெருக்கினால் பயன்படுவர் கீழ்மக்கள், எ-று.

இஃது ஒறுப்பார்க்குக் கொடுப்பர் என்றது.

***ஈ) காளி.***: ஒருவர் வந்து தம் குறைசொல்ல அமையும்; மற்று இவ்வளவிலே பயன்படுவர் சால்பினை உடையோர். இனி மற்று இவ்வாறு அன்றித் தறித்தும்[1] நெரித்தும்[2] அடர்த்தும்[3] சாறுகொள்ளும் கரும்புபோலப் பெரிதும் கொல்லக் கொல்லப் பயன்படுவர் அத்துணைக் கீழான கயவர். எ-று.

***உ) பரிமேல்.***: மெலியார் சென்று தம்குறையைச் சொல்லிய துணையானே

1. தறித்தும் - துண்டாடியும்
2. நெரித்தும் - கருவியிற் கொடுத்து நெருக்கியும்
3. அடர்த்தும் - அமுக்கிப் பிழிந்தும்

இரங்கிப் பயன்படுவர் மேலாயினார், மற்றைக் கீழாயினார் கரும்புபோல வலியார் நைய நெருக்கியவழிப் பயன்படுவர்.

பயன்படுதல் உள்ளது கொடுத்தல். கீழாயினாரது இழிவுதோன்ற, மேலாயினாரையும் உடன் கூறினார்.. இவை இரண்டு பாட்டானும் அவர்[1] கொடுக்குமாறு கூறப்பட்டது.

***ஊ) கவிராசர்:*** தரித்திரன் வந்து தன் குறையைச் சொன்னவுடனே தங்களாலான மாத்திரம் உபகாரம்பண்ணுவார்கள் பெரியோர்கள்; துர்ஜனர், கரும்பைப்போல அடித்து நெருக்கினவர்களுக்குத் தங்கள் பொருளெல்லாம் கொடுப்பர், எ-று.

***எ) பழைய2.:*** மெலியார் சென்று தங்குறையைச் சொல்ல இரங்கிப் பயன்படுவர் மேலாயினார்; மற்றைக் கீழாயினார் கரும்பு போல வலியார் தண்டிக்கப் பயன்படுவர்.

**ஐ) தொகுப்பும் குறிப்பும்:** இல்லை.

## 108.9. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
## வடுக்காண வற்றாகும் கீழ். (1079)

***உரைப்பகுதி :***

***அ) மணக்.:*** பிறர் உடுப்பதனையும் உண்பதனையும் காண்பாராயின், அவர்மாட்டு உள்ள குற்றங்களை ஆராயவல்லராவர் கயவர், எ-று.

இஃது அழுக்காறுடையார் என்றது.

***ஆ) பரிதி.:*** உடுப்பதும் உண்பதும் கண்டால் அவர்க்கு ஒரு குற்றம் விசாரிப்பார் கீழோர், எ-று.

***இ) பரிப்.:*** பிறர் உடுப்பதனையும் உண்பதனையும் காண்பார் ஆயின் அவர்மாட்டு உள்ள குற்றங்களை ஆராய வல்லார் ஆவர் கயவர், எ-று.

இஃது அழுக்காறு உடையர் என்றது.

***ஈ) காளி.:*** முன் நின்ற நிலையிலும் மேற்பட உடுக்கும் ஆடையும் உண்ணும் சோறும் சிறிது மிகுதக் காணின் மற்று அப்பொழுதே பிறரைக் கெடுப்பது ஓர் வடுக்கான வற்றாகும் கீழ். எ-று.

***உ) பரிமேல்.:*** பிறர் செல்வத்தால் பட்டும் துகிலும் உடுத்தலையும் பாலோடு அடிசில் உண்டலையும் கீழாயினான் காணுமாயின், அவற்றைப்[2] பொறாது அவர்மாட்டு[3] வடுவில்லையாகவும் உண்டாக்க வல்லனாம்.

1. அவர் - கயவர்
2. அவற்றை - உடுத்தலையும், உண்டலையும்
3. அவர்மாட்டு - பிறரிடத்து

உடுப்பது உண்பது என்பன ஈண்டு அவ்வத்தொழின்மேல் நின்றன[3]; அவற்றால்[4] பூண்டல், ஊர்தல் முதலிய[5] பிறதொழில்களும் கொள்ளப்படும். அவற்றைக்கண்ட துணையானே பொறாமை எய்தலின் 'காணின்' என்றும், கேட்டார் இது கூடுமென்றியையப்படைத்தல் அரிது ஆகலின் 'வற்றாகும்' என்றும் கூறினார். இதனான் பிறர் செல்வம் பொறாமை கூறப்பட்டது[6].

***காரி:*** அழுக்காற்றில் "உடுப்பதூஉம் உண்பதூஉம்"[7] என்பது போலச் செயப்படுபொருள்மேல் நில்லாது ஈண்டுத் தொழில் மேல் நின்றது என்க.

**ஊ) *கவிராசர்:*** பிறர் செல்வத்தினாலே பட்டும், பவவந்தியும் உடுத்துக் கொள்ளுகிறதையும், பலருடனேகூடச் சாப்பிடுகிறதையும், துர்ஜனர் கண்டால், அவற்றைப் பொறாமல், அவர்கள் பேரிலே குற்றமொன்றும் இல்லாவிட்டாலும், குற்றமுண்டாக்கவல்லவர்களாவர், எ-று.

**எ) *பழைய2.:*** செல்வமுடையார் பட்டுந் துகிலும் உடுத்துப் பலரோடுங் கூடி அடிசில் உண்டலைக் கீழாயினார் கண்டால், அது பொறாது அவர்மேல் வடுவில்லையாயினும் வடுவுண்டாக்கிப் பழிக்கும்.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

உடுப்பது உண்பது என்பவற்றிற்கு 'முன் நின்ற நிலையிலும் மேற்பட ஊன் உண்பதும் உடுப்பதும்' எனக் ***காளிங்கர்*** எழுத. அதன் விளக்கம் போலப் ***பரிமேலழகர்*** பட்டும் துகிலும் உடுக்க அணியும் ஊர்தியும் கொள்ளப்படும் என்றனர். ஏனார் உடுப்பதும் உண்பதும் என வாளா எழுதினர். ஆசிரியர் ***வள்ளுவனார்,*** கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும் என்ற விடத்து (166) தேவைக்கு உண்பதையும் உடுப்பதையுமே குறித்தனராதலாலும், கயவன் உடலுள் உயிர் தங்குமளவு உண்பதையும் உடுப்பதையுமே குறித்தனராதலாலும், கயவன் உடலுள் உயிர் தங்குமளவு உண்பதையும் - சுற்றங்காக்க உடுத்தலையும் கண்டாலேயே அழுக்காறடைவன் ஆதலாலும் ***மணக்குடவர்*** கூறும் உரையே கயமைக் குணத்தின் இயல்பை இங்கு விளக்குவது ஆதலால் அதுவே சிறந்தது.

3. உடுப்பதும் உண்பதும் ஆகிய வினையாலணையும் பெயர்கள் உடுத்தல் உண்டலாகிய அவ்வத்தொழிலை உணர்த்தின.
4. அவற்றால் - உடுத்தல் உண்டல்களால்
5. முதலிய என்றமையின் அணிதல், சந்தனம் பூசுதல் முதலியனவுங் கொள்க.
6. பிறர் செல்வம் பொறாமை - கீழ்மக்கள் பிறர் செல்வமுடையவராய் இருத்தல்கண்டு பொறாமை அடைதல் கூறப்பட்டது.
7. குறள்., 166.

**ஓ) ஒப்புமைப்பகுதி:**

பிறர்மேல் வடுக்கான வற்றாகும் கீழ்:

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே. - நன்னெறி.,

கீழ்மை அகற்று. - ஆத்தி., 35

சிட்டர் தமக் கில்லாத தீங்குரைப்பர் பொல்லாத
துட்டர் தமக் குள்ள தொழில். - சிவபோ., 125

## 108.10. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
## விற்றற் குரியர் விரைந்து. (1079)

**உரைப்பகுதி :**

***அ) மணக்.:*** கயவர் யாதினுக்கு வல்லர் எனின், தமக்கு ஒரு துன்பமுற்றால் விரைந்து தம்மை விற்க வல்லர், எ-று.

இது நிலையிலர் என்றது.

***ஆ) பரிதி.:*** எதற்கு உரியார் கயவர் என்றால், தனக்கு ஒரு தண்டனை வந்தால் விற்றுக் கொள்ள உரியர், எ-று.

***இ) பரிப்.:*** கயவர் யாதினுக்கு வல்லவர் எனில், தமக்கு ஒரு துன்பம் உற்றால் விரைந்து தம்மை விற்க வல்லர், எ-று.

இஃது நிலைமை இலர் என்றது.

***ஈ) காளி.:*** கயவராய் உள்ளார் வந்து மருவினால் ஒருவர்க்கு இடுக்கண் வந்து உற்ற இடத்து மற்று அதுவே பட்டடையாக உயிர்க்கு ஈறு. பொருட்கு இறுதி வருமாறு விரைந்து எற்றுதற்கு உரியார்; அஃது இயையாது எனின் உற்ற இடத்து உதவாது விரைந்து நீங்குதற்கு உரியார்; ஆதலால் எவ்வாற்றானும் கயவரோடு குடிப்பண்பு உடையோர் மருவாது[1] ஒழிக என்பது பொருளாயிற்று, எ-று.

எற்றிற்கு என்பது எற்றுதற்கு என்பது; விற்றற்கு என்பது வேறுபட்டு நீங்குதற்கு என்றது. வீற்றற்கு[2] எனற்பாலது விற்றற்கு எனக் குறுகி நின்றது.

***உ) பரிமேல்.:*** கயவர் தம்மை யாதானும் ஒரு துன்பமுற்றக்கால் அதுவே பற்றுக் கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்குரியர்; அதுவன்றி வேறு எத்தொழிற்குரியர்? (எ-று).

---

1. மருவாது - கூடாது.
2. வீற்றற்கு - தனித்து நீக்குதலுக்கு வீறு - தனிமை, பிரித்தல், வீற்றற்குரியர்.

உணவின்மையாகப் பிறிதாக[3] ஒன்றுவந்து உற்ற துணையான் என்பது தோன்ற ஒன்றுற்றக்கால் என்றும், கொள்கின்றார் தம் கயமையறிந்து வேண்டா என்றற்கு முன்னே விற்றுநிற்றலின் விரைந்து என்றும் கூறினார். ஒரு தொழிற்கும் உரியரல்லர் என்பது குறிப்பெச்சம். இதனால் தாம் பிறர்க்கு அடிமையாய் நிற்பார் என்பது.

***காரி.:*** ஒரு தொழிற்கும் உரியர் அல்லர் என்பது குறிப்பெச்சம்.

***ஊ) கவிராசர்:*** துர்ஜனர், தமக்கு ஏதாகிலும் ஒரு துக்கம் வந்தால் அதனையே மனத்தில் எண்ணிக்கொண்டு தங்களைப் பிறருக்கு விற்றற்கு உரியர்; அதுவல்லாமல், பின்னை ஒன்றுக்கும் உரியரல்லர், எ-று.

ஒரு துக்கமாவது - உணவில்லாமை போல்வது. கயவர் எந்த இழிதொழிலானாலும் செய்வர்; அவர்கள் துர்க்குணமறிந்து யாவருங்கொள்ளார்; கொள்ளா விட்டாலும் வலியக் கொண்டு, 'கொள்ளுங்கோ' ளென்று சொல்லுவர். கயவர் ஒரு தொழிலுக்கும் உதவார் என்பது கருத்து.

***ஏ) பழைய2.:*** கயவர் தாம் யாதானும் ஒரு துன்பம் உற்றவிடத்து அதுவே பற்றுக் கோடாக விரைந்து தம்மைப் பிறருக்கு அடிமையாக விற்றற்கு உரியர்; அன்றி வேறெத் தொழிற்கு உரியர்?

கயவர்க்கு ஒரு துன்பம் வரின், தம் மக்களைப் பெண்டிரைத் தம்மை விற்றுக் கொள்வர் என்றது.

## ஐ) தொகுப்பும் குறிப்பும்:

எற்றுக்கு 'யாதினுக்கு, எதற்கு' என உரை கண்டவர்கள் ***மணக்குடவர், பரிதி*** முதலானோர். 'எற்றுதற்கு' (ஏமாற்ற) என்பர் ***காளிங்கர்.*** அங்ஙனமே விற்றற்கு என்பதனை வீற்றற்கு எனப் பாடங்கண்டு வீற்றற்கு என்பதன் திரிபே விற்றற்கு எனக் கொண்டு 'வேறுபட்டு நிற்க' எனப்பொருள் காண்பர். இவ்வுரை இரண்டுமே சிறப்பில. 'எற்றுக்கு' என வினா அடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயராகக் கொள்ளும் பாடமும் ***பரிமேலழகர்*** கூறும் பொருளும் சிறந்தன. அது போல வீற்று என்பதன் திரிபாக விற்று வந்தது என்பதும் சிறப்பிலது 'தன்னை விற்றுக்கோட்டக்க துடைத்து' என்ற வழக்கும் நோக்கியமைக.

---

3. பிறிதாக - வேறுகாரணங்களால்

# 108. கயமை

| | மக்களே | நன்றறி | தேவர் | அகப்பட்டி | அச்சமே | அறைபறை | ஈர்ங்கை | சொல்லப் | உடுப்பதூஉம் | எற்றிற்கு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மணக். | 1 | 3 | 2 | 5 | 4 | 6 | 8 | 9 | 7 | 10 |
| பரிதி. | 1 | | 2 | 8 | 7 | 4 | 5 | 6 | 9 | 10 |
| பரிப். | 1 | 3 | 2 | 5 | 4 | 8 | 7 | 9 | 6 | 10 |
| காளி. | 1 | 8 | 2 | 7 | 3 | 9 | 4 | 5 | 6 | 10 |
| பரிமேல். | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

108-வது அதிகாரம் ‘கயமை’ முற்றிற்று.

*******

# நூலோதி


1. அகநானூறு, களிற்றியானை நிரை, சோமசுந்தரனார், பொ.வே.உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை 1970.

2. அகநானூறு, மணிமிடைபவளம், நித்திலக்கோவை, சோமசுந்தரனார், பொ.வே.உரை. தி.தெ.சை.சி.நூ.ப.க, லிமி., சென்னை,1970.

3. அடயோக பிரதீபிகை, மொழிபெயர்ப்பு, குப்புசாமி. ராஜீ, த., தஞ்சை.

4. அறநெறிச்சாரம், முனைப்பாடியார், எஸ்.பி.சி.கே. அச்சகம் வேப்பேரி, 1972.

5. ஆசாரக்கோவை, பதவுரை விளக்கவுரைகளுடன், தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1968.

6. ஆதிநாதர் பிள்ளைத்தமிழ்.

7. இலக்கணக்கொத்து மூலமும் உரையும், சுவாமிநாததேசிகர், ஆறுமுகநாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

8. இலக்கண விளக்கம், வைத்தியநாததேசிகர், தஞ்சை சரசுவதிமகால், 1973.

9. இலக்கண விளக்கம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்_மூலமும் உரையும், வைத்தியநாத தேசிகர், திருவாரூர். தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை.1973.

10. இன்னாநாற்பது, மூலமும் உரையும், தி.தெ.சை.சி.நூ.ப.க,லிமி, சென்னை,1971.

11. இனியவை நாற்பது, மூலமும் உரையும், தி,தெ.சை.சி.நூ,ப.க.லிமி. சென்னை, 1971.

12. உண்மை விளக்கம், மனவாசகங் கடந்தார், சிவஞானபோத மந்திர சாலை, சிந்தாதிரிப்பேட்டை.

13. உதயணகுமார காவியம், சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

14. உரைவேற்றுமை, சாரங்கபாணி, இரா., செல்வி பதிப்பகம், காரைக்குடி.

15. கம்பராமாயணம், பதிப்பாசிரியர் குழு, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, அண்ணாமலை நகர்.

16. கலித்தொகை, நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும் சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க,லிமி., சென்னை, 1970.

17. குண்டலகேசி, சோமசுந்தரனார். பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., சென்னை, 1970.

18. குறுந்தொகை, சோமசுந்தரனார், பொ.வே., உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க, லிமி., சென்னை, முதலாம் பதிப்பு, மறுஅச்சு, 1972.

19. கௌடலீயம் பொருணூல், தமிழ் மொழிபெயர்ப்பு, கதிரேசச்செட்டியார், பண்டிதமணி, மு., இராமாநுஜாசாரியார், பி, ஸ்ரீ., அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1955.

20. சட்தரிசன சங்கிரகம்.

21. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள், சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி.தெ.சை.சி. நூ.ப.க., லிமி., சென்னை 1726.

22. சிவபெருமான் இரட்டைமணிமாலை, 11-ஆம் திருமுறை ஸ்ரீகுமரகுருபரன்சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1971.

23. சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி-க, அரசு, புலவர், சோமசுந்தரனார், பொ.வே., உரை,தி.தெ.சை.சி.நூ.ப,க., லிமி., சென்னை, 1967.

24. சீவகசிந்தாமணி மூலமும் உரையும், பகுதி-உ, அரசு, புலவர், சோமசுந்தரனாா பொ.வே., உரை.தி.தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1968.

25. சுக்கிரநீதி (தமிழ்), கதிரேசஞ் செட்டியார், பண்டிதமணி, மு., மொழிபெயர்ப்பு, சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி, 1926.

26. சூதசங்கிதை. தேவராஜபிள்ளை, ரிப்பன் அச்சியந்திரசாலை சென்னை.

27. சூடாமணி நிகண்டு, மண்டலபுருடன், வித்தியாநுபாலன மந்திரசாலை, தங்க சாலைத் தெரு, சென்னைப்பட்டினம்

28. சூளாமணி மூலமும் உரையும், பகுதி-க, சோமசுந்தரனார், பொ.வே., தி.தெ.சை.சி.நூ.க., லிமி., சென்னை, 1970.

29. சூளாமணி மூலமும் உரையும், பகுதி-உ, சோமசுந்தரனார் பெ.வே., தி.தெ.சை.சி.நூ.க., லிமி., சென்னை, 1962.

30. செந்தமிழ், தொகுதி 1, பகுதி 8, மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு.

31. சேந்தன் திவாகரம், சேந்தனார், மனோன்மணி விலாச அச்சுக்கூடம். சென்னை, 1904.

32. தத்துவார்த்த சூத்திரம்.

33. தண்டியலங்காரம், தண்டியாசிரியர், சுப்பிரமணியதேசிகர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1960.

34. தனிப்பாடல் திரட்டு, சந்திரசேகர கவிராஜபண்டிதர் (பதிப்பு) வித்தியாரத்தினாகரம் அச்சகம், சென்னை, 1902.

35. திருக்கலம்பகம், உதீசிதேவர். மதுரைத் தமிழ்ச்சங்கமுத்திரா சாலை

36. திருக்குறள் உரை விளக்கம், வரதராசன், ஜி., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1958.

37. திருக்குறள் எளிய பொழிப்புரை. இலக்குவனார், சி., வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை. 1963.

38. திருக்குறள், கவிராசபண்டிதர், சாது அச்சுக்கூடம், சென்னை 1949.

39. திருக்குறள், குழந்தையுரை, குழந்தை, புலவர், பாரிநிலையம், சென்னை,1967.

40. திருக்குறள் தமிழ் மரபுரை, தேவநேயன்,ஞா., நேசமணி பதிப்பகம். காட்பாடி விரிவு, 1969.

41. திருக்குறள் தெளிபொருள் வசனம், அருணாசலக் கவிராசர், மு.ரா., மீனலோசனி அச்சியந்திர சாலை, மதுரை.

42. திருக்குறள் தெளிவுரை, வரதராசனார், டாக்டர் மு., தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை.

43. திருக்குறள் நயவுரை, கோவிந்தசாமி, மு., பாரி நிலையம் சென்னை, 1962.

44. திருக்குறள் பரிமேலழகருரையுடன் குறிப்புரையும், கோபாலகிருஷ்ணமாசாரியர், ஸ்ரீஉ.வே.வை.மு., சென்னை, 1965.

45. திருக்குறள் புது உரை, இராமலிங்கன், நாமக்கல், வெ., சென்னை.

46. திருக்குறள் பொழிப்புரை, சுப்பிரமணியபிள்ளை, கா., தி.தெ. சை.சி.நூ.ப.க.லிமி., சென்னை, 1955.

47. திருக்குறள் மூலமும் ஓர் பழைய உரையும், டாக்டர் உ.வே. சாமிநாதஐயர் நூல்நிலையம், அடையாறு வெளியீடு, சென்னை, 1961.

48. திருக்கோவையார், மாணிக்கவாசகர், ஆறுமுக நாவலர் பதிப்பு, வித்தியாநுபாலனயந்திரசாலை, தங்கசாலைத்தெரு, சென்னை.

49. திருநூற்றந்தாதி, அவிரோதி ஆழ்வார், மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை, 1905.

50. திருமந்திரம், திருமூலர், திருவாவடுதுறை ஆதீனம், தண்டபாணிதேசிகர் உரையுடன்.

51. திருவந்தாதி

52. திருவருட்பயன், உமாபதிசிவாசாரியார், கோ. சண்முக சுந்தர முதலியார், சென்னை.

53, திருவாசகம், மாணிக்கவாசகம், தண்டபாணி தேசிகர் செய்த பஞ்சாக்கர விளக்கவுரையுடன், திருவாவடுதுறை ஆதீனம்.

54. திருவிசைப்பா, 9-ஆம் திருமுறை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை.

55. திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர், தி,தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை.

56. திருவெம்பாவை (சமணநூல்). திருக்குறள் மூலமும் கட்டுரைகளும், ஜைன இளைஞர் மன்றம். சென்னை.

57. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது.

58. தேவாரம், அப்பர் சுவாமிகள், 4, 5, 6, ஆம் திருமுறை-தலமுறை, ஸ்ரீகுமர குருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 1971

59. தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஏழாம் திருமுறை-தலமுறை, ஸ்ரீகுமர குருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 1971.

60. தேவாரம், திருஞானசம்பந்த சுவாமிகள் 1,2,3 - ஆம் திருமுறை தலமுறை, ஸ்ரீ குமர குருபரன் அச்சகம் , ஸ்ரீ வைகுண்டம். 1971.

61. தொல்காப்பியம் சூத்திரவிருத்தி, சிவஞான சுவாமிகள், ஆறுமுக நாவலர் பதிப்பு, மூன்றாம் பதிப்பு.

62.தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணருரை தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1972.

63.தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணருரை தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1961.

64.தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணருரை, தி.தெ.சை.நூ.ப.க., லிமி., சென்னை.

65.தொல்காப்பியம் சொல்லதிகாரம், கல்லாடனாருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க.,லிமி., சென்னை.1964.

66.தொல்காப்பியம், சொல்லதிகாரம். சேனாவரையா உரை,தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

67. தொல்காப்பியம், சொல்லதிகாரம் தெயவச்சிலையார் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1963.

68. தொல்காப்பியம், சொல்லதிகாரம், நச்சினார்க்கினியருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1962.

69. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1969.

70.தொல்காப்பியம், பொருளதிகாரம் (செய்யுளியல்). நச்சினார்க்கினியருரை, தி. தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1965.

71. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியருரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை 1971.

72. தொல்காப்பியம், பொருளதிகாரம், பேராசிரியர் உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை 1971.

73. தொன்னூல் விளக்கம், திறனாய்வு மூலம் விளக்கம், சுப்பிரமணியன், டாக்டர் ச.வே., தமிழ்ப் பதிப்பகம் சென்னை, 1978.

74. தோத்திரத் திரட்டு.

75. நரிவிருத்தம், திருத்தக்கதேவர், 'செந்தமிழ்' வெளியீடு, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை.

76. நற்றிணை நானூறு, நாராயணசாமி ஐயர், பின்னத்தூர், அ., உரையும் விளக்கமும், தி.தெ.சை.சி.நூ.ப.க.,

77. நன்னூல், காண்டிகையுரை, சடகோபராமாநுஜாசாரியார் வை.மு, கிருஷ்ணமாசாரியார். சே., 18-ஆம் பதிப்பு, சென்னை, 1958.

78. நன்னூல், மூலமும் விருத்தியுரையும், புத்தம்புத்துரை சிவஞானசுவாமிகள், ச. தண்டபாணி தேசிகர் குறிப்புரைகள், பாரிநிலையம், சென்னை, 1968.

79. நால்வர் நான்மணிமாலை, சிவப்பிரகாச சுவாமிகள், துரைமங்கலம், மைலம் மடம் பதிப்பு.

80. நாலடியார், பாலசுந்தரம்பிள்ளை, தி.சு., உரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1968.

81. நான்மணிக்கடிகை, பதவுரை விளக்கங்களுடன், தி. தெ. சை.சி.நூ ப.க., லிமி., சென்னை, 1966.

82. நீலகேசி, சோமசுந்தரனார், பொ.வே., விளக்கவுரை, தி, தெ. சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1964.

83. நேமிநாதம், குணவீரபண்டிதர், கோவிந்தராசமுதலியார், கா.ர., குறிப்புரைகள், தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை - 1964.

84. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி - உ, சோமசுந்தரனார், பொ.வே.உரை,தி.சை சி.நூ.ப.க., லிமி., சென்னை 1971.

85. பத்துப்பாட்டு மூலமும் உரையும், பகுதி-க, சோமசுந்தரனார், பொ.வே.,உரை, தி. செ.தெ.சை.சி.நூ.ப. க. லிமி., சென்னை, 1968.

86. பதிற்றுப்பத்து, மூலமும் விளக்க உரையும், துரைசாமிப் பிள்ளை, ஔவை, சு., தி.தெ.சை.சி.நூ.ப.க.. லிமி., சென்னை, 1968.

87. பரிபாடல் மூலமும் உரையும், சோமசுந்தரனார், பொ. வே., உரை. தி தெ.சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1969.

88. பழமொழி நானூறு, முன்றுறையரையனார், இராசமாணிக்கம் பிள்ளை, புலவர், ம., உரை.தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1967.

89. புறநானூறு துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை 1970.

90. புறநானூறு மூலமும் பழைய உரையும், சாமிநாதையர் உ.வே., பதிப்பு. சென்னை 1971.

91. புறப்பொருள் வெண்பாமாலை, ஐயனாரிதனார். சோமசுந்தரனார் பொ. வே, விளக்கவுரை, தி. தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை- 1967.

92. பிரயோகவிவேகம் மூலமும் உரையும், சுப்பிரமணிய தீட்சிதர், தஞ்சை சரசுவதி மஹால். 1973.

93. பெருங்கதை, சாமிநாதையர், உ.வே., பதிப்பு, டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், 4-ஆம் பதிப்பு, திருவான்மியூர், சென்னை 1968.

94. பொன்வண்ணத்தந்தாதி, சேரமரன் பெருமாள் நாயனார். ஸ்ரீ குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 1972.

95. மணிமேகலை, மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், சோமசுந்தரனார், பொ.வே. விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1971.

96. மதுரைத் தமிழ்ப்பேரகராதி, கோபாலகிருஷ்ணக்கோன், இ.மா., வெளியீடு, மதுரை, 1956.

97. மாறனலங்காரம், காரிரத்னக்கவிராயர், மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு, 1915.

98. முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், திருப்பாற்கடல் நாத கவிராயர் உரை, தி, தெ. சை. சி. நூ. ப. க., லிமி., சென்னை, 1972.

99. முத்திநிச்சயப் பேருரை, தண்டபாணிதேசிகர், ச., குறிப்புரை யுடன், குருஞானசம்பந்தர், தரும்புர ஆதீனம், 1942.

100. மேருமந்திரபுராணம், வாமனமுனிவர், சாது அச்சுக்கூடம் சென்னை, 1922.

101. யசோதர காவியம், துரைச்சாமிப்பிள்ளை ஔவை சு. உரை. தி.தெ,சை.சி.நூ.ப,க., லிமி., சென்னை, 1970.

102. யாப்பருங்கலக் காரிகை

103. வள்ளுவம், மாணிக்கம், வ. சுப., பாரி நிலையம், சென்னை, 1969.

104.வள்ளுவர் கண்ட நாடும் காமமும், மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., சென்னை, 1954.

105.வள்ளுவர், நேரிசை, அரஞ்சண்முகனார், ஸ்ரீ கிருஷ்ண விலாசம் அச்சுயந்திரம், 1919.

106.வளையாபதி, சோமசுந்தரனார், பொ. வே. விளக்கவுரை, தி.தெ.சை.சி.நூ.ப.க., லிமி., சென்னை, 1970.

107.வில்லிபாரதம், வில்லிபுத்தூர் ஆழ்வார், ஆறுமுகநாவலர் பதிப்பு. வித்தியாநுபாலன யந்திர சாலை.

108.வீரசோழியம், புத்தமித்திரனார், பெருந்தேவனார் உரை, தி.தெ.சை.சி.நூ.ப..,லிமி., சென்னை; 1910.

109.Tamil Lexicon, University of Madras. 1960.

^-^-^-^-^

## ஒழிபியல்
## குறள் முதற்குறிப்பகராதி


| குறள் | பக்க எண் |
|---|---|
| அகப்பட்டி | 332 |
| அச்சமே | 334 |
| அடுக்கிய | 11 |
| அணியன்றோ | 176 |
| அமரகத்து | 204 |
| அரம்போலு | 126 |
| அற்றம் | 81 |
| அற்றார்க்கொன் | 154 |
| அறஞ்சாரா | 260 |
| அறைபறை | 337 |
| அன்புடைமை | 112 |
| அன்புநாண் | 90 |
| அன்பொரீஇத் | 159 |
| ஆவிற்கு | 309 |
| ஆள்வினையும் | 194 |
| ஆற்றுவார் | 95 |
| இகழ்ந்தெள்ளா | 285 |
| இடமெல்லாம் | 304 |
| இடுக்கண்கால் | 211 |
| இடும்பைக்கே | 208 |
| இரக்க | 271 |
| இரத்தலும் | 279 |
| இரப்பன் | 311 |
| இரப்பாரை | 287 |

| | |
|---|---|
| இரப்பான் | 292 |
| இரவார் | 228 |
| இரவுள்ள | 316 |
| இரவென்னும் | 313 |
| இலமென் | 241 |
| இளிவரின் | 51 |
| இற்பிறந்தார் கண்ணல்லது | 4 |
| இற்பிறந்தார் கண்ணேயும் | 253 |
| இறப்பே | 74 |
| இன்பம் ஒருவற்கு | 274 |
| இன்மை இடும்பை | 302 |
| இன்மை எனஒரு | 246 |
| இன்மை ஒருவற்கு | 101 |
| இன்மையின் | 245 |
| இன்றியமையா | 30 |
| இன்றும் | 263 |
| இன்னாசெய் | 99 |
| ஈட்டம் | 145 |
| ஈவார்கண் | 290 |
| உடுப்பதூஉம் | 342 |
| உழவினார் | 230 |
| உழுதுண்டு | 222 |
| உழுவார் | 220 |
| உறுப்பொத்தல் | 114 |
| ஊணுடை | 171 |
| ஊழி | 102 |
| ஊனைக் | 173 |
| எச்சமென் | 148 |
| எண்பதத்தால் | 110 |

| | |
|---|---|
| எற்றிற்குரியர் | 344 |
| ஏதம் | 152 |
| ஏரினும் | 235 |
| ஒட்டார்பின் | 43 |
| ஒருமை மகளிரே | 67 |
| ஒழுக்கமும் | 6 |
| ஒளி ஒருவற்கு | 56 |
| கடனென்ப | 86 |
| கரப்பவர்க் | 318 |
| கரப்பிடும்பை | 283 |
| கரப்பிலா நெஞ்சின் | 276 |
| கரப்பிலார் | 281 |
| கரவா துவந்தீயும் | 297 |
| கருமத்தால் | 168 |
| கருமம்செய | 191 |
| குடிசெய்வல் | 196 |
| குடிசெய்வார்க் | 206 |
| குடிப்பிறந்தார் | 18 |
| குணநலம் | 88 |
| குலம் சுடும் | 185 |
| குற்றம் | 200 |
| குன்றின் | 39 |
| கொடுப்பதூஉம் | 150 |
| கொல்லா | 93 |
| சலம்பற்றிச் | 16 |
| சால்பிற்குக் | 98 |
| சான்றவர் | 105 |
| சிறியார் | 72 |
| சீரினும் | 33 |
| சீருடைச் | 161 |

| | |
|---|---|
| சுழன்றும்ஏர்ப் | 217 |
| சூழாமல் | 198 |
| செல்லான் | 238 |
| சொல்லப் | 341 |
| தலையின் | 37 |
| துப்புர | 266 |
| தெண்ணீர் | 306 |
| தேவர் | 330 |
| தொடிப்புழுதி | 233 |
| தொல்வரவும் | 248 |
| நகல்வல்லர் | 131 |
| நகை ஈகை | 9 |
| நகையுள்ளும் | 119 |
| நச்சப் | 157 |
| நண்பாற்றா | 129 |
| நயனொரு | 117 |
| நலத்தின்கண் | 20 |
| நலம்வேண்டின் | 25 |
| நல்லாண்மை | 202 |
| நல்குரவென்னும் | 255 |
| நற்பொருள் | 258 |
| நன்றறிவாரின் | 328 |
| நாணகத் | 187 |
| நாணால் | 182 |
| நாண்வேலி | 180 |
| நிலத்திற் | 22 |
| நெருப்பினுள் | 265 |
| பணியுமாம் | 67 |
| பண்பிலான் | 133 |

| | |
|---|---|
| பண்புடையார் | 122 |
| பலகுடை | 225 |
| பிறப்பொக்கும் | 60 |
| பிறர்நாணத் | 184 |
| பிறர்பழியும் | 179 |
| புகழின்றால் | 41 |
| பெருக்கத்து | 34 |
| பெருமை உடையவர் | 70 |
| பெருமை பெருமிதம் | 78 |
| பொருளானாம் | 142 |
| மக்களே | 324 |
| மயிர்நீப்பின் | 48 |
| மருந்தோமற் | 45 |
| மேலிருந்தும் | 65 |
| வழங்குவ | 13 |
| வைத்தான் | 139 |


~~~~~
~~~~~

## திருக்குறள் ஆய்வக வெளியீடுகள்

| | | ரூ.பை |
|---|---|---|
| 1. | குறள் கண்ட பொருள் வாழ்வு (டாக்டர் தி.முருகரத்தனம்) | 5. 00 |
| 2. | குறள் கூறும் இறைமாட்சி (டாக்டர் தி.முருகரத்தனம்) | 7. 00 |
| 3. | வள்ளுவர் வகுத்த அரசியல (கருத்தரங்கக் கட்டுரைகள்) | 6. 00 |
| 4. | வள்ளுவர் வகுத்த பொருளியல் (கருத்தரங்கக் கட்டுரைகள்) | 6. 00 |
| 5. | குறள் கூறும் சமுதாயம் (செல்வி.காமாட்சி சீனிவாசன்) | 10. 00 |
| 6. | திருக்குறளும் விவிலியமும் (இரண்டாம் பதிப்பு) (செல்வி. காமாட்சி சீனிவாசன்) | 10. 00 |
| 7. | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்-அறம் (கோ.வ.பதிப்பு) | 10. 00 |
| 8. | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் - பொருள் (கோ.வ.பதிப்பு) | 15. 00 |
| 9. | திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் -காமம் (கோ. வ. பதிப்பு) | 10. 00 |
| 10. | திருக்குறள் உரைக்களஞ்சியம் - பாயிரவியல் (முதுபெரும்புலவர், ச.தண்டபாணிதேசிகர்) | 20. 00 |

11. திருக்குறள் உரைக்களஞ்சியம் - இல்லறவியல் 30. 00
(முதுபெரும்புலவர், ச.தண்டபாணிதேசிகர்)

12. குறள் கூறும் அரசு 8. 00
(டாக்டர். தி. முருகரத்தனம்)

13. திருக்குறள் உரைக்களஞ்சியம்-துறவறவியல்
ஊழியல் 30. 00
(முதுப்பெருப்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

14. திருக்குறள் உரைக்களஞ்சியம் - காமத்துப்பால்
களவியல், கற்பியல் 60. 00
(முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

15. திருக்குறள் உரைக்களஞ்சியம் - பொருட்பால்:
அரசியல் 120. 00
(முதுபெரும்புலவர், ச. தண்டபாணிதேசிகர்)

16. திருக்குறள் உரைக்களஞ்சியம் - பொருட்பால்
அங்கவியல் - பகுதி I 100. 00
(முதுபெரும்புலவர் - ச. தண்டபாணிதேசிகர்)

17. திருக்குறள் உரைக்களஞ்சியம்-அங்கவியல்
பகுதி-II 70. 00
(முதுபெரும்புலவர் - ச. தண்டபாணிதேசிகர்)

18. திருக்குறள் உரைக்களஞ்சியம் - ஒழிபியல் 70. 00
(முதுபெரும்புலவர் - ச. தண்டபாணிதேசிகர்)

* * * * *